work out His own gracious plans and purposes. And when we study the prophets and their teaching about God one thing is clear—that they regarded not Jehovah as One standing apart from the world, ruling and guiding and judging the world from His throne in Heaven. God, according to the prophets' teaching made His people's salvation His own concern and effort; and He accomplishes this, not by means of His Almighty power as one altogether apart from His people, but in pain and self-sacrifice with His people, God rises and comes down from His throne in Heaven and enters into His people's trials and sorrows. And so to-day of one thing at least we may be sure and it is that our God is not a God who stands afar off and looks down from Heaven's peace and calm upon the pain the suffering and the death agonies of the conflicting nations. He is suffering with the wounded and the dying in the battle-fields. He is the Father of the fatherless, the stay of the widow. As to the homeless and starving of the countries devastated with war, we know that in every affliction He is afflicted and their sorrows are His.

But there is another sense in which we can see the hand of God in the events of our time. God is during these days working out His plans and purposes of righteousness. As these plans develop, the forces of evil that are opposing God and His purposes also grow strong, and it is sometimes only by blood and fire that these forces of evil can be swept out of the way. England in the midst of its commercial prosperity had grown to love ease and comfort; Germany in its military strength had grown to despise righteousness and honour, and thus God's purposes which demanded from men self-sacrifice, and righteousness were being hindered. And so that which appears to be an evil is filled with God's redemptive love sent by Him to purify, to cleanse and refine.

But if these be God's purifying redeeming purposes it may be asked why there should be the need of sacrificing so many good and brave lives in the process. The loss of life is indeed the saddest part in this great conflict. Never before in any war has the best manhood of a nation been sacrificed on such a prodigal scale. But is there not com-

161285

pensation in the fact that those who have died have given their lives willingly for the sake of a righteous cause. After all it is not death that matters but the character of the life which death closes. To those who die nobly, death is no horrible thing. It is the supreme self-sacrifice, and self-sacrifice is the very core of the Christian gospel.

But what message do the events of the year bring to the Christian Church of India? While many have gone from this land to fight for their King and Empire, and of these many have won glory on the battlefield and made the supreme life sacrifice, yet the main scene of conflict is so far away that perhaps the war with its significance does not come home to the people of India as it does to the countries of the West. We read of an Ocean liner being sunk at sea and hundred of helpless women and children being drowned; we hear of Zeppelin raids when peaceful citizens, many of them perhaps asleep in their beds at the time, are hurled into eternity without warning, we read the long lists of killed and wounded which appear daily in the newspapers and we experience feelings of horror and gloom with sympathy and sadness for those who suffer. But is this great war to teach *us* nothing of duty and sacrifice? What of *our* work and devotion as God's messengers and representatives in this land? Must we also enter into the valley of suffering and be burnt out in some fashion or other, in order that God may teach us our duties and a sense of our opportunities? Must we lose our life in order that we may find a new vision of God, a new faith and a new power to overcome the forces of evil in our midst? To the Christian Church of Indian, there has not yet come the purifying fires of persecutions through which, history tells us, the Church in the West has had to pass, and through which the Christian Church in China has in more recent years passed. How shall we as a Christian Church called to fight the battles of the Lord and win India for our Master, learn the soldier's high conception of duty and sacrifice? The work that lies before us in the coming days requires no less the spirit of heroism, devotion to duty, and sacrifice that is required of the soldiers of our King. They fight for King and country



and their weapons are those of the flesh; we fight for Christ and His Church and our weapons are those of the spirit, but the demand for heroism, endurance and sacrifice is no less urgent.

If we learn not to practise these virtues in these our days of peace, God grant that if the time comes for us to be taught through the fire and through the flood, we may be found strong to endure and ready to sacrifice all for His sake. But to-day the call is to more earnest prayer that with a larger and bolder faith we may enter into the work of winning India, for Christ and in this work, like the soldiers of the King and our great Master Himself be willing to sacrifice all even into life itself for the coming of His Kingdom.

## The King of the Wonderful Island

### விநோத தீவின் அரசன்

### ஒரு தெருப்பிரசங்கம்

ஐசுவரியமுள்ள ஓர் வர்த்தகன் சந்தையில் சில கைதிகளைக் கண்டு, அவர்களில் ஒரு வாலிபனைக் கிரயத்துக்கு வாங்கினான். இரண்டு வருஷமாய் அந்த வாலிபன் தன் கடமையைக் கிரமமாய்ச் செய்தபிறகு எஜமான் ஒருநாள் அவனை அழைத்து சில சாமான்களைக் கையில் கொடுத்து, 'நீ இந்தச் சாமான்களையெல்லாம் ஒரு கப்பலில் ஏற்றி, தூரதேசங்களுக்குக் கொண்டுபோய் வியாபாரம்செய்து திரும்பி வா' என்று சொல்லி அவனை அனுப்பிவிட்டான். அப்படியே அந்தக் கைதியானவன் கப்பல் ஏறிப் பிரயாணமாய்ப் போனான். சில நாட்களுக்கப்பால், அந்தக் கப்பல் பயங்கரமான காற்றினால் அடிபட்டு அங்குமிங்கும் மோதி கடைசியாக நடுராத்திரியில் கற்பாறைகளுக்குள் அகப்பட்டுக்கொண்டது. கைதியான அந்த வாலிபனைத் தவிர கப்பலிலிருந்த மற்ற யாவரும் அமிழ்ந்துபோனார்கள். அவனோ ஒரு பலகையைப் பிடித்து ஜாக்கிரதையாய் நீந்தி கரைசேர்ந்து அதிகக் களைப்பினால் தரையில் படுத்து நித்திரை செய்தான். சூரியன் உதிக்கவே, திரளான ஜனங்கள் கொடிகளைப் பிடித்துக்கொண்டு, மிருதங்கம் அடித்துக்கொண்டு, குழல்கள் ஊதி ஸ்தோத்திர கீதங்கள் பாடி அவனி

டம் வருகிறதைக் கண்டான். அவர்கள் அவனுக்கருகே வந்தவுடனே எல்லாரும் அவனுக்கு முன்பாக சாஷ்டாங்கமாய் விழுந்து கைகூப்பி வணங்கி, 'இராஜாவே, வாழ்க! இராஜாவே வாழ்க!' என்று ஆனந்த சத்தத்தோடே வாழ்த்தினார்கள். அவன் ஆச்சரியப்பட்டு 'இதென்ன? இதென்ன?' என்று கேட்டான். அப்பொழுது மனச்சாட்சி என்னப்பட்ட ஒரு கிழவன் முன் நின்று அவனைப் பார்த்து: 'மகா இராஜாவே, இந்தத் தேசம் ஒரு விநோதமான தீவே. கடவுள் சில காலமாக எங்களை அரசாளும்படி ஒரு அரசனை சமுத்திரத்திலிருந்து எங்களுக்குக் கொடுக்கிறது வழக்கம். இப்போது கடவுள் உம்மை அனுப்பியிருக்கிறார்' என்றான். அந்த வாலிபன் மனச்சாட்சி என்பவனை நோக்கி: 'ஐயா, நான் ஒரு ஏழைக் கைதிதான்; அரசனுடைய ஊழியத்தைப்பற்றி எனக்குக் கொஞ்சமேனும் தெரியாது. உங்களில் வேறொருவனைத் தெரிந்துகொள்ளுங்கள். அவர் உங்களை ஆண்டுகொள்ளட்டும்' என்றான். மனச்சாட்சி என்பவன் அதைக் கேட்டு: 'அப்படிச் செய்யும்படி எங்களுக்கு அதிகாரமில்லை. கடவுளால் அனுப்பப்பட்டவர் யாரோ அவரைத்தான் எங்கள் அரசனாக ஏற்றுக்கொள்ளுவோம். ஆகையால் தாமதமில்லாமல் அரசனுடைய அரண்மனைக்கு வந்து இராஜாபிஷேகச் சடங்காசாரத்தைச் செய்யப் போவோம் வாருங்கள்' என்று சொன்னான்.

வாலிபன்: 'நீங்கள் சொல்லுகிறபடி நான் செய்வேன். ஆனால் ஒரு கேள்வி உண்டு. அதாவது: நீங்கள் சொல்லுகிறபடி நான் சில காலம் மட்டும் இந்தத் தீவை அரசாளுவேன். பிற்பாடு நான் என்ன செய்வேன்?' என்று வினவ, மனச்சாட்சி என்பவன்: 'நீர் இந்தக் கேள்வியைக் கேட்டது எனக்கு மெத்த சந்தோஷம்! நீர் எப்படியாவது பல காலமாக இத்தீவிலே இருக்கக்கூடாது, ஏனென்றால் இந்த விநோதமான தீவு நிலையற்றது. அது நாசமாய்ப் போகும்போது உமது அடியார்களாகிய நாங்கள் ஒழிந்துபோவோம். நீரோ நல்ல பதவியை அடையலாம். எப்படியெனில்: அதோ தூரத்தில் ஒரு தீவு தெரிகிறதே, அதிலே உமக்காக வீடுகளும் மிருகங்களும் மரங்களும் பயிர்களும் இல்லை. ஆனால் நீர் அரசாளும் காலம் முடிந்தவுடனே ஒரு படவில் ஏறி அங்கே போய் உம்முடைய ஜீவியத்தைக் கழிக்க வேண்டும்' என்றான். இதைக் கேட்டு அந்த வாலிபன்: 'ஐயோ, என் முடிவை நினைக்கும்போதெல்லாம் இப்போதிருக்கிற சிற்றின்பங்கள் துன்பங்களாக மாறப்படுமே' என்று கதறினான். அந்தக் கிழவன் மனதுருகி: 'இராஜாவே! கேளும்; இங்கே உமக்குச் சொற்பக் காலம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் தாமதமின்றி வேலைக்காரரை அந்தத் தீவுக்கு அனுப்பி வீடுகளைக் கட்டவும், மரங்களை



நடவும், விதையை விதைக்கவும், ஆடுமாடுகளை விருத்தியாக்கவும் எல்லாம் செவ்வையாய் ஆயத்தப்படுத்தவும் கட்டளையிடும். இக்காலத்தின் சிற்றின்பத்தை விட்டுவிட்டால் வருங்காலத்தின் பேரின்பம் அடையலாமே' என்றான். அந்த வாலிபன் இது நல்ல யோசனையென்று அறிந்து அப்படியே செய்தான். காலம் முடிந்தவுடனே ஒரு சிறு படவில் ஏறிப் புறப்பட்டுத் தீவையடைந்து அதில் தனக்காக ஆயத்தம் பண்ணப்பட்ட பாக்கியத்தை அநுபவித்து வந்தான்.

முன்னோர்கள் இதில் கற்பித்த புத்திமதிகளாவன: இவ்வுலகத்தில் வசிக்கிற நாமெல்லாரும், விநோதமான அத்தீவில் இராஜ்யபாரம் செய்த அக்கைதியைப்போல் இருக்கிறோம். நம்முடைய எண்சாணுடம்பு அந்தத் தீவைப்போல் நம்முடைய இராஜ்யமாய் இருக்கிறது. நமது சரீரத்தின் சுகம், பெலன், சந்தோஷம் முதலிய யாவும் அவன் அந்த இராஜ்யத்தில் பெற்று அநுபவித்த நன்மைகளைப்போலிருக்கிறது.

அந்தக் கைதி தான் போய்ச் சேர்ந்த தீவிலே சொற்பகால மட்டும் அரசாட்சி செய்ததுபோலவே, நாம் இந்த சரீரமாகிய கூட்டில் கொஞ்சகால மாத்திரம் இருக்கவேண்டும்.

அந்தக் கைதி சில காலமாக அத்தீவில் அரசாண்டு பிறகு வேறொரு தீவுக்குப் போய் அங்கேயே நீடூழிகாலம் வாழ்ந்ததுபோல நாம் இச்சரீரத்தைக் களைந்து மறுமைக்குப் போகவேண்டும்.

நாம் செய்த நல்வினைக்கும் தீவினைக்கும் தக்கதான பலனை மறுமையிலே அநுபவிக்கவேண்டும்.

காரியம் இப்படியிருக்க, அநேகர் மண், பொன், பெண் ஆகிய இவ்வித சிற்றின்பங்களைமட்டும் தேடி, வருகிறது வரட்டும் என்று நிர்விசாரிகளாய் இருக்கிறார்கள். இது புத்தியா? அல்ல. இதைக் குறித்து நமது மனச்சாட்சி பல புத்தி போதனைகளைக் காட்டும்.

கதையில் சொன்ன அந்தக் கைதி தான் போகவேண்டிய தீவுக்கு ஆட்களை அனுப்பி, அங்கே தான் தனக்காக வீடு நிலம் முதலியவை ஆயத்தப்படுத்துவதைப்போல் நாம் செய்ய முடியாது. ஆனால் நாம் மறுமைக்குப் போகும்படி நம்மை ஆயத்தப்படுத்துவது விவேகமல்லவோ? எப்படியெனில் நாம் கடவுளின் சித்தத்தை அறிந்து அதின்படி நடந்து முக்தியடையப் பிரயாசப்படவேண்டும். அப்படிச் செய்தால் மோட்சகதியடைந்து மறுமையில் மெய்யான வாழ்வை பெற்று மோட்சத்தில் பாக்கியசாலிகளாய் இருப்போம்.

நன்மைக்கும் தீமைக்குமுள்ள வித்தியாசத்தை அறிந்துகொள்ளத் தக்கதாகக் கடவுள் நமக்குத் தந்திருக்கிற மனச்சாட்சியின் மூலமாய் மாத்திரமல்ல, அவரால் வெளிப்படுத்தப்பட்டிருக்கிற சத்திய வேதத்

தின் மூலமாயும் நாம் அவருடைய சித்தத்தை அறியலாம். வானத்தில் சூரியன் எப்படி பிரகாசிக்கிறதோ அப்படியே சத்திய வேதத்தில் அவருடைய சற்பிரமாணங்கள் பிரகாசிக்கின்றன. அன்றியும் வேதாகமத்திலுள்ள சுவிசேஷங்களை நாம் வாசித்து ஆராயும்போது தேவசித்தத்தின்படி நடப்பதற்கு ஓர் உத்தம முன்மாதிரியைப் பார்க்கிறோம். அதாவது கடவுள் தாமே கிருபாவதாரம் எடுத்து இவ்வுலகத்தில் உற்பவித்து மானிட தேகத்தைப் பூண்டு நம்மைப்போல் கஷ்ட நஷ்டங்களை அநுபவித்து எவ்விதத்திலும் மாசில்லாத குணசீலனாய் ஜீவித்து கடவுளின் சித்தப்படி நடப்பதற்கு உத்தம மாதிரியைக் காட்டியிருக்கிறார்.

இவ்விதமாய் ஜீவிக்க நம்மால் கூடாது எனச் சொல்லவேண்டாம். ஏனென்றால் நம்மை மீட்கும்படி வந்த, இயேசுகிறிஸ்து என்னும் திருநாமத்தைப் பெற்ற தேவனின்மேல் நாம் பக்திவைக்கும்போது இவர் நம்மை ஏற்றுக்கொண்டு நன்னெறியில் நாம் நடப்பதற்கு வழிகாட்டியாயிருந்து, தேவ சித்தத்தை நிறைவேற்றுவதில் நமக்கு வேண்டியமட்டும் உதவிபுரிவார்.

இயேசுகிறிஸ்துவின்பேரில் இவ்விதமாய் நாம் பக்திவைக்கும்போது இம்மையிலே நமக்குத் தேக சௌக்கியம், இடம், பொருள், ஏவல் முதலிய பாக்கியம் இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, நாம் பாக்கியசாலிகளாகவே இருப்பதுமன்றி, அப்பால் மறுமையில் அடையவேண்டிய முக்தியையும் பெற்றநுபவித்து நமது மீட்பருடைய சமுகத்தில் சதாகாலங்களில் வாழ்வோம் என்பது சத்தியம்.

## The Letter to Sardis

**By the Rev. F. Goodwill**

## சர்தை சபையின் தூதனுக்கு எழுதின நிருபம்

வெளி. $3^{1-6}$

தியத்திரா என்னும் ஊரிலிருந்து முப்பது மைல் தூரத்தில் சர்தை என்னும் பட்டணமிருக்கிறது. தியத்திரா ஊர் விஸ்தாரமான பள்ளத்தாக்கிலுள்ள ஓர் மைதானத்திலிருக்கிறது; சர்தை பட்டணமோ ஓர் துருகத்தின்மேல் நிற்கிறது. இந்தத் துருகம் ஏறக்குறைய ஆயிரத்தைந்நூறு அடி உயரமுள்ளது. புராதன பட்டணங்கள் யாவும் துருகங்களின் மேலே கட்டப்பட்டிருந்தன. ஊர்கள்



விருத்தியடையும்போது ஓர் பாகம் மைதானத்தில் கட்டப்படுவதுமுண்டு. அவ்வாறே சர்தைப் பட்டணத்தின் ஓர் பாகமும் மைதானத்திலிருந்தது. இப்பட்டணம் சத்துருக்கள் பிடிக்க முடியாதபடி பலமான துருகத்தின்மேலிருந்தது. ஆயினும் இரண்டு தடவை சத்துருக்கள் கையில் விழுந்தது. நாம் முதல் முதலில் வாசிக்கிறபடி லீதியா தேசத்தின் பிரதான பட்டணமாகிய இதில் ஆசியா கண்டத்தின் நாகரீகமும், பலமும், வைராக்கியமும் வெகுவாய்க் கூடியிருந்தமையால், கிரேக்க தேசத்து பட்டணத்தார் சில நூற்றாண்டுகளாக சர்தைப் பட்டணத்தாருக்கு அதிகமாய்ப் பயந்திருந்தார்கள்.

பாரம்பரியம் சொல்லுகிறபடி புராதன இராஜாக்கள் எல்லாரிலும் ஐசுவரியவானாயிருந்த கிறிஸஸ் (Crœsus) என்னும் இராயன் இங்கே அரசாண்டான். இந்த இராயன் மாத்திரமல்ல, இப்பட்டணத்தை யாண்ட மற்றெல்லா இராயரும் ஐசுவரியமுள்ளவர்களாகவே இருந்தார்களாம். இந்தத் துருகத்தண்டை ஓடுகிற நதியின் மணலில் பொன் அதிகமாய்க் கிடைத்தது என்று சரித்திரம் சொல்லுகிறது. பொற் கேணிகளினாலும், நதியின் மணலில் அகப்படும் பொன்னினாலும், இதர தேசங்களை ஜெயிப்பதினாலும் இராஜாக்களுக்கு ஐசுவரியம் பொழிந்ததாம். இப்பட்டணத்தார் பூஜித்த தேவர்களைக்குறித்துச் சிற்சில காரியங்கள் தெரியவந்தாலும், அவர்கள் செய்த பூஜையைக்குறித்துப் பொதுவான அபிப்பிராயங்கொள்வது சுளுவல்ல. சைபேலி (Cybele) ஆகிய தேவதையின் கோவிலில் இரண்டு தூண்கள் மாத்திரம் விடப்பட்டிருக்கின்றன. அத்தேவதையின் பூஜையானது அண்டசராசரத்திலுள்ள பலத்திற்கும் ஜீவனுக்கும் குறிப்பாக விருந்தது. இப்பட்டணத்தார் ஐசுவரியத்திலும் சிற்றின்பங்களை நாடுவதிலும் பேர்போனவர்கள்.

1. சபையின் நிலைமை. இப்பட்டணத்தில் எப்போது சபை உற்பத்தியாயிற்று என்று சொல்வது கூடாமை. எபேசு சபைக்கு ஆண்டவர் ஏழு நட்சத்திரங்களையுடையவராகக் காணப்பட்டதுபோல முதல் வாக்கியத்தில், இந்தச் சபைக்கும் ஆண்டவர் ஏழு நட்சத்திரங்களை உடையவராகவும் தேவனுடைய ஏழு ஆவிகளையுடையவராகவும் காணப்படுகிறார். ஏழு ஆவிகளைக்குறித்து நாம் வாசிக்கும்போது, தேவ வல்லமையும், மகிமைப் பிரதாபமும், பூரணமாக மனுஷருக்கு அளிக்கப்படுகிறது என்று அறியவேண்டும். இந்த வார்த்தையின்படி தேவன் தமது சபைக்கு முழு ஜீவனையும் பலத்தையும் கொடுக்கச் சித்தமுடையவராயிருந்தாலும், இவர்களோ செத்தவர்களாயிருக்கிறார்கள். ஆசீர்வாதங்களையும் எழுப்புதலையும் பெறக்கூடிய இவர்கள் ஜீவனற்ற பிணங்களைப்போலிருக்கிறார்கள்.

இரண்டாம் வசனத்தில் நாம் வாசிக்கிறபடி இச்சபைக்கு விசேஷமான பேரும் கீர்த்தியும் இருந்தாலும், இவை யாவும் பழைய அநுபவமாகவேயிருந்தன. ஆண்டவர் அவர்களோடு பேசுங்காலத்தில் அந்தப் பட்டணத்து ஜனங்கள் தாங்கள் அடைந்திருந்த முந்தின பலத்தையும் கீர்த்தியையும் இழந்தவர்களாயிருந்ததுபோலவே, சபையாருங்கூட தங்களுக்கிருந்த பலத்தையும் கீர்த்தியையும் ஜீவனையும் இழந்துபோயிருந்தார்கள். தாங்கள் ஆரம்பித்த பக்திக்குரிய வேலையைச் சரிவர முடிக்காமற்போனார்கள். அரும்பு காணப்பட்ட பிரகாரம் பூ புஷ்பிக்கவில்லை. வாக்குத்தத்தம் ஏராளம்; செய்கையோ ஒன்றுமில்லை. கிரியையின் ஆரம்பம் துரிதமாகவிருந்தது, நிறைவோ காணப்படவில்லை. துவக்கத்திலிருந்த ஊக்கமும் முயற்சியும் கடைசியில் இல்லாமற்போயிற்று.

இருமுறை இந்தப் பலமான துருகம் சத்துருக்களின் கையில் விழுந்தது என்று முன்னே பார்த்தோம். கி. மு. 546-ம் வருஷத்திலும் கி. மு 230-ம் வருஷத்திலும் இதை முற்றுகைபோட்ட சத்துருக்கள் பட்டணத்தைப் பிடித்தார்கள். இந்த மலை வெகு செங்குத்தாயிருந்தபடியால், சத்துருக்கள் மூன்று திசைகளிலும் ஏறி நம்மைத் தாக்கமுடியாது என்று இப்பட்டணத்தார் நம்பிக்கொண்டிருந்தார்கள். சத்துருக்கள் ஏறமுடியாது என்று எண்ணியிருந்த பக்கங்களிலுள்ள பாறை கற்கள் புசல்காற்றினாலும் அடை மழையினாலும் கரைந்து கரைந்து தேய்ந்துபோயிருந்தன. தைரியமும் சாமர்த்தியமுமுள்ள சத்துருக்கள் இராக்காலத்தில் கோட்டைக் காவலாளிகள் ஒரு பக்கத்தை நோக்கிக் காத்து விழித்திருக்கையில், துருகத்தின்மேல் வெகு கஷ்டத்தோடு வரக்கூடாத பக்கத்தின் வழியாய் ஏறி திடீரென்று தாக்கி, கோட்டையைப் பிடித்துக்கொண்டார்கள். மூன்றாம் வசனத்தில் எச்சரித்திருக்கிறபடி 'விழித்திராத காலத்தில் திருடனைப் போல் சத்துருக்கள் இவர்கள்மேல் வந்தார்கள்.' அவ்வண்ணமாகவே சபையார் விழித்திராததினால், அவர்கள் பக்தி வரவரக் குன்றிப் போய் உயிரற்றிருந்தது. நம்முடைய இரட்சகர் தமது சீஷர்களுக்கு கடைசியாக போதித்தபோது அவர்களுக்கு விழித்திருங்கள், விழித்திருங்கள் என்று அடிக்கடி எச்சரித்ததுண்டு. மனுஷருக்குண்டாகிற அஜாக்கிரதை, கவலைத்தாழ்ச்சி, சோர்பு இவைகள் இன்னதென்று நமது ஆண்டவருக்கு நன்றாய்த் தெரியும். விழிப்புள்ளவர்களாயிருப்போமாக. இந்தப் பட்டணத்தைக் குறித்த ஒரு விசேஷமுண்டு. அதென்னவென்றால், இப்பட்டணத்தைச் சேர்ந்த பழைய சுடுகாடு ஒன்று ஊருக்குச் சமீபத்திலிராமல், ஆறு மைல் தூரத்துக்கப்பாலிருந்த விசாலமான ஓர் நதிக்கு அக்கரையி



லிருந்தது. இது ஒரு விசேஷமான காரியமல்லவா? மரணம், தீட்டு, அசுத்தம் இவை முதலானவை தங்களுக்குச் சமீபத்திலிருப்பது இஷ்டமில்லாமையால், இந்த ஏற்பாட்டைச் செய்திருக்கலாம். இவ்வண்ணமாகவே இந்தச் சபையார் அழகின்பேரிலும், சுத்தத்தின் பேரிலும், சந்தோஷத்தின்பேரிலும் பிரியம் வைத்திருக்கலாம். ஆயினும் அவர்களுக்குத் தெரியாத பிரகாரம் மரணமும் சுடுகாடும் அவர்களை அடுத்திருந்தது. சர்தை சபை நல்ல பேரையுடையதாயிருந்தாலும், அஞ்ஞானிகளைப்போல தாறுமாறாய் ஜீவிக்க ஆரம்பித்தார்கள்.

(இன்னும் வரும்)

## Holiness

**By the Rev. A. Paramanandham**

### பரிசுத்தம்

(தொடர்ச்சி)

#### இரண்டாம் அதிகாரம்

#### தேவனுடைய பரிசுத்தம்

சத்திய வேத கிரந்த கர்த்தாக்கள் பரிசுத்தம் என்னும் பதத்தை எந்தெந்த அர்த்தத்தில் உபயோகித்தார்கள் என்றும், அவ்வார்த்தையின் அபிப்பிராயம் வரவர எவ்வாறு சிரேஷ்டமாயிற்று என்றும், நாம் விசாரிக்கையில் பரிசுத்தம் என்கிற விஷயம் தேவனுக்கும் மனுஷருக்கும் ஒரு விதமான சம்பந்தம் உண்டென்கிற அறிவினால் முதலில் உண்டாகி, அதற்குமேல் தேவனுடைய விஷயமாயும், மனுஷனுடைய விஷயமாயும் பிரத்தியேகம் பிரத்தியேகமாய்ப் பரீட்சித்தறியப்பட்டது என்று நாம் பார்த்தோமல்லவா? தேவனுடைய விஷயமாய்ப் பரிசுத்தம் என்பது அவருடைய சுபாவ குணத்தைக் காட்டுகிறது. மனுஷனுடைய விஷயமாய் தேவனுடைய குணத்துக்குச் சம்பந்தமானதும் மனுஷன் அடையத்தக்கதுமான குணத்தைக் காட்டுகிறது. அப்படியானால், பரிசுத்தத்தில் மனுஷ சப்பந்தம் தேவ சப்பந்தம் என்னும் இரண்டு பிரத்தியேகமான விதங்கள் உண்டென்று நாம் அறிந்துகொள்ளவேண்டும்? அநேக வார்த்தைகளுக்கு வேறே வேறே அர்த்தங்களுண்டு. மரத்துக்கு ஜீவன் உண்டென்றும், மிருகங்களுக்கு ஜீவன் உண்டென்றும் சொல்லும்போது,

இந்த ஜீவனும் அந்த ஜீவனும் ஒன்றுக்கொன்று சரிசமானமாயிருக்கிறது என்று நாம் நினைப்பதில்லை. மரத்தின் ஜீவனில் இல்லாத அநேக லட்சணங்கள் மிருகத்தின் ஜீவனில் இருக்கிறதல்லவா? அதேபிரகாரம் தேவனுடைய பரிசுத்தத்துக்கும் மனுஷனுடைய பரிசுத்தத்துக்கும் இவ்வித வித்தியாசங்கள் உண்டென்று நாம் அறிந்துகொள்ளவேண்டுமே? மனுஷனுடைய பரிசுத்தத்தில் இல்லாத சில லட்சணங்கள் தேவனுடைய பரிசுத்தத்தில் சேர்ந்திருக்கின்றனவா? இல்லை; இரண்டும் ஒன்றே. தேவனுடைய பரிசுத்தத்தில் எந்த லட்சணங்கள் இருக்கின்றனவோ, அந்த லட்சணங்கள் மனுஷனுடைய பரிசுத்தத்திலும் இருக்கவேண்டும். அது எப்படி? தேவனுடைய சுபாவம் அபரிமிதமானது, அளவற்றது; மனுஷ சுபாவம் பரிமிதமானது, அளவுள்ளது. இந்தக் கீழ்ச் சுபாவத்தின் பலன் அந்த மேல் சுபாவத்தின் பலனுக்கு எப்படிச் சமானமாயிருக்கலாம்? மிகவும் உயரமான தென்னைமரம் காய்க்கிற காய்க்கும், சின்ன எலுமிச்சஞ் செடி காய்க்கிற காய்க்கும் மிக தாரதம்மியமுண்டு. அதன் ஜாதி வேறே, இதன் ஜாதி வேறே. ஆகையால் தேவ சுபாவத்துக்கும் மனுஷ சுபாவத்துக்கும் இந்த விதமாய் ஒன்றுக்கொன்று வித்தியாசமாயில்லை. தேவ சுபாவம் நம்முடைய புத்திக்கெட்டாத உன்னதமானது. மனுஷ சுபாவம் குறைவாய் இருப்பது நிஜம். ஆதலால் தேவன் மனுஷனைத் தமது சாயலின்படியே சிருஷ்டித்தார். அதாவது: தேவன் மனுஷனைச் சிருஷ்டித்தபோது, தமது சுபாவத்தை அவனுக்குச் சேர்த்துக் கொடுத்தார். இந்தச் சங்கதியை அறிந்துகொண்டு மனுஷராகிய நாம் தேவனுக்குச் சமானமாயிருக்கிறோம் என்றும், தேவனுக்கும் நமக்கும் எந்த விதமான தாரதம்மியமும் இருக்காது என்றும் பாவிக்க முடியாது. 'தத்வமஸி' என்பதை நாம் கற்றுக்கொள்ளலாகாது. தேவன் சுயம்புவாயும் அளவற்றவராயும் இருக்கிறார். நாமோ அவரிலேயே ஜீவிக்கிறோம், நடமாடுகிறோம், இருக்கிறோம், தேவன் சிருஷ்டி கர்த்தாவானவர்; நாமோ அவருடைய சிருஷ்டிகள்; அவருக்கும் நமக்கும் எவ்வளவோ வித்தியாசமுண்டு. ஆதலால் தேவன் நம்மைத் தமது சாயலின்படியே சிருஷ்டித்தார் என்பதை நாம் ஒருபோதும் மறந்துபோகலாகாது. நாம் பாவஞ் செய்வதினால் நம்மிலிருக்கிற சத்குணத்தைக் கெடுத்துக்கொண்டிருக்கலாம். உயரமாயும் விஸ்தாரமாயும் வளருகிற பெரிய மரத்துக்கும், அதிலிருந்து முறிந்து விழுந்த உலர்ந்த கட்டைக்கும் எவ்வளவு வித்தியாசமிருக்கிறதோ அவ்வளவு வித்தியாசம் சுயம்பும் பரிசுத்தமுமுள்ள தேவனுக்கும், பாவத்தினால் கெட்டுப்போன மனுஷருக்கும் உண்டு.



ஆயினும், அந்த மரமும் முறிந்த கிளையும் ஒரே ஜாதியாயிருக்கிறபிரகாரம் தேவ சுபாவமும் மனுஷ சுபாவமும் ஒன்றாயிருக்கிறது என்றும், மனுஷ சுபாவமானது தேவ சுபாவத்தில் ஒட்டப்பட்டிருக்குமானால், தேவனுடைய குணத்துக்குச் சமானமாயிருக்கிற பரிசுத்தம் என்கிற பலனைக் கொடுக்கும் என்றும் நிச்சயமாய் அறிந்துகொள்ளலாம். தேவன் பூலோகத்தை நிருமித்தபோது, புல், மரம், செடிகளாகிய தாபரங்களையும், புழு, பூச்சிகள், ஆடு, மாடுகளாகிய உயிர்ப்பிராணிகளையுமெல்லாம் அந்தந்த ஜாதிகளின் பிரகாரமாய்ச் சிருஷ்டித்தார் என்று சத்திய வேதத்தில் நாம் வாசிக்கிறோம். ஆனால் தேவன் மனுஷரை அவரவர்களுடைய ஜாதிப்படியே சிருஷ்டித்தார் என்று எழுதப்படவில்லை. தேவன் மனுஷரைத் தமது சாயலின்படியே சிருஷ்டித்தார். மனுஷ ஜாதி தேவ சாயலையுடையதே. சுபாவ விஷயத்தில் மனுஷன் மிருகங்களுக்குத் தூரமாயும் தேவனுக்குச் சமீபமாயுமிருக்கிறான். இந்தச் சங்கதி அதிக முக்கியமானதாயிருக்கிறது. இதைச் சூட்சுமமாய் அறிந்துகொள்வதினாலேயே பரிசுத்தம் என்கிற போதனை நிலைகொண்டிருக்கிறது. இந்தச் சங்கதி சத்தியமாயிராவிட்டால் மனுஷன் பரிசுத்தத்தை அடையத் தக்கவனல்ல. தேவன் நம்முடைய சுபாவத்தைத் தமது சாயலின்படியே சிருஷ்டியாமலிருந்தால், அதைத் தம்முடைய சாயலுக்குச் சரியாக புதுப்பிக்கிறது கூடாமை. ஜனங்கள் இந்த விசேஷமான சங்கதியைச் சரியாய் அறிந்துகொள்ளாமலிருக்கிறபடியால், பரிசுத்தம் என்கிற போதனையையுங்கூட மிக அற்ப சொற்பமாய்த்தான் கிரகித்துக்கொண்டிருக்கிறார்கள். இந்தச் சங்கதியை யோசித்து அறிந்துகொண்டு மனதில் வைத்துக்கொள்வோமாக. இதின்மூலமாய்ப் பரிசுத்தம் என்கிற போதனைக்கு மூலாதாரமாயிருக்கிற இரண்டு சித்தாந்தங்கள் வெளிப்படுகின்றன. அவைகளாவன:—

(1) தேவன் மனுஷருக்கு நிஜமாயும், கிரமம் கிரமமாயும் வெளிப்படலாம்.

(2) மனுஷர் தேவனுக்கு நிஜமாயும், கிரமம் கிரமமாயும் காணப்படலாம்.

மனுஷர் தேவசாயலானவர்கள் அல்லாமலிருந்தால், இந்த இரண்டு சித்தாந்தங்களில் எதுவும் சத்தியமாயிராது. மனுஷரும் பரிசுத்தத்தை அடைவது அசாத்தியமாயிருக்கும்.

இப்படி இருக்கிறபடியால், இரண்டு முக்கிய அம்சங்களை விசாரித்தறிவது தகுதியானது. அவை எவையெனில்:

(1) தேவனுடைய பரிசுத்தம் எப்பேர்க்கொத்தது; (2) தேவனுடைய பரிசுத்தத்துக்கும் மனுஷனுடைய பரிசுத்தத்துக்குமுள்ள

சம்பந்தமென்ன. இவைகளில் முதல் சங்கதியை அறியாதிருந்தால் இரண்டாம் சங்கதியையும் அறியமுடியாது. தேவனுடைய பரிசுத்தம் எத்தன்மையானதென்று இந்த அதிகாரத்தில் விசாரித்தால், மனுஷனுடைய பரிசுத்தமும் அதற்கு எவ்வாறு சம்பந்தமாயிருக்கிறது என்று பின்வரும் அதிகாரத்தில் பரிசோதிப்பதற்கு அவகாசமுண்டாகும்.

1. தேவனுடைய பரிசுத்தம் என்பது அவருடைய குணங்களில் ஒன்றை மாத்திரம் காட்டுவதல்ல. அவருடைய எல்லா குணங்களையும் ஒன்றாய்க் கூட்டிக் காண்பிப்பதைக் குறிக்கும். தேவனுடைய சுபாவத்தோடு சேர்ந்த அல்லது அதற்கு வித்தியாசமில்லாத குணத்தின் சேர்க்கைக்கே பரிசுத்தம் என்கிற பெயர் வந்தது. தேவனுடைய குணவிஷயமாய் நாம் எந்த சிரேஷ்டமானலட்சணத்தை ஊகிக்கலாமோ அதே அவருடைய பரிசுத்தத்தில் கூடியிருக்கிறது. வானவில்லை நாம் பார்க்கையில், சூரிய கிரணங்களில் நானாவிதமான வர்ணங்கள் அதில் கூடியிருக்கின்றனவென்று தெரியவருகிறதல்லவா? எந்தப் பொருளில் இவ்வளவு வர்ணங்கள் கலந்திருக்கிறதோ அதற்கே வெளிச்சம் என்னும் பெயரைக் கொடுக்கிறோம். அதே பிரகாரம் தேவனுடைய பரிசுத்த குணத்தில் நீதி, அன்பு, சத்தியம், நிர்மலத்துவம் முதலான லட்சணங்கள் கூடியிருக்கின்றன. அல்லது இந்த லட்சணங்களின் சேர்க்கையே பரிசுத்தம். இதுவே சத்திய வேதத்தில் விவரித்திருக்கிற பெயராயிருக்கிறது. தேவனுடைய பரிசுத்தமானது மனுஷனுடைய பரிசுத்தத்துக்கு உத்தம மாதிரியாயிருக்கிறது. மனுஷன் அந்த மாதிரியைப் பார்க்காவிட்டால், அதை அனுசரிக்கிறது அவனால் முடியாது. மனுஷன் தேவனுக்குத் தன்னைக் காண்பிக்கிறதற்கு முன்னே அவன் அவரைத் தரிசிக்கவேண்டும். பரிசுத்தத்தைப் பிரகாசிக்கச் செய்கிற மகிமை தேவனுக்கு உண்டு. தேவனுடைய பரிசுத்தத்தின் சாயலை அடையவேண்டும் என்கிற மகிமையின் அனுபவம் நமக்குமுண்டு. தேவனுடைய மகிமையைப் பார்க்கிற லக்ஷணத்திலேயே நாம் அவருடைய சாயலை அடைந்தவர்களாகி மகிமையின்மேல் மகிமையை அடைவோம். (2 கொரி. 3[18].)

(இன்னும் வரும்.)

---



# A Grace-filled Life
## The 'Retrospect' of Rev. Hudson Taylor

**Translated by the Rev. N. Devasagayam, B.A.**

## திருவருட்பிரகாச ஜீவியம்

ஹட்ஸன் டேய்லர் ஐயரின் 'பின்னோக்குச் சரித்திரம்'

(தொடர்ச்சி)

### பதினாறும் அதிகாரம்

திங்களில் அகதிகளுக்கு வழக்கப்பிரகாரம் ஆகாரம் கிடைத்தது. அவர்களுக்கு அன்னம் கொடுப்பது ஆண்டவருடைய வேலையாகையால் அதை அவர் பொறுப்புக்கே விட்டு நாங்கள் அகதிகளை வர வேண்டாம் என்று சொல்லாதிருந்தோம். எங்களுக்குமாத்திரமல்ல எங்களையடுத்த விதவைகள், அநாத பிள்ளைகள், குருடர், முடவர், ஆதாரவற்ற அகதிகள், இவர்களுக்கும் வேண்டுமளவு அன்னம் உதவின ஆண்டவருடைய கருணையை நினைத்து நினைத்து எங்கள் கண்களில் நன்றிக்கண்ணீர் ததும்பிற்று. 'என்னோடேகூடக் கர்த்தரை மகிமைப்படுத்துங்கள். நாம் ஒருமித்து அவர் நாமத்தை உயர்த்துவோமாக......கர்த்தர் நல்லவர் என்றதை ருசித்துப் பாருங்கள். அவர்மேல் நம்பிக்கையாயிருக்கிற மனுஷன் பாக்கியவான். கர்த்தருடைய பரிசுத்தவான்களே, அவருக்குப் பயந்திருங்கள்; அவருக்குப் பயந்தவர்களுக்குக் குறைவில்லை. சிங்கக்குட்டிகள் தாழ்ச்சியடைந்து பட்டினியாயிருக்கும். கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையும் குறைவுபடாது.'

இருநூறு டாலர்களும் என்றைக்கும் கட்டி வருமா? புது வருடப் பிறப்பு நாளில் எங்கள் கையிருப்புக் கரைந்துபோயிற்று. 1858-ம் வரு ஜனுவரிமீ 6உயில் அணுவில் அரைமாவுக்கு (20-ல் ஒரு பாகம்) சரியான ஒரே காசுமாத்திரம் மீதியிருந்தது. இந்த ஒரு காசில் நானும் ஜோன்ஸும் எப்படிப் பிழைப்போம்? ஆகவே, உடனே ஆண்டவரைப் பார்த்து அவர் தம் கிருபையுள்ள கரிசனத்தை எங்களுக்கு விளங்கப்பண்ண மன்றாடினோம். வீட்டிலிருந்த பதார்த்தங்களை ஆராய்ந்ததில் இருவருக்கும் பத்தினதும் பத்தாததுமாய் காலைச் சாப்பாட்டிற்கு இருந்தது. அதற்குப் பிற்பாடு சாப்பாடுமில்லை, சாப்பாடு வாங்கக் காசுமில்லை. ஆதலால், 'எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்' என்று மன்றாடி வேண்டியதெல்லாம் வழங்கும் வள்ளலாகிய கிருபாமூர்த்தியை அண்டிக்கொண்டோம்.

ஜெபித்துச் சிந்தனைசெய்து எங்களுடைய தற்போதைய அவசியத்துக்கு உதவும்படி எந்த சாமானையாவது விற்கலாமா என்று தேடிப் பார்த்தோம். எங்களுடைய அவசரங்களுக்கு உதவியில்லாத எந்த சாமானுமிருந்ததில்லை. தவிர, கைமேல் காசு கொடுத்துச் சீனர்கள் வாங்க விரும்பும் பண்டங்களுமிருந்ததில்லை. கடன் எவ்வளவு வேண்டுமானாலும் அகப்படும். அதுவோ எங்கள் மனச்சாக்ஷிக்கு விரோதமும் நாங்கள் பிரவேசித்துப் பிழைத்த விசுவாச ஜீவியத்துக்குப் பங்கமும் திருவசனத்துக்கு ஒவ்வாமையுமானதால் அதை நினைப்பிலும் நில்லாமல் தொலைத்தோம். சீனர்கள் உடனே விலைகொடுத்து வாங்க விரும்பும் ஒரு பொருள் எங்களிடமிருந்தது. அது இருப்படுப்பு. அதை விற்க எங்களுக்கு மனந்துணியவில்லை. கடைசியாய், தீராதென்று கண்டு விற்கத் துணிந்து அதை எடுத்துக்கொண்டு போனோம். சிலதூரம் நடந்து பிறகு படகுப் பாலத்தின்மேல் ஆற்றின் அக்கரைக்குப் போகவேண்டியது. நாங்கள் வந்து பார்த்தபோது படகுப் பாலம் இரவில் வந்த வெள்ளத்தில் உடைந்து காணாமற்போயிற்று. ஆற்றுத் தோணியிற் போகலாம். அதற்கு ஆளுக்கு இரண்டு காசு கொடுக்கவேண்டும். எங்களுக்கிருந்ததோ ஒரே காசு. ஆண்டவர் எங்களுக்கு இப்படி வழியடைத்தால், வீட்டுக்குத் திரும்பி அவர் எங்களுக்காக என்ன வழிபண்ணுவார் என்று காத்திருந்தோம்.

வீட்டிற்கு வந்தவுடன், ஜோன்ஸுடைய மனைவி பிள்ளைகளை அழைத்துக்கொண்டு ஒரு சிநேகிதியின் வீட்டிற்கு அவள் இதற்கு முன் கொடுத்திருந்த விருந்துக்கழைப்பு நிருபத்திற்கிணங்கிப் போய் விட்டதாகக் கண்டோம். ஜோன்ஸையும் அந்த அம்மையார் அழைத்திருந்தார். ஆகிலும், என்னைத் தனியே பட்டினியிருக்க விட்டுப் போக அவருக்கு மனதில்லை. சமையல் சாமான் வைக்கிற பெட்டி ஏதாகிலும் அகப்படுமா என்று ஆராய்ந்தோம். உடனே தின்பதற் குதவியாய் எதுவுமகப்படவில்லை. ஒரு சிறு கொக்கோச் சுருள்மாத்திரம் கிடைத்தது. அதை வெந்நீரில் கலக்கிச் சாப்பிட்டு ஒருவாறு பசிக்களை தெளிந்தோம். அப்பால், எங்கள் நெருக்கத்தில் ஆண்டவரை நோக்கிக் கூப்பிட்டோம். அவர் எங்கள் வேண்டுதலைக் கேட்டு எங்களை எல்லா நெருக்கங்களிலுமிருந்து இரட்சித்தார். எப்படியெனில், நாங்கள் இன்னம் முழங்காலில் இருக்கும்போதே இங்கிலாந்திலிருந்து அனுப்பப்பட்ட பணச் சகாயம் அடங்கின கடிதம் வந்து சேர்ந்தது.

(இன்னும் வரும்.)

C. L. S. PRESS, MADRAS—1916

No. 117 1916

7 - FEB 1915

# வேதியர் [illegible]

## Self-Realization and Self-Sacrifice

**By the Rev. G. E. Phillips, B.A.**

(Outline notes of an address to Hindu students, which could be adapted for vernacular addresses.)

THESE are two words which figure very prominently in present day teaching about morals. But just exactly what does each word mean? Nothing is more important in matters of this kind than to be quite clear what our terms mean, because different people attach very different senses to them. Take these words one by one.

### I. Self-realization

(*a*) There is a school of teaching which tells me that what I have to do is to become a very big person indeed. I must be strong and powerful, even terrible. If any weak thing comes in my way I must ruthlessly trample upon it and march forward. Such qualities as pity and love are weaknesses if they prevent me from becoming as strong, or from achieving as great conquests, as I might have done.

Of that teaching we need say no more than that it is unquestionably responsible for some of the very worst things in the present war. One scarcely dares to think of the misery which such doctrine has let loose upon the world in these days.

And are we free from it? We, many of us, never heard of the German philosophers who taught it, but have we not thought that everything must bow before our own greedy, ambitious, discontented self. *Selfishness* is after all what is meant by that kind of self-realization, and we are not as free as we have thought from those evils which are responsible for

the miseries of war. Says John Oman, 'All who live for position, money, or any kind of material power, are involved in the tyranny of immoral force as much as if they were fighting in an unjust and predatory war.' Put into simpler words, that means that if you and I are mainly selfish, we have no right to sit in judgement on Germany.

(*b*) There is another teaching heard in India much more often. Realizing yourself means realizing that you yourself are Brahma. *Tat twam asi, aham bramasmi.* From the time of the Upanishads down to the present day, scores of religious teachers in India tell you to realize that you are in some fundamental way one with the eternal, infinite being which is the source of all.

What can I say to such teaching? Only that my whole experience contradicts it. I am conscious of such deep sinfulness and need that it would be blasphemous to say that I am identical with the eternally divine. If I cannot tell the condemned murderer in prison that he is a saint, how can I tell him he is actually the supreme Lord of all saints? No 'our relationship to God is that of worshipper and worshipped', says Devendranath Tagore, and we dare not say that self-realization means finding out that we are God.

(*c*) Then what *is* self-realization. It is finding out what we really are—discovering that we are spirits possessing, not ruled by, bodies, learning that this spiritual life of ours has in it infinite possibilities of good and evil. It means making the painful discovery that most of our possibilities of good are unrealized, and that we are very far away from what we ought to be. And such self-realization is the first step towards something which is more important, the discovery of God waiting to save such people as ourselves. *The discovery of what we are by ourselves leads to the realization of what we can become by God's grace.*

Now we turn to

## II. Self-sacrifice

(*a*) Some people mean by that, giving up one's personality altogether, becoming absorbed in the All, as the drop of rain in



the ocean. So the ideal self-sacrificing man becomes the man who has no wish whatever. But because life is often misused, it does not therefore become right to commit suicide. Our individual power of will is a holy trust placed in our hands by God to whom we must give account, and our business is not to lose it but to use it for His glory.

(*b*) You see a different kind of self-sacrifice in the story of Edith Cavell, or of Father Damien, or in the example of the thousands of Christian young men going to the trenches in these days, going because 'greater love hath no man than this, that a man lay down his life for his friends.' These are all illustrations of people *dying* for others. But it would be perfectly easy to find scores of examples of the kind in which people *lived* for others' sake as much as these people *died* for others' sake. That is the kind of self-sacrifice that is to be held up as our ideal.

## III. And here is an astonishing fact of experience

It is in such self-sacrifice as that, that people find out what they can become. Thousands of men in Europe have gained a new nobility and strength just now, for the simple reason that they have ceased to trouble about what becomes of themselves. True self-sacrifice leads to true self-realization. He that *loseth* his life shall find it. You cannot realize the possibilities of your manhood until you throw overboard selfish aims altogether.

## IV. And do you know why that is?

It is because this universe is controlled by a God whose very essence is self-sacrificing love. Our very creation as free individuals is due to His loving self-limitation. Our preservation is due to the patience of a love which would not take the path of ease by letting us perish and so save trouble. And the very heart of the God that made us is seen on Calvary as it is seen nowhere else.

Therefore when you give up selfish aims and strive to be self-sacrificing, you are co-operating with God. You are

opening the sluices for God's spirit to flood your life. Here are some words of one great in suffering, and great in spiritual experience.

> My will is not my own.
> Till Thou hast made it Thine;
> It has no spring of action sure;
> It varies with the wind.
> It cannot drive the world
> Until itself be driven,
> Its flag can only be unfurled
> When Thou shalt breathe from heaven.

## The Letter to Sardis

**By the Rev. F. Goodwill**

## சர்தை சபையின் தூதனுக்கு எழுதின நிருபம்

வெளி. $3^{1-6}$

(தொடர்ச்சி)

2. **ஆண்டவருடைய எச்சரிப்பு.** எபேசு சபையார் தங்களுடைய மூர்தின நிலைமையைக்குறித்து நினைக்கவேண்டும் என்று போதிக்கப்பட்டபடியே, இச்சபையாரும் தாங்கள் கேட்டுப் பெற்றுக்கொண்ட வகையைக்குறித்து நினைவுகூர வேண்டுமென்று சொல்லுகிறார். நாம் யாவரும் நூதனமான போதனையையும் சங்கதிகளையும் கேட்கவும் பார்க்கவும் எதிர்நோக்குகிறோம்.

பழைய போதனையையும் பழைய புத்திமதிகளையும் நாம் கைக்கொண்டு வராவிட்டால், புது போதனையும் புது புத்திமதியும் நமக்குப் பிரயோஜனப்படாதே. தற்காலத்திலுள்ள இந்தியர் அநேகர் புது தீர்க்கதரிசி வருவார் என்று எதிர்நோக்கிக்கொண்டிருக்கிறார்கள். பழைய காலத்துத் தீர்க்கதரிசிகளைக் கொன்ற எருசலேம் பட்டணத்தார் யோவான்ஸ்நானகனையும் இயேசுகிறிஸ்துவையும் கொன்றார்களே. இயேசுவானவருடைய பிரசங்கத்தையும் போதனையையும் ஏற்றுக்கொள்ளாதவர்கள், புது தீர்க்கதரிசியின் வார்த்தையையும் போதகத்தையும் எப்படிக் கவனிப்பார்கள்? கவனிக்கமாட்டார்கள்.

இச்சபையார் சாகிறதற்கு ஏதுவாயிருக்கிற நற்குணங்களையும் பழக்கங்களையும் கிரியைகளையும் ஸ்திரப்படுத்தவேண்டும். நாம் கவ



லைத்தாழ்ச்சியுள்ளவர்களாயிருக்கையில் நம்முடைய நற்குணங்களெல்லாம் ஒருப்படக் கெட்டுப்போகிறதில்லை. மனுஷர் முழுவதுமாய்க் கெட்டுப்போகிறபோது அவர்கள் பயங்கரமான ஸ்திதியையே காண்பார்கள். சாகிறதற்கேதுவாயிருக்கிற குணங்களையும் இலட்சணங்களையும் பார்த்து நாம் சிலவேளை வீணாய்ச் சந்தோஷத்தையும் நம்பிக்கையையும் கொள்ளுகிறோம். பட்டணத்துக்குள் சத்துருக்கள் நுழைந்ததுபோலவும் சபைக்குள் மரணம் பிரவேசித்ததுபோலவும் நியாயம் விசாரிக்கிறவர் இவர்களிடத்தில் நினையாத வேளையில் வரப்போகிறதினால், இச்சபையார் ஜாக்கிரதைப்படவேண்டும் என்று மூன்றாம் வசனம் எச்சரிக்கிறது.

3. அருளப்பட்ட வாக்குத்தத்தங்கள். இந்தச் செத்த சபையில் சில பேர் தங்கள் வஸ்திரங்களை அசுசிப்படுத்தாமல் தங்கள் ஆத்துமாவின் உயிரைக் காப்பாற்றியிருக்கிறார்கள். இப்பேர்க்கொத்தவர்கள் ஆண்டவருடைய கிருபைக்கு எப்படியும் பாத்திரராயிருக்கிறபடியால், வெண்வஸ்திரம் தரித்து அவரோடு உலாவும் சிலாக்கியத்தையடைவார்கள். இவர்களைக்குறித்துத்தான் நான்காம் வசனத்தில் வாசிக்கிறோம். ஐந்தாம் வசனத்திலோ உயிரையும் விசுவாசத்தையும் இழந்திருக்கிறவர்களுக்கு அருளப்பட்டிருக்கிற வாக்குத்தத்தங்களைப்பற்றி வாசிக்கிறோம். இவர்களுக்கு வெண்வஸ்திரம் தரிப்பிக்கப்படும். ஜீவபுஸ்தகத்திலிருந்து அவர்கள் பேரைக் கிறுக்கிப்போடாமல் அவர்கள் நாமத்தை அறிக்கையிடுவார். வெண்வஸ்திரம் சுத்தத்துக்கும் ஜெயத்துக்குள் சந்தோஷத்துக்கும் அறிகுறியாம். ஒரு ஜெய வீரன் யுத்தத்திலிருந்து திரும்பிவருகையில் பட்டணத்தார் யாவரும் வெண்வஸ்திரம் தரித்துக்கொண்டு அவனுக்கு எதிர்கொண்டு போய், தங்கள் ஊருக்குள் கெம்பீரத்தோடும் ஆர்ப்பரிப்போடும் அழைத்துக்கொண்டு வருவார்கள் அதுபோல் இங்கே சொல்லப்படுகிற வெண்வஸ்திரங்கள் பரிசுத்தவான்கள் பரிசுத்தத்தையும், அவர்கள் தேவனிடத்தில் அடையக்கூடிய ஐக்கியத்தையும் மகிமையையும் காட்டுகிறது. விசுவாசி நித்திய ஜீவகரையில் சேரும்போது இவ்வித கெம்பீரமும் ஆனந்தமுமுண்டாகும் என்றறிவோமாக.

அக்காலத்திலிருந்த ரோமரும் கிரேக்கரும் பட்டணங்களில் எல்லாவற்றிலுமுள்ள ஜனங்களுடைய பேர்களைப் புஸ்தகங்களில் எழுதிவைப்பார்கள். அந்தந்தப் பட்டணத்தார் மரிக்கிறபோது அவர்கள் பேர்கள் கிறுக்கப்படுவது வழக்கம். சிலவேளை பட்டணத்தார் ஒன்றாய்ச் சேரவேண்டிய தருணங்களில் ஊராருடைய பேர் எல்லாம் வாசிக்கப்படுமாம். இந்த புராதன வழக்கத்தை யனுசரித்தே தேவன் உலகத்தாரை தம்முடைய பத்திராசனத்துக்குமுன் நிறுத்தும்போது, தமக்

குச் சொந்தமானவர்கள் பேரை வாசிப்பார். செத்துப்போன சத்துருக்களானவர்களுடைய பேரை ஜீவபுஸ்தகத்திலிருந்து கிறுக்கிப் போடுவார். நம்முடைய முந்தின நல்லொழுக்கம் தற்காலத்துக்குப் போதாதே. பத்து வருஷத்துக்குமுன் நம்முடைய பேர் ஜீவ புஸ்தகத்தில் எழுதப்பட்டிருந்தாலும் இக்காலத்தில் நாம் உயிருள்ளவர்களாயிராவிட்டால் நம்முடைய பேர்கள் எழுதப்பட்டிருக்கமாட்டாது. கிறுக்கப்பட்டிருக்கும். சிநேகிதரே, நம்முடைய ஸ்திதி என்ன? நம்முடைய பேர் எழுதப்பட்டிருக்கிறதா? எழுதப்பட்டிருந்தால் எப்போதும் எழுதப்பட்டிருக்கிறதா என்று விசாரிப்போமாக. இந்தப் பட்டணத்தார் துருகத்தின் ஒரே பக்கம் மாத்திரம் விழித்திருந்து பார்த்துக்கொண்டிருந்தார்கள். மறு மூன்று பக்கத்தைக்குறித்தும் சிந்தையற்றிருந்தார்கள். சத்துருக்கள் எதிர்பாராவண்ணம் வந்து பிடித்துக்கொண்டார்கள். சிநேகிதரே, எல்லா விஷயத்திலும் சர்வ ஜாக்கிரதையாய் விழிப்புள்ளவர்களாயிருப்போமாக. நம்முடைய இருதயங்களைக் காத்துக்கொள்ள தேவாவியானவர் சகாயம் புரிவாராக. ஆமென்.

## The Way of Fear

### பயமார்க்கம்

### ஓர் தெரு பிரசங்கம்

பிரயாணி ஒருவன் ஒருநாள் இரவு ஓர் கிராமத்தில் இராத்தங்கினபோது மிகவும் விநோதமான ஒரு சம்பவத்தைக் கண்டான். அதென்னவென்றால், அவ்வூரார் யாவரும் மந்தையிலே கூடி ஆரவாரம் செய்து அவர்களுடைய தேவதையின் நாமத்தைக் காதடைக்கத்தக்கதாக கூவி சத்தம் செய்தார்கள். பிரயாணி இதை ஆச்சரியத்துடனே கண்ணுற்று 'இதென்ன சத்தம்' என்று கேட்டான். ஊராரில் ஒருவன் பிரதியுத்தரமாக 'மாரியம்மாள் நமது ஊருக்கு வாராதபடி அவளுக்காகத் திருவிழா கொண்டாடுகிறோம்' என்றான். பிரயாணி இந்த நூதன திருவிழாவைப்பற்றிக் கேட்டவுடனே மறுபடியும் அவனைப் பார்த்து 'இதை எப்படிக் கொண்டாடுகிறீர்கள்' என்று கேட்க, அவ்வூரான் ஜனக்கூட்டத்திற்குள் நுழைந்து ஒரு பந்தலுக்குப் பிரயாணியை நடத்திக்கொண்டுபோய் அங்கிருந்த விக்கிரகத்தைக் காட்டினான். அது பயங்கர தோற்றமும், மூர்க்கமான முகமும், குரூரமான பார்வையும், சிவந்த கண்களும், நிர்வாணமுள்ளதுமான



ஓர் பெண் தேவதையே. அதின் கையில் ஓங்கிய வெட்டரிவாளும் மற்றும் ஆயுதங்களும் இருந்தன. அதின் பக்கத்தில் பூசாரிகள் இரத்தம் பூசப்பட்டவர்களாக ராட்சதரைப்போல் நின்றார்கள். எருமைக்கடாக்களின் எழுதலைகள் அத்தேவதைக்கு முன்னே வைக்கப்பட்டிருந்தன. பிரயாணி மறுபடியும் மிகவும் பிரமிப்புடனே 'இதன் விபரம் என்ன?' என்று விசாரித்தபோது அவ்வூரான் 'அப்பா, வெட்டப்பட்ட எருமைக்கடாக்களின் இரத்தத்தை இப்பூசாரிகள் சாப்பிட்டு தங்கள்மேல் பூசி தேவதைக்குப் பானமாக செலுத்தியிருக்கிறார்கள். இத்தேவதை அந்த இரத்த பானத்தை அன்புடன் ஏற்றுக்கொண்டு நமதுபேரில் தயவுவைத்து விஷபேதி நமது கிராமத்தில் வாராமல் தடுத்துவிடுவாள். ஆகையினாலேதான் அவளுக்குப் பயந்து, அவளைப் பிரியப்படுத்தும்படி இப்படிச் செய்கிறோம்' என்றான்.

சில நாட்களுக்குப்பின் பிரயாணி அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டுப்போகையில் கிழவன் ஒருவன் வழியில் எதிர்ப்பட்டு இவனைப் பார்த்து, பேர், ஊர் முதலிய விஷயங்களைக் கேட்டு 'எவ்விடம் போகிறீர்' என்றான். பிரயாணி பிரதியுத்தரமாக 'நான் மதுராந்தகத்துக்குப் போகிறேன்' என்றான்.

கிழவன் பிரயாணியைத் தடுத்து 'நீ இப்போது அங்கு போக முடியாது. வெகுநேரம் செல்லும். வழியிலே உனக்கு மோசம் நேரிடும்' என்று எச்சரித்துப் பேசினான். 'எப்படி மோசம் நடக்கும்' என்று பிரயாணி வினவ, கிழவன்: 'மதுராந்தகத்துக்கும் இதற்கும் இடையில் ஓர் நதியுண்டு. அந்நதிக்கு இக்கரையில் பெரிய ஆல விருட்சம் ஒன்றிருக்கிறது, ராஜபாதை அவ்வாலமரத்தின் கீழ் செல்கிறது. அந்த ஆலமரத்தில் வசிக்கிற ஓர் பேய் இரவில் பிரயாணிகள் மரத்தின் அடியில் வரும்போது, குரங்கைப்போல் மரக்கிளையில் உட்கார்ந்திருந்து முதுகின்மேல் தாவிக் குதித்து குரல்வளையை நெரித்துக் கொன்றுபோடும். இதற்குப் பயந்து ஒருவரும் இரவில் இவ்வழி போகமாட்டார்கள். நீயும் போகவேண்டாம்' என்றான்.

அநேகர் நமது தேசத்தில் இவ்விதமாகவே, மாரியம்மன், கங்கம்மாள், குளிமை, மாவடியாள், கருப்பணசாமி முதலிய பேய் பிசாசுகளுக்குப் பயந்து நடக்கிறார்கள். இவ்வாறு பயப்படுகிறவர்களை பயமார்க்கத்தார் என்று சொல்வது நியாயம் அல்லவா? நாம் இந்த பயமார்க்கத்திலே நடக்கவேண்டிய அவசியம் என்ன? இந்த ஊரிலிருந்து மற்றோர் கிராமத்துக்குப் போக விரும்புகிற ஒருவன், முட்கள் நிறைந்ததும், உளையுள்ள பள்ளங்களுள்ளதும், விஷஜெந்துக்கள் நடமாடுவதும், கள்ளர் பதிவிருப்பதுமான பாதையில் போவானோ? அப்படிப்பட்ட வழிகளைத் தவிர வேறு நல்ல வழி இருந்தால் அதையே

தேவோன் அல்லவா? பய மார்க்கத்தையன்றி வேறு உத்தம மார்க்கம் நமக்குத் தெரியாதா? தெரியுமே.

தேவதைகளுக்குப் பயந்து நாம் இனி நடக்கவேண்டிய அவசியமில்லை. தேவதைகளுக்கு எல்லாம் மகாப் பெரியவரும் வல்லமையுள்ளவருமாகிய இயேசு பெருமான்பேரிலே நாம் பத்திவைத்தால் தேவதைகள் நமக்கு விரோதம் செய்ய வல்லமை அற்றுப்போகும். அவர் பராபரனாயிருந்து, மானிட சாயலைத் தரித்து, இவ்வுலகத்திலே அவதாரமெடுத்துப் பயமார்க்கத்திலிருந்து நமக்குப் பூரண மீட்பைக் கொடுக்க வந்தார். மனுகுலத்தார்பேரில் தாம் வைத்த அன்பைக் காண்பிக்கும்படி இவ்வித அன்பவதாரம் எடுத்தார் என்று சொல்வது தகும். நாம் அடிக்கடி கஷ்டப்பட்டுக் களைப்படைந்து போவது போலவே அவரும் பாடனுபவித்து மனுஷர்களோடு சஞ்சரித்து, வருத்தப்பட்டவர்களையும் வியாகுலமடைந்தவர்களையும் நேசித்துத் திடப்படுத்தி வந்தார்; ஜனங்களும் அவரை அவ்வண்ணமே நேசித்துத் தொண்டுசெய்து வந்தார்கள். நாமும் இதினிமித்தம் அவருக்குப் பயப்படாமல் அவரை நேசிப்போமாக. சத்தியவந்தனாகிய அவர் நீதி நியாயத்தையே போதித்ததினால் அநீதி நிறைந்த அக்கிரமக்காரர் அவரைப் பகைத்துக் கொலைசெய்யப்பட மானிடரைப்போல் மரண வேதனையடைந்தார். இதினாலே பராபரன், தாழ்ந்த ஜனங்களாகிய நமதுமேல் பரிதாபங்கொண்டு பாவிகளாகிய நமக்காகவே அப்பாடுகளை உத்தரித்தார் என்று பார்க்கிறோம். நாம் கஷ்டப்படுப் காலங்களிலெல்லாம் அவரிடத்தில் விண்ணப்பம் பண்ணினால் அவர் நமக்கு மெய்யாகவே இரங்குவார் என்று இதினால் அறிகிறோம். அவர்மேல் பக்தி வைக்கிறவர்கள் படவேண்டிய பாவ தண்டனையையெல்லாம் அவர் தமது மரணத்தில் சகித்ததுமல்லாமல், தாம் மரித்த பிறகு மூன்றாம் நாளிலே உயிரோடே எழுந்து தமது மேன்மையையும் அளவற்ற தெய்வீக வல்லமையையும் தமது சீஷருக்குப் பிரத்தியட்சமாய்க் காண்பித்தார். அவர் இவ்வண்ணம் உயிரோடெழுந்ததினாலே மெய்யாகவே அவர் பராபரன்தான் என்பதற்கு யாதொரு சந்தேகமுமில்லை. அவர் ஸ்தாபித்த மார்க்கம் மிகச் சிறந்தது என்பதும் நிச்சயமே. நாம் அந்தச் சத்ய மார்க்கத்தைக் கைக்கொண்டு நடந்தால், பேய் பிசாசுகளுக்குப் பயப்படும் பயத்திலிருந்து நாம் மெய்யாகவே விடுதலையாகி அந்த மெய்மார்க்கத்தில் யாதொரு பயமுமின்றி நடந்து பூரண பாக்கியத்தைக் கண்டடைவோம்.



# Holiness

**By the Rev. A. Paramanandham**

## பரிசுத்தம்

(தொடர்ச்சி)

### இரண்டாம் அதிகாரம்

### தேவனுடைய பரிசுத்தம்

2. தேவனுடைய பரிசுத்தம் எத்தன்மையானது என்று விசாரணை செய்வது மிகப் பிரயோஜனமானதே. நம்மைப் பார்க்கிலும் அபரிமிதமாய் உன்னதமாயிருக்கிறவருடைய குணத்தை அறிந்துகொள்ளவேண்டுமென்று பிரயத்தனிப்பதினால், பிரயோஜனமில்லை என்றும், நாம் தேவனுடைய விஷயமாய் விசாரணை செய்து, எந்த அபிப்பிராயத்தைக் கொள்ளுகிறோமோ அது மனுஷருடைய யுக்தியினால் உண்டானதேயொழிய வேறல்ல என்றும் சிலர் நினைக்கலாம். இவ்வித சமுசயம் உண்டாவதற்குச் சரியான காரணமில்லை. மனுஷர் தேவனுடைய குணத்தைச் சரியாக அறிந்துகொள்ளாதபடி அவர்களுக்கும் அவருக்கும் நடுவே மாயை இல்லை. மனுஷர் தம்முடைய குணத்தை அறிவதற்குச் சக்தராகும்படி தேவன் அவர்களுக்குத் தமது மனசுக்குச் சமானமான மனசையும் தமது இருதயத்துக்குச் சாயலான இருதயத்தையும் கொடுத்திருக்கிறார். ஒருவன் ஒரு புஸ்தகத்தை வாசித்தால், அது மனுஷனுடைய மனசிலிருந்து எழுதப்பட்டிருக்கிறபடியால், அதிலடங்கியிருக்கிற அபிப்பிராயம் தன் மனசுக்கும் தெரியவரலாம் என்று அவன் நம்புவதற்கு ஆதாரமுண்டு. எது மனுஷனுடைய மனசிலிருந்து உண்டாயிற்றோ அது மனுஷனுடைய மனசுக்கும் தெரியவரலாம்; இது நிச்சயம். தேவன் நம்மைத் தம்முடைய சாயலாகச் சிருஷ்டித்து, தமது ஆத்துமாவுக்குச் சமானமான ஆத்துமாவை நமக்குக் கொடுத்திருக்கிறபடியால் நாம் அவருடைய பரிசுத்த குணத்தை விசாரிப்பது வியர்த்தமான பிரயத்தனம் அல்ல என்று நிச்சயிக்கலாம். தேவன் அறியப்படாதபடி நம்மைப்பார்க்கிலும் உன்னதமானவராயிருப்பது உண்மை ஆயினும் ஒரு மனுஷனுக்கும் மற்றொரு மனுஷனுக்கும் நடுவே எந்த மாயை இருக்கிறதோ அதைவிட தேவனுக்கும் மனுஷருக்கும் நடுவே அதிகமான மாயை இல்லை. தேவனுடைய குணம் மனுஷருக்கு வெளியரங்கமானது.

3. ஆயினும், தேவனுடைய பரிசுத்தயான குணம் இப்போதே நமக்கு சுலபமாயும் ஸ்பஷ்டமாயும் தெரியவரலாம் என்று நாம் நினைக்கலாகாது. பரிசுத்தராகிய தேவன் பாவிகளாகிய மனுஷருக்கு அகாதமான தூரத்திலிருக்கிறார். தேவன் இதைக்குறித்து தாமே சொல்வதென்னவென்றால், 'பூமிக்கு வானம் எவ்வளவு உயரமாயிருக்கிறதோ, அப்படியே என் வழிகளும் உங்கள் வழிகளுக்கு மேலேயும், என் ஆலோசனைகளும் உங்கள் ஆலோசனைகளுக்கு மேலேயும் அவ்வளவு உயரமாயிருக்கின்றன' என்பதே. யார் தாங்கள் தேவனுடைய குணத்தை சுலபமாய் அடைந்துகொள்ளலாமென்று பாவித்துக்கொள்ளுகிறார்களோ அவர்கள் 'நான் உம்மைப்போல இருக்கிறவனாக இருக்கிறேன் என்று நீ நினைத்தாய்' என்பதாக தேவன் தங்களைக் கண்டிக்கிறதற்குக் குறியாகிறார்கள். நாம் முதலில் பார்த்தபடி எது மனுஷ மனசிலிருந்து உண்டாயிற்றோ அது மனுஷ மனசுக்குப் புரியலாம். ஆனால் அது எந்த மனசுக்காகிலும் சரியாக தெரியவரும் என்று சொல்வதற்காகாது. அட்சரம் ஒன்றுமறியாத ஒரு குடியானவன் சமஸ்கிருத பாஷையில் ஆக்கப்பெற்ற தத்துவஞான நூல் ஒன்றைக் கண்டால், அதிலடங்கிய அபிப்பிராயங்கள் அவனுக்கு உடனே தெரியவராது. வித்வாம்ஸர் எழுதின அக்கிரந்தத்தை அவன் அறிந்துகொள்ளவேண்டுமானால் அநேக வருஷங்கள் வரைக்கும் வித்தையைப் படித்து, சமஸ்கிருத பாஷையைக் கற்று, முதலில் மனசுக்கு எட்டாத யோசனைகளையும் அபிப்பிராயங்களையும் அப்பியாசித்து அப்பியாசித்து, கடைசியில் வித்வான் ஆகவேண்டும். மனுஷனுடைய சுபாவம் தேவனுடைய சுபாவத்துக்கு ஒத்திருப்பது நிஜமே. ஆனால் பாவியாயிருக்கிற மனுஷன் தேவனுடைய பரிசுத்தத்தை அறிந்துகொள்ளுவதற்கு முன்னே தானே தானும் பரிசுத்தனாகவேண்டும். 'பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே' (எபி. $12^{14}$). இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் மாத்திரம் தேவனைத் தரிசிப்பார்கள்' (மத். $5^{8}$). மனுஷன் தேவனுடைய பரிசுத்தத்தைத் தெரிந்துகொள்வதற்குமுன் அவன் பரிசுத்தனாகவேண்டும் என்கிற வார்த்தையும் மனுஷன் தேவனுக்குக் காணப்படுவதற்குமுன்னே அவன் தேவனைத் தரிசிக்கவேண்டும் என்று மேலே சொல்லியிருக்கிற வார்த்தையும் ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கிறதாகத் தோன்றலாம். அந்த வார்த்தையும் நிஜந்தான்; இந்த வார்த்தையும் நிஜந்தான். மனுஷன் கொஞ்சமாகிலும் தேவனுக்குக் காணப்படுவதற்குமுன் அவரைத் தரிசிக்கவேண்டும். தேவனுடைய சாயலைத் தரிசிப்பதற்குமுன் அவருக்குமுன் கொஞ்சமாகிலும் காணப்படுகிறவனாயிருக்கவேண்டும்.



தேவனுடைய மகிமையைத் தன்னில் பிரதிபிம்பிக்கிறதினால் மாத்திரம் மனுஷனுடைய குணம் மகிமையை அடைகிறது. ஆனால் அந்த குணம் மகிமையை எவ்வளவு அடைகிறதோ அவ்வளவுதான் தேவனுடைய மகிமை அதில் பிரதிபிம்பிக்கிறது.

4. தேவனுடைய பரிசுத்தமானது நிஜமாயும் கிரமக்கிரமமாயும் நமக்குத் தெரியவரலாமென்று நிச்சயித்துக்கொண்டு, அந்தப் பரிசுத்தமானது நம்முடைய பாவ அஞ்ஞானங்கள் என்கிற மப்பு மந்தாரங்களைக் கடந்து நமக்குத் தெரிந்திருக்கிறவரைக்கும் அதை விசாரிப்போமாக. எது தேவனுடைய பரிசுத்தமல்ல என்றும், எது தேவனுடைய பரிசுத்தமாயிருக்கிறது என்றும் இரண்டுவிதமாகப் பரீட்சித்தறியலாம்.

(a) தேவன் பரிசுத்தராயிருக்கிறார் என்று சொல்லும்போது அவர் சுத்த நிர்மலனாயிருக்கிறாரென்று அறிந்துகொள்ளவேண்டும். தேவன் பாவமில்லாதவர் என்று காட்டுவது அவசியமில்லை. சுத்தம் என்பது நானாவிதமானது. இவ்வெல்லா விதங்களில் கல்மஷமில்லாதிருப்பது கடைசி சுத்தந்தான். தேவன் பாவமில்லாதவர் என்பதை மாத்திரம் சந்தேகமில்லாமல் நம்பினாலும் அவருடைய சுத்தமானது எப்பேர்க்கொத்தது என்று நமக்குக் கொஞ்சமாகிலும் தெரியாது. தேவனுடைய குணத்தின் சுத்தமானது எவ்வளவு சூக்ஷமமாயிருக்கிறது என்று நாம் தகுந்தபடி கிரகிக்க நம்முடைய ஆலோசனையைத் திடப்படுத்தும்படியான சில உவமானங்களைக் கவனிப்போமாக. அழுக்குப் பாத்திரத்தை நீரினால் கழுவினால், அது கூடியமட்டும் சுத்தமாகிறது. ஆனால் அதைப் புளி சாம்பல் முதலானவைகளால் துலக்கின மற்றொரு பாத்திரத்தோடு ஒப்பிட்டுப் பார்த்தால், அதின் சுத்தமானது மிகவும் குறைவாயிருக்கிறதென்று காணப்படும். விளக்கின பாத்திரத்தைப் பார்க்க வேறெந்த வஸ்துவாகிலும் நிர்மலமாயிருக்கிறதோ? அது வெளியில் பிரகாசம் பொருந்திய சுத்தமாயிருந்தாலும் அதின் உட்பாகம் விளக்கப்பட்டிருக்கிற பாகத்தைப்போல அவ்வளவு பிரகாசமாயிருக்கிறதில்லை. அதைத் தெளிந்த நீரோடு ஒப்பிட்டுப் பார்த்தால், நீர் அந்தரங்கத்தில் சுத்தமாயிருந்து வெளிச்சம் ஊடுருவத்தக்க வஸ்துவாயிருக்கிறபடியால், நீரின் சுத்தமானது அதிகமாயிருக்கிறதென்று தெரியவருகிறது. நீரைப்பார்க்கிலும் எந்த வஸ்துவாகிலும் நிர்மலமாயிருக்கிறதா? நீருங்கூட அவ்வளவு தெளிவானதல்ல—வெளிச்சம் அதினூடே வெகுதூரம் ஊடுருவிச் செல்லமுடியாது. சமுத்திரத்தின் அடித்தரையை கார் இருள் மூடியிருக்கிறது. வெளிச்சம் சிறிதுதூரம் மாத்திரம் வியாபிக்க விடங்கொடுக்கிற நீரைப்பார்க்கிலும் வெளிச்சமே நிர்மலமானது. வெளிச்

சத்தில் எவ்வித கல்மஷமுமில்லை. அது என்றைக்கும் அழுக்காவதில்லை. வெளிச்சத்தைப்பார்க்கிலும் நிர்மலமான வேறெந்த வஸ்துவையும் நாம் பார்த்தறியோம். தேவனுடைய குணத்தின் சுத்த நிர்மலத்துவத்தை விவரிப்பதுபோல, சத்திய வேதம் அதை வெளிச்சத்தோடுகூட உவமானப்படுத்துகிறது. 'தேவன் ஒளியாயிருக்கிறார், அவரில் எவ்வளவேனும் இருளில்லை' (1 யோவா. $1^{5}$) என்று சொல்லியிருக்கிறது. தேவனுடைய பரிசுத்த குணம், இந்துமத குணத்துக்கு முற்றும் விரோதமானது. அதிலே யாதொரு மாறுதலும், யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை' (யாக். $1^{7}$).

(இன்னும் வரும்.)

## A Grace-filled Life
## The 'Retrospect' of Rev. Hudson Taylor

**Translated by the Rev. N. Devasagayam, B.A.**

## திருவருட்பிரகாச ஜீவியம்

### ஹட்ஸன் டெய்லர் ஐயரின் 'பின்னோக்குச் சரித்திரம்'

### பதினாறாம் அதிகாரம்

(தொடர்ச்சி)

இப்படி எங்களுக்குக் காலத்துக்குத் தக்கதாய்க் கிடைத்துவந்த உதவி அப்போதப்போதைய அவசியங்களுக்குக் கட்டிவந்ததோடு நிற்கவில்லை. நாங்கள் சேவித்து அடுத்திருந்த ஆண்டவர் தம்மையே கதியாய்ப் பிடித்திருந்த எங்களை வெட்கப்படவொட்டார் என்று துணிந்து என் விவாக நாள் மேற்சொன்ன தேதிக்கு பதினாறு தினங்களுக்குப் பிறகு நடைபெறவேண்டும் என்று முந்தியே திட்டம் பண்ணப்பட்டிருந்தது. இதுவுந் தடைப்படாமல் நடைபெற்றது; ஏனெனில்: 'மலைகள் விலகினாலும், பர்வதங்கள் நிலைபெயர்ந்தாலும் என் கிருபை உன்னைவிட்டு விலகாமலும் என் சமாதானத்தின் உடன்படிக்கை நிலைபெயராமலும் இருக்கும்.' பின் வந்த வருஷங்களில் எங்கள் விசுவாசம் தருணாதருணங்களில் கடினமாயும் மற்றப்படி சாமானியமாயும் சோதிக்கப்பட்டதுண்டானாலும் எந்த நன்மையும் எங்களுக்குக் குறைவுபட அவர் விட்டதேயில்லை. அவர் எப்போதும் தம் வாக்குத் தவறாதவராகவே இருந்தார்.



'பெண்சாதியைக் கண்டடைந்தவன் நல்ல காரியத்தைக் கண்டடைந்தவன், கர்த்தரால் தயையைப் பெறுகிறான்.' இதினுண்மையை விளக்கின விவாகம் எங்களுக்குண்டான விவாகம்தான். அதிலும் அதிக திட்டமாய் அதை விளக்கின வேறு விவாகங்கள் இருந்திருக்குமோ என்னவோ. என் பெண்சாதி எனக்குமட்டும் கிடைத்த அரும்பொருளல்லள்; அவள் விவாக ஜீவியகாலம் பன்னிரண்டு வருஷங்கள். அந்தப் பன்னிரண்டு வருஷமும் அவளை அறிந்தவர்களுக்கும் சீனாவுக்கும் அவள் பெரிய ஆசீர்வாதமாக இருந்தாள்.

அவள் அப்போதுமாத்திரம் மிசியோன் வேலையில் சம்பந்தப்பட்டவளல்லள், சீனச் சமஸ்தானத்தில் அவள் முழு ஜீவியமும் மிசியோன் சம்பந்தமான ஜீவியமே. எப்படியெனில், அவளுடைய தகப்பனாகிய சாமுவேல் டையர் போதகர் கிழக்கு பூமண்டலத்தில் லண்டன் மிசியோன் சம்பந்தமாய் முதலில் வந்தவர்களுள் ஒருவர். 1827-ம் ௵த்திலே அவர் ஜலசந்திக் குடியேற்ற நாட்டிற்கு வந்து, பினாங்கு, சிங்கப்பூர் இப்பட்டணங்களிலே பதினாறு வருஷம் சிரத்தையாய் உழைத்தவர். அந்தக் காலத்திலேயே சீன அக்ஷரங்களை அவர் அச்சுவார்த்துச் சேர்த்தார். இதுதான் அந்தப் பாஷை அக்ஷரங்கள் முதன்முதல் அச்சுருவம் அடைந்தது. அவர் 1843-ம் ௵ இறந்துபோனதினால், எப்படியாகிலும் சீன மண்ணிலே குடியிருந்து உழைக்கவேண்டுமென்று அவருக்கு இருந்த ஆசை நிறைவேறாமற் போயிற்று. ஆகிலும், அவருள்ளத்திலிருந்த ஆசை அவருடைய மக்கள் காலத்தில் நிறைவேறிற்று. அவர்களுடைய காலத்தில் அந்த இராஜ்ஜியம் சுவிசேஷத்திற்குத் திறந்துவிடப்பட்டதினால் அவர்கள் அங்கே போய் திருவேலை செய்தார்கள். கலியாணம் நடக்கிறதற்கு அநேக வருஷங்களுக்குமுன்னமே என் அருமை மனையாள் தன் பிராண சிநேகிதியான மிஸ் ஆல்டர்ஸீ அம்மாளுடன் நிங்போவில் பல வருஷங்களாய் வசித்து அந்த அம்மையார் செய்துவந்த பல மிசியோன் கிரியைகளில் அவருக்கு உதவிசெய்து பழகியிருந்தாள்.

### பதினேழாம் அதிகாரம்

### தேவன் நம் அடைக்கலம்

முன்சொன்ன அநுபவங்களுக்கு ஒத்ததும் ஒருவாறு அவற்றிலும் வேறுபட்டதுமான ஒரு அநுபவம் 1859-ம் ௵ ஆரம்பத்தில் எனக்குக் கிடைத்தது. என் அருமை மனைவி வியாதிப்பட்டு, ஒடுங்கி, அவள் இனிப் பிழைப்பாள் என்கிற நம்பிக்கை அற்றுப்போயிற்று. கொடுத்த மருந்தெல்லாம் பலிக்கவில்லை. அவளுக்கு வயித்தியம் பார்த்த டாக்டர் பார்க்கருக்கு இனிச் செய்யவேண்டியது என்ன

தென்று விளங்கவில்லை. உயிர் விரைவாய்த் தளர்ந்துவந்தது. ஆண்டவருக்கு அவளை ஒப்புக்கொடுத்து அவர் சுகமாக்கும்படி நம்பிக்காத்திருப்பதைத் தவிர வேறு வழி ஒன்றும் இருந்ததில்லை.

மிஷனரிகள் வழக்கமாய் ஜெபிக்கிற பிற்பகல் நேரம் வந்தது. என் ஆபத்துக்கு உதவிகேட்டு ஜெபிக்க அவர்களை மன்றாடினேன். அவர்கள் விருப்பத்துடன் சம்மதித்தார்கள். அந்நேரத்தில் இதுவரையும் கொடுக்காத மருந்து என் ஞாபகத்தில் வந்தது. அதைக் கொடுக்கலாமா என்று டாக்டர் பார்க்கரைக் கேட்க விரும்பினேன். அது ஒரு பெரிய கலக்க வேளை. கிடங்காய்ப்போன பொட்டுகளும், குழிவிழுந்த கண்களும், வாதைக்குறிகளுள்ள முகமும் மரணம் சமீபித்து வந்ததை யுணர்த்தின. நான் போய்த் திரும்புமட்டும் உயிரிருக்கும் என்கிற நிச்சயமிருந்ததில்லை. டாக்டர் பார்க்கருடைய வீடு சுமார் இரண்டுமைல் தூரம். ஒரு நிமிஷமாவது வீணாய்த் தாமதிக்க முடியாதல்லவா? அவருடைய வீட்டுக்குப் போகிற வழியிலே நான் தேவனிடத்தில் வல்லமையாய் ஜெபத்தில் போராடிக்கொண்டே போனேன். அப்போது பின்வரும் திருவாக்கு என் மனதில் வெகு பலமுள்ளதாய் உதித்தது: 'ஆபத்துக்காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு; நான் உன்னை விடுவிப்பேன், நீ என்னை மகிமைப்படுத்துவாய்.' இது எனக்குப் பலிக்கவேண்டும் என்று விசுவாசித்துச் சாதிக்கிற வல்லமையும் எனக்கு அருளப்பட்டிருந்தது. அப்படிச் சாதித்ததில் மிகுந்த ஆழமும் விபரிப்புக்கு மேற்பட்டதுமான மன அமைதியும் ஆனந்தமும் எனக்குள் வந்து குடிகொண்டது. வழி நடையே தெரியாதாயிற்று. டாக்டர் பார்க்கர் அந்த மருந்து சரியானதுதான், கொடுக்கலாம் என்றார். ஆயினும் என் வீட்டுள் வந்து நுழைந்தவுடனே அந்த மருந்தும் வேறெந்த மருந்தும் இல்லாமலே சுகக்குறிகளெல்லாம் உண்டாயிருக்கப் பார்த்தேன். வாதைக்குறிகளெல்லாம் தொலைந்து அமைதியான நித்திரை வந்தது. சுகத்தையும் பலத்தையும் வராமல் தடுக்கிற ஒரு தோஷமும் இருந்ததில்லை.

ஜெபத்தினால் என் மனைவியுயிரைக் கேட்டு வாங்கியிருந்த எனக்கு, அந்த வருஷத்து இலையுதிர்காலத்தில் டாக்டர் பார்க்கர் தம் மனைவியைத் திடீர் என்று சாகக்கொடுத்தது தாங்கற்கரிய துக்கமாயிருந்தது. தம் தாயில்லாப் பிள்ளைகளை கிளாஸ்கோ நகருக்கு அழைத்துப்போவது டாக்டர் பார்க்கருக்கு அவசியமாயிற்று. அப்போது முழுமையும் அவருடைய சுயபொறுப்பிலிருந்த மிஷன் ஆஸ்பத்திரியை அவர் திரும்பிவருமட்டும் நடத்தி வருவதைக்குறித்துத் திட்டம் செய்யவேண்டியதாயிருந்தது. அந்தப் பொறுப்பை பகற்பொழுதில் வருகிற வியாதிக்காரருக்கு மருந்து கொடுக்கிற பாகம்



வரையுமாவது நான் ஒப்புக்கொள்ளும்படிக் கேட்டார். சில நாட்களாய்க் கர்த்தரிடத்தில் அதைப்பற்றி ஆலோசனை கேட்டேன். அவர் பகலில் மருந்து கொடுக்கும் பாகத்தை மாத்திரமல்ல, நோயாளிகளை ஏற்றுக்கொண்டு சுகமாகுமட்டும் பராமரிக்கிற ஆஸ்பத்திரி வேலையையும் கூட ஒப்புக்கொள்ள என்னைத் தூண்டினார். அதற்கு வேண்டிய பணத்திற்கு வாக்குண்மையுள்ள தேவனையே நம்பி ஜெபத்தினால் பிடித்துக்கொண்டேன்.

இந்த ஆஸ்பத்திரியை நிர்வகிக்கத் தேவையான பணம் அந்த டாக்டர் அந்நியரிடத்தில் செய்துவந்த வயித்தியத்தினால் கிடைத்தது. அவர் போக்கோடு அதுவும் போயிற்று. ஆயினும் நாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தில் கேட்பதையெல்லாம் செய்ய தேவன் வாக்கிட்டிருக்கிறாரல்லவா? நாம் முந்தி தேவனுடைய இராஜ்ஜியத்துக்குத் தேவையான சாதனங்களையல்ல, தேவனுடைய இராஜ்ஜியத்தையே தேடவேண்டும் என்றும் அப்போது இவைகளெல்லாம் கூடத் தரப்படுமென்றும் நமக்குச் சொல்லப்பட்டிருக்கிறதல்லவா? இப்பேர்ப்பட்ட வாக்குத்தத்தங்களே எனக்குப் போதுமானவைகளாயிருந்தன. இந்தப் பொறுப்பைக் கையேற்றுவதற்கு எட்டு நாட்களுக்கு முன் நான் அப்படிச் செய்வேன் என்று நினைத்ததேயில்லை. என் சீமையிலிருந்த அன்பர்களும் அதைக்குறித்து நினைத்தேயிரார்கள். அப்படியிருந்தும், ஆண்டவர் அதைக்குறித்து நினைவுள்ளவராயிருந்து அதற்கு வேண்டிய பணத்தை அனுப்பினார். அது அப்போது நடுவழியில் வந்துகொண்டிருந்தது.

வேளாவேளைகளில் ஆஸ்பத்திரியில் ஐம்பதுக்குக் குறையாமல் உள்ளே ஏற்றுக்கொள்ளப்பட்ட நோயாளிகளிருந்தார்கள். தினம் வெளியில் இருந்துகொண்டே மருந்துக்கு வந்த நோயாளரும் வெகுபேர் இருந்தார்கள். இலவசமாய் ஏற்றுக்கொள்ளப்பட்ட நோயாளருக்கும் அவர்களுடைய உதவிக்காரருக்கும் வழக்கமாய் முப்பது படுக்கைகள் விதித்திருந்தன; அபின் புகைக்குப் பழகினவர்களுக்கும், அவர்கள் அந்த துர்ப்பழக்கத்திலிருந்து விடுதலையாகும்வரையும் ஏறத்தாழ அத்தனை படுக்கைகளே விடப்பட்டிருந்தன இவர்கள் தங்கள் சாப்பாட்டுக்குமாத்திரம் பணம் கொடுத்தார்கள். மற்றப்படி வியாதியாளருடைய விடுதிகளில் இருந்த யாவருக்கும் எல்லாம் இலவசமாகவே கொடுக்கப்பட்டதினாலும் வெளியிலிருந்து ஆஸ்பத்திரிக்கு சிகிச்சைக்காகமாத்திரம் வருவோருக்கு மருந்து முதலிய பிரயோகங்கள் தர்மமாக இருந்ததினாலும் நாடோறும் செலவு அதிகமாகவே பிடித்தது. அதுவும் தவிர, ஆஸ்பத்திரியில் உழைக்கிற சுதேச ஆசாமிகள் இருந்தார்கள். அவர்களுக்குச் சம்பளம் தரவும் வேண்டியது.

டாக்டர் பார்க்கர் ஆஸ்பத்திரியை என் கையில் ஒப்புவித்த போது அவர் கொடுத்துப்போன பணம் ஆசாமிகளுடைய சம்பளத்துக்கும் ஆஸ்பத்திரிச் செலவுகளுக்கும் ஒரு மாதத்துக்குக் கட்டியும் கட்டாமலுமிருந்தது. அதற்குப் பிறகும் அவர்களுடைய சம்பளத்துக்குத் தாம் உத்தரவாதம் செய்ய ஏலாது என்று அவர் சொல்லிவிடவே, ஆசாமிகள் நின்றுபோனார்கள். இது விஷயத்தை என் சின்னச் சபைக்குச் சொன்னபோது அவர்களுள் சிலர் நான் செய்ததுபோல் தேவன்மேல் சார்ந்துகொண்டு எனக்கு ஒத்தாசை செய்ய வாக்கிட்டார்கள். அவர்கள் என்னுடன் ஒருமித்து அவரே தம் வேலைக்கு ஆகுமெல்லாவற்றையும் எவ்விதமேனும் தரவேண்டுமென்று அவரைக் கேட்டுக் காத்திருந்தார்கள். நாளுக்குநாள் கையிருப்புக் கரைந்துகொண்டே வந்தது. ஒருநாள் எல்லாம் ஆய்ப்போயிற்று. அன்று இங்கிலாந்திலிருந்து ஒரு அன்பர் அனுப்பின ஐம்பது சவரன் பணவுண்டிப் பத்திரமுள்ள கடிதம் வந்தது. அதில் அவர் தம் தகப்பனார் இறந்ததினால் பிதாவின் சொத்துத் தமக்குக் கிடைத்ததாகவும், தமக்கிதுவரையுமுள்ள மாதச்செலவை அதிகரிப்பிக்க இஷ்டமில்லாமல் கிடைத்த பணத்தைக் கர்த்தருடைய வேலைக்காக வைக்க விரும்புகிறதாகவும் எழுதியிருந்தார். அந்த ஐம்பது சவரனையும் எனக்குத் தோன்றின ஏதேனும் விசேஷ செலவுக்காவது, என் சுய சவரக்ஷணைக்காவது தேவன் எந்த வழி காட்டுவாரோ அந்த வழியிலாவது உபயோகித்துக்கொண்டு அது உபயோகப்பட்ட விதத்தைமாத்திரம் தனக்குத் தெரிவிக்கச் சொன்னார். மேலும், இன்னம் பணம் தேவையானால் தருவதாகவும் சொன்னார்.

நானும் என் மனைவியும் ஒருமித்துச் சிலகாலம் இதற்காக ஆண்டவருக்கு நன்றிசெலுத்தினபின், சுதேச உதவிக்காரரை கோவிலில் வரச்சொல்லி அவர்களுக்கு அந்தக் கடிதத்தைப் படித்துக் காட்டினேன். அவர்கள் மிகுதியும் சந்தோஷித்து எங்களுடன் ஆண்டவரைத் துதித்து பழையபடி தங்களுடைய ஆஸ்பத்திரி வேலைக்குப் பிரியத்துடன் திரும்பிவந்தார்கள். அவர்கள், கிறிஸ்தவர்களாகிய எங்களுக்கு எப்பேர்ப்பட்ட தேவன் இருக்கிறார், பார்த்தீர்களா? உங்களுடைய விக்கிரகங்கள் இப்படி எப்போதாவது ஜெபத்துக்கு உத்தரம் கொடுத்ததுண்டா என்று அக்கியானிகளான நோயாளருடன் பேசினதினால், இந்த அற்புதமான பண வரவு உதவிசெய்தோருக்கும் உதவி பெற்றோருக்கும் பெரிய ஆத்தும லாபமாய்ப் பலித்தது.

(இன்னும் வரும்)

C. L. S. PRESS, MADRAS—1916



# வேதியர் விளக்கு

OFFICE OF THE REGISTRAR OF JOINT STOCK COMPANIES
6 - MAR 1916
MADRAS

## Prayer

A SHORT time ago one of our leading theologians contributed an article on Prayer to a contemporary magazine. Amongst many of the very striking phrases that he used was this: 'The *worst* sin is prayerlessness.' The more one ponders the words, the truer they become, and especially for the Christian worker, it is true that the very worst sin he can commit, and one that is sure to become the source of many more evils, is the neglect of Prayer. Communion with the source of life is the only method of maintaining life, as the branch cannot live unless it be united to the living tree. Our means of communion with the source of our spiritual life, God, is Prayer, and to cease to pray is to ourselves break the channel through which alone we can obtain the necessary sustenance for our soul's life. It is an act of spiritual suicide, and is not only the worst sin, but the greatest folly of which we can be capable.

So much has been written and said of Prayer, that it may seem unnecessary to return again to the same subject, but it is of such vital importance, not only to our own spiritual life, but also to our work, that it is impossible for us to consider it too much or too often. For to too many Christian workers, prayer is something that partakes of the nature of a duty rather than a pleasure: it only too often degenerates into a mere form instead of being the natural expression of a full heart, and so it loses both in freshness and in power. It is true that it is not always easy to pray, and that sometimes it is much more difficult than at others: the source of inspiration seems to be dried up, and the thoughts are unable to soar: but if the soul be true and in harmony with that of God, such

experiences will be only passing ones, and the days of freedom and of communion will return.

For to be real, prayer must be the free outpouring of the heart. The opening words of Bishop Montgomery's hymn on prayer should be true in all times and places:

> Prayer is the soul's sincere desire,
> Uttered or unexpressed.

Only if it be so is it prayer. A mere form of words, read from a book or spoken extempore is *not* prayer unless it is at the same time the expression of the inward thoughts of the soul. The cry of the penitent wrung from a heart overburdened with its sin 'God be merciful to me, a sinner'—the anxious question of the convicted soul careful only to know the will of God 'Lord what wouldest thou have me to do'—the triumphant shout of the soul emancipated from the bondage and thrall of sin 'Thanks be to God that giveth us the victory'—these are the expressions of the inmost soul, and are of the very essence of all prayer. But they cannot be said to compass the whole meaning of that word, for they are concerned chiefly, if not entirely, with the individual soul's experience, while true prayer is a communion which stretches wide and embraces many. The pattern which our Lord gave to us is a constant rebuke to our most common fault of selfishness in prayer, for it includes in every phrase mention of the needs and faults of others, and contains in its brief compass a vision of world conquest when the will of God shall be done throughout the whole earth with the same spontaneitv and fulness as now obtains in the Heavenly regions.

Prayer then, while it must ever be the outflow of the heart's emotions and desires, is something more than the mere ejaculation of a cry of pain or a song of joy. It is more than a mere 'calling upon the *name of* the Lord': (is it possible that to some of the more ignorant of the people of old, the calling on the name meant little more than the ejaculation of the name of some deity means to a Hindu Pariah ?) It is an *Art to be Acquired*, a lesson to be learnt. The disciples desired the Master to teach them to pray, and remarked that



John had done the same for his disciples. And the Master instead of rebuking them, listened to their request, and gave them, not a mere *mantram* to be said at all times and hours, but a pattern whereon to model their own petitions for all time to come. It was an art in which He was a past master, and He had acquired it at the cost of hours of rest, and the denial to Himself of the comforts of life. He had arisen a great while before day, or had remained apart all night: He had sought the desert solitudes and the lonely hill top, and there had schooled Himself in the art of communion. For the *art* of prayer can only be attained by the *practice* of prayer, and to become apt pupils, we must even tread in the footsteps of our Master, and at a great price obtain this treasure. True prayer is never easy: it costs us soul agony and sweat. The agony of the Saviour's prayer in the Garden of Gethsemane meant the be-dewing of His brow with the purple drops of His life blood, and there are some who have entered into that fellowship of prayer and suffering by His side. Read the life of Henry Martin, who in so few short years did such a mighty work in the heart of Africa: the weapon by which he again and again conquered was the weapon of 'All prayer'. Read again some of the incidents in the life of Hudson Taylor which have appeared in this paper, and see how again and again difficulties vanished and victory was won by the use of the same weapon. For our work as for our life that weapon must ever be the chief in our armoury.

Nor must we forget that *prayer is a conversation*, and not a monologue. Too often we forget that it is the time when we may expect to hear God speak to us, as well as when we may speak to Him. 'I will hearken what the Lord will say concerning me' is the attitude that we should adopt, and the receptivity of spirit that we should endeavour to cultivate before Him. He has promised that He will satisfy the longing soul, and if our heart is truly athirst for God, we need not fear that the answer will be withheld. How often we miss the blessing He is waiting to bestow because we are in too great a hurry to 'wait before the Lord', or too much occupied with what *we* want, to try and find our what *He*

wants *for* us. Patience is an asset in every conversation, and a monologue usually benefits neither the one party nor the other. Let us hearken when we pray, and not risk the forfeiture of our blessing through our impatience of soul.

And at all times let us remember that the first and most deadly enemy to our prayer spirit is carelessness. Many a sin is due to lack of thought and to neglect of simple things. Our times of devotion must be definite and stated, and not haphazard; nothing must be allowed to interfere with them. There are so many distractions, and so many other things crowd in that it is only too fatally easy to allow them to be interfered with: if we would maintain the level of our soul's life, this one hour of the day must be sacred, and nothing must ever be allowed to touch it: else we shall find that carelessness leads on to indifference, and indifference will become neglect, and almost before we know where we are, we shall have ceased to pray, and then there may come a time when we do not even want to pray: and that, as the writer first quoted says, is 'the sin behind sin, and ends in not being able to pray'. For every Christian and above all for the Christian worker, prayer is the one vital necessity of life: let us see to it that it is also the one most cherished privilege.

## Christ's First Visit to Jerusalem

## இயேசுவானவர் எருசலேமுக்குச் செய்த முதல் பிரயாணம்

இயேசுவானவர் வளர்ந்த இடமானது உலகத்தின் மிக்க அழகுள்ள ஸ்தானங்களிலொன்று என்பதாய்ப் போய்ப்பார்த்த பிரயாணிகள் சொல்லுகின்றனர். செபுலோன் மலைகளுக்கிடையில் கோப்பை வடிவமான ஒரு தனித்த பள்ளத்தாக்கிலும், எஸ்திரிலோன் மைதானத்தில் இம்மலைகள் தாழ்ந்திருக்கு மிடத்திலும் நாசரேத்தூர் அமைந்திருக்கிறது. இவ்விரண்டு இடங்களுக்கிடையில் செங்குத்தான கற்பாறை யொன்றுண்டு. திராட்சக் கொடிகளேறிய சுவர்களையுடைய வெண்ணிற வீடுகள் இங்கே உள. ஒலிவு, அத்தி, ஆரஞ்சு, மாதுளை மரங்களையுடைய தோட்டங்களுக்கிடையில் இவ்வீடுகள் இருக்கின்



றன. அங்குள்ள வயல்கள் சப்பாத்து வேலிகளால் பிரிக்கப்பட்டு, பல வர்ணங்களமைந்த எண்ணிறந்த புஷ்பங்களால் மூடப்பட்டிருக்கின்றன. இக்கிராமத்தின் பின்புறத்தில் ஐந்நூறு அடி உயரமுள்ள ஒரு குன்றுண்டு. அதின் சிகரத்திலிருந்து உலகத்திலுள்ள மிக்க அற்புதமான காட்சிகளிலொன்றைப் பார்க்கலாம். வடக்கே உறைந்த பனியையுடைய எர்மோன் பர்வதமானது கலிலேயாவின் மலைகளுக்கு மேலாக உயர்ந்திருக்கிறது. மேற்கே கர்மேல் பர்வதமும், தீருவின் எல்லையும் மத்திய தரைக்கடலின் இலங்குகின்ற ஜலமும் காணப்படுகின்றன. கிழக்கே சற்றுதூரத்துக்கப்பால் மரங்களடர்ந்ததும் நுனி சிறுத்ததுமான தாபோர்மலை தோன்றுகிறது. தெற்கே எஸ்திரிலோன் மைதானமும் அதற்கப்பால் எப்பிராயீமின் மலைகளும் காணப்படுகின்றன. இயேசுவானவர் இயற்கையின் அழகை நன்றாயறிந்தவரென்றும், மாறி மாறி வரும் பருவகாலங்கள் அவருக்கு மனக்களிப்பை உண்டாக்கினவென்றும் அவருடைய போதகத்தினால் தெளிவாகிறது. இவர் சொன்ன உவமைகளிலும் செய்த பிரசங்கங்களிலுமுள்ள அலங்காரமான ஒப்பனைகள், இவர் இளைஞனாக வயல் வெளிகளில் திரிந்தகாலத்தில் இவருடைய மனதில் உருவானது. பிற்காலத்தில் இவர் தனிஜெபத்தில் தரித்திருக்கும்படியாக இராக்காலங்களில் மலையுச்சிக்குப் போகும் அப்பியாசம், இக்குன்றிற்குப் போனதாலுண்டானது. அவருடைய பிரசங்கங்களிலுள்ள போதனைகளை அவர் அப்போதைக்கப்போது நினைத்துச் சொல்லவில்லை. அநேக வருஷங்களாய் அவர் மனதில் பெருகிக்கொண்டுவந்த ஞான ஊற்றிலிருந்து தம்முடைய போதனைகளைச் சமயோசிதமாய் எடுத்துரைத்தார். அவர் வயல்வெளிகளிலும் மலைகளிலும் தங்கித் தமது விருப்பத்திற்கேற்ற தியானத்திலும் ஜெபத்திலும் இடையூறின்றி தரித்திருக்கும் காலங்களில் இப்போதனைகளை ஆயத்தஞ்செய்தார். அவருடைய கல்விப் பயிற்சியினால் சேர்ந்த முக்கியமான விஷயமொன்றுண்டு. பன்னிரண்டு வயதான பிறகு அவர் தம் பெற்றோருடன் ஒவ்வொரு வருஷமும், பஸ்கா பண்டிகையைக் கொண்டாட எருசலேமுக்குப் போனார். இவருடைய முதலாம் சந்திப்பைக் குறித்த சரித்திரம் நமக்குக் கிடைத்தது நம்முடைய அதிர்ஷ்டமே. முப்பது வருஷங்களுக்கிடையில் இவரைப்பற்றிய இந்த ஒரேவிஷயந்தான் நமக்குத் தெரியும். கிராமத்திலிருந்து சுயதேசத்தின் தலைநகருக்கு முதல் தடவையாய்ச் செய்த பிரயாணத்தை ஞாபகத்தில் வைத்திருக்கும் கிராமவாசிகளுக்கு, இயேசுவானவர் எருசலேமுக்குப் புறப்பட்டபோது உண்டான சந்தோஷமும் பூரிப்பும் நன்றாய் விளங்கும். அத்தேசத்தின் வழியாய்

எண்பது மைல் தூரம் பிரயாணஞ்செய்தார். ஒவ்வொரு மைலுக் கப்பாலுள்ள இடமும் மனதிற்குப் பரவசத்தை யுண்டாக்கும் வேத சரித்திரங்களை ஞாபகப்படுத்தினது. வரவர அதிகரித்துக்கொண்டு வரும் யாத்திரிகர்களோடு இவரும் சேர்ந்துகொண்டார். இந்த யாத்திரிகர்கள் அவ்வருஷத்தில் நடக்கப்போகிற தேவாலய மஹோற்சவத்திற்கேற்ற பக்தி வைராக்கியத்தால் நிறைந்திருந்தார்கள். 'இவர் போய்ச் சேரவேண்டிய இடம் ஒவ்வொரு யூதனும் நேசித்த பட்டணமாகிய எருசலேம், இதைப்போல் நேசிக்கப்பட்ட தலைநகர் வேறொன்றுமில்லை.' இவருக்கு இந்த இடம் மனதைப் பரவசப்படுத்தக் கூடிய அநேக விஷயங்களடங்கியதாயிருந்தது. பாஷைகளிலும் நடை உடை பாவனைகளிலும் வித்தியாசமுள்ள அந்நியர்கள் சுமார் ஐம்பது தேசங்களிலிருந்து பஸ்காபண்டிகை காலத்தில் அங்கு வந்து கூடினார்கள். எண்ணிறந்த பக்தி விஷயங்களை ஞாபகப்படுத்தும் இந்தப் பூர்வீக சடங்கை இவரும் முதல் தடவையாய் ஆசரித்தார். இந்த நவீன காரியங்களில் அவருக்கு புத்தி அதிகமாய்ச் சென்றுவிட்டபடியால், பிரயாணகாலம் வந்தபோது குறிக்கப்பட்ட நேரத்திலும் இடத்திலும் அவர் வந்து சேரவில்லை. இது ஆச்சரியமல்ல. எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு இடம் இவருடைய மனதைக் கவர்ந்துகொண்டது. அந்த இடம் தேவாலயமே; அதிலும் விசேஷமாக, அத்தேவாலயத்திலுள்ள பள்ளிக்கூடமே. இந்தச் சாஸ்திரிகளிடம் கேட்கவேண்டிய அநேக கேள்விகள் அவர் மனதிலிருந்தன. கல்வியறிவைப்பற்றிய மனோவாஞ்சையைத் தீர்த்துக்கொள்ள நேரிட்ட முதற்சமயம் இதுவே. ஆகையினால் கலக்கமுற்ற அவருடைய பெற்றோர் வடதிசையாய் ஒருநாள் பிரயாணம் செய்தபின்பு அவரைக் காணாமையால், தேடும்படி எருசலேமுக்கு மனக்கிலேசத்துடன் திரும்பினார்கள். அக்காலத்து ஞானபோதகரின் உபதேசங்களை நுட்பமாய்க் கவனித்துக்கொண்டு அவர் தேவாலயத்திலிருந்தபோது அவரைக் கண்டார்கள். தாயாரின் கடிந்துகொள்ளுதலின் கேள்விக்கு இவர் கொடுத்த மாறுத்தரமானது பால்யத்தில் இவருக்கிருந்த மனநிலைமையைத் தெளிவாய்க் காட்டுகிறதுமன்றி, நாசரேத்தூர் வயல்வெளிகளிலிருக்கும்போது இவருடைய மனதைக் கவர்ந்துகொண்ட எண்ணங்களையும் சற்று வெளிப்படுத்துகிறது. ஜீவியத்தின் கருத்தையும், நோக்கத்தையும் சற்றென்கிலும் ஆராயாமல் காலத்தைப் போக்கும் எண்ணிறந்த ஜனங்களுக்கு எதிரிடையாய் பால்யனாகிய இயேசுவானவர் காணப்பட்டார். தம்முடைய ஜீவகாலத்திற்குள்ளே செய்யவேண்டிய வேலையொன்றை தேவன் நியமித்திருக்கிறாரென்றும், அதைச் செய்து முடிப்பதே அவர் உலகத்திலிருப்பதின் நோக்க



மென்றும் அறிந்துகொண்டார். இந்த நோக்கமே பிற்காலத்தில் அவருடைய எண்ணத்தை ஆண்டுகொண்டது. ஜீவியத்தின் நோக்கமே ஒவ்வொருவருடைய ஜீவியத்தின் ஆதியும் அந்தமுமாயிருக்க வேண்டும். இயேசுவானவர் பிற்காலங்களில் செய்த சம்பாஷணைகளில் ஜீவியத்தின் நோக்கத்தைப்பற்றிய எண்ணம் அவருக்கு அடிக்கடி உண்டாகி, அவருடைய அலுவல் முடிந்தவுடனே 'முடிந்தது' என்று கடைசியாய்த் தொனித்தார்.

தான் மேசியாவென்ற அறிவு இவருக்கு ஆரம்பத்திலேயே இருந்ததா? அப்படிக்கில்லாவிட்டால், எப்போது எவ்வண்ணம் அதை அறிந்தார்? அவருடைய பிறப்பின் வரலாற்றை தன் தாயார் சொன்னபோது நிதானித்துக்கொண்டாரா? அல்லது தன்னிலேயே உற்பத்தியாயிற்றா? அவருடைய மனதில் திடீரென உதித்ததா, அல்லது கொஞ்சங் கொஞ்சமாய் அறிந்துகொண்டாரா? ஆரம்பத்திலிருந்து பின்வாங்காமல் நடத்திய தம்முடைய வேலையைச் செய்வதற்கேதுவான வகை எப்போது அவருடைய மனதில் உருவானது? அநேக வருஷங்களாகச் சிறுகச் சிறுகக் கற்றுக்கொண்டாரா? அல்லது திடீரெனவா? இக்கேள்விகள் பேர்போன கிறிஸ்தவ சாஸ்திரிகளுடைய மனதிலுண்டாகி அவர்களை வெவ்வேறான அபிப்பிராயங்களுள்ளவர்களாக்கிவிட்டன. இவைகளுக்குத்தக்க விடைகொடுக்க எனக்குத் திராணியில்லாதபோதிலும் தன் தாயாருடைய கேள்விக்கு அவர் கொடுத்த உத்தரவைக் கவனிக்கும்போது இவ்வுலகத்தில் அவர் செய்யப்போகிற வேலையைப்பற்றிய அறிவு அவருக்கு ஒருகாலமும் இல்லாதிருந்தது என்று நினைக்க ஏதுவில்லை.

இதற்குப் பின்பு, இயேசுவானவர் எருசலேமுக்கு வருஷாவருஷம் போய்த் தம்முடைய அறிவை அதிகமாய் விருத்தி செய்திருக்க வேண்டும். அவர் தேவாலயத்திலுள்ள பள்ளிக்கூடத்துக்குப்போய் அங்குள்ள ரபீகளிடத்தில் கேட்டதும் வினவினதும் வாஸ்தவமானால், அவர்களின் கீர்த்திபெற்ற கல்வியானது சாரமற்றதென்று அவர் அறிந்துகொண்டதும் வாஸ்தவமே. இவர் எருசலேமுக்கு வந்த இப்படிப்பட்ட சமயங்களில்தான் மார்க்கத்தின் சீர்குலைந்த நிலைமையையும், அம்மார்க்க போதனை சாதனைகளைச் சீர்திருத்த வேண்டியதின் அவசியத்தையும் கண்டிருக்கவேண்டும். இதுவன்றி, இன்னும் கொஞ்சகாலத்திற்குள் பக்தி வைராக்கியத்துடன் அவர் எதிர்த்துப் போராடப்போகிற மனிதரையும், அவர்களுடைய ஆசாரங்களையும் நன்றாய்க் கவனித்துக்கொண்டார்.

இப்படிப்பட்ட வெளிப்படையான சந்தர்ப்பங்களுக்கிடையில் இயேசுவானவர் புருஷனாக வளர்ந்தார். இவர் விருத்தியடைவதற்கு

அநுகூலமாய்க் காணப்பட்டவற்றை விசேஷித்துக் கொண்டாடுவது சுலபம். புதுமையும் சிறந்ததுமான குணசீலமானது நேரிடுகிற சந்தர்ப்பங்களின் தன்மையினால் உண்டானதல்ல. அது தன்னுதாரத்தைக்கொண்டே விருத்தியடைகிறது. நேரிடுகிற சந்தர்ப்பங்களுக் கிணங்காமல், இயற்கைப் பிரமாணத்திற்கிசைந்து, விளையும் பயிரை அதின் முளையிற் காணலாம். இயேசுவானவர் நாசரேத்தில் விருத்தியடைந்தவண்ணமே, வேறு எவ்விடத்திலும் எவ்வகையான சந்தர்ப்பங்களிலும் விருத்தியடைந்திருப்பார் என்பதற் கையமில்லை.

## The National Missionary Society of India

## இந்திய சுயதேச மிஷனரி சங்கம்

**By Mr. J. D. Asirvatham**

1905-௵ கிறிஸ்மஸ் தினம் ஏற்படுத்தப்பட்ட இந்த சுயதேச மிஷனரி சங்கம் தன் பத்து வருஷத்தை முடித்து, கிறிஸ்துவுக்கு மகிமையாக பல சேகரங்களில் உழைத்துவருகிறது நம் கிறிஸ்தவர்களுக்குச் சந்தோஷத்தைக் கொடுக்கும் விஷயமே. இச்சங்கத்தின் சர்வ இந்திய ஆலோசனை சங்கத்தார் 1915-௵ டிசம்பர்௴ 24௳ 25௳ 26௳களில் அல்லகபாத் நகரில் கூடி இச்சங்கத்தின் விர்த்திக்குரிய விஷயங்களைக்குறித்து ஆலோசித்ததுடன் சென்ற வருஷ கிறிஸ்துபிறப்பின் தினத்திலே அச்சங்கத்தின் பத்து வருஷ மகோற்சவமும் கொண்டாடினார்கள்.

இந்த 20-ம் நூற்றாண்டின் துவக்கத்தில் இந்திய தேசமுழுவதிலும் ஒரு புது ஜீவன் பிறந்தது. இந்தியர் எத்தனையோ பிரிவாகப் பிரிந்திருந்தபோதிலும், பல மாகாணத்தாரும், பல ஜாதியாரும் ஒரே தேசத்தவரென்னும் புது உணர்ச்சியும் புது தேசாபிமானமும் அவர்களுக்குள் பிறந்தது. இது இதர மதஸ்தரிடத்தில் சிலவிடங்களில் தகாத விதமாய்க் காண்பிக்கப்பட்டபோதிலும் இதன் உண்மையை உணர்வுள்ளோர் யாவரும் ஒப்புக்கொள்ளுவார். இந்திய கிறிஸ்தவர்களாகிய நம்மிடத்திலும் பல பிரிவினையுண்டு. ஆயினும் நமக்கும் ஒருபுது வெளிச்சமும், ஒரு புது காட்சியும் தோன்றிற்று.

இந்தியா சீர்பெறவேண்டுமென்பது புறமதஸ்தருடைய ஆவலாகும்போது யாவருக்கும் நற்சீராகிய நித்திய ஜீவனையருளும் இயேசு ரட்சகரினடியாராகிய இந்திய கிறிஸ்தவர்களுக்கும் ஓர் புது ஆசை பிறந்தது. இந்தியா சீர்பெற இயேசுவினுடையதாக வேண்டு



மென்றுணர்ந்து, இந்திய கிறிஸ்தவர்களுக்குக் கிறிஸ்தவ இந்தியாவைக்குறித்த ஒரு புதுக்காட்சி தோன்றிற்று. கிறிஸ்தவ தேசாபிமானிகளே! இவ்வாஞ்சையிலும் மேலான வாஞ்சையுண்டோ?

1901-ம் வருஷத்திய இந்திய ஜனத்தொகை ரிப்போர்ட்டிலிருந்து ஒரு விசேஷித்த அறிவு வந்தது. பல ஐரோப்பிய மிஷன்கள் மகா ஊக்கத்துடன் பலவிடங்களிலும், அநேக ஊழியருடனும், அதிக பணச்செலவுடனும் உழைத்தபோதிலும், இன்னு மநேக பாகங்களில் கிறிஸ்துவின் நாமமே அறிவிக்கப்படவில்லை யென்பதே அப்புது அறிவு. இந்திய ஜனத்தொகை 30 கோடி. அதில் குறைந்தது 10 கோடி ஜனங்களுக்குக் கிறிஸ்துவைப்பற்றிச் சொல்லப்பட எதுவேயில்லை என்று இந்திய கிறிஸ்தவ தலைவர் அறிந்ததும், நமக்கோர் புது உத்தரவாதம் உதித்தது. ஐரோப்பிய மிஷன்கள் தங்கள் வேலையை யதிகரிக்கக்கூடவில்லையென்று சொல்லி, இந்தியசபையே தன் உத்தரவாதத்தை நிறைவேற்றக் காலமென்று நம் தலைவர்களுக்கு எழுதினார்கள். ஆகவே 1905-௵ டிசம்பர்௴ சொராம்பூரில் பல மாகாணங்களிலுமிருந்து பல இந்திய கிறிஸ்தவர்கள் கூடி இவ்விஷயத்தை ஆலோசித்தார்கள். உவில்லியம் கேரியின் புத்தகசாலையில் நம் பிரிவினைகளையும், குறைவுகளையும், எளிமையையுமறிந்த தலைவரால் நொறுங்கின இருதயத்துடனும், ஆண்டவரைப் பற்றும் விசுவாசத்துடனும், ஊக்கஜெபத்துடனும், கிறிஸ்தவ நம்பிக்கையுடனும் இப்புது சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது.

பல கிறிஸ்தவர்களும் தங்கள் பொதுக்கடமையை உணரவேண்டுமென்பதும், இந்திய கிறிஸ்தவர்களுக்கு இந்தியாவின் தேவையைச் சொல்லி, ஐரோப்பிய மிஷன்கள் வேலைசெய்யாத புதுவிடங்களிலே சுவிசேஷ வேலை யாரம்பிக்கவேண்டுமென்பதும், மகா சுயவெறுப்பாயும், வெகு ஊக்கமாயும் உழைத்து நமக்கு முன்மாதிரி கொடுத்துவரும் இந்தியாவிலுழைக்கும் சகல மிஷன்களோடும் ஐக்கியமாய் இருந்து உழைக்கவேண்டுமென்பதுமே இச்சங்கத்தின் நோக்கமும், முறையுமாம்.

இந்தச் சங்கத்தின் முந்தின சிநேகிதர் ஐரோப்பிய மிஷன்களும் கிறிஸ்தவப் பத்திரிகைகளுமே. இது சங்கத்துக்கு ஒரு பெருத்த உதவியாக இருந்தபோதிலும் இந்திய கிறிஸ்தவர்கள் சுவிசேஷ வாஞ்சையைப் பெற்றால்தான் வேலை ஆரம்பிக்கக்கூடும். ஆதலால், பல மாகாணங்களிலும் இதன் நோக்கம் விவரிக்கப்படவேண்டியதாயிருந்தது. இச்சங்கத்தின் முதல் பத்து வருஷ காலத்தில் ஒரு முக்கிய பாகம் கிறிஸ்தவர்களுக்கு இதன் செய்தியை அறிவிப்பதில் செலவானது. இந்தியா பெரிய தேசம். பல மாகாணங்களையும் சந்தித்து,

அங்குள்ளோருக்கு விஷயத்தைக்கூறி, அவர்களுடைய ஒழுங்கான ஆதரவைப் பெறுவதற்கு காலமாகுமன்றோ?

இத்துடன் வேலையுமாரம்பமாயிற்று. 1907-ம் ௵ ஆகஸ்டு௴ ஜேம்ஸ் உவில்லியம்ஸ், B. A. அவர்கள் இச்சங்கத்தின் முதல் மிஷனரியாக நியமிக்கப்பட்டு, பஞ்சாப் மாகாணத்து மண்ட்காமரி ஜில்லாவில் சுவிசேஷ வேலையையாரம்பித்தார். இங்கு மிச்சமானவர்கள் மகமதியர். இந்துக்களும் சீக்கியருமுண்டு. அநேகமாய் மணற்காடாயிருந்த இப்பாகம், சுவிசேஷ வேலையாரம்பித்தபிறகு வாய்க்கால் பாய்ச்சலினால் மாறி, ஜனத்தொகையு மதிகரித்திருக்கிறது. இங்கு ஒக்காரா என்னுமிடத்தில் ஒரு வைத்தியசாலையும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. தற்சமயம் இவ்விடத்தில் 400 கிறிஸ்தவர்களுண்டு. இவ்விடத்திலுள்ள மிஷனரிகள் இந்திய கிராமவாசிகளுக்கேற்ற விதமாய் சுவிசேஷ வேலையை நடத்திவருகிறார்கள். மேலும், சம்பளம் பெறும் உதவி ஊழியரின்றி, கிராமசபை ஒவ்வொன்றிலும் ஒரு பஞ்சாயத்தும் சௌதிரி என்னும் தலைவனும் நியமிக்கப்பட்டு, கிராமக் கிறிஸ்தவர்களை சுவிசேஷவேலை செய்யவும், தங்களுக்குக் கற்பிக்கப்படுவதை மற்றவர்களுக்குக் கற்பிக்கவும் பழக்கப்படுகிறார்கள். வேலைமட்டாயிருக்கும் காலத்தில் மண்ட்காமரியில் ஒரு ஊழியர் வகுப்பு வைக்கப்பட்டு, தெரிந்துகொள்ளப்பட்ட வாலிபர் சுவிசேஷம் வாசிக்கவும், கிறிஸ்தவ மார்க்க சத்தியங்களைச் சுலபமாய்ப் போதிக்கவும் பழக்கப்படுகிறார்கள். இங்கு செய்யப்படும் நூதன முறைகள் இச்சங்கத்தைச் சேர்ந்த மற்றெல்லா விடங்களிலும் அநுசரிக்க இச்சங்கத்து மிஷனரிகள் முயன்று வருகிறார்கள்.

(இன்னும் வரும்)

---

## A Grace-filled Life
## The 'Retrospect' of Rev. Hudson Taylor

**Translated by the Rev. N. Devasagayam, B.A.**

## திருவருட்பிரகாச ஜீவியம்

ஹட்ஸன் டெய்லர் ஐயரின் 'பின்னோக்குச் சரித்திரம்'

பதினேழாம் அதிகாரம்

### தேவன் நம் அடைக்கலம்

(தொடர்ச்சி)

இந்த நாள்முதல் தர்மத்துக்கும் என் குடும்பச் செலவுக்கும் என் கைக்கீழிருந்த வேறு மிஷியோன் வேலைகளுக்கும் வேண்



டிய யாவையும் தேவன் ஓயாமல் கொடுத்துக்கொண்டே வந்தார். இதற்கு ஒன்பது மாதங்களுக்குப் பிறகு சுகக்குறைவால் நான் இந்த வேலையை வேறு கையில் விட்டுப்போனபோது, ஆஸ்பத்திரிச் செலவுக்காக முதலில் எனக்கெவ்வளவு பணம் தரப்பட்டதோ அதிலும் அதிகத் தொகையைக் கொடுத்துப் போகக்கூடியவனாய் இருந்தேன்.

எங்களுடைய ஜெபங்களுக்கு உத்தரவாய்ப் பணம் கிடைத்ததோடே மாத்திரம் போகவில்லை, அநேக பிராணன்களும் காப்பாற்றப்பட்டன. சாதாரணமாய் இனி அசாத்தியம் என்று கைவிடத்தக்க நோய்களெல்லாம் தீர்ந்து சுகத்துக்கு வந்ததுமல்லாமல் அபாயகரமான சத்திர சிகிச்சைகளும் பிராணமோசமில்லாமல் சித்தியாயின. ஒருவனுக்கு இரண்டு கால்களையும் வெட்டவேண்டியதாயிற்று. அப்படி வெட்டினபோது அவன் பிழைப்பான் என்று நம்ப ஏதுவிருந்ததில்லை. ஆயினும், சுகமாகும் குறிகள் சுறுக்காய்க் காணப்பட்டு அவனுடைய இரணக்கால்கள் இரண்டு வாரங்களுக்குள்ளேயே ஆறிப்போயின. இவற்றினும் மேம்பட்ட நிலைபேறுடைய நன்மைகளும் அருளப்பட்டன. வெகுபேர் கிறிஸ்துமார்க்கத்தின் சத்தியத்தை உள்ளூற உணர்ந்துகொண்டார்கள்; அநேகர் கர்த்தரை விசுவாசித்து ஜெபத்தினால் தேடியடைந்து அந்த மகா வயித்தியர் பாவநோயுற்ற ஆத்துமாவைச் சுகமாக்குகிற வல்லமையை அநுபவித்தார்கள். மேற்சொன்ன ஒன்பது மாதங்களுள், ஆஸ்பத்திரிக்கு வந்த பதினாறு நோயாளிகள் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டார்கள்; முப்பதுக்கு அதிகமான பேர்வழிகள் அந்த நகரத்திலிருந்த ஏதாவது ஒரு கிறிஸ்தவ சபையில் சேர்வதற்குப் படித்துக்கொண்டிருந்தார்கள்.

இவ்வாறு 1860-ம் ௵ சகல பக்கங்களிலும் எங்கள் வேலைக்கு அநுகூலமான கதவுகள் திறந்திருந்ததோடு ஆரம்பித்தது. ஆயினும் அந்த அநுகூலங்களை சம்பூரணமாய்ப் பிரயோசனப்படுத்திக்கொள்ள எங்களுக்கு நேரமும் பலமும் போதிய அளவிருந்ததில்லை. உதவியாட்களில்லையே என்று சிலகாலம் அவஸ்தைப்பட்டபின் உலகமாகிய வயலின் இந்தப் பாகத்திற்கு அறுப்பின் எஜமான் இன்னுமதிகமான வேலையாட்களை அனுப்பவேண்டுமென்று ஜனவரி மாதத்தில் வரையறுத்து ஜெபித்தோம். 1860-ம் ௵ ஜனவரி௴ 16௳ என் தேசத்திலிருந்த உறவினருக்கு எழுதின கடிதத்தில் எங்கள் உள்ளங்களில் கொழுந்துவிட்டெரிந்த ஆவலைப் பின்வருமாறு தெரிவித்தேன்:—

'சீனாவில் தேவனுக்கு ஊழியம்செய்ய விரும்புகிற உட்கருத்தும் ஊக்கமுமுள்ள வாலிபர் யாரையேனும் உங்களுக்குத் தெரியுமா?

அவர்கள் தங்கள் ஜீவனத்திற்குத் தேவையானதற்கு அதிகமாய் ஆசைவைக்காமல் இங்கே வந்து உழைக்க விரும்புவார்களா? அப்பேர்ப்பட்ட நாலு ஐந்து உதவிக்காரர் அகப்பட்டால் தாவிலே. அவர்கள் வந்தால் ஆறு மாதத்திற்குள் சீனபாஷையில் பிரசங்கிக்க வல்லவர்களாகலாம். அவர்களுடைய ஆதரிப்புக்கு வேண்டியது எல்லாம் ஜெபத்திற்கு உத்தரவாய் அகப்படும்.'

ஆயினும், அக்காலத்தில் எங்களுக்கு உதவிசெய்ய யாரும் வரவில்லை. டாக்டர் பார்க்கர் இல்லாத காலத்தில் ஆஸ்பத்திரியை நடத்துவதில் எனக்குச் சரீரத்திலும் மனதிலும் உண்டான மிதமிஞ்சின கஷ்டங்களினாலும், அதைத் தவிர எனக்கிருந்த வேறு மிஷன் வேலைகளில் ஓயாமல் உழைக்கவேண்டியதாயிருந்ததினாலும் என் சுகம் தீவிரமாய்க் கெட ஆரம்பித்தது. அதினிமித்தம் என் சுகத்திற்காக இங்கிலாந்துக்குச் சிலகாலம் போயிருப்பது அவசியம் என்று சிந்திக்கலாயிற்று.

இதைக் கர்மம் சிதையாமல் கைக்கூடச் செய்வது எப்படி என்று எங்களுக்குத் தெரியாமல் மயங்கினோம். நாடோறும் அதிகப்பட்டு வந்த கிறிஸ்தவர்கள் தொகையும் ஓயாமல் விருத்தியான வேலையும் நாங்கள் போகக்கூடாது என்று தடுத்தன. கர்த்தருக்குள் எங்களுக்கு அருமையாய் இருந்தவர்களைவிட்டுப் பிரிவது வெகு மனவேதனையாயுமிருந்தது. புதிதாய் ஏற்பாடான சபையிலே மூப்பது, நாற்பது சுதேச கிறிஸ்தவர்கள் இருந்தார்கள். அவர்கள் ஆராதனைக்குத் தவறாமல் வருகிறதையும் கிறிஸ்தவ ஜீவியம் செய்வதில் அவர்களுக்கிருந்த ஊக்கத்தையும் பார்க்கும்போது இனி அந்தச் சபை மிக மேம்பாடடையும் என்று நம்ப ஏதுவிருந்தது. நான் திரும்பத் திரும்ப நோய்வாயில் அகப்பட்டுக் கடைசியாய்ப் பாயும் படுக்கையுமானேன். ஆதலால், இங்கிலாந்துக்குப் போய் அங்கே சிலகாலம் தங்கி உடம்பைப் பெலப்படுத்தவேண்டும் என்பதைத்தவிர வேறு வழியில்லை எனத் தோன்றிற்று. இந்த வழியைப் பிடித்து நடக்கிறது அக்காலத்தில் என் மனதிற்கு நோவாயிருந்தது மெய்தான். ஆயினும், அதுவே 'தமது சித்தத்தின் ஆலோசனைக்குத்தக்கதாக எல்லாவற்றையும் நடப்பிக்கிறவர்' தம் வாக்குண்மையையும் அன்பையும் எனக்கு வெளிப்படுத்துகிற ஒரு வாயிலாயிற்று.

இதுவரையும் செய்ததுபோல இந்த வேளையிலும் ஆண்டவர் எனக்கு உதவிசெய்ய என்னோடிருந்தார். எங்கள் பிரயாணச் செலவை அவர் தந்தார்; மொழிபெயர்ப்பு முதலிய நூற்சம்பந்தமான வேலைகளில் எங்களுக்கு உதவிசெய்யவும், எங்கள் மிஷன் ஸ்தானங்களில் உழைக்க ஆண்டவர் மனம் மூட்டும் பேர்களுக்குச் சீனப்



பாஷையைக் கற்றுக்கொடுக்கவும் ஒரு சுதேச கிறிஸ்தவனை எங்களுடன் கொண்டுபோவதற்குச் செல்லும் செலவையுங்கூடக் கொடுத்தார். எங்களோடுகூட வந்து உழைக்கப் பிரியப்படுவோரை ஆண்டவர் எழுப்புவார் என்பதைப்பற்றி எங்கள் மனதில் சந்தேகம் எழும்பினதேயில்லை. ஏன்? அப்பேர்ப்பட்டவர்களை எங்களுக்குத் தரும்படி நாங்கள் இதற்கு முந்தியே அநேக மாதகாலம் ஆண்டவரிடத்தில் ஊக்கமாயும் விசுவாசமாயும் ஜெபித்து நிச்சயமடைந்திருந்தோம்.

சீனாவைவிட்டுப் புறப்பட ஒருநாளுக்கு முந்தி எங்கள் சிநேகிதராகிய பெர்ஜெர் (W. T. Berger) துரைக்கு எழுதினோம். அவரை இங்கிலாந்திலேயே சிநேகம் பிடித்திருந்தோம். நாங்கள் எட்டாத் தொலையான சீனதேசத்தில் இருந்த காலமெல்லாம் அவர் எங்கள் கைகளைக் கர்த்தருக்குள் உறுதிப்படுத்தி வந்தார். அவருக்கு நாங்கள் எழுதினது இது :—

'நூற்சம்பந்தமாய் எங்களுக்கு உதவவும், எங்களுடன் சீனாவுக்கு வர விரும்புவோருக்குப் பாஷையைப் போதிக்கவும் ஒரு வாலிப சீன சகோதரனை எங்களுடன் கூட்டிவருகிறோம்.'

நாங்கள் யாத்திரைக்காரராய் இருந்த காலம் முழுமையிலும், எங்கள் தேசத்தில் நாங்கள் போய் வசிப்பதை சீனாவுக்கு நன்மையாய்ப் பலிக்கச்செய்யும்; அது இன்னம் ஐந்து உதவியாட்களையாவது சேக்கியாங்கில் உழைப்பதற்குச் சம்பாதிக்கிற காலமாயிருக்கப் பண்ணும் என்று ஆண்டவரை நோக்கி ஓயாமல் கூப்பிட்டோம்.

இந்த ஊக்கமுள்ள விசுவாச ஜெபத்தைக் கேட்டு நாங்கள் கேட்டதிலும் 'வெகு அதிகமாய்' அவர் எங்களுக்குக் கொடுத்த விபரத்தைச் சுருக்கமாய் அடுத்த அதிகாரத்தில் தெரிவிப்போம்.

(இன்னும் வரும்)

# Holiness

**By the Rev. A. Paramanandham**

## பரிசுத்தம்

(தொடர்ச்சி)

இரண்டாம் அதிகாரம்

தேவனுடைய பரிசுத்தம்

(*b*) தேவன் நிர்மலமானவர் என்பதற்குக் களங்கம், குற்றம், குறை, விகாரம் இல்லாதவராயிருக்கிறார் என்பதே பொருள் என்று

ரசித்துக்கொண்டிருப்போமானால், தேவனுடைய பரிசுத்தம் எத்தன்மையானது என்னும் நம்முடைய விசாரணையைச் சிறிதுமாத்திரஞ் செய்து அம்மட்டோடே நின்றுவிடுகிறவர்களாய்க் காணப்படுவோம். தேவனுடைய பரிசுத்த குணத்தில் எந்த லட்சணங்களும் இருப்பதில்லை என்பதைமாத்திரம் நாம் அறிந்துகொள்ளக்கூடுமானால் தேவன் நிர்க்குணன் என்றாற்போலாயிற்று. தேவனுக்கு இயல்பாயிருக்கிற குணத்தை நாம் அறிந்துகொள்ளவேண்டும். அவர் எத்தன்மையுடையவர்? எந்தெந்தக் காரியங்களை நடப்பிக்கிறார்? அந்தக் காரியங்கள் நடந்தேறும்படியான மூலதத்துவமெவை? நம்முடைய குணம் தேவனுடைய நிஜமான குணத்துக்குச் சமானமாய் இருக்கவேண்டுமாகில், தேவ லட்சணங்கள் இன்னின்னவை என்பதை நம்மாலறியக் கூடியமட்டும் அறிந்துகொள்வது அவசியம். தேவனுடைய நீதியின் விஷயமாயும் சத்தியத்தின் விஷயமாயும் நமக்கு சிறிது அறிவுண்டு. ஆனால் அந்த லட்சணங்கள் தேவன் எந்த மேரையாய் அல்லது எந்த கிரமத்துக்குச் சரியாய் நடத்துகிறாரென்று காட்டுகிறதேயொழிய, தேவன் சும்மாயிராமல், வேலை நடப்பிக்கிறதற்குக் காரணத்தை அதாவது தேவனுடைய மூலதத்துவத்தைக் காட்டுவதில்லை. மரத்தை அதின் கனியினால் அறிந்துகொண்டாலும், கனிகள் மரத்தின் சாரத்துக்குக் காரணமில்லை. வேரிலிருந்தே மரத்துக்குச் சாரமுண்டாகிறது. கிளைகளும் கனிகளும் மரத்தோடு எவ்வாறு கூடியிருக்கின்றனவோ அவ்வாறே நீதி, சத்தியம், கருணை இவை முதலான லட்சணங்களும், இவைகளால் கூடின தேவனுடைய எல்லாச் செயல்களும், தேவனுடைய குணத்துக்குண்டு. தேவனுடைய குணத்துக்கு மூலம் அவருடைய அன்பே. தேவன் அன்பாகவே இருக்கிறார் என்று சத்தியவேதம் கூறுகிறது. இந்தவார்த்தையினால் நாம் அறிந்துகொள்ளவேண்டியது என்னவென்றால் தேவன் அன்புகூருகிறவர். அன்புடையவர் என்பதாயல்ல, அன்புள்ள சுபாவமுள்ளவர் என்பதே. மரமொன்று வளருகிறதற்கும் கனி விடுகிறதற்கும் அதின் வேரிலிருந்து எப்படி சக்தியுண்டாகிறதோ அப்படியே அவருடைய அன்புள்ள சுபாவத்தினால் தமது திவ்விய செயல்களைச் செய்கிறதற்கு ஏதுவுண்டாகிறது. நீதியும் சக்தியல்ல; சத்தியமும் சக்தியல்ல; அன்பே தேவசுபாவத்தின் மூலசக்தியாயிருக்கிறது. தேவன் அன்பாகவே இருக்கிறார் என்று சொல்லும்போது, அன்பு என்னும் வார்த்தையின் அர்த்தத்தைச் சரியாக நிர்ணயிக்கவேண்டும். மனுஷர் பொதுவாய் அவிவேகத்தினாலும் அபிலாசையினாலும் அன்புகூருவதினால், இவ்வார்த்தையை சில சந்தர்ப்பங்களில் மிக அற்பமான அர்த்தத்தில் உப



யோகிப்பது வழக்கம். தாயானவள் ஒருத்தி தன் குழந்தையிடத்தில் அவிவேகமாய் அன்புகூருவதால் அக்குழந்தையிடத்தில் காணும் தப்புகளைத் திருத்தாமல், அதின் குணத்தைக் கெடுக்கிறாள். ஒருவன் மற்றொருவனுடைய சிநேகத்தினால் தனக்குச் சந்தோஷமும் பிரயோஜனமும் உண்டாகுமென்று எண்ணி அவனிடத்தில் அன்புகூருகிறான். தேவனுடைய அன்பு இப்படிப்பட்டதல்ல. தேவனுடைய அன்பு பிறரிடத்தில் அன்புகூருகிற தன்மையுடையது. 'அன்பு தற்பொழிவை நாடாது' (1 கொரி. 13[5]). தான் பெருகவேண்டும் என்று தன்னலத்தைமாத்திரம் கோருகிறது அகங்காரம். அன்பு அகங்காரத்துக்கு முற்றும் விரோதமானது என்று சொல்லலாம். அன்பானது தன்னலத்தைக் கிஞ்சித்தேனும் கோராமல், பிறர் நலத்தை வர்த்திக்க பண்ணவேண்டுமென்று இடைவிடாமல் பிரயாசப்படும் தன்மையுடையது. இந்த அபிப்பிராயத்தைக்கொண்டே தேவன் அன்பாகவே இருக்கிறார் என்னும் வார்த்தையைத் தியானிக்கவேண்டும். பூலோகம் உண்டானதுமுதற்கொண்டு இதுவரைக்குமுள்ள சரித்திரத்தில் தேவன் மனுஷருடைய விஷயத்தில் நடப்பித்து வருகிறதைச் சாங்கோபாங்கமாய் விசாரித்துத் தெரிந்துகொள்ள நமக்குச் சக்தியுண்டானால், தேவன் லோக பரிபாலனம் என்கிற ஒரே நோக்கத்தை வைத்துக்கொண்டு தமது செயல்களையெல்லாம் நடப்பிக்கிறார் என்று தோன்றும். அவர் தமக்கு இதமானதைத் தேடி, தமக்கு அநுகூலமானதைச் சிந்தித்து எவ்வித செயல்களையும் புரிகிறதில்லை. தமது ஒரே பேறான சொந்த குமாரனைத் தமக்கென்று வைத்துக்கொள்ளாமல், அவரை நம்மெல்லாருக்காக ஒப்புக்கொடுத்ததில் மாத்திரமல்ல, தாம் புரிந்த ஒவ்வொரு கிரியையிலும் காரியத்திலும் தமது அன்பைக் காட்டிக்கொண்டே வருகிறார். லோக நிர்மாணமும் அன்பின் ஏவுதலினால் பிறந்த காரியம். வேதாந்திகள் நினைக்கிறபிரகாரம் ஓர் விதமான வேடிக்கைக்காகத் தேவன் பூலோகத்தைச் சிருஷ்டிக்கவில்லை. அநேக கிறிஸ்தவர்கள் தப்பாய் நினைக்கிறபிரகாரமும் தாம் உண்டாக்கினவைகளைப் பார்த்து சந்தோஷப்படவேண்டும் என்கிற நோக்கத்தோடு அவர் பூலோகத்தைப் படைக்கவில்லை. தேவன் மனுஷரை தமது இதத்துக்காக அல்ல, அவர்களுடைய நன்மைக்காகவே சிருஷ்டித்தார். அவர்கள் பரிசுத்தம் என்கிற தமது ஆனந்தத்தை அடைவதற்காக அவர்களை உண்டுபண்ணினார். 'தமக்கு முன்பாக நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும் குற்றமில்லாதவர்களுமாயிருப்பதற்கு, அவர் உலகத்தோற்றத்துக்கு முன்னே நம்மைத் தெரிந்துகொண்டார்' (எபே 1[4]). இதேபிரகாரமாய் பூலோகத்தைப் பரிபாலிக்கவேண்டுமென்றும் பக்தரைப் பரிசுத்தமாக்க

வேண்டுமென்றும், தேவன் யுகாயுகமாய் நடப்பித்துக்கொண்டு வருகிறார். அவருடைய காரியங்கள் ஒவ்வொன்றும் அகங்காரமில்லாமலும், அன்பு என்னும் மூலசுபாவத்துக்கு ஒத்தும் நடந்திருக்கிறது. தேவனுடைய இந்த அன்பு அநாதியாயும், ஒரேவிதமாயும், ஜனங்களுக்குத் தெரியாததாயுமிருந்துவந்து கடைசியில் கிறிஸ்துவானவருடைய அவதாரத்தினால் பிரத்தியக்ஷமாயிற்று. கிறிஸ்து அன்புள்ளவராய்ப் பரிசுத்தம் என்னும் தேவகுணத்தை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெளிவுற பிரஸ்தாபித்தார். 'கிறிஸ்து அவருடைய மகிமையின் பிரகாசமும், அவருடைய தன்மையின் சொரூபமுமாயிருக்கிறார்' (எபி $1^{3}$). மனுஷர் தங்கள் மத்தியில் நர அவதாரமாய் வாசஞ்செய்த கிறிஸ்துவானவருடைய மகிமையைக் கண்டபோது 'அந்த மகிமை பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது' (யோவா. $1^{14}$) என்று அறிந்துகொண்டார்கள். அவரைப் பார்த்தது பிதாவைப் பார்த்ததுபோலிருந்தது. கிறிஸ்துவானவருடைய ஜீவியசரித்திரத்தைத் தியானிப்பதினால், தேவனுடைய சுபாவம் அன்பு என்றே அதிகமதிகமாய்க் காண்கிறது.

(1) கிறிஸ்து அவதாரம் எடுத்துக்கொள்ள ஏவினது சுத்த அன்பே. மனுஷர் தமது கிருபாநிதியிலிருந்து கிருபையின்மேல் கிருபையைப்பெறும்படியாக மனுஷரூபத்தை எடுத்து, மனுஷருக்குத் தென்பட்டு, 'தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து மனுஷர்சாயலானார்' (பிலி. $2^{7}$). கிறிஸ்து தம்மை வெறுமையாக்கிக் கொண்டதினால், தேவனுடைய அன்பு இத்தன்மையானது என்று வெளியாயிற்று.

(2) கிறிஸ்து பூலோகத்தில் இருந்தபோது அவருடைய மனோவாக்குக் காயங்கள் சுத்த அன்பினால் நிறைந்திருந்தன. அவருடைய சரித்திரத்தை கவனமாய்ப் படித்துப் பார்த்தால், அவர் எந்த சந்தர்ப்பத்திலாகிலும் சுவிசேஷத்தைப்பற்றி சிந்தையற்றிருந்தார் என்று சொல்வதற்காகாது. 'அவர் நன்மை செய்கிறவராயும், பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித்திரிந்தார்' (அப். $10^{38}$). 'மற்றவர்களை இரட்சித்தான், தன்னைத் தான் இரட்சித்துக்கொள்ளவில்லை' (மாற். $15^{31}$). கிறிஸ்துவின் சுயவெறுப்புள்ள நடத்தையினால், தேவனுடைய அன்பு இத்தன்மையானது என்று விளங்குகிறது.

(இன்னும் வரும்)

C. L. S. PRESS, MADRAS—1916

**No. 119** ஏப்பிரல் **1916**

# வேதியர் விளக்கு

OFFICE OF THE REGISTRAR ... 7-APR 1916 MADRAS

## The Bible and War

By the Rev. W. J. Tunbridge

IN dealing with some of the many problems which confront us as we consider the question of the present war, it is our obvious duty to make our appeal to the Word of God. Whatever we may think of the Bible, whatever changes time brings in our conception of the Book, we cannot leave it out, because it is the clearest revelation of God imparted to us, and in it we find our highest ethical standard. On a subject of such importance we must turn to it for light and leading. We are in fact compelled to do this because the Bible is supposed by some to countenance strife. We cannot shirk the appeal that has been made, and we have to ask whether the Bible does or does not support war. The arguments of those who see in its pages a justification for the present state of affairs may be summarized under two heads—negative and positive. On the one hand we are told that Scripture nowhere definitely condemns war, and on the other that here and there it positively approves. It has been pointed out that the New Testament contains no definite command prohibiting war. The Old Testament, we are reminded, says very definitely 'Thou shalt not steal', 'Thou shalt not covet', etc., and if war is wrong, have we not a right to expect some clear prohibition that shall read, 'Thou shalt not fight'? 'Thou shalt not engage in war'? It is urged likewise in support of this argument that silence in another way must give consent. Christ did not condemn the centurion who sought His aid: He did not even suggest to him that the military life should be given up. Likewise John the Baptist gave no command to the soldiers who came to him to leave the army. Peter also refrained

from telling Cornelius that his profession should be discarded. If war is wrong, why did not Christ and His immediate followers condemn the military profession, and command men to leave it? We know that He did not, and does not His silence shew that He admitted its necessity, and approved of its methods?

The statement is right, but the inference is wrong. All agree that Christ made no direct attack upon militarism, that He commanded no soldier to become a civilian, but that does not compel us to believe that He necessarily agreed with the calling. To make such a deduction is to shew a complete lack of understanding of the methods of Christ. To lay stress upon the silence of the New Testament writers and argue from that, that war is therefore necessarily approved does not justify war but rather reveals the untrained mind of the person using the argument. It is assumed that the New Testament gives us clear and precise commandments in the same manner as the old: but such an assumption is wholly false. The main distinction between the two Testaments lies just here. It is not so much that the New Testament gives us a loftier moral ideal, as that it states that ideal in a different manner and seeks to enforce it by another method. In the Old, God was dealing with the children of the race, and dealt with them as we always do with children, 'Do this, and do not do that'. The command is necessary during that stage of development, and so is always explicit. In the New Testament however, God is dealing with men who understand principles and enjoy the freedom of the Spirit's indwelling and He always makes His appeal to us by enunciating fundamental principles rather than by stating the details of conduct. That Christ came to establish a better world none would doubt: but we look in vain in the teaching of Jesus for a definite description of that new social order. No pet schemes can find support in Him, yet no reformer making for the regeneration of society can possibly ignore Him. That Christ came to found a Church none will question, but He never states the conditions for membership within it, never refers to the functions of its officers, never even exhorts us to attend services. No ecclesiastic can say 'Only my form is after the pattern', yet every Church has its foundations in Him. Our Lord has given the ideal, so has no need to give the command. He creates a spirit and leaves the letter to look after itself. He is silent upon a multitude of things not because they do not matter but because the man who enjoys the guidance and inspiration of the indwelling spirit will discover his own answer. He came to make that indwelling possible and having achieved that all other things are possible. Dymmond in his famous essay on war illustrates this by the case of suicide. Nowhere in the New Testament do we read 'Thou shalt not kill thyself': nowhere in fact is suicide ever forbidden or condemned. Christ is absolutely silent upon the subject, yet none of us would justify suicide from His silence. We all condemn it and condemn it from the Bible notwithstanding its silence because we feel that it violates the whole spirit of Scripture. Christ's method was not to say it is wrong to take life, it was rather to make life so valuable that we should perceive ourselves that to destroy it was wrong. His method was not to condemn war, but so to exalt the opposite ideal that we should say ourselves 'This thing must never be'. What Jesus did not say must be interpreted in the light of what He did say: His silences must be illumined by His speeches. Nothing positive can be found in a negative. The absence of definite condemnation creates no surprise because such is the method under the New Covenant.



Turning to the spoken words of the Master, we are confronted with passages which we are told shew His approval of War. 'Think not that I came to send peace on the earth: I came not to send peace but a sword.' 'When ye hear of wars and rumours of wars be not troubled: these things must needs come to pass'. 'He that hath a purse, let him take it and likewise a wallet, and he that hath none, let him sell his cloke and buy a sword.' These passages have been examined again and again and we must ever remember to read them in the light of the context, and make allowance for the Eastern imagery. Had this always been done, we should have had a

better understanding of the teaching of Jesus. It is not my intention however, to examine minutely each of these texts, nor do I purpose to set over against them sayings of an opposite nature, such as 'All that take the sword shall perish with the sword': 'My kingdom is not of this world. If my kingdom were of this world, then would my servants fight': 'Resist not evil.' Our reasons for refusing to discuss these isolated passages do not arise from any desire to shirk difficulties, but because we feel that after the most careful investigation of these and other texts, so much remains to be done: that in fact the greatest thing still confronts us. The old method was always to bring together texts from every part of Scripture in support of the subject in hand. Little regard was paid to the original meaning, whether the quotations were argumentative or poetical, whether they belonged to the early stages of Judaism, or to the time of the Christian Church. It was enough to quote texts and to pile them one on top of the other was ample evidence—the length of the pile determining the strength of the evidence. Such a method no longer makes its appeal. No system of thought can be constructed on so weak a foundation. A text here and a text there prove nothing. I do not mean to say they are worthless, but our task to-day is much more difficult, for men demand that the underlying principles shall be laid bare, and that the spirit shall be revealed rather than the letter baldly stated. What we have to search for then, is not a few sayings in which Christ makes reference to war and peace, but rather an understanding of His larger message: we have to seek to catch His spirit, to breathe His atmosphere, to lay hold of His ideas, and in the light of such knowledge to judge and measure all things. Such a task is much more difficult than searching a Concordance for certain texts: but the results justify the effort, for he who diligently enquires thus is never in doubt concerning the mind of the Master.

*(To be continued)*



# The National Missionary Society of India

## இந்திய சுயதேச மிஷனரி சங்கம்

(தொடர்ச்சி)

**By Mr. J. D. Asirvatham**

1908-ம் வருஷம் ஐக்கிய மாகாணத்திலொரு பாகமாகிய நக்கர் தாலுகாவில் வேலை யாரம்பித்தது. இவ்விடத்திலுள்ள ஜனம் கீழ் ஜாதியார். இந்தக் கீழ் ஜாதியார் கிறிஸ்து மதத்தைத் தழுவ ஆசையுள்ளவர்களாய் எங்கெங்கே மிஷன்கள் வேலை யாரம்பித்தார்களோ அங்கெல்லாம் கூட்டம் கூட்டமாகக் கிறிஸ்தவர்களானார்கள். இவர்கள் இரட்சிப்பினாசையாலல்ல, படிப்பு, உலகவாழ்வு முதலிய புறம்பான காரியங்களை நாடியே கிறிஸ்தவன்டை வர ஆரம்பித்தார்கள். ஆயினும் இக்கீழ் ஜாதியாரிடத்தில் வேலை நடத்திவரும் மெதொடிஸ்ட் முதலிய பல மிஷன்களும் இது கிறிஸ்துராஜ்ஜிய பரம்புதலுக்கேற்ற நல்ல சமயமென்று கண்டு, வெகு பயனுற வேலைநடத்தி வருகிறார்கள். இந்திய மிஷனரி சங்கம் வேலையாரம்பித்த நக்கர் ஜில்லாவிலும் பலவிடங்களில் நமக்கு சபை கூட்டப்பட்டிருக்கிறது. இவர்களுக்கு நீண்டகால ஆயத்தமவசியம். இந்த விடத்தில் ஊழியர் குறைவினால் வேலை தாமதப்படுகிறதேயன்றி, எங்கெங்கு ஊழியர் நியமிக்கப்பட்டிருக்கிறார்களோ அங்கெல்லாம் சபை அதிகரித்துக் கொண்டேவருகிறது. இங்கு பீப்பில்ஸ் என்னும் மிஷனரியும், நாலு உதவி ஊழியருமுண்டு. பீப்பில்ஸ் அம்மாள் ஒரு மருத்துசாலையும் நடத்திவருகிறார்கள்.

1909-ம் வருஷம் தென்னிந்தியா சேலம் ஜில்லா ஓமலூர் தாலுகாவிலும் வேலை யாரம்பமாயிற்று. ஓமலூரிலும், நங்கவள்ளியிலும் வேலைநடந்து வருகிறது. இந்த விடத்து மிஷனரியாகிய பாலசந்தரம் அவர்கள் பெங்களூர் வேதாகம கலாசாலையில் படித்து, இங்கு வேலைதொடங்க ஆயத்தமாயிருக்கிறார்கள். அவருக்கு முன்னிருந்த உவில்லியம்ஸ் அவர்கள் வேலையைவிட்டு ஒரு வருஷமாகிறது. தற்சமயம் தேவாசீர்வாதம் அவர்கள் வேலைசெய்யும் நங்கவள்ளியில் ஒரு நல்ல அசைவு உண்டாகியிருக்கிறதென்றும் சீக்கிரம் அங்கு நல்ல பலனிருக்குமென்றும் இச்சங்கம் எதிர்பார்க்கிறது. மத்திய நிலைமையிலுள்ள சூத்திரரிடம் செய்யும் வேலை அதிக கஷ்டமான வேலையென்று தென்னிந்தியராகிய நாம் அறிந்திருந்தும், இன்னம் சோர்

வடையாமல் கிறிஸ்துவின் நாமத்தில் இவ்வேலை தொடர்ந்தே செய்யப்பட்டு வருகிறது. இங்கு சீக்கிரம் பலனிருக்குமென்று நம்ப ஏதுவுண்டு.

1910-ம் வருஷம் திருவாங்கூரிலுள்ள சிரியக் கிறிஸ்தவர்கள் இச்சங்கத்தின் சம்பந்தமாய் வேலைசெய்ய ஆரம்பித்தார்கள். அவர்களுக்குக் குறிக்கப்பட்ட விடம் வடகன்னடத்தின் ஒருபாகமாகிய கார்வாரென்பதே. இங்குள்ளவர்களில் விசேஷித்தவர் சாஸ்வத் பிராமணரும், அவர்களிலிருந்து கத்தோலிக் சபையைச் சேர்ந்த கோவானீஸ் கிறிஸ்தவர்களுமே. இவ்விருவகுப்பாரும் பேசுவது கொங்கணி பாஷையின் இருபிரிவுகள். இப்பாஷை பேசப்படும் பாஷையேயன்றி எழுதப்படக்கூடியதன்று. இப்பாஷையைக் கற்பதும் மலையாளமறிந்த சிரியருக்கு அதிகக் கஷ்டமாயிற்று. அத்துடன் கன்னட பாஷையும், மகாராட்டிய பாஷையும் இவ்விடத்து கற்கவேண்டியிருந்தது. இங்கும் 4, 5 வருஷமாக வேலைநடந்தும், பயன்வாராதது போல் தோன்றியும், சென்ற வருஷமுடிவில் ராமராவ் என்னும் பிராமண வாலிபன், இவ்விடத்து மிஷனரி மத்தாய் என்பவரால் ஞானஸ்நானம் பெற்றான். இந்த முதற்பலன் திரளான பலனுக்கு அத்தாட்சியென்று இச்சங்கம் நம்பியிருக்கிறது.

இதேகாலத்தில் ஆமத்நகர் சபை இச்சங்கத்தின் வேலையிலதிக வாஞ்சைகாட்டி, கர்ஜட் கர்மலா தாலுகாவில் வேலைதொடங்கினால், தன் குருவை இச்சங்கத்து கௌரவ மிஷனரியாக அனுப்ப வாக்களித்தது. சால்வ் போதகரும் இங்கு வேலையாரம்பித்து, நெசவு தொழில் செய்யும் சிலருக்கு ஞானஸ்நானம் கொடுத்து, அவர்களை சுவிசேஷ வேலைக்குப் பழக்கியும் வந்தார். இவர் தன் வேலையைத் தொடர்ந்து செய்ய்முடியாததால், சிலகாலம் அங்கு வேலை நடவாமலே போயிற்று. இப்பொழுது ஒருவருஷமாக பாவா போதகர் சம்பளமின்றி இங்கு வேலைசெய்கிறார். நவம்பர் மாதத்தில் ஒரு கவர்ன்மென்ட் உத்தியோகஸ்தன் ஞானஸ்நானம் பெற்றான். தற்சமயம் ஒரு சுவிசேஷகனும், ஒரு வேதாகம ஸ்திரீயும், ஆமத்நகரிலிருந்து அனுப்பப்பட்ட புத்திகூர்மையுள்ள இருகுருடரும் இங்கு சுவிசேஷ வேலை செய்துவருகிறார்கள்.

மேலும், நம் தேசத்திலுள்ள பல லூத்தரன் சபைகளும் சேர்ந்து இச்சங்கத்தின் சம்பந்தமாய் வேலையாரம்பிக்கத் தீர்மானித்திருக்கின்றன. அவர்களுக்கு மத்திய மாகாணத்திலுள்ள சுதேச அரசாட்சிக்குட்பட்ட ரீவா என்னுமிடம் குறிக்கப்பட்டு, அவர்கள் அங்கு ஒரு மிஷனரி அனுப்ப ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அவர் தமிழ்நாட்டிலிருந்து ஜபல்பூருக்குச் சென்று அங்கு உபாத்தியாயராயிருந்து



ஹிந்துபாஷையும் ஒருவருஷம் கற்று முதல் பரீட்சையிலும் தேறியிருக்கிறார். சென்னை சர்வகலாசாலைப் பரீட்சை (B.A.) முடித்தும், அம்மிஷனரி, ஞானாபரணம் அவர்கள் ரீவாவில் வேலையாரம்பிப்பார்கள் என்று நம்புகிறோம்.

இந்த முதல் பத்து வருஷத்திலேயே ஆகவேண்டியிருந்த பெருந்த ஆயத்த வேலையோடு, பயனுள்ள சுவிசேஷ வேலையும் செய்யப்பட்டு வந்தது நமது நன்றியறிதலுக்குரிய விஷயமே. சுவிசேஷ மறிவிக்கப்படாத ஐந்து இடங்களில் வேலையாரம்பித்ததும், இன்னொரு இந்து ராஜாங்க நாட்டில் இவ்வருஷம் வேலையாரம்பிக்க ஆயத்தமாயிருப்பதும், சம்பளம் பெறாமல் இருவரும், உயர்ந்த படிப்புள்ளவர்கள் பதினைந்து பேரும், மற்ற பதின்மூன்று பேருமாக முப்பது ஊழியர் வேலைசெய்து வருவதும், 1,200 பேருக்குமேல் புதிதாய்க் கிறிஸ்தவ சபையில் சேர்ந்திருப்பதும், 7 பள்ளிக்கூடங்களும், 2 மருந்துசாலைகளும் நடத்தப்பட்டு வருவதும் தேவனுக்கு மகிமையான வேலை நம்நாட்டுக் கிறிஸ்தவர்களால் நடத்தப்பட்டு வருகிறதென்பதற்கு அத்தாட்சி. 1916-ம் வருஷச் செலவு 23,000 ரூபாய் என்று கணிக்கப்பட்டிருக்கிறது.

ஆகிலும் நாம் காரியத்தின் துவக்கத்தில்தான் இருக்கிறோம். இந்திய கிறிஸ்தவர்கள் இன்னமதிகமாகத் தங்கள் உத்தரவாதத்தை உணர்ந்து ஆண்டவர் காரியத்தில் பக்தி வைராக்கியமாகி, இதிலும் மேலான பெரிய காரியங்களை அவருடைய திருநாம மகிமைக்கென்று செய்ய ஆவியானவர் நம் கிறிஸ்தவர்களை நடத்துவார் என்பதற்குச் சந்தேகமில்லை.

இந்திய நண்பர்காள்! நம் இந்தியதேசம் கிறிஸ்தவ தேசமாக இந்தியக்கிறிஸ்தவர் யாவரும் ஒன்றுகூடவேதவசியம். நம் சுயதேசம் ரட்சிக்கப்பட நாம் நம்முடைய ஆண்டவரின் கொடியின்கீழ் கூடி அவருக்காக மேன்மையான காரியங்களைச் செய்ய எத்தனிப்போம். எல்லாக் கிறிஸ்தவர்களையும் இச்சுவிசேஷ வேலையிலிணைத்து, பயனுற உழைக்கக் கருதியிருக்கும் இந்த இந்திய சுயதேச மிஷனரி சங்கத்தைச் சகலவிதத்திலும் ஆதரிப்பது நமது கடமையும், நமது சிலாக்கியமுமாம்.

இச்சங்கத்தின் விஷயங்களை இச்சங்கத்தின் பத்திரிகைகளிலறியலாம். ஆங்கிலேய, தமிழ் பத்திரிகைகளை (சந்தா முறையே 8 அணா, 1 அணாவாக) 'தோட்டம்,' சேலம் என்னும் மேல்விலாசத்துக்கெழுதிப் பெறலாம்.

# The Letter to Philadelphia

**By the Rev. F. Goodwill**

## பிலதெல்பியா சபையின் தூதனுக்கு எழுதின நிருபம்

வெளி. 3⁷⁻¹⁸

பிலதெல்பியா என்னும் நாமங்கொண்ட இப்பட்டணமானது சகோதர சிநேகி என்பவனால் ஸ்தாபிக்கப்பட்டதினால், சகோதர சிநேகம் என்னும் அர்த்தங்கொள்ளும் பெயரைப் பெற்றது. கிரேக்கருடைய கல்வியும், செல்வாக்கும், நாகரீகமும் பெருகிக்கொண்டு வந்த கீழ்தேசத்திலேதான் இவ்வூர் இருந்தமையால் படிப்பும், நாகரீகமும் வளரும் ஸ்தலமாயிற்று. ஆகவே, இவ்வூரார் பலமும் திறமுமுடையவர்களானார்கள். மற்றப் பட்டணங்கள் கோட்டை கொத்தளங்கள் உள்ளவைகளாயிருந்தபடியால் சண்டைக்கு இடமானவைகளாயிருந்தன. இப்பட்டணத்திலோ அப்பேர்க்கொத்த கோட்டை, மதில்கள் முதலானவைகள் இல்லாமையால், இவ்வூருக்குக் கிடைத்த பெயருக்குத் தகுந்தபடி சிநேகம், கல்வி, வியாபாரம், நல் நடத்தை முதலியவைகள் வெகுவாய்த் துலங்கின. கிரேக்கருடைய கல்வி, நாகரீகம், இத்தியாதிகாரியங்கள் பரவி விஷயங்கள் அநுகூலமாயிருந்தபடியால் மிஷனரிவேலை செய்வதற்குத் தகுதியாயிருந்தது. இந்தப் பட்டணத்தில் இன்னார் இன்னின்ன காலத்தில் கிறிஸ்துசபையை நாட்டினார்கள் என்று சொல்வது கூடாமை. இதற்குமுன்னுள்ள இப்பட்டணத்தின் சரித்திரமும் ஒன்றுந்தெரியாது. ஆயினும் மனுஷருக்குள்ளே அன்பு ஸ்தாபகமாகும்படி, ஆண்டவர் சகோதர சிநேகம் என்னும் பெயருள்ள பிலதெல்பியா சபையின் தூதனுக்குப் பரிசுத்தமும் சத்தியமுமுள்ளவராய் தம்மை வெளிப்படுத்துகிறார். இந்த ஏழு சபைகளில் இந்தச் சபையை ஆண்டவர் அதிகமாய்ப் புகழுகிறார். ஒரு விஷயத்திலாகிலும் இதைக் கண்டிக்கிறதில்லை. ஆண்டவர் இதற்கு தரிசனமாகும்போது 'பரிசுத்தமுள்ளவரும் சத்தியமுள்ளவருமாக'க் காணப்படுகிறார். இவ்வூர் சபையாரும் இத்திவ்விய லட்சணங்களையுடையவர்களாயிருந்ததாகத் தோன்றுகிறது. இவர்களுக்கிருக்கவேண்டிய லட்சணங்களை எடுத்துக்காட்டுவதுமல்லாமல், இவர்களுக்கிருந்த லட்சணங்களையும் சுட்டிக்காட்டுகிறார். உதாரணமாக, நமது சக்கரவர்த்தியானவர் இந்தியாவுக்கு வந்து தமது குடிகளைச் சந்திக்கும்போது, அவர்களைக் கனப்படுத்தும்படியாக தொப்பிக்குப்பதிலாக தலைப்பா



கையை யணிந்துகொள்வார்; அப்படியே ஆண்டவரும் தமது தாசர்களால் நிறைந்த சபையைக் கனப்படுத்தும்படியாய், அவர்களுக்குப் பூஷணமாகவிருந்த பரிசுத்தம், சத்தியம் என்கிற குணங்களை எடுத்துக்காட்டி, அவர்களுக்குப் 'பரிசுத்தமுள்ளவரும் சத்தியமுள்ளவருமாக' விளங்குகிறார். இன்னும் அவரைக் கூர்ந்துபார்த்தால், கையில் தாவீதின் திறவுகோலை உடையவராகக் காணப்படுகிறார். திறவுகோலையுடைய இவர் தமக்கிஷ்டமானபடி ஓர் சபையில் சென்று அதற்கு எஜமானாக வீற்றிருப்பார். சர்வ அதிகாரமுமுடையவராக அதைச் சுதந்தரித்துக்கொள்ளுவார். அதுவுமல்லாமல், இச்சபைக்கு அதிகாரத்தையும் பலத்தையும் கொடுக்கிறவராக ஏழாம் வசனத்தில் காணப்படுகிறார்.

2. சபையின் சரித்திரம். எட்டாம் வசனத்தில் சபையின் சரித்திரத்தை வாசிக்கிறோம். இந்தச் சபையார் ஆண்டவருடைய வசனத்தைக் கைக்கொண்டார்கள் என்று பார்க்கிறோம். இவர்கள் அவருடைய நாமத்தை ஒருபோதும் மறுதலிக்கவுமில்லை; இவர்கள் இன்ன கஷ்டமடைந்தார்கள் என்று சொல்வதும் அசாத்தியம். ஆயினும், கஷ்டமில்லாமல் ஆண்டவருடைய வசனத்தைக் கைக்கொண்டார்கள் என்றும் நினைக்கப்படாது. பத்தாம் வசனத்திலே 'என் பொறுமையைக் குறித்துச் சொல்லிய வசனத்தை நீ காத்துக்கொண்டாய்' என்று ஆண்டவர் சொல்லியிருக்கிறதைப் பார்க்கிறோம். ஆண்டவருடைய ஜீவிய சரித்திரமுழுவதும், அவருடைய பாடுகளையும் அவருடைய பொறுமையையும் காட்டுகிறது. மனுஷர் அவரைப் பகைத்து, நிந்தித்து, புறக்கணித்துக் கொன்றாலும் அவைகளையெல்லாம் பொறுமையோடு சகித்தாரல்லவா? அவருடைய பொறுமையைப்பற்றிய வசனத்தை நாம் கேட்காவிட்டால், அவருடைய இரட்சிப்பின் வார்த்தையும் நமக்கு வந்திருக்கமாட்டாது. ஆண்டவர் பொறுமையோடே பிதாவின் வேலையைச்செய்து, மனிதரை மீட்டுக்கொண்டபிரகாரம், இந்தச் சபையாரும் உபத்திரவங்களைச் சகித்து, கஷ்டங்களைத் தாங்கி ஆண்டவருடைய அருமையான முன்மாதிரியைப் பின்பற்றினார்கள் என்று நாமறியவேண்டும். இன்னும் ஆண்டவர் இந்தச் சபையைப்பார்த்து 'உனக்குக் கொஞ்சம் பெலன் இருக்கிறது' என்று சொல்லுகிறார். இச்சபையார் ஆஸ்திபாஸ்தி, செல்வம் செல்வாக்கு, தொகை நகை முதலானவைகளில் பலத்தவர்களல்ல; கொஞ்சபெலன் மாத்திரம் அடைந்திருந்தார்கள். செல்வாக்கில் சிறத்திருந்தாலும், பரிசுத்தம், சத்தியம், மெய்பக்தி முதலான குணங்களில் பெருத்து வளர்ந்திருந்தார்கள்.

(௩) இந்தச் சபைக்குமுன்பாக ஆண்டவர் திறந்த வாசலை வைத்திருந்ததைக்குறித்தும் வாசிக்கிறோம். பவுல் தம்முடைய நிருபங்

த்தை எழுதும்போது இந்தப் பாஷைநடையை அடிக்கடி உபயோகிக்கிறார். கொரிந்து சபையாருக்கும் கொலோசெயர் சபையாருக்கும் நிருபங்களை எழுதும்போது சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி ஒரு திறந்த வாசல் வைக்கப்பட்டிருக்கிறது என்கிறார். திறந்த வாசல் என்கிற வார்த்தைக்கு விவரிப்பு அவசியமில்லை. இவ்வார்த்தையின் கருத்து யாவருக்கும் நன்றாய்த் தெரிந்திருந்தது. தற்காலத்தில் இந்தியாவில் சுவிசேஷ வேலையைச் செய்கிற கிறிஸ்துவின் தாசர் தங்கள் வேலையைக்குறித்து அறிக்கைகள் எழுதும்போது, சுவிசேஷத்தைக் கேட்டு மனந்திரும்பி, ஜனங்கள் குணப்பட்டு ஞானஸ்நானம் பெறுவார்களானால், கர்த்தர் இன்னின்ன ஊரிலே, நாட்டிலே சுவிசேஷத்துக்கு வாசலைத் திறந்திருக்கிறார் என்று சொல்லுகிறார்களல்லவா? இதே அர்த்தமேயொழிய இதற்கு வேறு அர்த்தமில்லை என்று அறிந்துகொள்வோம். சில சமயங்களில் தேவனுடைய கிருபையால் பவுலுக்கு சுவிசேஷத்தைக் கூறவும், அநேகரைக் குணப்படுத்தும் சிலாக்கியமும் சமயமும் கிடைத்தது. பிரயாணி நுழையாதபடி அடைபட்டிருக்கிற பெரிய வாசல் திடீரென்று திறக்கப்பட்டு, தடையின்றி உட்செல்லும் சிலாக்கியம் பெறுகிற அப்பிரயாணிக்குச் சந்தோஷம் எவ்வாறு உண்டாகுமோ அவ்வாறே சுவிசேஷம் பரவும்படி சமயம் வாய்க்கும்போது கிறிஸ்தவ ஊழியருக்குண்டாகும் மகிழ்ச்சிக்கும் களிப்புக்கும் அளவில்லை. நிஜாம் இராஜ்யத்திலுள்ள தெலுங்கு ஜனங்கள் கும்பு கும்பாய்ச் சுவிசேஷத்தை அங்கிகரித்து கிறிஸ்தவர்களாகிறார்கள் என்கிற சுபசெய்தி கிறிஸ்தவ ஊழியராகிய நமக்கு எவ்வளவு சந்தோஷத்தையுண்டாக்குகிறது. கர்த்தர் தமது சுவிசேஷத்துக்கு தெலுங்கு தேசத்தில் திறந்த வாசலை வைத்திருக்கிறார். கனமும் துதியும் அவர் நாமத்துக்கு உண்டாவதாக.

(b) இந்தச் சபையானது அஞ்ஞானிகள் மத்தியில் ஸ்தாபிக்கப்பட்டிருந்தபடியால், சுவிசேஷம் தெரியாத இவர்களிடத்தில் பிரசங்கிக்கும்படியான சிலாக்கியம் பூரணமாய் இச்சபைக்குக் கிடைத்தது. பூர்வத்தில் இப்பட்டணத்திலிருந்து எல்லா திக்குக்கும் கிரேக்க நாகரீகம் பாய்ந்தோடினதுபோல, நாகரீகத்தைப்பார்க்கிலும் மிகவும் சிறந்த சுவிசேஷமானது கோத்திர புத்திரர்களுக்குள்ளே பாய்ந்தோடின. இந்த முந்தின சிலாக்கியம் இனிமேலும் இச்சபையாருக்கு இருக்கும் என்பதாய்ச் சொல்லுகிறார். இந்தச் சிலாக்கியத்தை உபயோகிக்காத ஜனங்களுக்கு இதைக் கொடுக்கமாட்டார். இன்னும் இந்த வாசல் அவர்களுக்குமுன் திறந்திருக்கிறதினால் இவர்கள் இதின் வழியாகவே சென்று ஆண்டவரைப்பற்றி கூறிக்கொண்டு வந்தார்கள். துவக்கத்தில் மற்றெல்லா சபைகளைப்பார்க்கிலும் இச்சபையை ஆண்டவர்



வெகுவாய்ப் புகழ்ந்தார் என்று சொன்னோம். ஏனென்றால் இந்தச் சபை மற்ற சபைகளிலும் அதிகமாய் மிஷனரி ஊழியஞ் செய்த சபையாக இருந்ததென்று அறியவேண்டும். இந்தச் சபை செய்தவேலைக்கும் இதின் நல்ல ஸ்திதிக்கும் நெருங்கிய சம்பந்தமிருந்தது. சத்தியத்தைக் கைக்கொள்வதினாலும், அதைப் பிரஸ்தாபிப்பதினாலும் பரிசுத்தத்தை அடைந்திருந்தார்கள். இக்காலத்தில் முக்கியமாய் எந்த இந்திய கிறிஸ்தவ சபை சுவிசேஷவேலை செய்கிறதோ அந்தச் சபை நல்ல ஸ்திதியில் நிலைநின்று, பரிசுத்தத்தை அடையும் என்று சொல்லலாம். ஆதலால் இந்திய கிறிஸ்து சபையே, உனக்கு அருளப்பட்ட சிலாக்கியத்தைக் கையாடி, உன் வேலையைச் செய்யும்படி ஆரம்பிப்பாயாக.

3. சபைக்குக் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தம். சிமிர்னா பட்டணத்து யூதர்கள் அப்பட்டணத்திலிருந்த சபையாரை எதிர்த்தது போலவே, இங்கேயிருந்த யூதரும் இச்சபைக்குச் சத்துருக்களாயிருந்தார்கள். சபைக்கிருந்த தடை பிசகான கொள்கையல்ல, அஞ்ஞானிகளுடைய பூஜையும் ஊர்கோலங்களுமல்ல, யூதர் என்னும் பெயரைத் தரித்திருந்தாலும், மெய்யான யூதருக்கிருக்கவேண்டிய ஆவியைப் பெறாதவர்களே பெரிய சத்துருக்களாயிருந்தார்கள். இவர்களே தங்களை யூதரென்று பொய்யாய் சொல்லுகிறவர்களாகிய சாத்தானுடைய கூட்டத்தார். இவர்கள் சபையின் லட்சணங்களைப் பார்த்து சபையாரின் பாதங்களுக்குமுன்பாக வந்து பணிந்து, தேவன் சபையின்மேல் வைத்திருக்கிற அன்பு இன்னதென்று அறிந்துகொள்வார்கள் என்று சொல்லுகிறார். சகோதர சிநேக பட்டணமே, நான் உன்னை நேசித்தேன் என்பதை உன் சத்துருக்கள் அறிந்துகொள்வார்கள். தேவனுடைய சிநேகிதர் என்கிற பெயர் உனக்கு உண்டாயிருக்கும் என்கிறார். கிறிஸ்தவ சபைகளுக்கும் எதிரிகளும் சத்துருக்களுமுண்டு. தேவ அன்பிலே நின்று அவர் கற்பனைகளைக் கைக்கொண்டு நடந்தால் தேவ சிநேகிதர் என்னும் நாமகரணம் இந்திய சபைகளுக்குச் சூட்டப்படும் என்று அறிந்துகொள்வோம். மேலும் உலகத்திலுள்ள எல்லாருக்கும் சோதனைகாலம் வரும். அந்தப் பயங்கரநாளிலே ஆண்டவரால் அச்சபை காக்கப்பட்டு ஸ்திரமாய் நிற்கும். இந்த பிலதெல்பியா பட்டணத்தாருக்கு இரண்டு தலைமுறையாக ஓர் பெரிய பயமிருந்தது. ஆண்டவர் பேசும் காலத்துக்கு எழுபது வருஷங்களுக்குமுன், பட்டணமுழுவதும் பூமி யதிர்ச்சியால் அழிந்து பாழாய்ப்போயிற்று. அதினிமித்தம் ஜனங்கள் வெகுகாலமாய்ப் பூமியதிர்ச்சிக்குப் பயந்து நடுங்கினார்கள். ஆதலால், ஒருவேளை இப்பட்டணத்தார் ஆண்டவர் பேசின இக்காலம்வரைக்கும் இராக்காலத்

தில் வீடுகளுக்குள் அல்ல, வெளியே போய்ப் பத்திரமாய்த் தூங்கியிருக்கலாம். இந்த கனதிகில் சபையைப் பிடித்திருந்தாலும் இவர்களுக்கு ஸ்திரமான சமாதானமுள்ள ஒரு குடியிருப்புக் கொடுக்கப்படும் என்று ஆண்டவர் வாக்குக் கொடுக்கிறார். 'ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனை என் தேவனுடைய ஆலயத்திலே தூணாக்குவேன், அதினின்று அவன் ஒருக்காலும் நீங்குவதில்லை' (வெளி. 3[12]). இவர்களைச்சுற்றிலும் சஞ்சலமும் அதிர்ச்சியும் அசைவுமிருந்தும் இவர்களுக்கு ஸ்திரமும், நிச்சயமும், பலமும் அருளப்படுகிறது. திருஷ்டாந்தமாக, அவிசுவாசியாகிய அஞ்ஞானி மரண நேரத்தில் நிச்சயமும் நம்பிக்கையுமில்லாமல், தடுமாறி தியங்கி பயங்கரமான முடிவையடைகிறபோதே, விசுவாசியாகிய கிறிஸ்தவன் கிறிஸ்துவில் பலப்பட்டு, விசுவாசத்தில் தேறி, நம்பிக்கையோடும் மனமகிழ்ச்சியோடும் சந்தோஷமுடிவை இவ்வுலகத்தில் பெற்று நித்தியானந்தத்தில் பிரவேசிக்கிறான்.

இதுநிற்க, இச்சபைக்கு நூதனமான பெயர் கொடுக்கப்படுமாம். 'என் புதிய நாமத்தை உன்மேல் எழுதுவேன்' என்கிறார். ரோம சக்கரவர்த்தியானவர் இப்பட்டணம் எழுபது வருஷங்களுக்குமுன் பூமியதிர்ச்சியால் விழுந்தழிந்தபோது; புதிதாகக் கட்டி அதற்குப் புதுப் பேர் கொடுத்தாராம். அப்படியே லக சக்கரவர்த்தியாகிய ஆண்டவர் இச்சபையார் பூவாசிகளாயிருந்தாலும் பரலோகத்தைச் சேர்ந்தவர்களாய்ப் பரலோக சக்கரவர்த்தியின் நாமத்தை யணிந்து நடப்பார்கள் என்று சொல்லுகிறார். கிறிஸ்தசபையே, பரமநாதனுடைய பெயர் உனக்கு வந்திருக்கிறது. அதை விசுவாசத்தினால் பெற்றாய். அதை முடிவுபரியந்தம் காப்பாற்றிக்கொள்ள ஜாக்கிரதையாயிருப்பாயா?

**4.** சபைக்குக் கொடுக்கப்பட்ட கட்டளை.—'ஒருவனும் உன் கிரீடத்தை எடுத்துக்கொள்ளாதபடிக்கு உனக்குள்ளதைப் பற்றிக்கொண்டிரு' (வெளி. 3[11]). இவர்களுக்குக் கொடுத்த கட்டளை பாரமானதல்ல, உன் கிரீடத்தைப் பற்றிக்கொண்டிரு என்கிறார். தன் கையில் இருப்பதை இழந்துவிடாதபடிக் காப்பாற்ற எச்சரிக்கையாயிருக்கவேண்டும். கையில் இல்லாததை அடைவது பிரயாசம். கையில் உள்ளதைப் பத்திரப்படுத்துவது சுலபம். கைக்கெட்டினதை வாய்க்கெட்டாதபடி போக்கடிக்கலாகாது. கைக்கெட்டினதைக் காப்பாற்ற வேண்டும். இந்த எச்சரிப்பான கட்டளை இச்சபைக்கு வந்தது. மற்றவர்கள் நம்முடைய கிரீடத்தைப் பெறாதபடிக்கு விழிப்பாயிருந்து அதைப் பற்றிக்கொண்டிருக்கவேண்டும். எப்படி பற்றிக்கொள்ளக்கூடும் என்றால் நமக்கருளப்பட்டிருக்கும் ஊழியத்தை தக்கபடி



செய்து வந்தால் அதின் பலனாகிய கிரீடம் நமக்குக் கிடைக்கும். இந்திய சபையே, நீயும் ஜீவமுடியும் திவ்விய ஆடையும் தேடும் பாக்கியத்தை இப்போதுதானே அடைந்துகொள்.

'இப்போது விழிப்போடு போராட்டம் செய்குவோம்
விண்ணில் மகிழ்ச்சியோடு பொற்கிரீடம் சூட்டுவோம்'

# Holiness

**By the Rev. A. Paramanandam**

## பரிசுத்தம்

(தொடர்ச்சி)

இரண்டாம் அதிகாரம்

தேவனுடைய பரிசுத்தம்

(3) கிறிஸ்துவானவர் தேவனுடைய குணலட்சணம் அன்பு என்றும், தேவனுடைய இராஜ்யத்தின் பிரமாணங்கள் அன்பு என்றும் போதித்தார். எந்தெந்த குணம் எந்தெந்தக்காரியம் அகங்காரத்தினால் உண்டானதோ அது பாவம் என்று தீர்மானித்தார். 'உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்புகூரவேண்டும். உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக' (மத். 22[37,39]) என்கிற இந்த இரண்டு கற்பனைகளில் பூர்வ நியாயப்பிரமாணத்தை அடக்கி, உபதேசித்தது மாத்திரமல்ல, தமது போதனையை இன்னும் சிரேஷ்டமாக்கி, 'நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்' (யோவா. 13[34]) என்கிற புதிதான கட்டளையைத் தமது சீஷருக்குக் கொடுத்தார். கிறிஸ்து தம்மிடத்தில் அன்புகூர்ந்தபிரகாரம் தமது சீஷர்களிடத்தில் அன்புகூரவில்லை. தம்மிடத்தில் அன்புகூராமலே அவர்களிடத்தில் அன்புகூர்ந்தார். அவருடைய போதனையினின்றும் சாதனையினின்றும் மனுஷர் ஒருவருக்கொருவர் அன்புகூரத்தக்க புது மாதிரி தோன்றிற்று; ஏனென்றால் இது தேவனுடைய சுயவெறுப்புள்ள அன்பே. கிறிஸ்துவானவருடைய குணத்தைத் தியானிப்பதினாலே அன்புதான் தேவனுடைய சுபாவ லட்சணம் என்று நிச்சயமாகத் தெரியவருகிறது. தேவனுடைய பரிசுத்தமான குணத்தில் அநேக இலட்சணங்கள் கூடியிருக்கின்றன.

அந்தக் குணத்துக்கு மூலசுபாவமோ அன்பு. நம்முடைய பரிசுத்தம் தேவனுடைய பரிசுத்தத்துக்குச் சமானமாயிருக்கவேண்டுமானால், அதுவுங்கூட அதே மூலத்திலிருந்தே உண்டாகவேண்டும். இக்காரணத்துக்காகப் பரிசுத்தம் என்கிற கொள்கையை விசாரணைசெய்து பரீட்சித்து விவரித்திருக்கிற சிலர் அதற்குப் பூரண அன்பு என்னும் பெயரைக் கொடுத்திருக்கிறார்கள். தேவனுடைய அன்பு இப்போர்க்கொத்தது என்று நாம் தீர்மானித்தாலும், அது இவ்வளவென்று நம்முடைய அறிவுக்கு இன்னும் எட்டவில்லை. நமது புத்திக்கெட்டாத கிறிஸ்துவின் அன்பை அறிந்துகொண்டு அதன் அகலம், நீளம், ஆழம், உயரம் இன்னதென்று உணர்ந்துகொள்வதற்குப் பரிசுத்தர் எல்லாருக்குள்ளும் பூரண வல்லமையுள்ளவராக வேண்டுமானால், நாம் அன்பிலே நிலைத்திருக்கவேண்டும் (எபே. 3[17-19]). கிறிஸ்துவானவருடைய அன்பு இவ்வளவு என்று சம்பூரணமாய் அறிந்துகொள்ளுகிறபோதுதான் நாம் பரிசுத்தத்தை அடைவதற்கு வேண்டிய பூரண அன்பு என்கிற பிரமாணம் நமக்குத் தெரியவரும்.

## மூன்றாம் அதிகாரம்

### தேவமனுஷருடைய பரிசுத்தத்தின் சம்பந்தம்

தேவனுடைய பரிசுத்தமானது அன்புக்கு மூலமான அவருடைய நிஜகுணமாயிருக்குமாகில், மனுஷரிடத்தில் இருக்கத்தக்க பரிசுத்தம் கிறிஸ்தவ பக்தர்கள் சாதாரணமாய் நினைக்கிற மாதிரியைப் பார்க்கிலும் அதிக சிரேஷ்டமாயிருக்க வேண்டுமென்பது நிச்சயமாயிருக்கிறது. பரிசுத்தத்தைப்பற்றிய விஷயமாய் நாம் கொண்டிருக்கிற அல்பமான அபிப்பிராயங்கள் எல்லாவற்றையும் நமது மனதிலிருந்து தள்ளிவிடுவோமாக. தேவனுடைய கற்பனைகளை குற்றங்குறையின்றி தப்பில்லாமல் கைக்கொள்வது மாத்திரம் பரிசுத்தமல்ல; தேவனுடைய பரிசுத்தமானது நீதியின் கிரமத்தையனுசரிப்பதினாலுமாகிறதில்லை; மனுஷனுடைய பரிசுத்தம் தேவனுடைய பரிசுத்தத்துக்கு ஒப்பாயிருக்க வேண்டியதாயிருப்பதினால், நாம் நியாயப்பிரமாணமாகிய தர்மத்தை ஆசரிப்பதினாலேயே பரிசுத்தராவோம் என்று நினைப்பதும் தப்பு; பாவமில்லாதவர்களாய் நடப்பதும் பரிசுத்தமல்ல; தேவன் பரிசுத்தராயிருக்கிறார் என்கிற அபிப்பிராயம் அவர் பாவமில்லாதவராயிருக்கிறார் என்று சொல்வதில் அடக்கமாயில்லாத பிரகாரம் நாம் பாவமில்லாதவர்களாயிருப்பது நிஜமான பரிசுத்தமல்ல என்றும் அறிந்துகொள்ளவேண்டும். சிலர் தேவன் தங்களுக்குச் சொந்தமானவர் என்று ஒத்துக்கொண்டு, தங்களையும் தங்கள் சொத்துக்களையும், தங்களுக்குள்ள எல்லாவற்றையும் தேவனுடைய



சேவைக்கு ஒப்புக்கொடுத்துவிட்டால், தாங்கள் பரிசுத்தராகலாமென்றும் பாவிக்கிறார்கள். அதுவும் போதாது. தன்னையும் தனக்குரியவைகளையும் சமர்ப்பிப்பது வேறே; தேவனுக்குச் சமானமான சாயலாவது வேறே. இன்னுஞ் சிலர் நினைக்கிறதென்னவென்றால், இராஜன் ஒருவனுடைய சேவகர் எல்லாரும் அவர் தெரிந்து நியமித்த பற்பல நிறங்களுள்ள ஒரேவிதமான உடுப்பை உடுத்திக்கொள்ளுகிறபிரகாரம், தேவனுடைய ஊழியர் அவர் தம்முடைய மானம், சந்தோஷம் முதலானவைகளுக்காக சும்மா வகித்திருக்கிற ஒரு குணத்தை தரித்துக்கொள்ளவேண்டுமென்று தப்பாய் நினைத்துக்கொள்ளுகிறார்கள். பரிசுத்தமானது தேவஊழியர் இன்னார் என்று காட்டும் ஓர்குறிப்பல்ல. அது தேவனுடைய சாயலே. அப்படியானால் கிறிஸ்துவினுடைய நடத்தையின் மாதிரியை அனுசரித்து, தேவனுக்கு ஒப்பாகவேண்டும் என்று பிரயத்தனிப்பது பரிசுத்தமோ? மனுஷர் அந்த பரிசுத்தமாதிரியைத் தப்பில்லாமல் அனுசரித்ததினால், அவர்கள் தேவனுடைய குணத்துக்குச் சமானமான பரிசுத்தத்தை அடைந்திருந்தது நிஜமே. ஆனால், காட்டு மரமொன்று நேர்த்தியாய் மதுரமுள்ள கனிகளை விடுவது எப்படி அசாத்தியமோ, அப்படியே பாவத்தினால் கெட்டுப்போன மனுஷர் கிறிஸ்துவின் பரிசுத்த குணத்துக்குச் சமானமான குணத்தைக் காட்டுவது அசாத்தியம். மேற்கூறிய முறைகளில் எதினாலேயாகிலும் பரிசுத்தம் கிடைப்பதில்லை.

(இன்னும் வரும்)

# A Grace-filled Life
## The 'Retrospect' of Rev. Hudson Taylor

**Translated by the Rev. N. Devasagayam, B.A.**

## திருவருட்பிரகாச ஜீவியம்

ஹட்ஸன் டெய்லர் ஐயரின் 'பின்னோக்குச் சரித்திரம்'

(தொடர்ச்சி)

## பதினெட்டாம் அதிகாரம்

### ஒரு புது மிஷன் ஏற்படுவது அவசியம்

"'என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல; உங்கள் வழிகள் என் வழிகளும் அல்லவென்று கர்த்தர் சொல்லுகிறார். பூமியைப் பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ, அப்படியே உங்கள் வழிகளைப்பார்க்கிலும் என் வழிகளும், உங்கள் நினைவுகளைப்

பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந்திருக்கிறது' (ஏசா. 55. 8, 9). ஆண்டவர் ஒரு பெரிய நன்மையை யாவிலும் சிறந்த வழியாய் நமக்குக் கொண்டுவருகையில் பண்டைக்காலத்தில் யாக்கோபு சொன்னது போல் 'இதெல்லாம் எனக்கு விரோதமாய் நேரிடுகிறது' என்று நாம் சொல்லாவிட்டாலும் அது நம் அவிசுவாசமுள்ள உள்ளத்தின் உணர்வாயாயினும் இருக்கிறது. முன்னொரு காலத்தில் புசல் அலைத்த கடலை அமர்த்தி திகில் பிடித்திருந்த தம் சீஷரை அவர்கள் போகவேண்டிய குடாவுக்குச் சுறக்காய்ப் போகச்செய்ய ஆண்டவர் கடல்மேல் நடக்கையில் சீஷர் பயம் நிறைந்தவர்களானதுபோல் நாமும் பயம் நிறைந்தவர்களாகிறோம். இது சரியல்லவென்று இயற்கைப் புத்தியே நமக்குச் சொல்லும். ஏனெனில், தம் பாதையைப் பரிபூரணமாய் அறிந்தவர் வழி தவறுவாரா? நம் காரியங்களைச் சிதறாமல் பரிபூரணமாக்க அவர் வாக்கருளியிருக்கிறார். நம் சரித்திரத்தையும் அதின் சார்புகளையும் கண்ணோடிக் கருஷிக்கிறவர் நம் தலையின் மயிர்களையும் கணக்கு வைத்திருக்கிற கருணைவள்ளல். அப்பேர்ப்பட்டவர் நமக்கு நலமுண்டாக்குவது எது என்று அறிந்து அதைப் பரிபாலித்துத் தம் நாமத்திற்கு மகிமை வரப்பண்ணுவார் என்கிற உறுதிமனம் நமக்கிருக்கவேண்டும்.

'அவிசுவாசம் கண்ணிலி
கர்த்தர் மனங் காணாது;
தேவனே தம் வியாக்யானி
தம்மவர்க்குத் தாழாது.'

கர்த்தருடைய வேலையில் இதற்குமுன் எனக்குக் கிடைத்திராத சித்தி நிங்போ நகரில் கிடைத்த தறுவாயில் என் சுகம் குன்றவும் அங்கிருந்த சிறு தொகையான கிறிஸ்தவர்களை இன்னம் போதித்து ஸ்திரப்படுத்தமாட்டாமல் விட்டுப்பிரியவும் நேர்ந்ததை நினைத்து நினைத்து விசனப்பட்டுக்கொண்டே போனேன். இங்கிலாந்துக் கரையை யடைந்து வயித்தியர்களுடைய ஆலோசனையைக் கேட்டதில் அவர்கள் நீ இன்னம் பல வருஷங்கள் இங்கேயே தங்கியிருந்தால்மாத்திரம் சீனாவுக்குப் போக இயலும் என்று ஒரே பிடியாய்ச் சொன்னது என் மனவாதையை அதிகப்படுத்திவிட்டது. இப்படிச் சீனாவை நான் வெகு நீண்டகாலம் விட்டுப் பிரிந்திருப்பது சீனாவுக்கு அநுகூலமே என்பது அப்போது என் மனதில் படவில்லை. ஆண்டவர் மிகப் பரிபாலித்து ஆசீர்வதித்து வருகிற சீன உள்நாட்டு மிஷன் இந்தப் பிரிவு காலத்தில்தான் ஏற்பட்டது.

(இன்னும் வரும்)

C. L. S. PRESS, MADRAS—1916.

No. 120 மே 1916

# வேதியர் விளக்கு

## The Bible and War

**By the Rev. W. J. Tunbridge**

'WHAT then,' says Griffiths Thomas, 'was the substance of Christ's teaching, which has been so attractive to the world? Two ideas perhaps sum it up: the Kingdom of God and the Fatherhood of God.' This conclusion will be granted by all. The subject of His teaching was the Kingdom, and the basis of His teaching was the Fatherhood. 'The Kingdom of God' is a phrase that occurs more than one hundred times in the Gospels. His earliest words in Galilee as well as His latest if Judæa were concerning the Kingdom. The majority of His parables are an explanation of it, and some of His most important discourses have this as their theme. The Kingdom is spiritual in its basis. It does not consist of meat and drink but of righteousness, peace and joy in the Holy Ghost. The Kingdom is not made by man but established by God. Its members are the meek, the unrevengeful, the peaceable. The spirit of those within it is that of trust in His person and obedience to His commandments. The most perfect model is that of a little child, and only those of the child-like spirit find an entrance.

The Fatherhood of God as revealed by Christ is not one aspect of the Divine nature but is the fundamental conception out of which every attribute springs. Christ's life was bathed in the idea, and we in our turn are to trust, pray and love as children. The two greatest parables of Christ are undoubtedly the parable of the Prodigal Son, and that of the Good Samaritan. In the former He deals with the range of the Fatherhood; it reaches to the most sinful and bears with the

most self-righteous. In the latter he deals with the implications of Fatherhood: it involves brotherhood and a brotherhood of service that goes beyond geography, creed and race. Fatherhood in the one parable overcomes all sin; and neighbourliness in the other overcomes all prejudices. The parable of the Good Samaritan is simply the re-production of the Father's love in the life of His child--the love of the Father resulting in the forgiveness of all, and that of the child in a willing service for all the needy.

It is in the light of these two great truths that war must be judged, and I ask if its whole conception is not a violation of these great principles of Jesus? How can war that springs from the evil passions of men assist a Kingdom whose builder and maker is God? How can the spirit that strife produces be harmonized with the spirit that is demanded from members of the Kingdom? Can force which is the essential thing in war ever be the same as love which is the essence of the Kingdom? Killing men in battle can never be made to fit in with any idea of neighbourliness. Nations in arms are as far removed from the brotherhood of the race as darkness from light or falsehood from truth. In the light of the teaching of Christ war stands condemned. It does not hasten His Kingdom, it retards its progress. It does not express the true relationship of children, it violates that relationship. Judged by our Lord's teaching of the Kingdom, and measured by the Fatherhood, this dread curse must cease.

We are confident that all men must soon come to this conclusion because the history of the emancipation of the slave is so illustrative of the evolution of peace. Slavery was defended at one time just as war is defended now. 'If slavery is wrong,' said its advocates, 'why did the apostles tell them to be conscientious in their service? They ought to have told them to break their chains.' The case for slavery rested on exactly the same basis as the case for war, and as we overcame the one evil, so we must overcome the other. Clarkson and Wilberforce, Whittier and Lowell based the case for emancipation on the rights of man as established by the Fatherhood of God. Slavery and Brotherhood could not be reconciled. In the Kingdom of God it was impossible to have some as masters and some as slaves. They met the arguments of their opponents with the Bible in hand, and reasoning, not from texts but from the spirit of the book, won the assent of mankind and rejoiced in victory. We stand where they stood; we argue as they argued. The Kingdom has no place for strife. Fraternity is the opposite of fratricide. The tolerance and forbearance and love of Christ are all uprooted by militarism. We have learned to apply the great doctrine of Fatherhood in theology and it is revolutionizing everything. The Sovereignty of God, the Incarnation and Atonement of Christ have all been interpreted anew since we have rediscovered the glorious truth. Let us go on to apply it to Humanity and we shall find that 'national animosities, social divisions, religious hatreds and inhuman doctrines will disappear.'



It would be fitting for the chapter to close at this point. We have finished our task and have come to definite conclusions concerning the teaching of Scripture, but there is one difficulty which is peculiar to us at this time, and which every reader will be asking. Granted all this, how does it bear on the present war which the vast majority of Christians think we are justified in waging? Many take up the general position and say that all war is wrong, but that this war is right. Not a few books have been issued during the past year in which the writers have shown first that war is wrong and then that this war is right. I have felt, as many must have done, that such a position was too illogical altogether. You cannot lay down a great principle, such as that war is wrong, and then violate it at once by saying that a particular war is right. I have argued throughout this chapter that war is wrong, and I must carry my conclusion to the end and say that this war is wrong. It may be less wrong, it may be more wrong, but whether less or more, it is wrong. 'Then you wish our Empire had stood aside,' you say. 'You think that we should have taken no part in it.' I wish and think no such thing. It may appear exceedingly strange to say that this war is wrong and to say also that we should engage in it, because

that is like saying that it was our duty at the time to do wrong. Now that is exactly what, I want to say. I believe that in August 1914 our statesmen were face to face with alternatives, either of which was evil: Such a condition of affairs is most unusual; our choice is generally between the good and the bad; but sometimes we may be confronted with two evils and there is no escape. All we can do at such a time is to choose the lesser of the two. One evil that was before us was to fight. I call it by that name because I can call it by no other; when I think of all the suffering involved and all the wrong inflicted I can name it by no other name. The other evil was to be disloyal to friends, break our pledged word and sacrifice our national honour. This also I name an evil. To fight or not to fight—either was bad, but decidedly the lesser of the two was to fight. I am proud that in such a dark day we resolved to suffer rather than be treacherous and chose war as the lesser of the evils confronting us.

This must not be thought a verbal quibble. It is something to have clear thinking, yet it is much more than that. Such an attitude of mind will materially influence man's conduct. We are never able to rush blindly into strife. We must be persuaded of the justice of the cause and that all peaceable means of settling the dispute have been exhausted. Many of us for the first few days had doubts, and misgivings as we had during the whole of the Boer war, and they were not removed till we knew what Germany had said and done, and what on the other hand Sir Edward Grey had striven for so earnestly. This state of mind likewise settles our attitude during the war. We cannot glory in it; it will always be a regrettable necessity, but we must wage it to the end. We shall do this without regard to sacrifice, but we do it with grave faces, and sad hearts. Duty has bound us to her chariot wheel, not with pleasing garlands but with the unyielding yoke of necessity. This attitude of mind will also settle all our future. We believe that in August 1914 the conditions were such that we only had a choice of evils but we remember that the situation then was due to the work of men in the years that had passed. It does not matter upon whom



we place the blame: their fathers or our fathers or both, have erred. They ate the grapes and our teeth are set on edge, and we must resolve that no conduct of our own will ever place our children in a similar position. The work of our days must be to carve out a better destiny for those who shall follow. Because we have seen that the causes of war are often remote, we must begin now to make history so that we shall never again see the like of such a struggle as this.

## The Pastor and the Missionary Spirit

**By the Rev. W. H. Findlay, M.A.**

## கிறிஸ்தவப் போதகரும் புறமதஸ்தரைச் சேர்க்கும் வாஞ்சையும்

[பெங்களூர் ஐக்கிய வேதசாஸ்திரக் கல்லூரியிலே சனிவாரந்தோறும் போதக ஊழியத்துக்குரிய வேதசாஸ்திர வகுப்பொன்று நடந்தேறுகிறது. இந்த வகுப்பில் போதகனானவர் தமது சபையிற் செய்ய வேண்டியக் கடமைகளை யடுத்த பற்பல விஷயங்களைப்பற்றிச் சிந்தித்து தீர்க்கமாய் ஆராய்ந்துவருவது வழக்கம், இக்கலாசாலையை நடத்திவருகிற பண்டிதர்கள் மாத்திரமல்ல, சாஸ்திரிகளான வேறு பண்டிதர்களையும் இவ்வகுப்பிற் சேரும் மாணவருக்கு உபந்நியாசிக்கும்படியாய்க் கேட்டுக்கொள்வதுமுண்டு. சென்ற பிப்ரவரிமாதத்தில் கனம் பின்ட்லே ஐயரவர்கள் (Rev. W. H. Findlay, M.A.) இவ்வகுப்பை நடத்த ஒப்புக்கொண்டார்கள். குருவானவர் ஒவ்வொருவரும் புறமதஸ்தரைச் சபையில் சேர்க்கும் ஊக்கமுள்ள வாஞ்சையுடையவராயிருந்து, அந்த வாஞ்சையைத் தமது சபையாரிடத்திலும் உண்டாக்க வேண்டியது அத்தியந்தவசியமென்று அந்த மாணாக்கர்களுக்கு வற்புறுத்திப் போதித்தார்கள். கனம் ஐயரவர்கள் சில கேள்விகளை முன்னதாக ஆயத்தஞ் செய்து, மாணாக்கர் உபந்நியாசங் கேட்பதற்கு முன் ஏற்கனவே அவைகளைச் சிந்தனைசெய்யத்தக்கதாக அவர்களுக்குக் கொடுத்திருந்தார்கள். கிறிஸ்தவ சபைகளைக் கண்காணித்து வருகிற பல குருமாருக்கும், திரளான உபதேசிமாருக்கும் இக்கேள்விகள்

தியானத்துக்கும் ஊழியத்துக்கும் பிரயோஜனப்படுமென்பதாய் எண்ணி, அவைகளை இங்கு பிரசுரிக்கலானோம்,]

வகுப்புக்கு வருமுன் மாணாக்கர் சிந்தனை செய்வதற்காகவும், வகுப்பில் சேர்ந்தபின் அவர்கள் ஒன்றாய்ப் பேசித் தெளிவடைவதற்காகவும் ஆயத்தஞ்செய்திருந்த கேள்விகளாவன:—

முதலாவது: சிறிது காலமாத்திரம் போதகத்தொழில் செய்து வருகிற குருமார் மூவர் இந்தியசபைகள் நோக்கவேண்டிய மெய்யான இலக்கைக்குறித்துப் பின்வருமாறு சம்பாஷிக்கிறார்கள்.

தைரியப் போதகர்: சுயவாதரவு, சுயவாளுகை, சுயசுவிசேஷப் பிரபலியம் என்பவைகளே நான் நோக்குகிற முக்கிய இலக்குகளென்றார்.

ஞானதேசிகர்: நீங்கள் நோக்குகிற மூன்று இலக்குகள் சரியான ஒழுங்கோ எனச் சந்தேகிக்கிறேன் என்று வினவினார்.

ஜெயக்துநவானவர்: நீங்கள் தெரிவிக்கிற இந்த இலக்கில் மட்டுக்கு மிஞ்சின ‘சுயம்’ இருக்கிறதாக எனக்குக் காண்கிறதென்று சொன்னார்.

வாசிக்கும் நண்பனே, நீர் என்ன நினைக்கிறீர்.

இரண்டாவது: வாலிபனான குரு ஒருவர், ‘என் சபையார் எல்லாரும் பரிசுத்தவான்களாய் இருக்கவேண்டுமென்பதே என் விருப்பம்’ என்றார். இதைக் கேட்ட மற்றவர், ‘என் ஜனங்கள் விசுவாசத்தில் உறுதியானவர்களாயிருந்தால் தாவிளை’ என்க, மூன்றாந்தேசிகர், ‘என் சபைக்கிறிஸ்தவர்கள் சுற்றுமுற்றிலுமுள்ள ஜனங்கள் யாவருக்கும் ஆசீர்வாத முள்ளவர்களாயிருப்பதே என் கோரிக்கை’ என்றார்; இச்சம்பாஷணையைச் செவியுற்ற முதிர்பிராயமும் ஞானமுமுள்ள ஐயர், ‘சபை ஒன்று இந்த மூன்றையுமுடையதாயிருந்தாலொழிய ஒன்றையுமுடையதாயிராதே’ என மெதுவாய் உரைத்தார்.

நண்பனே, அவர் சொன்னது சரியா?

மூன்றாவது: குருவானவர் ஒருவர் தமது சிநேகிதனிடத்தில் ‘என் சபை புறமதஸ்தரைக் கர்த்தரண்டை சேர்க்கும்படி மேலான ஆசை கொண்டிருக்கிறது’ என்றார். அதற்கு அவர், ‘எவ்வாறு இதை யூகிக்கிறீர்’ என்று கேட்டார். மறுபடியும் குருவானவர், என்ன? அப்படிச் சொல்லுகிறீர்களே. ‘என் சபையார் கடந்த வருடம் மிஷனரி சங்கத்துக்காக ரூபாய் ஐந்நூறு சேகரித்துக் கொடுத்திருக்கிறார்கள்’ என்று சொன்னார். இதைக்கேட்ட நண்பன், ‘உமது சபை சுவிசேஷ பிரபலியத்தில் விசேஷவாஞ்சை யுள்ளதாயிருக்கிறதென்பதற்குப் பணஞ்சேர்த்துக் கொடுத்ததா ஆதாரம் என்று சொல்லுகிறீர்’ என்று வினவினார். அதற்குப் போதகர், ‘இன்னும்



என்னதான் அவர்கள் அதிகம் செய்வேண்டுமென்று விரும்புகிறீர் என்று கேட்டார்.

நண்பனே, அந்தச் சபையார் இன்னும் அதிகமாய்ச் செய்யும்படி விரும்புகிறதென்ன?

நான்காவது: சபையாரில் சிலர் ஒன்றாய்க்கூடி, கர்த்தருக்குச் சாட்சியிடுவதைக்குறிந்துப் பேசிக்கொண்டிருந்தார்கள். அப்போது இணக்கம் என்பவர் கிறிஸ்துவானவர் தமது சீஷர்களுக்கு ‘நீங்கள் எனக்குச் சாட்சிகளாயிருக்கவேண்டும்’ என்று கற்பித்திருக்கிறார். ஆதலால், நாம் யாவரும் அப்படியே சாட்சிகளாயிருக்கவேண்டுமென்று எனக்குத் தோன்றுகிறது என்று உரக்கச் சொன்னார். இதைக்கேட்ட விவேகி என்பவர் மாறுத்தரமாக, ‘சரிதான், இந்தக் கட்டளை ஆதிசீஷர்களுக்குத்தான் உரியது; அவர்கள்தான் தாங்கள் கண்டவைகளையும் கேட்டவைகளையுங் குறித்துச் சரிவர சாட்சியிடக்கூடும்’ என்று பேசினார். ஸ்தாபகன் என்பவர், ‘ஆமாம், நாம் சாட்சி கூறுவது கூடாதகாரியம்; தர்க்கஞ்செய்வதினாலே மாத்திரம் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க முடியும்; ஏனென்றால் சாட்சி கூறுவதற்கு கண்களினாலே கண்டு, நோக்கிப்பார்த்து, கைகளினாலே தொட்ட ஆதிக்கிறிஸ்தவர்கள் யாவரும் இப்பொழுது இல்லை, இருக்கிறவர்களில் திறமுள்ள சிலரைத் தெரிந்தெடுத்து, சமர்த்தான அவர்களைத் தர்க்கஞ்செய்யும்படியாகப் பழக்கி, அவர்களை குருக்களாகவும், சுவிசேஷகர்களாகவும் ஏற்படுத்துவோம், நாமே செய்வதைக்காட்டிலும் நமது பிரதிநிதிகளான இவர்களே இந்த வேலையைச் செய்வது உத்தமம்’ என்று தெரிவித்தார். உடனே சற்குணம் என்பவர் அதைத் தடுத்து ‘என்னையோ தர்க்கயானது கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்தவில்லை. ஆதிக்கிறிஸ்தவனும் சுவிசேஷத்தை எனக்குக் கூறவில்லை. தற்கால மிஷனெரி ஒருவர் கிறிஸ்துவைக்குறித்துச் சாட்சியிட்டார், அவர் கிறிஸ்துவைத் தாமே அறிந்தவராக நிச்சயத்தோடு பேசினார். அந்தச் சாட்சியே என்னை மேற்கொண்டு, கிறிஸ்துவண்டை சேர்த்தது’ என்றார். புதுசிருஷ்டி என்பவர் எழுந்து, ‘கிறிஸ்துவை நானே அறிந்திருக்கிறேன். அவர் இப்போது என்னைப்பார்த்து, நீ எனக்குச் சாட்சியாயிருக்கவேண்டுமென்று சொல்லுகிறதைத் தெளிவாய்க்கேட்கிறேன்’ என்று அறிவித்தார். அதற்கு விவேகி என்பவர் ‘ஐயா, நீர் யுக்திக்கும் அநுபவத்திற்கும் இணங்காத பக்தன்’ என்றார். அதைக்கேட்டு ஸ்தாபகன் என்பவர் ‘நீர்’ வேலையை வகுத்துச் செய்யுங் கிரமம் தெரியாதவர் என்று உரக்கச் சொன்னார்.

நண்பனே, இவர்கள் வெறுஞ் சபையார்தான், நீரோ வேதசாஸ்திரி, இவர்களைச் சரியான வழியில் நடத்தும்.

ஐந்தாவது : குருவானவர் 'நான் யோசிக்கவும் செய்யவுங்கூடியவைகள் எவைகளோ அவைகளெல்லாவற்றையும் என் சபைக்காகவே செய்வது என் கடமை. சுற்றிலும் அந்தகாரத்திலிருக்கிற புறமதஸ்தருக்குச் சுவிசேஷத்தைக் கூறியறிவிக்கும்படி வக்கங்கொண்டிருக்கிறேன். ஆனால் என் சபையைக் கொள்ளையிடுவதினால் மாத்திரம் நான் சுவிசேஷப் பிரசங்கவேலையைச் செய்யக்கூடும்' என்று பிரலாபித்தார். இவ்வார்த்தைகளைச் செவியுற்ற சிநேகிதன், 'ஐயா, நீர் அப்படிக் கொள்ளையிடாததினாலேயே உம்முடைய சபையைக் கொள்ளையிடுகிறீர்' என்றுரைத்தார்.

நண்பனே, சிநேகிதன் கொண்டகருத்து உமக்குப் புரிகிறதா?

# Holiness

**By the Rev. A. Paramanandam**

## பரிசுத்தம்

(தொடர்ச்சி)

### மூன்றும் அத்காரம்

தேவமனுஷருடைய பரிசுத்தத்தின் சம்பந்தம்

2. தேவனுடைய பரிசுத்த குணமும் அன்பும் சாரமான அவருடைய சுபாவத்தினால் உண்டாகிறது. இப்படியிருக்கிறதினால், ஒடிந்துபோன ஒரு கிளையானது மரத்தோடு ஒட்டப்பட்டு அதோடு ஒன்றாகிற பிரகாரம் நாம் பரிசுத்தராவதற்கு நம்முடைய சுபாவம் அவருடைய சுபாவத்தில் ஐக்கியமாகவேண்டியது அகத்தியமாயிருக்கிறது. தேவனுடைய சுபாவத்தின் சேர்க்கையாலும், அவர் தமது ஜீவனை நம்முடைய ஆத்துமாக்களுக்குச் சேர்த்துக் கொடுப்பதினாலும் நம்முடைய சுபாவம் நூதனமாகவேண்டும். இதெப்படி? மனுஷ சுபாவம் தெய்வ சுபாவத்துடனே ஐக்கியமாகலாமா? புளியமரத்துக் கிளையை மாமரத்தோடு ஒட்டினதை யாரும் என்றைக்கும் பார்த்ததில்லை. 'தேவன் மனுஷனைத் தம்முடைய சாயலாய்ச் சிருஷ்டித்தார்' என்பதில் மனுஷ சுபாவம் தேவ சுபாவத்தின் சேர்க்கையில் ஒன்றாகலாம் என்று சொல்வதற்கு ஆதாரமுண்டு. தேவசாயலின்படி சிருஷ்டிக்கப்பட்ட மனுஷன் தன்னைச் சிருஷ்டித்தவருடைய சாயலுக்குச் சரியாய்ப் புதுப்பிக்கப்படலாம் (கொலோ. $3^{10}$). தேவன் மனுஷருக்குப் பிதாவாயிருக்கிறார் என்கிற போதனையினால் இதே சங்கதியை அறிந்துகொள்ளலாம். தேவன் நம்முடைய பிதாவாயிருக்கிறார்



என்று சொல்லுவதில் அவர் நம்மிடத்தில் அன்புகூர்ந்து, நம்மைக் காப்பாற்றுகிறார் என்பதைமாத்திரம் அறிந்துகொள்வது போதாது. அவர் காகங்களையும் அடைக்கலான் குருவிகளையுங்கூட நேசித்துப் போஷிக்கிறார். ஆயினும் காகங்களுக்கும் அடைக்கலான் குருவிகளுக்கும் வேறே சிருஷ்டிகளுக்கும் தேவன் பிதாவாயிருக்கிறார் என்று சொல்வது தகுதியாயிராது. தேவன் மனுஷருக்குப் பிதாவாயிருக்கிறார் என்று யோசிக்கையில், அவருடைய சுபாவமும் அவர்களுடைய சுபாவமும் ஒன்றே என்று அறிந்துகொள்ளலாம். பரிசுத்த பிதாவினுடைய பிள்ளைகள் தாங்களும் பரிசுத்தராவதற்குச் சுதந்தராகிறார்கள். தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து எப்படி பிதாவுக்குச் சமானமானவராய் இருக்கிறாரோ, அப்படியே நாமுங்கூட தேவனுடைய மக்களாயிருந்து அவருக்குச் சமானமானவர்களாகலாம். தேவன் நம்மை தமது குமாரனின் சாயல் அதாவது தமது சொந்த சாயலுள்ளவர்களாகும்படி முதலில் நியமித்தார் (ரோம. $8^{29}$). கிறிஸ்து பிதாவின் குணத்தையுடையவராயிருந்ததினாலே அவருக்கு ஒப்பாயிருக்கவில்லை. தம்முடைய குணம் பிதாவின் குணத்துக்குச் சமானமாயிருப்பதற்கு தாம் தேவனோடுகூட ஐக்கியமாயிருப்பதே காரணம் என்று தம்முடைய சீஷருக்குப் போதித்தார். அவர் அவர்களுக்குத் தெரிவித்தது என்னவென்றால், 'என்னிடத்தில் வாசமாயிருக்கிற பிதாவானவரே இந்தக் கிரியைகளைச் செய்துவருகிறார்' (யோவா. $14^{10}$). இதேபிரகாரம் நாமுங்கூட தேவனோடு ஐக்கியமாகலாம். இந்த அதிசயமான விஷயத்தைக் கிறிஸ்து தம்மைப் பின்பற்றினவர்களுக்காகச் செய்த பிரார்த்தனையினால் நிச்சயித்துக்கொள்ளலாம். அதாவது, 'பிதாவே, அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும் ......நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன்' என்பதே (யோவா. $17^{21}$). தேவனிடத்தில் நாம் சேரத்தக்கதாயிருக்கிற இந்த சேர்க்கை சுபாவசம்பந்தமான ஐக்கியமாயிருக்கிறது. கேவல மனுஷசுபாவம் தேவனுடைய பரிபூரணமான அன்புள்ள சுபாவத்துடனே உறுதியாய்க் கூடியிருக்கவேண்டும். இப்படியிருக்குமாகில், அக்கினிஜுவாலை கறுப்பு அடுப்புக்கரியைத் தொட்டு அதை எரித்துத் தன்னைப்போலாக்கிக்கொள்ளுகிற பிரகாரம் தேவனுடைய அன்பின் சுபாவம் மனுஷசுபாவத்திலே வியாபித்து அதைத் தன்னுடைய சாயலாக்கிக்கொள்ளுகிறது. எப்படியானாலும் பரிசுத்தத்தில் தேவனுடைய பரிசுத்த குணத்துக்கு பகிரங்கமான சாயலில்லாமல், தேவனுடைய அன்பின் சுபாவத்தோடு அந்தரங்கமான ஐக்கியம் சேர்ந்திருக்கிறது. தன்னை மற்றவர்களுக்காகப் பிரயோஜனமாக்கிக்கொள்வது

அன்பின் முக்கிய சாராம்ஸம். தேவன் அன்புள்ளவராயிருப்பதினால் சமஸ்த சுகுண சம்பன்னரான அவர் தமது சுபாவத்தை மனுஷருடைய ஈனசுபாவத்தோடு சேர்த்துக் கொடுக்கவேண்டுமென்று எத்தனித்துக்கொண்டு வருகிறார். நம்முடைய சுபாவம் தேவனுடைய சுபாவத்தில் எவ்வளவுதூரம் ஏகமாய்க் கலந்துபோகிறதோ அவ்வளவுக்கு மாத்திரம் நாம் பரிசுத்தராகிறோம். பரிசுத்தம் ஒருவிதமான நடத்தையுமல்ல, ஒரு மார்க்கமுமல்ல; அது வளர்ந்துகொண்டுவருகிற ஜீவசக்தியே. பரிசுத்தத்தின் போதனையினுடைய சாராம்ஸம் திராட்சச்செடியைக்குறித்து கிறிஸ்து சொன்ன உவமையில் அடங்கியிருக்கிறது. 'நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும், நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்; என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது' (யோவா. $15^{5}$) என்று கிறிஸ்து தமது சீஷருக்குத் தெரிவித்து, அவர்கள் பரிசுத்தம் என்கிற கனிகளைக் கொடுப்பதற்கு தம்மிலே ஐக்கியமாயிருப்பது அத்தியந்த அவசியம் என்று போதித்தார். மரத்தினுடைய ஜீவன் கிளை தழைகளில் இருக்கிறபிரகாரம் தேவனுடைய ஜீவசக்தியும் மனுஷனுடைய ஆத்துமாவிலே சேரத்தக்கதாயிருக்கிறது. அந்த ஜீவனால் உண்டாகிய பலன் பரிசுத்தமே. மனுஷனுடைய பரிசுத்தத்துக்குத் தேவனுடைய சுபாவமே மூலம். 'கர்த்தரோடிசைந்திருக்கிறவனும், அவருடனே ஓரே ஆவியாயிருக்கிறான்' (1 கொரி. $6^{17}$). இப்போதனையை நன்கு விசாரிப்போமாகில், பரிசுத்தமானது தேவன் தமது ஓரே பேறான குமாரன் மூலமாய் மனுஷருக்குத் தயை பாலிக்கிற ஜீவதானமேயொழிய வேறொன்றுமில்லை என்று தெரியவருகிறது. தேவனால் பிறந்த ஒவ்வொரு மனிதனிடத்திலும் தேவனுடைய ஜீவன் நிலைகொண்டிருப்பதினால் அவன் பாவம் செய்யமாட்டான். இதுவுமன்றி, 'அவன் தேவனால் பிறந்தபடியினால் பாவஞ்செய்யமாட்டான்' (1 யோவா. $3^{9}$). பரிசுத்தம், நித்திய ஜீவன் இவை இரண்டும் ஒன்றே.

3. தேவனுடைய ஐக்கியமானது வைராக்கியத்தினாலேயே உண்டாகிறது. தேவன் தம்முடைய சுபாவ சக்தியை நமக்குச் சேர்த்துக் கொடுப்பதை எதிர்க்கிற துர்ச்சுபாவம் நம்மிடத்தில் உண்டு. தேவாவியானவர் நம்முடைய ஆத்துமாவில் சேர்ந்து நம்மை சிருஷ்டிகருடைய சாயலுக்கொப்பாய்ப் புதுப்பிக்கவேண்டுமென்று பிரயத்தனிக்கையில் நமது துர்ச்சுபாவம் அவருக்கு எதிர்த்து நிற்கிறது. 'மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும், ஆவி மாம்சத்துக்கு விரோதமாகவும் இச்சிக்கிறது' (கலா. $5^{17}$). இந்த விரோதம் இருக்கும்வரையில்



தேவாவியானவர் தமது பரிசுத்த வேலையை நமது ஆத்துமாக்களில் நிறைவேற்றமாட்டார். தேவாவியானவர் தன்னிடத்தில் வாசஞ்செய்வதினால் மனுஷாத்துமா பரிசுத்தமாகவேண்டுமானால், மாம்சசுபாவம் நாசமாகவேண்டும். 'கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள்' (கலா. $5^{24}$). நிர்மூலம் செய்யவேண்டிய மாம்ச இச்சை எது? ஆசை, இச்சைமாத்திரமல்ல; இவைகள் அந்த துர்ச்சுபாவத்தின் பலன்களாயிருக்கின்றன. மாம்ச இச்சை எப்பேர்க்கொத்தது? மேலே கூறியபிரகாரம் அது தேவாவியானவருக்கு அதாவது சுத்த அன்புக்கு விரோதமானதாகவிருக்கிறது. அன்பானது பிறர் நயமாயிருக்கிறபடியால், மாம்ச இச்சை சுயநயத்தை நாடுகிறதென்று தோன்றுகிறது. சுயநேயமிருக்குமேயானால், அன்பு நிலைக்கவே நிலைக்காது. தன்னை வெறுமையாக்கிக்கொள்ளுவதினாலேயும், அகங்காரத்தை அடக்கிக்கொள்ளுவதினாலேயுமே மாத்திரம் தேவனிடத்தில் ஐக்கியமுண்டாகிறது. பரிசுத்தம் என்கிற கிறிஸ்தவ போதனையை இந்த அபிப்பிராயத்தினால் அறியவேண்டுமாகில், அதற்கும் சாயுச்சியம் என்கிற ஹிந்து போதனைக்கும் அவ்வளவு வித்தியாசம் இல்லை என்று நமக்குத் தோன்றலாம். அந்தப் போதனையிலும் இந்தப் போதனையிலும் அகங்காரத்தை அடக்குகிறதும், தேவனில் ஐக்கியமாகிறதும் முக்கிய சங்கதிகளாயிருப்பது நிஜம். ஆனால் ஓரோர் போதனையில் இந்த வார்த்தைகளை வேறே வேறே அர்த்தமாக அறிந்துகொள்ளவேண்டும். வேதாந்தி ஒருவன் அகங்காரத்தை அடக்கவேண்டுமென்று சொல்லும்போது, நான் என்னும் அறிவைப் போக்கடிக்கவேண்டுமென்று பாவிக்கிறான். கிறிஸ்தவன் ஒருவனோ, அகங்காரத்தை விடவேண்டும் என்கிற இதே வார்த்தையைச் சொல்லி, தான் சுயநேயத்தைக் குறித்துச் சிந்தித்து, தன்னை விருத்திசெய்துகொள்வதை விட்டுவிடவேண்டுமென்று அறிந்துகொள்ளுவான். வேதாந்தி ஒருவன் தேவனில் ஏகமாயிருக்கிற விஷயத்தைத் தியானிக்கையில், தன்னிடத்திலுள்ள எல்லாவற்றையும் விட்டுவிட்டு சாரூப்பியத்தைப் பார்க்கிலும் மிக சிரேஷ்டமாயிருக்கிற சாயுச்சியம் என்னும் தேவனுடைய ஐக்கியத்தில் சேரவேண்டுமென்று காத்துக்கொண்டிருக்கிறான். கிறிஸ்தவன் ஒருவனோ தேவனோடுகூட ஏகமாகும் விஷயத்தைச் சிந்திக்கையில், தான் தேவனுடைய ஐக்கியத்தில் சேர்வதினால் சாயுச்சியத்தைப் பார்க்கிலும் மிக சிரேஷ்டமான தேவனுடைய பரிபூரண பரிசுத்தத்தின் சாரூப்பியத்தை அடையவேண்டுமென்று விரும்புவான். வேதாந்த போதனையாவது மனுஷன் கர்மம் என்கிற அபாரமான

கடனைத் தீர்க்கமுடியாமல், சம்ஸாரம் என்கிற சிறையில் விழுந்து, அந்தச் சிறையிலிருந்து தன்னை மீட்டுக்கொள்வதற்கு ஒரு கைதியானவன் அன்னபானம் வேண்டாம் என்று பசியினால் தன்னை மாய்த்து, சிறையினின்று தப்பித்துக்கொள்ளுகிற பிரகாரம் எல்லாவிதமான ஆசைகளையும் ஒழித்து, அகங்காரத்தையும் அதாவது தன்னையும் ஒறுத்துவிடுகிறது என்கிற ஒரே மார்க்கம் உண்டென்று போதிக்கிறது. மனுஷன் வைராக்கியத்தினால் அகங்காரத்தை அழிக்கக்கூடுமானால், அவன் ஆத்துமா ஆசாபாசத்தினின்று தப்பித்துக்கொண்டு, சம்ஸாரம் என்கிற சிறையினின்று விடுதலையடைந்து நிர்க்குணமான பரமாத்துமாவில் சேர்ந்துகொள்ளக்கூடும் என்பதே வேதாந்தத்தின் போதனை. கர்மத்தினின்று விடுதலையாகவேண்டும் என்பது பரிசுத்தம் என்கிற கிறிஸ்தவ போதனைக்கும் ஒத்திருக்கிறது. அந்தப் போதனை நமக்குத் தெரிவிப்பது என்னவென்றால், தேவன் கர்மம் என்கிற மனுஷனுடைய பாவக் கடனை தாமே தீர்த்து, அவனுடைய தரித்திர சுபாவத்தோடு தமது பரிசுத்த சுபாவத்தைச் சேர்த்து, தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்பட அதை விருத்தி செய்துகொண்டு வருகிறார் என்பதே (எபே. $3^{19}$). சாயுச்சிய போதனை சொல்வது என்னவென்றால், தன்னுடைய பிராண அகங்காரத்தை அடக்குகிறவன் கடைசியில் அதை நஷ்டஞ் செய்துகொள்ளுகிறான். கிறிஸ்துநாதர் சொல்வது என்னவென்றால், 'தன் ஜீவனைச் சிநேகிக்கிறவன் அதை இழந்துபோவான்; தன் ஜீவனை வெறுக்கிறவனோ அதை நித்திய ஜீவகாலமாய்க் காத்துக்கொள்ளுவான்' (யோவா. $12^{25}$). சாயுச்சியபோதனையின் இலக்கு என்னவென்றால், நான் ஜீவிக்கிறேன், ஆயினும் இன்னும் ஜீவிக்கிறவன் நானல்ல; நான் தேவனிலே ஜீவிக்கிறேன் என்பதே. கிறிஸ்துமார்க்க இலக்கு என்னவென்றால், இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார் (கலா. $2^{20}$). மனுஷனுடைய சுபாவம் தேவனோடு ஐக்கியப்படுவதினால் அவருடைய சாயலுக்கு ஒப்பாகி நூதனமாய்ப் புதிதாகவேண்டும் என்பது மிக இரகசியமான போதனை என்று சிலருக்குத் தோன்றலாம். அது நம்முடைய அனுபவத்துக்கு எட்டாததாயிருக்கலாம். ஆனால் கிறிஸ்துவின் உபதேசத்துக்கு அது மிஞ்சிப்போகாது. இப்போதனையின் மூலமும் பலனும் இயேசுகிறிஸ்து தமது மலைப்பிரசங்கத்தின் ஆரம்பத்தில் சொன்ன ஒரு வார்த்தையில் காணப்படுகிறது, 'பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறதுபோல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக்கடவீர்கள்' (மத். $5^{48}$) என்பதே. தேவன் நம்முடைய பிதாவாயிருக்கிறபடியால் அவர் எந்த அர்த்தத்தில் பரி



சுத்தராயிருக்கிறாரோ, அந்த அர்த்தத்திலே அவரால் பிறந்த நாம் பரிசுத்தராக இருக்கவேண்டும். இதுவே பரிசுத்தம் என்கிற போதனையின் சாராம்சம். தேவன் எவ்வளவு தூரம் பரிசுத்தராயிருக்கிறாரோ அவ்வளவு தூரம் நாமும் பரிசுத்தராகுமட்டும் நம்முடைய பரிசுத்தம் சம்பூரணமாகாது. இதுவே பரிசுத்தம் என்கிற போதனையின் பலனும் கனியுமாயிருக்கிறது.

(இன்னும் வரும்)

# Elder

## மூப்பன்

எபிரெயர்களுக்குள்ளே பூர்வகாலத்தில் ஒவ்வொரு குடும்பத்திலும் அந்தந்தக் குடும்பத் தகப்பனே அதற்குத் தலைவனாயிருந்து அந்தக் குடும்பத்தைச்சேர்ந்த யாவரையும் சர்வ அதிகாரத்துடனே நடத்தி அவர்கள் செய்த குற்றங்களைக் கண்டித்து அவர்களுக்குள் உண்டான சண்டை சச்சரவுகளைத் தீர்த்துத் தன் குடும்பத்துக்கு ராஜாவாகவும் நியாயாதிபதியாகவும் இருப்பான்.

கானான் தேசத்திலுள்ள மற்ற ஜாதியாரும் தங்கள் தங்கள் ஊர் மூப்பர்களால் நடத்தப்பட்டதாகத் தோன்றுகிறது (எண். $22^{4}$. யோசு. $9^{11}$. எசே. $27^{9}$. சங். $105^{22}$). இஸ்ரவேலர் வனாந்தரத்தில் பிரயாணம் பண்ணும்பொழுது மூப்பர்கள் அவர்களை நடத்தினதுபோல அவர்கள் கானான் தேசத்துக்குள் பிரவேசித்தபிறகும் அவர்கள் குடியேறின சகல ஊர்களிலும் அம்மூப்பர்கள் அதிகாரம் செலுத்தினார்கள் என்பதற்குப் பல திருஷ்டாந்தங்கள் உண்டு. (நியா. $8^{14}$. ரூத் $4^{2}$. 1 சாமு. $4^{3}$; $8^{4}$; $11^{3}$; $15^{30}$. 2 சாமு. $3^{17}$; $5^{3}$; $17^{4}$. 1 இரா. $8^{1}$, $21^{8}$. 2 இரா. $10^{1}$.)

குடும்பத்தலைவர்கள் அவ்வூர்க் காரியங்கள் அனைத்தையும் நடத்துவார்கள். குடும்பத்தலைவர்கள் வழக்கமாய் வயதுசென்றவர்களானதினால் அவர்களுக்கு 'முதியோர்' என்றும் 'மூப்பர்கள்' என்றும் பெயர் வழங்கலாயிற்று. ஆசாரத்தைப்பற்றியும் நல்லொழுக்கத்தைப்பற்றியும் குடும்ப விஷயங்களைப்பற்றியும் அவர்கள் மேல்விசாரணையிட்டதற்குப் பல திருஷ்டாந்தங்கள் உண்டு. (யாத். $3^{16}$; $12^{21}$; $17^{5}$; $18^{12}$; $19^{7}$. எண். $11^{16}$. உபா $5^{23}$; $27^{1}$; $31^{28}$)

பிந்தின காலத்தில் அவர்களுக்குரிய நியாயவிசாரணைசெய்யுங் கடமையைப்பற்றி உபாகமத்தில் விபரமாய்ச் சொல்லியிருக்கிறது (உபா. $19^{12}$; $21^{2}$; $22^{15}$; $25^{7}$). இஸ்ரவேலர் தங்களுக்கு ராஜாவை ஏற்

படுத்திக்கொண்டபிறகு நியாயவிசாரணைசெய்யும் மேலான அதிகாரத்தை அந்த ராஜாக்களே வகித்துக்கொண்ட காலத்தில் ஊர் மூப்பருடைய அதிகாரம் படிப்படியாய்க் குறைவுபட்டிருக்கும் என்று நினைக்கவேண்டும் (1 சாமு. $8^{20}$. 2 சாமு. $15^{4}$. 1 இரா. $3^{9}$. 2 இரா. $15^{5}$. ஏசா. $11^{5}$. ஆமோ. $2^{3}$). ஆனால் ராஜாக்கள் மூப்பர்களின் அதிகாரத்தை முற்றிலும் அழிக்கவில்லை (1 இரா. $20^{7}$. 2 இரா. $10^{1}$). சிறையிருப்புக்காலத்தில் மூப்பர்கள் ஆசாரவிஷயங்களில் அதிகாரஞ் செலுத்தினார்கள். (எரே. $29^{1}$. எசே. $8^{1}$; $14^{1}$; $20^{1}$. எஸ்றா $5^{9}$; $6^{7}$) சிறையிருப்பிலிருந்து திரும்பிவந்த யூதர்களுக்குள்ளே மூப்பர்கள் ஆசார விஷயங்களில் மேலான அதிகாரத்தைத் திரும்பவும் பெற்றார்கள். (எஸ்றா $10^{8}$. சங். $107^{32}$. நீதி. $31^{23}$. யோவே. $1^{14}$; $2^{16}$.)

இதற்குப் பிந்திய காலங்களில் மகா ஆலோசனைச்சங்கம் இவ்விஷயங்களில் அதி சிரேஷ்டமான அதிகாரத்தைப் பெற்றது

## A Grace-filled Life

## The 'Retrospect' of Rev. Hudson Taylor

**Translated by the Rev. N. Devasagayam, B.A.**

## திருவருட்பிரகாச ஜீவியர்

ஹட்ஸன் டெய்லர் ஐயரின் 'பின்னோக்குச் சரித்திரம்'

(தொடர்ச்சி)

### பதினெட்டாம் அதிகாரம்

ஒரு புது மிஷன் ஏற்படுவது அவசியம்

நான் சீனாவில் உழைத்துக்கொண்டிருந்த ஸ்தானம் என் முழுக் கவனத்தையும் பலத்தையும் வேண்டுவதாயிருந்தது. அந்த ஸ்தானத்திலும் அதிக உட்பக்கத்திலிருந்த உள்நாடுகள் இன்னம் அதிகச் சீர்கேடுகள் நிறைந்தனவாதலால் அவற்றில் உழைப்பது இன்னம் மிக அவசியம். என் வேலைக்கே நேரமும் பெலனும் போதாதிருந்த நான் அவைகளைப்பற்றி அக்காலத்தில் நினைக்கவுமில்லை; நினைத்தாலும் அவைகளுக்குச் செய்வதொன்றும் என் வல்லமையுள் இருந்ததுமில்லை. ஆனால் சில வருஷங்களாய் இங்கிலாந்துக்கு வந்து தரித்திருந்த சமயத்தில் என் வீட்டுச் சுவரில் தொங்கின பெரிய சீனாப்படத்தில், நான் உழைத்த சிற்றிடம் மாத்திரமல்ல, விஸ்தாரமான உள்நாடுகளும் என் கண்ணில் பட்டுக்கொண்டே



யிருந்தன. அதினால் என் உள்ளத்தில் அந்தச் சிற்றிடத்தை மாத்திரமல்ல, இந்தப் பென்னம்பெரிய உள்ளிடத்தையும் சுமந்து, அந்தச் சுமைப்பாரம் நசுக்கின இருதயத்தை ஆண்டவருக்கு முன்பாக தினம் ஜெபத்தில் வைத்து ஆறுதலை யடைந்தேன்.

சீனாவுக்குப் போகாமல் நீண்டகாலம் இங்கிலாந்திலேயே இருக்கவேண்டும் என்பது நிலைவரப்பட்டவுடன், இந்தக் காலத்தைச் சீனாவுக்கு அநுகூலமாய்ச் செலவிடுவதெப்படி என்று விசாரிக்கலானேன். அப்போது சர்ச்சுமிஷன் சொசைட்டியைச் சேர்ந்த கோவ்வு (Gough) போதகருடன் நிங்போ திசைச்சொல் பாஷையில் திருப்பியிருந்த புதிய ஏற்பாட்டை மறுபடியும் ஆராய்ந்து வழுக்களைகிற வேலையகப்பட்டது. இந்த வேலை பல வருஷங்களாய் நடைபெற்றது. அந்த வேலை யாருக்காகச் செய்யப்பட்டதென்றால், பிரிட்டிஷ்காரருக்காகவும் அந்நியருக்காகவும் ஏற்பட்டிருந்த வேதாகமச் சங்கத்துக்காக. அந்த வேலை நடந்துகொண்டிருக்கையில் அந்தப் புத்தகமும் அதின் ஒத்தவாக்கியக் குறிப்புகளும் சுதேச கிறிஸ்தவர்களுக்குப் பிரயோசனப்படுமே என்கிற எண்ணமேதவிர வேறு எண்ணம் என் மனதிலிருந்ததில்லை. இப்போது அதை திரும்பிப் பார்க்கையில், அந்த காலத்தில் நான் இந்த வேலை வாயிலாய் திருவசனத்தை உண்டு செழிப்படைந்திராவிட்டால் சீனா உள்நாட்டு மிஷன் போன்ற பென்னம்பெரிய வேலையை ஏற்படுத்த எனக்குத் திராணி இருந்திராது என்கிற நிச்சயம் எனக்கு அடிக்கடி வருகிறது.

திருவசனத்தை நான் படித்ததில் நான் அறிந்தது இது. சித்தியுடன் உழைக்கிற ஆட்கள் வேண்டுமானால் அதற்கு நாம் கஷ்டப்பட்டுப்போய் நீ வருவாயா, நீ வருவாயா, என்று ஒருவரையும் வருந்த வேண்டியதில்லை. முதலாவது, வேலையாட்களை யனுப்பும் ஆண்டவரே என்று ஊக்கமாய் ஜெபிப்பதும், இரண்டாவது சபையில் ஞான ஜீவனை ஆழமாக்குதலுமே போதும். இப்படிச் செய்வதால் ஜீவ தூதுக்குப் புறப்படாமல் சொந்த தேசத்திலேயே இருப்பது அநேகருக்கு வாதையாயிருக்கும். வழிகளையும் வகைகளையும் தேடிக்கொண்டு பிறகு வேலை யாரம்பிப்பது அப்போஸ்தலருடைய வாடிக்கையல்ல. 'முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்போது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்' என்றவருடைய வாக்கையே தவறுமொழியாகப் பற்றிக்கொண்டு வேலைக்குப்போய் அதை உடனே செய்வதே அவர்களுடைய வாடிக்கையென்று கண்டேன்.

இடையிட்ட காலத்தில் சேக்கியாங்கில் வேலை செய்வதற்கு ஆட்கள் வேண்டுமென்று ஜெபித்த ஜெபம் பலிக்க ஆரம்பித்தது. முதல்

ஆள் மெடோஸ் (Mr. Meaddos) என்பவர் அவர் தம் இளமையான மனைவியுடன் 1862-ம் வருஷம் ஜனவரி மாதம் சீனாவுக்குப் புறப்பட்டார். அவருடைய பிரயாணச் செலவைப் பொறுத்தவர் எங்கள் அன்பராகிய பெர்ஜெர் (Mr. Berger) துரை. இரண்டாவது 1864-ல் புறப்பட்டவள் ஒரு மாது. அவளுடைய செலவைப் புறதேச சுவிசேஷ அபிவிர்த்தி சங்கம் (Foreign Evangelization Society) பொறுத்தது. மூன்றும் நான்காம் ஆட்கள் 1865-ம் ஜூ ஜூலை மாதத்திலும், ஐந்தாம் ஆள் செப்டெம்பர் மாதத்திலும் நிங்போவுக்குப் போய்ச் சேர்ந்தார்கள். இவ்வாறு, ஐந்தாட்கள் வேண்டுமென்று கேட்ட ஜெபம் முற்றும் நிறைவேறிற்று. இது இன்னும் அதிகப் பெரிய காரியங்களைத் தேவனிடத்தில் கேட்டு வாங்கலாம் என்கிற தைரியத்தை எங்களுக்கு உண்டாக்கிற்று.

அநேக மாதங்களாய் ஜெபித்து, சில பலிக்காத முயற்சிகளைச் செய்தபின், சீன உள்நாட்டிற்கு ஒரு தனிமிஷன் ஏற்படாகவேண்டுமென்று நிலைவரப்பட்டது. காலஞ்சென்ற என் பிராணநேசரும், உடனுழைப்பாளருமான கொவ்வு போதகர் (Rev. F. F. Gough) இது விஷயமாய் இக்காலத்தில் தியானத்திலும் ஜெபத்திலும் என்னோடு நெருங்கி உதவினதுமல்லாமல், பெர்ஜென் சீமானும் சீமாட்டியும் திரவியமும் சமயத்துக்கான ஆலோசனையும் தருவதில் நிகரில்லாத சகாயம் செய்தார்கள். இந்தச் சீமாட்டி வீட்டில் என் பெண்சாதியும் நானும் அநேக நாட்கள் வாசம்பண்ணி ஜெபத்துடன் பல காரியங்களைப்பற்றித் தீரயோசித்தோம். என் மனையாளின் ஆலோசனைத்திறமும் தேவபக்தியும் எங்களுக்கு இக்காலத்தில் சொல்லரிய பிரயோசனமாயிருந்தது. ஒரு புது மிஷனை ஏற்படுத்தினால் அது இருக்கிற மிஷன்களோடு சிக்கி அவைகளுக்கு இடையூறுண்டாக்குமோ என்கிற ஒரு கவலைமாத்திரம் வந்தது. ஆயினும், சிறுபிள்ளைக்கொத்த நம்பிக்கையைத் தேவன்மேல் வைத்து ஆரம்பித்தால் அது இருக்கிற எந்தவேலையிலும் சிக்காமல் நடைபெறும் என்று தீர்மானித்தோம். நானே தேவனிடத்தில் போய் புது மிஷனுக்குத் தேவையான ஆட்களைக் கேட்டுவாங்கி அவர்களுடன் கூடப் போகவேண்டும் என்கிற பிரியம் அவருக்கு இருக்கிறதாக என் மனதில் மேலும் மேலும் அதிகத் தெளிவாய்ப் பட்டுக்கொண்டே வந்தது. ஐயோ, அதில் துணிந்து பிரவேசிக்க ஒட்டாமல் என் ஆவி சுவாசம் வெகுகாலம் தடுத்துப் போராடிக்கொண்டிருந்தது.

(இன்னும் வரும்.)

C. L. S. PRESS, MADRAS—1916

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
7 - JUN 1916
MADRAS.

No. 121 ஜூன் 1916

# வேதியர் விளக்கு

## The Word of God

MOST of the great religions of the world point to some book or books which those who profess those religions reverence, and which they accept as a standard and rule of faith. The Chinese have their classics, the Hindus their Vedas, the Muhammadans their Koran, the Buddhists their Tripitakas, the Zorastrians their Zend-avesta, and the Christians their Bible. All these books are claimed by those who believe in them to be sacred, and the Christian in particular makes the highest demand of them all when he speaks of his Book as the Word of God, that is, the message spoken by God to men to reveal Himself and to provide a sufficient guide and rule of life to them here, while at the same time pointing out the way to the attainment of eternal life hereafter.

It is quite possible that in trying to answer some of the questions which naturally come to men's minds when such a stupendous claim is made, or in endeavouring to refute the arguments of some Hindu to whom our Bible is not the sacred book it is to us, a shadow of doubt has crept into our minds as to the possibility of substantiating so great a statement, and of proving that the book we so much love is of a truth divine. We know that its authority and even its truth have been assailed, and sometimes by men calling themselves Christians. Vague rumours of the destructive work of critics have filtered down to even the village worker far removed from the influence of modern books, and have had their result in half formulated questions and fears, and perhaps there are some who hardly know where they stand in the matter,

It may be well to state at the outset, therefore, that there is no book in all the world that has received so much criticism and so careful scrutiny as the Bible: no book that has been so fiercely attacked in so many ways, nor one that has been so thoroughly sifted. The process of search and criticism still goes on, and will go on always, but the main result of all the research and all the sifting is this, that the Bible still remains acknowledged by all those who have so searched it as the most wonderful book that has been produced in the history of the world. Critics have shewn a defect here or a contradiction there: there are many things in it that cannot be explained and some that it is difficult to defend: but when all has been said that can be said and all has been done that critics, hostile or friendly, can do, the main fabric of the book remains still unshaken by the attacks made upon it, shining the more brightly and standing the more firmly as the ages roll on. Indeed, many of the fiercest attacks made upon it have but served to shew more completely its worth and to establish more firmly its claim to be considered the Word of God. It is still, as Mr. Gladstone called it years ago, 'The Impregnable Rock'. Scientific research and discovery, which years ago were thought to be undermining its very foundations have proved to be, on closer investigation and fuller knowledge buttresses to strengthen its structure. Every newly unburied city of the ancient world has some contribution to make towards the verification of its history and the explanation of some of its more obscure passages, and we can rest assured that the words of the prophet are true and that 'the word of our God shall stand for ever.'

There are some features of the book that are so wonderful, though so obvious, that they are well worth remembering when we are in any doubt as to its special character. Look, for instance, at

**Its Unity**. That is one of the first things that strikes a thoughtful student. Here are no less than sixty-eight books comprised in one, written by something like forty different writers in different lands and ages, with differing temperaments and surroundings, writing under widely differing circumstances during a period stretching over 1,500 years, each writing



primarily for the men of his own time: the circumstances of the case preclude the slightest possibility of a designed connexion between the books, for none of the men as they wrote or spoke wrote consciously for the inclusion of their writings in any special set of works: they wrote and spoke 'as moved by the Holy Ghost.' And yet when all these widely differing books are gathered into one there is no feeling as we read that we are but reading a series of 'selections.' There is a unity of purpose in the whole and a oneness of aim that is truly wonderful. They are like the various parts of some beautiful mosaic work, fitting harmoniously one into another, so that to take away any part would mar the whole: or like some delicate and intricate machinery the loss of one small part of which throws the whole out of gear.

Between the Old and the New Testament there is a gap of 450 years: they are written in two different languages: humanly speaking there is only the remotest connexion: the New Testament was in no way designed to fulfil the Old, or to fit into its prophecies: it is a simple record of History, and a collection of letters written by the leaders of a society to its members. And yet who is there who can deny that in a very real sense the New Testament is the fulfilment of the Old, and that but for it, the Old would be but a multilated fragment, of great interest and abiding beauty, but like a statue with the chiefest part gone? Without design on the part of the writers here we have the same broad principles and conceptions of God, of man, of sin, of the need of a Saviour, of the way of righteousness: in the midst of the diversity there is a marvellous unity and harmony—a oneness that we feel can only be explained by supernatural agency.

Or again look at its indestructible

**Freshness.** There are some books that can be read with pleasure and profit a dozen time, but their number is very limited indeed. A book written in the days of Queen Victoria is out of fashion to-day, and its very style seems quaint and old-worldly. But this one, written two thousand years ago is still fresh and changeless: it is the one book of which men never tire. Our great-grandfathers read it, and our great-grandchildren will read it with the same

eager interest. It is always new: 'age cannot wither it nor custom stale its infinite variety'. There are thousands of the works of great philosophers that have been long since forgotten: the eloquence of Greece and Rome has for the most part been relegated to the Libraries of Museums, but this is perennial, a fathomless treasure, an inexhaustible spring. It is simple enough for a child, and yet deep enough for the keenest intellect to lose itself in its depths. We read it a hundred times, and on the hundred and first reading find something new that we have never seen before. The truth flashes from it as from the facets of a diamond in a never ceasing blaze of ever changing colour.

And by whom was this marvellous book written? By the learned and the noble, by orators and poets, by philosophers and thinkers? Isaiah may possibly have been of royal blood, and Jeremiah was a priest. But for the rest, who were they? Moses was the son of a slave. Amos was a herdsman, Peter was a fisherman, Matthew a tax-collector, Paul a tent-maker. By far the greater part of them were poor and unknown, men unaccustomed to write. No other works by them are extant, nor do we even know that any of them wrote anything else. Some of the writers are altogether unknown: they have written a few verses and are immortal but their very names are not preserved. Is it possible that such men as these could have written such a wonderful book as this had they not been under the direct inspiration of God Himself?

But above all, that which chiefly marks this Book out as the most marvellous of the world is

**Its Influence**. There is no other book that has ever been written that has accomplished one tithe of what this has done. Many books have been startling and far-reaching in their influence, but this revolutionizes the world, remodels and regenerates society. It affects high and low, rich and poor, learned and ignorant alike. There are none outside its influence, and that influence is irresistible. Men and women sunk in degradation and sin have read it, and their lives have been transformed. Nations have accepted it as their standard of life and conduct, and have been utterly changed. In sorrow men turn to it for comfort and never turn in vain: in



difficulty and perplexity they find here their guide, in temptation their strength, and at all times solace, warning and direction. It is living and powerful to arrest the careless and to convict the sinful: it is a lamp to guide the wandering feet into the way of life: it is a sword with which to conquer in the conflict with evil: it is a shield and buckler to ward off the assaults of the world and the flesh: it is the one place wherein we can find perfectly pourtrayed the perfect life, and obtain all that we need for this life and the next.

Were there nothing else to prove its divine source, surely its effects on the life and conscience of tens of thousands of men and women of every nation and clime would be sufficient proof. For it loses none of its charm by translation: written for the men of an alien land it is common to the whole human race for it reveals the secrets of the human heart which neither race nor colour can alter, and it reveals too the heart of the Eternal Father in Whom alone the world can find rest and peace. And so without any shadow of hesitation or doubt we may repeat and vindicate its claim to be in very deed and truth, the Word of God.

## Mene, Mene, Tekel, Upharsin

### மெனே, மெனே, தெக்கேல், உப்பார்சின்

இப்பதங்கள், பெல்ஷாத்சாரின் அரமனைச் சுவற்றிலே அற்புதமான விதமாய் எழுதப்பட்டன. தானி 5[25]. தானியேல் இவைகளை வாசித்து இவைகளின் அர்த்தத்தை வெளிப்படுத்தினான். 28-ம் வசனத்தில் 'உப்பார்சின்' என்பதற்குப் பதிலாக 'பெரேஸ்' என்று சொல்லப்பட்டிருந்தாலும், இவ்விரு பதங்களும் ஒரே கருத்துள்ளவைதான். இப்பதங்கள் எல்லாம் நிறைகற்களின் பெயராம்.

'மெனே' என்பது எபிரேயர்கள் வழங்கின மனே (*Maneh*) என்கிற இராத்தல்.

'தெக்கேல்' என்பது எபிரெயர்கள் வழங்கின சேக்கல் (*Shekel*) என்கிற நிறை.

'உப்பார்சின்' அல்லது 'பெரேஸ்' என்பது அரை இராத்தலைக் குறிக்கும். ஆகவே இப்பதங்களின் அர்த்தத்தைப் பின்வரு

மாறு திட்டமாய்ச் சொல்லலாம்: 'இராத்தல், சேக்கல், அரை இராத்தல்' தானியேல் இதை வெளிப்படுத்தினபோது இப்பதங்களின் வழக்கமான அர்த்தத்தைச் சொல்லாமல் மூலஅர்த்தத்தைத் தெரிவித்தான். எப்படியெனில், 'மெனே' என்பதற்கு 'எண்ணுகிறது' என்பதும்; 'தெக்கேல்' என்பதற்கு 'நிறுக்கிறது' என்பதும்; 'உப்பார்சின்' என்பதற்கு 'பங்கிடப்படுகிறது' என்பதும் இப்பதங்களின் மூல அர்த்தங்களாம். ஆகவே 'மெனே' என்பதற்கு 'கடவுள் உன் ராஜ்யத்தை எண்ணி முடிவுண்டாக்கினார்' என்றும்; 'தெக்கேல்' என்பதற்கு 'நீ தராசிலே நிறுக்கப்பட்டுக் குறைவுள்ளவனாய்க் காணப்பட்டாய்' என்றும்; 'உப்பார்சின்' அல்லது 'பெரேஸ்' என்பதற்கு 'பாபிலோனியா ராஜ்யம் பிரிக்கப்பட்டுப் பங்கிடப்படும்' என்றும் பொருள்படும். மேலும் 'பெரேஸ்' என்பதற்கும் 'பாரசீகம்' என்பதற்கும் உச்சரிப்பில் ஒற்றுமையிருப்பதினால், தானியேல் சொன்னபடி அந்த ராஜ்யம் பாரசீகருக்குக் கொடுக்கப்பட்டது. இவ்விதமாக பெல்ஷாத்சார் செய்த அக்கிரமத்தை கடவுள் அறிந்து, அவனுடைய குறைவுகளைக் கண்டு, அவனுடைய ராஜ்யத்தைப் பாரசீகருக்குக் கொடுத்து, இப்படி அவனைத் தண்டிப்பார் என்று தானியேல் சொல்லுகிறான்.

# The Holy Spirit in the Church

**By the Rev. V. J. R. Asirvatham, B. A., L. M. & S.**

## பரிசுத்தாவியும் திருச்சபையும்

வாக்கியம். பரிசுத்தாவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலன் அடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள். அப். $1^{8}$.

பழைய ஏற்பாட்டுக்காலத்தில், கடவுள் தம்முடைய சித்தத்தையும், செயல்களையும், தமது ஆவியால் மனுஷர்களுக்குத் தெரியப்படுத்தினார். புதிய ஏற்பாட்டுக்காலத்தில், அவருடைய தற்சொரூபமும், திரு அவதாரமுமாகிய இயேசுகிறிஸ்து, தம்மை அவருடையப் பிள்ளைகட்குப் பரிசுத்தாவியின் மூலமாக வெளிப்படுத்துகிறார். யோவா. $15^{26}$. $16^{18}$ காண்க. மேற்குறித்த வாக்கியங்கள், பிதாவையும், அவருடையக் குமாரனையும் அறிவதற்குப் பரிசுத்த ஆவியானவரே சரியான ஆதாரமென்று ஸ்தாபிக்கின்றன. ஆகையால்தான் இயேசுகிறிஸ்துவானவரும், தம்முடைய சீஷர்கட்குப் பரிசுத்த ஆவியானவரின் முக்கியத்தை அடிக்கடி வற்புறுத்தினார். ஆனால் அவர்கள்



ஆவியானவரின் அவசியத்தைத் தெளிவாக அறியாதவர்களாயிருந்தார்கள். அது காரணம்பற்றிப் பரிசுத்தாவியானவர், இயேசு பரத்திற்கேறினவுடனே, அவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. அவர் வந்து அவர்களை ஆட்கொள்ளும் பரியந்தம் அவருக்காகக் காத்திருக்கும்படி இயேசு அவர்கட்குக் கட்டளையிட்டிருந்தார். அப். $1^{5}$. காண்க.

திருச்சபையின் வித்தாகிய பதினொரு சீஷர்களும், இயேசுகிறிஸ்துவைக் கண்டும், கேட்டும், அவரோடு உறவாடியிருந்தும் அவரைக் குறித்து சாட்சி பகர்வதற்கு கூடாதவர்களாயிருந்தார்கள். அவர்கட்குள் இயேசுகிறிஸ்துவின் வாக்குத்தத்தங்களைக் குறித்து, கொஞ்சம் சந்தேகமும் அவருடைய ராஜ்யத்தைக்குறித்து விகற்பமான அபிப்பிராயங்களும் இருந்தன. ஆகையால் பரிசுத்த ஆவியானவரைப் பெறுவதற்கு சிலநாட்களாய்க் காத்திருக்கவேண்டியதாயிருந்தது. அப்போஸ்தலர்கள் ஒருமனப்பட்டு ஜெபத்திலும் வேண்டுதலிலும் காத்திருந்தார்கள். அதைத்தவிர நாள்தோறும் தேவாலயத்திலே தேவனைப் புகழ்ந்து துதித்துக்கொண்டுமிருந்தார்கள். அதாவது, அன்பு, ஜெபம், ஸ்தோத்திரம் ஆகிய இம்மூன்று லக்ஷணங்களும், அவர்கள் ஜீவியத்தை விசேஷித்துக் காட்டின. இப்படி அவர்கள் தரித்திருக்கையில், பெந்தெகொஸ்தே நாளிலே அபரிமிதமாய் அவர்கள்மேல் ஆவியானவர் இறங்கினார். ஆகையால் பரிசுத்தாவியைப் பெறுவதற்குச் சபைகள் எவ்வளவாய் ஆயத்தப்படவேண்டுமென்று அவர்கள் ஜீவியம் காட்டுகிறது. சபைகளுக்குள்ளே பகையும், பெருமையும், ஜாதி வித்தியாசமும், இன்னும் இவைபோன்ற மற்ற வேற்றுமைகளும் இருக்கும்பரியந்தம் அவர் அவர்கள் மத்தியில், கிரியை செய்யமாட்டார். இயேசுவைக்குறித்த அறிவு அல்ல, அவரைப்பற்றிய உபதேசங்கள் மாத்திரமல்ல, அவருக்கேற்ற அன்பின் ஜீவியமே பரிசுத்தாவியைப் பெறுவதற்குத் தகுதியான நிலைமையாம்.

அது மாத்திரமல்ல சபைகள் பரிசுத்த ஆவியானவருடைய சகாயத்தைப் பெறுவதற்கு ஊக்கமாய் ஜெபிக்கிற உயிருள்ள சபைகளாயிருக்கவேண்டும். சீன தேசத்தில் சில பாகங்களிலும கொரிய நாட்டிலும் அநேகர் கிறிஸ்துவுக்குள் ஆதாயப்படுத்தப்பட்டிருக்கிறார்கள்.

காரணம் என்ன? அவர்கள் உண்மையோடும் ஊக்கத்தோடும் விசுவாசத்தோடும் ஜெபத்திலும் வேண்டுதலிலும் தரித்திருந்ததே அத்தேசங்களின் பெரிய மார்க்க சீர்திருத்தத்திற்கு மூலகாரணமாம். சீஷர்கள் பரிசுத்தாவியானவரைப் பெறுவதற்கு அநேக நாட்களாய் ஜெபத்திலும் வேண்டுதலிலும் தரித்திருக்கவேண்டியதாயிருந்தது.

மேலும் சபைகள் அவருடைய ஆவியானவரின் அருள் மழையைப் பெறவேண்டுமானால் அவர் செய்த சகல உபகாரங்களை நினைத்து நன்றியறிதலான துதி தோத்திரப் பலிகளை இடைவிடாது செலுத்த வேண்டும். கடவுள் இயேசுகிறிஸ்துவின் மூலமாய் உலகத்திற்கும், விசேஷமாய் தங்களுக்கும் அருளிச்செய்த ரட்சண்ய மகிமைக்காக நாள்தோறும் தேவாலயத்திற்குச் சென்று ஸ்தோத்திரம் செலுத்தி வந்தார்கள்.

அநேக சபைகளிலே பரிசுத்தாவியானவர் வல்லமையோடு கிறிஸ்துவின் ஊழியத்தை நடத்தாதிருப்பதற்கு அவைகளிற் காணப்படும் அன்புத்தாழ்ச்சியும் ஜெபக்குறைவும் நன்றிகேடுமே முக்கிய தடைகளாம். அப்போஸ்தலர்கள் தங்களுடைய ஆத்தும நாயகருடைய கட்டளைப்பிரகாரம் ஒருமனப்பட்டு ஜெபத்திலும் வேண்டுதலிலும், ஸ்தோத்திரத்திலும் தரித்திருந்தார்கள். இவ்விதமான ஆயத்த ஜீவியம் செய்துகொண்டிருக்கும்போது பெருவெள்ளத்தைப்போன்ற வல்லமையோடு பரிசுத்தாவியானவர் அவர்கள் மத்தியில் வந்து இறங்கினார். அது முதற்கொண்டு அவர்கள் புதுபெலன் அடைந்து பற்பல இடங்களில் அவருக்கு வல்லமையான சாட்சிகளானார்கள்

பரிசுத்தாவியைப் பெறுமுன் பயமும், திகிலும், சந்தேகமும், அவர்களைப் பிடித்திருந்தன. ஆனால் பெந்தெகொஸ்தே நாளிலே அவர்கள் ஜீவியத்திற்குள் புதிய ஜீவன் பிரவேசித்தது; அதுமுதற்கொண்டு அவர்களுடைய பழைய கோழைத்தனம் ஒழிந்துபோயிற்று. வானத்திலிருந்து வந்த வல்லமையைப் பெற்றவர்களாகிய இவர்கள் ராஜாக்களுக்கு முன்பாகவும், பிரபுக்களுக்கும் அதிகாரிகளுக்கும் முன்பாகவும் தங்கள் மார்க்கத்தைக்குறித்து உத்தரவு சொல்ல அதிக தைரியம் அடைந்தவர்களாயிருந்தார்கள். இவர்கள் உபதேசங்களும், இவர்கள் ஜீவியமும் அதிக வல்லமை பொருந்தினதாயிருந்தன. இந்த புதிய பெலன் அவர்கள் ஸ்தாபனம்செய்த சபைகளுக்குள்ளும் விளங்கினது. அதாவது பரிசுத்த ஆவியைப் பெற்ற சபைகள், தங்கள் ஜீவியத்தில் சகல அம்சத்திலும் வல்லமை நிறைந்தவைகளாய் நிற்கும்.

பரிசுத்தாவியானவரைப் பெறுமுன் அப்போஸ்தலர்களுடைய ஊழியத்தின் எல்லை எருசலேம்மட்டும் தான். ஆனால் அவர்கள் அவரைப் பெற்றபிற்பாடு எருசலேமும், யூதேயாவும்மாத்திரமல்ல, சமாரியாவும் பூமியின் கடைசிபரியந்தமும் அவர்கள் பிரசங்கிக்க வேண்டிய எல்லைகளாய் மாறின. இதுவரை யூதர்களையே குணப்படுத்தவேண்டும் என்று நினைத்தார்கள். ஆனால் ஆவியானவரோ அவர்களுடைய எல்லையைப் பெரிதாக்கிவிட்டார். யூதர்கள் மாத்திர



மல்ல, புறஜாதியாரும் தேவனுடையப் பிள்ளைகள் என்றும் அவர்களுக்காகவும் இயேசுகிறிஸ்துவானவர் மரித்தார் என்றும் ஆவியானவர் அவர்களுக்குத் திட்டமாய்ப் போதித்தார். இயேசுகிறிஸ்துவானவர் சகல ஜாதிகளையும் சீஷராக்கி ஞானஸ்தானத்தின் மூலமாய் அவர்களைத்திருச்சபையில் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று உபதேசித்திருந்தும் அந்த வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவதற்குப் பரிசுத்தாவியானவரின் நினைப்பூட்டுதல் அப்போஸ்தலருக்கு அவசியமாயிருந்தது. தற்காலத்திலும் பரிசுத்தாவியானவரைப் பெற்ற சபைகளின்மூலமாய் தான் சுவிசேஷபிரபல்ய வேலை புறதேசங்களிலே ஊக்கமாய் நிறைவேறிவருகின்றன. அவைகளைப் பெறாத சபைகள் சுயநயம் உள்ளவைகளாயிருக்கிறபடியால், காலக்கிரமத்திலே தங்களுடைய மேலான நிலைமையை இழந்துபோனதைச் சரித்திரங்களில் கண்டிருக்கிறோம் சின்ன ஆசியா, வட ஆப்பிரிக்கா சபைகளின் முடிவைக் காண்க, கடைசியாக பெந்தெகொஸ்தே நாளுக்குப் பிற்பாடுதான் அப்போஸ்தலர்கள் இயேசுகிறிஸ்து ஜெகத்ரட்சகரென்றும் தங்கள் சொந்த ரட்சகரென்றும் அவரைக்குறித்துச் சாட்சி கூறத் தொடங்கினார்கள். பரிசுத்த ஆவியானவரைப் பெறுவதற்கு முன்னே அவருடைய உபதேசத்தைக்குறித்தும் அவருடைய அற்புத சித்தியைக் குறித்தும் அதிசயித்தார்கள். பெற்றபின்போ இயேசுகிறிஸ்துவே அவர்களுடைய கண்ணும் கருத்தும் பிரசங்கமும் ஊழியமுமாயிருந்தார். சிலுவையில் அறையப்பட்டு உயிர்த்தெழுந்த இயேசுவையே அவர்கள் ஜனங்களுக்கு முன்பாக அறிக்கையிட்டார்கள்.

இப்படியாக அவர்கள் பரிசுத்தாவியைப் பெற்றபின்பு புதுப் பெலன் அடைந்து எருசலேமிலும், யூதேயாவிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும் இயேசுகிறிஸ்துவுக்குச் சாட்சிகளாயிருந்தார்கள். தற்காலத்து சபைகளும், இவ்விதமான பலத்த சாட்சிகளாயிருக்கும்பொருட்டு, கடவுள் பரிசுத்த ஆவியானவரின் சகாயத்தை அவைகளுக்கு அபரிமிதமாகத் தருவாராக.

## The Letter to Laodiceans

**By the Rev. F. Goodwill**

## லவோதிக்கேயா சபையின் தூதனுக்கு எழுதின நிருபம். வெளி. 3[14-22]

லவோதிக்கேயா பட்டணமானது பிலதெல்பியாவுக்கு நாற்பது மைலுக்கு அப்பால் ஓடின லைக்கஸ் (Lycus) என்னும் நதியோரத்

திலிருந்தது. இராஜ பாட்டைகள் ஒன்றாய்க் கூடின இடமானதால் இது வியாபாரத்துக்கேற்ற ஸ்தலமாயிற்று. இவ்வூர்க் கோட்டை மிகப் பலமாயிருந்தது; ஆயினும் அதற்குத் தண்ணீர் கொண்டுவரும் குழாய் ஆறுமைல் தூரம் நீளமானதினாலே அக்கோட்டையைப்பற்றிய பயமிருந்ததுண்டு; ஏனென்றால் சத்துருக்கள் வந்து அதை உடைத்துவிடுவார்களானால், தண்ணீர் ஊருக்குள் வராமல் நிறுத்திவிடப்படக் கூடும். அப்போது கோட்டையைப் பிடியாமலே உள்ளே இருக்கிற ஜனங்களை ஜெயித்துவிடலாம்.

போக்குவரவுக்குரிய சாதனங்கள் தகுதியாயிருந்தபடியால் வியாபாரம் மும்முரமாய் நடந்தது. இந்த ஊரின் சுற்றிலும் நீர்வளம் பொருந்திய இடமானதாலும், ஆற்றோட்டம் சமீபமானபடியாலும், அநேக பொருள்கள் உற்பத்தியாயின. விசேஷமாய் இப்பட்டணத்தார் கறுப்பு கம்பளிகளை உண்டுபண்ணுவது வழக்கம். சௌகாரிகள் அநேகர் இங்கே வாசம்பண்ணினார்கள்; ஆகவே ஆண்டவர் கடைசியில் நெருப்பிலே புடமிடப்பட்ட பொன்னையும் வெண்வஸ்திரத்தையும், கலிக்கத்தையுங் கொடுப்பார் என்கிற அபிப்பிராயம் இவ்வூராருக்கு ஏற்றதாயிருந்தது. இப்பட்டணத்துக் குடிகள் நாகரீகம், பயபக்தி முதலானவைகளில் தேறினவர்களாகக் காணப்படவில்லை. இவர்கள் அனலுமல்ல குளிருமல்ல; இவ்விரண்டுக்கும் மத்திய ஸ்திதியிலிருந்தார்கள். நாம் பார்த்த பட்டணங்களிலுள்ள குடிகளைப் பார்க்கிலும் இந்த ஊர் ஜனங்களுடைய மனதை அறிவது மிக அரிதாயிருக்கிறது. ஏனென்றால் இவர்கள் விசேஷ குளிராயும் விசேஷ அனலாயும் இருந்ததில்லை.

பிலதெல்பியா சபையார் சுவிசேஷ வேலைசெய்வதற்குச் சிலாக்கியம் பெற்றதுபோலவே இவர்களும் சிலாக்கியம் பெற்றார்கள். கிரேக்கர் நாகரீகம் பாஷை முதலானவைகள் விருத்திசெய்வதற்கு வழிசெய்திருந்தாலும், இவர்கள் அவைகளை அடைந்துகொள்ள முயற்சிக்கவில்லை. இப்பட்டணம் ஸ்தாபிக்கப்பட்டிருந்த ஸ்தலத்தைக் கவனித்தால், இவ்வூரார் கிரேக்கருடைய நாகரீகமும் பாஷையும் பக்தியும் தங்கள் மத்தியில் பரவச்செய்வதற்கு இவர்களுக்கு உதவியாயிருந்திருக்கவேண்டும். இவர்களோ வெதுவெதுப்பாயிருந்தபடியால், அவர்கள் தேசத்துமுந்தின நாகரீகம் பக்தி முதலானவைகள் கிரேக்கு நாகரீகம் பக்தி முதலானவைகளோடு தன்னில்தானே கலந்துபோக ஏதுவாயிற்று.

இந்தச் சபை பவுலுக்கு நன்றாய்த் தெரிந்திருந்ததாகத் தோன்றுகிறது. கொலோ. $1^{7}$-யும் கொலோ. $4^{12}$-யும் ஒப்பிட்டுப் பார்த்தால், இந்தச் சபை எப்பாப்பிராவினால் ஸ்தாபகமானதாக நிதானிக்கலாம்.



பவுல் அப்போஸ்தலன் இங்கே வேலை செய்தாரோ இல்லையோ அதைத் திட்டமாய்ச் சொல்வதரிது. ஆகிலும் இவர் இந்தச் சபையில் பற்றுதலாயிருந்து, தான் எழுதின கொலோசெயர் நிருபத்தை அப்பட்டணத்துக் கருகிலிருந்த இந்தச் சபையாரும் வாசிக்கும்படி விரும்புகிறார். கொலோ $4^{16}$.

சபையின் ஸ்திதி—பதினான்காம் வசனத்தில் நாம் வாசிக்கிறபடி இயேசு இவர்களுக்கு உண்மையும் சத்தியமுமுள்ள சாட்சியாய்த் தம்மை வெளிப்படுத்துகிறார். இதின் தாற்பரியம் என்னவென்றால் ஆண்டவர் இவர்களிடம் வந்து, உண்மையான உபதேசம் இவர்களுக்குத் தந்து சத்தியத்தைக் கூறப்போகிறார் என்பதே. இன்னும் ஆண்டவர் சிருஷ்டிக்கு ஆதியுமானவராய் இவர்களுக்குக் காணப்படுகிறார். இவர்கள் சஞ்சலம் தவறான புத்தியையுடையவர்களாயிருந்தாலும் ஆண்டவரோ ஒரே விதமாயிருந்து ஒரே விதமான போதனையை அளிக்கிறவராயிருக்கிறார். இந்தக் குணம் ஆமென் என்கிற பேரிலும் திரும்பச் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஆமென் என்னும் இந்தப்பெயர் ஏசாயா $65^{16}$-ல் தேவனுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறதாக வாசிக்கிறோம். தமிழ் மொழிபெயர்ப்பில் 'சத்திய தேவன்' என்று திருப்பியிருக்கிறது. அதை 'ஆமெனாகிய தேவன்' என்றும் திருப்பி வாசிக்கலாம். பழைய ஏற்பாட்டில் காணப்படுகிற சத்திய தேவன், புதிய ஏற்பாட்டில் ஆமெனாகிய இயேசுவிலே காணப்படுகிறார். இயேசுவானவர் இவ்வாறு தம்முடைய சத்தியத்தைச் சாதிக்கிறதினால் தமது போதனையின் விசேஷத்தை திடப்படுத்துகிறார். அவர் தமது ஜீவியகாலத்தில் பிரசங்கித்தபோது, திரும்பத்திரும்ப மெய்யாகவே, மெய்யாகவே என்று வற்புறுத்திச் சொன்னது போல, இங்கேயும் அதிகமதிகமாய்த் தமது போதனையின் உண்மையை ஸ்தாபிக்கிறார் என்று நாம் காணலாம்.

பதினைந்தாம் வசனத்தில் சொல்லியிருக்கிறபடி ஆண்டவர் இவர்களுடைய கிரியைகளை நன்றாய் அறிந்திருந்தார் என்று காண்கிறோம். இங்கிருந்த சபையை நிக்கொலாய் மதஸ்தரும் யூதரும் யாதொரு உபத்திரவப்படுத்தினதில்லை. ஆயினும் இச்சபையானது கிறிஸ்து மார்க்க விஷயத்தில் அனலும் குளிருமில்லாமல் பாராமுகமாயிருந்துவிட்டது. வெதுவெதுப்பு என்கிற வார்த்தை தண்ணீரின் சூட்டைக் காட்டுகிறது. இந்தப் பட்டணத்துக்கு ஆறுமைல் தூரத்தில் உஷ்ணமான சில நீரூற்றுகளிருந்தன. பூமியிலிருந்து சுரந்து வருகிற இத்தண்ணீர் துவக்கத்தில் சூடாயிருந்தாலும் ஆறுமைல் தூரம் நதிவழியாய் ஓடி இப்பட்டணத்துக்குள் சேரும்போது சூடு நீங்கி வெதுவெதுப்பாயிருக்கும். அப்படியே சபை ஸ்தாபகமானபோதும்,

அதின் ஜனங்கள் குணப்பட்டபோதுப் வெகு அனல்கொண்டிருந்தது. காலக்கிரமத்திலோ இச்சபையின் பயபக்தி குன்றிக்குன்றி குளிர்ந்து போயிற்று. இதற்குக் காரணமென்னவென்றால், சபையாரில் அநேகர் வியாபாரத்தில் அமர்ந்திருந்ததினால், இதர அஞ்ஞானிகளுடைய செல்வாக்கினாலும் சேர்க்கையினாலும் கிறிஸ்தியார்க்க விஷயத்தில் குளிர்ந்துபோனார்கள் என்பதே. அப்படியாக உவெஸ்லி பிரசங்கிகளில் ஒருவராகிய தோமாஸ் பெயின் (Thomas Payne) என்பவர் தமது சொந்த அனுபவத்தை அறிக்கையிட்டபோது, 'என் வியாபாரம் அதிகரிக்க அதிகரிக்க என் பயபக்தியும் குறைந்து குறைந்து போனது' என்று சொன்னார். ஒருவேளை அச்சபையிலுள்ள சிலர் தங்களைச் சூழ்ந்திருந்த அஞ்ஞானப் போதனைகளையும் சடங்குகளையும் எதிர்த்துத் தள்ளத்துணியாமல், அவர்களோடு இணங்கி சிநேகமாயிருந்து தப்பான வழியில் நழுவி நடக்கும்போதே தாங்கள் விவேகத்தோடும் பக்தியோடும் நடக்கிறதாக எண்ணியிருக்கலாம். இக்காலத்திலும் இந்தச் சபை ஜனங்களைப்போலவே, இத்தேசத்துக் கிறிஸ்தவர்களில் சிலர் அஞ்ஞானப் பழக்கங்களையும் அபிப்பிராயங்களையும் நடவடிக்கைகளையும் கைப்பற்றித் தப்பான மார்க்கங்களில் நடக்கிறவர்களாயிருக்கிறார்கள். இப்படி அவர்கள் நடக்கிறதினால் தங்கள் சொந்த மார்க்கத்தில் காட்டவேண்டிய பக்தி அவர்களிடத்தில் குறைந்திருக்கிறதென்று காண்பிக்கிறார்கள்.

பதினேழாம் வசனத்தைப் பார்க்கையில், இவர்கள் தங்கள் பக்தியைப்பற்றிக் கவலைப்படாமல் சமதிருப்தியாயிருந்ததாக நமக்குத் தோன்றுகிறது. குருடன் ஒருவன் தன் நிர்வாணத்தையும் அழுக்கையும் காணக்கூடாமலிருக்கிறதுபோல இவர்களும் தங்கள் அவபக்தியையும் அக்கிரமத்தையும் பாவத்தையும் பார்க்கக்கூடாதவர்களாய் இருந்தார்கள். அறுபதாம் ஆண்டிலுண்டான கொடிய பூமியதிர்ச்சியினால் இப்பட்டணம் இடிந்து பாழாயிற்று. இப்பட்டணத்தார் தங்கள் சக்கர்வர்த்தியின் ஒத்தாசையைத் தேடாமலே தங்களுக்கு ஓர் குறைவுமில்லையென்றெண்ணி மீண்டும் இப்பட்டணத்தைக் கட்டினார்களாம். அந்தப்பிரகாரமே, இங்குள்ள சபையார் தங்களுக்குள்ள பக்திக்குறைவைக் காணாமல், ஐசுவரிய சம்பன்னராயிருக்கிறோம் என்று தங்கள் ஆத்மராஜனை மதிக்காமற்போனார்கள். இவர்களுக்குள்ளிருந்த இந்த சுயநேயத்தையும் சமதிருப்தியையும் பார்த்து, ஆண்டவர் அவர்களை வெகுவாய்க் கண்டிக்கிறார் என்று பதினாறாம் வசனத்தின் மூலமாய் அறிகிறோம். ஆண்டவர் இப்பூமியில் சஞ்சரித்த காலத்தில் பரிசேயர், வேதபாரகர், மூப்பர் முதலான அதிகாரிகளும் அவ்வண்ணமே சமதிருப்தியையடைந்து சுயநேயமுடையவர்களா



யிருந்ததைக்கண்டு இவர்களைக் கடிந்துகொண்டார். வேசிகள் பாவிகளுடைய நிலைமையைப்பார்க்கிலும் இவர்களுடைய நிலைமை பயங்கரமானது என்று அறியலாம். பின்னும் இயேசு இவர்களுக்கு 'ஆயக்காரரும் வேசிகளும் உங்களுக்கு முன்னே தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிப்பார்கள்' என்று சொல்லுகிறார் (மத். 21[31]). இயேசு குஷ்டரோகிகளைப் பார்த்து பரிதபித்து, அவர்களைத் தொட்டுச் சுத்தமாக்கினார். செத்தவர்களண்டையும்போய், அவர்களைத் தமது கரங்களால் பிடித்துத் தூக்கி எழுந்திரு என்று சொல்லி உயிர்ப்பித்தார். அப்படிச் செய்துகொண்டு நன்மை செய்கிறவராகச் சுற்றித்திரிந்தாலும் நோயாளிகளில் வெகுபெயர் அவரண்டை வாராமலும் சொஸ்தமடையாமலும் போயிருப்பார்கள். அகோர அவஸ்தையை யடைந்த பிணியாளிகள் சகாயத்தைத்தேடி அவரண்டை வந்தார்கள். கொஞ்ச சுகவீனமும் பலவீனமுமுள்ள அநேக வியாதியஸ்தர் அவரிடம் வந்து சொஸ்தத்தைத் தேடாமற்போனபடியால் குணமடையாமலிருந்தார்கள். அப்படியே வெதுவெதுப்பாக விருக்கிறவர்களும் தங்கள் நிர்ப்பந்த நிலைமையைப்பற்றிக் கவலைப்படாதவர்களும் அவரிடம் வாராமையால், தங்கள் பயங்கரமான ஸ்திதியிலே இருந்துவிடுகிறார்கள்.

பதினெட்டாம் வாக்கியத்தில் ஆசையற்றிருக்கிற இந்த நிர்வாண குருடரை ஆண்டவர் தம்மண்டை வரும்படியாக அழைக்கிறார் என்று பார்க்கிறோம். அவர்கள் இவ்வளவு பயங்கரமான ஸ்திதியிலிருந்தாலும், தம்முடைய அழைப்பினால் புத்திதெளிந்து தம்முடைய ஒத்தாசையைத் தேடிவருவார்கள் என்கிற நம்பிக்கை இவருக்குண்டு என்பதாகவும் அறிகிறோம்.

அவர் அருளும் வாக்குத்தத்தம் — இந்தக் குருடருடைய கண்கள் திறக்கப்படும்; அவர்கள் நிர்வாணம் தோன்றாதபடிக்கு உடுத்திக்கொள்ள வெண்வஸ்திரம் கொடுக்கப்படும்; பணப்பையில் போடும்படிக்கு நெருப்பில் புடமிட்ட அருமையான பொன் அளிக்கப்படும் என்று வாக்களிக்கிறார். இத்தப் பட்டணத்தில் அஸ்கிலேப்பியஸ் (Asklepius) என்னும் பேர்போன கோவில் ஒன்றிருந்தது. அந்தக் கோவில் முதலாளிகள் சிறந்த கண்மருந்தொன்றைச் செய்தார்கள். ஜனங்கள் இந்த மருந்தை இக்கோவில் தலைவர்களிடமிருந்து வாங்கி கண்களுக்கு உபயோகிப்பதுண்டு. இப்படி அவர்கள் இந்தக் கோவிலில் பூஜை செய்வதினாலும், இக்கண் மருந்தை பூசிக்கொள்வதினாலும் அநேகக் குருடர் பார்வையடைந்தார்கள் என்று சரித்திரஞ் சொல்லுகிறது. ஆண்டவர் தரும் ஆத்மீக கலிக்கமோ இந்தக்கண் மருந்தைப்பார்க்கிலும் அதிக பலமுள்ளதும் ஆரோக்கியந் தரக்கூடியதாயுமிருக்கிறது. தங்கள் அவலக்ஷணத்தைக் காணும்படி ஆண்டவர்

திருஷ்டியையும் பரிசுத்தாவியையும் தருவதாக வாக்களிக்கிறார். அதுவுமன்றி, இந்த வாக்குத்தத்தத்தில் அப்பட்டணத்தில் நடக்கும் வியாபாரத்தையும் மறுபடி எடுத்துக் கூறுகிறார். கம்பிளி நெசவுத் தொழில் இவ்வூரில் விசேஷம் என்று சொன்னோம். ஆம், கறுப்பும் பிரகாசமுமான ஓர்வித சிறு மேலங்கி அங்கே நெய்வது வழக்கம். தம்மை உண்மையாய்த் தேடுகிறவர்களுக்கு ஆண்டவர் தாமே வெண்மையான வஸ்திரம் தரிப்பிப்பவர். இதினால் மெய்க்கிறிஸ்தவர்களுக்குண்டாகும் நன்னடக்கை நற்செய்கைகள் குறிக்கப்பட்டிருக்கிறது. மேலும் இந்தப்பட்டணத்தில் பொன் ஏராளமாயிருந்தது. சௌகாரிகள் கடைகளும் மிகுதியாயிருந்தன. வியாபாரிகளுக்குத் தேவையான பணம் வெகு சுலபமாய்க் கிடைக்கும். வியாபார விஷயத்தில் பணக்கஷ்டங்கள் ஒன்றுமில்லை விசுவாசிகளுக்கோ ஆண்டவர் நெருப்பில் புடமிடப்பட்ட பொன்னைப்போன்ற விசுவாசமாகிய ஆத்மீக பொருள்களை வாங்கும்படி கொடுப்பதாக வாக்கருளுகிறார்.

(இன்னும் வரும்)

# A Grace-filled Life

## The 'Retrospect' of Rev. Hudson Taylor

**Translated by the Rev. N. Devasagayam, B.A.**

## திருவருட்பிரகாச ஜீவியம்

ஹூட்ஸன் டெய்லர் ஐயரின் 'பின்னோக்குச் சரித்திரம்'

(தொடர்ச்சி)

### பதினெட்டாம் அதிகாரம்

ஒரு புது மிஷன் ஏற்படுவது அவசியம்

அவிசுவாசம் ஒருநாளும் ஒரு நிலைப்பட்டதல்ல! ஆண்டவராகிய இயேசுவின் நாமத்தில் ஆட்களைக் கேட்டால் கிடைப்பார்கள் என்பதைப்பற்றி என் மனதில் ஐயமே இருந்ததில்லை. அந்த ஆட்களுடைய பிரயாணத்திற்குத் தேவையானவர்கள் சீனராச்சியத்தில் வந்தால் அங்கே இதுவரையும் அடைபட்டிருந்த இடங்கள் சுவிசேஷத்திற்குத் திறக்கப்படும் என்பதும் சந்தேகமில்லாமல் எனக்குத் தெரிந்தேயிருந்தது. அக்காலத்தில் எனக்கிருந்த குறைவென்னவென்றால், ஆண்டவர் என்னை ஆதரித்துக் காப்பாற்றுவார் என்று நம்புகிற கிருபையை நான் பெற்றிருந்ததில்லை. அப்படி எனக்கே



அவரை நம்பத் திராணியில்லாதிருக்க என்னோடு வருவோரை அவர் காப்பாற்றி ஆதரிப்பார் என்று எப்படி நம்புவேன்? அந்தரங்கத்தில் என்னுள்ளத்தில் இருந்த பயம் இது. அத்தேசத்தில் மோசங்களும் இடையூறுகளும் சோதனைகளும் மிகுதி. ஞான அநுபவங்களில் தேறாதவர்களாகிய ஆட்கள் வந்தால், அவர்கள் தங்கள்மேல் வரும் தீமைகளைத் தாங்கமாட்டாமல் மனங்கசந்து என்னை நொந்து பேசுவார்களே-

ஆகிலும், நான் பல்லாயிரம் ஜனங்களின் இரத்தப்பழிக்கு உத்தரவாதி என்கிற உணர்ச்சி என் மனதில் மேலுமேலும் அதிக வாதையாய் வந்தது. நான் கேட்கத் துணியாமையினாலே யல்லவா ஆட்கள் எழுந்து வரவில்லை, ஆட்கள் சீனாவுக்குப் போகவில்லை! அங்கே தினம் பதினாயிரக் கணக்காய் மனுஷர் உலகத்தைவிட்டு கிறிஸ்து கிடைக்காத குழிக்குள் போகிறார்களே, மடிகிற காட்சி என் மனதிலும் இருதயத்திலும் வேறு நினைவுகளையும் உணர்ச்சிகளையும் எழுப்பிக்கொண்டேயிருந்ததினால், எனக்கு இரவுபகல் அமைதியும் நித்திரையும் வராமல் சுகம் கெட்டுப்போயிற்று. இந்தச் சுகங்கெட்ட நிலைமையில் என்னைப் பார்த்த என் பிராண சிநேகிதராகிய ஜியார்ஜ் பியர்ஸ் துரை பிரைட்டன் (Brighton) ஊரிலிருந்த தம்வீட்டில் விருந்தினராய் வந்திருக்க வேண்டினார். அவர் வீட்டில் சிலநாள் போய் விருந்தாளியாயிருந்தேன்.

1865-௵ ஜூன் ௴ 20௳ கோவிலுக்குப் போனதில் ஆயிரத்திற்கு மேற்பட்ட கிறிஸ்தவர்கள் தங்களுக்குக் கிடைத்திருக்கிற இரக்ஷிப்பிலே களிகூருகிறதைப் பார்த்ததும், இலக்ஷக்கணக்கான பேர்கள் இரக்ஷிப்பை யறியாமலே மடிகிறார்களே என்கிற வாதையுள்ளவனாய்க் கடலோரத்து மணலில் தனியேபோய் உட்கார்ந்தேன். அவ்விடத்தில் ஆண்டவர் என் அவிசுவாசத்தைத் தொலைத்தார். அவர் விரும்பின இந்த ஊழியத்திற்கு என்னை நான் ஒப்புக்கொடுத்தேன். நான் அவரை நோக்கி: 'ஆண்டவரே, ஆகும் காரியம் அனைத்திற்கும் நீரே பொறுப்பு. நான் உம்முடைய வேலைக்காரனாய் மாத்திரமிருந்து உமக்குக் கீழ்ப்படிந்து உமது பின் போவேன். என்னையும் என்னுடன் உழைப்போரையும் முன்நடந்து நடத்தி ஆதரிப்பது உமது கடன்' என்றேன். இப்படிச் செய்தவுடனே, மன அமைதி என்னுள் குடிகொண்டது என்பதைச் சொல்லவேண்டுமோ? அந்த இடத்திலேயே அந்த நிமிஷமே எனக்கு நாலு ஆட்கள் தரும்படி அவரைக் கேட்டேன். மிஷனெரியைக் காணாத பதினொரு சீனப்பகுதிகளுக்கு, பகுதிக்கு இருவராக இருபத்திரண்டுபேரும், மங்கோலியாவுக்கு இரண்டுபேரும் வேண்டும் என்றேன். இந்த

மன்ருப்டை என்னுடன் கொண்டுபோயிருந்த வேதபுத்தகத்தில் எழுதிவைத்துக்கொண்டு, இதுவரையும் பல மாதங்களாய் எனக்கு இல்லாதிருந்த மனவமைதியுடனும், ஆண்டவர் என் ஜெபத்திற்கு உத்தரவு அருளிவிட்டார், நான் அவரிட்ட வேலையில் மற்றவர்களுடன் ஆசீர்வதிக்கப்படுவேன் என்கிற நிச்சயத்துடனும் வீட்டுக்குப் போனேன். இதுவரையும் அந்தப் பதினொரு பகுதிகளிலும் வேலை செய்ய ஆட்களை யனுப்பி அவர்களை ஆதரிக்கும்படி தேவனை நானும் வேண்டி மற்றவர்களையும் வேண்டும்படி தூண்டினேன். ஆயினும், நானே அந்தவேலைக்குத் தலைமைக்காரனாகப்போக என்னை அவருக்கு ஒப்புக்கொடுக்கவில்லை.

இக்காலத்தில் என் நேசமனையாளின் உதவியினால் சீனாவின் ஞானத்தவிப்பும் அதற்கு நாம் செய்கடன்களும் என்கிற சிறுநூலை இயற்றினேன். அதின் ஒவ்வொரு பத்தியையும் ஜெபத்தில் தோய்த்து எழுதினேன். பெர்ஜென் பெருமான் அதைக் கையெழுத்தாயிருக்கும்போதே பிழையாய்ந்து தந்ததுமல்லாமல் மூவாயிரம் பிரதிகள் அச்சடிப்பதற்குத் திரவியமும் உதவினார். அத்தனை பிரதிகளும் சீக்கிரத்திலேயே வெளியிடப்பட்டன. சமயம் கிடைத்தபோதெல்லாம் சீனாவில் செய்ய எத்தனித்திருக்கிற வேலையைப்பற்றி பலர் ஒருமித்த சபைகளில் பேசினேன். விசேஷமாய் 1865-ம் வருஷத்து பெர்த்கர்க் கூட்டம், மைல்ட்மே நகர்க்கூட்டம், இவைகளில் பேசினேன். அதுவுந்தவிர, என்னுடன் புறப்படக்கூடிய ஆட்கள் தரும்படியும் அல்லும் பகலும் ஆண்டவரை வேண்டினேன். சீக்கிரத்திலேயே ஆண்டவர் அவர்களை எனக்குத் தந்தார்; அவர்களுக்குக் கடிதம் எழுதி அக்காலத்தில் லண்டன் மாநகரின் கிழக்கிலிருந்த என் வீட்டுக்கு வந்திருக்கச் செய்தேன். அவர்களுக்கு ஒரு வீடு போதாமையாயிருக்கையில் அடுத்த வீட்டுக்காரன் குடிபெயர்ந்து போனான். அதைக் குடிக்கூலிக்கு அமர்த்தினேன். அதுவும் போதாமலிருந்தது. அப்போது, கிட்டத்திலேயே வேறுவசதிகள் செய்துகொள்ளக்கூடியதாயிருந்தது. இப்படித் தாமதமின்றி ஆடவரும் பெண்டிருமான ஆட்களை ஆண்டவர் வாய்க்கப்பண்ணினார். அவர்களை ஊழியத்துக்கு ஆயத்தம்பண்ணினேன். சுயதேசத்திலேயே இவர்கள் சுவிசேஷம் சொல்லுவது, அவர்கள் அதைச்செய்த மாதிரியைக்கொண்டு இனி ஆத்துமாக்களைச் சம்பாதிப்பதில் அவரவருக்கு எவ்வித திறமையிருக்கும் என்று சோதித்துக்கொண்டேன்.

(இன்னும் வரும்.)

C. L. S. PRESS, MADRAS—1916

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
7 - JUL 1916
MADRAS.

No. 122 ஜூலை 1916

# வேதியர் விளக்கு

## The two stages of faith

By the Rev. A. A. Silver

I WISH to write a little about ‘ Belief in Christ ’ as illustrated in the story of our Lord and the people of Sychar. But first, in order to fit that story into its proper place in the life of our Lord, let me describe briefly the incidents which led up to His visit to Samaria.

The scene of our Lord’s first miracle was at Cana of Galilee where he turned the water into wine at the wedding feast. Shortly after this incident He went with His mother and His brethren to Capernaum where He remained for a short time. Then, because the Jewish Passover was at hand, He set out with some of His disciples to go to Jerusalem. When He arrived there, His first act was to go to the Temple and drive out from there those who were buying and selling within its sacred precincts. It was on this occasion also that the Pharisee Nicodemus came to Him secretly by night for fear of the Jews and talked long with our Lord about the mystery of the New Birth and of Eternal Life. After He had remained for some time in Jerusalem, our Lord with His disciples went to the villages around that city; and there, we are told, His disciples baptized many people. Finally, our Lord determined to return to Capernaum where, perhaps, His Mother and His brethren still awaited Him. On their way northwards it was necessary to pass through Samaria; and one evening Jesus and His disciples came to the village of Sychar. This was to the Jews a well known place for near it there was the well of Jacob and close by (at Shechem) was the tomb of the patriarch Joseph. Doubtless many travellers used this as a halting

place as they passed from Judea into Galilee. It was situated about thirty miles northward from Jerusalem.

After our Lord had arrived there, His disciples went away to the village of Sychar to buy food; but Jesus remained to rest near the well. And while He was there, a woman of Samaria come to draw water. With her our Lord entered into conversation and they talked long about the 'Water of Life' and the true worship of God. So impressed was the Samaritan woman with the wisdom and wonderful personality of Jesus that she hastened to the village and told the people about Him, declaring that, of a truth, He was the Christ. Whereupon, we are told, 'Many believed on Him because of the testimony of the woman.' But afterwards the people came themselves to see Him and invited Him to stay for some time in their village. He remained there for two days and then, we are told, many more believed on Him because they heard Him for themselves.

Now, when we consider those people in their attitude to Jesus, we see that they naturally fall into two classes:—

(1) Those who believed because of the testimony of the woman.

(2) Those who believed because they heard Him themselves.

There was a distinct difference between those two sections of the people; and they were quick to note it themselves. For those of the one party immediately dissociated themselves from the others and, turning to the woman said, 'Now we believe not because of thy saying, but because we have heard Him for ourselves.' Their belief was also different—more full—for through their personal experience knowledge was added to it. 'We believe,' they said, 'and know that this is indeed the Christ, the Saviour of the world.' It is interesting to notice this difference because I believe that the same two kinds or rather stages of belief in Christ are to be found to-day among Christian people; and not only that but the majority of people pass from the one stage to the other in the course of their Christian experience. We shall see that this is so, if we consider briefly the two stages.



First of all then, we are told that many believed because of the testimony of the Samaritan woman. In this country the first tidings about Christ are often carried to the villages by evangelists and catechists. And it very frequently happens that, by the blessing of God many are brought to believe in Christ through their testimony—the testimony of those who go forth to proclaim the gospel. But that is not all. The first knowledge of Christ which came to each one of us was due to the testimony of someone or other. The mother whispers to her child that sacred Name and tells him of the life and teaching of the Holy Jesus. Or in Sunday-class and church the gospel is proclaimed and the message told of Him who is the Saviour of the world. With us all it is as with the Ethiopian to whom the Apostle Philip was sent. Unless we had some one to guide us—to teach us—we could not have known the Gospel. Our first belief in Christ is due to the testimony of others, just as the belief of the people of Sychar was due at first to the testimony of the Samaritan woman.

But this first faith—this belief which comes from the testimony of others—is not enough. It is not a sure belief. It can be shaken by criticism. It is not in the full sense a comforting belief. It is not a saving belief. This is well illustrated by the miracle of our Lord where He healed the sick man at the pool of Bethesda (see John v. 1–9). For long the sick man had known and believed in the healing power of the waters at the time when the Angel came and troubled them. But that belief did not heal him. He would have to go into the waters before he could be healed. His belief that the waters could heal him must in some measure have been a comforting belief but it was not a saving belief. So to know about Jesus and His saving power is not enough. We must come close to the source of healing. Our belief must become more full.

Now here we come to the second stage of belief as illustrated in our text. We notice that many believed ultimately because they had heard our Lord for themselves. Indeed I think that many who believed first because of what they had heard about Him came afterwards to believe because they

actually heard and saw Him. It is wonderful what a difference there is between hearing about a man and coming into personal contact with him. When our King visited India some three years ago a certain Indian nobleman went to Delhi to do homage to him. After his return home when he was telling his friends about his experiences he said: 'Before I went to Delhi I was loyal. I honoured the Emperor and urged my subjects to maintain their loyalty to him and to his Government. But when I came into his presence at Delhi, when I saw him and heard his gracious words, my loyalty, my love for him became a hundred-fold more deep.' We remember also the experience of Job. At first, when his misfortunes crowded thick upon him, he was disposed to feel that he was being unjustly dealt with by God. But afterwards he came to see the real purpose which lay beneath his afflictions and his faith in God became more deep than ever it had been. And he signified this deeper faith by declaring before God: 'Hitherto I have heard of Thee by the hearing of the ear. But now mine eye seeth Thee' (see Job xlii. 5).

Yes, in order that our faith may become a saving faith we must enter into personal communion with Jesus, must see Him for ourselves, must hear Him for ourselves as the psalmist says we must taste and see that the Lord is good. Then our belief will be for us 'an anchor of the soul, sure and steadfast.'

This being so, we must now ask: 'Is it possible thus to enter into close personal communion with Christ?' When, like the Greeks who came to Philip at the Feast (see John xii. 21). We express the wish to see Jesus; can that wish be realized? For answer let us turn to our New Testament. The Apostle James says (iv. 8): 'Draw nigh to God and He will draw nigh to you.' And our exalted Saviour has Himself assured us of His nearness. 'Behold,' He says, 'Behold I stand at the door and knock; if any man hear my voice and open the door I will come in to him' (Rev. iii. 20).

If our motto is to be 'This year and every year for Christ', we must not be content to know about Him from others. We must get to know Him for ourselves and then



His saving power and His love will be freely manifested unto us. A joy will come into our lives which will not only deepen our own devotion to Him but will keep us unwearied in leading others to know Him too.

O Holy Child of Bethlehem, Descend to us we pray;
Cast out our sin and enter in, Be born in us to-day.
We hear the Christmas Angels, The great glad tidings tell;
O come to us, abide with us, Our Lord Immanuel. (Hymn 33, v. 4.)

## Holiness

By the Rev. A. Paramanandam

161285

### பரிசுத்தம்

(தொடர்ச்சி)

#### நான்காம் அதிகாரம்

பரிசுத்தமாக்குதல் தேவனுடைய வேலை

இதுவரைக்கும் மனுஷர் பரிசுத்தராகவேண்டுமென்கிற சங்கதியை விசாரிக்கையில், அதின் விஷயமாய் தேவனுடைய நோக்கம் என்னவென்று முக்கியமாய்ப் பார்த்திருக்கிறோம். மனுஷன் தேவனுக்குச் சமானமாய்ப் பரிசுத்தனாகவேண்டுமென்று அவர் எண்ணி, அவனைத் தம்முடைய சாயலின்படி சிருஷ்டித்தாரென்றும், தேவன் மனிதனுக்கு பரிசுத்தமானது எத்தன்மையானதென்றும், அதை எவ்வாறு அவன் அடையவேண்டுமென்றும், காலக்கிரமத்தில் அதை அவனுக்கு வெளிப்படுத்தினாரென்றும், தேவாவியானவர் மனுஷனுடைய ஆத்துமாவில் தங்கி, தமது சுபாவத்தை அவனுக்குச் சேர்த்துக் கொடுப்பதினால் அவனைத் தம்முடைய சாயலுக்குச் சரியாய்ப் புதிதாக்கவேண்டுமென்று பிரயத்தனித்துக்கொண்டு வருகிறாரென்றும் அறிந்திருக்கிறோமல்லவா? அளவில்லாத ஞானத்தினாலும் பரிபூரண அன்பினாலுமுண்டான தேவனுடைய நோக்கம் இதுவே. நமது விஷயமாயிருக்கிற தேவனுடைய சிரேஷ்டமான கோரிக்கையை நாம் தகுந்தவரைக்கும் கிரகித்துக்கொண்டாலும், பரிசுத்தம் என்கிற போதனையை இம்மட்டும் சம்பூரணமாய் நாம் அறிந்துகொள்ளவில்லை. சூரியனினின்று புறப்படுகிற பிரகாசம் அகண்டமாயிருக்கிறது. ஆனால் அந்தப் பிரகாசம் சமுத்திரத்தின் மேலே விழுந்து, அதின்

ஆயிரக்கணக்கான அலைகளினால் ஆயிரக்கணக்கான விதமாய்த் தோன்றுகிறது. அதேவிதமாக நாம் பரிசுத்தமாகவேண்டுமென்கிற தேவனுடைய எண்ணம் அகண்டதாயிருந்தாலும், அது நமது அனுபவத்தில் நானாவிதமாய் வெளியாகிறது. தேவனுடைய மகா உத்தேசம் நம்முடைய ஈன சுபாவத்தில் எவ்வாறு நிறைவேறலாமென்று யோசிக்கையில், பரிசுத்தத்தைக்குறித்து இன்னும் அநேக விஷயங்களை விசாரித்தறியவேண்டுமென்று நமக்குத் தோன்றுகிறது. பரிசுத்தமானது தேவனோடு ஐக்கியப்படுவதினால் உண்டாகிறதென்று பார்த்திருக்கிறோமல்லவா? இந்த ஐக்கியம் எந்தவிதமாய் நமக்குண்டாகவேண்டும். பரிசுத்தமாக்குகிற வேலையில் தேவன் செய்வது என்ன? நாம் செய்யத்தக்கது என்ன? இவ்வேலையை எவ்வளவு காலமட்டுஞ் செய்துகொண்டிருக்கவேண்டும்? அதின் கிரமம் என்ன? ஒவ்வொரு பாகமும் நிறைவேறும்படி எந்தெந்த சாதனங்கள் வேண்டும்? நாமே பரிசுத்தராகவேண்டுமென்று அபேக்ஷிப்போமானால் இவை முதலான கேள்விகளை எடுத்து விசாரிக்கவேண்டும். இச்சீவியத்தின் அனுபவத்தை மாத்திரம் பார்த்தால், பரிசுத்தத்தின் ஒரு பாகமாத்திரம் நம்முடைய கண்ணுக்குக் காணப்படும். இந்த லோகத்தில் நாம் அனுபவிக்கிற பரிசுத்தமானது பரத்தில் நித்தியமாய் நடக்கத்தக்க அனுபவத்தை யடுத்ததே. இச்சீவியத்தில் யாராவது தேவனுக்குச் சரியான சம்பூரண சாயலையடைவது அசாத்தியம் என்பது நிச்சயமானது. பூரண பரிசுத்தமானது மனிதனுக்குப் பரலோகத்தில் கிடைக்கிறதேயொழிய இச்சீவியத்தில் எவருக்கும் கிடைப்பதில்லை. இச்சீவியத்தில் நாம் பரிசுத்தத்தில் சித்தியடைந்தோம் என்னும் அனுபவம் நமக்கு வாராதிருந்தாலும், அது நடந்தமட்டும் தெளிவாயும் நிச்சயமாயுமிருக்கிறது. மைசூர் ராஜ்யத்தின் படத்தைப் பார்க்கும்போது, காவேரி நதியைக் காட்டுகிற ஒரு கோடு கண்ணுக்குக் காணப்படுகிறது. அந்தக் கோட்டைப் பார்க்கையில் காவேரி நதி இன்ன ஸ்தலத்தில் சமுத்திரத்திலே சங்கமாகிறதென்று தோன்றாவிடினும், மைசூர் தேசத்தின் எல்லைகளுக்குள்ளே எந்த ஸ்தலத்திலிருந்து எந்த மார்க்கமாக எந்த திக்கை நோக்கி ஓடுகிறதென்று நன்றாய்க் கண்டுகொள்ளலாம். பரிசுத்தமானதும் அப்படியே இச்சீவிய அனுபவத்தோடு சம்பந்தமாயிருக்கிறது. பரிசுத்தம் என்னும் நதி இச்சீவியத்தின் அப்புறத்திலிருக்கிற சித்தி என்னும் சமுத்திரத்தோடு சேர்ந்திருந்தாலும் அது நம்முடைய இக்காலத்து அனுபவத்தின் எல்லைகளுக்குள்ளே ஓடுவதினால் நமது அறிவுக்குப் புலப்படுவதாயிருக்கிறது; ஆதலால் இவ்விஷயத்தை ஜாக்கிரதையோடு விசாரிப்பது நியாயமாயிருக்கிறது. பரிசுத்தம்



என்னும் விஷயத்தைப்பற்றிய போதனையை இச்சீவியத்தின் அனுபவத்துக்கு சம்பந்தப்பட்டதென்றெண்ணி பரீட்சித்தால், இரண்டு முக்கிய அம்சங்களைக் கண்டுபிடித்துப் பார்க்கக்கூடும். அவையாவன: இந்த ஜீவியத்தில் நாம் அடையத்தக்க ஒரு சிரேஷ்டமான ஸ்திதியுண்டு; அந்த ஸ்திதியை நியாயமானபடி பரிசுத்தம் என்று சொல்லலாம்; இது ஒன்று. இந்த ஸ்திதியை யடைவதற்கு ஓர் மார்க்கமுண்டு. பரிசுத்தமாக்கப்படுவதே அந்த மார்க்கம்; இது இரண்டாவது. இப்போது நாம் பிரஸ்தாபிக்கத்தக்க முக்கிய சங்கதி பரிசுத்தமாக்கப்படுதலேயாம். பரிசுத்தமாக்கப்படுவது எதுவென்றால், கிறிஸ்தவனைக் கிறிஸ்துவின் சாயலாகச் செய்வதுதான். எந்தக் கிறிஸ்தவன் பரிசுத்தமாக்கப்படுதலுக்குள்ளாகி பரிசுத்தத்தை யடைகிறானோ அவனே சித்தியடைந்த கிறிஸ்தவன். பரிசுத்தமாக்கப்படுதல் என்பதைச் சிந்திக்கையில், முதலாவது, அது நிறைவேறுவதற்கு எந்தெந்த சாதனங்கள் வேண்டுமென்றும், இரண்டாவது, அது எந்தக் கிரமத்தினால் நடந்தேறுகிறதென்றும் விசாரிக்கவேண்டியதாய் இருக்கிறது. இந்த அதிகாரத்தில் பரிசுத்தமாக்கப்படுவதற்கு வேண்டிய சாதனங்கள் எவை என்கிற முதலாம் சங்கதியை விசாரிப்போமாக.

நம்மில் பரிசுத்தமாக்கப்படுதல் நடப்பதற்கு மூலகர்த்தன் தேவனே. அதிசிரேஷ்டமான இந்தக் காரியம் நடப்பதற்கு திரியேக தேவனிடத்திலிருந்து உண்டாகிற மூன்று விசேஷமான சாதனங்கள் வேண்டும். கிறிஸ்தவர்கள் கூறுகிற ஆசீர்வாத வசனத்தில் இந்த மூன்று சாதனங்களும் அடக்கமாயிருக்கின்றன. பவுல் கொரிந்திய சபையார் விஷயமாய் 'கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும், அவர்களனைவரோடுங்கூட இருக்கவேண்டுமென்று பிரார்த்தித்தபோது (2 கொரி. 13[14]) அவர்கள் பரிசுத்தராவதற்கு அவசியமாய் இருந்த எல்லா சகாயத்தையும் வேண்டிக்கொள்ளுகிறவனாயிருந்தான். பாவிகளான மனுஷர் பரிசுத்தமுள்ள தேவனிடத்தில் சமாதானமடைவதற்கிருக்கிற சாதனம் கிறிஸ்துவானவருடைய அளவற்ற கிருபைதான். பாவத்தினால் நிறைந்திருக்கிற மனுஷ சுபாவமானது நூதனமாய் அடையவேண்டிய சாயல் தேவனுடைய அன்புதான். மனுஷ சுபாவம் நூதனமாவதற்கு அவனுடைய இருதயத்தில் அனலூட்டி உற்சாகத்தையுண்டாக்கும் சக்தி பரிசுத்தாவியானவருடைய அந்நியோந்நிய ஐக்கியமே. தேவனுடைய அன்பு எப்பேர்க்கொத்தது? என்கிற கேள்விக்கு ஏற்கனவே உத்தரவு கொடுத்திருக்கிறோம் அல்லவா? கிறிஸ்துவின் கிருபையினால் மனுஷன் தேவனுடைய பரிசுத்தமான ஐக்கியத்தில் சேருவது எப்படி என்பதையும், பரிசுத்தாவி

யின் அந்நியோந்நிய ஐக்கியத்தினால் மனுஷ சுபாவம் நூதனமாய்ப் பரிசுத்தமாவது எப்படி என்பதையும் கொஞ்சமாத்திரம் விசாரித்திருக்கிறது. எதுவரைக்கும் கிறிஸ்துவின் கிரியையும், எம்மட்டும் பரிசுத்தாவியின் கிரியையும், மனுஷ சுபாவத்தைச் சுத்திகரிப்பதற்கு எத்தனமாயிருக்கிறது என்று விசாரிப்போமாக.

முதலாவது. மனுஷன் பரிசுத்தமாக்கப்படுவதற்கு எத்தனமாயிருக்கிற கிறிஸ்துவினுடைய கிரியை.

(*a*) கிறிஸ்து முடித்த இரக்ஷண்ய கிரியையினால் பரிசுத்தமாக்கப்படுதலின் காலம் ஆரம்பமாயிற்று. கிறிஸ்து அந்தக் கிரியையை முடித்து, தமது மகிமையின் பதவியை அடைவதற்கு முன்னே, பரிசுத்தத்தை உண்டாக்குகிற ஆவியானவர் இன்னும் அருளப்படவில்லை. அருளப்படுவதற்கும் முடியவில்லை (யோவா. $7^{19}$), ஏனென்றால் கிறிஸ்துவின் மரணம் அல்லது அவரது ஜீவனின் ஐக்கியத்தினாலேமாத்திரம் மனுஷர் பரிசுத்தராவதற்கு அவகாசங் கிடைக்கும். கிறிஸ்து நமக்குப் பரிசுத்தமானதினாலும் (1 கொரி. $1^{31}$), தமது மூலமாய் தேவனிடத்தில் சேருகிறவர்களை சம்பூரணமாய் ரட்சிப்பதற்கு வல்லவராயிருப்பதினாலும் (எபி. $7^{25}$), யார் யார் அவரைப் பின்பற்றுகிறார்களோ அவர்களெல்லாருக்கும் பரிசுத்தர் என்கிற பேருண்டு. பரிசுத்தர் என்கிற பெயரை ஏன் அடைகிறார்கள் என்று கேட்டால், கிறிஸ்து அவர்களைப் பரிசுத்தமாக்குகிறதினாலே அவர்கள் அவரில் பரிசுத்தமாக்கப்பட்டவர்களாயும் பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்டவர்களாயும் இருக்கிறார்கள் (1 கொரி. $1^{2}$). கிறிஸ்து பரிசுத்தமாக்கப்படுகிறவர்களை ஒரே பலியினாலே என்றென்றைக்கும் பூரணப்படுத்தியிருக்கிறார் என்பதை இதே அபிப்பிராயத்தினால் தெரிந்துகொள்ளவேண்டும் (எபி. $10^{14}$). இயேசுகிறிஸ்துவின் இரட்சிப்பின் கிரியை நாம் பரிசுத்தமாவதற்கு அவசியமான சாதனமும் திடமான மூலாதாரமுமாயிருக்கிறது.

(*b*) கிறிஸ்து தேவனுடைய பரிசுத்த லட்சணத்தைப் பரிஷ்காரமாய் வெளிப்படுத்தினார். நாம் முன் பார்த்ததுபோல் மனுஷர் தேவனைப் பார்ப்பதற்கு முதல்முதல் அவருடைய குணத்தை அறிந்துகொள்வது அவசியமாயிருக்கிறது. அந்தப் பரிசுத்த குணம் எப்பேர்ப்பட்டதென்று முதலில் கிறிஸ்துவின் மூலமாய்க் காணப்பட்டது. தேவனுடைய விஷயமான ஞானம் மனுஷருக்கு இல்லாதிருக்குமானால், பரிசுத்தம் என்கிற புது ஜீவன் அவனுடைய ஆத்துமாவில் பிறப்பதில்லை. ஒன்றான மெய்த்தேவனையும், அவர் அனுப்பினவராகிய இயேசுகிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன் (யோவா. $17^{3}$).



(*c*) கிறிஸ்துவானவர் தேவனுடைய பரிசுத்தமான குணத்தை மனுஷருக்கு வெளிப்படுத்தி அம்மட்டோடே நிறுத்திவிடவில்லை. தேவன் பரிசுத்தராயிருக்கிறார் என்பதை மாத்திரம் மனுஷர் அறிந்துகொண்டிருந்தால், பரிசுத்தமானது தாங்கள் என்றைக்கும் அடையக்கூடாத அசாத்தியமான ஓர் மேலான ஸ்திதி என்று பாவித்திருக்க நேரிடும். சமஸ்கிருத கிரந்தத்தின் அபிப்பிராயத்தைத் தெரிந்துகொள்வதற்கு அனுகூலமாய் ஒரு பண்டிதன் அக்கிரந்தத்தைப் பாஷாந்தரஞ் செய்கிறவண்ணம், கிறிஸ்து நமக்குப் புலப்படாமல் இருக்கிற தேவனுடைய குணத்தை மனுஷகுண நடத்தையின் ரூபமாய் விவரித்தார். மனுஷர் தமது அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி அவர்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப் போனார் (1 பேது. $2^{21}$): மனுஷரை மெய்யாகவே பரிசுத்தமாக்க வேண்டுமென்று, கிறிஸ்து அவர்களுக்காக தம்மைப் பரிசுத்தப்படுத்தி, பிரதிஷ்டை செய்துகொண்டார் (யோவா. $17^{19}$). கிறிஸ்து மனுஷனாகி எப்படி பரிசுத்தரானாரோ அதே அபிப்பிராயத்தினாலும் சாதனையினாலும் நாம் பரிசுத்தராகவேண்டும். எப்படியெனில் பரிசுத்தஞ் செய்கிறவரும் பரிசுத்தஞ் செய்யப்படுகிறவர்களுமாகிய யாவரும் ஒருவராலே உண்டாயிருக்கிறார்கள் (எபி. $2^{11}$).

(*d*) கிறிஸ்துவின் மரணத்தினாலுண்டான புண்ணியத்தை விசுவாசத்தினால் நம்முடையதாக்கிக்கொள்வதினாலேயும், அவருடைய போதனையை அங்கிகரிப்பதினாலேயும், அவர் காட்டிய மாதிரியைப் பார்த்து, அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றுவதினாலேயும் மாத்திரம் நாம் பரிசுத்தமாக்கப்படுவதில்லை. இன்னும் சமீபமாய்க் கிறிஸ்துவின் ஐக்கியத்தில் சேரவேண்டும். நம்முடைய மகிமையின் நம்பிக்கை என்னவென்றால் கிறிஸ்து நம்மில் இருப்பதே (கொலோ. $1^{27}$). நாம் புது சிருஷ்டிகளாயிருப்பதற்குக் காரணம் என்னவென்றால் நாம் கிறிஸ்துவுக்குள்ளிருப்பதே (2 கொரி. $5^{17}$). உத்தரதேசத்தவருக்கும் தக்ஷணதேசத்தவருக்கும் வர்ணம், ஆசாரம், பாஷை இவை முதலான விஷயங்களில் எவ்வாறு மிகுந்த வித்தியாசமிருக்குமோ அவ்வாறே பக்தனொருவன் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு பாவமில்லாதவனாய் அவருக்குள் ஜீவித்தால் (எபே. $2^{10}$), தன்னுடைய எல்லா வழக்க ஒழுக்கங்களில் கிறிஸ்துவுக்குச் சமானமாகிறானேயொழிய அவபக்தனான லௌகிகனுக்குச் சமானமாய் இருக்கமாட்டான். கிறிஸ்துவுக்கும் நமக்கும் இருக்கத்தக்க இந்தச் சம்பந்தம் அந்நியோந்நியத்தைப்பார்க்கிலும் அதிசிரேஷ்டமான சம்பந்தமாயிருக்கிறது. அதெப்படியென்றால் நமக்கு கிறிஸ்துவினிடத்திலிருக்கிற ஐக்கியமே. கிறிஸ்து திராட்சச்செடி, நாம் கொடி

கள் (யோவா. $15^{5}$). கிறிஸ்து சிரசு, நாம் அவயவங்கள் (எபே. $4^{16}$). கிறிஸ்து இயேசுவிலுள்ள சிந்தையே நம்மிலும் இருக்கவேண்டும் (பிலி. $2^{5}$). தேவனுடைய சமாதானம் நம்முடைய இருதயங்களில் ஆளவேண்டும். கிறிஸ்துவின் வசனம் நமக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாய் வாசஞ்செய்யவேண்டும் (கொலோ. $3^{16}$). இனிமேல் பிழைக்கிறவர்கள் நாமல்ல, கிறிஸ்துவே நம்மில் பிழைக்க வேண்டும்.

(இன்னும் வரும்)

## The Letter to Laodiceans

**By the Rev. F. Goodwill**

## லவோதிக்கேயா சபையின் தூதனுக்கு எழுதின நிருபம். வெளி. $3^{14-22}$

(தொடர்ச்சி)

இவர்கள் ஆத்மீக நன்மைகளை இலவசமாய்ப்பெற்றுக்கொள்ளாமல் ஆண்டவரிடம் வந்து கிரயத்துக்கு வாங்கிக்கொள்ளவேண்டுமென்று உரைக்கிறார். ஏசாயா 55. 1-ல் முற்காலத்தில் யூதர் ஆத்மீக பொருள்களைக் கிரயத்துக்கு வாங்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறதுபோல, இவர்களும் பிரயாசத்தினாலும் மனக்கிலேசம் மனஸ்தாபம் முதலான நொறுங்குண்ட ஆவியினாலேயும் இவைகளை வாங்கிக்கொள்ளவேண்டும். ஆண்டவர் அருளும் அருமையான ஈவுகளுக்கு நாம் தக்க கைம்மாறு கொடுக்க முடியாவிட்டாலும், கஷ்டத்தோடும் ஜெபத்தோடும் மனஸ்தாபத்தோடும் நருங்குண்ட இருதயத்தோடும் நாம் தேடினாலொழிய இவைகளை அடைந்துகொள்ள முடியாதே. பத்தொன்பதாம் வசனத்தினால் நாமறிந்துகொள்ளுகிறதாவது : இவர்கள் ஜாக்கிரதையாயிருந்து மனந்திரும்பாவிட்டால் சிட்சை வரும். இவர்களுக்கு ஆண்டவருடைய கோபாக்கினையின்றி ஆத்மீக நன்மைகள் ஒன்றும் வராது என்பதே.

இருபதாம் வசனத்தில் அடங்கியிருக்கிற மேலான வாக்குத்தத்தமானது இந்தச் சபையாருக்கு விசேஷமாய்க் கொடுக்கப்படாமல், எல்லாச் சபைகளுக்கும் பொதுவாகக் கொடுக்கப்பட்டிருக்கிறதென்று வியாக்கியானிகளில் சிலர் நம்புகிறார்கள். இந்த வியாக்கியானிகள் கொள்ளுகிற அபிப்பிராயத்தின்படி இந்த லவோதிக்கேயா சபைக்குச் சொல்லியிருக்கிற சங்கதிகள் பத்தொன்பதாம் வசனத்தோடு முடிகிறது. பிந்தின வசனங்களில் வருகிற யாவும் எல்லாச் சபைகளுக்கும் பொதுவாய்ச் சொல்லப்பட்டவைகள் என்று அபிப்பிராயங்கொள்ளுகிறார்கள். வியாக்கியானிகளில் அநேகர் இந்தக் கடைசி



வசனங்களில் அடங்கியிருக்கிற ஒப்பனைகளில் விளங்குகிற சங்கதிகள் லவோதிக்கேயா சபைக்கு விசேஷித்த விதமாய் ஏற்றதாயிராவிடினும், ஆண்டவர் இந்தச் சபைக்கு நேராய்ச் சொல்லுகிற வார்த்தைகளுடன் இவைகளையும் கூட்டிச் சொல்லியிருக்கிறார் என்று சொல்லுகிறார்கள். இப்படி இவைகளைப் பிரித்து வித்தியாசப்படுத்திச் சொல்வது கூடாமை. ஒரு வித்தியாசம் மாத்திரம் தெளிவாயிருக்கிறது; அதாவது, ஆண்டவர் இம்மட்டும் லவோதிக்கேயா சபையிலுள்ள கிறிஸ்தவர்கள் எல்லாரிடத்திலும் பொதுவாய்ப் பேசி வந்திருக்கிறார். இப்போது சபையிலுள்ள தனித்தனி ஆத்துமாக்களுக்கு இச்சங்கதியைச் சொல்லி அவர்கள் ஒவ்வொருவரையும் ஏவுகிறார். பரமவிருந்தாளியானவர் ஒவ்வொருவருடைய இருதயத்தின் வாசலையடைந்து தட்டிக்கொண்டிருக்கிறார். வீட்டின் எஜமானாகிய மனிதன் ஒவ்வொருவனும் தன் ஆத்மக்கதவைத் திறந்து, அவரை அழைத்து, அன்பு, விசுவாசம், பக்தி என்னும் இனிய பதார்த்தங்களை அவருக்காக ஆயத்தஞ்செய்து அவரோடு போஜனம் பண்ணும்படியாய்க் கோருகிறார். போஜனம் பண்ணுவேன் என்னும் வார்த்தைகள் மூலபாஷையில் சாயந்தர சாப்பாட்டைக் குறிக்கிறது. சாயந்தர சாப்பாட்டுக்கு ஒருவன் வந்தால், அவ்வேளை வியாபாரம் முடிந்து கஷ்டமான கைத்தொழில் நின்று ஓய்ந்திருக்கும் சமயமானதால் சந்தோஷமாய்ப் பேசி, அவனோடு சாகவாசமாய் உட்கார்ந்து சாப்பிடலாகும். ஆண்டவர் சாயங்கால வேளையில் பந்தியில் உட்கார நமக்கு வாக்குக் கொடுப்பதினால் அவருக்கும் நமக்கும் இருக்கிற ஐக்கியத்தையும் சமாதானத்தையும் காட்டுகிறார். இந்துக்களில் முதியோரான பலர், ஒருவன் தன் ஜீவியகாலத்தில் பலமும் சுகமுமுள்ள வயதில் தன் வேலையைச் செய்து, கிழவனாகின தள்ளாத காலத்தில் அந்த வேலையை முடித்துக் கிரகஸ்தனாகி, உலகக்காரியங்களைத் துறந்து, சன்னியாசியாகி சுவாமி தரிசனை, ஈஸ்பரனைப்பற்றிய தியானம் முதலான வைதீக காரியங்களைத் தடையின்றி அனுசரிக்கலாம் என்று நினைக்கிறார்கள். ஆண்டவரோ ஜீவியகாலத்தின் சாயங்காலவேளையில் மாத்திரமல்ல, எல்லா வேளையிலும், எல்லா வேலையிலும் நம்மோடு கூட இருப்பார் என்பதற்கு ஐயமில்லை. இந்த வாக்கியத்திலடங்கிய வாக்கின்படி நமக்கும் அவருக்கும் எவ்வளவு நெருங்கிய சம்பந்தமும், ஆச்சரிய சமாதானமும் உண்டாகிறதென்று அறிகிறோம்.

இந்தச் சபைக்குச் சொல்லப்பட்ட சங்கதிகளை நாம் ஊன்றிக் கவனிக்கையில், அவர்கள் அருவருப்பான ஸ்திதியில் இருந்தாலும், அவர்களை ஆண்டவர் நேசித்து, இந்த மேலான வாக்குத்தத்தத்தை அவர்களுக்குத் தருகிறார். எவ்வித மனுஷனாயினும் எப்பேர்க்கொத்த

சபையாயினும் இச்சபைக்கு அருளியிருக்கிற சிலாக்கியத்தையும் அருமையான ஆசீர்வாதங்களையும் மனந்திரும்புவதினால் அடைந்து கொள்ளும்படி இங்கே காட்டப்பட்டிருக்கிறது. அஞ்ஞானிகளோடும் உலகத்தோடும் ஐக்கியப்பட்டு சகவாசமாயிருந்தவர்களுங்கூட் தங்கள் துன்மார்க்கத்தை விட்டுத் திரும்பி, நீதியையும் நியாயத்தையுஞ் செய்து ஆண்டவரை அண்டிச் சேர்வார்களானால்,' பிதாவினுடைய சிங்காசனத்திலே அவரோடுகூட உட்காரும் சிலாக்கியத்தைப் பெறலாம். ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன்.

'நான் ஜெயங்கொண்டு என் பிதாவினுடைய சிங்காசனத்திலே அவரோடேகூட உட்கார்ந்ததுபோல, ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடேகூட உட்காரும்படிக்கு அருள்செய்வேன்' (வெளி. 3[21]).

> ஆசனத்தைச் சூழநிற்கும் தூதர் கோடாகோடியாய்,
> அவர் அன்பைப் போற்றியென்றும் பாடுபவர்கள் இன்பமாய்.
> மீட்கப்பட்ட சேனையோடு நானும் நின்று பாடுவேன்.
> என்னை மீட்ட அன்பைப்பார்த்து மீட்பரை நான் போற்றுவேன்.
> நெஞ்சமே, பாத்தைப்பார், இயேசு கரை ஏற்றுவார்.

## The Poison Spring

**By the Rev. N. Devasahayam, B.A.**

## நச்சுப்பொய்கை

குந்திதேவியாரின் மக்களாகிய பஞ்சபாண்டவர்கள் திரௌபதியுடன் வனவாசம் செய்கிற காலத்தில் ஒரு நச்சுப்பொய்கையில் தாகத்திற்குச் சாப்பிட்டு பிராண அபாயத்திற்குள்ளானார்கள் என்று படித்திருக்கிறோம்.

இன்றைக்கும் அப்பேர்ப்பட்ட நஞ்சு ஊற்றுகள் காடுகளிலிருக்கும். காட்டுமடுக்களில் இலைச்சருகுகள் குவிந்து, மழை வெள்ளத்தில் நனைந்து, ஆழத்தில் புதைந்து, ஊழ்த்து அழுகியிருக்கும். அவ்வகை மடுக்களின் நீர் தெளிந்து குளிர்ச்சியாயிருக்கும். வேனிலால் தாவறண்டு தண்ணீர்க்குத் தவிக்கிறவர்கள் முன்பின் யோசியாமல் அவைகளில் குடித்தால் பாண்டவர்கள் பட்டபாடு படுவார்கள்.

அவற்றினும் கொடிய நஞ்சு நீரூற்று ஒன்றிருக்கிறது. அது காட்டிலல்ல, மனிதர் குடியிருப்புகளில் இருக்கிறது. நாகரீகமற்ற



ஜனங்களிடத்திலும், நாகரீகமுள்ள ஜனங்களிடத்திலும் அந்த நச்சுக் கேணி உண்டு.

அந்த நச்சுப்பொய்கையில் பொல்லாத நினைவுகளும், தீயசொற்களும், பாவச்செயல்களும் இடையறாமல் ஊறிக்கொண்டேயிருக்கும். இந்த நச்சுப்பொய்கை எது தெரியுமா? நம் உள்ளமே. நம் தீய உள்ளம் நம்மையும் கெடுக்கும்; பலவிதமாய்ப் பிறரையும் கெடுக்கும். அத்தீமையைப் போக்கி, தன்னைச் சுத்திகரித்துக்கொள்ள வல்லவன் எவனுமில்லை.

புண்ணியம் சம்பாதித்துக்கொள்ள திருயாத்திரை செய்கிறவர்களைப் பார்த்திருக்கிறீர்கள் அல்லவா? அவர்கள் கூட்டங் கூட்டமாய்ப் புண்ணியஸ்தலங்களுக்கும், தீர்த்தங்களுக்கும் போகிறார்கள். அவர்களுடைய உள்ளமே நச்சுப்பொய்கையாயிருக்க, அதை உள்ளே வைத்துக்கொண்டு தீர்த்தங்களாடியும், க்ஷேத்திரங்களைத் தரிசித்தும், என்ன பிரயோஜனம்?

ஆகையால் தமிழ்வேதம் என்னப்பட்ட திருக்குறளில் திருவள்ளுவ நாயனார்

> 'மனத்துக்கண் மாசிலனாதலனைத்தற
> னாகுல நீர பிற'

என்றார். அதாவது: மனதிலே மாசில்லாதவன் ஆதல் அனைத்தும் அறமே; மற்றவைகள் ஆரவாரகுணத்தை உடையனவாம். இதன் பொருள்: உள்ளத்திலே பாவமலமிருக்கிறது; அந்த மலத்தை நீக்கிக்கொள். நீ செய்யவேண்டிய புண்ணியம் அவ்வளவே. அதைத் தவிர்த்து வேறு எவ்வித புண்ணியஞ் செய்தாலும் அது வெறும் பயனில்லாத ஆரவாரமே.

நம்முள்ளமாகிய ஊற்றைச் சுத்திசெய்வது அவசியம் நம் கடமையாகும். அன்றேல், தீமையூறும் மானிட உள்ளத்தின் விளைவுகளாகிய நம்பேச்சினாலும் செய்கையினாலும் நமக்கும் பிறருக்கும் ஓயாத் துன்பமே வரும். தன்னுள்ளத்தைத் தானே சுத்திசெய்து தேறினவனுண்டா? எவனுமில்லை.

மனக்கபடமில்லாமல் துணிந்து தன் இதயத்தைச் சுத்தமாக்க ஒரு மகா யோகியானவர் வருந்தி முயன்றார். முயன்று கடைசியாக தேறிவிட்டேன் என்று நினைத்து ஏமாந்திருந்தார். அவருடைய உள்ளத்தைப் பரிசோதிக்கிற பரஞ்சோதி அதனுள் தன் ஒளியை வீசினபோது, அது முன்னிருந்தபடியே அழுக்காயிருக்கக் கண்டு வெட்கமடைந்தார். அவர் 'நன்மை செய்ய விருப்பம் உண்டானாலும், அதைச் செய்யத் திறமை ஒரு சிறிதும் எனக்கில்லையே' என்று வியாகுலப்படுகிறார்.

அதேன்? நச்சுப்பொய்கையில் ஓயாமல் குடிக்கிறவன் அதனால் பலம் குன்றி ஒடுங்கிவிடுவானல்லவா? அவ்வாறு தன் உள்ளமாகிய நச்சுப்பொய்கையில் பாவநினைவும், பாவப்பேச்சும், பாவச்செய்கையும் மாத்திரம் ஊறப்பெற்றவன் பாவத்திற்கு எதிர்த்தாளமாட்டாமல் பலம் குன்றியிருக்கிறான். பொய்கை நீரைச் சுத்திகரிக்க யாரேனும் ஒருவர் வந்து அதின் விஷத்தைப் போக்குகிற மருந்தை அதனுள் போடவேண்டும்.

அவ்வாறே நம் உள்ளத்துள் ஒருவர் வந்து அதின் நச்சுத்தன்மையை நீக்கவேண்டும். அப்படிச் செய்ய வல்லவர் யாரேனும் உண்டா? உண்டு. அவர்தான் இயேசு கிறிஸ்து பகவான். நம் உள்ளங்களைப் பாவமறச் சுத்திகரிப்பதற்கே அவர் மனுகுலத்தைத் தேடி வந்தார். அவர் மலப்பிராணியாகிய மனுஷனை மலம்நீங்கின புண்ணியப் பிராணியாக்க வல்லவர்.

அவர்மேல் பக்திவைத்து, 'இறைவனே என்னைத் திருவாட்கொள்ளும்' என்று ஓலமிட்டு வருந்துகிறவனை அவர் ஒருநாளும் ஒதுக்கமாட்டார். கன்றின்மேல் கனிந்துருகும் பசுப்போல அவர் அப்படி ஓலமிடுகிறவர்கள்மேல் பரிந்து உருகுவார். அவருடைய அருள் நமது உள்ளத்தில் வீசும்போது, அவர் சம்பாதித்த புண்ணிய பலன்களுக்கு நாம் பங்குள்ளவராகி அவர் வசப்பட்டுச் சுத்தமாவோம். இவ்வண்ணமே அவர்மேல் பக்திவைக்கிற யாவரும் முக்தியடைவார்கள்.

## A Grace-filled Life

## The 'Retrospect' of Rev. Hudson Taylor

**Translated by the Rev. N. Devasagayam, B.A.**

## திருவருட்பிரகாச ஜீவியம்

ஹட்ஸன் டேய்லர் ஐயரின் 'பின்னோக்குச் சரித்திரம்'

(தொடர்ச்சி)

### பத்தொன்பதாம் அதிகாரம்.

சீனா உள்நாட்டு மிஷன் ஏற்பட்டது

மேற்சொன்னவாறு சீனா உள்நாட்டு மிஷன் 1865-ம் வருஷத்தில் ஏற்பட்டது. அதற்கு முந்தியே அவ்விடத்தில் உழைத்துக்கொண்டிருந்த ஆட்களும் அந்த மிஷனில் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள். பெர்ஜெர் பெருமான் அக்காலத்தில் கீழ் கிரின்ஸ்டெட்டுக்கு (East Grinstead) அருகிலிருக்கிற சந்தில் (Saint Hill) ஊரில் வசித்தார்.



அவருடைய உதவியின்றி நான் இந்தப் பெருமுயற்சியில் முன்னேறிப் போக முடிந்திராது. நான் இனிச் சீனாவிலிருக்கிற காலத்தில் இவர் இந்த மிஷனின் தலைமை ஸ்தானத்தில் ஆகவேண்டியவைகளுக்குப் பொறுப்பு ஏற்றுக்கொண்டார். பிரயாணத்துக்குச் சகல தேவைகளும் சரிப்பட்டபின் திருஊழியத்திற்குத் தங்களை ஒப்புக்கொடுத்தவர்களை யழைத்துக்கொண்டுபோய் அவரவரை அவரவர் ஸ்தானத்தில் வைத்து, அவர்கள் வேலையை நானே நேரில் கண்காணிக்க ஏற்பாடு செய்தேன். இதற்கு முந்தியே அங்கே வேலை செய்துகொண்டிருந்தவர்களை ஆதரிக்க எங்கள் தேசத்திலிருந்த சிநேகிதர்கள் தூண்டாமலே தாராளமாய் அப்போதைக்கப்போது பணமனுப்பிக்கொண்டிருந்தார்கள். அதினால் அங்கத்திய திருஊழியர் எவ்விதக் குறைவுமின்றிக் காப்பாற்றப்பட்டார்கள்.

பதினாறு, பதினேழுபேர்களுக்கு வழிச்செலவுக்கும் கப்பற் கேழ்விக்கும் ஆரம்பச் செலவுகளுக்கும் 1500 சவரன் முதல் 2000 சவரன் வரைப் பிடிக்கும். இந்தத் தொகையைச் சேகரம்பண்ணி அவர்களை அனுப்புவதற்கு யத்தனம் செய்யவேண்டியது. 'சமய சந்தர்ப்பப் பத்திரிகை, நம்பர் I' (Occasional Papers, No. I) என்ற பெயரிட்டு ஒரு சிறு பத்திரிகையைப் பிரசுரம் செய்திருந்தேன். நாங்கள் சீனாவில் செய்துவருகிற வேலையைப்பற்றிய சவிஸ்தாரங்களை அவ்வேலைக்குப் பணச்சகாயம் செய்யும் நண்பர்களுக்கு வெளிப்படுத்தவேண்டும் என்பதே அதின் நோக்கம். அந்தப் பத்திரிகையிலே மேற்சொன்ன ஆட்களை யனுப்புவதற்குப் பிடிக்கும் செலவையும் எடுத்துக் காட்டினேன். அதைப் படிக்கிற சிலரையாகிலும் ஆண்டவர் மேற்காட்டிய முயற்சிக்குப் பணம் அனுப்பத் தூண்டுவார் என்று எதிர்பார்த்தேன். ஆளோடாள் முகமுகமாய்ப் பேசுவதினாலும், சபை கூட்டிப் பேசுவதினாலும், தண்டல் சீட்டுகள் மூலமாயும் பண வசூல் செய்யமாட்டேன் என்று தீர்மானம் பண்ணிக்கொண்டேன். மிஷனரிச் சேர்ப்புப் பெட்டிகள் மூலமாய்ப் பணம் சேர்ப்பது ஆக்ஷேபிக்கத்தக்கதல்ல என்று நினைத்து, யாராகிலும் கேட்டால் கொடுக்கலாம் என்கிற எண்ணமாய்ச் சில பெட்டிகளைச் செய்வித்து வைத்திருந்தேன். இந்த வகைப் பெட்டிகள் வாயிலாய்ப் பணம் சேகரிப்பது இந்நாள்வரையும் எங்கள் மிஷன் வாடிக்கையாகவே இருக்கிறது.

நான் என்னுடைய 'சமய சந்தர்ப்பப் பத்திரிகை, நெ. 1' ஐ மேற்போர்வைத் தாளுக்கு ஒரு சித்திரத்துடன் அச்சுப் பதிக்கிறவனிடம் அனுப்பினது 1866-௵ பெப்ருவரி௴ [illegible]வ. பதிக்கிறவன்

நான் கொடுத்த சித்திரத்தை அச்சுச் செதுக்கி, பத்திரிகையை அச்சடித்து, பிரசுரித்த பிரதிகளை மூட்டை கட்டி என்னிடம் அனுப்பினது மார்ச்சு௴ 12௳. இதற்கு முன்னேயே, மேற்சொன்ன பெப்ருவரி௴ 6௳ முதற்கொண்டு தினந்தோறும் மதியம் 12க்கும் 1க்கும் இடையில் எங்களுக்குத் தேவையான தொகையைத் தரும்படி ஆண்டவரை நோக்கி ஜெபிக்கலானோம். இந்த ஜெபம் பலித்த ஆச்சரியத்தை 'சமய சந்தர்ப்பப் பத்திரிகை, நெ. 2' லே இருக்கிற பின்வரும் பதிவுகளால் அறியலாம்:—

'1864-௵ வரவு 51 சவரன் 14 ஷில்லிங்கு
1865 ,, ,, 923 ,, 12 ,, 8 பென்சு
(ஜூன் முதல் டிசம்பர் வரை).

இதைத் தவிர, இரண்டு ஆட்களுக்குக் கப்பற் கேழ்வி இனும். இடையில் வந்த தடைகளினிமித்தம் 'சமய சந்தர்ப்பப் பத்திரிகை நெ. 1' 1866-௵ பெப்ருவரி௴ 6௳மட்டும் அச்சுக்கு ஆயத்தமாகவில்லை. 1865-௵ டிசம்பர்௴ 30௳ முதல் 1866-௵ பெப்ருவரி௴ 6௳ வரையும் கிடைத்த தொகை 170 சவரன் 8 ஷி. 3 பெ.

சற்றேறத்தாழ ஒரு மாதத்தில் எங்கள் புதிய மிஷனுக்கு நாங்கள் ஒருவரையும் கேளாதிருக்கையில் இவ்வளவு தொகை தேவனாலேயே தரப்பட்டதைப் பார்த்ததும் எங்கள் நெஞ்சில் மிகுந்த துணிவு உண்டாயிற்று. இன்னம் மிகப் பெரிய தொகைகளைத் தரும்படி அவரை வேண்டுவது எங்களுக்கு அவசியமாயிருந்தது. மற்றப்படி பத்துப் பதினைந்து ஆட்களை மே௴ மத்திக்குள் வேலைக்கு அனுப்புவது கூடாமையாகும். அந்தக் காலப்பகுதிக்குள் அவர் எத்தனை பேரை அனுப்பப் பிரியமோ அத்தனைபேருக்கும் வேண்டிய திரவியத்தை உதவும்படி தினந்தோறும் ஒருமித்து ஜெபம் செய்யப்பட்டது.

(இன்னும் வரும்.)

C. L. S. PRESS, MADRAS—1916

No. 123 ஆகஸ்டு 1916

# வேதியர் விளக்கு

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
4 - AUG 1916

## The Gladdening Ri…

**By the Rev. A. Silve…**

IT was a hot day in the month of April. The sun blazed down out of an unclouded sky. As the train rushed onwards, one could see abundant signs that the season of heat and drought had once more come. Save for an occasional temple pond, all the tanks were dry, lying parched and cracked beneath the burning sun. A short month ago the fields had been beautiful with harvest, but now scarcely any crops were to be seen. Only here and there the eye could mark a patch of green, a vivid spot of colour amid a waste of sad grey fields. The very trees were drooping, ready to cast away their leaves as if too languid to bear them any longer. From every rock the glare was radiated back and the heat haze lay shimmering over the whole plain.

It was well past mid-day when I left the train and set out for a distant village to attend a Harvest Festival. There was very little shade along the road and as the afternoon wore on the heat became more intense. All nature seemed to be oppressed by it. The sheep and cattle, leaving their weary search for food in the now almost barren fields, sought whatever shade was to be found and the birds, their song forgotten for the time, perched listless among the foliage of the trees. Few people were on the road or at work in the fields. It was not an hour in which to be abroad.

But as I came nearer the end of my journey, a change came over the scene. One seemed to be entering a different land. Green shady avenues stretched ahead. On either side fresh groves of palm trees appeared, rich with clustering fruit. Men were at work in the well watered fields. Beneath the

shade the cattle cropped the richer herbage and the sweet song of birds broke forth among the trees. The change was so marked that one could not but wonder at it. It was like reaching an oasis after a weary journey through the desert sand.

The reason of the change soon became evident. From time to time one caught a glimpse of a river winding through the level plain. Here was the subtle alchemist that wrought the change. And yet it was difficult to realize at first that the river was the cause. For it appeared, itself, to be the most barren stretch of all. Heaped up and covered in with burning sand, it seemed to be lying conquered, proclaiming the triumph of the sun and heat. But underneath the white hot sand, hidden away from the eye, the life-giving water was running clear and sweet enriching far beyond its banks the land through which it passed. Truly, a river is one of the greatest of nature's miracles. It will convert the wilderness into a fertile plain and make the desert 'Rejoice and blossom as the rose.' It is easy to understand the impulse which in the early days, when men worshipped the creature in place of the Creator, impelled them to bow down in worship before the rivers of their land. It is easy to understand the spirit which prompted the Egyptians in those early times to cast flowers upon the waters of the Nile and invoke its favour as the greatest of their gods. How great must have been their distress when, by the power of the Living God, the waters of that sacred river became turned into blood!

While the beauty which the river brought was still before my eyes, it was not strange that the thought should come into my mind 'Would that there were such a river which could thus change the soul of men and make it glad. A river of water brings countless outward blessings in its train to man and beast and field. It nourishes and enriches life. Would that there were such a river which could flow over and around the barren heart and make it rich in fruit for man and God.' And quickly following the thought came back the answering assurance in the words of the psalmist '*There is* a river', a river the streams whereof can make glad in a



spiritual sense not only the City of God but every city and and through which its waters flow.

But where is that river to be found? Does it lie beyond the seas in some unknown land? Some one has written: 'The traditions of every people have clustered their fairest fancies round some hidden spot on the earth's surface, secluded from the tumult and the pain of time. They tell of a haunt of ancient peace beyond the sterner laws and rougher visitations of the common world; a fastness of perpetual calm against which the tempests blow their challenging horns unheeded.' Is it to such a hidden land that we must turn our steps in search of the gladdening river? No, it lies nearer home, within the easy reach of all.

It may be said that every religion in some degree represents such a river. No matter what the religion may be, it is capable of bringing some gladness and uplift to the soul of those who hold it. Speaking of this a modern writer says: 'A legend of the Jews accounts for the existence of jewels. In Paradise was a temple built of mighty blocks of precious stone. Within it were pillared halls and cloisters of emerald and pearl and above it, domes of sapphire blazed in the sunlight. In this temple our first parents worshipped. On the day, however, on which they sinned the superb shrine was shattered into a million fragments which were sown broadcast over the earth, the emeralds, sapphires and rubies which we find to-day being the relics of the pristine sanctuary.' This is the wild setting of a sober fact. Through passion, ignorance and disobedience the temple of truth has been shattered and its precious fragments are found in all creeds and philosophies, 'With rubbish mixed and glittering in the dust.' Like the water in the river bed these divine truths may be lying buried far beneath the sand; covered over and distorted by falsities and superstitions, but yet at times they gleam brightly forth attracting Godwards the soul of man and making it glad.

Yet it is necessary to guard against too liberal a view. It is a common contention on the part of those who are tolerant of Christianity but refuse to embrace it or award it a higher place than their own religion that as all rivers bear seawards

the flotsam riding on their current, all religions alike bear Godwards the souls that commit themselves to them. 'All religions' they say 'lead to God; therefore why give up our own and embrace another?' Such an argument is plausible but false and dangerous. True, all rivers lead to the sea; all religions point to God. But all rivers are not equally safe for those who seek to make a highway of them. Some pass through deadly swamps, haunts of fever and disease, death traps for the helpless traveller. Some are thickly strewn with rocks and rapids on which the frail barque must meet with disaster. Some dry up entirely in the time of drought, bringing no help when the need is greatest, while others have to be guarded against as a source of danger lest they overflow their banks and spread disaster far around. It cannot be said that all religions bear the soul with equal certainty to God. Many prophets have pointed out the way; One only has said with truth 'I am the way.'

If a river is in the true sense to be a gladdening river there are two main characteristics which it must possess. First of all its source must be untainted. Imagine a river which should take its rise in the springs of Marah. After it had flowed a long distance from its source it might become almost pure, but still the taint of bitterness would remain in greater or in less degree. Again, the gladdening river must not be contaminated as it flows along. Its waters must remain sweet as when they issued from their source. The river Clyde is the busiest water-way in Scotland. At the place where it rises among the inland hills and for many miles along its course it is a clear sparkling stream. But as it passes through the towns it becomes tainted with the sewage which is directed into it. Recently the conditions have been greatly altered for the better but, some years ago, where it flowed through the great city of Glasgow, no life could be found among its waters and no verdure could be seen upon its banks. It had become a poisoned river. Our gladdening river must be pure in its source; it must remain untainted as it flows along. But where is such a river to be found?

Let us turn to the book of Revelation and read what



it says there of the river of St. John's vision. 'He showed me a pure river of water of life, clear as crystal, proceeding out of the throne of God and of the Lamb.' Here, surely, must be the river of our search. Its source is in heaven itself and its waters are pure from the touch of God. If we can but trace its course as it flows throughout the world, it will of truth bring life to us and peace and joy.

When St. John wrote of the Holy City coming down from heaven and of the river which flowed in the midst of its sacred street, he was not writing of what was to be in his own time; it was a vision of the future. The river of St. John flowed through a land and among men made perfect by God through Jesus Christ. He spoke of a time which has not yet come. But although the *conditions* are still far from perfect, we believe and know that that river is in the world to-day. Its waters are the waters of which Christ spoke when He said 'Whosoever drinketh of the waters that I shall give him shall never thirst; but the water that I shall give him shall be in him a well of water springing up into everlasting life.' Let us think then for a little of this river, how we may reach it and the countless blessings it will bring to us.

*To be continued.*

## Holiness

**By the Rev. A. Paramanandam**

## பரிசுத்தம்

(தொடர்ச்சி)

**நான்காம் அதிகாரம்**

பரிசுத்தமாக்குதல் தேவனுடைய வேலை

இரண்டாவது, கிறிஸ்துவின் கிரியை இப்படிச் சிரேஷ்டமாயும் நாம் பரிசுத்தமாக்கப்படுவதற்கு அவசியமாயுமிருக்கிறது. நம்மைப் பரிசுத்தமாக்குகிற கிரியையோ அதை நடத்துகிற பரிசுத்தாவியானவரை யடுத்தது. தேவனோடு ஐக்கியமாவதினால் மாத்திரம் பரிசுத்தம்

உண்டாகிறது. தேவனுடைய ஐக்கியமோ தேவன் நம்மில் சேர்ந்து தம்முடைய கிரியையை நம்முடைய இருதயங்களில் நடப்பிக்கிறதினாலே மாத்திரம் உண்டாகிறது. இதுவே பரிசுத்தாவியானவரின் கிரியை. அவரே எங்கும் நிறைந்த சர்வ வியாபி. கிறிஸ்துவானவர் தேவனை மனுஷருக்கு வெளிப்படுத்துகிற காரியத்திலும், மனுஷரை இரட்சிக்கிற காரியத்திலும் உண்டாகிற ஆவிக்குரிய வரங்களை பரிசுத்தாவியானவர் நமக்கு எவ்வளவு கொடுக்கிறாரோ அவ்வளவு மாத்திரம் நம்முடையதாகிறது. நாமே அவைகளைச் சம்பாதித்துக் கொள்ளலாகாது. கிறிஸ்து நமக்கு வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறது நிஜம் (யோவா. $14^{6}$). ஆனால் அந்த வழியில் நம்மைச் சேர்க்கிறவரும், அந்தச் சத்தியத்தை நமக்கு விவரிக்கிறவரும், அந்த ஜீவனை நம்மில் பிறப்பிக்கிறவருமானவர் பரிசுத்தாவியானவரே. குமாரன் மூலமாயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான். பரிசுத்தாவியானவரின் மூலமாயல்லாமல் ஒருவனும் குமாரனிடத்தில் வருவதில்லை. பரிசுத்த ஆவியினாலேயன்றி இயேசுவைக் கர்த்தரென்று ஒருவனும் சொல்லக்கூடாது (1 கொரி. $12^{3}$). பரிசுத்தாவியானவர் குமாரனை மகிமைப்படுத்துகிறார். ஏனென்றால் குமாரனுடையதில் எடுத்து நமக்கு அறிவிக்கிறார் (யோவா. $16^{14}$). பரிசுத்தாவியானவர் நம்மில் நடப்பிக்கிற கிரியையானது நம்மை மறுபடியும் பிறக்கச் செய்கிற விஷயத்தில் ஆரம்பமாகி நம்மை பூரணமாய்ச் சுத்திகரிக்கும் வரைக்கும் நடந்துகொண்டேவருகிறது. பரிசுத்தமாக்கப்படுவதற்கு முன் புதுஜீவன் உண்டாயிருக்கவேண்டுமென்று பொதுவாய்ச் சொன்னாலும், புதுஜீவன் பரிசுத்தமாக்கப்படுவதற்குச் சம்பந்தமாயும் பிராரம்பமாயுமிருக்கிறதென்று நியாயமாய்ச் சொல்லலாம். நம்மை மறுபடியும் பிறப்பிக்கிறது பரிசுத்தமாக்குகிறதற்குச் சம்பந்தமான பரிசுத்தாவியானவருடைய முதல் வேலை. ஒருவன் ஆவியினால் பிறவாவிட்டால் தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் (யோவா. $3^{5}$). மறுபிறப்பாவது தேவாவியானவர் தம்முடைய சுபாவத்தோடு நம்முடைய சுபாவத்தைச் சேர்த்துக்கொள்வதுதான். நம்முடைய சுபாவத்தை தேவாவியானவர் தம்முடைய ஐயத்தில் சேர்த்துக்கொண்டு, அந்த சுபாவம் சம்பூரணமாய் பரிசுத்தமாகிற பரியந்தம் அதைச் சுத்தஞ் செய்துகொண்டே வருகிறார். பரிசுத்தாவியானவர் செய்கிற பரிசுத்தமாக்குகிற வேலையில் அடங்கியிருக்கிற வேறே வேறே காரியங்களைப் பகுத்துப் பார்ப்போமாக:

(*a*) நம்முடைய மாம்ச சுபாவத்தை எதிர்த்து அதோடு போராடி அதை வென்று நாசஞ் செய்வதே பரிசுத்தாவியானவருடைய வேலை. ஆவி மாம்சத்துக்கு விரோதமாய் நிற்கிறது (கலா. $5^{17}$). மனோவாக்



குக் காயங்களினால் பாவம் சம்பூரணமாய் நிர்மூலமாகும் வரைக்கும் அவருடைய வேலை முடிவதில்லை. இந்த வேலை பாவத்தை ஜெயிப்பதைப்பார்க்கிலும் வெகு விசேஷமானது. இராஜன் ஒருவன் தன் இராஜ்யத்திலுள்ள தீவட்டிக் கொள்ளையை அடக்கவேண்டுமென்று எண்ணி, காவற்காரரை நியமித்து, தன் இராஜ்யத்தின் பெரிய ரஸ்தாக்களைப் பத்திரஞ்செய்து, அவ்வளவில் நிறுத்தாமல், அரணியத்துக்கு ஓடிப்போயிருக்கிற கள்ளரை தன் சிப்பாய்கள் தேடி, அவர்கள் ஒளித்துக்கொண்டிருக்கிற கெபிகளைக் கண்டுபிடித்து அவர்களெல்லாரையும் பிடிக்கவேண்டுமென்று எப்படி கட்டளை கொடுத்தானோ, அப்படியே பரிசுத்தாவியானவர் நம்முடைய நடத்தையில் பகிரங்கமாய் காணப்படுகிற துஷ்கிருத்தியங்களை அடக்குவது மாத்திரமல்ல, தேவனுக்கு துரோகமாயிருக்கிற ஒவ்வொரு துரிச்சையின் அடைபாளங்களையுங் கண்டுபிடித்து, அது நமது இருதயத்தில் ஸ்தாபித்திருக்கிற கெபிவரைக்கும் பின்தொடர்ந்து போராடி அதை அடியோடு நாசஞ்செய்கிறார். நம்முடைய இருதயத்தின் மறைவான இடங்களில் நமக்கு என்றைக்கும் தெரியாமல் ஒளித்து பதுங்கியிருக்கிற துர்க்குணங்களைக் கண்டுபிடித்து, வெளியே இழுத்து அவைகளைக் கொன்றுவிடுகிறார்.

(*b*) மனுஷன் தேவனைச் சேர்ந்தவனாயிருக்கிறான் என்னும் அறிவை அவனுடைய மனதில் பிறப்பிப்பது பரிசுத்தாவியானவருடைய கிரியையே. நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம் என்பது நமக்குத் தெரியாமலிருந்தால், நாம் எக்காலத்திலாகிலும் தேவனைக் காணலாம் என்று எதிர்நோக்குவது நமக்குள் இராதே. பரிசுத்தாவியானவர் நம்முடைய மனதில் இந்தச் சங்கதியை நிச்சயப்படுத்துகிறார். இந்த எதிர்பார்க்குதலையும் உண்டாக்குகிறார். நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம் என்பதற்குப் பரிசுத்தாவியானவரே சாட்சியுமிடுகிறார் (ரோ. $8^{16}$).

(*c*) நம்மை தேவனுடைய சொத்தாக நியமித்து அவருடைய சேவைக்குப் பிரதிஷ்டைசெய்வது பரிசுத்தாவியின் வேலை. நம்முடைய ஆத்துமாவில் அவர் சேருவதினால் நாம் தேவனால் சம்பாதிக்கப்பட்ட சொத்தாயிருக்கிறோம் என்பதற்கு பரிசுத்தாவியால் அவருக்குள் நமக்கு முத்திரையிட்டிருக்கிறார் (எபே. $1^{13}, ^{14}$). நம்முடைய ஆத்துமாவில் இன்னும் வாசஞ்செய்து நமது தேகத்தைத் தமக்குமூலஸ்தானமாக்கிப் பிரதிஷ்டை செய்வதினால், தேவாலயப்பொன்னை முக்கியப்படுத்துகிற பிரகாரம் (மத். $23^{17}$). நம்முடையவைகளெல்லாம் தேவனுக்கென்று பிரித்தெடுக்கப்பட்டதாகச் செய்கிறார். அவர் நம்மில் இருக்கிற காலமெல்லாம் கிரயத்துக்குக் கொள்ளப்பட்டவர்

களாயிருப்பதினால், நீங்கள் உங்களுக்குச் சொந்தமான சொத்தல்லவென்று ஞாபகப்படுத்திக்கொண்டுவருகிறார் (1 கொரி. $6^{19}$).

(*d*) நம்முடைய சுபாவத்தை அடக்கி ஆளுவது பரிசுத்தாவியின் வேலை. நமது ஆசாபாசங்களை லோகத்திலிருந்து இழுத்துக்கொண்டு தேவன் பேரில் நாட்டுகிறார். நம்முடைய இருதயத்தைக் கர்த்தருடைய நாமத்திற்குப் பயந்திருக்கும்படி ஒருமுகப்படுத்துகிறார் (சங். $86^{11}$). ஒவ்வொரு எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறார் (2 கொரி. $10^{5}$). நம்முடைய சுபாவத்துக்குச் சேர்ந்திருக்கிற எல்லா சக்திகளையும் தேவனுடைய ஊழியத்துக்கென்று ஒன்றாய்க் கட்டி, நாம் உள்ளத்தில் சாமர்த்தியமுள்ளவர்களாகும்படி நம்மை இடைவிடாமல் உள்ளான மனுஷனில் வல்லமையாய்ப் பலப்படுத்துகிறார் (எபே. $3^{16}$). நமது பலவீனங்களில் நமக்கு உதவி செய்கிறார் (ரோ. $8^{26}$). நமக்குள்ளே வல்லமையாய்க் கிரியை நடப்பித்து நம்முடைய பிரயாசங்களை நிறைவேற்றுகிறார் (கொலோ. $1^{29}$).

(*e*) நம்மை தேவசாயலுக்குச் சரியாக புதுப்பிக்கிறது பரிசுத்தாவியானவருடைய வேலை. ஆவியானவரால் உண்டாகும் கனிகளை நாம் கொடுக்கும்படி நம்முடைய சுபாவத்தைத் தம்முடைய சுபாவத்தோடு சேர்த்துக் கட்டுகிறார். தேவனுடைய பிரமாணங்களை நம்முடைய மனதிலே வைத்து நம்முடைய இருதயங்களில் அவைகளை எழுதுகிறார் (எபி. $8^{10}$). தேவன் நமக்கருளியிருக்கிற பரிசுத்தாவியின் மூலமாய் தேவஅன்பு நம்முடைய இருதயங்களில் தாராளமாய் ஊற்றப்படுகிறது (ரோ. $5^{5}$). தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நாம் நிறப்பப்படும்வரைக்கும் பரிசுத்தாவியானவர் நம்மை தேவனுடைய அன்பினாலே நிரப்புகிறார் (எபே. $3^{19}$).

(இன்னும் வரும்.)

# High Place

## மேடை

1. 'மேடு' என்பது இயற்கையான ஓர் உயர்ந்த ஸ்தலம். 'மேடை' என்பது மனுஷர்களால் போடப்பட்ட ஒரு உயரமான ஸ்தலம். தமிழ் வேதாகமத்தை மொழிபெயர்த்தவர்கள் இந்தப் பதத்தினாலே கானான்தேசத்தில் உள்ள 'பாமா' (*Bamah*) என்னும் ஸ்தலங்களைக் குறித்திருக்கிறார்கள். வழக்கமாய் இந்த ஸ்தலங்கள் மேடான இடங்களில் இருந்ததினாலே அவைகளுக்கு 'மேடு' என்று



சொல்வதே நியாயம். சில இடங்களில் இந்தச் செய்குன்றுகளை உண்டாக்கினதினாலே இவைகளுக்கு 'மேடை' என்று சொல்வதும் நியாயமே. ஆனால் சில இடங்களில் இந்த மேடைகள் மேடான இடங்களிலே அல்ல பள்ளங்களிலே இருந்ததினாலே இவைகள் எப்பொழுதும் குன்றுகள் என்று நினைக்கக்கூடாது. ஆதலால் இதிலே நாம் 'மேடை' என்னும் பதத்தை அல்ல எபிரெய பதமாகிய 'பாமா' என்னும் பதத்தைச் சொல்வோம்.

2. 'பாமா' என்பது தேவதரிசனம் விசேஷமாய்க் கிடைத்த ஒரு ஸ்தலத்தையும், தேவனை வணங்கும்படி பலிபீடமும், கல்தூண்களும் உள்ள இடத்தையும் குறிக்கிறது. சேமியருடைய அபிப்பிராயத்தின்படி தேவர்கள் நீரூற்றுகளுள்ள இடங்களிலும் பெரிய மரங்களிலும் விநோதமான கற்பாறைகளிலும் மலைகளிலும் தரிசனமாவார்கள். ஆதலால் அவர்கள் இந்த இடங்களைக் கவனித்து இவைகள் தேவஸ்தலங்களாயிருப்பதற்குத் தகுந்தவை என்று நினைத்து, பெயர்செபாவிலுள்ள கிணற்றண்டையும், மொரேவிலுள்ள மரங்களின் கீழும், ஒரேப் சீனாய் தாபோர் முதலிய மலைகளிலும் 'பாமா' என்னும் தேவஸ்தலங்கள் இருக்கின்றன என்று நினைத்தார்கள். (ஆதி $12^{6}$; யாத் $3^{1}$; உபா $11^{20}$; ஓசி $5^{1}$).

3. 'பாமா' என்னும் ஸ்தலங்கள் சில, மேட்டிலே இருக்கும். ராமா முதலிய இடங்களில் 'பாமா' என்னும் தேவஸ்தலங்கள் மேட்டிலே இருந்தன (1 சாமு. $9^{13}$). ஆனால் எரேமியா தீர்க்கதரிசி தோப்பேத் பள்ளத்தாக்கிலுள்ள 'பாமா'வைப்பற்றிப் பேசுகிறான் (எரே. $7^{31}$). கேசேர் பட்டணத்தில் அந்தப் பட்டணம் கட்டப்பட்டிருந்த இரண்டு மலைகளுக்கிடையிலுள்ள பள்ளத்தாக்கிலே அந்த ஊர் 'பாமா' இருந்தது. இந்த ஸ்தலங்கள் பூர்வீக காலமுதல் இருந்தன. அவைகளில் முக்கியமானவை 'பெத்தேலில் உள்ள ராஜாவின் பரிசுத்தஸ்தலம்' (ஆமோ. $7^{31}$). தாணில் இருக்கிற ஸ்தலம், கில்காவிலும் பெயர்செபாவிலும் கிபியோனிலும் இருந்த ஸ்தலங்கள், ஆகிய இவைமுதலியவை. கிபியோனில் இருக்கிற ஸ்தலம் பெரிய மேடையாயிருந்தது. நியாயாதிபதிகளின் காலத்தில் சீலோவிலும் அதற்குப் பிற்பாடு நோபிலும் பெரிய தேவஸ்தலம் இருந்தது. (நியா. $21^{19}$; 1 சாமு. $1^{3}$; $21^{1}$; 1 இரா. $3^{4}$).

4. கானானியர் தாங்கள் ஏற்படுத்தின மேடைகளில் பாகால் அஸ்தரோத் முதலிய தேவதைகளை வணங்கிவந்தார்கள். 'பாமா' என்னும் அந்த ஸ்தலங்களின் ஆராதனையாவது:—ஒரு கற்பாறையின் மேற்புறப்பைச் சமமாக்கி, பலியில் சிந்தின ரத்தத்தை ஏற்றுக்கொள்ளுகிறதற்குக் கிண்ணங்கள்போன்ற பள்ளங்களை அதில் வெட்டுவார்

கள். இதினாலே பூர்வீகத்தார் கற்பாறையில் வசிக்கும் தங்கள் தேவதைகள் ரத்தத்தைச் சாப்பிடும்படி இந்தப் பள்ளங்களை வெட்டினார்கள் என்று தோன்றுகிறது. எபிரெயர்கள் கானான்தேசத்தைப் பிடிக்கும் காலத்தில் 'பாமா' என்னும் ஒவ்வொரு ஸ்தலத்திலும் பலிபீடம் மண்குவியலாய் அல்லது வெட்டப்படாத கற்களினால் செய்யப்பட்டதாயிருக்கும் (யாத். $20^{25}$). இவ்விடங்களில் கல்தூண்களும் அசேரா என்னும் மரங்களும் தண்ணீர்த்தொட்டியும் இருந்தன. இந்த ஸ்தலங்களில் சிலையாவது விக்கிரகமாவது ஏபோத்தாவது உடன்படிக்கைப் பெட்டியாவது இருந்தால், இவற்றை வைக்கும்படி ஒரு வீட்டையாவது ஆலயத்தையாவது கட்டுவார்கள். (நியா. $17^{5}$; 1 சாமு. $1^{9}$; 1 இரா. $12^{31}$). சில ஸ்தலங்களில் போஜனசாலை ஒன்றிருக்கும். (1 சாமு. $9^{22}$). மற்றப்படி இந்த ஸ்தலங்களில் கட்டடம் இல்லையென்றும், அங்கே பூசைசெய்கிறவர்கள் வெளியிடத்தில் ஆராதனை நடத்துவார்கள் என்றும் தோன்றுகிறது. பூர்வகாலத்து 'பாமா' என்னும் ஸ்தலங்களில் சிலவற்றைச் சேர்ந்த நிலத்தைத் தோண்டி ஆராய்ச்சி செய்த வேதசாஸ்திரிகள் கணக்கில்லாத சிறிய மண்பாத்திரங்களை இங்கே கண்டுபிடித்து, அவைகளில் புதிதாய்ப் பிறந்த குழந்தைகளின் எலும்புகளைப் பார்த்து இவ்விடங்களில் கானானியர் தங்கள் தேவதைகளுக்குத் தங்கள் முதற்பேறான பிள்ளைகளைப் பலியாக செலுத்தினதாக அறிந்திருக்கிறார்கள்.

5 இஸ்ரவேலர் கானான்தேசத்தை ஜெயித்து இந்த தேவஸ்தலங்களைத் தங்கள் வசப்படுத்தினபிறகு மார்க்க விஷயமாய் அவர்களுக்குப் பலவிதமான நஷ்டங்கள் உண்டாயிற்று என்று தோன்றுகிறது. ஏனென்றால் பக்தர்கள் அவ்விடங்களிலே பயபக்தியுடனே யேகோவாவை வணங்கிவந்தாலும் பூர்வீக சாதாரண ஜனங்கள் அவ்விடங்களில் வணங்கின பேய் பிசாசுகளையும் தேவ தேவதைகளையும் குறித்துக் கேள்விப்பட்டு அவைகளை வணங்கும்படி வஞ்சிக்கப்பட்டுப் போனார்கள். வழக்கமாய் 'பாமா' என்னும் ஸ்தலங்களில் ஆராதனை செய்கிறவர்கள் தசமபாகம் முதலிய காணிக்கைகளைக் கொண்டுவந்து, பலிசெலுத்தி யேகோவாவுக்கு முன்பாக போஜனம் பண்ணினார்கள். இங்கேதான் ஆசாரியர்கள் மூலமாய் தேவ சித்தத்தை அறிய நாடுவார்கள். இவ்விடங்களில் நியாயவிசாரணை நடத்தி யேகோவாவுக்கு முன்பாக தங்கள் வழக்கைத் தீர்த்துக்கொள்ளுவார்கள். யுத்தகாலத்தில் இவ்விடங்களிலே யேகோவாவினுடைய யுத்தத்தை நடத்தும்படி போர்வீரர்களை பிரதிஷ்டை செய்வார்கள். கைப்பிசகாய் ஒருவனைக் கொன்றுபோட்டவன் இந்த ஸ்தலங்களில் அடைக்கலம் புகுந்துகொள்ளலாம்.



6. இவ்விதமாய் இஸ்ரவேலர் இவ்விடங்களிலே யேகோவாவை வணங்கினதினால் அவர்கள் குற்றஞ்செய்யவில்லை. ஆனால் அவர்கள் பூர்வீகத்தார்களைப்போல மட்டுக்கு மிஞ்சிச்சாப்பிட்டு மதுபானம்பண்ணி துன்மார்க்கமாய் நடக்கும்போது யெகோவாவைப்பற்றிய மெய்பக்தியெல்லாம் அற்றுப்போயிற்று (உபா. $23^{18}$; 1 இரா. $14^{24}$; ஆமோ. $2^{8}$; ஏசா. $28^{7}$). தீர்க்கதரிசிகள் இதைக்குறித்து அடிக்கடி சொல்லுகிறார்கள். ஓசியா இஸ்ரவேலர் எல்லாரும் விக்கிரக ஆராதனை செய்து ஒழுங்குக்கு விரோதமான சடங்காசாரங்களை நடத்துகிறவர்கள் என்று தெளிவாய்ச் சொல்லுகிறான். பிந்தின காலங்களில் எபிரெயர்கள் யேகோவா ஒருவரே கடவுள் என்று எப்படி நினைக்கவந்தார்களோ அப்படியே தாங்கள் எருசலேமிலே மாத்திரம் ஆராதனைசெய்வது அவசியம் என்றும் நினைத்தார்கள். உபாகமத்தில் சொன்ன கட்டளை இதற்கு அத்தாட்சி. (உபா. $12^{4}$). எபிரெயர்கள் இவ்விதமாய் எருசலேமிலே மாத்திரம் இந்த ஆராதனையை நடத்தும்படி எசேக்கியா ராஜா பிரயாசப்பட்டான். யோசியா ராஜா கி. மு. 621-ம் வருஷத்தில் 'பாமா' என்னும் ஸ்தலங்களை அழித்து அவைகளில் நடந்த ஆராதனையை ஒழித்துவிட்டான் (2 இரா. $23^{5}$). யோசியா இறந்தபிறகு ஜனங்களில் சிலர் மறுபடியும் இந்த ஸ்தலங்களில் ஆராதனையை நடத்தினார்கள். சிறையிருப்புக் காலத்தில் யூதர்கள் எல்லாரும் தீர்க்கதரிசிகள் அருளின மெய்ப்போதகத்தின் மூலமாய் யேகோவாவைக்குறித்த மெய்ஞ்ஞானத்தைப் படிப்படியாய் அடைந்ததினாலே அவர்கள் சிறையிருப்பிலிருந்து திரும்பிவந்தபிறகு 'பாமா' என்னும் ஸ்தலங்களில் ஆராதனை நடத்தவே இல்லை.

## The Call of Jeremiah—Sermon Outline

## எரேமியாவின் அழைப்பு

எரே. 1. 5. 'நான் உன்னைத் தீர்க்கதரிசியாகக் கட்டளையிட்டேன்.'

எரேமியா என்பவன் அழைக்கப்பட்ட சமயத்தில் வாலிபனாய் இருந்தான். இவன் ஆசாரிய வம்சத்தில் பிறந்தவன். அக்காலத்திய யூதர்கள் மெய்த்தேவனை மறந்துவிட்டு, அந்நிய தேவர்களைத் தொழுதுகொண்டு அதிக துன்மார்க்கமாய் நடந்துவந்தார்கள். அதுவுமன்றி துன்மார்க்கரைச் சீர்திருத்தவேண்டிய ஆசாரியரும் தகாத வண்ணமாய் நடந்தார்கள் ($5^{30, 31}$ காண்க). இப்பேர்ப்பட்ட சந்தர்ப்பத்தில் இந்த வாலிபன் கர்த்தரால் அழைக்கப்பட்டான்.

அவன் செய்யவேண்டிய வேலை இன்னதென்பதை இவ்வசனத்தில் திட்டமாய்ச் சொல்லப்படுகிறது; அவன் தீர்க்கதரிசியாயிருக்க அழைக்கப்பட்டான். தீர்க்கதரிசி என்றால் இனி நடக்கப்போகிற காரியங்களை முன்னுரைப்பவர் அல்ல. தீர்க்கதரிசிகள் கர்த்தரால் ஏவப்பட்டு சில சமயங்களில் இவ்விதமாய் செய்து வந்தாலும் அவர்களுடைய முக்கிய வேலை அதல்ல. தீர்க்கதரிசி என்னும் பதத்தின் உள்ளான அர்த்தம் இன்னொருவருக்காகப் பேசுகிறவன் என்பதே. தேவனுடைய வார்த்தையைக் கேட்டறிந்து அதைக் கட்டியக்காரரைப்போல் ஜனங்களுக்குச் சொல்வதே அவர்களுடைய வேலை. தேவஊழியர் யாவரும் இதே விதமான வேலை செய்யவேண்டியதாயிருப்பதால் அவர்கள் எல்லாரும் ஒருவாறாகத் தீர்க்கதரிசிகளாயிருக்கிறார்கள் என்று சொல்லலாம். ஆகவே அவர்களுக்கும் எரேமியாவுக்கும் பல விஷயங்களில் சம்பந்தம் உண்டு. இதில் மூன்று காரியங்கள் கவனிக்கப்படத்தக்கவை.

1. கர்த்தர் இவனுக்குக் கொடுத்த அழைப்பு.

பரி.: பவுலைப்போல் தாயின் கர்ப்பத்திலிருந்து தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டான். தானாக இந்த மேலான வேலையைச் செய்யத் துணியாமல் தேவதரிசனம் அடைந்து அழைக்கப்பட்ட சமயத்தில் அதைச் செய்யத் துணிந்தான். எத்தனையோ தேவஊழியர் கர்த்தரால் அழைக்கப்படாமல் வயிற்றுக்காக ஒரு விதமான உத்தியோகமாக கர்த்தருடைய வேலையையும் செய்யத்துணிகிறார்கள். அப்பேர்ப்பட்டவர்களுக்கு எவ்வளவு சாதுரியமும் திறமையும் இருந்தாலும் ஒன்றுக்கும் உதவாது. தேவஅழைப்பும் தேவதரிசனமும் அத்தியாவசியமே.

2. கர்த்தர் இவனைப் பக்குவப்படுத்தல்.

அழைக்கப்பட்ட சமயத்தில் வேலை செய்யும்படிக்கான திறமை இவனுக்கில்லை. ஆகையால் தேவன் இவனுக்கு அதற்கு வேண்டிய லட்சணங்களை அளித்தார்.

(*a*) பரிசுத்தம். (வச. 5) போதனையைவிட சாதனை முக்கியமானதால் தேவஊழியனுக்குப் பரிசுத்தம் என்பது இன்றியமையாதவசியம். அதைப் பூரணமாய் அடையக்கூடிய வகை 1 யோவான் 1[7], [9]லே சொல்லப்படும். (சகல, எல்லா என்கிற பதங்களை முக்கியமாய்க் கவனிக்கவேண்டும்.)

(*b*) தைரியம். (வச. 8. 17). செய்யவேண்டிய வேலை மகா கஷ்டமானது. ராஜாக்களையும், பிரபுக்களையும், ஆசாரியரையும், சாதாரண ஜனங்களையும் கண்டித்து, அவர்களுடைய பாவத்தை உணர்த்துவதே. இவன் தைரியமில்லாத வாலிபன் (வச. 6). என்றாலும் இந்த கஷ்டமான வேலைக்கு வேண்டிய தைரியத்தைப் பெற்றான்



(வச. 18). நம்மெல்லா வேலையிலும் நமக்கு தைரியம் அவசியம். இவனுக்கும் சீஷருக்கும் கிடைத்த விதமாய் அது நமக்கும் கிடைக்கலாம் (அப். 1[8]).

(*c*) ஞானம். (வச. 6). பேசவேண்டிய வார்த்தைகள் இவனுக்கு அருளப்பட்டன. எல்லா தீர்க்கதரிசிகளின் வாயிலும் கர்த்தர் வார்த்தை போடுவார் (ஏசா. 6[6],[7]. எசே. 2[9]–3[3]). கர்த்தருடைய வார்த்தை அவன் உள்ளத்தில் போடப்பட்டதற்கு உவமானம். (மத். 10[19] யும் காண்க). இந்த வாக்கு நமக்குமுரியது.

நமக்கு வேண்டிய ஞானத்தைக் கர்த்தர் கட்டளையிடுவார்.

III. கர்த்தர் இவனுக்குச் செய்த வாக்கு (வச. 8[19]). இந்த வேலையைச் செய்யப்போ என்று சொல்லாமல், என்கூடவா என்றார். கர்த்தருடைய பிரசன்னம் இவனுக்குக் கேடகமும் பெலனுமாயிருந்தது. அந்த வாக்கு நமக்கும் கொடுக்கப்பட்டது (மத். 28[20]). இந்த திருவாக்கை நம்பி, எரேமியாவைப்போல் தைரியமாகவும், ஞானமாகவும், உற்சாகமாகவும் கர்த்தரின் வேலையைச் செய்யக்கடவோம்.

## A Grace-filled Life

## The 'Retrospect' of Rev. Hudson Taylor

**Translated by the Rev. N. Devasagayam, B.A.**

## திருவருட்பிரகாச ஜீவியம்

ஹட்ஸன் டெய்லர் ஐயரின் 'பின்னோக்குச் சரித்திரம்'

(தொடர்ச்சி)

பத்தொன்பதாம் அதிகாரம்

சீன உள்நாட்டு மிஷன் ஏற்பட்டது

'மேலே சொன்ன தடைகளினிமித்தம் 'சமய சந்தர்ப்பப் பத்திரிகை நெ. 1' மார்ச்சு மீ 12உ வரையும் விற்பனைக்கு வர முடியாதிருந்தது. இந்தத் தேதியில் என்னுடைய மிஷன் காசு வரவுப் புத்தகத்தை எடுத்துப் பார்த்தேன். நாங்கள் விசேஷ ஜெபம் செய்யத் துவக்கின பெப்ருவரி மீ 6உக்கு முன்னும் அந்தத் தேதிக்குப் பின்னும் சம அளவாய் 1 மாதம் 6 நாள் அளந்து இரண்டு சமகாலப் பகுதிகளைப் பிரித்துவைத்து, அந்தக் காலப்பகுதிகளில் வந்த பண வரவைக் கவனித்தால், ஜெபம் பலித்த அதிசயம் உள்ளங்கை நெல்லிக்கனியாய் விளங்கும். அது வருமாறு:—

| | சவ. | ஷி. | பெ. |
|---|---|---|---|
| டிசம்பர்மீ 30உ 1865லிருந்து பெப்ருவரிமீ 6உ 1866 வரையும் வரவு ... ... ... | 170 | 8 | 3 |
| பெப்ருவரிமீ 6உயிலிருந்து மார்ச்சுமீ 12உ வரையும் வரவு ... ... ... | 1,774 | 5 | 11 |
| தர் வாக்கிட்டவர் பின்னர் அனுப்பினது வரவு | 200 | 0 | 0 |
| மொத்தம் வரவு ... | 1,974 | 5 | 11 |

இவ்வளவும் 'சமய சந்தர்ப்பப் பத்திரிகை நெ. 1' வெளிப்படாமலும் ஆட்கள் கையில் எட்டாமலும் இருந்த காலத்திலேயே கிடைத்தது. ஆகவே, இந்தத் தொகை கிடைத்தது அந்தப் பத்திரிகையினால் வந்ததல்ல. அது, தம் அருமைத் திருக்குமாரனின் சுவிசேஷத்தில் பொறுப்பேற்று உழைப்பதற்கு அவர் அழைத்தவர்கள் ஒருமித்து ஜெபித்த ஜெபத்திற்கு அவரளித்த உத்தரவு.

இந்த இரண்டு சமகாலப் பகுதிகளின் வரவோடு அவ்வளவேயுள்ள மூன்றாமொருகாலப் பகுதியின் வரவை ஒத்துப்பார்ப்போம். மார்ச்சுமீ 12உ முதல் ஏப்ரல்மீ 18உ வரையும் வந்த வரவு 529 சவரன். இது என்ன காட்டுகிறது? ஒரு விசேஷ அவசரத்திற்குக் கேட்டதைத் தந்தபின் தேவன் விசேஷ உதவி செய்வதையும் நிறுத்திவிடுவார் என்று காட்டுகிறது. மெய்யாகவே ஜீவனுள்ள தேவன் இருக்கிறார். அவரே ஜெபத்தைக் கேட்டு அதற்கு உத்தரம் அருளுகிறவர்.'

இப்படி எங்கள் ஜெபம் பலித்தபின் 'சமய சந்தர்ப்பப் பத்திரிகை, நெ. 1' ஐ வெளியிட்டு உலாவச் செய்வது சரியல்ல என்கிற எண்ணம் வந்தது. ஏனென்றால், ஆண்டவர் எங்கள் ஜெபத்திற்கு உத்தரவாய் ஏற்கனவே கொடுத்திருக்கிறதை அந்தப் பத்திரிகை இன்னம் எங்களுக்குள்ள தேவையாகக் காட்டுகிறது. சிறிது யோசித்துப் பார்த்ததில் எங்கள் மிஷன் ஆட்களுக்குப் பிரயாணச் செலவும் கப்பற் கேழ்வும் ஜெபத்திற்கு உத்தரவாய் அகப்பட்டுவிட்டன என்று ஒரு வர்ண துண்டில் அச்சடித்து ஒவ்வொரு பிரதியிலும் ஒட்டினதினால் இந்த மலைவு தீர்ந்தது. முன்னொரு காலத்தில் மோசேக்குண்டான சங்கடம் எங்களுக்கும் ஒருவாறு உண்டாயிருந்ததென்று பார்த்தோம். அப்பேர்ப்பட்ட சங்கடங்கள் இக்காலத்தில் நேர்வது வெகு அபூர்வம். கூடாரத் தேவாலயம் சமர்ப்பிக்கிறதற்குத் தேவைக்கு மிஞ்சி ஜனங்கள் நன்கொடை கொடுத்திருந்ததினால், இனிக் கொடை அவசியமில்லை என்று அவர் விளம்பரம் செய்யவேண்டியதாயிற்று. பணம் தரக் கேட்பது குறைவாயும் தேவ ஆவியின் பலத்திலும் ஜனத்தின் ஞான ஜீவனை ஆழமாக்குவதிலும் சார்ந்திருப்



பது மிகுதியாயும் நடைபெறுமானால் நம் கிறிஸ்தவ வேலைக்குரிய ஒவ்வொரு பகுதியிலும் மோசே காலத்து அனுபவம் சர்வ சாதாரண அனுபவமாயிருக்கும் என்று எங்களுக்கு நிச்சயமுண்டாயிற்று.

இனித் தாமதமில்லாமல் சீனாவுக்குப்போக ஆயத்தப்பாடுகள் நடந்துகொண்டிருந்தன. அப்பொழுது லண்டன் மாநகருக்கருகில் இருக்கிற ஒரு கிராமத்தில் சீனாவைப்பற்றிய ஒரு விபரிப்புப் பிரசங்கம் செய்யக் கேட்டுக்கொள்ளப்பட்டு அதற்கு நானும் ஒரு நிபந்தனையுடன் சம்மதித்தேன். அந்த நிபந்தனை யென்னவெனில், அத்தருணத்தில் வருவோரிடத்தில் எவ்வித பணத்தண்டலும் செய்யலாகாது என்பதே. இதை அழைப்புப்பட்டியிலும் தெளிவாய்த் தெரிவிக்கவேண்டும் என்று வற்புறுத்தினேன். என்னை அழைத்த சீமான் தாமே அந்தச் சபைக்கு நாயகனாய் வீற்றிருந்தார். அவர் இப்பேர்ப்பட்ட நிபந்தனையை இதற்குமுன் யாரும் செய்ததில்லையே என்று வியந்தும் அதற்குச் சம்மதித்தார். மேமீ 2உயிலோ 3உயிலோ பிரசங்கக்கூட்டம் இருக்கும் என்கிற அறிவிப்புப்பட்டிகள் எங்கும் அனுப்பப்பட்டன. ஒரு பெரிய சீனாதேசப்படத்தை எதிரில் வைத்து, அத்தேசத்துப் பரிமாணம், ஜனத்தொகை, இவைகளைச் செவ்வையாய் விளக்கி அங்குள்ள ஜனங்களின் பரிதாபமான ஆத்தும நிலைமையையும் கல்லுங்கரையச் சொன்னேன். அநேகருடைய உள்ளங்கள் அசைந்தன என்பது பார்த்தாலே தெரியக்கூடியதாயிருந்தது.

அந்தப் பிரசங்கம் முடிந்தபோது சபாநாயகர் எழுந்து இந்தக் கூட்டத்தில் பணத்தண்டல் செய்யப்படமாட்டாது என்று விளம்பரம் செய்யப்பட்டது என்னுடைய வேண்டுகோளானதென்றும், நான் எடுத்துக் காட்டின தெய்வகாரியத்திற்காகப் பணம்கொடாமல் போனால் அங்குள்ள அநேகருக்கு வாதையான மனச்சஞ்சலமாயிருக்கும் என்றும், பணங்கொடுத்தே சபை கலையவேண்டும் என்பது தமக்குமாத்திரமல்ல, அந்தச் சபையில் பெரும்பாலாருக்கும் அபிப்பிராயமாதலால் நான் அதற்கு இணங்கவேண்டுமென்றும் சொன்னார். அதற்கு நான் 'அழைப்புச் சீட்டில் கண்டிருக்கிற நிபந்தனை காப்பாற்றப்படத்தான் வேண்டும். அதற்குப் பல காரணங்களுண்டு. அக்காரணங்களில் ஒன்று நீர் இப்பொழுது சொன்னவையால் இங்குள்ளவர்கள் இந்நேரத்தில் தங்கள் உள்ளத்து உணர்ச்சி வாதையைத் தீர்த்துக்கொள்ள ஏதேனும் கொடுப்பது என் பிரியமல்ல. அவர்கள் சீனாவின் பரிதாபங்களை மனதிற் சுமந்துகொண்டுபோய் அதற்குத் தாங்கள் செய்யவேண்டியது என்னவென்று ஆண்டவரிடத்தில் கேட்க வேண்டும். நிதாச்சிந்தித்து ஜெபித்தபின் பணமே அவர்கள் கொடுக்க வேண்டியது என்று அவர் திட்டமாய்ச் சொன்னால், சீனாவில் வேலை

செய்கிற எந்த மிஷன் சொசைட்டிக்காவது அதையனுப்பலாம் அல்லது லண்டனிலிருக்கிற நம் ஆபீசுக்கு அனுப்பலாம். பெரும்பாலும் நம் காருண்யக் கடவுள் விரும்புவது பணம் அல்ல, பிறதேசங்களில் அவருக்கு ஊழியம் செய்ய மனுஷர் தங்களையே ஒப்புக்கொடுப்பது தான். தங்களையே கொடுக்க முடியாதாயின் தம் மகனையோ மகளையோ அவர் ஊழியத்திற்குத் தருவது அவருக்குப் பிரியம். இது வெள்ளி, பொன் கொடுப்பதிலும் மகா மேம்பாடுள்ள கொடை; பணம் கொடுக்கச் சொல்லி வாங்குவது மிசியோன் வேலைக்குப் பணமே ஒன்றான முக்கியபொருள் என்கிற எண்ணத்தை மூட்டும்; எவ்வளவு பணம் கொடுத்தாலும் பணத்தினால் ஒரு ஆத்துமாவையும்கூட திருப்ப முடியாது. அந்த வேலைக்கு அதிமுக்கியமாய் வேண்டியதென்னவென்றால், தேவஆவி நிறைந்த ஆடவரும் பெண்டிரும் தங்களையே கொடுப்பதுதான். அவர்களை ஆதரிப்பதற்குப் பணத்தாழ்வு வரவே வராது' என்றேன். நான் இதில் உறுதியாயிருக்கிறதைப் பார்த்து சபாநாயகர் இணங்கிக் கூட்டத்தை முடித்தார். ஆகிலும், இராச் சாப்பாட்டு வேளையில் நான் செய்தது பிசகே என்று தன்மனதில் பட்டிருப்பதாயும் நான் சொன்னதைக் கவனியாமல் சிலர் சிறு தொகையை மிஷனுக்காக அவர் கையில் கொடுத்துப் போனதாகவும் தெரிவித்தார்.

மறுநாள் காலைச் சாப்பாட்டு வேளையில் எனக்குப் பட்சமாய் விருந்துதவின மேற்படி நண்பர், சற்றுநேரம் தாழ்ந்துவந்தார். வந்ததும் தமக்கு இராவில் ஒருவாறு நித்திரை கெட்டுப் போயிற்று என்று தெரிவித்து சாப்பிட்டானதும் தம் படிப்பறைக்கு வரச்சொன்னார். நான் அவ்வறைக்கு வந்ததும் முந்தின இராவில் சேர்ந்த தொகையைக் கொடுத்து மேலும் சொன்னதாவது: 'தெயிலர் ஐயரே, பணம் தண்டுவதைப்பற்றி நீர் சொன்னது தப்பு என இராவில் நான் நினைத்தது சரியல்ல, நீர் சொன்னதே சரி என்று இப்போது எனக்கு நிச்சயமுண்டாயிருக்கிறது. சீனாவில் ஓயாமல் இருண்ட மறுமைக்குள் பிரவேசிக்கிற ஆத்துமாக்களை இராவில் நினைத்து ஆலோசித்த போது 'ஆண்டவரே அடியேன் என்ன செய்ய விரும்புகிறீர்' என்று வியாகுலத்துடன் கேட்டேன். அதற்கு ஆண்டவர், சொன்ன மறுமொழி இதோ இருக்கிறது, பாரும்'; இப்படிச்சொல்லி 500 சவரனுக்கு ஒரு பாங்கு உண்டிச் சீட்டை என்கையில் கொடுத்தார். இராவிலேயே பணத்தண்டல் நடந்திருக்குமானால் சில சவரன் கொடுப்பதே போதுமென்றிருந்திருப்பேன், இந்த உண்டிச் சீட்டு இராவில் நெடுநேரம் ஜெபித்ததினால் வந்த பலன் என்று அவர் மேலும் சொன்னார்.

(இன்னும் வரும்.)

C. L. S. PRESS, MADRAS—1916

No. 124 செப்டெம்பர் 1916

# வேதியர் விளக்கு

OFFICE OF THE REGISTRAR OF ... 6 - SEP 1916 MADRAS

## The Gladdening River

By the Rev. A. Silver

THE Gladdening river is not to be found on any map, for it is a spiritual river and its name is Love—God's Love. The poet Dante has called it by another name:—

> And I saw light in fashion of a river
> Fulvid with effulgence, between two banks
> Depicted with a marvellous spring.

He compared its waters to 'the light of grace' and tells how

> Out of this river issued burning sparks
> And on every side settled in the flowers
> Like unto rubies with gold circles round.

As for us, we may call it by either of those names. It matters not which one we choose. The river symbolizes that grace, mercy and love which are God's gifts to men through Jesus Christ.

But some may think it hardly right to call God's love, God's grace, a river. That love, that grace are all-pervasive, everywhere, whereas the waters of a river are confined within its banks. They may hold that we should compare God's love to an ocean, boundless, immeasurable. It is true that God's love knows no limit. But when we think of it thus as an abstraction it transcends our thoughts and evades our mind. That it might become a reality to us, God Himself revealed it in a concrete way. 'In this was manifested the love of God toward us because that God sent His only-begotten Son into the world, that we might live through Him.' By representing that love in a concrete form which the mind can grasp we do not seek to place a limit upon it but only to represent it

in a way which will bring it home to the human heart. The waters of the river then are love; and the Gospel is the channel through which it flows. Wherever the Gospel has come, there the waters of this river are to be found. Has the Gospel come to my village, to my home? Then am I living on the banks of the gladdening river within easy reach of the countless blessings which it brings.

When St. John wrote of the river of his vision he told how 'on either side of the river was there the tree of life which bare twelve manner of fruits, and yielded her fruit every month; and the leaves of the tree were for the healing of the nations.' And how true is that of the river which runs within the channel of the Gospel. Who could find fitting words to declare the blessings which God in His love for men has given to the world through Jesus Christ? At thought of them we bow our heads in deepest adoration. The devout heart may in some measure realize them; the tongue cannot find words with which to declare them. Some years ago in England a book was published which attracted a great deal of attention throughout the world. The title of the book was *When it Was Dark*, and it sought to picture the world as it would be if proof were found that Jesus had never risen from the dead. The name of the book shows clearly the nature of the picture which the author drew, and it carried conviction to the hearts of all believing Christians and of countless others. If Christ had not risen from the dead the world would be a place of spiritual gloom, without hope or lasting joy. How would it be then if there were no Gospel at all, if He who is the 'Light of the World' had never come? By this manner of negative reasoning we can catch a glimpse of the wondrous gladness which has become our heritage through the flowing into and through the world of the gladdening river. Truly, the fruit of the trees upon its banks has fed the nations and their leaves have healed their wounds.

What has the Gospel done and what is it doing for India? There may be some who, when this question is asked, point to the number of the Christian community in the land and say: 'There lies the answer.' And, rightly enough, that gives



some indication of what has been achieved and fills us with hope for the future. But there are many other signs which must be taken into account. When we see a land, as this land is, permeated by Christian thought, adopting Christian ideals more and more, regulating its social life by the teaching and the law of Christ and men interpreting its own religion in the light of the higher revelation which He has given, do we not find there sure indications that the dawn of a new day is breaking, that the Kingdom of Christ in India is steadily drawing near? The truth is that this land is more Christian than it knows or than it will confess. Christianity as embodied in the active teaching of the Church and in the civilization of Christian nations is the most compelling power for good which the world has ever known. Its influence is gradually leavening this and all other lands and preparing the world for that time when all men shall acknowledge Christ as the fountain of all that is good and pure, as the source of the world's life, and shall accept Him as their Saviour. The waters of the river are percolating through beneath the surface causing the barrenness to disappear and making the world a fairer place in which to live.

But now let us think for a little of the individual man, of what the river can do for him and where his duty lies with reference to it. And in the first place we remark that the river can *cleanse him from all sin.* It is needless to speak of that sense of sin which has its dwelling in the breast of every man. We do not seek to deny it, for adapting the words of the psalmist to ourselves, 'We acknowledge our transgressions and our sin is ever before us.' All men long to be free from it and there is no need in India to write of the self-torture and austerities which thousands have undergone in the effort to attain to that peace of mind which the consciousness of sin destroys. But, apart from the Gospel, there is no way to attain to it; there is only one river in which cleansing can be found. When Naaman sought to be cleansed of his leprosy, Elisha's messenger told him of the only way. 'Go and wash in Jordan seven times and thy flesh shall come again to thee and thou shalt be clean.' We

remember Naaman's reply: 'Are not Abana and Pharpar, rivers of Damascus, better than all the waters of Israel? May I not wash in them and be clean?' But it could not be. God, through His prophet, had revealed the way, and only thus could the healing come. And so it is for all men to-day. God is waiting to forgive us if only we will come to Him through Christ our Saviour; if only we will come with faith and with heart resolved to live a life of service by divine help. May the Holy Spirit so influence our hearts that in Christ we may find full forgiveness and cleansing; that so, the peace of God which passeth all understanding may keep our hearts and minds.

Again, in the gladdening river we may find *strength for our souls.* The Christian life is not an easy one; it cannot be lived unless day by day we find strength other than our own. There are times when its difficulties make us feel our own weakness to an almost overwhelming degree, a weakness which not only renders us powerless to do God's service, but which almost makes us incapable of resistance when the enticement of the world seeks to draw us away from God. Thus there are times in our life when, like the psalmist, we call out, 'As the heart panteth after the water brooks, so panteth my soul after Thee, O God. My soul thirsteth for God, for the living God.' In such seasons of difficulty, indeed at every turn of the Christian life, it is necessary for us to drink of the life-giving waters and there find strength. It was said of the warrior of old, 'He shall drink of the brook in the way: therefore shall he lift up the head.' Such must be our experience if we are to fight the good fight of faith; we must 'drink of the brook in the way'. Let us praise God that the sources of strength are so near to us and that He calls upon all to come and partake of the life-giving waters freely and without price.

In conclusion, let us think for a little of our duty as individuals with reference to the Gospel—the gladdening river. Clearly we must do what we can to turn the course of the river into every village and near every home where we can make our influence felt. That is the work to which we are



called as servants of Christ; and it is work which all can perform, though in varying degrees according to our opportunities and circumstances. I have often noticed, when the fields are being irrigated, how easy it is to divert the flow of water from one field into another. A moment's work with the spade and the obstruction is removed; the water flows clear and sparkling from field to field to fulfil its life-giving purposes. It is true that there is a great deal of hard work to be accomplished before the main channel is constructed. There must be workmen to labour there also. But our illustration of the field shows clearly that none need be idle, that there is work for all to do. But here also it is necessary for us to keep watch over ourselves and see that we bring to this work the best of our knowledge, the best of our skill. One is tempted sometimes in preaching to non-Christians to pursue the line of least resistance and seek, in all honesty of purpose, to attract them by teaching which should occupy the second place and not the first. I have noticed from time to time that some untrained workers who are nevertheless zealous to extend the Kingdom of Christ have a certain difficulty in distinguishing between the Gospel and some of the outward manifestations which accompany its working. In their case there has been a tendency to obscure the Gospel and to bring to the front the outward benefits which follow in the wake of the Gospel, to preach missions and their benefits instead of Christ and His saving power. In this way a difference in meaning has spring up between the words 'Christianity' and 'The Gospel'. Men may in a sense be brought to what is sometimes called Christianity without having been brought to Christ. That is where the danger lies. I have even heard some go so far as to say that among a certain class of people the preaching of purely spiritual truth has little or no effect; they are incapable of grasping abstract ideas even when these are spiritual and all essential. Therefore it is necessary, we are told, to preach about what they can and will understand, to attract them by setting before them concrete illustrations of what Christianity can do to uplift them socially and improve their outward circumstances. They hold that at a later

stage these people will come to understand their spiritual need and seek that which alone can satisfy it. Needless to say, such a view is wrong. When Christ sent out the twelve to preach the Kingdom of God He bade them carry nothing with them, 'neither staff nor wallet nor bread nor money.' They were to go out carrying the Gospel alone and working only the works which could be achieved through faith. And if we are to follow in their steps we must do the same, guarding carefully lest we emphasize too much outward and visible things to the neglect of what is spiritual and altogether necessary. We must not forget that the Holy Spirit is always present to carry conviction into every heart and to lead even the humblest into the truth. In speaking thus I do not seek to minimize to even the very least extent the need for using to the full every means which missions can employ to raise up those who are of low estate and to improve their condition in every possible way. We must do that; we should fail in our duty if we did not. All that I wish to do is to indicate the importance of putting the right things first. By doing so a greater blessing will follow our work and we shall find greater encouragement to go on with it.

Let us take courage in the thought that the Gospel which we are called to preach is sufficient to meet the deepest need of every man; and may it be our chiefest joy to proclaim to men day by day the redeeming love of God as it is revealed in Jesus Christ.

# Holiness

**By the Rev. A. Paramanandam**

## பரிசுத்தம்

(தொடர்ச்சி)

### ஐந்தாம் அதிகாரம்

பரிசுத்தமாகுதல் என்னும் மனுஷனுடைய அனுபவம்

பரிசுத்தமாக்குதல் தேவன் செய்யத்தக்க வேலை. நாம் எந்தப் பிரயத்தனத்தின் மூலமாயும் நம்மைப் பரிசுத்தமாக்கிக்கொள்ளலாகாது.



ஆயினும், பரிசுத்தமாகுதல் நம்மிலே விருத்தியாவது நம்முடைய எத்தனங்களிலிருக்கிறது. நாம் பரிசுத்தராவதற்கு கிறிஸ்துவின் கிருபையும் தேவனுடைய அன்பும், பரிசுத்தாவியினுடைய அந்நியோந்நியமும் கூடின ஓர் எத்தனம் வேண்டும். இப்படியிருந்தாலும் நம்மைப் பரிசுத்தமாக்குகிறது நிதானமாயும் தீர்க்கமாயும் நடக்கத்தக்க ஓர் வேலை. செத்தை நெருப்பில் விழுந்தவுடனே சாம்பலாகிற பிரகாரம், நம்முடைய கெட்ட சுபாவம் தேவனுடைய பரிசுத்த சுபாவத்தோடு கலந்த மாத்திரத்திலே நம்மிலிருக்கிற பாவமெல்லாம் தகனமாகிவிடுகிறதென்று ஒருவேளை நாம் நினைத்திருக்கலாம். அப்படியல்ல, பரிசுத்தமாக்குதல் பரிசுத்த ஆவியானவரால் கிரமம் கிரமமாய் நடக்கவேண்டிய வேலை. அது எந்தப் பக்கங்களில் சரியாய் நடக்கிறதென்றும், எப்போது பரிசுத்தத்துக்குத் துவக்கம் என்றும் முதலில் விசாரிக்கவேண்டும்.

பரிசுத்தமாகுதல் சரியாய் நடவாதபடி அனுவசியமான சில தடைகள் நம்முடைய தப்பிதங்களினால் வருகிறதுண்டு. இவைகளல்லாமல் பரிசுத்தமாகுதல் அவ்வளவு சீக்கிரமாய் நடவாதபடி நம்மிடத்தில் குடியிருக்கிற சில தடைகளுமுண்டு. இப்படியிருப்பதினால் கிறிஸ்தவ பக்தர்கள் பரிசுத்தராகுவதில் இருக்கப்படாத தடைகளைத் தொலைத்துவிடுவதும், பரிசுத்தமாகுதலாகிய சுத்திகரணமானது தன்னுடைய அவசியமான கிரமத்தை அனுசரிப்பதும், பரிசுத்தமடைவதுமாகிய இம்மூன்று காரியங்களையும் விசாரிக்கவேண்டும். பவுல் ரோமாபுரியாருக்கு எழுதின நிருபத்திலே சொன்ன ஒரு வார்த்தையில் இந்த மூன்று காரியங்களும் வெகு பரிஷ்காரமாய்க் காணப்படுகின்றன. அதாவது 'நீங்கள் பாவத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, தேவனுக்கு அடிமைகளானதினால், பரிசுத்தமாகுதல் உங்களுக்குக் கிடைக்கும் பலன்; முடிவோ நித்திய ஜீவன்' (ரோ. $6^{22}$). கிறிஸ்து மார்க்கத்தின் முதல் பாகம் என்னவென்றால், பாவத்திலிருந்து விடுதலையடைந்து, அந்நிய எஜமான்களை விட்டு விட்டு தேவனுக்கே அடிமைகளாவது; இரண்டாம் பாகமாவது, பரிசுத்தமாகுதல் சாதனைக்கு வரத்தக்கதாக கிரமம் கிரமமாய்த் தினந்தோறும் பரிசுத்தராவது; மூன்றாம் பாகமாவது, பரிசுத்தத்தை அதாவது நித்திய ஜீவனை அடைந்துகொள்வது. இம்மூன்று பாகங்களில் முதலாவதைவிட இரண்டாவது நியாயமானதாயும் பெரிதாயுமிருக்கவேண்டும். ஆனால், சாதாரணமாய்க் கிறிஸ்தவர்களின் அனுபவத்தில் இரண்டாவதைவிட முதலாவதே மிகப் பெரியதாயிருக்கிறது. முதலாம் பாகத்தை ஒரு க்ஷணத்திலேயே பற்றிக்கொள்ளலாம். கிறிஸ்தவர்களில் மிகுதியானவர்களோ ஜீவகாலமெல்லாம் அதைப் பற்றிக்கொள்ளு

இறதில்லை. இரண்டாம் பாகம் வாஸ்தவத்தில் பெரியதாயிருந்தாலும், இச்சீவியத்தில் அதினுட் பிரவேசிக்கலாம். ஆனால் அதைப் பற்றிச் சொல்வதற்கு இதத்திலும் பாத்திலும் முடியாது. அது என்றைக்கும் முடிவடையாது. நித்திய ஜீவனுக்கும் பரிசுத்தமாகுதலுக்கும் இடையூறாயிருக்கிற தடைகள் யாவும் நம்முடைய சொந்த தப்பிதத்தினாலே உண்டாயிருக்கிறபடியால், இப்போதே பரிகாரமாகவேண்டுமென்றும், பிரதி ஒவ்வொன்றும் நம்முடைய அனுபவத்திற்கு அனுகூலமாயிருக்கிறபடியால் நிதானமாகவே நாசமாகிறதென்றும் திட்டமாய் விசாரித்து அறிந்துகொள்வோமாக.

1. பரிசுத்தமாவதற்கு விரோதமாயிருக்கிற எவ்வித தடைகளையும் தொலைத்துவிடுவதற்கு இப்போது நம்மாலாகக்கூடியதாவது:—

a. பரிசுத்தமாகும் பலன் நமக்குக் கிடைக்கவேண்டுமானால் நாம் பாவத்திலிருந்து விடுதலையடைந்து தேவனுடைய அடிமைகளாவது அவசியமானது. பாவ அப்பியாசமும் பரிசுத்தமாகுதலும் எவ்வளவேனும் ஒன்றோடு ஒன்று சேர்ந்திருக்கமுடியாது. நாம் பாவத்தை அருவருத்து விட்டுவிடுகிற வரையில் தேவனண்டை சேரமுடியாது (மத். 6. 24). 'நாம் அவரோடே ஐக்கியப்பட்டவர்களென்று சொல்லியும், இருளிலே நடக்கிறவர்களாயிருந்தால், சத்தியத்தின்படி நடவாமல் பொய் சொல்லுகிறவர்களாயிருப்போம்' (1 யோவா. 1. 6). சிலர் இருட்டில் கிரமமாக நடக்காவிட்டாலும், இருட்டுக்குச் சம்பந்தமான கிருத்தியங்களை யெல்லாம் விட்டிருக்கக்காணோம். இப்படிப்பட்டவர்கள் செய்கிற ஒவ்வொரு பாவமும் பரிசுத்தமாவதற்குத் தடையாயிருக்கிறது. விஷங்கலந்த பதார்த்தத்தை உண்டு வியாதிப்பட்டவன் சொஸ்தமடைவதற்கு எப்படி அவ்விஷம் தடையாயிருக்கிறதோ, அப்படியே பாவத்தினால் துரவஸ்தையில் விழுந்திருக்கிறவன் செய்துகொண்டுவருகிற ஒவ்வொரு பாவமும் அவன் பரிசுத்தமாவதற்குச் சுத்த விரோதமாயிருக்கிறது. பரிசுத்தாவியானவர் நம்மில் நடப்பிக்கிற வேலையினால் மாத்திரம் நாம் பரிசுத்தராகிறோம். இப்படியிருப்பதினால் எந்தக் காரியம் பரிசுத்தாவியானவருக்கு ஒப்பாமலிருக்கிறதோ அந்தக் காரியம் நாம் பரிசுத்தமாவதற்குத் தடையாய் நிற்கிறது. பாவம் பரிசுத்தாவியைத் துக்கப்படுத்துகிறது (எபே. 4. 30). பாவம் பரிசுத்தாவியை அவித்துப்போடுகிறது (1 தெச. 5. 19).

b. பரிசுத்தாவி நம்மில் நடப்பிக்கிற பரிசுத்தமாக்குதல் என்கிற வேலையைத் தடைசெய்யக்கூடியது பாவ அப்பியாசமாத்திரமல்ல, அக்காரியம் சீராய் நடப்பதற்கு நாம் அதை எதிர்க்காமல் இருப்பதும் ஒன்றுதான். நாம் சோம்பலாய் இருக்கையில் பரிசுத்தாவி நம்மை



சுத்திகரிப்பதில்லை. கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தின் மூலமாய் மாத்திரம் வாக்குத்தத்தமாகிய பரிசுத்தாவியானவரை அடைகிறவர்களாயிருக்கிறோம் (கலா. 3. 14). பரிசுத்தாவியின் கிரியையினால் உண்டாகிற சகாயத்தை விசுவாசத்தினாலே நம்முடைய தாக்கிக் கொள்ளுகிறவரைக்கும் மாத்திரம் அந்தக் கிரியை நாம் பரிசுத்தர் ஆவதற்கு சாதகமாயிருக்கிறது. நம்முடைய விசுவாசத்தின்படியே நமக்கு ஆகிறது. மனுஷர் பரிசுத்தராவதற்கு அபரிமிதமான சக்தி இப்போதே இந்த லோகத்தில் அடையவேண்டியதாய் இருக்கிறது. மனுஷர் பரிசுத்தராகாமலிருப்பதற்கு இருக்கிற ஒரு காரணமாவது, அவர்கள் அதற்கு அவசியமான வல்லமையை அடையாமலிருப்பது தான். கப்பல்காரன் ஒருவன் சமுத்திரப் பிரயாணஞ்செய்ய விரும்பியும் தன் படகுகளின் பாய்களைச் சுற்றிக்கட்டி சும்மா உட்கார்ந்துகொண்டிருந்தால், காற்று எவ்வளவு பலமாய் அடித்தாலும், படகு வேகமாய் ஓடாது. தன் பிரயாணத்தைச் சீக்கிரமாய் முடிக்கவேண்டுமென்று நினைப்பானாகில் காற்று பாய்மேல் மோதி படகைத் தள்ளும்படி அதைக் கட்டி விரித்துவைப்பான். பரிசுத்தாவியானவரின் வல்லமை புசல் காற்றைப்போல வீசிக்கொண்டேயிருக்கிறது. ஆனாலும் பரிசுத்தமாக்கப்படுதல் என்கிற நம்முடைய பிரயாணம் சீக்கிரம் நடக்கவேண்டுமானால், கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசம் என்கிற பாயைத் திறந்துவிடுவது அவசியமாயிருக்கிறது. நமக்கு விசுவாசமிருக்குமானால் பரிசுத்தமாகுதல் நம்மிலே சுலபமாயும் சீக்கிரமாயும் நடக்கிறது. எப்படியென்றால், விசுவாசத்திலுண்டாகிற சக்தி தேவனுடைய சக்தியின் மட்டத்தில் நிற்கிறது. விசுவாசக்குறைவே பாவவேரை நிர்மூலமாக்குவதற்குப் பெரிய தடையாயிருக்கிறது. கடுகு விதையளவு விசுவாசம் நம்மிடத்தில் இருக்குமானால், நாம் அந்தப் பாவத்தைப் பார்த்து, நீ வேருடன் பிடுங்கப்பட்டு நடு சமுத்திரத்தில் உன்னை நட்டுக்கொள் என்று சொல்ல அது நம்முடைய வார்த்தையைக் கேட்கும். கீழ்ப்படியும் நம்முடைய விசுவாசம் சொற்பமாயிருந்தால் பரிசுத்தமாகுதல் நம்மில் வெகு நிதானமாய்த் தான் நடக்கும்.

(c) நம்முடைய விசுவாசம் குறைவாயிருப்பதினால் மாத்திரமல்ல, வேறே காரணத்தினாலும் பரிசுத்தாவியானவருடைய வேலைக்குத் தடையுண்டாகிறது. பரிசுத்தாவியானவருடைய வேலை நம்மில் சரியாய் நடப்பதற்கு நாம் அவரை விசுவாசத்தினால் அங்கீகரித்துக் கொள்வது மாத்திரம் போதாது. தேவன் நம்மில் தம்முடைய வேலையை நடப்பிப்பது நிஜந்தான். நம்முடைய இரட்சிப்பை அடைந்துகொள்வதற்கு நாமும் பிரயாசை எடுக்கவேண்டும் (பிலி. 2[12]). கப்ப

லோட்டி யொருவன் தன் கப்பலைச் சீக்கிரமாய் ஓட்டவேண்டுமென்று விரும்பினால் அதின் பாயை காற்றுப்பக்கமாக விடுவதுமல்லாமல் தானும் அது ஓடும்படி நடத்தவேண்டும். பரிசுத்தாவி என்று சொல்லப்படுகிற காற்று தனக்கு இஷ்டமான விடத்திலே வீசுகிறது (யோவா. $3^{8}$). அது வருகிறதும் போகிறதும், குறைவதும் அதிகப்படுவதும் நம்முடைய ஆதீனத்தில் இல்லை. பரிசுத்தாவி நம்மை எந்தப்பக்கம் தள்ளுகிறாரோ அந்தப்பக்கம் பரிசுத்தமாகுதல் என்கிற பிரயாணத்தை நடப்பிக்கிறதற்கு பிரயாசப்படலாம். சந்நியாசியொருவன் சித்திக்கு வரவேண்டுமென்று யோகாப்பியாஸம் செய்கிற பிரகாரம் கிறிஸ்தவ பக்தன் பரிசுத்தத்தை யடையவேண்டுமென்றிருந்தால் பரிசுத்தமாவதற்குத் தக்க சாதனங்களை ஆசரிப்பதற்கு முயற்சிக்கவேண்டும். நம்முடைய சரீர ஆதீன சுபாவத்தை அடக்குவது பரிசுத்தாவியின் கிரியை, ஆனால் சரீர ஆத்மீக அழுக்குகளை நீக்கிவிட்டு நம்மைச் சுத்திகரித்துக்கொண்டு தேவபயத்தை யடைந்தவர்களாய் பரிசுத்தத்தைப் பேணிக்கொண்டு வருகிறது நமது பேரில் விழுந்த பாரம் (2 கொரி. $7^{1}$). நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம் என்கிற நிச்சயத்தைப் பரிசுத்தாவி நம்முடைய இருதயங்களில் பிறப்பிக்கச் செய்கிறார். ஆனால் யார் தேவனுடைய ஆவியினால் நடத்தப்படுகிறார்களோ அவர்கள் மாத்திரம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறார்கள் (ரோம. $8^{14}$). பரிசுத்தாவி நம்மை தேவனுக்குப் பிரதிஷ்டை செய்கிறார், ஆயினும் நம்மை நாமே ஜீவ பலியாகவும், பரிசுத்தமாகவும் தேவனுக்குப் பிரியமான பலியாக அர்ப்பிக்கவேண்டும். அன்புள்ள தேவன் நம்மில் நிலைகொண்டிருக்க வேண்டுமானால் நாம் அன்பில் நிலைகொண்டிருப்பது அவசியமாயிருக்கிறது (1 யோவா. $4^{16}$). நாம் பரிசுத்தாவியானவருடைய வேலைக்குச் சகாயம் செய்யவேண்டுமென்று நம்மாலானமட்டும் எத்தனிக்காமற்போனால் பரிசுத்தமாகுதல் நம்மிலே சரியாய் நடக்காமற் போகும்.

பாவஞ்செய்வது பரிசுத்தமாகுதலுக்குத் தடையாயிருக்கிறது. நாம் பாவம் செய்வதற்கும் அவசியமில்லை. நம்முடைய விசுவாசக் குறைவே நாம் பரிசுத்தமாவதற்குத் தடையாயிருக்கிறது. நம்முடைய விசுவாசம் குறைவாயிருப்பதற்கும் அவசியமில்லை. பூரண மனசோடு பிரயாசப்படாமலிருப்பது தான் நாம் பரிசுத்தமாவதற்குத் தடையாயிருக்கிறது. பரிசுத்தமாகுதலுக்கு இடையூறாயிருக்கிற இந்தத் தடைகள் நம்முடைய தப்பிதத்தினாலேயே உண்டாகிறது. நாம் பாவத்தை சம்பூரணமாய் விட்டுவிட்டு தேவனுக்குக் கீழ்ப்படிகிற போதும், நம்முடைய விசுவாசம் தேவனைப் பலமாய்ப் பற்றிக்கொண்



டிருக்கிறபோதும், நம்முடைய இரட்சிப்பை அடைந்துகொள்ள வேண்டுமென்று பிரயாசப்படுகிறபோது மாத்திரம் பரிசுத்தமாகுதல் நம்மில் கிரமமாய் நடக்கும். இப்படிப்பட்ட ஸ்திதிக்குக் கிட்டியிருந்தாலும் பரிசுத்தமாகுதலின் ஆரம்பம் மாத்திரம் உண்டாயிற்றென்றும், நாம் பரிசுத்தத்துக்கு இன்னும் தூரமாயிருக்கிறோமென்றும் அறிந்துகொள்ளவேண்டும். பண்படுத்தப்பட்ட நிலத்துக்கும், பயிர் நன்றாய் விளைந்திருக்கிற நிலத்துக்கும் எவ்வளவு வித்தியாசமோ, அவ்வளவு வித்தியாசம் பரிசுத்தமாகுதலுக்கு ஆரம்பமாயிருக்கிற இந்த ஸ்திதிக்கும் பரிசுத்தத்துக்கும் உண்டு. இவ்வித ஸ்திதியை ஒவ்வொரு கிறிஸ்தவனும் கொஞ்சமாகிலும் நிதானிக்காமல் அடைவது சுலபம். ஆனால் அதற்கும் பரிசுத்தத்துக்கும் நடுவே பரிசுத்தமாகுதல் என்கிற வேலை கிரமம் கிரமமாய் நடந்தேறவேண்டும். பரிசுத்தமாகுதல் தினம் தினம் நடக்கவேண்டிய வேலையாயிருக்கிறதேயொழிய அது ஓர் க்ஷணத்தில் தீருகிற வேலையல்ல.

(இன்னும் வரும்.)

## A Grace-filled Life

## The 'Retrospect' of Rev. Hudson Taylor

**Translated by the Rev. N. Devasagayam, B.A.**

## திருவருட்பிரகாச ஜீவியம்

ஹட்ஸன் டெய்லர் ஐயரின் 'பின்னோக்குச் சரித்திரம்'

(தொடர்ச்சி)

### இருபதாம் அதிகாரம்

### 1906-ம் வருஷத்தில் அந்த மிஷன் இருந்த நிலைமை

இந்த நன்கொடையைப் பெற்றதனால் எனக்கு எப் பர்ப்பட்ட ஆச்சரியமும் சந்தோஷமும் வந்ததென்று நான் சொல்லத் தேவையில்லை. காலைச் சாப்பாட்டு வேளையில் கில்லிக் மார்ட்டின் கம்பெனியிலிருந்து (Messrs. Killick Martin & Co.) ஒரு கடிதம் எனக்கு வந்தது. அந்தக் கம்பெனி கப்பலுக்கு ஆள் ஏற்றுகிற கம்பெனி. அவர்கள் லம்மர்மயூர் (Lammermuir) என்ற கப்பலில் பிரயாணிகளுடைய வசதிமுழுமையையும் எங்களுக்குக் கொடுக்க முடி

யும் என்று எழுதினார்கள். நான் நேரே அந்தக் கப்பலைப் போய்ப் பார்த்தேன். அது தக்க வசதியுள்ளதாகவே யிருந்தது. கையிலிருந்த உண்டியலை என் பற்றுவாசில் வைக்கச்சொல்லி கொடுத்து அதின் பிரயாணிகள் பகுதியை அமர்த்திக்கொண்டேன். நான் முன்னமே தெரிவித்திருக்கிற பிரகாரம் நானும் என் மிஷன் ஆட்களும் போய் வேலை தொடங்குவதற்கு வேண்டிய தொகை முழுமையும் இதற்கு முன்பே என் கையில் கிடைத்திருந்தது; ஆனால், நான் நினையாப் பிரகாரம் இந்தத் தொகையும் கப்பல் வசதியும் கிடைத்தது ஆண்டவர் நாம் 'கேட்கிறதிலும் வெகு அதிகமாய்த் தருகிற' அவருடைய கைத்தாராளத்தை என் உள்ளத்திற்குத் தெள்ளிதின் விளக்கி அதை தைரியப்படுத்திற்று.

மேமீ 26உ லம்மர்மயூர் கப்பலேறி மிஷனரிகளான நாங்கள் பதினாறு பேரும் என் நாலு பிள்ளைகளும், அவர்களுடைய தாதியும், பவுலம் மிசியும், ஆக மொத்தம் 22 பிரயாணிகள் புறப்பட்டோம். எங்கள் மிசியோனின் தலைமை ஸ்தானவிசாரிப்பை பெர்ஜெர் துரை பொறுப்பேற்றுக்கொண்டார். இப்படி சீனு உள்நாட்டு மிஷன் ஆரம்பமாயிற்று.

ஹட்ஸன் டெய்லர் ஐயரே தம் ஜீவியசரித்திரத்தின் ஓர் பாகத்தை 'பின்னோக்கம்.' (Retrospect) என்று பெயரிட்டு வெளிப்படுத்தினார். அதில் அவருடைய முழு ஜீவியவிருத்தாந்தத்தைத் தேடலாகாது. கீர்த்திபெற்ற சீனு உள்நாட்டு மிஷன் (C. I. M.) என்ற மிஷனை அவர் ஏற்படுத்தினது வரையில் மாத்திரம் அவருடைய சரித்திரம் அதிலகப்படும். அவ்வளவும் அவரே எழுதி தம்காலத்திலேயே சில பதிப்புகளை வெளிப்படுத்தினார். முழுச்சரித்திரமும் வேண்டுவோர் ஆங்கிலபாஷையில் கின்னெஸ்மிசி எழுதியிருக்கிற சீனு உள்நாட்டு மிஷன் சரித்திரம் (Story of the China Inland Mission) என்ற நூலில் பார்க்கலாம். அந்த மிஷனைப்பற்றி சிற்சில குறிப்புகள் கூறி இந்த அருட்சரித்திரத்தை முடிப்போம்.

லம்மர்மயூர் (Lammermuir) கப்பலில் போன மிஷனரிகள் பிரயாணத்தில் தேவ ஒத்தாசையின் அநேக திருஷ்டாந்தங்களைக் கண்ணாரக்கண்டு கடைசியாய்ச் சீனுவை யடைந்து, முதற் பத்துவருஷங்களுக்குள்ளிடவே அநேக மிஷன் ஸ்தானங்களை அதுவரையும் சுவிசேஷம் எட்டாத நாலு பெரிய மாகாணங்களின் நகரங்களிலும் பட்டணங்களிலும் ஸ்தாபித்தார்கள். பெர்ஜெர் பெருமானும் பெருமாட்டியும் 1872-ம் வருஷம் வரையும் தலைமை ஸ்தானத்துப் பொறுப்பை மிக ஊக்கமாய் நிர்வகித்து வந்தார்கள். அதற்கு முன்னின வருஷத்தில் டெய்லர் ஐயர் இங்கிலாந்துக்குத் திரும்பினார். அதற்



குப் பின் லண்டன் மாநகரில் மிஷன் சங்கம் ஏற்பட்டது. அதற்குத் துணையாய் சீமாட்டிமார் அநுசாரணைச் சங்கம் என்பது ஒன்று உண்டாயிற்று. பின்னிட்டு கிஸ்கோ நகரில் ஒரு மிஷன் சங்கம் உண்டாயிற்று.

1888-ம் வருஷம் டெய்லர் ஐயர் அமெரிக்காவுக்குப் போனதினால் உண்டான பலன் வட அமெரிக்காவில் ஒரு மிஷன் சங்கம் ஏற்பாடானது. அதற்கு இரண்டு வருஷங்களுக்குப் பிறகு அவுஸ்திரேலியாவுக்கு அவர் போனபோது மெல்போர்ன் நகரில் ஒரு மிஷன் சங்கம் தலையெடுத்தது. மிஷன் ஸ்தானத்தில் சீனு மிஷன் சங்கம் என்பது அங்குள்ள காரிய நிர்வகிப்புக்காக 1886-ம் வருஷம் ஸ்தாபிக்கப்பட்டது. அது ஷங்காய் நகரில் ஆலோசனைக்காகக் கூடும். அதில் சேர்ந்துள்ளவர்கள் ஊழியம் முதிர்ந்த நாலு மிஷனரிகள்.

சீனு உள்நாட்டு மிஷனோடு நெருங்கின சம்பந்தமுடைய எட்டுக் கம்மிட்டிகள், இங்கிலாந்து, நோர்வே, சுவேதன், பின்லாந்து, ஜெர்மனி ஐக்கிய நாடுகள் இத்தேசங்களில் உண்டு. இந்தக் கம்மிட்டிகள் தங்கள் செலவிலும் சம்பளத்திலும் தங்கள் தங்கள் சுய மிஷனரிகளை அனுப்புகின்றன. அந்த ஆட்கள் சீனுவிலே வந்தபின் சீனு உள்நாட்டு மிஷனுடைய மேல்விசாரணைக்குட்பட்டு, அந்த மிஷனால் கல்வி முதலிய எல்லா அநுசாரணைகளையும் பெற்றுக்கொள்வார்கள்.

சபைப் பிரிவினைகளைக் கவனியாமல் இரட்சிப்புக்கு அஸ்திபாரமான உபதேசங்களை தெள்ளிதின் கற்றுத் தேர்ந்தவர்களை மிஷனரிகளாக அனுப்புவது இந்த மிஷன் வாடிக்கை. இச்சீவியத்துக்குத் தேவையானதை யெல்லாம் தேவனே தருவார் என்று அவரையே பொறுப்பாய் நம்பி இவர்கள் வேலைக்குப் போகிறார்கள். மிஷனை நடத்துகிறவர்கள் தங்கள் சம்பளத்தைத் தவறாமல் தரப் பொறுப்புள்ளவர்கள் அல்ல என்று அவர்களுக்குச் செம்மையாய்த் தெரியும். மிஷனை நடத்துவோர் ஒருபோதும் கடன் வாங்கவேமாட்டார்கள், வருலாகிற தொகைகளைமட்டும் சேகரித்து அனுப்புவார்கள். 'ஆகிலும், கடந்த நாற்பது வருஷங்களாய் இப்படிச் சேகரித்த தொகைகளே இந்த மிஷனுக்குப் போதுமானவைகளாயிருந்து வருகின்றன. இதற்காகக் கர்த்தருக்கு மகிமை செலுத்துகிறோம். எங்கள் தேவன் எங்களுக்குத் தேவையான யாவையும் கொடுத்து வருகிறார். எங்களுக்கு ஒரு தாழ்வும் வரவொட்டவில்லை' என்று டெய்லர் ஐயர் ஆண்டவரைப் புகழுகிறார்.

மிஷன் செலவு முழுமையும், தலைமை ஸ்தானத்துக்காகவும்

சரி, வேலை ஸ்தானத்துக்கானாலும் சரி, ஒருவரையும் கேளாமல் அவரவர் சீனாவில் சுவிசேஷ பிரபல்லியத்துக்காக உற்சாகமாய் மிஷன் ஆபீசுகளுக்கு அனுப்புகிற தொகைகளைக் கொண்டே நடைபெறுகிறது. 1905-ம் வருஷத்து வசூல் 72,903 சவரன் 7 ஷி. 6 பென். இது, மகாபிரித்தன், ஐரோப்பாக்கண்டம், வட அமெரிக்கா, அவுஸ்திரேலியா, சீனா, இத்தியாதி சகல வருவாய்களிலும் வந்தது. மிஷனரிகளில் சிலர் சொந்தச் சொத்துக்காரர். இவர்கள் தங்களுக்குச் செல்லும் சகல செலவையும் தாங்களே பொறுத்துக்கொண்டு மிஷன் பண்டத்தில் ஒரு காசுகூட வாங்கமாட்டார்கள்.

1894-ம் வருஷம் 'பின்னேக்கம்' என்ற புத்தகம் முதன் முறை அச்சடிக்கப்பட்டது. அந்த வருஷத்தில் அந்த மிஷன் தலைமை ஸ்தானத்திற்குப் புது வீடுகள் சமர்ப்பிக்கப்பட்டன. அதற்கடுத்த வருஷம் பிர்லாண்டு ரஸ்தாவில் இருக்கிற வீடுகள் மிஷன் தலைமைக்கு ஸ்தலமாயின. ஈறுங்கடைசியில் வடலண்டன் பகுதி நியுயிங்கடன் மைதானம் (Newingtone green) மிஷன் தலைமையிடமாயிருக்கிறது.

அக்காலமுதல் 1900-ம் வருஷம் பாக்ஸர் கலகம் வரையும் அந்த மிஷன் ஓயாமல் விருத்தியாகிக்கொண்டே வந்தது. அந்தக் கலகம் நடக்கும்போது 135 மிஷனரிகளும் 53 மிஷனரிகளுடைய குழந்தைகளும் அநேகமாயிரம் சீனக்கிறிஸ்தவர்களும் குரூரமாய்க் கொல்லப்பட்டார்கள். அவர்களுள் சீனா உள்நாட்டு மிஷனில் கொல்லப்பட்டவர்கள் 58 மிஷனரிகளும் 21 மிஷனரிகளின் குழந்தைகளும் என்று அறிக. ஆகிலும், இதெல்லாம் காருண்யக் கடவுளால் சுவிசேஷம் வியாபித்துப் பரப்புவதற்கு அநுசாரணையாயிற்று. கிறிஸ்தவ உழைப்பினால் முன்னிலும் அதிகபலனை இப்பொழுது அறுக்கிறதற்கு நல்ல சமயம் வாய்த்திருக்கிறது. 1900-ம் வருஷத்தில் பாக்ஸர் கலகம் எழும்புவதற்கு முந்தியும் 1906-ம் வருஷத்திலும் அந்த மிஷன் நிலைமையைப் பார்த்தாலே மிஷன் வேலை அங்கே முன்னிலும் அதிகமாய் அநுகூலமாகிறது தெரியும்:—

| | 1. ஜனவரி, 1900. | | 1. ஜனவரி, 1906. |
|---|---|---|---|
| சீ. உ. நா. மிஷனரிகள் மனைவிகளும் உட்பட | 811 | ...... | 827 |
| மிஷன் ஸ்தானங்கள் | 171 | ...... | 205 |
| வெளிஸ்தானங்கள் | 223 | ...... | 632 |
| கோவில்கள் | 387 | ...... | 827 |
| சம்பளமுள்ள சுதேசஊழியர் | 193 | ...... | 394 |
| சம்பளமில்லா ,, | 581 | ...... | 888 |



| | | | |
|---|---|---|---|
| திருவிருந்தினர் | 8,557 | ...... | 14,078 |
| ஆரம்பம்முதல் ஞானஸ்நானம்பெற்றவர் | 12,964 | ...... | 21,648 |
| சுயஆதரிப்பு சபைகள் | 266 | ...... | 476 |
| ஆதரிப்பு மாணாக்கர் | 788 | ...... | 1,166 |
| பகற் பாடசாலை மாணாக்கர் | 1,382 | ...... | 1,881 |
| ஆஸ்பத்திரிகள் | 6 | ...... | 7 |
| மருந்துகொடுக்குமிடங்கள் | 18 | ...... | 37 |
| அபின் பழக்கம் நீக்கும் சாலைகள் | 46 | ...... | 101 |

முற்றிற்று.

## A Sermon

**By Mr. J. Ponnusami**

### தேவ ஊழியமும் தேவ ஊழியர்களும்

'மனுஷருக்குப் பிரியமாயிருக்க விரும்புகிறவர்களாகப் பார்வைக்கு ஊழியஞ்செய்யாமல், கிறிஸ்துவின் ஊழியக்காரராக மனப்பூர்வமாய் தேவனுடைய சித்தத்தின்படி ஊழியஞ்செய்யுங்கள்' (எபே. 6. 6).

லௌகீக சம்பந்தமாய் மனுஷர் தங்கள் அறிவுக்கும் கல்வி சாமர்த்தியத்துக்கும் அந்தஸ்துக்கும் தக்கதாய் பற்பல உத்தியோகங்களைச் செய்துவரக் காண்கிறோம். அப்படியிருந்தும் இப்படிப்பட்ட உத்தியோகம் அல்லது ஊழியம் சிறந்ததென்று ஒருவாறு சொல்ல ஏதுவில்லை. ஏனென்றால் லௌகீக உத்தியோகஸ்தர் மனுஷருக்குப் பிரியமாயிருக்க விரும்பி பார்வைக்கு ஊழியஞ் செய்கிறவர்களாய் இருக்கலாம். இப்படிப்பட்ட ஊழியத்தைக் குறித்து அப்போஸ்தலன் வெகு கண்டிப்பாய் எச்சரிக்கிறார். ஆனால் தேவ ஊழியமோ அப்படிப்பட்டதல்ல அது லௌகீக ஊழியத்தைவிட மிகச் சிறந்ததும் மேலானதுமாயிருக்கிறது. ஏனென்றால் இந்த ஊழியம் மனுஷருக்கென்றும் அல்லது மனுஷருடைய பார்வை அல்லது தயவுக்கென்றும் செய்யப்படாமல் தேவநாமத்தின் மகிமைக்கென்று செய்யப்படவேண்டியதாக விருக்கிறது. ஆதலால் இப்படிப்பட்ட சிறந்த ஊழியம் எப்படிப்பட்ட இலட்சணங்களைப் பொருந்தினவைகளாய் இருக்கவேண்டுமென்பதைப்பற்றிச் சற்று சிந்திக்கக்கடவோம்.

I. இது மேன்மையுள்ள ஊழியம்:—லௌகீக சம்பந்தமான ஊழியத்தில் இதுதான் சிறந்தது, இதுதான் மேலானது என்று

சொல்லத்தக்க எந்த உயர்தர உத்தியோகத்தைப் பார்க்கிலும் தேவ ஊழியமே சிறந்ததும் மகாமேன்மையுள்ளதுமான ஊழியமாய் இருக்கிறது. ஆபிரகாம் மோசே ஆரோன் யோசுவா தீர்க்கதரிசிகள் அப்போஸ்தலர் முதலிய தேவதாபக்தர்கள் மனுஷருக்கென்று அல்லது மனுஷருடைய பிரியத்துக்கென்று ஊழியஞ்செய்யாமல் தேவனுடைய திருச்சித்தத்தின்படியும் விருப்பத்தின்படியும் இந்த மேன்மையான ஊழியத்தை நடப்பித்து வந்திருக்கிறார்கள் என்று பார்க்கிறோம் (யோசு. 22. 5). 'நானும் என் வீட்டாருமோ வென்றால் கர்த்தரையே சேவிப்போம்' (யோசு. 24. 15) என்று தேவபக்தனாகிய யோசுவா எவ்வளவோ வாஞ்சையோடு சொல்லக்கூடியவராய் இருக்கிறார்.

II. இது ஆவிக்குரிய ஊழியம்:— 'நான் ஜெபம்பண்ணும்போதெல்லாம் இடைவிடாமல் உங்களை நினைத்துக்கொண்டிருக்கிறதைக்குறித்துத் தமது குமாரனுடைய சுவிசேஷத்தினாலே என் ஆவியோடு நான் சேவிக்கிற தேவன் எனக்குச் சாட்சியாய் இருக்கிறார்' (ரோம. 1. 9) என்று அப்போஸ்தலன் சொல்லுகிறதை நாம் பார்க்கும்போது தாம் செய்துவந்த ஊழியம் மேன்மையுள்ள ஊழியமாயிருந்தது மாத்திரமல்ல, அது ஆவிக்குரிய ஊழியமாகவும் இருந்திருக்கிறதென்று பார்க்கிறோம். இப்படிப்பட்ட சிறந்த ஊழியத்துக்கு சாமுவேல் சிறுபிராய முதற்கொண்டே ஒப்புக்கொடுக்கப்பட்டாரென்றும் பார்க்கிறோம். தேவ ஊழியம் சகலவித சரீரமுயற்சிகளோடு செய்யப்படுவதுமாத்திரம் போதாது, ஆவிக்குரிய முயற்சிகளோடுங்கூட செய்யப்படவேண்டியது அத்தியாவசியமான காரியமே. 'தேவன் ஆவியாய் இருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்வது (யோவா. 4. 24.) எவ்வளவு அவசியமாயிருக்கிறதோ அப்படியே தேவ ஊழியமும் ஆவிக்குரிய விதமாகவும் செய்யப்படவேண்டியது அவ்வளவு அவசியமாயிருக்கிறது. மாமிசத்தின்மேல் நம்பிக்கையாயிராமல் ஆவியினாலே தேவனுக்கு ஆராதனைசெய்து அவருக்கு உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியஞ்செய்வது கிறிஸ்தேசுவுக்குள் மேன்மைபாராட்டக்கூடிய திவ்விய ஊழியமாயிருக்கிறது.

(இன்னும் வரும்.)

C. L. S. PRESS, MADRAS—1916

No. 125 அக்டோபர் 1916

# வேதியர் விளக்கு

REGISTRAR OF ... OFFICE ... 7 - OCT 1916 ... MADRAS.

## Rubbish-heaps and the Bible

THERE is no phase of human life that is untouched by the marvellous book we call the Bible. It lays every science and every art under tribute; illustrations of the truths it teaches and confirmation of those truths are constantly being found in the most unexpected of places. Critics who have thought that they have discovered historical errors and mistakes of fact in its pages have again and again been put to confusion by some unexpected discovery which has thrown a flood of light on some obscure passage and proved beyond doubt that the compilers of its simple records have written the literal truth. Not that all difficulties have been solved by any means; but so many have been swept away, especially of late years, that even the boldest critic is now obliged to qualify all his statements with the phrase 'so far as present knowledge goes'.

It would hardly seem that the contents of ancient rubbish-heaps could have much bearing on Biblical knowledge and scholarship, and yet it is so. Strange as it may appear it is yet true that for students of the Bible one of the most important discoveries of recent years has been that of piles of old papers, deposited in heaps outside the ruins of various ancient Egyptian cities. It would seem to have been the custom to collect the waste-paper of the towns and put it all together in some selected place outside the township limits. The paper was made from the pulp of reed-grass, and was something approaching to the palmyra-leaf records of ancient India. The climate of Egypt is exceedingly dry, rain being most infrequent, with the result that these 'papyri', as the papers are called, have been buried in mounds of sand as the centuries have elapsed,

and not being exposed to the influence of damp have mostly survived to this day. Some of these mounds have been found, and papers of every description have been unearthed :—bills and accounts, lawyer's letters and school-boy's scribblings, petitions and poems, census papers and government schedules, epitaphs and wedding invitations—in short letters of every conceivable kind, some very interesting and some very dry. But from a perusal of them all some very important facts are emerging. It has long been recognized that the Greek in which the New Testament is written is very different from the Greek which was usually used by literary men—'Classical Greek' as it is called. We all know that when we sit down to deliberately write out anything—a sermon or report which has to be written out in full, for instance—we do not use exactly the same style or the same words as we do when talking familiarly to each other, or when scribbling a note to an intimate friend. We instinctively try to find the most suitable words, and to put our thoughts into more polished phraseology than that which we usually employ in daily speech. And as this is universally true it has also been recognized that Classical Greek was something quite different from the Greek spoken in the homes and bazaars of the land. Now the discovery of the papers in the Egyptian rubbish heaps is showing in a remarkable manner that the writers of the Gospels, St. Paul and the other New Testament authors used in their letters the ordinary speech of every day life and not the usual and more elaborate style of the writers of their day. From the very beginning the Bible has been the book of the man in the street—written in a style that even the poorest and most ignorant could understand with ease.

Not only so, there are various phrases which occur in the New Testament about the exact interpretation of which there has been much doubt. Some of these phrases are found in the letters which have been discovered, used in a way which shows that they were current in the ordinary phraseology of the day, and that they were almost certainly used by the New Testament writers with their popular and not their classical meaning. Dr. Moulton, the distinguished biblical scholar



who probably knows as much about the Greek of the New Testament as any one in the world, has given some examples of this in a little book recently published called *From Egyptian Rubbish-heaps*. I will quote one of the examples he mentions. In Heb. xi. 1. we read that faith is the 'assurance of things hoped for.' The word which is translated 'assurance' is one that is found in a long legal petition which has been discovered, and from the way in which it is used it is obvious that in the days when the Epistle to the Hebrews was written the word had come to be a technical term for the papers relating to the possession of any property—as we call them, 'title-deeds'. So that what the writer of the Epistle to the Hebrews really seems to have said is something like this: 'God has made great and precious promises to us of the inheritance which is to be ours. It is not yet in our possession, but by faith we have its *title-deeds*.' A man who has the title-deeds of a property is their owner, even though he has never seen them; they are the sign and seal of absolute possession; that is what faith is to be to us; we are to be as though we actually had in our grasp at the present moment all that God has ever promised shall be ours in the days to come.

It is not only biblical phrases that are illumined with new light by these papyri, but in some cases historical difficulties are also being solved. Perhaps the most remarkable of these is connected with the opening of the Gospel of St. Luke. He tells us that Joseph and Mary went to Bethlehem to be enrolled in a census, and says that this was the first census made when 'Quirinius was governor of Syria.' Now for years historians have been unable to find any confirmation of any of these statements—in fact it has seemed that St. Luke, who claims to be a careful recorder of facts which he had specially investigated for himself had made a most unaccountable blunder at the very outset. Now from the papyri recently discovered the following facts have been established. First, there was a census once every fourteen years in the Roman Empire; thousands of census papers have been found, proving this beyond question, for they are all dated. Secondly we know that such a census was taken in the year A. D. 6: some of the papers

have been found. The actual date of Christ's birth is now very generally believed to have been not A. D. 1 as we have thought, but eight years before then, the early Church historians having miscalculated through lack of sufficient scientific knowledge. If this is correct, He was born exactly fourteen years before the census of A. D. 6, when, as we have seen it would be more than probable that a census would be taken; and thus Luke is right in saying there was one.

Another thing that puzzled critics was the statement that Christ's parents went from their village to the town of their ancestors for the census, no other record of such a custom being extant. But in these rubbish-heaps a notification has been found, issued by a Roman official, ordering people to do that very thing before a certain date that they might be enrolled in their own ancestral homes!

In the third place, the name of the Governor of Syria in the year B. C. 8 is known, and it is *not* Quirinius. Critics said that here at any rate was a complete mistake. But a year or two ago a monument was found on which it is definitely stated that he was sent to Syria in that year as *Special Commissioner* for the very purpose of taking the census. And so from rubbish-mounds and stone-heaps the evidence comes to show that every statement of St. Luke is literally correct; and as the years go by the evidence steadily accumulates from all sources that the Bible is the literal Word of Truth.

# Holiness

**By the Rev. A. Paramanandam**

## பரிசுத்தம்

(தொடர்ச்சி)

### ஐந்தாம் அதிகாரம்

பரிசுத்தமாகுதல் என்னும் மனுஷனுடைய அனுபவம்

2. *பரிசுத்தமாகுதல் நிதானமாயும் கிரமம் கிரமமாயும் நடக்க வேண்டியபடியாலும் அவ்வேலைக்குத் தடையாயிருக்கிற எவ்விதமான இடையூறுகளும் நம்முடைய சுபாவ ஸ்திதியோடு கலந்திருக்கிறபடி*



*யாலும், அவை உடனே பரிகாரமாகாதென்று விசாரித்தறிவோம். பரிசுத்தமாகுதல் அனுபவத்துக்குச் சம்பந்தமாயிருக்கிறபடியால், அதை அனுபவிக்கிறதேயொழிய, அதினாலுண்டாகிற வரங்கள் நமக்குக் கிடைப்பதில்லை. கிறிஸ்தவ பக்தன் மறு பிறப்பையடைகிற சமயத்தில் சிறு சிசுவுக்குச் சமானமாயிருக்கிறபடியால், புருஷ பிராயமடைந்து பூரண கிறிஸ்தவனாகிறதற்கு முன், அநேக தினங்கள் வரைக்கும் வளர்ந்துகொண்டே வரவேண்டும் (1 பேதுரு 2[2]).*

*(a) பக்தனொருவன் பாவஞ் செய்வதை தேவ சகாயத்தினால் விட்டுவிடுகிறபோது, அவனுடைய சுபாவம் உடனே சகல தூர்க்குணங்களினின்று நிவாரணையாகாது. ஒரு வஸ்திரம் அழுக்காகவிருக்கும்போது அழுக்கின் பழைய கறைகள் காணாமல், அது வெளுத்ததற்குப் பிறகு, தெளிவாய்க் காணப்படுகிற பிரகாரம், ஒருவனுடைய பாவங்கள் தேவனுடைய கிருபையினால் பரிகாரமாகும் வரைக்கும், தன் சுபாவம் பாவத்தினால் உண்டான அழுக்குக் கறைகள் எவ்வளவோ கெட்டியாய் ஒட்டிக்கொண்டிருக்கிறதென்று தெரிகிறதில்லை. பக்தனொருவன் பரிசுத்தனாகிறபோதெல்லாம் தன்னிலே படிந்திருக்கிற பாவம் அசங்கியமானதென்று அறிந்துகொண்டே வருவான். முதலில் தனக்குத் தெரியாத நானாவிதமான தூர்க்குணங்கள் தன் இருதயத்திலிருக்கிறதென்று கண்டுகொள்ளுகிறான். ஒருவன் தன் ஆத்ம ஸ்திதியைப் பார்த்து, என் ஆத்துமாவில் பாவ அழுக்கு எவ்வளவுமில்லை என்று எண்ணி திருப்தியாயிருந்தால், அப்படிப்பட்டவன் ஆத்துமாவில் பரிசுத்தமாகுதல் சரியாயும் கிரமமாயும் விருத்தியாகிக்கொண்டு வருகிறது என்பது அதிக சமுசயமே. இருதயங்களின் குணங்களைப் பரீட்சித்து அந்தரங்கமாயிருக்கிற பாவங்களையெல்லாம் கண்டுகொள்ளுகிறதற்கு நீண்ட காலம் வேண்டும். இவ்வேலை பரிசுத்தமாக்குகிற வேலையைச் சேர்ந்தது.*

*(b) ஆத்துமாவில் நிலைத்திருக்கிற பாவத்தைக் கண்டுகொண்டபின், அதை நாசஞ்செய்யவேண்டியதாய் இருக்கிறது. சரீராதீன சுபாவத்தைச் சிலுவையில் அறையவேண்டும். அச்சுபாவம் முழுவதும் சாகும் வரையிலும், பாவ இச்சையாவும் சிலுவையில் அறையப்படவேண்டும். கெட்ட சுபாவத்தைக் கொல்லும் வேலை நிதானமாய் நடக்கவேண்டிய வேலை. அத்தீய சுபாவத்தை சிலுவையில் அறைந்து உடனே கொல்வது அசாத்தியமானது. சரீராதீன சுபாவம் உழன்று சாகிறது பரிசுத்தமாக்குகிற வேலையைச் சேர்ந்தது. இதற்கும் நீண்டகாலம் பிடிக்கும்,*

(c) பக்தனொருவன் தன்னை தேவனுக்குப் பிரதிஷ்டை செய்து கொண்டது யதார்த்தமானதோ அல்லவோ என்று கிரமம் கிரமமாய் நிச்சயித்துக்கொள்ளவேண்டும். சிலர் கஷ்டத்துக்குள்ளானவுடனே பின்வாங்கிப்போய், நாசமடைகிறவர்களா யிருக்கிறார்கள். உண்டான பக்தி திடமாகும்படி நானாவிதமான சந்தர்ப்பங்களில் அதைப் பரிசோதிக்கவேண்டும். இயேசுகிறிஸ்து ஞானஸ்நானமடைந்து பரிசுத்தாவியானவர் அவர்மேல் இறங்கி அவரைப் பிரதிஷ்டை செய்த கொஞ்சக்காலத்துக்குப் பின், பிசாசினால் சோதிக்கப்படுவதற்கு வனாந்தரமான இடத்திற்குப் போகும்படி ஆவியானவரால் ஏவப்பட்டார் (மத். $4^{1}$). ஒருவனுடைய பக்தி உண்மையென்று பரிசோதனையினால் வெளிப்படும் வரைக்கும் அவன் கிறிஸ்தவ உத்தமத்துக்கு வந்தவனல்ல (யாக். $1^{12}$). பக்தியைப் பரிசோதிப்பது பரிசுத்தமாக்குகிற வேலையைச் சேர்ந்தது. இதற்கும் அதிக காலம் வேண்டும்.

(d) எதைப் பற்றிக்கொள்ளவேண்டுமென்றும் எதை விட்டுவிடவேண்டுமென்றும் அதிகமதிகமாய்க் கற்றுக்கொள்ளவேண்டும். கிறிஸ்தவ பக்தன் இன்னின்னது நல்லது இன்னின்னவை கெட்டவை என்னும் பேதத்தை அறிந்துகொள்வதற்காகவும், பயிற்சியினால் பகுத்தறியத்தக்கதாகவும், முயற்சி செய்யும் ஞானேந்திரியங்களை யுள்ளவனாகவேண்டும் (எபி. $5^{14}$). இது தக்கது இது தகாதது என்று பரிசோதித்து அறிவதற்குச் சக்தனாகும்படி அறிவையும் சம்பூரண விவேகத்தையும் சம்பாதித்துக்கொள்ளவேண்டும் (பிலி. $1^{9}$). கிறிஸ்தவ சித்திக்கு வருமுன்னே சத்தியமும், மானமும், நியாயமும், சுத்தமும், அன்பும் முதலிய நற்குணங்கள் எவைகளுண்டோ அவைகளெல்லாவற்றையும் அடைந்துகொண்டு அப்பியாசிக்கவேண்டும் (பிலி. $4^{8}$). இந்த வேலை பரிசுத்தமாக்குகிற வேலையைச் சேர்ந்தது. இதற்கு அதிக காலம் வேண்டும்.

(e) கிறிஸ்தவ பக்தன் வரவர அன்பில் நிலைத்திருக்கிறவனாக இருக்கவேண்டும். அன்பு அவனுடைய சுபாவம் எங்கும் வியாபித்து, அவன் வேரூரும் வரைக்கும் அவனில் பெருகி அதிகரிக்கவேண்டும். அன்பு அவன் ஆத்துமாவின் சத்துக்களுக்கெல்லாம் முக்கிய அதிகாரியாகும் வரைக்கும் அவன் கிறிஸ்தவ சித்திக்கு வந்தவனல்ல. அன்பு பூரண சற்குணத்தின் கட்டாகவிருக்கிறது (கொலோ. $3^{14}$). அன்பை ஆத்துமாவில் நிலைநிறுத்துவது பரிசுத்தமாக்குதலோடு இசைந்திருக்கிறது. இதற்கும் நீண்டகாலம் வேண்டும்.

அப்படியானால், பரிசுத்தமாக்குதல் எவ்வளவு காலம் வரைக்கும் நடந்துகொண்டிருக்கும்? பரிசுத்தத்தை அடைவதற்கு முன், கிறிஸ்துமார்க்கத்தில் எத்தனை தினம், மாசம், வருஷங்கள் கழியவேண்டும்? பிரயாணந் தீர எவ்வளவு காலஞ் செல்லும் என்று அறிந்துகொள்ளவேண்டுமானால், எவ்வளவு தூரம் போகவேண்டுமென்றும், எவ்வளவு சுருக்காய் நடக்கவேண்டுமென்றும், கேட்கவேண்டுமல்லவா? சிலர் வெகுதூரம் போகவேண்டியதா யிருக்கிறபடியால், அவர்களுக்கு வெகு காலம் வேண்டும். ஒருவனுடைய சுபாவம் பாவத்தினால் கேடுகெட்டுப் போயிருக்குமானால், அச்சுபாவம் நீதியிலும் நிர்மலத்திலும் சேர்ந்து, முழுவதுமாய் மாறுகிறதற்கு நீண்டகாலம் வேண்டியதா யிருக்கிறது. பரிசுத்தமாகுதல் என்னும் ஒழுங்கு எவ்வளவு காலத்துக்குள் முடியவேண்டுமென்று அறிந்துகொள்ளவேண்டுமானால், விசேஷமாக எவ்வளவு தூரம் நடக்கவேண்டும் என்றல்ல, எவ்வளவு சீக்கிரமாய் நடக்கலாம், அதாவது எவ்வளவு தூரம் பரிசுத்தாவியின் சகாயத்தையடையலாம் என்று நிச்சயித்துக்கொள்ளவேண்டும். நம்முடைய நம்பிக்கை பூர்த்தியாகவிருக்குமானால், தேவன் தமது ஆவியை அளவில்லாமல் நமக்குக் கொடுப்பதினால் (யோ. $3^{34}$) பரிசுத்தமாகுதல் நாம் எதிர்பார்ப்பதிலும் வெகு சீக்கிரத்தில் பூர்த்தியாகும்.



(இன்னும் வரும்.)

## A Sermon

**By Mr. J. Ponnusami**

## தேவ ஊழியமும் தேவ ஊழியர்களும்

[எபே: 6. 6]

(தொடர்ச்சி)

III. இது பக்திக்குரிய ஊழியம் :—தேவபக்தியானது இஜ்ஜீவனுக்கும் இதற்குப்பின் வரும் ஜீவனுக்கும் வாக்குத்தத்தமுள்ளதாகையால் (1 தீமோ. $4^{8}$) பக்திக்குரிய ஊழியம் எவ்வளவோ சிறந்ததென்று பார்க்கிறோம். தீமோத்தேயுவின் பெற்றோர் பக்தியுள்ள குடும்பஸ்தரென்றும், தங்கள் குமாரனாகிய தீமோத்தேயுவுக்கு சிறுபிராயமுதற்கொண்டே பழைய ஏற்பாடாகிய வேதவாக்கியங்களைப் படிப்பித்து வந்தார்களென்றும், இப்படிப்பட்ட பக்திவிருத்திக்கேதுவான நல்வளர்ப்பில் வளர்க்கப்பட்ட தீமோத்தேயுவின் ஜீவியத்தைக் கவனித்த அப்போஸ்தலனாகிய பவுல் அவரை இந்த சிறந்த ஊழியத்திற்கென்று தெரிந்துகொண்டாரென்றும் பார்க்கிறோம்.

IV. இது சந்தோஷமான ஊழியம் :—இப்படிப்பட்ட சிறந்த ஊழியத்தைச் செய்கிறவர்கள் உலகத்தாரால் புறக்கணிக்கப்படலாம், நிந்திக்கப்படலாம், புறம்பாக்கப்படலாம்; ஆனால் அப்படிப்பட்ட சமயங்களிலுங்கூட சந்தோஷப்பட்டுக் களிகூருகிறவர்களாய் இருக்க வேண்டும். ஏனென்றால் 'என்னிமித்தம் உங்களை நிந்தித்து துன்பப்படுத்தி பலவித தீமையான மொழிகளையும் உங்கள்பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள். சந்தோஷப்பட்டுக் களிகூருங்கள், பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்' (மத். $5^{11-12}$) என்று கர்த்தர் வாக்களிக்கிறார்.

இந்த சிறந்த தேவ ஊழியத்தை மிகுந்த திடமனச்சாட்சியாய் நடப்பித்து வந்த பேதுரு அப்போஸ்தலனை நாம் பார்க்கும்போது தமது ஊழியத்தில் தமக்கு வந்த எல்லாத் துன்பங்களையும் பொறுமையாய் சகித்துக்கொண்டது மாத்திரமல்ல, கடைசியாய்த் தாம் துன்பங்களின் மத்தியில் சிலுவையில் தலைகீழாய் அறையப்பட தம்மைச் சந்தோஷமாய் ஒப்புக்கொடுத்தாரென்றும் பார்க்கிறோம்.

V. இது உண்மையுள்ள ஊழியம் :— இப்படிப்பட்ட பக்தி விருத்திக்கேதுவான ஊழியம் உண்மையுள்ள ஊழியமாகவும் இருக்க வேண்டியது அவசியம். பத்து தாலந்துகளையும் ஐந்து தாலந்துகளையும் வாங்கின ஊழியக்காரரைப்பார்த்து அவனுடைய எஜமான் என்ன சொல்லுகிறான் பாருங்கள்: அவர்களுடைய ஊழியத்தில் காணப்பட்ட உண்மையினிமித்தம் அவன் அவர்களைப்பார்த்து 'உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையுள்ளவனாயிருந்தாய், அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன்; உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி' (மத். $25^{23}$) என்று சொன்னதாகப் பார்க்கிறோம்.

அது மாத்திரமல்ல, அப்போஸ்தலனாகிய ஸ்தேவான் யூதர்களோடு தர்க்கம்பண்ணி அதினால் அவர் பெரிய சங்கத்தாரிடத்துக்கு முன்பாகக் கொண்டுபோகப்பட்டபோது அவர் அவர்களுக்கு முன் வெகு உண்மையாய்ப் பிரசங்கம் பண்ணினாரென்றும் அதினால் அவர் இரத்தச்சாட்சியாய் மரித்தாரென்றும் (அப்போ. $6^{7}$) பார்க்கிறோம்.

சகோதரரே! இப்படிப்பட்ட சிறந்த ஊழியத்திற்கு அழைக்கப்பட்டிருக்கிற தேவஊழியர்கள் மேன்மையுள்ளதும், ஆவிக்குரியதும், பக்திக்குரியதும், சந்தோஷமானதும், உண்மையுள்ளதுமான இந்த கௌரவம் மிகுந்த ஊழியத்தைச் செய்ய ஆசிக்கிறார்களானால் அப்படிப்பட்டவர்கள் தங்களைத்தாங்களே சோதித்தறிந்து இந்த மேலான அழைப்புக்குப் பாத்திராய் இருப்பது அவசியம்.

I. இப்படிப்பட்ட கண்காணிப்பை அல்லது ஊழியத்தை விரும்புகிறவர்கள் மதுபானப்பிரியராய் இருத்தல் கூடாது. ஏனென்றால் மதுபான வெறிகொள்ளல் பலவிதமான துர்க்கிருத்தியங்களுக்கு இடமாகிறது. லோத்து மதுபான வெறிகொண்டதினால் அல்லவா முறைகேடான சந்ததி உண்டாக ஏதுவானது (ஆதி. $19^{32}$.) 'திராக்ஷாரசம் பரியாசம் செய்யும், மதுபானம் அமளிபண்ணும் அதினால் மயங்குகிற ஒருவனும் ஞானவான் அல்ல' (நீதி. $20^{1}$) என்றும், மதுபானிகளுக்கு வேதனை, துக்கம், சண்டை, காயங்கள், இரத்தங் கலங்கின கண்கள் உண்டாகும்' (நீதி. $23^{29}$) என்றும், அது மெதுவாய் இறங்கும் முடிவிலே அது பாம்பைப்போல் கடிக்கும் என்றும், அது பரஸ்திரீகளை நோக்கும் என்றும், தாறுமாறானவைகளைப் பேசுமென்றும் (நீதி. $23^{32, 33}$) சாலொமோன் ஞானி சொல்லுகிறார். இப்படிப்பட்டவர்கள் இந்த சிறந்த ஊழியத்திற்கு முற்றிலும் அபாத்திரர்.

II. அவர்கள் பணஆசை இல்லாதவர்களாயிருக்கவேண்டும். பணஆசை பற்பல விதமான கேடுபாடுகளுக்கு வேராயிருக்கிறது. பன்னிருவரில் ஒருவனாகிய யூதாஸ் இரட்சகருக்கு சிஷனாகவும் ஊழியக்காரனாகவும் இருந்தான். இரட்சகருடைய அன்பையும் கிருபைகளையும் நேரில் கண்டான். அவருடைய அற்புத அடையாளங்களையும் வாக்கு வல்லபங்களையும் பார்த்தான். தானும் ஒரு ஊழியக்காரன்தான் என்றும் எண்ணியிருந்தான். ஆனாலும் இந்த சிறந்த அப்போஸ்தல பட்டத்துக்கு அவன் முற்றிலும் அபாத்திரனாகவே இருந்தான். ஏனென்றால் அவனுக்குள் பணஆசை யிருந்தது. ஆகையினால் தான் சொற்ப உலகப்பொருளுக்கு விலையேறப்பெற்றதும் மாசில்லாததுமான உடன்படிக்கையின் இரத்தத்தை அவன் காட்டிக்கொடுத்தான். இப்படிப்பட்ட இழிவான ஆதாயத்தின் பொருட்டு பணஆசை பிடித்த தேவஊழியர்கள் கிறிஸ்துவுக்கும் கிறிஸ்துமார்க்கத்துக்கும் பெரிய அவமானத்தையும் அபகீர்த்தியையும் வருவிக்கக்கூடியவர்களாய் இருக்கிறார்கள். மேலும் பணஆசையினால் உண்டாகும் அநியாயத்தின் சம்பாத்தியம் யூதாசுக்கு அந்த முப்பது வெள்ளிக்காசு உதவாமல் போனதுபோல் ஆகும்.

III. அவர்கள் போதக சமர்த்தர்களாய் இருக்கவேண்டியது :—இரட்சகருடைய பன்னிரண்டு சீஷர்களை நாம் சற்று கவனிப்போம். ஆரம்பத்தில் அவர்கள் கல்வியறிவில்லாதவர்களும், நாகரீகமற்றவர்களும், தாழ்ந்த வகுப்பினரைச்சேர்ந்த பற்பல தொழிலாளிகளுமாயிருந்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் நமதருமை இரட்சகருக்குத் தொண்டர்களானதின் பின் பரிசுத்தாவியின் வேதசாஸ்திர கலாசாலையில் தேர்ச்சியடைந்து ஆவியின் அருள்மாரியால் அபிஷேகிக்கப்

பட்டதின்பின் ஆ! அவர்கள் எவ்வளவோ ஞானவான்களாகவும் அறிவாளிகளாகவும் விவேகசாலிகளாகவும் சாமர்த்தியமுள்ள பிரசங்கிகளாகவும், வாக்குவல்லபமுள்ளவர்களாகவும் ஆனார்களென்றும், உலகஞானிகளாலும் கல்விமான்களாலும் அவர்கள் ஒருக்காலமும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் பார்க்கிறோம். இப்படிப்பட்ட இலட்சணங்களையும் பரிசுத்தாவியின் நிறைவையும் பெற்றுக்கொண்டாலொழிய இந்த சிறந்த ஊழியத்துக்குத் தகுதியுள்ளவர்களாக முடியாது. கிறிஸ்துமார்க்கத்தின் மேன்மைகளையும், அதின் உபதேசங்களையும் பூரணமாக அறியாமல் தங்கள் அறிவுக்கும் யோசனைகளுக்கும் தோன்றுகிறபடி வீண்காரியங்களை அலப்புவதினால் கர்த்தருடைய நாமம் அபத்தமாகிறது. அநேகருடைய இருதயத்திலுள்ள ஆவியின் அனல் குறைவடைந்து மங்கி எரிகிற விளக்கைப்போல் ஆகிறதற்குக் காரணமாகிறது.

IV. தங்கள் சொந்த குடும்பத்தை நன்றாய் நடத்தக்கூடியவர்களாயிருக்கவேண்டும்:— இது விஷயத்தில் அப்போஸ்தலனாகிய பவுல் 'ஒருவன் தன் சொந்த குடும்பத்தை நடத்த அறியாதிருந்தால் தேவனுடைய சபையை எப்படி விசாரிப்பான்' (1 தீமோ. 3[5]) என்று சொல்லுகிறார். ஏலி என்னும் பிரதான ஆசாரியன் தன் குடும்பத்தை சீராய் நடத்தாததினாலும், தன் பிள்ளைகளைக் கர்த்தருக்கேற்ற சிக்ஷையில் வளர்க்காததினாலும் அந்தக் குடும்பத்துக்கு நேரிட்டதென்ன? இதோ கர்த்தர் பிள்ளையாண்டானாகிய சாமுவேலைக் கொண்டு அந்தக் குடும்பத்துக்கு நேரிடப்போகிற தண்டனையைக்குறித்து அறிவித்த விஷயங்களை நாம் அறிவோமல்லவா (1 சாமு. 4.[2]) தீமோத்தேயுவின் குடும்பத்தைப் பார்ப்போம். அவனுடைய பெற்றோர் பக்திவிர்த்திக்கு ஏதுவான நடக்கையுள்ள குடும்பஸ்தராய் இருந்தார்களென்று பார்க்கிறோம். எத்தனையோபேர் தங்களைத் தேவ ஊழியர்கள் என்று சொல்லியும் தங்கள் குடும்பத்தையும் மனைவிமக்களையும் சன்மார்க்க ஜீவியத்தில் நடத்திவர அசக்தர்களாக இருக்கலாம். அப்படிப்பட்டவர்களுடைய வீடுகளிலே வேதவாசிப்பிராது, ஜெபதபங்களிராது. அஞ்ஞானிகளைப்போல் தங்கள் நாட்களைக் கழிக்கிறவர்களாய் இருக்கலாம். ஐயோ இப்படிப்பட்டவர்கள் தேவ ஊழியத்துக்கு முற்றிலும் அபாத்திரர்.

V. அவர்கள் உண்மையுள்ளவர்களாய் இருக்கவேண்டும் :—உத்தரவாதமான ஊழியமாகிய தாலந்துகளைப் பெற்றிருக்கிறவர்கள் தங்கள் ஊழியத்தில் உண்மையுள்ளவர்களாய் இருக்கவேண்டும். மனுஷன் முகத்தைப்பார்ப்பான்; கர்த்தரோ இருதயத்தை ஊடுருவப் பார்க்கக்கூடியவராயிருக்கிறார். உண்மைக் கேட்டினிமித்தம் அன



னியா சப்பீராளுக்கு நேரிட்டதென்ன? உலகப் பிரகாரமான எஜமானை வஞ்சிக்கலாம், மோசஞ் செய்யலாம், ஊழியத்தில் உண்மைக் கேடாகவும் நடக்கலாம்; ஆனால் இப்படிப்பட்ட நடவடிக்கைகள் பரம எஜமானுக்கு முன்பாக வெளிச்சத்தில் கொண்டுவந்து நிறுத்தப்படும். ஆதலால் இப்படிப்பட்ட ஊழியத்துக்கு உண்மை அவசியம்.

சகோதரரே! இதோ ஒரு நாள் வரப்போகிறது. அது நியாயத்தீர்ப்பின் நாள். அதில் கர்த்தர் நீதியாய் நியாயந்தீர்ப்பார். நாம் பெற்றுக்கொண்ட இந்த சிறந்த ஊழியத்தில் நாம் செய்திருக்கும் நல்வினை தீவினைகளுக்குத்தக்கதான பலனை அடைவோம்.

ஆதலால் நம்மில் ஒவ்வொருவனும் தன்னைக்குறித்து கணக்கொப்புவிக்கவேண்டும். (ரோமர் 14[12]).

'ஒவ்வொரு கிரியையையும் அந்தரங்கமான ஒவ்வொரு காரியத்தையும் தேவன் நியாயத்திலே கொண்டுவருவார்' (பிரச. 12[14]).

அந்தரங்கமும் பகிரங்கமுமான பாவங்களையெல்லாம் அந்த நாள் வெளிப்படுத்தும். சகலமும் அப்போது அறியப்படும். நமது ஜீவியமானது அப்போது மூடப்படாமல் திறந்துவைக்கப்படும். பொய்யராய் அல்லது விபசாரக்காரராய் அல்லது அநியாயக்காரராய், புறங்கூறுகிறவர்களாய், இருமனமுள்ளவர்களாய், இரு நாவுள்ளவர்களாய் இருந்திருப்பார்களேயானால் அவைகளை அந்த நாளிலே காண்பார்கள்.

சகோதரரே! இப்படிப்பட்ட ஆக்கினையை நாம் அடையாதபடிக்கு இந்த சிறந்த ஊழியத்தில் நல்ல பங்கைத் தெரிந்துகொள்ளவேண்டுமென்ற நோக்கமும் வாஞ்சையுமுள்ளவர்களாய் நடந்துகொண்டோமானால் தேவன் நமக்கு வாக்குத்தத்தம் பண்ணியிருக்கும் பரம பாக்கியங்களுக்குப் பங்குள்ளவர்களாவோம். உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரருக்குக் கிடைத்த மேன்மை நமக்கும் கிடைக்கும். இப்படிப்பட்ட நல்ல பங்கைத் தெரிந்துகொண்ட அநேக தேவதாபக்தர்களைப்போல கிறிஸ்துவுடனே கூட நாமும் என்றென்றைக்கும் அரசாளுவோம்.—ஆமென்.

## Herod and John the Baptist

**By the Rev. N. Devasagayam, B.A.**

## ஏரோதும் யோவான்ஸ்நானகனும்

மாற்கு. 6, 17—29.

I. பெரியவன் செய்தாலும் பாவம் பாவம்தான், பாவம் புண்ணியமாகாது. ஏரோது அக்திப்பா அரேபியாவில் அரசு புரிந்த

அரேத்த ராஜாவின் மகளைக் கலியாணம் செய்திருந்தான். அவனுடைய தகப்பன் பெரிய ஏரோது கிறிஸ்துவுக்கு நான்கு வருஷங்களுக்குமுன் இறந்தபோது, அவனுடைய சீமையில் நாலில் ஒரு பாகம் அந்திப்பாவுக்குக் கிடைத்தது. அந்தப் பாகத்தில் கலிலேயா நாடும் பெரேயா நாடும் சேர்ந்தது. தகப்பனுடைய சீமையில் ஒரு பங்கும் கிடைக்காமல் ரோம நகரத்தில் சக்கிரவர்த்தியுடைய அரண்காத்துப் பொழுதுபோக்கினவன் பிலிப்பு. இவன் தன் பாதிச் சகோதரனுடைய மகள் ஏரோதியாளைக் கலியாணம் பண்ணி சாலோமி என்று ஒரு பெண்மகளைப் பெற்றிருந்தான். அந்திப்பா ரோமை நகரிக்குச் சக்கிரவர்த்தியின் தயவைத் தேடிப்போனபோது பிலிப்புவின் பெண்சாதியாகிய ஏரோதியாள் அவனை மதிமயக்கித் தன் கையில் போட்டுக்கொண்டாள். அதன்பிறகு, அந்திப்பா பிலிப்புவின் சம்மதத்துடன் அவனிடத்திலிருந்து தள்ளுதலின் சீட்டு மூலமாய் அவளுக்கு விவாகரத்துச் சம்பாதித்து, தானே அவளை விவாகம் பண்ணிக்கொண்டான். ஏரோதியாளை விவாகம் பண்ணிக்கொண்டு, அந்திப்பா தன் தேசத்திற்குத் திரும்பினபின் அவனுடைய குடிகள், 'இதென்ன வெட்கக்கேடு! தனக்குப் பெண்சாதியிருக்க, நம் அரசன் அநியாயமாய் இன்னொருவனுடைய பெண்சாதியை அவனை விட்டுப் பிரித்து அவளைத் தானே விவாகம் செய்தானே! இது எப்பேர்ப்பட்ட அக்கிரமம்' என்று வசையாய்ப் பேசிக்கொண்டார்கள். அப்படிக் குடிகள் பேசிக்கொண்டது அவனுடைய காதுக்கு வந்து எட்டினது. இப்பொழுது அரசாட்சிக்காரரைப்பற்றிக் குடிகள் என்ன நினைக்கிறார்கள் என்று அறிய தினவர்த்தமானப் பத்திரிகைகளைப் படிப்பார்கள். அக்காலத்தில் வர்த்தமானப் பத்திரிகைகள் கிடையாது. ஒவ்வொரு அரசனும் தன்னைப்பற்றிக் குடிகள் என்ன நினைக்கிறார்கள் என்று அறிய அநேக வேவுகாரரை வைத்திருந்தான். அப்படிப்பட்ட வேவுகாரர் அந்திப்பாவுக்கும் இருந்தார்கள். அவர்கள் மூலமாய்க் குடிகளுடைய மனவெறுப்பை அவன் அறிந்திருப்பான். குடிகளுடைய வெறுப்பைத்தவிர, அரபியா ராஜ்யத்தின் அரசனாகிய அரேத்த ராஜாவின் கோபமும் அவன்மேல் தாக்கியிருந்தது. அந்திப்பாவின் நியாயமான முதற்பெண்சாதி அரேத்த ராஜாவுடைய மகள். அவளைத் தள்ளுதல் சீட்டுக்கொடுத்து அந்திப்பா விவாகரத்துச் செய்திருந்தான். தன் குடிகளும் அரேத்த ராஜாவும் ஒன்றுகூடி மேலதிகாரியாகிய ரோமச்சக்கிரவர்த்திக்குப் பிரியாதுசெய்தால் தன் ஆளுகைக்கு மோசம்வரும் என்று அந்திப்பா பயந்திருந்தான். அக்கிரமம் செய்கிறவர்களுடைய உள்ளத்தில் அமைச்சல் இருக்கா.

ஏரோதே நரிபோல் தந்திரி (லூக். $13^{32}$) ஆகையால் அவன் ஆலோசனைசெய்து ஒரு உபாயங்கண்டான். ஜனங்களெல்லாரும்



யோவான்ஸ்நானகனைத் தேவனால் அனுப்பப்பட்ட பெரிய தீர்க்கதரிசி என்று நம்பினார்கள். தன் ஒற்றர்களாலும் 'அவன் நீதியும் பரிசுத்தமும் உள்ளவன்' என்று அறிந்திருந்தான். அவனைத் தான் அரண்மனைக்கு அழைத்து, பெரிய மனுஷரும் மகாஜனமும் கட்டின ஒரு கூட்டத்திலே அவன் வாயைக்கொண்டு தனக்கும் ஏரோதியாளுக்கும் நடந்திருந்த விவாகம் வேதத்திற்கு ஒத்த சரியான விவாகம்தான் என்று சொல்லுவித்தால், அதற்குமேல் ஜனங்களுடைய ஓமல் அடங்கிவிடும் என்று நினைத்தான். நினைத்து யோவானை அழைப்பித்து அவனுடைய வாய்ப்பிறப்பைக் கேட்டான். அவன்: 'உம்முடைய சகோதரன் பிலிப்புவின் பெண்சாதியை நீர் வைத்துக்கொள்வது நியாயமல்ல என்று சொன்னான்.' அந்தச் சொல் ஏரோதியாளுடைய மனதில் பெரிய நிந்தைச்சொல்லாய் இடிபோல் இடித்தது. ஏரோதுக்கும் அப்படியே. ஒருவேளை, பெரிய மனுஷருடைய பாவத்தை மற்றக் குருமார் தொடும்போது பட்டு சுற்றிக்கொண்டு நோவாமல் தொடுகிறார்களே அப்படி இவன் தொடத்தெரியாத கல்லாத காட்டான் நாகரீகம் இருந்தால் 'இது தங்களுக்குத் தகுந்த செய்கையல்ல', 'தங்களுடைய குடிகள் வெறுக்கிறதைச் செய்யாதேயுங்கள்', 'சக்கிரவர்த்திக் கோபம் உண்டாகுமே' இப்படி மரியாதையாய்ச் சொல்லியிருப்பான். ரோமாவில் இருந்த வேதங்கற்ற சாஸ்திரிகள் இந்தத் தள்ளுதல் சீட்டு வேதத்திற்குச் செல்லும்; இந்தக் கலியாணம் சரியான கலியாணம்தான் என்றும் எங்களுக்கு வற்புறுத்தி, எங்கள் கலியாணத்தை ஆசீர்வதித்திருக்க இவன் அவர்களைப்போல் ஆழமாய்ப் படித்தறியாமையால் இப்படிச் சொன்னான். இவனை ஜெயிலில் அடைத்து, ஒடுக்கத்திலே வைத்தால், புத்திவரும். அதன்பிறகு கேட்டால் அவர்களைப்போலவே சொல்லுவான் என்று ஏரோது நினைத்தான். இப்படி அநேக பெரிய மனுஷர்கள் தங்களுக்கு இதமான பாவங்களைக் கூசாமல் செய்வார்கள். அவர்கள் கொடுக்கிற பணங்காசு துணிமணிக்குப் பிரியப்பட்டோ, அவர்களுடைய கோபத்திற்கு அஞ்சியோ, அநேக குருமார் மனச்சாட்சியை மழுக்கிக்கொண்டு அந்தப்பாவங்களை நல்ல பெயர் சொல்லி மூடுவார்கள். தேவன் அவர்களை இம்மையிலும் மறுமையிலும் பயங்கரமாய்த் தண்டிப்பார். சிலகாலம் பொறுத்து ஏரோது யோவானைத் திரும்ப அழைத்து, முன் கேள்வியையே கேட்டான். அப்போதும் யோவான் முன் உத்தரத்தையே இடிபோல் இடித்துச் சொன்னான். இப்படி இடையிடையே நேரங்கொடுத்துப் பலமுறை கேட்டும் பலமுறையும் யோவான் அது பாவம் பாவமே என்றான்.*

* Elegen (Aorist)—*repeatedly* told (Weymouth)

அவனுயிரை வாங்க ஏரோதியாள் பலமுறை யத்தனித்தும் ஏரோது யோவானை அவளுடைய கைக்குள் வராமல் காத்தான். சின்ன மனுஷரிடத்தில் இரக்கமில்லாமல் பாவத்தைக் கண்டிக்கிறது லேசு. வல்லமையுள்ளவர்களுடைய பாவத்தைக் கண்டிக்கிறது லேசல்ல. அதற்கு வல்லமையுள்ள தேவகிருபை குருக்களுக்குள்ளும் ஆத்தும விசாரணைக்காரருக்குள்ளும் வேலைசெய்யவேண்டும்.

(இன்னும் வரும்)

## Deceitful Weights

## கள்ள நிறை கற்களை உபயோகித்த தட்டான்

அநேக வருஷங்களுக்கு முன் ஒரு பட்டணத்தில் தனவந்தனான தட்டான் ஒருவனிருந்தான். அவ்விடத்திற்கு வந்த ஐசுவரியவான்களில் பொன் ஆபரணம் வேண்டியவர்கள் இத்தட்டான் பொன் வேலையில் மிக்கத் திறமை வாய்ந்தவனென்று அறிந்து, இவனிடத்தில் பொன்கொடுத்துத் தாங்கள் விரும்பிய ஆபரணங்களை இவனிடம் செய்வித்து, அவ்வாபரணத்திற்குத் தக்க கூலிகொடுப்பது வழக்கம்.

இப்பொன் ஆசாரி, தான் செய்த வேலைக்குத் தகுந்த கூலிபெற்றும் அது காணாதெனப் பேராசைகொண்டு, தன்னிடம் ஆபரணம் செய்ய வருபவர்களை வஞ்சிக்கும்படி ஓர் உபாயம் செய்தான். அவ்வுபாயம் யாதெனில்: இவன் இரண்டு விதமான நிறை கற்களை வைத்திருந்தான். இவைகளில் ஒருவிதம் அதிக கனமுள்ளதும், மற்றது கனம் குறைந்ததுமாய் இருந்தது. எவராவது ஆபரணம் செய்யப் பொன் கொண்டுவந்தால், இவன் கனமுள்ள நிறைகளால் நிறுத்து அப்பொன்னின் நிறையைக் குறைத்துக் காட்டுவான். ஆபரணத்தைச்செய்து கொடுக்கும்போது, இலேசான நிறை கற்களால் நிறுத்துக்கொடுப்பான். இவ்விதமாய் மோசம் செய்து மிகுந்த பொன்னைத் தானே எடுத்துக்கொள்வான்.

அக்காலத்தில் இவன் செய்துவந்த தந்திர உபாயத்தை எவருமே அறியார். ஆகையால் பல ஆண்டுகளாய் இவனது மோசம் வெளிப்படவில்லை.

ஆனால் ஒருநாள் ஒருவன் நகை ஒன்று செய்வதற்காகக் கொஞ்சம் பொன் இவனிடம் கொண்டுவந்தான். இவன் அந்த நாளிலே கைப்பிசகாய் கனமுள்ள நிறைகளை வைக்கும் இடத்தில் குறைந்த நிறை கற்களையும், குறைந்த நிறைகள் வைக்கும் இடத்தில் கனமுள்ள நிறைகற்களையும் வைத்திருந்தான். இதை அறியாமல் அப்பொன்னை



வாங்கி கனம் குறைந்த நிறைகற்களால் அதை நிறுத்து, அதினிடை $8\frac{1}{4}$ தோலா என்று சொன்னான்.

ஒரு நாழிகைக்குப் பின் பொன்னைக்கொடுத்தவன் திடீரெனத் திரும்பிவந்து ‘நான் ஒரு நிலத்தை வாங்கப் போகிறேன்; நான் கொடுத்த பொன்னைத் திருப்பக்கொடு’ என்று கேட்டான்.

தட்டான் அப்பொன்னைச் சொந்தக்காரனுக்குத் திருப்பிக்கொடுக்கும்போது, அதின் முன்னுள்ள அளவில் எதும் குறையவில்லையெனக் காட்டும்பொருட்டுத் தராசிலிட்டு நிறுத்தான்.

அச்சமயத்தில் வழக்கம்போல மற்ற நிறைகற்களால் அதை நிறுத்தான். அந்த நிறைகள் கனமுள்ளவைகள் ஆனதினால் ‘இப்பொன்னின் நிறை $2\frac{3}{4}$ தோலா’ என்று சொன்னான்.

பொன்னுக்குரியவன் மிகவும் கோபதாபத்துடன் ‘ஓகோ! இதென்ன விநோதம். ஒரு நாழிகைக்குள் $8\frac{1}{4}$ தோலா நிறையுள்ள பொன் $2\frac{3}{4}$ தோலாவாக மாறியிருக்கிறதே’ என்று கூவி அப்பட்டணத்திலுள்ள ராஜாவின் அரண்மனைக்குச் சென்று நடந்த சம்பவத்தை அறிவித்தான். அரசன் தனது சேவகர்களை அனுப்பி, தட்டான் செய்த மோசத்தை விசாரித்து அறிந்து அவனைச் சிரச்சேதம் செய்வித்தான்.

இக்கதையைக் கேட்போர் எவரும் இத்தட்டான் மகா மோசக்கார துரோகி என்றும், கள்ள நிறைகற்களைச் செய்து வழங்குவது மகா கொடிய பாதகம் என்றும் சொல்லுவார்கள்.

நாமும் அவ்விதப் பாதகத்தைச் செய்கிறோமோ என்று விசாரிக்குமிடத்து, இல்லை என உடனே முன்பின் சற்றென்கிலும் யோசியாது உத்தரம் உரைப்போம். ஆயினும் சற்று உற்று உணர்ந்தால் நாமும் இத்தட்டானைப்போல அருங்கொடிய துரோகத்திற்கு ஆளாயிருக்கிறோம் என்று அறிவோம்.

எப்படியெனில் நாம் நமது மனோவாக்குக் காயங்களை எற்றபடி சீர்தூக்கிப் பாராமல் ‘மாமியார் உடைத்தால் மண்கலம், மருமகன் உடைத்தால் பொன்கலம்’ என்பதுபோல நாமே புண்ணியவான்களென்றும், மற்றவர்கள் பஞ்சமாபாதகர் என்றும் நமது மனதில் நியாயந் தீர்க்கிறோம். இப்படிச் செய்வது எள்ளளவும் பகவானுக்கேற்காது.

நாம் பரகதியடைய வேண்டுமாயின் ஒரு பொருளின் நிறையை உண்மையான தராசு திட்டமாய் வெளிப்படுத்துவதுபோல், நாம் நமது மனோவாக்கு காயங்களின் தன்மையை உள்ளபடி உணர்ந்தறிவது அவசியமே.

இம்மானிலத்தில் குருவேடம் பூண்ட எவருமே இவ்விஷயத்தில்

நமக்கு உதவிபுரிய வல்லவராகார். ஒருவனது புறம்பான விஷயங்களை அறிய முடியுமே தவிர அவனது உள்ள நிகழ்ச்சியை கண்டறிவது மானிடர் எவருக்குமே இல்லாத ஓர் காரியம். ஆனால் பரம சற்குருவாகிய இயேசுகிறிஸ்து பெருமானின் அடிதொழுவோமாகில், அவர் நமது உள்ளத்தின் மருளை அகலவோட்டி, யாவற்றையும் தெளிவாய் உணர்த்துவிக்கக்கூடிய ஞானோபதேசம் அருளுவார். இவ்வுபதேசத்தின் சாராம்சமாவது: தீவினை புரியும் இயல்பையுடைய நாம் அத்தீய சுபாவத்தை யகற்றி, புண்ணியத்தைச் சம்பாதித்து, மீட்பையடைவது இல்லாத காரியம். தீவினையினின்று நமக்கு மீட்புவேண்டுமாயின், இயேசுகிறிஸ்து பெருமான் பேரில் பக்தி வைத்து, அவர் நமக்குக் காண்பித்தருளிய மெய்மார்க்கத்தை ஏற்றுக்கொண்டு, அதைக் கடைப்பிடித்தொழுகவேண்டும்.

இயேசு கிறிஸ்து என்னும் பரம சற்குரு யார் என்று விசாரித்தால், அவரே பாவப் பாசத்தினின்று மனுக்குலத்தாரை மீட்கும் பொருட்டு வந்த சர்வேசுரன்.

அன்பவதாரமாய் இவ்வுலகத்தில் மானிட ஜென்மமெடுத்து, இயேசுகிறிஸ்து என்னும் திருநாமம் தரித்துத் தனக்கென்று சில சிஷர்களைத் தெரிந்துகொண்டு, ஞானோபதேசத்தை அவர்களுக்குப் புகட்டினார். இவரைக்குறித்து இவரது சிஷர்களில் நால்வர் 'சுவிசேஷங்கள்' என்னும் திவ்விய நூல்களில் எழுதினவைகளை நாம் கேட்பதும் படிப்பதும் தியானிப்பதும் அவசியம். இத்துடன் அவர் மேல் பக்திவைத்து நமது உள்ளத்தில் அவரைப்பற்றித் தியானம் செய்வது நம்மேல் விழுந்த கடமை. இப்படி நாம் செய்தால், பரலோகத்திற்கு எழுந்தருளிய அவர், சின்மயத்தன்மையாய்த் தமதருளை அளித்து, முக்தியடைய உதவிபுரிவார்.

C. L. S. PRESS, MADRAS—1916

No. 126 நவம்பர் 1916

OFFICE OF ... MADRAS

# வேதியர் விளக்கு

## The Christian worker and Evangelism

By the Rev. W. J. Tunbridge

(Outline studies in the life and methods of St. Paul.)

### I. The Christian worker and his equipment

ADEQUATE equipment is of the greatest importance to a Christian worker. God can do much with imperfect instruments, but He can do a great deal more with perfect ones. St. Paul is a notable example of a 'chosen vessel,' a fully equipped worker. This equipment of the Apostle's was three-fold.

**1. Natural Equipment**

(*a*) He was *a Jew by birth*. cf. Phil. iii. 4–6; Acts xxiii. 6; xxvi. 4–5. This explains his knowledge of the Old Testament, his religious zeal, his deep sense of God's holiness, and of man's sin. The influence of Old Testament thought is evident in many of his writings, and the New Testament would be infinitely poorer without his illustration of Christian truths from the Jewish standpoint. His Jewish birth gave him also a great advantage in the approach to his own people—see e. g. Acts xxii. 2.

(*b*) He had the political rights of *a Roman Citizen*. This gave him a status and proved of great use to him on many occasions. It ensured dignity of treatment (Acts xvi. 39), at least on one occasion saved him from a scourging (xxii. 25), and made it possible for him to appeal to Cæsar (xxv. 10). It also gave him an insight into the Roman system and its methods of thought, while his comprehension and use of the organization of the Roman

Empire, especially in his choosing of strategic centres for evangelistic effort, made him 'a master-builder.'

(c) He was trained in *Greek thought* and philosophy, as well as in Hebrew methods of reasoning. His culture was thus widened, and he was saved from the narrowness and exclusiveness of a mere Jew. This was another of the things that eminently fitted him for his work, particularly for his call to be the apostle of the Gentiles: he was able to be 'all things to all men.'

(d) He was *a tent-maker by trade*: this enabled him to find the means of support when necessary during missionary journeys (Acts xx. 34), thus preventing him from becoming a burden to infant Churches, and showing to all that his labours for the Gospel were not the outcome of selfish or mercenary motives.

He was, therefore, endowed by nature with qualities which enabled him to become an 'all-round' man, able to fit himself into any position, and to fill with natural dignity and ease, any part.

**2. Intellectual Equipment**

(a) As shown above, he was *versed in Hebrew and Greek thought*, and had had a good education. He made the most of his natural abilities, and evidently committed much to memory. He frequently quotes from the Old Testament, and occasionally from Greek poets. He sometimes quotes the Old Testament in Hebrew, and sometimes from the Greek translation called the Septuagint, while on other occasions he gives the sense of Old Testament passages without actually quoting the exact words, e. g., in Romans there occur 74 O. T. quotations: in 1 Cor. xxix, and in Eph. xxi. . He quotes from 25 out of the 39 books, and most of the quoting must have been done from memory, for many of his epistles were written under circumstances that



make it very unlikely that he could have had access to O.T. manuscripts, which were very rare and very cumbrous.

(b) He was *marvellously versatile*. Note how differently he addresses himself to various audiences, suiting his openings to the particular prejudices of his hearers, and so gaining their attention at the outset.

Cf. the sermon to Jews in the Synagogue at Antioch: Acts xiii.
the sermon to pagans in the market place at Lystra: Acts xiv.
the sermon to Philosophers in the Areopagus at Athens: Acts xvii.
the sermon to the mob on the steps of the castle at Jerusalem: Acts xxi.
the sermon to Felix in the Court at Cæsarea: Acts xxiv.

(c) *His thought was rich* and abounding in ideas, and his mind trained to the highest pitch. His meditation on the words and person of Christ, interpreted through his own vivid personal experience, resulted in the great ideas with which his epistles are full, the doctrines of the Person of Christ, of Salvation, of the Atonement, etc. At the same time he was able to see and fully to bring out the practical applications of such doctrines, and enforce from them ethical teaching bearing on the duties of every-day life. Cf. the first three chapters of Ephesians, so full of the most mystical thinking, and the second three, filled with the most practical injunctions as to conduct.

**3. Spiritual Equipment**

(a) He was *soundly converted*. He was actuated not merely by admiration for Christ, but by passionate devotion to him. The change wrought in him by his meeting with the Saviour was not only an intellectual one, but a complete alteration of his

whole outlook on life. He was 'a new creation,' and the change was wrought, as he repeatedly insists, by supernatural agency. It was the basis of all his life and work.

(*b*) He was filled with a *passionate and continuous devotion to Christ*. The epistles are full of the evidence of this. It was a mystical union that was indissoluble: Gal. ii. 20; Rom. viii. 38. Cf. also his use of the phrase 'in Christ', with all that it implies (see especially the Ep. to Eph.)

(*c*) He had a *definite call to service*. Rom. i. 1: Gal. i. 15. He had no doubt whatever that he had been called, led, and fitted by God for the work of preaching the Gospel. So strong was his sense of divine vocation, that he could say 'woe unto me if I preach not.'

NOTE that while natural equipment is very useful, and intellectual exceedingly helpful, spiritual is absolutely essential to every Christian worker.

NOTE also that in Paul we see a most unusual combination of gifts: characteristics which are not often found united in one man were perfectly exemplified in him. He was at one and the same time

a theological thinker, and a faithful pastor,
strictly logical, and yet vividly imaginative,
a devout mystic, and also a practical organizer.

All his gifts, natural, mental and spiritual were fully consecrated to the one task of setting forth the Gospel.

## The Cleansed Well

### தூர்வை எடுக்கப்பட்ட கிணறு

*ஓர் பெரிய நந்தவனத்திலே பெருங்கிணறு ஒன்று இருந்தது. ஜனங்கள் பானம் பண்ணுவதற்கும், வேனிற்காலத்தில் தோட்டத்துக்குத் தண்ணீர் பாய்ச்சவும் அக்கிணறு மிகவும் பிரயோஜனமாயிருந்தது.*

*புத்திமானான விருத்தாப்பியன் ஒருவன் ஒருநாள் அந்த நந்தவனத்துக்கு வந்து, அதிலுள்ள கண்காட்சிகளைக் கண்டு, கிணற்றை*



*யும் பார்வையிட்டு, பின் எஜமானிடம் வந்து 'ஐயா, உங்கள் தோட்டத்திலுள்ள கிணற்றைச் சுத்தம் செய்யவேண்டும்' என்று ஆலோசனை சொல்லிப்போனான். அந்தப்படியே எஜமான் கிணற்றிலே விழுந்து மிதந்துகொண்டிருந்த இலை குழைகளையெல்லாம் எடுத்துவிடும்படி ஏற்பாடுசெய்தான்.*

*அடுத்த வாரத்திலே அந்தக் கிழவன் மறுபடியும் வந்து, அக்கிணற்றை உற்றுப்பார்த்து, முன்போலவே எஜமானைக்கண்டு, 'கிணற்றைச் சுத்தம்செய்வது அத்தியந்த அவசியம்' என்று எச்சரித்தான். தோட்டத்தின் எஜமான், 'ஐயா சென்றவாரத்தில் உங்கள் வார்த்தையின்படியே கிணற்றில் விழுந்து மிதந்த செத்தை கூளங்களையெல்லாம் அப்புறப்படுத்தியாயிற்று. இனி இதில் என்ன அசுத்தம் இருக்கிறது?' என்றான். கிழவன் 'மேலே கிடந்த இலை, செத்தை முதலியவைகளை எடுத்தது போதாது; கிணற்றுக்குள்ளே கிடக்கும் அசுத்தம் முழுவதையும் வெளியேற்றினால்தான் கிணறு துப்புரவாகும்' என்றான்.*

*தோட்டத்தின் எஜமான் கொஞ்சம் ஜலத்தைக் கையில் அள்ளி, 'ஐயா, இதை உற்றுப்பாருங்கள்; எவ்வளவோ தெளிவாக இருக்கிறது' என்றான். அதற்கு அந்தவயோதிகன் பிரதியுத்தரமாக, 'இந்த ஜலம் பார்வைக்கு சுத்தமாய்க் காணப்படினும், விஷம் கலந்ததாயிருக்கிறது' என்றான். தோட்டத்தின் எஜமான் புன்னகைகொண்டு, அந்தப் புத்திமானின் எச்சரிப்பை அசட்டைசெய்தான். ஆயினும் சிறிதுகாலத்துக்குப்பின், தானும் தன் வீட்டாரும், அக்கிணற்றின் ஜலத்தைப் பருகின மற்ற அனைவரும் வியாதிப்பட்டபோது, அந்தக் கிழவனின் புத்திமதியை உணர்ந்தான்.*

*உடனே யாதொரு தாமதமுமின்றி அக்கிணற்றைத் தூர்வை எடுக்கும்படி உத்தரவுசெய்தான். மூன்றுஜோடி எருதுகள் பெரிய சால்களின் மூலமாய் ஓயாமல் தண்ணீர் இறைக்கவே, இரண்டாம் நாள் சாயந்திரம் கிணற்றின் தரை தென்பட்டது. அதில் உடைந்துபோன மண்பாண்டங்களும், கற்களும், கந்தைத்துணிகளும், குப்பை கூளங்களும் கிடப்பதை எஜமான் கண்ணாரக்கண்டான். அடிச்சுவர் முழுவதும் பாசி பிடித்து ஊற்றுக்கண் அடைபட்டிருந்ததுமன்றி அதில் கிடந்த வஸ்துக்கள் அழுகி நாற்றமெடுத்தது.*

*இதைக்கண்ட எஜமான், உடனே ஆட்களை இறங்கச்சொல்லி, அதில் கிடந்த சகலவித அசுத்தங்களையும் அப்புறப்படுத்தவே, அதின் ஊற்றுக்கண் திறவுண்டு முன்போலவே கிணறு தண்ணீரால் நிறைந்தது. ஜலம் முற்றிலும் சுத்தமாகவும், சுகத்திற்கு அனுகூலமாகவும் மாறினது.*

நமது ஜீவியத்தை நாம் அந்தக் கிணற்றிற்கு ஒப்பிடலாம். நமது நடக்கை அந்தக் கிணற்றின் ஜலத்தைப்போல் மேற்பார்வைக்கு நலமானதாய்த் தோன்றலாம். நமது உற்றார், உறவினர், நண்பர் நம்மை மெச்சிப் புகழக்கூடும். ஆயினும் பராபரன் நமது நெஞ்சில் குடிகொண்டிருக்கும் பாவபாசத்தையும் ஆசை இச்சைகளையும் அறிகிறார். நமது நடவடிக்கை, எண்ணம் ஒன்றாகிலும் அவருக்கு மறைவானதல்ல. நமது தீய சுபாவத்தை அகற்றி, மாசற்ற ஜீவியம் செய்யவேண்டும் என்று அவர் நமது பக்தரின் மூலமாய்த் திருமொழி பகர்ந்திருக்கிறார். ஆயினும் இவ்விதமாய் நம்முடைய துர்க்குணத்தைப் போக்குவதற்கு நமது சுயபிரயாசம் விருதா என்பது நிச்சயம். இவ்வுலகில் அநேகர் தங்கள் வாழ்நாளெல்லாம் தபசுபுரிந்தும் தங்களிலுள்ள துர்ச்சுபாவத்தை அகற்ற இயலாமல் ஓலமிடுகிறார்கள்.

பட்டினத்துப்பிள்ளையார்,

'நீற்றைப் புனைந்தென்ன, நீராடப் போயென்ன, நீ மனமே
மாற்றிப் பிறக்க வகை அறிந்தாயில்லை. மா மறைநூல்
ஏற்றிக் கிடக்கும் எழுகோடி மந்திரம் என்ன கண்டாய்?
ஆற்றில் கிடந்து துறை அறியாமல் அலைகின் றையே'

என்று பாடியிருக்கிறார்.

கிணறு தன்னைத்தானே, தூர்வை எடுத்துக்கொள்ளக்கூடுமா? கூடாது. அவ்வண்ணமே நம்மைப் பற்றியிருக்கிற பாவ பாசங்களிலிருந்து விடுதலையடைய நம்மால் கூடாது. நமக்கு ஒரு உதவி அத்தியந்த அவசியமே. இந்த விஷயத்தில் யார் நமக்கு ஒத்தாசைபுரியக்கூடும் என்று கேட்டால், பராபரன் அவதாரமாக அனுப்பிய லோக மீட்பராகிய எம்பெருமான் இயேசுகிறிஸ்துவே. நாம் நமது பாவ நிர்ப்பந்த நிலைமையை அறியும்படி அவர் நமக்குத் தெளிந்த அகக்கண் பார்வையை அருளுவார். நம்மிலுள்ள துரிச்சைகளும், கேடுபாடுகளும், கசப்பான விரோதங்களும், கோபம், பொறாமை முதலிய தீயகுணங்களும் நீங்க, நம்மைச் சுத்திகரித்து, நன்னெறியில் நடக்கும்படி தமது அருளை ஈகிறார்.

இந்த நன்மைகளைப் பெறும்படி நாம் செய்யவேண்டியதென்னவெனில், நாம் அவர்மேல் பூரண பக்தி வைக்கவேண்டும். வெள்ளத்தில் அமிழ்கிறவன் தன்னை இரட்சிக்க வந்த மனுஷனை ஆவலாய் நம்பித் தழுவும்வண்ணமாய் நாம் அந்தப் பரம மீட்பர்மீது சார்ந்து ஜீவித்தால், அவர் நம்முடைய பாவத்தைப் போக்கி நம்மைப் பரிசுத்தர்களாக்க சித்தமுள்ளவராயிருக்கிறார்.



# Village Evangelistic Work

**By the Rev. P. J. Dawson**

## கிராம சுவிசேஷ பிரபல்லிய ஊழியம்

கிராம சுவிசேஷ ஊழியத்திற்கு எல்லாச் சுவிசேஷ ஊழியங்களைப்போலவே, பொதுவாக ஊழியரிடத்தில் காணப்படவேண்டிய முக்கியமான குணங்களும், பயிற்சிகளும், வேலையின் அநுபவமும் அத்தியந்த அவசியம். அநேக இடங்களில் சுவிசேஷ ஊழியத்தின் அபிவிர்த்திக்கு இடையூறு என்னவென்றால் சரியான ஊழியர் இல்லாமை என்பதே. ஆகையால் சுவிசேஷ பிரபல்லிய ஊழியம் செழித்தோங்கவேண்டுமானால் ஊழியர்களை முக்கியமாய்க் கவனிக்கவேண்டும்.

I. அவ்வூழியத்தின் முக்கியமும் அவசியமும்:

இந்து மார்க்கத்தையும் அதைப்பற்றி அவர்கள் எழுதியிருக்கும் நூல்களையும், சாஸ்திரங்களையும், கலைக்கியானங்களையும் பார்க்கும்போது, அம்மத நூல்களில் கூறியிருக்கும் சடங்காசாரங்களும், முறைகளும், அவர்கள் அனுஷ்டிக்கவேண்டிய கடமைகளும், கிராமங்களில்தான் நிறைவேற்றக் கூடியவைகளாய் இருக்கின்றனவேயொழிய மற்றப்படியல்ல. கிராமக் கட்டுகளும், ஒழுங்குகளும், குலாசாரங்களும், அங்கு நடக்கும் காரியங்களும் உங்களில் அநேகருக்கு நன்றாய்த் தெரியும்.

எல்லா இந்துக்களும் நாட்டுவாசிகளானாலும் சரி, பட்டணவாசிகளானாலும் சரி தங்கள் கிராமத்தையே இருப்பிடமாகவும், பக்திக்கடுத்த விஷயங்களுக்கு மூலஸ்தானமாகவும் நினைக்கக்கூடியவர்களாய் இருக்கிறார்கள்.

அவர்களுடைய முன்னோர்கள் கையாடும் முறைகளும், அனுஷ்டிக்கும் கடமைகளும் தங்கள் சிறுபிராய முதற்கொண்டு அறிந்தும் அநுபவித்தும் வந்தவர்களானபடியால், அவைகளின் கவர்ச்சிக்குள் இழுக்கப்பட்டு அதுதான் சிரேஷ்டமென்றும், கதிதரும் மோட்சமென்றும் நம்பியிருக்கிறார்கள்.

பட்டணவாசிகளைப் பார்க்கும்போது பட்டணங்களில் இருக்கும் வரையில் மார்க்கத்தையும் குலாச்சாரத்தையும் அவ்வளவு கவனியாமல் தங்கள் சொந்த கிராமங்களுக்குப் போகும்போது சுயரூபத்தைக் காட்டவேண்டியவர்களாய் இருக்கிறார்கள்.

பழைய காலத்துச் சரித்திரங்களை வாசிக்கும்போது, கிராமத்தில்தான் இந்த மார்க்கத்தின் உண்மை நிலையைப் பார்க்கிறோம்.

ஆகையால் கிராமங்களை கிறிஸ்துவுக்காக ஆதாயப்படுத்தினால் பட்டணங்களையும் ஆதாயப்படுத்தக்கூடுமென்பது திண்ணம். ஆனால் ஒரு ஆட்சேபனை என் மனதிற்கு வருகிறது. அதாவது: பட்டணங்களில் தற்காலம் கல்லூரிகளிலும் கலாசாலைகளிலும் படித்துவரும் மாணவர், கிராமப் பழக்க வழக்கங்களுக்கு உட்படமாட்டார்களென்றும், கலாசாலைகளின் படிப்பு அவர்களை நாஸ்திகர்களாக்கிவிடுகின்றனவென்பதுமே.

அதற்குச் சமாதானம்:—இம்மாணாக்கர்கள் தங்கள் குலாச்சாரங்களுக்கும் பெற்றோருடைய ஆதீனத்திற்கும் உட்பட்டவர்களானபடியினால், அவர்களுடைய ஆஞ்ஞாபனைக்கு அடங்கி நடக்கவேண்டியவர்களாய் இருக்கிறார்கள். நமது தேசத்தின் நீதிப்படி 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்பதற்கிசைய மூத்தோர் சொல்லும் வார்த்தையை எதிர்க்க சக்தியற்றவர்களாய் இருக்கிறார்கள். பெற்றோர் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டால் கலாசாலையில் படிக்கும் பிள்ளைகளும் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வார்கள் என்பதற்கு யாதொரு சந்தேகமுமில்லை.

II. அவ்வூழியத்தின் ஆயத்தம்:

இவ்வாயத்தம் பெரும்பாலும் பொருளையும் விதத்தையும் குறிக்கும்.

(A) பொருள்:—அநேக ஊழியர் ஆயத்தமில்லாமல் சுவிசேஷப் பிரபல்லிய ஊழியத்தைச் செய்ய முயற்சித்திருப்பதை அடிக்கடி பார்த்திருக்கிறோம். அப்பேர்ப்பட்டவர்களின் ஊழியத்தில் பலன் இல்லை. ஏனென்றால் அவர்களுடைய ஊழியத்தில் ஒழுங்கும் பொருளின் தன்மையும் காணப்படாமல் வீணாகக் காலத்தைப் போக்குவதுபோல் இருக்கிறது. மேலும் அவ்வூழியத்தில் பசித்தவர்களுக்கு ஆகாரமும் தாகமுள்ளவர்களுக்குத் தண்ணீரும் கொடுக்காமல் ஆத்துமாக்களை வெறுமையாய் அனுப்புவதுபோல் தோன்றும். அவ்வூழியனுக்கும் உற்சாகமிராது. கூட இருப்பவர்களின் ஆவியும் குன்றிப்போகிறது. ஆகையால் பொருளைக்குறித்து அதிக ஜாக்கிரதையாய் ஆயத்தம் செய்யவேண்டும்.

அவ்வாயத்தத்தில் கவனிக்கவேண்டிய சில விஷயங்கள்—

(1) கிராமமார்க்கத்தை கவனிக்கவேண்டும்.

இந்து மார்க்கத்தில் பொதுவாக நான்கு வழிகளிருப்பதைப் பார்க்கிறோம். அவையாவன:

1. சரிதை—சில ஆலயங்களில் சில கடமைகளை நிறைவேற்றுதல்.



2. கிரியை—சில நைவேத்தியங்களைத் தவறாமல் நிறைவேற்றுதல்.
3. யோகம்—ஐம்பொறிகளையும் அடக்கி நிஷ்டையிலிருத்தல்.
4. ஞானம்—பரமாத்துமாவோடு ஐக்கியமாவதற்கும் மறுபிறப்பினின்று இரட்சிக்கப்படுவதற்கும் முன்சொன்ன மூன்று வழிகளையும் கடந்த ஓர் நிலையைக் குறித்தல்.

இந்த நான்கு வழிகளிலும் வழுவின்றி நடப்பவர்களுக்கு நான்கு பதவிகள் உண்டு. அவையாவன:

1. சாலோகம்.
2. சாமீபம்.
3. சாரூபம்.
4. சாயுச்சியம்.

இம்முறைகளையும் பதவிகளையும் கிறிஸ்தவ ஊழியர்கள் நன்றாய் அறிந்து தங்கள் பிரசங்கங்களை ஆயத்தம் செய்யவேண்டும். இந்துக்களில் அநேகர் இவ்வழிகளையும் பதவிகளையும் அறிந்திராவிட்டாலும் ஊழியர்களாகிய நாம் அவற்றை அறிந்துகொள்வது அதிகப் பிரயோஜனம்.

ஏனென்றால் கிராமத்தாரைக் கவனிக்கும்போது அவர்களுடைய வணக்கங்களை நிதானித்து அறிந்து ஊழியஞ்செய்வதற்கு உதவியாயிருக்கும். அவர்கள் அதிகப் படித்தவர்களுமல்ல, சாஸ்திரிகளுமல்ல, ஞானிகளுமல்ல, சாதாரண மத்திப நிலைமையிலுள்ளவர்களாகக் காணப்படுகிறபடியால் அவர்களுக்கு யோகமுறைகளும், ஞான வழிகளும் தூரமாக இருக்கின்றன. ஓர்வேளை அங்குமிங்கும் சில ஞானிகளும் யோகிகளும் இருக்கலாம். ஆனால் 'தனிமரம் தோப்பாகாது' என்னும் பழமொழிக்கிசைய பொதுவாக சாதாரண இந்துமார்க்கத்தில் சொல்லப்பட்ட சரிதை, கிரியை என்னும் முறைகள்தான் கிராமத்தாரிடத்தில் காணப்படுகின்றன.

(2) கிராம ஜீவியத்தின் தன்மையையும் கவனிக்கவேண்டும். அவர்களுடைய குலாச்சாரங்களையும் தொழிலையும் கவனிக்கும்போது அவர்களில் பெரும்பாலும் கிருஷித் தொழிலாளிகளானபடியால் வேதாந்தம் அவர்களுக்கு வேண்டியதில்லை. நமது ஊழியர்களில் அநேகர் அவர்கள் புத்திக்கு எட்டாத விஷயங்களையும், அவர்களுக்கு அந்நியமுமாகக் காணப்படுகிற மேற்கத்தியச் சங்கதிகளையும் பேசுவதினால் கிராமத்தார் கவனிப்பதில்லை. அவர்களுடைய ஜீவியத்திற்கடுத்த விஷயங்களைக்கொண்டு பேசினால் அதிக கவனமாய்க் கேட்பார்கள். கடவுள் அருகிலிருக்கிறார், அவர்களுடைய ஜீவியத்திலும் தொழிலிலும் உதவிசெய்கிறார் என்கிற நம்பிக்கை விக்கிரக வணக்கத்தில் காணப்படுகிறது. அந்த நம்பிக்கை கிறிஸ்துவில் மாத்திரம் நிறைவேறக்கூடும் என்று அவர்களுக்குக் காண்பிக்கவேண்டும்.

(8) ஊழியன் உபயோகிக்கும் பதங்களின் கருத்தையும் கேட்பவர்களின் மனதிலிருக்கும் அர்த்தத்தையும் நன்றாய் அறிந்திருக்க வேண்டும். கிறிஸ்தவ பிரசங்கிகள் உபயோகிக்கும் பதங்களாகிய பாவம், இரட்சிப்பு, மீட்பு, பிராயச்சித்தம், கிருபாதாரபலி முதலியவைகள் இந்துக்களுடைய மனதிற்கு வெவ்வேறான அர்த்தத்தைத் தரத்தக்கவைகளாய் இருக்கின்றன. திருஷ்டாந்தமாக இந்துக்களைப் பாவி என்று அழைத்தால் அவர்களுக்கு கோபம் வருகிறது. ஏனென்றால்; அவர்கள் மனதில் பாவமென்றால் கொலையும் மோசமும் அல்லது ஓர் பெரிய துரோகமும் என்று நினைக்கிறார்கள். இவ்விஷயங்களில் அவர்கள் குறைவுள்ளவர்களாகக் காணப்படாதபடியால் நாம் சொல்வது ஓர் அநியாயம் என்று நினைக்கிறார்கள்.

(இன்னும் வரும்.)

# Holiness

**By the Rev. A. Paramanandam**

## பரிசுத்தம்

(தொடர்ச்சி)

### ஐந்தாம் அதிகாரம்

ஒருநாள் இரவு கிறிஸ்துவின் சீஷர்கள் படகேறி கப்பர்நகூமுக்குச் சமுத்திர மார்க்கமாய்ப் போய்க்கொண்டிருக்கையில் புசல்காற்று அவர்களுக்கு எதிராக வீசினபடியால், அவர்கள் இரவில் நாலாம் ஜாமம் வரைக்கும் பிரயாசைப்பட்டுத் தண்டுவலித்து வந்தாலும் சமுத்திரத்தின் நடுவில் மாத்திரம் வந்திருந்தார்கள். இப்படி யிருக்கையில் பின் ஜாமத்தில் அந்தச் சீஷர்கள் கிறிஸ்து சமுத்திரத்தின்மேல் நடந்து, தங்களிடத்தில் வருவதைக் கண்டு, அவரைப் படவில் வரும்படி யழைத்தார்கள். அவர் படவுக்குள் ஏறி உட்கார்ந்தவுடனே, அவர்கள் போகவேண்டுமென்றிருந்த கரைக்கு அந்தப் படகு வந்து சேர்ந்தது என்று யோவான் தெரிவிக்கிறான் (யோ. 6[16-21]). இந்தச் சரித்திரத்தை வாசிக்கிறவர்கள் கிறிஸ்து படவில் ஏறினவுடனே, அவருடைய சீஷர்கள் தண்டுவலியாமலும் எவ்விதப் பிரயாசைப்படாமலும் சும்மா துறைக்கு வந்து சேர்ந்தார்கள் என்று நினைக்கப்படாது. கிறிஸ்து அவர்களிடத்தில் வந்து, பெருங்காற்றையும், சமுத்திரத்தின் இரைச்சலையும் கொந்தளிப்பையும் அமர்த்தினபோது அவர்கள் சமுத்திரத்தின் நடுவில்தான் இருந்தார்கள். கரைக்கு வந்து சேர இன்னும் இரண்டரை மைல் தூரமிருந்தது. ஆதலால் பத்துமணி



நேரம் தண்டுவலித்து, தங்கள் படவை மூன்று நான்கு மைல் தூரம் அதிகப் பிரயாசத்துடனும் தள்ளி, இளைப்பாயிருந்த அந்தச் சீஷர்கள் கிறிஸ்து தங்களிடத்தில் வந்திருக்கிறதைக் குறித்து தைரியங்கொண்டு, மீந்த இரண்டரை மைல் தூரத்தையும் எவ்வளவோ சந்தோஷமாயும் சுலபமாயும் சீக்கிரமாயும் தீர்த்துக்கொண்டு கரை சேர்ந்தார்கள் என்று யோவான் ஞாபகஞ்செய்துகொண்டு அதின் விஷயமாய் அந்த க்ஷணமே அந்தப் படகு கரை சேர்ந்தது என்று எழுதினான். கிறிஸ்தவப் பிரயாணமும் இப்படியே யிருக்கிறது. பரிசுத்தம் மிக தூரமான பாதையென்று நமக்குத் தோன்றுகிறது. நாம் விதையிட்டுப் பயிராக்கி, விபரீதமான கஷ்டப் பிரயாசைப்பட்டாலும் பிரபஞ்சம் என்கிற பெருங்காற்றும், சமுத்திரத்தின் அலைகளும், நமக்கு எதிராயிருப்பதினால், நமது பிரயாணத்தைக் கொஞ்சம் பிந்தி மாத்திரம் தீர்க்கக்கூடும். ஆனால், பரிசுத்தாவியானவரை நமது சகாயராக ஏற்றுக்கொண்டவுடனே மீந்த பிரயாணம் கொஞ்சமாயும் சுலபமாயும் நமக்குத் தோன்றும். நாம் நடக்கவேண்டிய தூர பிரயாணத்தை நம்முடைய பிரயத்தனத்தினாலாகிலும், தேவனுடைய சகாயத்தினாலாகிலும் குறைத்துக்கொள்ளலாகாது. பரிசுத்தமாகுதல் என்கிற மார்க்கத்தின் ஒவ்வொரு கஜத்திலும் கால் வைக்கவேண்டும். ஆகிலும் பரிசுத்தாவியின் சக்தியை பூரணமாய் நம்முடையதாக ஏற்றுக்கொண்டால் நாம் அந்த க்ஷணமே பரிசுத்தத்துக்கு சேர்ந்தாற்போல் ஆயிற்று என்று நமக்குத் தோன்றுகிறபடி சீக்கிரமாய் பரிசுத்தமாகுதல் என்கிற கிரமம் பூரணமாகிறது.

கடைசியில் ஆகவேண்டியது நித்திய ஜீவன். பரிசுத்தமாகுதல் முடிவில் பரிசுத்தத்தில் அடங்கியிருக்கிறது. நம்முடைய சகலவிதமான துரிச்சைகளும், துர்க்குணங்களும் நின்றுபோய் நமது ஆத்துமம் தேவனுக்குப் பூரண பிரதிஷ்டையாக்கப்பட்டு, அன்பு நமது ஆத்துமாவில் நிறைந்து ஒவ்வொரு யோசனைக்கும், வார்த்தைக்கும், காரியத்துக்கும் மூலகாரணமாயிருந்தால் நாம் பரிசுத்தத்தைச் சேர்ந்தவர்கள் என்று எண்ணிக்கொள்ளவேண்டும்.

பரிசுத்தம் பக்திசாதனையின் பலனும். இந்த சிரேஷ்டமான ஸ்திதி எந்த அபிப்பிராயத்தினால் பரிசுத்தமாகுதலுக்கு சம்பந்தமுள்ளது என்று எண்ணிக்கொள்ளுவதோ, அது எந்த அபிப்பிராயத்தினால் சித்தப்படுமென்று எண்ணிக்கொள்ளுவதோ, இந்த இரண்டு விதமாய் அவற்றை பின்னே ஆலோசிப்பது அநுகூலமானது. பரிசுத்தம் என்னும் போதனையை இந்த இரண்டு முறைகளில் எந்த முறையாலும் பரீட்சிக்காமற்போனால் அது சரியாய்ப் புலப்படாது. சிலர் பரிசுத்தம் பரிசுத்தமாகுதலுக்குச் சேர்ந்திருக்கிறதென்று சாதா

ரணமாய் யோசித்துக்கொண்டு அதற்குப் பூரண பரிசுத்தமாகுதல் என்னும் பேரை வைத்திருக்கிறார்கள். இன்னுஞ் சிலர் பரிசுத்தம் ஓர் சித்தியுள்ள ஸ்திதி என்று யோசித்து அதைக் கிறிஸ்தவ சித்தியென்று அழைக்கிறார்கள். இந்த இரண்டு பெயர்களைச் சரியென்று வைத்துக்கொண்டு, அவைகளில் அடங்கியிருக்கிற பொருள்களைக் கிரகிக்குமாறு பிந்தின இரண்டு அதிகாரங்களில் அவைகளை ஒவ்வொன்றாய் பரீட்சிக்கக்கடவோம்.

### ஆறாம் அதிகாரம்

#### பூரணமாய்ப் பரிசுத்தமாகுதல்

1. பரிசுத்தமாகுதல் என்னும் மார்க்கமானது பரிசுத்தத்தைச் சேர்ந்ததென்று நாம் பார்த்தோமல்லவா? அப்படியானால் பரிசுத்தமாகுதலுக்கும் பரிசுத்தத்துக்குமுள்ள தாரதம்மியமென்ன? பந்தனொருவன் ஒரு பதவியை விட்டு மற்றொரு பதவியைச் சேர்ந்தவுடனே அவனிடத்திலுண்டாகிற வித்தியாசமென்ன? இந்த பதவிகளில் சுபாவ வித்தியாசம் ஒன்றும் காண்பதில்லை. சமுத்திர பிரயாணஞ் செய்கிறவனுக்கு கப்பல் உபயோகமாயிருந்தாலும் கரை சேர்ந்தவுடனே மாடு, குதிரை, வண்டிகள் முதலான வேறே உபகாரணங்கள் வேண்டியதாயிருக்கின்றன. ஆனால் இந்த பரிசுத்தமாகுதலிலிருந்து பரிசுத்தத்துக்குச் சேரும்போது இப்பேர்க்கொத்த உபகாரண வித்தியாசங்கள் அவசியமில்லை. பரிசுத்தமானது பரிசுத்தமாகுதலையடுத்த ஒரு பாகமாயிருக்கிறது; தெரிந்த ஒரு எல்லையைத் தாண்டினவுடனே உண்டாகிற பரிசுத்தமாகுதலின் மார்க்கமே பரிசுத்தம் என்று சொல்லலாம். அதாவது, பூரணமாய்ப் பரிசுத்தமாகுதலே பரிசுத்தம். அப்படியானால், அந்த எல்லை யென்ன? சரீராதீன சுபாவம் நாசமாகி, அன்பு இருதயத்தில் வியாபித்து, பூரண பிரபல்லியத்தை யடைவதேயாம். நம்முடைய அந்தரங்கத்தில் பரிசுத்தாவி பரிசுத்தமாகுதல் என்கிற தமது கிரியையை ஆரம்பிக்கும்போது அவருடைய சகாயத்தினால் நாம் இவ்வித துர்ச்சுபாவத்தை சிலுவையில் அறைய சக்தராகிறோம் (கலா. $5^{24}$). சிலுவைமேல் அறைந்தாலும் அது உடனே சாகாமல், கொஞ்சம் கொஞ்சமாக ஜீவனடைந்து கட்டுகளிலிருந்து விடுவித்துக்கொள்ளும்படி ஊசலாடுகிறது. ஆனால் இப்படிப்பட்ட சமயத்தில் நாம் பரிசுத்தாவியின் கிரியைக்கு துர்ச்சுபாவத்தை விட்டுவிடுவது முதலான நல்லாசையைக் கொடாமலிருந்தால், அந்த சுபாவம் வர வர சக்தியின்றி முடிவில் பிராணன் விடுகிறகாலத்தில் பரிசுத்தாவி சாட்சியிடுகிறவராய் தீர்ந்தது என்று சொல்வார். அதே வேளையில் அன்பு இருதயத்தில்



பூரணப்பட்டு பிரபலமடையும். பரிசுத்தமாக்குகிற வேலை பிறகு சாகும்படி வருங்காலமெல்லாம் அன்புங்கூட கொஞ்சம் கொஞ்சமாக அதிகமாகி (பிலி. $1^{9}$), அகங்காரத்தையும் பாவத்தையும் கிரமகாலத்தில் தன் சுவாதீனத்துக்குட்படுத்துகிறது. கடைசியில் சரீராதீன சுபாவம் சாகும்போது அன்புக்கு யாதொரு அட்டி தடையொன்றுமில்லாமல், அது பூரணமடைந்து தன்னில் தானே முற்றிவிடுகிறது. இப்போது பரிசுத்தமாகுதலைத் தாண்டி, பரிசுத்தத்துக்குள் பிரவேசித்தாயிற்றென்று சொல்லலாம்.

(இன்னும் வரும்.)

# Herod and John the Baptist

**By the Rev. N. Devasahayam, B.A.**

## ஏரோதும் யோவான்ஸ்நானகனும்

மாற்கு 6, 17—29.

(தொடர்ச்சி)

II. செவிக்கொள்ளுகிறதல்ல செய்கிறதுதான் இரட்சிக்கும். 'இவைகளைச் செய்வீர்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்' (யோவா. $13^{17}$). இது நம் ஆண்டவர் தம் சீஷருக்குச் சொன்ன திருமொழி. 'ஏரோது யோவானைப் பாதுகாத்து, அவன் யோசனையின்படி அநேக காரியங்களைச் செய்து, விருப்பத்தோடே அவன் சொல்லைக் கேட்டுவந்தான்.' இது தவிர, ஏரோது எருசலேம் தேவாலயத்திற்குப் பெரிய பண்டிகைதோறும் போய் ஒழுங்காய் ஆராதனை செய்தான். தேவ ஊழியருடைய திரு ஊழியத்தைக் கனம்பண்ணுகிறது சரிதான், திருவசனத்தை தேவ ஊழியனுடைய வாயால் கேட்பது சரிதான், தன் வேலைக்குக் கர்த்தருடைய மனுஷனின் ஆலோசனையைக் கேட்கிறது சரிதான்; ஆகிலும், தேவ சொல்லை செவிக்கொள்ளுகிறதோடு நிறுத்திவிட்டால், அது ஒருவனை பாக்கியவான் ஆக்காது. அதின்படி செய்யவேண்டும். ஏரோதின் மனதிற்கு யோவானுடைய ஆலோசனைப்படி தன் துரைத்தனத்திற்கு வேண்டிய பல காரியங்களைச் செய்தது ஒருவகை ஆறுதலைத் தந்தது. செய்தான், திருத்தவேண்டிய பல கெடுதிகளைத் தன் ராஜ்யத்தில் திருத்தினது அவனுடைய மனச்சாட்சி வாதையைய ஒருவாறு அமரச் செய்தது. ஆகிலும், அந்த மனச்சாட்சியிலிருந்த படுகாயம்—வாதிக்கிற புண்—ஆறவில்லை. தன் ஜீவியத்தை விட்டு அவன் விபசாரப் பாவத்தை மனஸ்தாபத்துடன் விலக்கினால் மட்டும் அது ஆறும்.

நம் காலத்திலும், வெகுபேர் கோவில் காரியங்களிலும், தர்மகாரியங்களிலும் வெகு சுறுசுறுப்புக் காண்பிப்பார்கள். அந்த விஷயமாய் எது செய்யச் சொன்னாலும் செய்வார்கள், எவ்வளவு கொடுக்கச் சொன்னாலும் கொடுப்பார்கள். அவர்களுக்கு வழக்கமாய்விட்ட அவர்களது வலதுகண்போல் பிரியமாயிருக்கிற பாவத்தை மாத்திரம் தொடாமலிருந்தால் சொன்னபடியெல்லாம் ஆடுவார்கள். அவர்களுடைய ஞாயமான சுறுசுறுப்பும் உதாரத்துவமும் மெச்சத்தகுந்ததே. ஆகிலும், அதினால் ஆண்டவருக்குப் பரிதானங்கொடுத்து அவருடைய கண்ணை மூட முடியாது. அவருடைய கண் நீ ஒளித்து வைத்திருக்கிற பாவத்தின்மேல் இரவும் பகலும் இருக்கிறது. அந்த அருவருப்பை நீக்கினால் அல்லாமல் அவர் உன் ஜீவியத்தின்மேல் பிரியங்கொள்ளமாட்டார். நல்ல கிரியைகளினால் கெட்ட மனச்சாட்சி அமராது. நீ செய்கிற நல்ல கிரியை தேவன் பிரியம் வைக்க முடியாத கெட்ட ஆளிலிருந்து புறப்படுகிறபடியால், அதற்குப் ‘பகட்டான பாவம்’ என்று பெயர். ஒரு பாவத்தை ஒளித்து, அதற்கு உள்ளத்தைக் கொடுத்து, மற்றப் பாவங்களுக்கு விலகியிருக்கிறதினாலும் மனுஷர் மெச்சுகிற புண்ணியங்களைச் செய்கிறதினாலும் தேவனுக்குப் பிரியம் வருவிக்கலாம் என்று நம்புகிறவர்கள் தங்களையே ஏமாற்றுகிற சுய வஞ்சகர்கள். அவர்களை எடுத்துக் காட்டுகிற சித்திரப்படம் ஒருவன் எழுதினான். அது ஒண்டியாள் வலிக்கிற ஆற்றுப் படகு. அதிலே இரண்டு கைகளாலும் ஒருவன் இருபக்கங்களின் வலிப்புத் துடுப்புகளைப் பிடித்து வலித்தான். துடுப்புகள் பின்னுக்குத் திரும்பியிருந்தன. ஆளுடைய முகம் முன்னுக்குத் திரும்பியிருந்தது. அவனுடைய கண்கள் ஏதோ நாடின தாவு வருமா என்று ஆவலாய்ப் பார்த்தவண்ணமிருந்தன. ஆகிலும் அவன் வலித்த துடுப்புகள் அவனை முன்னுக்கு அல்ல, பின்னுக்கு வேகமாய்க் கொண்டுபோயின. மோட்சத்துக்கு முகமும் நரகத்துக்கு உள்ளமும் கொடுத்தவர்களுக்கு இது சரியான படம் அல்லவா?

## III. நீதியினிமித்தம் வரும் துன்பம்.

எலியாவின் ஆவியுடையவனாய்ப் பாவிகளுக்கு நீதியைப் போதித்த யோவான்ஸ்நானன் ஏரோதியாளால் கொடும் பகையாய்ப் பகைக்கப்பட்டான். அவனைக் கொல்ல அவள் பலவித சதியோசனைகள் பண்ணினாள். ஆகிலும், ஏரோது அவனைக் காத்ததினால் அவளுக்குக் கூடாதேபோயிற்று. யோவானுக்கு அந்தப் பாதுகாவல் பிரியமாயிருந்ததா? எப்படிப் பிரியமாயிருக்கும்? யோவான வெளிச் சஞ்சாரத்திற்குப் பழக்கப்பட்டவன். அவன் மலைக்குகைகளில்



யதேச்சையாய் இருந்து வெளிக்காற்றுக்கும் வெயிலுக்கும் பண்பட்டவன். அப்படி தன் மனம்போல் சஞ்சரித்தவனை, காவல் கிடங்கில் அடைத்துவைத்துச் சங்கிலிகளால் கட்டி, அக்காலத்து வழக்கப்படி கைதி ஓடிப்போகாதபடிக்கு பக்கத்துக்கு ஒரு போர்ச் சேவகனைக் காவலுக்கு வைத்தால், அது அவனுக்குப் பிரியமாயிருக்குமா? மையர் (Meyer) சொல்லுகிறபடி ஏரோது செய்திருப்பான்: என்ன? யோவானைப் பலமுறை இரகசியமாய் அழைத்து, நீ சொன்ன சொல்லால் ஏரோதியாளுக்கும் எனக்கும் பெரிய அவமானத்தை நிலைக்கச் செய்திருக்கிறாய். தவிர, உனக்கும் காவல் கிடங்கும் விலங்கும் கஷ்டமாயிருக்கிறதல்லவா? நீ ஒன்று செய். நான் இராஜகொலுவில் உன்னை அழைக்கிறேன். அப்போது, முன் நான் இந்த ராஜசபையில் மரியாதையில்லாமல் பேசினதற்காக மனஸ்தாபப்படுகிறேன் என்று மாத்திரமே சொல். அது போதும். அதினால் எங்களுக்கு உண்டாயிருக்கும் அவமானம் போய்விடும், உனக்குக் காவலும் தீரும். இப்படிப் பலதரம் இரகசியத்தில் பேசியும் யோவான் ஏரோதுக்கு இணங்கியிரான். அதனால் யோவான் தேவனுக்கு முன் நல்ல மனச்சாக்ஷியைக் காத்துக்கொண்டான். காத்துக்கொண்டு, கடைசியாய், நல்ல மனச்சாட்சிக்காக ஜீவனையும் ஒரு பொருட்டாய் எண்ணாமல் கொடுத்தான். அவன் ஜீவனை இழந்தானா? இல்லை.

ஜீவனை இழந்தவன் ஏரோது. அவனுடைய மனச்சாட்சி பலதரம் ஊக்கத்திலிருந்து எழுப்பப்பட்டும், அவனைக் குணப்படுத்துகிற தேவகிருபை அவனைப் பலமுறை சந்தித்தும், அவன் தனக்குவந்த வெளிச்சத்தைப்பார்க்கத் தன்னுள் இருந்த இருளையே ஆசையாய்ப் பிடித்துக்கொண்டான். அது சாவை ஆசையாய்ப் பிடித்ததாகும் (யோ. $3^{18, 19}$).

நம்காலத்தில் எத்தனைபேர் ஏரோதுபோல் இருக்கிறார்கள்! அவர்களுடைய மனதிலே உலகமும் அதின் இச்சையும் இச்சைக்குக் கிடைக்கிற இரைகளும் வெகுநாளாய் இரம்மியமாய் இருக்கின்றன. பலவித ஞானகாரியங்களில் தலையிட்டு உழைப்பார்கள். கோவிலுக்கு நிரம்பச் செய்வார்கள். திருவசனப்பிரசங்கம் அவர்களுடைய மனதை அதிரச்செய்யும். அவர்கள் பாவ ஊக்கத்திலிருந்து விழித்து, புது ஜீவியத்தில் ஆசை வைப்பார்கள். ஆகிலும், அவர்களுடைய உள்ளத்தைப் பாவம் தன்னோடு சேர்த்துக்கட்டியிருக்கிறதினால் அவர்கள் ஏரோதைப்போல நன்மைக்கும் தீமைக்கும் நடுவில் ஊசலாடிக்கொண்டிருக்கும்போதே தீமை தடுக்கமுடியாத வல்லமையுடன் வந்து அவர்களை இனி என்றைக்கும் நன்மைக்குத் திரும்பாமல் ஜெயித்துக்கொள்ளும்.

சகோதரனே! உன்னைப் பிடித்திருக்கிற ஏரோதியாள் யார்? பண இச்சையா? பலநாள் மதுப்பழக்கமா? மனுஷர் தயவை நாடுகிற நாட்டமா? விபசார இச்சையா? உன்னைச் சோதி. தேவவசனம் உன் மனதை இடித்து 'இந்த ஏரோதியாளை நீ வைத்திருக்கிறது நல்லதல்ல' என்று முழங்கும்போது உடனே கீழ்ப்படி. தேவ சொல்லுக்குக் கீழ்ப்படிந்து உன் பாவத்தை விலக்கினால் பிழைப்பாய். எனக்குச் சக்தியில்லையே என்று சொல்லாதே. உனக்குச் சக்தியில்லை என்று ஆண்டவருக்குத் தெரியும். ஆகையால்தான் அவர் நான் அவர்களுக்கு 'ஜீவன் உண்டாயிருக்கவும் அது பரிபூரணப்படவும் வந்தேன்' என்கிறார் (யோவா. $10^{10}$). கிறிஸ்து உன்னுள் வந்திருந்து உன்னை ஒடுக்கியிருக்கிற பாவத்தை உன்னைவிட்டு விலக்க வல்லவர். நீ உன் சிறையிருப்பைக் கசப்பாய் உணர்ந்து விடுதலைக்கு மிகப் போராட வேண்டும். அப்படிப் போராடிக் கெஞ்சுகிறவனை மாத்திரம் கிறிஸ்து விடுதலை செய்வார். தவிர, உன்னை ஜெயித்த பாவத்தை ஜெயிக்க அவர் உன்னுள் புதுவல்லமையாய் வீற்றிருப்பார். வீற்றிருந்து இனி எத்தனை பாவங்கள் உன்னைப் பிடிக்க வந்தாலும் அத்தனை பாவங்களையும் ஜெயிக்க உனக்கு மேலும் மேலும் ஜீவனும் பலமும் கொடுப்பார். பரிசுத்த அகுஸ்தீன் உன்னைப்போலவே பாவத்தினால் ஜெயிக்கப்பட்டு, அதை எதிர்க்கமாட்டாமல் மனஞ்சலித்திருந்தார். அவரைத் தேடின தேவகிருபை (ரோம. $13^{13,14}$) பசுமரத்தில் ஆணியைப்போல் அவருடைய உள்ளத்தில் இறங்கின. அதின் வல்லமையால் அவர் பாவத்தை எதிர்த்தார். கர்த்தர் அவருக்குள் வந்திருந்து ஜெயத்தின்மேல் ஜெயங்கொடுத்தார். பிறகு, அவர் திருச்சபைக்குச் சுடர்விளக்காய் விளங்கினார். அவருடைய ஜீவியத்தைப் பாவம் இனி தொட்டு அழுக்காக்க முடியவில்லை. அவருக்கு ஆண்டவர் வாக்கிட்டிருக்கிற பரிபூரண ஜீவன் கிடைத்துவிட்டது. அது உனக்கும் கிடைக்கக்கூடுமே. அவர் மாறின பரிசுத்தவான் ஆனபிறகு தமக்குப் பாவம் பிரியமாயிருந்த காலத்தில் பழக்கமாயிருந்த ஒரு தெருவழியே ஒரு விசை போக நேர்ந்தது. அந்தத் தெருவில் அவருக்கு முன்னே நேசமாயிருந்த ஒரு வேசி 'நான் பழையவள் ஆச்சே, என்னை மறந்தீரோ?' என்று அவரைப் பிடிக்கவந்தாள். அவர் 'நீ பழையவள், நான் பழையவனல்ல, புதியவன், என்னைத் தொடாதே' என்று விலகிப்போனார். அப்படித்தான் நாம் இயேசுவின் வல்லமையில் இருந்துகொண்டு எல்லாப் பாவங்களையும் வெல்லவேண்டும்.

C. L. S. PRESS, MADRAS—1916

No. 127 டிசெம்பர் 1916

# வேதியர் விளக்கு

## The Christian Worker and Evangelism

**By the Rev. W. J. Tunbridge**

(Outline studies in the life and methods of St. Paul.)

### II. The Christian Worker and the Church

THERE are many points in St. Paul's relationship to the Church which are worthy of notice and imitation. Notice:

**1. His ideal of the Church**

(*a*) It is *loved by Christ* and redeemed by His blood, and therefore must be precious in both His sight and ours.

(*b*) The *symbols* which he used for it denote the loftiness of the ideal which he cherished concerning it; *e.g.*, the Bride of Christ, the Body of Christ, the Temple of God.

(*c*) The Church concerning which he had such lofty conceptions was far from prefect (cf. the sins against which he warns them in Eph. v., showing that they had a long way to travel on the path of holiness) yet he always kept the lofty ideal in view. We too in our thought of the Church in India, even that drawn from the lowest plane of Society, need to maintain similar lofty conceptions.

**2. His love for the Church**

The Acts and Epistles are full of evidence of his great affection both for individuals in the Churches, and for the Churches themselves. He had a great gift for friendship, and his whole aim was to win

his friends for Christ: cf. his relationship with Timothy, Luke, Aquilla and Priscilla, the Roman soldiers who were his guards in Rome, etc. And his love was equally lavished on the Church. 'I desire not yours but you'. Note the intensity and unselfishness of his prayers for them in the various Epistles: cf. Gal. iv. 19, wherein he says that he suffers birth-pains for them, so intense is his desire for their holiness. He calls the Churches his glory and hope, and the crown of his rejoicing.

**3. His care of the Church**

(*a*) Having established them, he *revisited* them as often as possible that he might strengthen them. Acts xiv. 21—he returned by the way that he had come, in spite of the fact that in every place he had been persecuted and driven out on his first visit, braving the dangers for the sake of the infant Churches. Cf. also Acts xv. 36, xvi. 4, xviii. 23.

(*b*) When he could not go in person *he wrote letters* to them. Galatians was written because he heard of the threatening heresy and false doctrine: Thessalonians because his return there was prevented by the action of the magistrates of the place who had taken bail from his friend Jason, so that if he had gone again to the city his friend would have been held responsible and have got into trouble. Similarly the other Epistles were written to meet some special need of the Church to which they were addressed.

(*c*) Not only so, he sent *delegates* when he was unable to go in person: Acts xvii. 14, xviii. 5, xix. 22.

(*d*) He also *appointed elders* in each Church to care for the affairs of the Church in his absence: Acts xiv. 23.

**4. His demands upon the Church**

As his ideal was lofty, his demand for a corresponding line of conduct was insistent. He requires



of the Church the virtues of purity, unity, love, service, liberality. See many references in his Epistles, especially in I Corinthians.

**5. His achievements through the Church**

(*a*) He found a place for the *voluntary worker*. Having won men and women for Christ, he set them to work. Cf. Aquilla and Priscilla, Luke, Apollos, etc.

(*b*) He made the Church *a centre of evangelism*. Antioch gave up two ministers for service abroad: Acts xiii. 1–3. The Epistle to the Ephesians was evidently written to a circle of Churches: how had these been established if not by evangelistic work from Ephesus itself?

NOTE. The Churches founded by St. Paul were self-supporting, self-governing and self-propagating. Has the Indian Church failed here because of different conditions, or because of wrong methods of evangelism?

God reached the world through the Church. Do you think that this is the divinely appointed method?

## III. The Christian Worker and the World

**1. The Vision that sees the World**

Paul had large views: he was always looking beyond the immediate present. Trace the route followed in the first two missionary journeys and see how the work expanded according to the apostle's far-reaching vision. His eyes were on Rome, and even further than that, for we know that he planned a journey to Spain also. From Antioch he crossed to Asia Minor, from there to Greece, then on to Rome, and finally to the verge of the then known world, Spain. Note also his methods: he went first to his own countrymen, the Jews, and only when rejected of them turned to the Gentiles. Our first duty is to our own countrymen.

(*a*) He *never built on other men's foundations*. We should respect the territory assigned to other Churches.

(b) He *captured strategic centres* such as Ephesus, Corinth, Athens. We too should determine what are points of strategic importance for occupation.

**2. The Wisdom that strives with the World.**

The world of Paul contained two classes, those who were religious, Jews, Romans, Greeks; and those who were pagans. Judaism, in some respects, was somewhat akin to Muhammadanism, and Romanism to Brahmanism: while there were distinct similarities between the pagans of the first century and the Animists of to-day. Observe:

a) That the *sight of idols* deeply stirred Paul: Acts xvii. 6. Does it have the same effect on us, or has familiarity with the sight blunted our sense of its evil?

(b) He had a *thorough knowledge of non-Christian religions* and their unethical products, a knowledge which was of immense value in his dealing with those who professed them.

(c) He was *most tactful* in his approach to heathen audiences.

(d) His method was to *set forth truth* rather than to denounce error. In all these things his example is worthy of imitation.

**The Faith that overcomes the World.**

(a) *Faith in oneself*—not pride or vain glory, but a knowledge that we have been called and sent of God, and a recognition of the particular gifts He has given us.

(b) *Faith in the message.* Christ can meet all the needs of all men under all circumstances. The message of the Gospel had the same effect and produced similar results on persons so wide apart as Lydia, the Asiatic woman trader; the Greek slave girl; and the Roman gaol official; Acts xvi. 'This is the victory that overcometh the world, even your Faith.'

# Holiness

**By the Rev. A. Paramanandam**

## பரிசுத்தம்

(தொடர்ச்சி)

### ஆறாம் அதிகாரம்

### பூரணமாய்ப் பரிசுத்தமாகுதல்

2. பரிசுத்தமானது பரிசுத்தமாகுதலின் பாகமாயிருப்பதினாலே பரிசுத்தமாகுதலின் மார்க்கத்தில் நடக்கிறவர்களெல்லாரும் அந்தப் பரிசுத்தப் பதவியை அடைந்துகொள்ளலாம், அல்லது அடையவே வேண்டும் என்று ஸ்பஷ்டமாய்த் தெரியவருகிறது. எப்படியெனில், பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டுமென்று தேவன் எல்லாரையும் அழைக்கிறார் (1 தெச. $4^{7}$). இன்னும் பரிசுத்தமாகுதலின் மூலமாய் பரிசுத்தம் இயல்பாய் உற்பவிக்கிறது. பரிசுத்தம் தேவனால் சிரேஷ்டமானவர்களென்று எண்ணப்பட்ட சிலருக்குமாத்திரம் உரியது என்று அநேகர் பாவிக்கிறார்கள். ஆனால் அது அப்படியல்லவே. தேவபக்தரான ஒவ்வொருவருடைய அனுபவமும் கிரமமாக விருத்தியடைந்து, அவன் அடைகிற உத்தமஸ்திதியே பரிசுத்தம் என்கலாம். பூர்வகாலத்தில் இஸ்ரவேலர் தேவனை ஆராதித்துவந்த கூடாரத்தில் பரிசுத்த ஸ்தலம், அதிக பரிசுத்த ஸ்தலம் என்னும் விசேஷமான இரண்டு பாகங்களிருந்தன. முதலாம் பாகத்தில் தினந்தோறும் சாதாரண ஆசாரியர்கள் சேர்ந்து, ஆராதனைக்கு அநுகூலமான ஆசாரங்களை நடத்திக்கொண்டுவந்தனர். இரண்டாம் திரைக்குள்ளேயோ பிரதான ஆசாரியன் ஒருவனே வருஷத்துக் கோர்முறை இரத்தத்தோடே பிரவேசித்துவருவான் (எபி. $9^{6,7}$). பரிசுத்தம் என்கிற ஸ்திதியின் அனுபவம் இப்படிப்பட்டதல்ல. இது சாதாரண கிறிஸ்தவர்கள் சேரக்கூடாத அதிகப் பரிசுத்தமான பதவியல்ல. பரிசுத்தமாகுதலில் இருக்கிறவர்களுக்கு பரிசுத்தத்தை மறைக்கத்தக்கதாக மத்தியில் எவ்வித திரையுமில்லை. இந்த ஸ்திதிக்கு யாவரும் பாத்தியதையுள்ளவர்களாய் இருக்கிறார்கள். ஆனால் இந்த இலக்கை அடையவேண்டுமாயின், பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடிப் பற்றிக்கொள்வதற்கு தேகத்தை ஒடுக்கிக்கொண்டு, கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக இலக்கைநோக்கித் தொடரவேண்டும் (பிலி. $3^{14}$).

8. பரிசுத்தமானது சிலருக்குமாத்திரம் பிரத்தியேகமாகச் சித்தப்படுத்தியிருக்கிற ஸ்திதியல்ல. அப்படியானால் இதை பக்தருக்குச் சாதாரணமாய்க் கொடுக்கப்படாத விசேஷ வெகுமானம் என்கலாமோ? அப்படி அல்ல. பரிசுத்தத்தை விசேஷமான விசுவாசமுள்ளவர்களுக்கு மாத்திரம் தேவன் அளிக்கிற மகா விசேஷமான வரமென்று சிலர் பாவிக்கிறார்கள். சரி, இது நிஜந்தான். அதாவது, பரிசுத்தமாகுதலின் மார்க்கத்தில் நடக்கிற பக்தன் அடையத்தக்க எல்லா அநுகூலங்களையும் தேவன் விசுவாசமுள்ளவர்களுக்கு மாத்திரமே அருளுகிற வரங்களென்று எப்படிச் சொல்லலாமோ, அப்படியே இதையும் வரமென்றே சொல்லலாம். கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் அல்லவா? அந்த இரட்சிப்பு உங்களாலுண்டானதல்ல. அது தேவனுடைய ஈவாயிருக்கிறது (எபே. 2[8]). சரீராதீன சுபாவத்தை அடக்குவதும், சத்தியமார்க்கத்தில் பிரவேசிக்கச்செய்து நடத்திக்கொண்டு போவதும், நல்லாசைகளுக்கு இணங்கச்செய்வதும், இருதயத்தில் அன்பின் சாரத்தைத் தாராளமாய் ஊற்றுவதுமான இவை யாவும் பரிசுத்தாவியில் நம்பிக்கைவைப்பதினால் அடையவேண்டிய வரங்களாயிருக்கின்றன. பரிசுத்தம் என்கிற வரம்கூட இதே விதமானதாயும் இதேவிதமாய் அடையவேண்டியதாயுமிருக்கிறது. பரிசுத்தத்தையடையும் நம்பிக்கை தேவன் நமக்காக ஏற்படுத்தின இரட்சணியத்தை சும்மா நின்றுகொண்டு நோக்கத்தக்க நம்பிக்கையுமல்ல (யாத். 14[13]). சீஷர் மேத்தைவீட்டில் உட்கார்ந்துகொண்டு, தங்களுக்குத் தெரியாமல் இருக்கிற ஏதோ ஒரு வார்த்தை நிச்சயித்துக் காத்துக்கொண்டு எதிர்பார்க்கவேண்டிய நம்பிக்கையுமல்ல. இந்த நம்பிக்கை எப்படிப்பட்டது என்போமானால், முன்னே ஆரம்பித்த வேலையை முன்னதாக முடித்துத் தீர்க்கவேண்டுமென்று எண்ணி பரிசுத்தாவியின் ஏராளமான சகாயம் இப்பேர்ப்பட்டதென்று தெரிந்து பற்றிக்கொள்ளுகிற நம்பிக்கையேயாம்.

பரிசுத்தமாகுதலை வெகு நீளமான ஒரு ரஸ்தாவுக்கு ஒப்பிடலாம். அந்த ரஸ்தாவிலே நெடுகப் போகப்போக பரிசுத்தம் என்கிற தேசத்துக்கு நாம் பிரதம பிரவேசத்தைச் செய்வோமென்று காட்டுகிற கல் ஒன்று கிடைக்கும். இவ்வளவேயொழிய பரிசுத்தம் என்பது பரிசுத்தமாகுதலுக்கு அந்நியமான மார்க்கமல்ல. நீண்ட இந்த ரஸ்தாவில் சஞ்சரிக்கவேண்டியதாயிருந்தாலும், இதில் ஒரு அடி முந்தி நடக்கவேண்டியதாயிருந்தாலும், மத்தியில் அகப்படும் எல்லைக்கட்டைத் தாண்டி பரிசுத்தத்தில் இன்னும் அதிகமாய்ப் போகவேண்டியதாயிருந்தாலும், விசுவாசம் ஒன்றே சாதனமானது. இப்



பிரயாணத்திலெல்லாம் விசுவாசம் ஒரேவிதமானதாயும் ஒருவனே ஆவியானவரின் சகாயத்தை ஒரேவிதமாகப் பிரார்த்திக்கத் தக்கதாயும் இருக்கிறது. கிறிஸ்தவர்களின் சாதாரண அனுபவமும் பரிசுத்தம் என்னும் அனுபவமும் வேறேவேறே வித்தியாசங்களுள்ள ஸ்திதிகள் என்று சிலர் பாவித்து, ஒன்றை பழைய ஆசீர்வாதம், தாழ்வான ஜீவன் என்றும், மற்றொன்றை உன்னத ஆசீர்வாதம், மேலான ஜீவன் என்றும் சொல்லுகிறார்கள். ஆனால் நிஜமாக உன்னத ஆசீர்வாதம் பழைய ஆசீர்வாதத்தின் பூரண மறுரூபமே தவிர அதற்கு வேறானதல்ல. நமக்கு ஜீவன் உண்டாயிருக்கவும் அது பரிபூரணப்படவும் கிறிஸ்து அவதரித்தார் (யோ. 10[10]). பரிசுத்தம் என்ன என்று கேட்டால், கிறிஸ்து கொடுக்கிற பரிபூரணமான ஜீவனேயாம். பரிசுத்தத்தைத் தேடுகிற யாராலும் பூரண அன்பினால் விசேஷமான வரத்தை விரும்பினால் அந்த விருப்பம் தப்பாகும். பெந்தெகொஸ்தே தினத்தில் பரிசுத்தமாகுதலை நடத்தும்படியாய் ஆவியானவர் இறங்கிவந்தார். அந்த தினத்தின் ஆரம்பத்தில் அவர் வேறே எந்தவிதமான பிரகாரமாயும் பிரசன்னமாகவில்லை. பரிசுத்தத்தை அருளும்படியாய் தமது வல்லமையைப் பூரணமாய்ப் பிரயோகிக்கிற பரிசுத்தமாகுதலின் ஆவியாகவே வந்தார்.

(இன்னும் வரும்.)

## Village Evangelistic Work

**By the Rev. P. J. Dawson**

## கிராம சுவிசேஷ பிரபல்லிய ஊழியம்

(தொடர்ச்சி)

(B) விதம்: இது மகா முக்கியமான விஷயம். பொருளும் விதமும் சரியாக இருக்கும்போது பிரசங்கம் மிகவும் பிரயோஜனமாயும் நேர்த்தியாயும் இருக்கும்.

(1) கவர்ச்சிக்கத்தக்க விதமாய்ப் பேசவேண்டும்: அதாவது ஒரு பொருளை ஜோடித்துக் காதுக்கு இனிமையாகவும், கவனத்தை இழுக்கத்தக்க விதமாகவும் பேசவேண்டும். அது ஓர் சுலோகத்தைப் பாடியோ, சொல்லியோ, அல்லது படங்களைக் காட்டியோ, அல்லது வாத்தியங்களைக்கொண்டு பாடிப் பிரசங்கித்தோ, எப்படியாயினும் கேட்பவர்கள் மனதை இழுக்கத்தக்க விதமாய் இருக்கவேண்டும்.

(2) பாஷை: பேசுகிறவர்களுடைய பாஷை நடை நன்றாயிருக்கவேண்டும். சில சமயங்களில் பொருளில்லாவிட்டாலும் பேசுகிறவர் வல்வாயராயிருந்தால் தன் சொல்திறத்தினாலும் பாஷையின் இனிமையினாலும் பேசுகிறவர்களை நிறுத்தவும், தூங்குகிறவர்களை எழுப்பவும், கேட்பவர்களை களிக்கச்செய்யவும் கூடும். சில இந்துக்கள் கிறிஸ்தவத்தமிழ் என்றும் இந்துத்தமிழ் என்றும் இருப்பதாகச் சொல்லுகிறார்களே, இது துக்கமான காரியம். நமது நாட்டாருடைய பாஷைநடைக்கும் நம்முடைய பாஷைநடைக்கும் வித்தியாசமிருக்கக்கூடாது.

(3) ஜீவியம்: வார்த்தைகளைவிடக் கிரியைகள் பலமாய்ப் பேசுகிறதென்று ஆங்கிலேய பழமொழி ஒன்றுண்டு. இந்துக்கள் அடிக்கடி நம்முடைய பிரசங்கத்தையும் ஜீவியத்தையும் ஒப்பிட்டுப் பார்க்கிறார்கள். சில கிறிஸ்தவர்களுடைய ஜீவியம் ஏட்டுச்சுரைக்காய்போலிருக்கின்றது. கிறிஸ்துமார்க்கத்திற்கும் அவர்கள் ஜீவியத்திற்கும் பெரிய வித்தியாசம் இருப்பதாகச் சொல்லுகிறார்கள். இது மிகவும் துக்கமான காரியம் ஆகையால் பிரசங்கிகளின் ஜீவியமும் ஊழியமும் ஒத்திருக்கவேண்டும்.

III. முறைகள்—

1. தெருப்பிரசங்கம்: இது நாட்டுப்புறங்களில் மகா முக்கியமான ஊழியம். இதின்மூலமாய் அநேகருக்கு ஒரேசமயத்தில் பிரசங்கிக்கவும் ஒரேநாளில் அநேக இடங்களில் பிரசங்கிக்கவும் சிலாக்கியமும் பாக்கியமும் உண்டு. தற்கால ஊழியர் இவ்வேலையைக் குறித்து சந்தேகங்கொள்ளுகிறார்கள். இது பிரயோஜனமற்ற முயற்சியென்று நினைக்கிறார்கள். இது நியாயமான தீர்ப்பு அன்று. ஏனென்றால், இவ்வூழியத்தின்மூலமாய் நாம் சந்திக்கக்கூடாத அநேகரிடத்தில் பேசலாம்; வீதிகளிலும், சந்தைகளிலும், திருவிழாக்களிலும் இவ்வூழியத்தை மிகப் பிரயோஜனமாகச் செய்யலாம். இதுவுமன்றி நமது நாட்டில் பத்துபேர் சேர்ந்து எதையாகிலும் கவனிக்கும்போது மற்றவர்களும் கவனிப்பார்கள். தனிமையாக ஒருவன் மார்க்கத்தைக்குறித்துத் தீர்ப்புசெய்வதை கிராமங்களில் நாம் பார்க்கிறதில்லை. ஆகையால் வெளிப்பிரசங்கம் மிகவும் பிரயோஜனமுள்ளது.

2. சம்பாஷணை: (1) தெருப்பிரசங்கம் முடிந்தவுடன் கேட்டவர்களோடு நடந்தோ, அல்லது உட்கார்ந்தோ செய்யும் ஊழியம். (2) கிராமங்களுக்குட்சென்று திண்ணைகளில் உட்கார்ந்து அவர்களுடைய க்ஷேமலாபங்களை விசாரித்து அவர்களில் ஒருவராக இருந்து செய்யும் ஊழியம். இவ்வூழியத்தில் அதிக பலன் கிடைக்கக்கூடும்



என்று சொல்லலாம். சுவிசேஷத்தை ஆதியில் அப்போஸ்தலர்களாகிய யோவானும் அந்திரேயாவும் தங்கள் சகோதரரிடத்தில் மேசியாவைக்குறித்து சாட்சிசொல்லி அறிவித்து அவர்களை ஆதாயப்படுத்தினதுபோல இவ்வூழியத்தின் மூலமாய்த் தனி ஆத்துமாக்களை ஆதாயப்படுத்தக்கூடும். நம்முடைய அனுபவத்தில் கண்ட இரட்சகரை அவர்களுக்கு எடுத்துக்காட்டி அவர்களை ஆதாயப்படுத்த ஓர் நல்ல சமயம். அதுவுமல்லாமல் அந்தந்த ஆளுக்குரிய பக்திக்கும் அறிவுக்கும் ஏற்றபடி பேச சிலாக்கியமுண்டு.

3. கல்வி: தாள்களைக் கொடுப்பதும், வேதப்பிரதிகளை விற்பதும், மதவிஷயமான புஸ்தகங்களைக் கொடுப்பதும், இன்னும் அநேக மதநூற்களை அச்சிட்டுத் தெரிவிப்பதுமே. இவ்வூழியத்தின் மூலமாய் கிறிஸ்துமார்க்கம் பிரவேசியாத அநேக கிராமங்களிலும் வீடுகளிலும் பிரவேசிக்கக்கூடும்.

4. காலட்சேபம்: ஓர்விதமாகக் கவனிக்கப்போனால் எல்லா முறைகளையும்விட இவ்வூழியம் நமது நாட்டிற்குச் சிரேஷ்டமானதென்றும், நாட்டுக்குரிய ஓர் ஏற்ற முறையென்றும் எண்ணுகிறேன். இந்துக்களுடைய பக்தியின் ஜீவியம் அணைந்துபோகாததற்குக் காரணம் இராகமும், கவியும், சில சமயங்களில் பக்திமான்களின் ஜீவியமுமே என்று சொல்லலாம். சைவசமயங்களிலும், வைஷ்ணவ மதங்களிலும் தேவாரப்பாடல்களும், திருப்பாடல் திரட்டுகளும், இன்னும் அநேக பக்திநூற்களும் விசேஷித்த ஆத்தும ஆகாரங்களாய் இருந்திருக்கின்றன. பாடல்களைப் பாடி கவிகளின் சுவையையும் அர்த்தத்தையும் உணர்ந்து அங்குமிங்கும் திரியும் தேசிகர் மூலமாய் அல்லவோ இந்துக்களின் பக்தி இதுவரைக்கும் நிலைநிற்கின்றன. ஆகையால் கிறிஸ்துமார்க்கம் அவர்களுடைய இருதயத்தைக் கவர்ந்துகொள்ளவேண்டுமானால், இராகத்தையும் கவியையும் அதிகமாய் உபயோகிக்கவேண்டும். இன்னும் இந்துக்கள் பாரதங்களையும், புராணங்களையும், இராமாயணங்களையும் கவியாகக்கட்டிப் பாடியல்லவோ சாமான்ய மனிதர்களுக்குக் கற்றுக்கொடுக்கிறார்கள். இப்பஜனைக்கூட்டங்களில் வாத்தியங்களின் பிரயோஜனம் அதிகமென்று உங்களுக்குத் தெரியும் ஆகையால் நமது சபைகள் இப்பேர்ப்பட்ட பஜனைக்கூட்டங்களை நடத்துவதற்குப் பிரயாசையெடுப்பது மிகவும் பிரயோஜனம்.

ஆகையால் கிறிஸ்தவர்களாகிய நாம் நமது கிராமங்களில் வசிக்கும் நாட்டாரை மறந்துபோகாமல் நம்பேரில் இருக்கும் உத்தரவாதத்தையும் பொறுப்பையும் உணர்ந்து அவர்களை ஆதாயப்படுத்த

தற்காலம் தென் இந்தியாவில் ஆரம்பித்திருக்கும் சுவிசேஷப் பிரபல்லிய படைமுயற்சியில் நம்மை ஒப்புக்கொடுக்க தேவன் கிருபை செய்வாராக.

## Why do we preach Christianity?

## கிறிஸ்துமார்க்கம் பிரசங்கிக்கப்படுவதேன்?

இவ்வுலகின்கண் எத்தனையோ மார்க்கங்கள் ஏற்பட்டிருக்க, கிறிஸ்தவர்கள்மட்டும் தங்கள் மார்க்கம்தான் மேலானதென்பதுபோல அதைப் பிரஸ்தாபிப்பதேன்? அதில் வாஸ்தவமாகவே நன்மையிருக்குமாகில் எல்லா ஜனங்களும் அதை எளிதில் பற்றிக்கொள்வார்களே. பின்னை ஏன் அதைப் பிரசங்கிக்கவேண்டும்? என்னும் கேள்விகள் அடிக்கடி கேட்கப்படுகின்றன. சுவிசேஷப் பிரபல்லிய ஊழியர் இவைகளுக்கு மாறுத்தரமாக மத். 28[18-20] வசனங்களைச் சொல்வது வழக்கமாயினும் இது இந்துக்களாகிய நம் தேசத்தவர்களுக்குப் போந்த திருப்தியை உண்டுபண்ணுகிறதில்லை. தங்கள் குருவின் கட்டளைப்படி தம் கடமையைச் செய்கிறார்கள் என்று சொல்லி கிறிஸ்துமார்க்கத்தின் மேன்மையையும் முக்கியத்தையும் கவனியாமற் போகிறார்கள். ஆகையால் இக்கேள்விகளைக் கேட்கிற ஒரு இந்துவுக்குச் சரியான சமாதானமும் கிறிஸ்துமார்க்கத்தைக் குறித்த எண்ணமும் ஆராய்ச்சியுமுண்டாகத்தக்கதாக சில நியாயங்களை இங்கு எடுத்துரைப்போம்.

(1) கிறிஸ்துமார்க்கம் ஒன்றே சர்வ ஜனங்களுக்கு முரிய மார்க்கம்.

சர்வ ஜனங்களையும் படைத்தாண்டு வருகிற கருணாகரக்கடவுள் மனுஷனுக்கு இன்றியமையாத விஷயங்களை எல்லாருக்கும் பொதுவாக வைத்திருக்கிறார். ஒளி, காற்று, ஜலம், ஜீவன், ஆகாரம் முதலிய ஆசீர்வாதங்கள், எல்லா ஜனத்துக்கும் பாஷைக்காரருக்கும் ஒன்றுபோலவே இலவசமாய் விதிக்கப்பட்டிருக்கின்றன. உயர்ந்தோருக்கு ஒருவிதமாயும் தாழ்ந்தோருக்கு வேறுவிதமாயுமல்ல. ஒரு தேசத்தாருக்கு ஒரு பிரமாணமாயும் இன்னொரு தேசத்தாருக்கு வேறொரு பிரமாணமாயுமல்ல. இவைகளெல்லாம் எல்லாருக்கும் பொது. சர்வத்திராளுக்கு முரியது. சரீரத்துக்குரிய இந்த ஆசீர்வாதங்கள் எல்லாருக்கும் பொதுவாகவே விதிக்கப்பட்டிருக்குமானால், இன்றி



யமையாத ஆத்மீக ஆசீர்வாதங்களையும் கடவுள் அவ்வண்ணமாகவே சர்வ ஜனங்களுக்கும் பொதுவாக வைத்திருக்கவேண்டும். அவர் ஏற்படுத்தின மார்க்கம் சர்வத்திராளுக்கும் ஏற்றதாயும் சகலரும் இலவசமாய் அனுபவிக்கக்கூடியதாயுமிருக்கவேண்டும். அப்படிப்பட்ட மார்க்கம் கிறிஸ்துமார்க்கம் ஒன்றே. ஒரு ஐரோப்பியன் சரியானபடி இந்துவாயிருக்க முடியாது. ஒரு இந்து, நிகிரோவர் மதத்தை யனுசரிப்பது கூடாது. பஞ்சமர் உயர்தர இந்துமார்க்கத்தை அனுசரிப்பது அசாத்தியம். ஒரு பிராமணன் மகமதியனும் அல்லது புத்தனுமிருப்பது எளிதல்ல. ஆனால் இவர்களெல்லாரும் கிறிஸ்தவர்களாயிருக்கக்கூடும். கிறிஸ்துமார்க்கம் ஒன்றே உலகத்தார் யாவரும் ஒப்புக்கொள்ளக்கூடியதும் அனுசரிக்கக்கூடியதுமான மார்க்கம். இதற்கிசைய கிறிஸ்துமார்க்கம், வேறெந்த மார்க்கமும் செய்யாதவண்ணம் சர்வ ஜனங்களையும் கூவி யழைக்கிறது. 'வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்'; 'தாகமாயிருக்கிறவன் வரக்கடவன், விருப்பமுள்ளவன் ஜீவதண்ணீரை இலவசமாய் வாங்கிக்கொள்ளக்கடவன்'; 'என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு'; 'விசுவாசிக்கிற எவர்கள்மேலும் எவர்களுக்குள்ளும் பலிக்கும் வித்தியாசமேயில்லை'; 'அவரை ஏற்றுக்கொள்ளுகிறவர்கள் எத்தனைபேர்களோ அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அதிகாரங்கொடுத்தார்' இவை முதலிய வசனங்களிலடங்கிய அழைப்பும் ஆசீர்வாதங்களும் எத்தேசத்தவருக்கும் எந்த ஜாதியாருக்கும் செல்லும். இப்படி கிறிஸ்துமார்க்கம் ஒன்றே, நானா ஜாதியாரையும் தேசத்தாரையும் ஏற்றுக்கொள்ளுகிறது; சர்வ ஜாதியாருக்கும் பொது; சகலரும் அனுபவிக்கக்கூடியது. இதுவே தேவனால் ஏற்படுத்தப்பட்ட மார்க்கம் என்பதற்கு வேறு நியாயங்கள் தேவையில்லை. உலகத்தார் யாவருக்கும் உரியதும், யாவரும் பற்றிக்கொள்ளக்கூடியதுமான இத்தெய்வமார்க்கத்தைப் பிரசித்தப்படுத்துவது எவ்வளவு அவசியம்!

(2) இயேசுகிறிஸ்து ஒநவரே உலகரட்சகர்.

கிறிஸ்துமார்க்கம் சர்வ ஜனங்களுக்கும் பொருந்தின மார்க்கமாயிருப்பதுமன்றி அதில் குறிக்கப்பட்ட இரட்சண்யமூர்த்தியும் சர்வ லோகத்துக்கும் இரட்சகராயிருக்கிறார். இவ்வுலகத்தில் தோன்றின பற்பல குருக்கள், மகாத்துமாக்கள், அவதார புருஷர் யாவரும் ஒரு தேசத்துக்கு அல்லது ஒரு ஜாதியாருக்குரியவர்களாய் மாத்திரமிருந்தார்கள். அவர்கள் சொன்னவைகளும் செய்தவைகளும் அந்தந்தக் காலத்துக்குமாத்திரம் பொருந்தக்கூடியதாயும் அந்தந்த ஜனத்தாரும் ஜாதியாரும் மாத்திரம் பின்பற்றக்கூடியவைகளுமாயிருந்தன. ஆனால்

இயேசுகிறிஸ்துவோ நேற்றும், இன்றும், என்றும் மாறாதவராய் எத்தேசத்தவருக்கும் எக்காலத்தவருக்கும் உரியவராயிருக்கிறார் என்பது கவனிக்கப்படவேண்டியது. அவர் உலகத்தில் அன்புகூர்ந்தார் என்றும் உலகத்தைத் தேவனோடு ஒப்புரவாக்கினார் என்றும் சொல்லப்படுகிறது. அவரைக் குறித்து 'இதோ உலகத்தின் பாவங்களைச் சுமந்து தீர்க்கிற தேவாட்டுக்குட்டி' என்று ஒரு முனிவர் சாட்சி பகர்ந்தார். இவரே சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்கிற கிருபாதார பலியென்று இன்னொரு பக்தர் எழுதினார். ஆகவே இயேசுகிறிஸ்துநாதர் ஒரு தேசத்தாருக்கு அல்லது ஒரு ஜாதியாருக்கு மாத்திரமல்ல, எல்லாருக்கும் இரட்சகர். சர்வ ஜனங்களுக்கும் அவரிடம் பங்குண்டு. ஐரோப்பியரும் கிறிஸ்தவர்களுமாத்திரமல்ல, ஆபிரிக்கர், இந்தியர், சீனர் முதலிய நானா தேசத்தாரும் அவரைத் தங்கள் இரட்சகர் என்று உரிமைபாராட்டப் பாத்தியதையுண்டு. வேறெந்தக் குருவைக் குறித்தாவது அவதார புருஷரைக் குறித்தாவது இப்படிச் சொல்வதற்கிடமில்லை. சர்வலோகத்துக்கும் பொதுவாயிருக்கிற இந்த உலக இரட்சகரைத் தங்களுக்குமாத்திரம் வைத்துக்கொண்டு மற்றவர்களுக்குச் சொல்லாமலிருப்பது தருமமாகுமா?

(3) கிறிஸ்துமார்க்க இரட்சண்ய வழியே சர்வத்திராளும் பின்பற்றக்கூடியது.

ஒவ்வொரு மார்க்கத்திலும் இரட்சண்யம் அல்லது முக்தி உண்டென்று ஒப்புக்கொள்ளப்படுகிறது. அதை யடைய வழிகளும் ஏற்பட்டிருக்கிறது. இதுவே சகல மதங்களின் நோக்கம். ஆனால் இந்த வழிகள் பெரும்பாலும் அநேகர் செல்லக்கூடாத வழிகள். இந்துமார்க்கத்தில் சொல்லப்படும் சரிதை, கிரியை, ஞானம், யோகம் என்பவைகளை யாவரும் அப்பியாசிக்கக்கூடுமோ? எல்லாரும் காசிக்குப் போக முடியுமா? காவடி யெடுக்க முடியுமா? வனத்தில் தவஞ்செய்ய முடியுமா? அப்படிச் செய்யமுடியாத பஞ்சமர், அறிவீனர், ஏழைகள் கதியென்ன? அவர்களுக்கு முக்தியில்லையா? புத்தமார்க்கத்தின்படி எல்லாரும் நிர்வாணா என்னும் நிலைமையை யடைய முடியுமா? மகமது மார்க்கானுசாரங்கள் யாவையும் எல்லாரும் நிறைவேற்றக்கூடுமோ? அப்படிச் செய்யக்கூடாதவர்களுக்கு இரட்சிப்பில்லையா? இவைகள் யாவும் சில அறிவாளிகளுக்கும், உயர்ந்தோருக்கும், ஐசுவரியவான்களுக்குமாத்திரம் உரியது. சிலர்மட்டும் செல்லக்கூடிய வழி நீதியுள்ள கடவுளால் ஏற்படுத்தப்பட்ட வழியென்று ஒப்புக்கொள்ளமுடியுமா? இரட்சிப்பு எல்லா மானிடருக்கும் அவசியம். ஆகையினால் சகலரும் அதை அடையக்கூடிய வழியொன்றிருக்கவேண்டும். எத்தேசத்தவர்களும், எக்காலத்தவர்களும், எந்



நிலைமையோரும் பின்பற்றக்கூடிய வழியே கடவுளால் ஏற்படுத்தப்பட்ட வழியாயிருக்கவேண்டும். அப்படிப்பட்ட வழி கிறிஸ்துமார்க்கத்தில்தான் சொல்லப்படுகிறது. 'கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீ இரட்சிக்கப்படுவாய்.' இதை ஏழையோ ஐசுவரியவானோ, கற்றவனோ கல்லாதவனோ, உயர்ந்தோனோ தாழ்ந்தோனோ, யார் என்னால் கூடாதென்று சொல்லக்கூடும்? 'என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கும்' என்று இயேசு பகவான் சொன்னது மெய். விசுவாசவழி யொன்றே உலகமனைத்தும் பின்பற்றக்கூடிய வழி. 'என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனுக்கு நித்தியஜீவன் உண்டென்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்' என்று அருள்நாதர் சொல்லியிருக்க இந்த இலவசமான இரட்சிப்பைக் குறித்துப் பிரசங்கியாமலிருப்பது நியாயமா? சர்வ ஜனங்களும் எளிதில் பின்பற்றக்கூடிய வழியொன்றிருக்குமாயின் அதை யாவருக்கும் பிரஸ்தாபிப்பது புத்தியுள்ளோர் மேல் விழுந்த கடமை.

(இன்னும் வரும்.)

## A Christmas Sermon

**By the Rev. N. Devasahayam, B.A.**

ஏசா. 9[6]

இந்தத் திருவசனம் செவ்வையாய் விளங்குவதற்கு அதைச் சரியாய் மொழிபெயர்த்துக்கொள்ளவேண்டும். வருமாறு:

> 'நமக்கு ஒரு பாலகன் பிறந்தார். நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார். கர்த்தத்துவம் அவருடைய தோள்மேல் இருக்கும். அவருடைய நாமம் அதிசயமான ஆலோசனைக்காரர், தேவனாகிய வீரர், நித்திய பிதா, சமாதான இராஜா என்னப்படும்.'

இது ஒரு ஜெயகீதம். செய்த பாவங்களுக்காக ஒடுக்கப்பட்டிருந்த ஜனத்திற்கு தேவன் துன்பவிடுதலை செய்கிற இரட்சகரைத் தருவேன் என்றபோது அதற்குண்டான சந்தோஷம் இங்கே தெரிவிக்கப்படுகிறது. பாவம் எப்போதும் துன்பத்தையே தரும். அது துவக்கத்தில் தருகிற இன்பம் நீர்க்குமிழிபோல் உடையும். பிறகு, அதனால் வருகிற துன்பம் சமுத்திரம்போல் பெருகும். இரட்சிப்பு முதலில் உதயகால வெளிச்சம்போல் தோன்றி வரவர நடுப்பகல் வரையும் அதிகமாகிற வெளிச்சமாகும் (ஏசா. 8[20]). அதைத் தருகிறவர் சிறு குழந்தையாய்ப் பிறந்து வளர்ந்து இரட்சிப்பைச் சம்பாதிப்

பார் (ஏசா. $7^{14}$). சம்பாதித்து, தம் ஜனத்தை அதின் சத்துருக்கள் நடுவே நடத்தி அவர்களை ஓயாமல் ஜெயத்தின்மேல் ஜெயமாய் வெல்வித்து, கடைசியில் சத்துருக்களே இல்லாத நித்திய சமாதானத்திற்குள் கொண்டுசேர்ப்பார். இதுதான் இங்கு சொல்லப்படுகிற நல்ல செய்தி. ஆகையால், இந்தத் திருவசனத்தை விசேஷமாய்க் கிறிஸ்து ஜயந்திக்கு எடுத்துப் பிரசங்கிப்பார்கள். ஆகையால் அது எக்காளும் எல்லாருக்கும் நல்ல செய்தியேயாம்.

இதில் இரண்டு முக்கிய விஷயங்கள் சொல்லப்படுகின்றன: அதிசயமான பாலகனும், அவர் செய்கிற அதிசயமான வேலையும்.

1. அதிசயமான பாலகன். நம்மை எப்பொழுதும் இடைவிடாமல் சூழ்ந்து எப்படியாகிலும் அழிக்கப் பார்க்கிற சத்துருக்கள் வெகு வல்லமையுள்ளவர்கள். அவர்களைப் போரில் ஜெயிக்க வல்லவன் மானிடருள் ஒருவனுமேயில்லை. பாவம் ஒரு சத்துரு. அது சிறு குழந்தையுள்ளும் இருக்கிறது, முதிர்ந்த கிழவனுள்ளும் இருக்கிறது. அதின் வல்லமையை நாம் இலேசாய் முறித்து, அதை நம்மைவிட்டு வெளிப்படுத்தி நம்மை நாமே விடுதலைசெய்துகொள்ளலாம்போல் நமக்குத் தோன்றும். ஆகிலும் அது வெறும் தோற்றம்தான். எல்லாப் பாவங்களுக்கும் ஊற்று உள்ளத்திலிருக்கிற இச்சை. அதின் கருப்பத்தில் அருவருப்பான பாவங்கள் இருக்கின்றன. இச்சை என்கிற கருப்பையிலிருந்து கருமப்பாவங்கள் பிறக்கும். தேளின் கருவிலிருந்து பல தேட்குஞ்சுகள் புறப்படுகிறதுபோல் இச்சையின் கருப்பத்திலிருந்து நினைவாலும், பேச்சாலும், செய்கையாலும் எண்ணிறந்த பாவங்கள் ஒவ்வொரு நிமிஷமும் புறப்படுகின்றன (யாக். $1^{14.16}$). அசுத்தமான நினைவுகளும் பேச்சுகளும் கிரியைகளும் நம்மிலிருந்து வெளியே போகும்போது, நஞ்சுக்காற்று வெளியே பரவி உயிர்ச்சேதம் செய்கிறதுபோல, அநேக சேதங்கள் உண்டாக்கும். திருஷ்டாந்தமாக, கற்பில்லாத நினைவு ஒருவனுடைய உள்ளத்தில் காமத்தீயை மூட்டி அவனை வாதிக்கிறது. அந்தப் பாவத்திற்கு அடிமைப்பட்டவனுடைய கண் கற்பில்லாமையைக் கக்கும்; அவனுடைய வாய் கற்பில்லாமையைப் பேசும்; அவனுடைய செய்கை கற்பில்லாமையைத் தெரிவிக்கிற சேட்டையாயிருக்கும்; அவனுடைய ஜீவியம் கற்பில்லாமையைப் பிறருக்கு மூட்டும். அவன் நஞ்சுமரம்போல் இருக்கிறான். அவனுடைய சமீபத்தில் இருக்கிறவர்களுடைய கற்பு வரவரச் செத்துப்போகும். இப்படி இச்சை என்கிற தாயின் வயிற்றிலிருந்து விபசாரங்களும், வேசித்தனங்களும், கொலைகளும், பொய்களும், களவுகளும், இன்னம் எண்ணிலடங்காத பாவங்களும் பிறந்துகொண்டேயிருக்கும். அசுத்த



இச்சைகளும் அசுத்த கிரியைகளும் நம் பூவுலகை நரகம்போல் ஆக்கியிருக்கிறதல்லவா? ‘பாவம் ஜாதிகளின் அழிவு.’ இது திருவேத வாக்கு. பாவமே ஒவ்வொரு குடும்பத்தின் அழிவு, அதுவே ஒவ்வொரு ஆளின் அழிவு. அப்பேர்ப்பட்ட தீமையைத் தன்னைவிட்டு நீக்கிக்கொள்ள எவனுக்கும் வல்லமையில்லை. அது நம் மானிட சுபாவத்தைச் சிறைபிடித்துத் தன் வல்லமைக்குள் வைத்திருக்கிறது.

மேலும் நம்முள்ளேயே இருக்கிற இச்சை என்கிற பாவத்திற்கு இரை இப்புவியிலிருக்கிறது. நம்முள் இருக்கிற இச்சைகளை யோவான் அப்போஸ்தலர் மூன்று முடிப்புகளாக முடிந்து காட்டுகிறார்: கண்களின் இச்சை, மாமிசத்தின் இச்சை, ஜீவனத்தின் பெருமை (1 யோவா. $2^{16}$). இவைகளுக்கு இரை நம்மைச் சூழ இருக்கிற உலகத்தில் எங்கும் அகப்படும். நம் துரிச்சைக்கு இரையூட்டுகிற உலகம் நமக்கு ஒரு சத்துரு அல்லவா? இச்சைக்கு இரையூட்டுகிற இடங்களையும் சமயங்களையும் இவ்வுலகெங்கும் நிதானித்து வைக்கிறவன் பிசாசு. அவன் யார் யார் எந்த எந்த இச்சையையுடையவன் என்று அறிவான்; அறிந்து, அவனவனுக்குத் தகுந்த இரையை வைத்து அவனைத் தன் கண்ணியில் பிடிப்பான். அவனுக்கு ‘நரகவேட்டுவன்’ என்று பெயர். தவிர, பாவத்தின் சம்பளம் மரணம். மரணம் உலகில் சகல மனிதரையும் பிடித்திருக்கிறதினாலே சகல மனுஷரும் பாவிகள் என்பது பெறப்படும். அதுவே ஒவ்வொரு மனுஷனின் அனுபவம். மரண அனுபவம் நடைபெறுகிற இடத்திற்கு நரகம் என்று பெயர். இப்படி நம்மைப் பிடித்த தீமைகளை ஒவ்வொன்றாய்ச் சொல்லி அடங்குமா? ஒவ்வொரு தீமையும் ஒவ்வொரு சத்துருதான். நம் சத்துருக்களை ஜெயிக்க நமக்கு வல்லமையில்லை. ஆகையால், தேவனே இரங்கி நமக்கு ஒரு இரட்சகரை அருளினார். அந்த இரட்சகர் நம் சத்துருக்களை ஜெயிக்கிறதற்கு அவர்களைவிட வல்லவராயிருக்கவேண்டுமே. ஆம், அப்படித்தான் இருக்கவேண்டும்.

உனக்கு தேவன் அருளின அந்த இரட்சகரைப் பார்! எளிய கன்னிமகனாய் புல்லணையில் கிடக்கிறார்! தன்னையே இரட்சித்துக்கொள்ள முடியுமா இந்தச் சிறு பாலகன்? பின், உன்னை எப்படி வல்லவர்களான சத்துருக்கள் கையிலிருந்து இரட்சிப்பார்? இது உனக்கு விளங்கவில்லையானாலும், அவரே உன்னையும் முழு மனுஷ ஜாதியையும் இரட்சிக்கிற வல்லவர். இது ஒவ்வொரு விசுவாசியின் அனுபவம். ஆகையால், ஏசாயா தீர்க்கதரிசி அவரைக் குழந்தையாய்ப் பார்க்கும்போதே ஒரு அதிசயத்தையும் கூடவே பார்த்து நமக்குத் தெரிவிக்கிறார்: ‘கர்த்தத்துவம் அவர் தோளின்மேல் இருக்கிறது’.

கர்த்தத்துவம் என்றால் ஆளுகிற வல்லமை. எதை ஆளுகிற வல்லமை? எல்லாச் சிருஷ்டிகளையும், எல்லா உலகங்களையும் ஆளுகிற வல்லமை. சகல உலகங்களையும் சகல சிருஷ்டிகளையும் ஆளுகிறவரே நம்மை இரட்சிக்கிறதற்குப் பாலகனாய்ப் பிறந்தார் என்பது இதனால் பெறப்படும். புவியில் அதிகாரம் செலுத்துகிறவர்கள் தங்களினும் மேலான அதிகாரிகளிடத்தில் ஆளுகிற உரிமையைப் பெறுகிறார்கள். இவர் அப்படி ஒருவரிடத்திலும் அதிகாரம் பெற்றவரவில்லை. ஆளுகிற உரிமை அவருக்குச் சுயமே உண்டு. அதுவுந்தவிர, அவருடைய ஆளுகைக்கு எல்லாரையும் அடக்கிக்கொள்ளுகிற சர்வவல்லமையும் அவருக்குச் சுயமே உண்டு. ஆளுகிற வல்லமை அவர் தோள்மேல் இருக்கிறது. ஆகையால், அவர் அதிசயமான பாலகன்தான். அவர் உன்னையும் இரட்சிக்கவல்லவர். அவரை நம்பி உன்னை அவருக்குக் கொடுத்துப்பார். அப்போது, அவர் எப்பேர்ப்பட்ட இரட்சகர் என்பது உனக்கு அனுபவத்தில் தெரியும்.

(இன்னும் வரும்.)

C. L. S. PRESS, MADRAS—1916

No. 128 ஜனவரி 1917

வேதியர் [illegible]

## Forward!

WE stand once more on the threshold of a New Year, and look out into the unknown future. It may well be that in these days of world-wide distress and unrest, with wars and rumours of wars, with questionings and doubts in the hearts of many and the shaking of much in heaven and on earth, there may be some who look forward with fear and wonderment. It was in some such spirit that the children of Israel of old stood on the banks of the Red Sea long ago, after their deliverance from Egypt. God had brought them out with a mighty hand, and they had rejoiced in their freedom: they had spoiled their oppressors, and elated with their newly gotten wealth as well as with their newly won independence, they had journeyed as far as the Sea which blocked their path. And then, looking back they discovered that Pharaoh, with his chariots and his horseman was hard on their track, and almost overtaking them. The situation seemed desperate—on either side the desert, before and behind destruction, and they cried unto the Lord in their distress. The answer they received through Moses must have seemed to them most strange: 'Speak unto the children of Israel that they go forward.' To do so seemed certain death, and yet the alternatives were equally bad. To scatter to right and left would have been the method of cowardice, and would have resulted in their speedy destruction by the cavalry of the enemy: to turn back was the path of subjection to the yoke they had just left, a return to slavery. The path of courage and obedience was the path which God indicated--forward: and it proved also the way of safety, for the waters divided before them and

closed in behind them, destroying the foe who presumed to follow in their footsteps. The difficulty before them had seemed insurmountable, but because they in obedience, faith and courage carried out the divine command, it vanished.

Is there herein no message for us? Does not the command of God to us as individuals and as a Church, as a nation and as a race ring out with the same insistence as of old, 'Go forward'? To stand still is to stagnate: to turn aside from our path, if it be truly a God-appointed one, is to be false to our allegiance: while to go back is to become entangled again in the yoke of bondage from which Christ came to set us free. With St. Paul our motto must ever be, 'I press on.' We must never fear to go forward, for God's purpose for us is our progress, and He Himself is our leader. But if we are in this year to go forward as He would have us do, as individuals and as Churches, we must be prepared to follow the path which He marks out, no matter how difficult it be, and for that must strive to cultivate the three qualities which the children of Israel were called upon to exhibit in the crisis we are considering, Courage, Obedience, Faith.

**Courage.** It is a qualification needful at all times, and one that comes from above to him who humbly seeks it. The promise of the Master to the disciples was that they should receive power by the coming of His spirit, and we know what remarkable courage His coming engendered in their hearts, so that those who had before feared to be even seen in His company, were now bold enough to face councils and Kings in His name. It is the gift of God before which difficulties flee. Later on in the journey of this people, when they were at last to enter the promised land, they were faced with a difficulty similar to the one which faced them now: the Jordan blocked their path, a wide flood, seemingly impassable. But the same command was theirs, and the same courage and obedience were given to them, and as soon as the feet of the priests who bare the ark touched the margin of the waters, they stood up in a heap that the people might go through dry-shod. So difficulties vanish from the pathway of courage. Oft-times our difficulties are chiefly



bred in our own imagination: still more often, we find them disappear as we approach them courageously. Christian saw the lions in the way, at the sight of which Timorous and his companion Mistrust had fled. But he went on bravely, only to find that the lions were chained. His courage saved him once again, in his fight with Apollyon: for his armour was in front only, and to have turned his back would have meant instant death. The cultivation of a spirit of courage and optimism is essential to a cheerful fulfilment of God's command to go forward. We, both as individuals and Churches are only too apt to be easily daunted and depressed: shall we not strive in this year to put a more cheerful courage on, knowing that 'the battle is the Lord's', and that we must therefore inevitably win it.

But our courage is not to be the result of self-confidence, but of God-confidence, for it must be the outcome of **obedience.** It is not courage to rush rashly into danger without considering what we do, and without waiting for God's guidance. It was only in obedience to the command of God that they went forward on this occasion, and when on subsequent occasions they attempted to go in their own strength they failed. Self-confidence is apt to lead to danger: it was Peter's self-confidence that lead him impetuously to leave the boat and walk on the water to meet his Master, and it failed him when he saw the great waves that threatened to engulf him. Had he kept his eyes on his Lord, there would have been no danger at all. It is then and then alone that the fear vanishes, driven out by the greater confidence begotten of faithful obedience. The result of the obedience of the Israelites was two-fold: not only did the waters part for them to pass through, but also the pillar of cloud that had gone before them, went and stood behind, turning to a pillar of fire for them, but appearing as black darkness to the enemy. God's answer to the response of obedience is immediate and unmistakeable: let us be assured that we are working in obedience to His voice, and then nothing else will matter: difficulties will be overcome and the forward path will be made plain before us.

But throughout the third quality of **Faith** is essential.

The path we have to tread is unknown to us—but not to Him: and to us as to them is given the promise, ‘My presence shall go with you’. The pillar of cloud led them on, and strong in their faith in that symbol of the divine presence they reached the promised land. Our land of promise may seem far ahead, and difficult of access, but the faith that has lead God's people in all the ages to wider and fairer inheritances than they had ever dreamed of will not fail us. The safely trodden path of the past is in itself a pledge of equal safety in the future, if we will but fulfil the conditions still, and with faith, obedience and courage go forward, relying on His promise in this year as in all years, ‘Lo I am with you always even unto the end of the ages.’

# The preparation of Sermons

**By the Rev. H. Spencer, B. A.**

## பிரசங்க முறை

### முகவுரை

ஆதிசபையில் அப்போஸ்தலர் தேவனுடைய வசனத்தைப் பிரசங்கித்ததுமாத்திரமல்ல, சபையார் கொடுக்கிற பணத்தை வாங்கி ஏற்றபிரகாரம் செலவுசெய்துகொண்டும் வந்தார்கள். சபை விருத்தியடைந்தபின் சபையார் தங்களுக்குள் பரிசுத்தாவியும் ஞானமும் நிறைந்த நற்சாட்சி பெற்றவர்களைத் தெரிந்துகொண்டு, இந்த வேலையில் நியமித்து, லௌகீக விஷயங்களின் பொறுப்பை அவர்கள் வசத்தில் விட்டு, அப்போஸ்தலர் ஆத்மீக உத்தியோகத்தை நிறைவேற்றி வந்தார்கள் (அப். 6[1-6]). இக்காலத்தில் உபதேசிமாரும் போதகன்மாரும் ஆத்மீக காரியங்களையும் லௌகீக காரியங்களையும் பார்க்கிறவர்களாயிருக்கிறார்கள். சபையின் பணவிஷயங்கள், கட்டட காரியங்கள், விதவைகளை ஆதரித்தல், ஏழைகளைப் பராமரித்தல் முதலானவைகளை உபதேசிமாரும் குருமாரும் கவனிக்கவேண்டியவைகளாயிருக்கின்றன. மேலும் பள்ளிக்கூட வேலையை மேல்பார்த்து, பிள்ளைகளைப் பரீக்ஷிக்கவும் வேண்டியதாயிருக்கிறது. இந்த வேலைகளின் மத்தியில் உபதேசிமாரும் போதகன்மாருமாயிருக்கிற நாம் செய்யவேண்டிய வேலைகளில் பிரசங்கிப்பதும் சுவிசேஷத்தைக்



கூறி யறிவிப்பதும் மிக முக்கியமான வேலையாயிருக்கிறதென்பதை மறந்துபோகலாகாது.

இயேசுகிறிஸ்து தமது பன்னிரண்டு சீஷர்களை யழைத்து, பிசாசுகளைத் துரத்துவதற்கும், எல்லாவிதமான வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்குவதற்கும் அவர்களுக்கு அதிகாரம் கொடுத்து, பரலோக இராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று கூறி பிரசங்கியுங்கள் என்று அவர்கள் செய்யவேண்டிய முக்கியமான ஊழியத்தைக் காண்பித்தார் (மத். 10[1,5,7]). அவர் பரலோகத்துக் கேறிப்போகும் காலத்தில் தாம் ஆரம்பித்த வேலையை அவர்கள் வசத்தில் ஒப்புவித்து, நீங்கள் உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் பிரசங்கியுங்கள் என்று கட்டளைகொடுத்தார் (மாற். 16[15]). பவுல் தான் செய்யும்படி ஒப்புக்கொண்ட வேலையைக்குறித்து, ஞானஸ்நானங் கொடுக்கும்படி கிறிஸ்து என்னை அனுப்பவில்லை, சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவே அனுப்பினார் என்று எழுதுகிறான் (1 கொரி. 1[17]). மேலும், நான் சுவிசேஷத்தைப் பிரசங்கித்துவந்தும் மேன்மைபாராட்ட எனக்கு இடமில்லை; அது என்மேல் விழுந்த கடமையாயிருக்கிறது; சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால் எனக்கு ஐயோ என்றும் எழுதுகிறார் (1 கொரி. 9[16]). மேற்கூறிய வசனங்களையல்லாமல் அதே அபிப்பிராயமடங்கிய வேறநேக வேதவசனங்களுமுண்டு (1 கொரி. 2[1,2,12,13]; 1 தீமோ. 2[4-7]; அப். 20[20,21]; இவ்வசனங்களையும் வாசித்துப் பார்க்கவும்). கனமானதும் மிக சிரேஷ்டமானதுமான இந்த வேலையைச் செய்யும்படி இயேசுகிறிஸ்து நம்மை அழைத்திருக்கிறார். ஆதலால், நாம் இந்த வேலை என்னவென்றும், அதைச் செய்யும் விதம் என்னவென்றும் தீர்க்காலோசித்து கவனத்தோடு விசாரிப்பது நமதுமேல் விழுந்த கடமையாய் இருக்கிறதல்லவா?

இவ்விஷயங்களை ஆலோசிக்கையில் பவுல் எழுதின சில வசனங்கள் எப்போதும் நம்முடைய ஞாபகத்திலிருக்கவேண்டும். ஏனென்றால், பிரசங்கிகளின் உத்தியோகவிஷயமாய் தான் கொண்ட அபிப்பிராயத்தை இவைகளில் பரிஷ்காரமாய்த் தெரிவிக்கிறான். அதாவது, ‘இப்பொழுது நான் உங்கள் நிமித்தம் அனுபவிக்கிற பாடுகளில் சந்தோஷமடைந்து, கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை அவருடைய சரீரமாகிய சபைக்காக, என் மாம்சத்திலே நிறைவேற்றுகிறேன். ஆதிகாலங்களுக்கும் தலைமுறை தலைமுறைகளுக்கும் மறைவாயிருந்து, இப்பொழுது அவருடைய பரிசுத்தவான்களுக்கு வெளியாக்கப்பட்ட இரகசியமாகிய தேவவசனத்தைப் ’பூரணமாய்த் தெரியப்படுத்துகிறதற்கு, உங்கள்பொருட்டு தேவனால் எனக்கு அளிக்கப்பட்ட உத்தியோகத்தின்படியே நான்

அந்தச் *சபைக்கு ஊழியக்காரனானேன். புறஜாதிகளுக்குள்ளே விளங்கிய இந்த இரகசியத்திலுள்ள மகிமையின் ஐசுவரியம் இன்னதென்று, தேவன் தம்முடைய பரிசுத்தவான்களுக்குத் தெரியப்படுத்தச் சித்தமானார். கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே அந்த இரகசியம். எந்த மனுஷனையும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேறினவனாக நிறுத்தும்படிக்கு, அவரையே நாங்கள் அறிவித்து, எந்த மனுஷனுக்கும் புத்திசொல்லி, எந்த மனுஷனுக்கும் எல்லா ஞானத்தோடும் உபதேசம் பண்ணுகிறோம். அதற்காக நான் எனக்குள்ளே வல்லமையாய் கிரியை நடப்பிக்கிற அவருடைய பலத்தின்படி போராடிப் பிரயாசப்படுகிறேன் (கொலோ. $1^{24-29}$). இந்த வார்த்தைகளின் பிரகாரம் பிரசங்க விஷயத்தை நான்கு பாகமாய்ப் பிரித்து கவனிக்கவேண்டியது.

(1) பிரசங்க விஷயம்—கிறிஸ்துவையே பிரசங்கித்தல்.

(2) பிரசங்க இலக்கு—ஒவ்வொருவனையும் கிறிஸ்துவில் பூரண பக்தி உள்ளவனாக்கி தேவனுக்குமுன் நிறுத்துதல்.

(3) பிரசங்க முறை—ஒவ்வொரு மனுஷனுக்கும் பூரண ஞானத்தோடு கிறிஸ்துவைப் பிரசித்தப்படுத்தல்.

(4) பிரசங்கத்தின் பலன்—நம்மில் பலமாய் வேலைநடப்பிக்கிற கிறிஸ்துவின் அன்புக்கு அனுசாரமாய்ப் போராடிப் பிரயாசப்படுதல் என்பவைகளே.

### முதலாவது பிரசங்க விஷயம்

பவுல் இதில் கிறிஸ்துவையே பிரசங்கிக்கிறேன் என்கிறார். அவர் எழுதின நிருபங்களிலேயும் மற்ற அப்போஸ்தலர் எழுதின நிருபங்களிலேயும் இந்த அர்த்தம் வெளிப்படுகிறது. பவுல் கொரிந்து சபைக்கு நிருபத்தை எழுதினபோது தானும் சுவிசேஷத்தை விஸ்தாரமாய்ப் பிரசங்கித்ததாகத் தெரிவிக்கிறார். அடையாளங்களைத் தேடின யூதருக்கும் ஞானத்தைச் சம்பாதிக்க பிரயத்தனித்த கிரேக்கருக்கும் சிலுவையில் அறையுண்ட கிறிஸ்துவை பிரசங்கிக்கிறேன் என்று எழுதினார் (1 கொரி. $1^{17-25}$). கொரிந்து பட்டணத்துக்கு வந்தபோது, சிலுவையில் அறையுண்ட அவரையேயன்றி வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித்திருக்கிறேன் என்று எழுதினார் (1 கொரி. $2^{2}$). அதே அர்த்தத்தைக் காட்டுகிற கீழ்க்கண்ட வேதவசனங்களைப் பார்க்கவேண்டும் (ரோ. $1^{17}$; 1 கொரி. $1^{19}$; 1 கொரி. $4^{5}$; $5^{18}$-$6^{1}$; கலா. $1^{15,16}$). தேவனுடைய இரகசியத்தைப் பிரசங்கிக்கவேண்டுமென்பதையும், அந்த இரகசியம் கிறிஸ்துவில் வெளிப்பட்டிருக்கிறது என்பதையும் காட்டுகிற



1 கொரி. $2^{1}$; $4^{1}$; ரோம. $16^{25,26}$; எபே. $1^{9,10}$; $3^{10-12}$; கொலோ. $1^{25-28}$ வசனங்களை வாசிக்கவும்.

எபிரேயர் நிருபத்தையும் முக்கியமாய் முதலாம் இரண்டாம் அதிகாரங்களையும், $3^{1}$, $4^{14}$, $9^{24-28}$ வசனங்களையும், 1 பேதுரு முதலாம் இரண்டாம் அதிகாரங்களையும், 1 யோவான் முதலாம் இரண்டாம் அதிகாரங்களையும் வாசிப்பதினால் பவுல் மாத்திரமல்ல, வேறே அப்போஸ்தலரும் கிறிஸ்துவைக்குறித்துப் பிரசங்கிக்கிற ஒழுங்கு தெரிய வருகிறது. இந்த வசனங்களுக்கு ஆதாரமாயிருக்கிற இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகள் மத். $5^{11}$, $10^{22}$; லூக். $24^{46-48}$; யோ. $15^{26,27}$; அப். $1^{8}$ இவ்வசனங்களில் வெளியாகின்றன.

இவ்விதமான வசனங்களை வாசித்து சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும் உத்தியோகத்தை மூன்றுவிதமாய்ப் பிரித்து கிறிஸ்துவையே பிரசங்கிக்கவேண்டும் என்பது நம்மேல் விழுந்த கடமை என்று அறியவேண்டும்.

(இன்னும் வரும்.)

# Holiness

**By the Rev. A. Paramanandam**

## பரிசுத்தம்

(தொடர்ச்சி)

### ஆறும் அதிகாரம்

### பூரணமாய்ப் பரிசுத்தமாகுதல்

4. இன்னோர் விதமாயும் பரிசுத்தமானது பரிசுத்தமாகுதலின் அம்சமென்று தெரியவருகிறது. எப்படியென்றால், பரிசுத்தத்தின் வேலை ஆரம்பித்தாலும் பரிசுத்தமாகுதலின் வேலையும் நின்றுபோவதில்லை. பரிசுத்தத்தைச் சேர்ந்தபின்னுங்கூட அபிவிருத்தியை அடைந்துகொண்டே இருக்கவேண்டும். வழிப்போக்கன் ஒருவன் மலையை ஏறும்படி கோணல்மாணலான வளைந்த வழியில் மிகவும் கஷ்டப்பட்டு ஏறி, கடைசியில் மேலுச்சியில் சேர்ந்து தன் எதிரில் தோன்றுகிற விசாலமான சமதரையைப் பார்த்து தன் கஷ்டங்கள் எல்லாம் இங்கே முடிந்தது என்றும், இன்னும் ஏறிப்போவது அவசியமல்லவென்றும் அறிந்து எவ்வாறு சந்தோஷப்படுவானோ, அவ்வாறே கிறிஸ்தவனும் பரிசுத்தமாகுதல் என்னும் மலையைப் பிரயாசத்தோடு ஏறி பரிசுத்தத்தைச் சேர்ந்தபின், தான் இன்னும் மேலே

போய் ஏறவேண்டியதில்லை என்றும், சுகமாய் சமபூமிமேல் நடந்து போகலாம் என்றும் யோசிக்கப்படாது. இதற்குப் பதிலாக சரியான மற்றொரு உபமானத்தை இந்த ரீதியாய்ச் சொல்லலாம். முன் நாட்டியபடி பரிசுத்தத்தோடு சேரவேண்டுமென்றிருக்கிற கிறிஸ்தவன், பிரயாணி என்று சொல்வது நிஜமே. வழிப்போக்கன் மேகங்களை அளாவிக்கொண்டிருக்கிற மிக உன்னதமான பர்வதத்தை ஏறிப் போகவேண்டியதாயிருக்கிறது. அவன் ஏறிப்போகும்போது வழியில் உறைபனியாலும், மழையினாலும், மந்தாரத்தினாலும் மூடப்பட்டு, சூரியகாந்தியும் பர்வதப்பிரதிபிம்பமும் அங்கங்கேமாத்திரம் கொஞ்சம் கொஞ்சமாய்த் தோன்றுவதினால்தான் வழிதப்பிப் போயிருக்கலாம் என்று அதைரியங்கொள்வான். ஆயினும், இவ்விதமாகவே வெகு பிரயாசப்பட்டுக்கொண்டு ஏறி ஏறி வந்து, கடைசியில் மேகமண்டலத்தைத் தாண்டிவருவான். தக்ஷணமே எல்லாம் மாறிப்போனது போல் காணும். நீல ஆகாயத்தில் தீட்சணியமான சூரியன் உதிக்கும். எந்த மேகங்களினால் இவனுக்கு குளிர், உறைபனி, இருள் முதலான தொந்தரவுகள் உண்டாயிருந்தனவோ, அப்படிப்பட்ட மேகங்களெல்லாம் தன் கண்ணுக்குக் கீழ்பாகத்தில் விஸ்தாரமாய்ப் பரம்பி விசாலித்து அமர்ந்த சமுத்திரம்போல் தோன்றும். பர்வதத்தின் உச்சி ஆகாயத்திலே அந்தரத்தில் தெளிவாய்க் காணப்படும். வழிப்போக்கன் போகவேண்டிய வழி இன்னும் தொலையவில்லை. இன்னும் ஏறிப்போகவேண்டியது இருந்தே இருக்கிறது. ஆனால் அதிலிருந்து அந்தப்பக்கம் அந்தகாரம் முதலானவைகளினால் வரும் தொந்திரவுகளில்லாததினால் சுலபமாய் ஏறிப்போய்ச் சேரலாம். பரிசுத்தத்தை யடைவது என்றால், வழியில் போகிற நம்மை இதுவரைக்கும் தைரியப்படுத்தி பாவ அஞ்ஞான அநுமான பயங்கள் என்கிற மந்தாரங்களைத் தாண்டிப்போவதேயொழிய மலையுச்சியில் சேருவதல்ல. பரிசுத்தமானது மேல்ஜீவன், அதாவது நிலையாக நின்று விருத்தியாகிற ஜீவன் என்று அறிந்துகொள்ளவேண்டும். பரிசுத்தத்தை அடைந்தபோது இருதயத்தில் பூரண பிரபலமாயிருந்த அன்பு வரவர பலங்கொண்டுவருகிறது. அறிவும் விவேகமும் மிஞ்சிக்கொண்டே இருக்கும். ஆவியில் வியாபித்திருக்கிற ஒவ்வொரு சக்தியும் விருத்தியாகிறது. ஆத்மகுணம் மகிமைமேல் மகிமையை யடைந்து மாறுபடும் (II கொரி. $3^{18}$). பரிசுத்தத்தை அடைந்ததற்குமேல் பரிசுத்தமாகுதல் என்னும் வேலை நடந்துகொண்டே இருப்பதுமல்லாமல், இன்னும் சீக்கிரமாய் நடப்பதற்குச் சமயமுமுண்டு.

பூரண பரிசுத்தமாகுதல் என்பது எந்தவிதமான தடைகளுமில்லாமல் தன் வேலையை நடத்துகிறதேயாம். பாவம் என்கிற



பாசத்தினின்று விடுதலையடைந்து, தேவனுடைய கிருபையில் எப்போதும்போல அபிவிருத்தியடைந்து இருக்கலாம். மனுஷனுடைய சுபாவம் தன்னைச் சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பாய்ப் புதிதாக்கப்படும் வரைக்கும் இவ்வேலை எப்போதும் நிற்பதேயில்லை, நடந்துகொண்டேயிருக்கும் (கொலோ. $3^{10}$).

## ஏழாம் அதிகாரம்

### கிறிஸ்தவ பரிபூரணம்

1. பரிசுத்தமானது எவ்விதத்தில் பரிபூரணமல்ல என்பதை முதலில் தீர்க்காலோசித்துத் தெரிந்துகொண்டால், கடைசியில் அது எந்த அபிப்பிராயத்தில் பரிபூரணம் என்று சொல்லலாம் என்பது விவரமாய்த் தெரியவரும். பரிசுத்தத்தை சித்தி அல்லது பரிபூரணம் என்று சொல்லும்போது மனுஷ சுபாவம் இன்னும் உத்தம ஸ்திதிக்கு வரக்கூடாத அவ்வளவு கொடிய அவஸ்தையைச் சேர்ந்ததாகவும், அல்லது தேவனிடத்திலுள்ள குணங்களவ்வளவு பரிபூரணத்தை யடைந்ததாகவும் அருத்தப்படுத்தலாகாது. பரிபூரணத்தையடைந்த கிறிஸ்தவன் கிறிஸ்தவ அனுபவத்தை முழுவதுமாய் அடைந்தவனாகி கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத் தக்கதாக இருக்கவேண்டுமென்பது (எபே. $4^{11}$) அவசியமல்ல. கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவின் பிரமாணத்துக்குச் சரியான புருஷ பிராயத்தின் பரிபூரணத்தில் ஒரு குறைவும் இருப்பதில்லை. அந்தப் பரிபூரணம் நிறைவாயும் சர்வ சுகுணமுமுள்ளதாயும் ஒன்றிலும் குறைவுமில்லாததாயுமிருக்கிறது (யாக். $1^{4}$). கிறிஸ்தவ சித்தியாகிய பரிபூரணம் என்பது ஓர் விஷயத்தில் நிறைவுள்ளதாயிருக்கிறதே தவிர எல்லா விஷயங்களிலும் பூரணமுள்ளதாயில்லை. இது ஒன்றிலும் குறைவற்றதாயிருக்கிறது என்று சொல்லக்கூடாது. இந்த ஸ்திதிக்கு வந்தவர்களுக்கு ஞானம் பூரணமாயில்லை; பொல்லாத சோதனைகள் நின்றுபோகவில்லை; தப்பு செய்வதற்கு ஆஸ்பதமிருக்கிறது. சரீர மனக் குறைவுகள் தடைபடுத்திக்கொண்டிருக்கின்றன. பரிபூரணத்தை யடைந்த கிறிஸ்தவன் அஞ்ஞானத்தினின்றும், மறதியிலிருந்தும், சாமர்த்தியமின்மையிலிருந்தும், தப்பான அபிப்பிராயத்திலிருந்தும், தான் செய்யத்தகாததைச் செய்வதிலிருந்தும், செய்யவேண்டியதை விட்டுவிடுவதிலிருந்தும் நீங்கியிருந்தாலும், கிறிஸ்தவ பரிபூரணத்துக்கு உட்பட்டவனென்று நினைக்கப்படாது. இந்தவிதமான தோஷங்கள் கிறிஸ்தவர்களில் சிலரிடத்தில் அதிகமாயும், சிலரிடத்தில் கொஞ்சமாயும் இருக்கின்றன. சில தோஷங்கள் மரணகால பரியந்தம் அவர்களைப் பற்றிக்கொண்டே இருக்

கும். இன்னும் சில தோஷங்கள் காலக்கிரமத்தில் நிதானமாய்த் தணிந்துபோகும். இப்படியிருந்தாலும் இவைகளினால் கிறிஸ்தவ பரிபூரணத்துக்குக் குறைவுண்டாகிறதில்லை. பரிசுத்தத்தைக் கிறிஸ்தவ சித்தியாகிய பரிபூரணம் என்று சொல்லும்போது, இவ்வித தோஷங்களினாலே அது சம்பூரணமாகத் தொலைந்துபோயிற்றென்பது நமது அபிப்பிராயமல்ல.

2. இம்மட்டும் கூறிய விஷயங்கள் சரியாயிருந்தாலும் பரிசுத்தம் என்பதைப் பரிபூரணபதவி என்று ஓர்விதமாக அருத்தப்படுத்தலாம். இந்த சித்தி கிறிஸ்தவப் பரிபூரணம். மனுஷர் பாவ விமோசனத்தையும் தம்முடைய மாதிரியையும் பெற்றுக்கொள்ளும்படியாக தேவன் இரட்சண்ய உபாயத்தை ஏற்படுத்தியிருக்கிறார். இந்த இரட்சண்ய உபாயம் கிறிஸ்துமதத்தின் போதனைகளில் விவரமாய்க் கண்டிருக்கிறது. கிறிஸ்துமார்க்கத்தின் இந்த இரட்சண்ய உபாயத்தை அங்கிகரித்து அநுசரிக்கிறவன் கிறிஸ்தவன்; இதைச் சம்பூரணமாய் அங்கிகரித்து கைக்கொண்டுவருகிறவன் சம்பூரண கிறிஸ்தவன்; அதாவது கிறிஸ்தவ பரிபூரணத்தை யடைந்தவன். இரட்சண்ய உபாயம் என்கிற கிறிஸ்து மார்க்கத்தின் கற்பனைகளிலிருக்கிற கட்டளைகளுக்கும் வாக்குத்தத்தங்களுக்கும் அனுசாரமாய் எந்தச் சின்ன பாகத்தையும் விடாமல் நடந்துகொள்வதே கிறிஸ்தவ சித்தியென்னும் பரிபூரணம். கிறிஸ்தவர்கள் சாதாரணமாய் பரிசுத்தாவியின் சக்தியைக் கொஞ்சமாத்திரம் பெற்றுக்கொள்ளுகிறார்களேயொழிய, தங்கள் சித்தத்தைச் சம்பூரணமாய் அவருடைய ஆதீனத்துக்கு ஒப்புக்கொடுக்கிறதில்லை. இப்படிப்பட்டவர்கள் கிறிஸ்தவ சித்தியென்னும் பரிபூரணமடைந்தவர்களல்ல. யார் தங்கள் அந்தரங்கத்தில் பரிசுத்தாவியானவருடைய வேலை தடையின்றி நடப்பதற்கும் பகிரங்கத்திலும் அவருடைய இஷ்டப்படி இருப்பதற்கும் ஒப்புக்கொள்ளுகிறார்களோ அவர்களே கிறிஸ்தவ பரிபூரணமடைந்தவர்கள். பரிசுத்தம் என்னும் ஸ்திதியில் ஆத்ம பிரதிஷ்டை குறைவில்லாமலும், தேவபக்தி அதிகமதிகமாயும், சித்தம் கபடமின்றி சுவாமிக்கு ஒப்புவிக்கப்பட்டதாயும், விசுவாசம் அசைவற்றதாயும் இருப்பதினாலே இது சித்தப்பதவியே என்று எண்ணிக்கொள்ளலாம். பக்தனில் இந்த சற்குணங்கள் மேலே கூறின ஸ்திதிக்கு வராமல் குறையுள்ளவைகளாயிருக்கும் வரைக்கும் அவன் கிறிஸ்தவ சித்தியை யடைந்தவனல்ல. அவன் கிறிஸ்துவுக்குப் பூரண மனதோடு சேஷனாயிருப்பதினாலே கிறிஸ்தவ பரிபூரணத்தைப் பெறுவானே தவிர, தோஷமொன்றுமில்லாத கிறிஸ்துசுவாமியின் மாதிரியைச் சம்பூரணமாய் அடைவதினால் ஆவதில்லை. பவுல் தன் விஷயமாய்ச் சொல்லி



யிருக்கிறதாவது: நான் அழிவில்லாத கிரீடத்தைப் பெற்றுக்கொண்டவனென்று என்னை இதுவரைக்கும் எண்ணிக்கொள்ளவில்லை. ஆயினும் என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறவனாய் அந்தக் கிரீடத்தைப் பெறும்படிக்கு நிச்சயத்தோடு ஓடிக்கொண்டிருக்கிறேன் (1 கொரி. 9[25]). கிறிஸ்தவ பரிபூரணத்தை யடைந்தவனும் கூட இதே நிலைமையில் இருக்கிறான்; சம்பூரணமாய்ப் பெற்றுக்கொண்டவனல்ல; பெறுவதற்கு நின்றுவிடாமல் ஓடுகிறவனாயிருக்கிறான்.

(இன்னும் வரும்.)

## Why do we preach Christianity?

### கிறிஸ்துமார்க்கம் பிரசங்கிக்கப்படுவதேன்?

(தொடர்ச்சி)

(4) கிறிஸ்துமார்க்கம் ஒன்றே கடவுள் மனுஷனைத் தேடிவந்த மார்க்கம்.

இவ்வுலகத்தில் ஏற்பட்டிருக்கும் மதங்களெல்லாம் மனிதன் கடவுளைக் கண்டடையும் பொருட்டுச் செய்த உபாயங்கள். பற்பல அனுஷ்டானங்களாலும் மந்திர தந்திரங்களாலும் மனுஷன் கடவுளைக் கண்டடையவும் அவருடைய இரட்சிப்பையடையவும் பிரயத்தனப்பட்டும் கூடாமற்போயிற்று. அப்படி 'பிரயாசப்பட்ட பக்தர்கள், தபோமுனிவர் எல்லாரும் ஏகவாக்காய்த் தங்களால் கூடாமற்போயிற்றென்று சாட்சி பகர்ந்திருக்கிறார்கள். அவர்களிலொருவராகிய தாயுமானசுவாமிகள் 'ஏதுந்தெரியா தெனைமறைத்த வல்லிருளை—நாதா நீ நீக்கவொரு ஞானவிளக் கில்லையோ' வென்று புலம்பினார். கடவுள் தம்மை வெளிப்படுத்தாவிட்டால் யார் அவரைத் தரிசிக்கக்கூடும்? அவர் நம்மை இரட்சிக்காவிட்டால் நாம் எப்படி இரட்சிப்பையடைவோம்? ஆனால் கிறிஸ்துமார்க்கமோ கடவுள் மனுஷனைத் தேடிவந்து தம்மைத்தாமே வெளிப்படுத்தினார் என்றும் இரட்சிப்பை உண்டுபண்ணினார் என்றும் போதிக்கிறது. 'இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்தார்.' 'பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார்.' 'நானே நல்ல மேய்ப்பன் நல்ல மேய்ப்பன், ஆடுகளுக்காக தன் ஜீவனைக் கொடுக்கிறான்.' 'நானே வானத்திலிருந்திறங்கின ஜீவ அப்பம்.' இப்படி அன்பு நிறைந்த கடவுள்தாமே மனிதனைத் தேடி இரட்சிக்க வந்தார் என்று சொல்வது நமக்கு எவ்வளவு சந்தோஷத்தையும் நம்பிக்கையையும் கொடுக்கிறது. மரித்தோரிலிருந்து ஜீவன் உண்டா

ணதுபோலிருக்கிறதல்லவா? தேவன் தம்மை விசுவாசிக்கிறவன் எவனே அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை யடையும்படி அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார் என்கிற நற்செய்தியினால் ஆறுதலும் சந்தோஷமுமடையாத இருதயம் உண்டோ? இதை சர்வ ஜனங்களுக்கும் சொல்லாமலிருக்கக்கூடுமோ?

இரட்சிப்பை யளிக்கும்படி மாத்திரமல்ல, கடவுளையே நமக்கு வெளிப்படுத்தவும் இயேசுகிறிஸ்து வந்தார். அவரைக்குறித்து ஒரு பக்தன் 'ஆதியிலே வார்த்தை யிருந்தது. அந்த வார்த்தை தேவனாயிருந்தது. அந்த வார்த்தை மாம்சமாகி நமக்குள்ளே வாசம்பண்ணினார்' என்றும் 'தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை. பிதாவின் மடியிலிருக்கிற ஒரே பேறான குமாரனே அவரை வெளிப்படுத்தினார்' என்றும் சொல்லுகிறான். இதற்கிசைய அவருக்கு 'இம்மானுவேல்' (தேவன் நம்மோடிருக்கிறார்) என்னும் நாமம் தரிப்பிக்கப்பட்டது. அவரும் 'என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்' என்று தெளிவாய் போதித்தார். இவ்வுலகத்தில் தோன்றின எல்லா மனிதரிலும் அவர் மகா சிறந்தவர். பாவமறியாத பரிசுத்தராய், சர்வ வல்லமையும் சர்வ ஞானமும் பொருந்தினவராய், நன்மை செய்கிறவராய் சுற்றித்திரிந்து ஒருவரும் ஒருக்காலும் பேசாத வண்ணம் பேசி உலகத்தில் எக்காலத்திலும் பிரகாசிக்கிற ஜெகஜோதியாகத் தோன்றினாரே. ஒரு பக்தன் எழுதுகிறதுபோல, தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப் பிரகாரமாக அவருக்குள் வாசமாயிருந்ததே. கடவுளின் தன்மை, இலட்சணம் முதலியவைகளை இதுவரையும் ஒருவரும் வெளிப்படுத்தாத வண்ணம் தம் ஜீவியத்தில் வெளிப்படுத்தினாரே. இவரைப்பற்றி மற்றவர்களுக்குப் பிரசங்கியாமலிருப்பது பாவமாகுமல்லவா? மெய்யாகவே இயேசுகிறிஸ்து ஒப்பற்ற ஒரு ஆள். அவரே கடவுளை இவ்வுலகத்துக்கு வெளிப்படுத்தினவர். அவர் மூலமாகவே இவ்வுலகத்துக்கு இரட்சிப்பு வந்தது. இப்படிப்பட்ட அதிசய வெளிப்படுத்தல் கிறிஸ்துமார்க்கத்திலிருக்க நாம் அதை மூடிவைக்கலாமா? இதை உலகமெங்கும் பிரசித்தப்படுத்துவது நியாயந்தானே.

(5) கிறிஸ்துமார்க்கம் ஆச்சரியமான வல்லமையுடையது.

கிறிஸ்துமார்க்கத்தின் வளர்ச்சி ஒரு ஆச்சரியம். கடுகுவிதையளவு தோன்றி உலகமெங்கும் வியாபித்துச் செல்லுகின்றது. உலக இரட்சகரை உண்மையாக விசுவாசித்து ஏற்றுக்கொண்டவர்களுக்குள் உண்டாகிற மாறுதல் மகா ஆச்சரியம். இந்த மார்க்கம் பிரவேசிக்கிற தேசமோ, இராஜ்யமோ, தீவுகளோ எங்கேயானாலும் சரி, அது சகலத்தையும் புதிதாக்கிப் பரிசுத்தம்பண்ணுகிறது. எந்த ஜனங்களுக்கானாலும் சரி, மனிதரைப் பிடித்துத் தின்கிற காட்டுமிராண்டிகளோ, நாகரீகமற்ற காப்பிரிகளோ, தீண்டாத பஞ்சமர்களோ எவர்களானாலும் சரி, விசுவாசிக்கிறவர்களுக்கு அது மெய்யாகவே தேவபெலனாய் விளங்கிவருகிறது. இதை யனுசரிக்கிற ஜனங்களுடைய பழைய நடத்தை, துர்ச்சுபாவம், கெட்ட வழக்கபழக்கங்கள் யாவும் மாறி படிப்படியாய் நன்னடக்கையும் சன்மார்க்கமும் உற்பத்தியாகின்றன. கிறிஸ்துமார்க்க சரித்திரமும், கிறிஸ்தவ பக்தரின் ஜீவியமும் இவைகளை எப்போதும் ரூபகாரப்படுத்துகின்றன. சர்வ ஜனங்களுக்கும் ஜாதியாருக்கும் பிரகாசிக்கிற ஒளியாகவும் சர்வத்தையும் புதிதாக்கும் வல்லமையுடையதாயும் விளங்கிநிற்கிற இம்மார்க்கம் சாமான்யமானதல்ல. இந்த சக்திக்குக் காரணமென்ன? இது 2000 வருஷக் காலமாய் கொஞ்சம் கொஞ்சமாக உலகத்தை மூடிக்கொள்ளுகிறதே. இதைத் தடுக்க எத்தனையோ பிரயத்தனங்கள் செய்தும் ஒருவராலும் கூடாமலிருக்கிறதே. இதன் இரகசியம் என்னவென்று கவனியாமலிருப்பது நியாயமல்ல. ஞானமுள்ளவர்கள் இதைச் சிந்திப்பது தகுதி. இந்த இரகசிய வல்லமையைக் குறித்து சாட்சிபகராமலிருக்கக் கூடுமோ?



(6) கிறிஸ்துமார்க்கம் ஒன்றே மறுமையைக்குறித்து தெளிவாய் போதிக்கிறது.

இந்த ஜீவியத்திற்குப்பின் மனிதன் அடையப்போகும் நிலைமையைக்குறித்து மதங்களெல்லாம் மௌனம் சாதிக்கின்றன. சிலர் தங்கள் தத்துவஞானத்தினால் பற்பல யுக்திகளை உண்டுபண்ணினாலும் அவைகள் நம் புத்திக்கும் அனுபோகத்துக்கும் ஒவ்வவில்லை. கிறிஸ்துமார்க்கமோ சரீர உயிர்த்தெழுதலும் நித்தியஜீவனும் உண்டென்று போதிக்கின்றன. இயேசுகிறிஸ்துவானவர் மரித்து உயிரோடெழுந்திருக்கிறபடியினால் அவருக்குள் மரிக்கிறவர்கள் உயிர்ப்பிக்கப்படுவார்கள் என்று நம்பத்தகும். தவிர, மெய்யான கிறிஸ்தவ பக்தனுக்கு மரணமானது ஒரு நித்திரையென்றும் இளைப்பாறுதலென்றும் சொல்லப்படுகிறது. 'சாவு எனக்கு ஆதாயம்' என்று கிறிஸ்துவைத் தனக்கு ஜீவனாகக்கொண்ட பக்தனைத்தவிர வேறே யார் சொல்லக் கூடும்? 'நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன், இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது' என்று இவ்வளவு நிச்சயமும் நம்பிக்கையும் யாருக்குக் கிடைக்கும்? கிறிஸ்தவ பக்தனுக்கல்லவா? இவ்வுலகத்தில் மனுஷன் எவ்வளவு சுகத்தையும் சம்பத்தையும் அனுபவித்தாலும் மரணவேளையில் சமாதானமும் நம்பிக்கையும் இல்லாவிட்டால் என்ன பரிதாபம்!

மனுஷன் இவ்வுலகமுழுவதையும் ஆதாயப்படுத்திக்கொண்டாலும் தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபமென்ன? ஆகையால் இவ்விஷயத்தையும் கிறிஸ்துமார்க்கம் வெகு தெளிவாயும் திட்டமாயும் போதித்திருக்க, அது நம் புத்திக்கும் அனுபோகத்துக்கும் நியாயமாய்க் காணப்பட, இப்படிப்பட்ட சத்தியங்களை மற்றவர்களுக்கும் போதியாமலிருப்பது எப்படி?

மேற்சொல்லிய விஷயங்களைக் கேட்டு உணர்ந்தவர்கள் கிறிஸ்துமார்க்கத்தைத் தாங்களே போதிக்கிறதுமல்லாமல் மற்றவர்களையும் போதிக்கச் சொல்லுவார்கள். கிறிஸ்துமார்க்கமே தேவன் ஏற்படுத்தியதும் வெளிப்படுத்தியதுமான மார்க்கம். இதை ஏற்றுக்கொள்ளுகிறவனும் கைக்கொள்ளுகிறவனும் பாக்கியவான்.

## A Sermon

**By the Rev. N. Devasahayam, B.A.**

### ஏசா. $9^{6}$

(தொடர்ச்சி)

### II. அவர் செய்கிற அதிசயமான வேலை

அவருக்கு இருக்கிற திருநாமங்களால் இது நமக்குத் தெரிவிக்கப்படுகிறது. நாமம் என்றால் பெயர். அவருடைய பெயர்களுக்கும் நம்முடைய பெயர்களுக்கும் பெரிய வித்தியாசம் உண்டு. நம் குணங்களையும் இலக்ஷணங்களையும் நம் பெயர்கள் தெரிவிக்கிறதில்லை. ஆகையால், நம் பெயர்கள் வெறும் குறியீடுகள் மாத்திரமே தவிர வேறல்ல. முழுவதும் மாசுள்ளவனை மாசிலாமணி என்றும், குரூபியை அழகுசாமி என்றும் சொன்னால் பொருந்துமா? பொருர்தாது. ஆகவே நம் பெயர்கள் பொருத்தமில்லாத வெறும் குறியீடுகள். நம் இரட்சகருக்கு இருக்கிற பெயர்கள் அப்படியல்ல. அவைகள் பொருத்தமுள்ள பெயர்கள். ஏன்? அவருக்கு இருக்கிற இலக்ஷணங்களையும், இருக்கிற வல்லமைகளையும் அவைகள் உள்ளபடி தெரிவிக்கிறபடியினாலே, அவர் நமக்கு எப்படி எப்படி உதவுவார் என்பது அவருடைய திருநாமங்களால் தெரிவிக்கப்படுகிறது.

1. அதிசயமான ஆலோசனைக்காரர். எந்த வேலையையும் ஆலோசித்தே செய்யவேண்டும். ஆலோசிக்காமல் செய்கிற வேலை இடர்ப்படும். 'எண்ணித் துணிக கருமம்' என்பது முதுமொழி. நம் இரட்சகர் செய்வதற்கு வந்த வேலைக்கு மிகப்பெரிய ஆலோசனை வேண்



டும். அது என்ன வேலை தெரியுமா? கெட்டவர்களை நல்லவர்கள் ஆக்குகிற வேலை; தேவவிரோதிகளை தேவநேசர் ஆக்குகிறவேலை; பிசாசுக்கு அடிமைப்பட்டவர்களை விடுதலைசெய்கிற வேலை; செத்தவர்களை உயிர்ப்பிக்கிற வேலை. கரும்பு வேம்பாய் மாறினால், அதைப் பழையபடி கரும்பாக்க நம்மால் ஆகுமா? ஒரு அற்ப ஜெந்து செத்துப்போனால் அதை உயிர்ப்பிக்க நமக்கு முடியுமா? இப்பேர்ப்பட்ட வேலை தேவன் மாத்திரமே செய்யமுடியும். கெட்டுப்போன கரும்பைத் தேவன் பூர்வ கரும்புத்தன்மைக்குக் கொண்டுவருகிறது அவருக்கு எளிதுதான். ஆனால், கெட்டுப்போன மனுஷனை நல்ல மனுஷன் ஆக்குகிறது அவருக்கும் கஷ்டமான வேலை. இதை மறக்கலாகாது. ஏன் கஷ்டம்? மனுஷனுக்குத் தன் இஷ்டப்போல் செய்யச் சுயாதீனம் இருக்கிறது. நல்லவன் ஆக அவனுக்கு இஷ்டமில்லாவிட்டால் தேவன் அவனைக் கட்டாயம்பண்ணி நல்லவனாக்குகிறது சரியல்ல. அப்படிச் செய்வாரானால், அவர் ஆலோசனையில்லாமல், ஒருவிசை சுயாதீனம் கொடுக்கிறவரும் இன்னொருவிசை ஆலோசனைபண்ணி முன் கொடுத்த சுயாதீனத்தைப் பிடுங்குகிறவரும் என்று ஏற்படும். தவிர, பாவத்துள் பலநாள் பிழைத்துப் பழகினவன் பாவத்திலே மரித்தவனாகிறான். அவனுக்குப் பாவமே பிரியமாகிறது. அதை வெறுக்கவும் விட்டுவிடவும் அவனுக்கு வல்லமையில்லை (எபேசி. $2^{1}$) பாவத்திலே செத்தவனை உயிர்ப்பித்துப் பரிசுத்தனாக்குகிறதற்கு எப்பேர்ப்பட்ட ஆலோசனையும் அந்த ஆலோசனையை நிறைவேற்றுகிற எப்பேர்ப்பட்ட வல்லமையும் வேண்டும்! மேலும், நம் குடியிருப்பாகிய பூமி பாவத்தினால் சபிக்கப்பட்டு, பஞ்சம், பாழ், பூமியதிர்தல், அக்கினிச் சேதம், வெள்ளச்சேதம், இப்பேர்ப்பட்ட தீமைகளை அநுபவிக்கிறது. அதின் பெரிய வியாகுலமான நிலைமையைப் பார். தான் பெற்ற பிள்ளைகளைத் தானே தின்கிறதுபோல், அது தன் பிள்ளைகளையெல்லாம் தின்கிற பிணந்தின்னிப் பூச்சியாய் இருக்கிறது. பூமியின் சாபத்தை நீக்கி, அதை சதாஜீவிகளான பரிசுத்தரின் வாசஸ்தானம் ஆக்கவேண்டும். இதற்கும் எப்பேர்ப்பட்ட ஆலோசனை வேண்டும்! இதற்கு நமக்கு தேவன் கொடுத்த திருப்பாலகன் ஒருவரே சமர்த்தர். அவர் நம் பூமியில் பலபல தேசங்களில் பல்லாயிரம்பேரை நம் கண் பார்க்க நல்லவர்களாக மாற்றிவருகிறார். இப்படியே அவர் முன்னும் செய்தார், இனி யுகமுடிவுவரையும் செய்வார். பாவத்தில் செத்துக்கிடக்கிறவர்களை உயிர்ப்பித்து நல்லவர்களாக மாற்றுகிற அவருடைய திருவல்லமையை மிஷியோன் சரித்திரத்தில் விஸ்தாரமாய்ப் பார்க்கலாம். நீயும் எப்பேர்ப்பட்ட தீமையை உன்னுள் பார்த்தாலும் அதையும் அவர் நீக்கவல்லவர்

என்று நம்பி அவருக்கு உன்னைக் கொடுத்துப் பார். நீ நிச்சயமாகவே மாறி நல்லவன் ஆவாய். ஆகிலும், பொல்லாதவனை நல்லவனாக மாற்றுகிற வல்லமை உன்னிலே வேலைசெய்கிற விதத்தை நீ அறிய எவ்வளவு பிரயாசப்பட்டாலும் நீ அதை அறியமாட்டாய். அது தேவ ஆலோசனையின் அதிசயம், உனக்கு விளங்காத இரகசியம். சில வருஷங்களுக்கு முன்னே உவேல்ஸ் நாட்டில் பெரிய உயிர்ப்பிப்பு நடைபெற்றது. ஏறத்தாழ இரண்டு வருஷக்காலம் போலீஸ், மேஸ்திரேட்டு, இவ்வகைக் கச்சேரிகளில் வேலை இல்லாமற்போயிற்று. ஜெயிலுக்குப் போகிறவர்கள் இல்லை. பல தேசங்களிலிருந்து இதென்ன அதிசயம் என்று படிக்க வந்தவர்கள் அந்த அதிசயத்தின் இரகசியத்தை அறியாமலே திரும்பினார்கள். அவர் நாமம் அதிசயமான ஆலோசனைக்காரர்.

2. தேவனாகிய வீரர். வீரன் என்ற பெயர் கேட்டதும் ஒரு சேனையைப்பற்றிய நினைவு வரும். சேனையைப்பற்றிய நினைவு வந்ததும் எதிரிப்படையைப்பற்றிய நினைவும் இரண்டு படைக்கும் நடக்கிற யுத்தமும் நம் நினைவில் வரும். நம் இரட்சகராகிய பாலகன் ஒரு படைக்குத் தலைவர். அந்தப் படை ஒருநாளும் தோற்காது. அவர் தோற்காவீரராகிய சேனைத்தலைவர். எதிரிப்படைக்குத் தலைவன் யார்? பிசாசு. உலகத்தில் இச்சைக்கு இரைகொடுத்துப் பிழைக்கிறவர்கள் எல்லாரும் அவன் படையைச் சேர்ந்தவர்கள். ஆண்டவருடைய படையில் ஆடுகளும் ஆட்டுக்குட்டிகளும் இருக்கின்றன. பிசாசின் படையில் ஓநாய்கள் இருக்கின்றன. ஆடுகளின் தலைவர் தோற்பார், ஓநாய்களின் தலைவன் கெலிப்பான் என்பது யாவருக்கும் லேசாய் மனதில் வரும். ஓநாய்ப்படையில் இருக்கிறவர்கள் எல்லாரும் அப்படித்தான் நினைக்கிறார்கள்.

(இன்னும் வரும்.)

C. L. S. PRESS, MADRAS—1917

No. 129 பெப்ருவரி 1917

# வேதியர் விளக்கு

## Suggestions concerning our Magazine

MR. SHRIMPTON, having gone on furlough, has handed over the magazine to me. We all owe him much for the labour he has freely given for some years past, and wish him a safe journey and a happy furlough. Now I who am new to this work want help and co-operation in maintaining and if possible increasing the usefulness of our little monthly.

It seems to me that the man we most want to help is the lonely village worker. He has his Tamil Bible and three or four other books, but nothing else of literature to enlarge his mind and strengthen his faith. The village sabai, mainly illiterate, depends upon him for spiritual food and guidance in all life's affairs. The heaviness of real heathenism is in the mental air he daily breathes. Humanly speaking, there is everything to depress him and nothing to encourage, yet he is the man on whom all our work depends. Fortunately God's Spirit alters the situation, secretly pouring oil on the fire which so many influences are trying to quench. But it is our privilege to act as means which the Spirit can use.

How can we help this lonely village worker? Suggestions will be heartily welcome. My own ideas at present are somewhat as follows:

1. Of course anything we can do to help him to understand his Bible better will be useful. Exposition of passages (not only of texts for sermons), explanations of difficult verses, paraphrases in common Tamil, Bible study notes for daily reading—all of this that we can do will be helpful.

2. Similarly the village worker, like all of us, needs stimulus and guidance in the life of prayer. Lives of great saints, famous books on the devotional life, modern studies of the meaning and power of prayer, to make these or parts of them accessible to the village worker would surely be a good thing to do.

3. We ought to try to help the worker in his task of instructing village congregations. Especially in mass-movement areas, this task requires the constant co-operation of all. What kind of notes would best help the instructor? If many missions are using the Sunday School Union subjects for Sunday services, would it be well for this magazine to supply some 'Notes on the Lessons,' or is this sufficiently done already?

If we can get some Tamil articles on different forms of Social Service in villages, this too would help to strengthen our work on a side where at present it is often weak.

4. The village worker is living among Hindus, and frequently preaching to them. Every kind of help that we can supply for this work would surely be welcome. Outline addresses that have actually been tested in preaching, good quotations for use in preaching, notes of conversations with Hindus which have actually taken place, anything of this kind which any one of us possesses should be made available for the help of all.

On these and similar questions I invite suggestions from all who use this magazine. There are many questions which I should like to ask, but for lack of space I at present ask only three. First, for the purpose of our magazine, is it worth while to continue the English pages? Second, can we make our magazine suitable for use as a kind of text-book in connexion with the monthly meetings of workers which take place in most missions? Third, would it be advisable for us to reserve a page or two each month for women's work? Please write opinions to me. Like most of us I am busy enough not to be willing to take on this extra piece of work unless it is going to be useful, and it can only be useful if everyone helps.

G. E. PHILLIPS

## A Christmas Day-dream

We had sung, alas, how few of us in the church on Christmas Day, the praises of the babe new-born. Then we climbed a little hill, temple-crowned, flooded with the morning sun. Granite steps, worn smooth by bare feet of the pious, led up the hill side, and at the edge of the mounting path were shrines of the various attendants or connexions of Siva. Here was Pillaiyar, there was Bhairava, and curiously enough for a Saivite shrine, there was Hanumān too. But all led up to that Iswara temple above that faced the morning sun, and was the clearest land-mark for many a mile around. There on that hill we dreamed a day-dream of a hill similar, but Christian, a hill in the Tamil country with all the beauty God has given it, made into one great Christian symbol to witness in eloquent silence to multitudes. It too had its mounting steps, and its little subsidiary shrines. But while each shrine bore a name known and loved in our country, instead of an image it contained words, beautifully inscribed in Sanskrit and all our vernaculars, that every pilgrim might clearly read. There was a Devārām shrine, with words of burning devotion side by side with cries of unsatisfied longing, in stanzas such as this:

*நீதியால் வாழ மாட்டேனித்தலுந் தூயேனல்லேன்*
*ஓதியும் உணரமாட்டேனுன்னையுள் வைக்கமாட்டேன்,*
*சோதியே சுடரே யுன்றன்றூமலர்ப்பாதங் காண்பான்*
*ஆதியேயலைந்து போனேனதிகை வீரட்டனாரே.*

There was Paṭṭinattār's little chapel, telling of his abandonment of riches for the search for God. There was Tāyumānavar telling how one drop of divine grace dispersed the sins of his karma as one stone disperses a thousand crows, and in letters of gold were his words,

*அன்பைப் பெருக்கி எனதாருயிரைக் காக்கவந்த*
*இன்பப் பெருக்கே இறையே பராபரமே.*

Higher up the hill were Israel's prophets. There was Amos crying 'Seek the Lord, and ye shall live. Seek him that maketh the Pleiades and Orion, and turneth the deep darkness

into the morning, and maketh the day dark with night.' Micah was calling to the offering-laden pilgrims 'He hath shewed thee, O man, what is good; and what doth the Lord require of thee, but to do justly, and to love mercy, and to walk humbly with thy God?' There was Isaiah telling how the people that walked in darkness had seen a great light, for there should come a Governor called Wonderful, Counsellor, Mighty God, Everlasting Father, Prince of Peace. Not far from the summit were the words that told of one despised and rejected of men, 'But he was wounded for *our* transgressions, he was bruised for *our* iniquities: the chastisement of our peace was upon him; and with his stripes we are healed.'

But the path mounted ever upwards, and at the top was a Christian church, pure and simple and beautiful, yet rich in spiritual suggestion. Everything in it touched the mind and heart with holy thought and pure aspiration. But what marked this off from all other shrines was the figure of Christ that looked from every window, spoke from every carving, shone in every picture, Christ healing the sick, blessing little children, walking life's waters, Christ feeding the hungry, teaching the words of life, praying on the hill-top, agonizing in the Garden, Christ mocked and scourged by ruffians, dying on the Cross, risen and appearing to the disciples. One text ran round the building, linking all these pictures into one 'He that hath seen me hath seen the Father.' Such was the dream that came as we stood near Pillaiyar's ugly form. Shall we ever so clothe a hill-side with our faith? Meanwhile we can keep the vision in our hearts, and by love and prayer and service try to impart it to the hearts of others. For even could we embody our dream in stone, it would yet be but a symbol of our greater task, to lead our brethren in India from one upward aspiration to another, till all be crowned in Christ, and lo the hearts of India's children have become His living shrine. That building is rising even now, for not man, but God, has designed it.



# The preparation of Sermons

By the Rev. H. Spencer, B.A.

## பிரசங்க முறை

(தொடர்ச்சி)

முதலாவது, நாம் கிறிஸ்துவின் பிரதிநிதிகளாய் இருக்கிறோம். அரசன் ஒருவன் தன் இராஜ்யபாரத்துக்குச் சம்பந்தமான காரியங்களை இதர இராஜ்யத்தில் நடப்பிப்பதற்கு ஓர் அதிகாரியைத் தெரிந்துகொண்டு அனுப்பினால், அவ்வதிகாரி தான் இராஜப்பிரதிநிதி என்று எண்ணிக்கொள்ளுவான். மைசூர் சீமையில் மகாராஜனும், பட்டணத்தில் கவர்னர் என்னப்பட்டவரும், பெங்களூரில் ரெசிடென்ட் என்பவரும் இராஜப்பிரதிநிதிகளாய் இருக்கிறார்கள். இவர்கள் தங்கள் சொந்த அபிப்பிராயங்களைத் தெரிவிக்கவும் தங்கள் சொந்த காரியங்களை நடப்பிக்கவும் வந்தவர்களல்ல; தங்களை நியமித்து அனுப்பியிருக்கிற இராஜனின் அல்லது சர்க்காரின் அபிப்பிராயங்களை அனுசரித்து அவர்கள் காரியங்களை நிறைவேற்றுகிறார்களே யொழிய வேறெதையும் செய்கிறவர்களல்ல. பிரதிநிதிகள் பேசுவது இராஜன் தாமே பேசுவதுபோலாகிறது.

கிறிஸ்துவின் பிரதிநிதிகளாகிய நாம் இவ்வுலகத்தில் அவருடைய பிரதிநிதிகளாயிருக்கிறோம். அவருடைய எண்ணத்தை வார்த்தைகளால் தெரிவிக்கிறவர்கள் நாம்தான். வாய்வார்த்தைகளால் அல்ல, நடத்தையினாலும் ஆலோசனையினாலும் பாவனையினாலும் அவரையே பிரசித்தப்படுத்துகிறவர்களாயிருக்கவேண்டும். என்னைக் கண்டவன் என்னை அனுப்பின பிதாவாகிய தேவனைக்கண்டான் என்று கிறிஸ்து எப்படிச் சொன்னாரோ, அப்படியே நாம் நம்மைக் கண்டவர்கள் நம்மை அனுப்பியிருக்கிற கிறிஸ்துவைக் கண்டவர்கள் என்று சொல்வது அதிசயமா? கிறிஸ்து எப்படிப்பட்டவராயிருக்கிறாரோ, நாமும் அப்படிப்பட்டவர்களாக இந்த லோகத்திலிருக்கிறோம் (1 யோ. 4 [17]). நம்முடைய வார்த்தைகளும் நடத்தைகளும் குணங்களும் சத்திய வேதத்தின் பிரமாணத்துக்கு ஒவ்வாதிருக்கும்பட்சத்தில் நமக்கும் நமது உத்தியோகத்துக்கும் நம்முடைய நாதருக்கும் அவமானமாய் இருக்குமல்லவா?

கிறிஸ்துவின் வார்த்தையை எவ்வாறு அறிந்துகொள்ளவேண்டும் என்பதை இனிமேல் விசாரிக்கவேண்டும். இப்போது நாம் அவருடைய பிரதிநிதிகளாயிருப்பதினாலே அவரைத்தவிர வேறே எவரையும், வேறெந்த விஷயத்தையும் பிரசித்தப்படுத்தலாகாது என்று

நன்றாயறியவேண்டும். நம்முடைய வார்த்தைகளைக் கேட்கிற ஜனங்கள் கிறிஸ்து இப்பேர்ப்பட்டவர் என்று அறிந்துகொள்ளுகிறவர்களாயிருக்கிறார்கள். இவர்களைக்குறித்து நாம் தேவனுக்கு உத்தரவாதிகளாயிருக்கிறோம்.

தன் உத்தியோகத்தை உண்மையாய் நிறைவேற்றுகிற பிரதிநிதி தன்னையனுப்பின இராயனைப்போல அதிகாரமுள்ளவனாயிருக்கிறான். கிறிஸ்து தமது பிதாவாகிய தேவனுக்குப் பிரதிநிதியாக வந்து, என் சித்தத்தின்படியல்ல, என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்யவே நான் வானத்திலிருந்து இறங்கிவந்தேன் என்றார் (யோ. $6^{28}$). அவரைக் கண்டவர்கள், அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது (யோ. $1^{14}$). என்று சொன்னார்கள். அவருடைய வார்த்தைகளைக் கேட்டவர்கள் இவர் அதிகாரமுடையவராய் உபதேசிக்கிறார் என்று ஆச்சரியப்பட்டார்கள் (மத். $3^{28}$). அவருடைய மகிமையும் அதிகாரமும் அவரை அனுப்பின பிதாவினிடத்திலிருந்தே உண்டாயிற்று. அதேபிரகாரம் அவருடைய பிரதிநிதிகளாகிய நாம் நம்முடைய ஊழியத்தைச் செய்வதற்கு அவருடைய சக்தியும் அதிகாரமும் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறதென்று சந்தேகமின்றி நம்பவேண்டும். உங்களுடைய வார்த்தையைக் கேட்கிறவன் என் வார்த்தையைக் கேட்கிறவனாயிருக்கிறான். என்னை அசட்டைபண்ணுகிறவன் என்னை அனுப்பினவரை அசட்டைபண்ணுகிறான் (லூக். $10^{16}$) என்றார். இப்படியிருக்கிறபடியால் உற்சாகத்தோடும் தைரியத்தோடும் அவரைப் பிரசங்கிக்கிறவர்களாய் இருப்போமாக.

(இன்னும் வரும்.)

## The Story of a Hindu's Conversion

**By the Rev. P. Arulappen**

### எனையாண்டார் பராபரக்கண்ணி

வெண்பா

*உண்மை நெறிப்பயனை உற்றுய்வோர்க் கேயுணர்த்தும்*
*பண்ணவனின் சீரைப் பகர்ந்தனனால்—கண்ணோடே*
*வாசிக்கும் பேர்கள் வழிகண் டுனையென்றும்*
*நேசிக்கு மாறருளே நேர்.*



சுபாவ நிலைமை

1. பெற்றார் வயிற்றுதித்துப் பேர்கொண்டு நானிருந்த
   துற்றே யுரைக்கவுளத் தோர்வாய் பராபரனே.
2. சிட்டிகளிற் சீரியநற் சிருடலம் யானெடுத்தும்
   கிட்டியுனைச் சேருளமில் கேடன் பராபரனே.
3. நான்வளர என்னோடு நானென்னும் ஆணவமும்
   தான்வளர்ந்த தந்தோ தனியே பராபரனே.
4. என்னில் எழிலுடையார் என்னில் இயல்புடையார்
   மண்ணிலில ரென்ன மதித்தேன் பராபரனே.
5. வளர்ந்து வயதாகி வாலிபனான் ஆமளவும்
   கிளர்ந்தவுடற் கேண்மையினிற் கெட்டேன் பராபரனே.
6. உண்டுடுத்தல் ஆடல் உறங்கல் சுகித்தலலால்
   கண்டிலேன் வேறோர் கவலை பராபரனே.
7. ஆன்மாவோ பாவமோ ஆக்கினையோ ஆங்கதியோ
   காண்மாத் திரையும் கருதேன் பராபரனே.
8. பொய்களவு கட்காமம் பொன்மண் இவைமீது
   வைகாத லுக்கும்யான் வைப்பே பராபரனே.
9. நெஞ்சாலும் வாக்காலும் நேர்மறைவு சேட்டைகளை
   அஞ்சாது செய்த அவத்தன் பராபரனே.
10. நீதந்த சத்துவத்தை நேரத்தை யெல்லாம்பேய்க்
    கேதந்து விட்டேங்கி எய்த்தேன் பராபரனே.
11. பாடுபட்ட தெல்லாம் பாழுடலுக் கேயல்லால்
    வீடுபெற்று நின்னையுற வேண்டேன் பராபரனே.
12. நித்தநித்த நின்புவியில் நின்காற்று நின்னுணவை
    நத்தியுண்டு நன்றியிலா நாயேன் பராபரனே.
13. ஊரோட ஒத்தோடி ஊமைச் சிலைக்கெல்லாம்
    நேரோடித் தெண்டனிட்டு நின்றேன் பராபரனே.
14. தாய்முலைப் பாலகற்றித் தாவியொரு பொம்மையிடம்
    போய்முலைப்பா லுண்டசிறான் போன்றேன் பராபரனே.
15. காண்பவே மெய்யென்றும் காணாத பொய்யென்றும்
    வீண்பொழுது நான்போக்கி விட்டேன் பராபரனே.

16. சாவை மறந்துபவச் சாக்கடையின் நீராருந்தி
மூவா வுயிர்க்கு முயன்றேன் பராபரனே.

17. கண்தந்துங் காணுய்நீ காதளித்தும் கேளாயென்
றெண்தர் திரத்திலெனை வைத்தேன் பராபரனே.

### ஆராய்ச்சி

18. காசு பணமான கனதர்ம முன்னீதி
பேசவிடா வென்றன்னும் பேதை பராபரனே.

19. தீக்குருவி போலென்னைத் தேற்றச் சுயபுண்யப்
போக்குட் டலைமறைத்துப் புக்கேன் பராபரனே.

20. புண்ணிய யாத்திரையும் பூமேற் புனல்முழுக்கும்
பண்ணும் பவம்போக்கப் பாரேன் பராபரனே.

21. கானல்நீர் நீழல் கதைகனவு மாமுலகோர்க்
கானஉறு திப்பொருளை ஆய்ந்தேன் பராபரனே.

22. மெய்ப்பொருள் காட்டுமெனும் வேதபுரா ணங்களிலே
அப்பொருளைக் காணேன் அலுத்தேன் பராபரனே.

23. பாவசம் பந்தியலாப் பண்ணவனை நான்காணேன்
தேவரொலா மென்னனைய தேவர் பராபரனே.

24. நானே பிரமமென நவின்றசில நூல்களினால்
நானே சலித்து நலிந்தேன் பராபரனே.

25. மும்மூர்த்தி மாரிலொரு மூர்த்தியா னலுமெய்ச்
செம்மை வழிபோகத் தேறேன் பராபரனே.

26. உன்னையறி விக்கும் ஒருநூலை நான்தேடிச்
சென்னி வறண்டேன் சிறியேன் பராபரனே.

27. காவியமோ சாஸ்திரமோ கண்டபுரா ணத்திரளோ
யாவிலுமெய் ஆறுதல்தான் யாண்டோ பராபரனே.

28. பேருலக ஆழியிடை பித்துற்ற மாலுமிபோல்
சோறியா தேங்கிநான் நின்றேன் பராபரனே.

29. செத்தா லெனதுகதி தேறேனே யென்செய்கேன்
எத்தால் துணைபெறுவ தென்றேன் பராபரனே.

30. எண்ணாத வெண்ணமெலாம் எண்ணியெண்ணி யிவ்வாறு
புண்ணாக நெஞ்சம் புகைந்தேன் பராபரனே.

(இன்னும் வரும்.)



# A Sermon

**By the Rev. N. Devasahayam, B.A.**

## ஏசா. 9[6]

(தொடர்ச்சி)

யுத்தத்தின் நோக்கம் என்ன தெரியுமா? ஆடுகள் ஓநாய்ப்படையுள் புகுந்து ஓநாய்களை ஆடுகளாக மாற்றிவிடப் போர்செய்கின்றன. ஓநாய்கள் ஆடுகளை ஓநாய்களாக மாற்றப் போர்செய்கின்றன. மாற்ற முடியாவிட்டால், ஆட்டுப்படையை அழித்து நாசம்செய்யப் போரிடுகின்றன. கிறிஸ்து என்கிற பெயரைக் கேட்டதும் பிசாசின்பக்கத்தார் கோபித்துச் சீறி எழுந்து, பட்டயங்களாலும், அக்கினியாலும், துஷ்டமிருகங்களின் பற்களாலும், வேறு அநேக வகைகளாலும் கிறிஸ்தவர்களை உபாதித்துத் துன்பப்படுத்தி அவர்களைக் கிறிஸ்துவின் பக்கத்தைவிட்டுப் பிரித்துப் பிசாசின் பக்கத்தில் கொண்டு போவார்கள். பிசாசின் பக்கத்துக்குப் போகாதவர்களை அழித்து நாசமாக்குவார்கள். கிறிஸ்தவர்கள் தினந்தோறும் கொல்லப்படுகிறதினால் அவர்களுடைய தொகை குறைந்து வரவர அற்றுப்போகும் என்று நினைப்போம். ஆயினும் வாஸ்தவமாய் அப்படி நடக்கிறதில்லை. ஓநாய்ப்படையிலே கிறிஸ்துவின் ஆடாகக் கொல்லப்பட்ட ஒருவனிருந்தால், அவனுடைய சாட்சியைக் கேட்டும் கண்டும் பிரமித்து ஆடாய் மாறின பல ஓநாய்களைக் காணலாம். அதினால் ஆட்டுப்படை அதிகரித்து ஓநாய்ப்படை குறைந்தது. இதைக் கிறிஸ்துவுக்காகச் சாட்சிகளாய் மரித்தவர்களுடைய சரித்திரங்களில் பெருமிதமாய்க் காணலாம். மிஷன்வேலை எங்கெங்கே நடைபெறுகிறதோ அங்கங்கெல்லாம் ஓநாய்கள் கிறிஸ்துவின் ஆடுகளாய் மாறுகிற அதிசயத்தைப் பார்க்கலாம். கிறிஸ்து தேவனுகிய தோற்காவீரர். நம்முடைய பெலவீனத்திலே அவருடைய பெலன் வந்து நிறைந்து நம்மை வீரர்களாக்கும். அதினால் நாம் நம்மைக் கொளுத்துகிற எதிரிகளின் பட்டயத்திற்கும் பயப்படோம். மேலும், இரட்சகருடைய சந்தோஷம் வந்து நம் இருதயங்களை நிரப்பும். அதினால், மரிக்கும் போதும் ஜெபகீதம் பாடுவோம். திருச்சினாப்பள்ளிக்கடுத்த புத்தூரில் துளுமாயி என்கிற ஒரு விக்கிரகத்திற்கு வருஷம் ஒருமுறை திருவிழாக் கொண்டாடுவார்களாம். பூசாசாரி ஒரு வயதும் அங்கப்பழுதில்லாததுமாகிய எத்தனை ஆட்டுக்குட்டிகள் கொண்டுவந்தாலும் அவைகளுடைய இரத்தத்தையெல்லாம் குடித்துவிடுவானும். ஜனங்கள் காலில் சேதமுண்டாகாமல் தீ மிதிப்பார்களாம். இந்தச் சந்

கதியை ஒரு கிறிஸ்தவரிடம் ஜனங்கள் மெய்யாய்ச் சொல்லி, கிறிஸ்து மார்க்கத்தில் இந்தமாதிரிப் புதுமை நடக்கிறதில்லை என்று இழிவாய்ப் பேசினார்களாம். அவர் அது மெய்தான். நீங்கள் சொல்லுகிறமாதிரிப் புதுமை எங்களுக்குள் நடக்கவே நடக்காது. ஏன்? தேவன் ஆட்டுக்குட்டி இரத்தம் குடிக்கிறவரல்ல; அவருடைய திருவடியார் அக்கினி மிதிக்கிறது அவருக்கு அருவருப்பு. ஆயினும் அவர்கள் இதைவிடப் பெரிய புதுமை நடைபெறச் செய்வார்கள். எப்படியெனில், வானத்தை அளாவுகிற தீயை மூட்டி, அதிலே கிறிஸ்துமார்க்க விரோதிகள் கிறிஸ்தவர்களைச் சங்கிலியால் கட்டிச் சுட்டுச் சாம்பலாக்கும்போது, உயிர்போகுமளவும் கிறிஸ்துவின் திருவடியார் ஜெயகீதம் பாடுவார்கள். இது உலகெங்கும் நடந்திருக்கிற புதுமை. இனியும் அது உலகமுடிவுவரையும் நடைபெறும் என்றாராம். திருச்சபை சரித்திரத்திலும் மிஷன் சரித்திரங்களிலும் இது விஸ்தாரமாய்க் காணக்கிடைக்கும்.

3. நித்தியபிதா: அவருடைய இரண்டு சுபாவங்களில் ஒன்றுக்குக் காலவரையறை கிடையாது. 'அவர் மெய்யான தேவனிலிருந்து பிறந்த மெய்யான தேவன்'. தெய்வத்தன்மையின்படி பார்த்தால் அவருக்கு காலம் இல்லை, நித்தியம்மாத்திரம் உண்டு. அவர் திரிகாலங்களிலும் இருக்கிறவர். மனுஷத்தன்மையைப் பார்த்தால், 'அவர் கன்னிமரியாளிடத்தில் பிறந்த மெய்யான மனுஷன்'. அதின்படி அவருக்குக் காலம் உண்டு. நம் மனுஷஜாதியை தேவன் பலபல ஜாதிகளாக உண்டாக்கினதில்லை. எல்லா மனுஷருக்கும் ஒரே முதல் தகப்பன் ஆதாம். அவன் தன் வம்சத்தை நித்தியத்துக்குள் கொண்டுபோகாமல் அநித்தியத்துக்குள்ளும் அழிவுக்குள்ளும் கொண்டுபோனான். அப்படி அவனால் கேடு அடைந்த மனுக்குலத்தை இரட்சிக்கவந்த இந்த அதிசயமான இயேசுபாலகன் மனுக்குலம் முழுமையையும் தம்முள் ஒருசேர அடக்கிக்கொண்டு, அவர்களுடைய கேட்டின் முழுகி அதை அடியோடே தொலைத்து, அவர்களுக்குத் தம் தெய்வீகத்துக்குரிய சதா ஜீவனைக் கொடுக்கிறார். ஆதாம் நம் அநித்தியத்துக்குப் பிதாவாயிருக்கிறதுபோல, இவர் நம் நித்தியத்துக்குப் பிதாவாயிருக்கிறார். அவரை விசுவாசித்து நாம் அவரால் நித்தியஜீவனை அடைகிறோம். ஆகவே, அவர் நம் நித்தியத்துக்குப் பிதா என்று பார்த்த ஏசாயா தீர்க்கதரிசிக்கு வந்த ஆனந்தம் நமக்கும் வரத் தடை என்ன? இதனால், கிறிஸ்தவ விசுவாசமகிமை விளங்கும். உலகத்தார் மரணத்தையும் குழியையும் அழிவையும் மனுஷ ஜீவியத்தின் முடிவாகப் பார்த்துக் கலங்குவார்கள். கிறிஸ்தவர்கள் அதற்கப்பால் உயிர்த்தெழுதலையும் முழு மனுஷசுபாவத்திலும் மகிமை அடைதலை



யும் நித்தியஜீவனைச் சுதந்தரித்துச் சுகித்திருத்தலையும் வெட்டவெளிச்சமாய்க் காண்பார்கள். கண்டு ஆனந்தம் அடைவார்கள். ஏனெனில், விசுவாசம் இருள் அல்ல, வெளிச்சம். அந்த வெளிச்சத்திலேதான் சிமியோன் இயேசுபாலகனைக் கையில் ஏந்தினவுடனே 'ஆண்டவரே, உம்முடைய இரட்சிப்பை என் கண் கண்டது' என்று குதூகலத்துடன் கூவினார் (லூக். 2, 29).

மேலும், நித்தியபிதா என்ற பெயருள் இன்னொரு ஆறுதலும் இருக்கிறது. பிதா என்னும்போதே அன்பை நினைக்கிறோம். பிள்ளை தகப்பனிடத்திலே அன்பைத் தேடும். தகப்பனுடைய அன்பு பிள்ளைக்குவேண்டிய யாவையும் கொடுக்கும். மேலும், தகப்பன் தன் பிள்ளைக்குத் தீங்குசெய்யப் பார்க்கிறவர்களை அடக்கி தன் பிள்ளையைப் பாதுகாப்பான். இவ்வாறே இரட்சகராகிய இந்த தேவமனுஷபாலகன் விசுவாசத்தினால் தம் பிள்ளைகளாயிருக்கிற எல்லாரையும் அவர்கள் சத்துருக்கள் நடுவே புவிவாசிகளாய் இருக்கிறகாலத்தில் சகல தீங்குக்கும் காத்து, சகல நன்மைகளையும் பரிபூரணமாய் அவர்களுக்குக் கொடுப்பார்.

4. சமாதானராஜா: சமாதானம் என்று நினைக்கும்போதே அதற்கு முந்தின யுத்தத்தையும் சத்துருக்களையும் நினைக்கிறோம். கிறிஸ்தவர்களுடைய பூலோகவாசம் ஓயாத ஒரு போர். அவர்கள் பிசாசையும் அதின் ஆடம்பரத்தையும் விட்டுத் திருச்சபைக்குள் வந்ததுமுதல் மனுஷ கொலைபாதகனான பிசாசு அவர்களுடன் சகல காலமும் பலவிதமாய் யுத்தஞ்செய்கிறான். நயத்தினாலும் பயத்தினாலும் அவர்களை தன் இராச்சியத்திற்கு மறுபடியும் வரத்தூண்டுவான். ஜான்புனியன் இயற்றின இரக்ஷண்யயாத்திரிகத்தில் அப்பொல்லியோன் கிறிஸ்தவனுடன் செய்த கடும்போர் அதுதான். உலகத்தார் விரும்புகிறதை வெறுக்கிறவர்களும் அவர்கள் வெறுக்கிறதை விரும்புகிறவர்களுமாகிய கிறிஸ்தவர்களைத் தங்கள் கூட்டுறவில் சேர்த்துக்கொண்டு அவர்களுக்கு நன்மை செய்யமாட்டார்கள். லோத்துச் சோதோமில் குடியிருந்ததுபோல் கிறிஸ்தவர்கள் இவ்வுலகத்தில் குடியிருக்கிறார்கள். உலகத்துக்கும் அவர்களுக்கும் பொருத்தமேயில்லை. உலகம் அவர்களை எந்நாளும் பகைத்துத் துன்பப்படுத்தும். உலகத்திற்கும் பிசாசுக்கும் சிநேகிதன் உள்ளேயே இருக்கிறதினால், அவர்கள் ஓயாமல் தங்கள் பொல்லாத பழய சுபாவத்துடன் போர் செய்கிறார்கள். பழய கெட்டசுபாவத்திற்கு மாமிசம் என்று திருவேதம் பெயர் கூறுகிறது. கிறிஸ்தவர் தங்கள் மாமிசத்துடன் மரணபரியந்தம் போராடுகிற போராட்கள். பாக்கியமாய் மரிக்கும்வரையும் புவியில் அவர்களுடைய போர் முடியாது. பவுல் அப்போஸ்தலர்

'நல்ல போர் புரிந்தேன்' என்று தம் ஆயுளின் இறுதியில் கடவுகிறார். கிறிஸ்தவர்களுடைய போர் ஜீவியத்தை எபேசியர் 6, 10–20-ல் சவிஸ்தாரமாய்ப் படிக்கலாம். நம் கிறிஸ்தவ ஜீவியத்தில் நடைபெறுகிற போரை ஜான்புனியன் 'திருப்போர்' என்ற சிறந்த நூலுள் நாடகமாகக் காட்டுகிறார்.

இப்படி இம்மையில் போர் இருந்தாலும் மெய்க் கிறிஸ்தவனுடைய உள்ளத்தில் கலக்கமல்ல, 'எல்லாப் புத்திக்கும் மேலான தேவ்வசமாதானம்' குடியிருக்கும் (பிலிப். 4, 7). இம்மை முடிந்தபின், நம்முடைய சகல சத்துருக்களும் ஜெயிக்கப்பட்டு என்றென்றைக்கும் ஒழிந்துபோவார்கள். நமக்கு நித்திய சமாதானம் வரும். நம் இரட்சகராகிய இயேசுபாலகன் நம் சமாதானராஜாவாய் இருந்து நம்மை 'நித்திய நீதியிலும் கபடற்ற உண்மையிலும் மோக்ஷ ஆனந்தத்திலும் என்றென்றைக்கும் ஆளுவார்.' நாம் அவருடைய ஆளுகையின் கீழ் என்றும் சுகித்து வாழுவோம்.

நம்மண்டை வந்திருக்கிற பாலகனாகிய இந்த அதிசயமான இராஜாவை நாம் இப்போதே நம் ஜீவியத்தை ஆளும்படி ஏற்றுக் கொள்வோமாக.

# Holiness

**By the Rev. A. Paramanandam**

## பரிசுத்தம்

(தொடர்ச்சி)

### ஏழாம் அதிகாரம்

### கிறிஸ்தவ பரிபூரணம்

3. நின்றுவிடாமல் கிறிஸ்துமார்க்கத்தில் ஓடுவதே கிறிஸ்தவ பரிபூரணமாயிருக்குமானால், பரிசுத்தம் என்னும் பதவியைப் பெறுவதற்கு முன் பரிசுத்தமாகும் வேலை நடக்கவேண்டுமென்கிற அவசியமென்னத்துக்கு? ஒருவன் கிறிஸ்துமார்க்கத்தில் பிரவேசித்து அதில் நின்றுவிடாமல் ஓடுவதற்காகாதோ? இது எவ்வாறு சாத்தியமாயிற்று? முதலில் இது சுலபம் என்று தோன்றினும், நிஜமாய் அவ்வளவு சுலபமாயில்லை. கிறிஸ்துமார்க்கத்தில் பிரவேசிக்கிறவர்களில் சிலர் எளியவர்களைப்போல் பலவீனராயிருப்பதினாலே பொறுமையோடு ஓடுவதற்கு சக்தராகுமுன்னே சரியாய் நடப்பதை அப்பியாசிக்க வேண்டும். முதல் முதலிலேயே வேகம் குறைவானதாகவும் வழியில்



நின்றுவிடுவதாகவும் ஓடுவது அநேக காரணங்களினால் முடியாது. நமக்குமுன் வைத்திருக்கிற இலக்கை நோக்கிப் பொறுமையோடு ஓடுவதற்கு முன்னதாக பிரதி ஒவ்வொரு பாரத்தையும் நம்மைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொள்ளுகிற பாவத்தையும் தள்ளிவிடவேண்டும் (எபி. $12^{1}$). சரீராதீன சுபாவந்தான் நம்மைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொள்ளுவது. இதை ஒரு க்ஷணத்திலே நிவிர்த்தி செய்து கொள்ளலாகாது. இளைப்பின்றி ஓடவேண்டுமாயின் முதலில் ஓடுவதில் நல்ல அப்பியாசமிருக்கவேண்டும். முன்னுக்கு ஓடுகிற கிறிஸ்தவன் இளைப்பாகிலும் தவிப்பாகிலும் உண்டாகிற பரியந்தமும் ஓடினாலும் கிறிஸ்தவ பரிபூரணத்தை யடைந்தவனல்ல. ஆனால் கிறிஸ்தவ பரிபூரணத்தை யடையும்படி நாம் முன்னுக்கு வைத்திருக்கிற குறியைச் சேரும்வரைக்கும் தாமசஞ்செய்யவேண்டியதில்லை. வழியில் சோர்ந்து நின்றுவிடாமல் முன்னேறி ஓடுவதற்குக் கற்றுக் கொண்டவுடனே அதை யடைந்ததுபோலாயிற்று.

4. ஒவ்வொரு சிஷனும் தீர்க்கமாய்க் கற்று, தன் குருவைப் போலிருப்பான் என்பது தெரிந்திருக்கிறதல்லவா? (லூக். $6^{40}$). ஆனால், இதினால் கிறிஸ்தவபரிபூரணத்தை யடைந்தவனுக்கு கிறிஸ்துவின் சகாயம் இனிமேல் அவசியமில்லை என்று ஊகிக்கலாகாது. நோய் குணமான ரோகிக்கு வைத்தியனால் எவ்வாறு பிரயோஜனமில்லையோ அவ்வாறே பரிபூரணத்தையடைந்த கிறிஸ்தவனுக்கு கிறிஸ்துவினால் இனிமேல் ஆகவேண்டியது ஒன்றுமில்லை யென்று சொல்லலாகாது. கிறிஸ்து அவனுக்கு இன்னும் நீதியும் பரிசுத்தமாகுதலும் விமோசனமுமாய் இருக்கிறார் (1 கொரி. $1^{?}$). உலோகத்தில் மனுஷன் அடைந்திருக்கவேண்டிய உன்னதமான நீதிக்கும் தேவனிலிருக்கிற பரிபூரணமான பரிசுத்தத்துக்கும் சொல்லக்கூடிய அவ்வளவு தாரதம்மியமிருப்பதினாலே கிறிஸ்தவபரிபூரணத்தை யடைந்தவனுங்கூட மத்தியஸ்தராகிய கிறிஸ்துவின் மூலமாய் மாத்திரம் தேவனுடைய சந்நிதானத்தில் பிரவேசிக்கலாம். அவனில் நிலைகொண்டிருக்கிற சத்குணங்களெல்லாம் அவன் கிறிஸ்துவில் வைத்திருக்கிற விசுவாசத்தினாலே கட்டப்பட்டிருக்கிறதே தவிர அவனுடைய சொந்த சாமர்த்தியத்தினாலல்ல. இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி அவனைச் சுத்திகரிக்கும் (1 யோ. $1^{7}$). கிறிஸ்து இயேசுவுக்குள் சுத்திகரிக்கப்பட்டவனாயிருப்பான் (1 கொரி. $1^{2}$). கிறிஸ்துவுக்குள் தேவனுடைய நீதியின் ரூபியாயிருப்பான் (2 கொரி. $5^{20}$). கிறிஸ்துவின் சகாயத்தினாலே துன்மார்க்கத்துக்காக ஏவப்படுதல் பாவம் முதலானவைகளை ஜெயித்து, தன்னுடைய துர்க்குணம் துராலோசனைகளையெல்லாம் சிறையிலடைத்து வைப்

பான். கிறிஸ்துவின் வல்லமை என்கிற சேனையானது கும்புகளாயிருக்கிற இந்த துஷ்டரையெல்லாம் சிறையிலடைத்து, தன் இருதயக் கோட்டையைப் பத்திரமாய்க் காப்பாற்றுகிறது. இந்தச் சேனையை அனுப்பிவிட்டால் கும்புகள் கண்டிதமாய் கலகம் செய்யும். கிறிஸ்து அவனுடைய ஜீவனாயிருக்கிறார் (கொலோ. $3^{4}$). அவன் திராட்சச்செடியிலுள்ள கொடிக்குச் சமானமாயிருக்கிறானேயொழிய ஆலமரத்தின் கிளைக்குச் சமானமாயில்லை. ஆலமரத்தின் கிளைகள் நிழல் கொடுத்துக்கொண்டு பூமியோடு சேர்ந்து தங்களை விட்ட வேரின் சகாயமில்லாமல் சொந்தமாய் தாங்களே பூமியிலிருந்து சாரத்தை உறிஞ்சுகின்றன. ஆனால் திராட்சக்கொடி செடியிலே நிலைகொண்டிராவிட்டால் தன்னிலே தான் எப்படி பலன் கொடாதோ, அப்படியே கிறிஸ்தவன் பரிபூரணத்தை யடைந்தவனாயிருந்தாலுங் கூட கிறிஸ்துவில் நிலைகொண்டிராவிட்டால் பலன் கொடான் (யோ. $15^{4}$). பரிசுத்தம் கிறிஸ்துவின் மூலமாய் நமக்குக் கிடைத்திருக்கிற புண்ணியத்தின் ஈவல்ல. அது கிறிஸ்துவின்பேரிலுள்ள விசுவாசத்தினாலேயே பிழைக்கிற ஜீவனாயிருக்கிறது. நாம் கிறிஸ்துவை விட்டு விலகுவோமானால் தக்ஷணமே பரிசுத்தம் நம்மையும் விட்டுத் தொலைந்துபோம்.

5. கிறிஸ்தவ பரிபூரணம் என்கிற இந்தப் போதனையினால் கிறிஸ்தவர்கள் பெருமையடைவதற்கு ஆஸ்பதமாகிறது என்று சிலர் இதைத் தூஷிப்பார்கள். மனுஷன் தன்னுடைய பரிபூரணத்தை யடைந்தவனென்று பாவித்துக்கொண்டு, அவன் பெருமையும் அகந்தையுமில்லாமலிருப்பது அசாத்தியமென்று இவர்கள் எண்ணுகிறார்கள். யார் இப்போதனையினால் பெருமை உண்டாகலாமென்று நினைக்கிறார்களோ அப்படிப்பட்டவர்கள் இதை இன்னும் சரிவர தெரிந்துகொள்ளவில்லை என்று சொல்லலாம். கிறிஸ்தவ பரிபூரணத்தை யடைந்தவனில் மாத்திரம் நற்குணங்கள் பூரணப்பட்டிருக்கின்றன. பெருமை அவனில் குடிகொண்டிருப்பதற்கு யாதொரு இடமுமில்லை. ஏனென்றால் பிழைத்திருக்கிறேன்; இனி நானல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார் (கலா. $2^{20}$) என்கிற வார்த்தைகளினால் தெளிவாகிற ஸ்திதியை அவன் அனுபவித்திருக்கிறான். கிறிஸ்துவே அவனில் பிழைத்து பெருமையை உண்டாகும்படி செய்தார் என்று சொல்லலாமென்றால் அது கூடாததாயிருக்கிறது. அப்படியில்லாமல் அவன் தன் பெருமையைவிட்டு கிறிஸ்து தன்னில் சுதந்தர அதிகாரத்தைச் செய்யும்போது ஒவ்வாது என்று சொல்லலாமென்றால் கிறிஸ்தவ பரிபூரணத்தை யடைந்தவனல்லாமற்போவான். கிறிஸ்தவ பரிபூரணத்தை யடைந்தவன் எல்லாரைப்



பார்க்கிலும் தேவனுக்கு அதிக சமீபமாயிருப்பதினால் மற்றவர்கள் அறிந்துகொள்வதைப்பார்க்கிலும் அதிகமாய் தான் தேவனுக்கெதிரில் எவ்வளவோ அயோக்கியன் என்று அறிந்துகொள்வான். தேவனுடைய பரிசுத்தம் என்கிற ஒளியில் தன்னை பரீட்சித்துப் பார்க்கும்போது தன்னில் வெகுவாயிருக்கிற குறைகளை விசேஷமாய் அறிந்து அதிகமாய் விசனப்படுவான். ஆனால் சாதாரணமாய் தன்னைத்தானே பரீட்சித்தறிவதில்லை. தனக்கு நீதியும் சுத்திகரிப்பும், விமோசனமுமான கிறிஸ்துவிலே எப்போதும் தன் திருஷ்டியை வைப்பான். அப்படியானால் புகழ்ந்துகொள்வதில் அது விசுவாச மார்க்கத்தில் இல்லாமற்போயிற்று (ரோம. $3^{27}$). கிறிஸ்தவ பரிபூரணம் சித்திக்கு வந்த அன்பாயிருப்பதினாலும், அன்பு பெருமைக்கு சுத்த விரோதமாயிருப்பதினாலும் கிறிஸ்தவ பரிபூரணமும் பெருமையும் ஒன்றாய்ச் சேர்ந்திராதே.

## விசேஷித்த வேதவாக்கியங்களின் அரும் பொருள் விளக்கம்

ஏசா. $32^{2}$.

‘அவர்’ முந்தின வசனத்தில் குறிக்கப்பட்ட இராஜாமாத்திரமல்ல, அந்தப் பிரபுக்களில் ஒவ்வொருவனும் என்பது இதின் அர்த்தம். இனி வரும் நல்ல காலத்தில் உயர்ந்த ஸ்திதியில் இருக்கிற மனுமக்கள் எல்லாருக்கும் இவ்வாக்கியத்தில் சொல்லியிருக்கிற தன்மை இருக்கும். எந்த தன்மை? தனித்தனியாய்க் கவனிக்கத்தக்க நாலு படங்களில் தீர்க்கதரிசி அதைக் காட்டுகிறார்.

a. உலக சரித்திரத்தில் ஆபிரகாம், மோசே, பவுல், லூதர் முதலியவர்கள் எப்படி காற்றுக்கு ஒதுக்காகவும், விடாய்த்த பூமிக்கு கன்மலையின் நிழலாகவும் இருந்தார்கள் என்று பார்க்கலாம்.

b. இந்த நாலு படங்களையும் இயேசுவின் ஜீவிய சரித்திரத்தையும் ஒப்பிட்டுப் பார்த்து, அவரே பூரணமாய் இந்தத் தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றினார் என்று பார்க்கிறோம். இந்நாள்மட்டும் அவரே வறண்ட நிலத்துக்கு நீர்க்கால்.

c. நாம் எல்லாரும் ஆண்டவர் நமக்கு அளித்திருக்கிற அருளின் அளவுக்குத் தக்கபடி இப்படிப்பட்டவர்களாக இருக்கக் கூடும். இந்தியாவுக்கு இப்படிப்பட்டவர்கள் தேவை. மற்றவர்களை அடக்குகிறவர்கள் அநேகர், பெரு வெள்ளத்தில் புகலிடமானவர்களோ சிலர்.

ரோம. $8^{26,27}$.

ஆவியானவர் நமக்காக வேண்டுதல் செய்கிறார் என்று நாம் எல்லாரும் இதிலே வாசித்துச் சந்தோஷப்பட்டிருக்கிறோம். ஆனாலும் தமிழ் மொழிபெயர்ப்பு மூல பாஷையின் வார்த்தை ஒழுங்கை மாற்றினபடியால், அதிலிருக்கும் முழு அர்த்தமும் நமக்குத் தெளிவாகப் புலப்படவில்லை. மோட்சத்தில் நமக்காக வேண்டுதல் செய்கிறார் என்று நினைக்கிறோம். நமக்குள்ளே வேண்டுதல் செய்கிறார் என்று மூல பாஷையில் வாசிக்கிறோம். நமக்குள்ளே காலாகாலங்களில் ஆத்துமத் தவிப்பு உண்டாகும். அதை வார்த்தைகளில் அடக்கிச் சொல்லமுடியாது, அடிக்கடி பெருமூச்சால் மாத்திரம் அதை வெளியிடக்கூடும். ஆயினும், அது பரிசுத்த ஆவியின் ஏவுதல். அவரே அந்த மேலான வாஞ்சையை நம்முடைய உள்ளத்தில் தூண்டியிருக்கிறார். இருதயத்தைச் சோதித்தறிகிற கடவுள் அந்த வாஞ்சையை அறிந்து, நமக்குத் தெரியாத அதின் அர்த்தத்தைக் கண்டு, அதை வேண்டுதலாக ஏற்றுக்கொண்டு, அதற்குப் பதிலளிக்கிறார். மவுனத்தில் பண்ணின அந்த விண்ணப்பம் பலனில்லாமல் போவது அசாத்தியம்.

'அந்தப்படியே' என்ற வார்த்தையைக் கவனிக்க. எந்தப்படி? 19-ம் வாக்கியம் முதல் 25-ம் வாக்கியம் மட்டும் சிருஷ்டிப்பும் நாமும் தவிக்கிறோம் என்று சொல்லியிருக்கிறது. அந்தப்படியே ஆவியானவர் நமக்குள்ளே தவிக்கிறார். நாம் தெளிவான வார்த்தைகளில் சொல்லுகிற விண்ணப்பங்கள் மாத்திரம் பிரயோசனப்படும் என்று நினைக்கவேண்டாம். நாம் வெளியிட முடியாத வாஞ்சையும் பிதாவின் சந்நிதானம் போய்ச் சேரும்.

C. L. S. PRESS, MADRAS—1917

No. 130. மார்ச்சு 1917

# வேதியர் விளக்கு

## 'Why need I think of Three?'

THE other day a member of the Brahmo-Somaj who is sincerely inquiring into the truth of our religion asked two questions. 'We gave up Hinduism some years ago in order to worship the *one* God. You say you worship one God, and yet you talk of Father, Son, and Spirit. Why need I think about three? Why cannot I just think of God as Father and be content with that?' The other question was 'How can you be *sure* that Jesus was really God Incarnate?'

Probably every one of us has heard these questions asked again and again. How do we answer them? Take first the question about the Trinity. Will some readers of this paper write and tell us how they are accustomed to explain this matter? It will be best if they will do it in Tamil, because it is in Tamil conversations that we often feel these things to be most difficult. We Christian preachers ought to be gathering together a store of collective experience which will strengthen all our evangelistic work for the present *and* the future. I earnestly appeal to workers among Hindus to write and tell us what they have found in experience to be the best way of explaining the Trinity.

Meanwhile, a word about theology in its past history. In the early Church, before the doctrine of the Trinity had been accurately formulated, Christians who had given up the worship of many Gods were so anxious to avoid the very appearance of worshipping more than one God, that some of them began to teach, at the end of the second century, a conception of God which practically destroyed the distinctions

between Father, Son, and Spirit. Immediately the best minds in the Church felt that this was a dangerous error, and in opposition Tertullian made some of the first technical statements of the Church's teaching on the Trinity. (It was he who invented the very term itself). He was as anxious as his opponents to maintain the unity of God. But he saw that something precious was lost unless that unbroken unity could include distinctions with three modes and three special characteristics.

The language which he used was too difficult to help us much in our ordinary preaching. But it is worth noticing that it was in connexion with its struggles with polytheism that the Church first felt the need of defining its doctrine of the trinity.

Perhaps we can get a little more help from a line of thought which was first suggested by Augustine. Our problem is to show how a real three-foldness *can* be included in a genuine one-ness. Now since man is made in the image of God, it is reasonable to try to find in man an image of, or some analogy to, God's tri-unity. Said Augustine, 'I exist, and I am conscious that I exist, and I love the existence and the consciousness; and all this independently of any external influence.' 'I remember that I have memory, understanding, and will; I understand that I understand, will, and remember; I will to will, to remember, and to understand. These three constitute one life, not three lives; one substance, not three substances.'

The fact that Augustine could use such an illustration shows clearly, what is confirmed by detailed study of the writings of the Fathers, that the Church in working out its statement of the trinity placed a stronger emphasis upon the *unity* of the divine being than we often do. Tamil preachers in their desire to do justice to the personality of the Holy Spirit sometimes use language which can only convey to the ordinary mind the idea that the Holy Spirit is a third separate individuality, which is very far from the teaching of Augustine or of the New Testament. Perhaps this is unavoidable until we can discover and fix some use of terms which will enable us to speak of the Spirit as personal without representing



Him as a separate individuality from the other two subsistences in God's tripersonal life.

Of course we do not place the Trinity in the forefront of our preaching to non-Christians, because now as in the early days it is only through men's coming to know Christ as God that they are led to conceive of the Godhead as tri-une. But when an inquirer asks us directly in Tamil to explain what we mean by one God and three persons, what is the best line of explanation to follow?

## Psychology and Religion

I should like to call readers' attention to a recent book by Mr. K. J. Saunders, entitled *Adventures of the Christian Soul*, with a sub-title 'Chapters in the Psychology of Religion.' It costs only twelve annas, and it is full of things which we preachers ought to know. Mr. G. S. Duraiswamy, late Head Pundit in the C. M. S. High School at Palamcottah, has kindly undertaken to prepare an adaptation of several parts of the book which will make some of its most important teaching accessible to Tamil men. He begins in this issue with the subject of 'Religion and Childhood.' If only we could better *understand* the children for whom we are working, we should be able to present Christ to them with far more attractiveness than we now do. Would not the subject-matter of these articles be useful for consideration at monthly mission-meetings?

## Religion and Childhood

**By Mr. G. S. Duraiswamy**

*Adapted from Mr. K. J. Saunders'* 'ADVENTURES OF THE CHRISTIAN SOUL'

### சிறுபிள்ளைகளும் கிறிஸ்துமார்க்கமும்

'சில வருடங்களின் முன்னர் நான் இலங்கைத்தீவில் சிறிது காலம் தங்கியிருந்தேன். அப்போது அங்கு ஒரு சிறுவன் இருந்தான். ஒன்பது பிராயமும் பூரணமாகாதவன் தமிழ்ச் சிறுவன். இவனை அதற்குமுன்னமே இருவருஷங்களாக நாடோறும் ஓர் ஜெபகூட்டம்

நடத்திவந்தான். இக்கூட்டத்திற்குக் கிறிஸ்தவச் சிறுவரேயன்றி புத்தமார்க்க, இந்துமார்க்கச் சிறுவரும் வருவது வழக்கம். எல்லோரும் மிகச்சிறுவரே. கூட்டத்திற்கு வரவேண்டுமென்பதுவோ கட்டாயமல்ல. கூட்டத்திற் சிறந்தவர் தேர்ச்சிபெற்றவர் முதலியவர்க்கு வருடந்தோறும் வெகுமதிகளும், ஒழுங்கீனமும் கவலைத்தாழ்ச்சியுமுடையோரெனக் கண்டுபிடிக்கப்பட்டவர்க்குத் தண்டனையும் கொடுப்பது அவர்கள் வழக்கம். நான் ஒருநாள் வனபோஜனத்துக்குப் போவதாக ஏற்பாடுசெய்து மேற்கூறிய ஒன்பது பிராயமுள்ள தமிழ்ச்சிறுவனும் பிறரும் கூடவருவதென்றும் எல்லோருமாக அடுத்த நாள் அதிகாலை 4½ மணிக்குப் புறப்படுவதென்றும் தீர்மானஞ்செய்தேன். புறப்படுகிற அந்தக் காலையில் இச்சிறுவன், எங்களுடைய வனபோஜனத்தினால் தான் நடத்திவரும் ஜெபக்கூட்டத்திற்கு அந்த ஒருநாளும் கூட இடையூறு நேரிடலாகாதெனநினைத்துச் சிறுவரையெல்லாம் நாலுமணிக்கே எழுப்பித் தங்களுடைய வழக்கமான ஜெபங்களை முடித்துக்கொண்டு எங்களோடு புறப்பட்டான். இவன் பக்தித்திறத்தையும் ஜெபத்தின் வாஞ்சையையும் என்ன சொல்ல!

டாக்டர் கோல் ஐயர் அடியில் வருமாறு எழுதுகின்றார்:—காலிபோர்னியாவிலுள்ள சிறுவருள் 900 பேர் ஒரு சமயத்தில் ஒரு வாக்குறுதிச்சீட்டில் கையொப்பமிட்டனர். அந்தச் சீட்டில் 'இயேசுவே எனதருமையான இரட்சகர் என்னும் உண்மையைக் கண்டுகொண்டேன். இதனை நம்புகிறேன். எனது ஜீவியமுழுவதும் அவருடைய அன்புள பிள்ளையாகவும் உண்மையுள ஊழியக்காரனாகவும் ஜீவிப்பேன் என்று அவருடைய உதவியையே முன்னிட்டு வாக்குக் கொடுக்கிறேன்' என்று கண்டிருந்தது. தாங்கள் கொண்டிருந்த நம்பிக்கையின் மூலம் இன்னதென்பதும் இவர்கள் நன்குணர்ந்திருந்தனர். இந்தச் சிறுவரில் 109 பேர் ஐந்து வயதுக்கும் பத்து வயதுக்கும் இடையிலுள்ளவர்கள்.

1892-௵ டிசம்பர்௴ 6௳ பிரசுரமான 'அட்வான்ஸ்' என்னும் பத்திரிகையில் அடியில் வருமாறு கண்டிருந்தது:—அமெரிக்கன் மிஷன் போர்டைச் சேர்ந்த எழுபத்தோர்பேரில் பத்தொன்பதுபேர் தமது அதிபால்யப் பிராயத்திலேயே குணப்பட்டவர்கள். தாங்கள் குணப்பட்ட காலம் இதுதான் என அறியக்கூடாத பருவத்திலேயே இவர்கள் கிறிஸ்துவுக்கு அடிமைபூண்டவர்கள். மீதியானவருள் நாற்பத்துமூன்றுபேர் தங்களுடைய பதிநான்காம் பிராயத்தின்முன் கிறிஸ்துவின் தொண்டரானவர்கள்.

மேற்கூறியவற்றைக் கவனிக்கும்போது நாம் சிறுவரைப்பற்றிக் கொஞ்சமும் அசட்டையாயிருத்தல் தகாதென்பது வெளியாகிறது.



சிறுவரைப்பற்றிய இக்காரியங்களை யாராயுமுன் அவர்களுடைய மனோதத்துவநிலைமை எத்திறப்பட்டதென ஆராயவேண்டுவது மவசியம். இவ்விஷயத்தில் நமது மனதிற்றோன்றியவாறே காரியங்களை நிதானித்துவிடுதலும் பொருந்தாது. சிறுவரிடத்திற் காணப்படும் ஒவ்வொரு மாறுதலையும் அபிப்பிராயத்தையும் ஒழுக்கத்தையும் கவனித்தே நிதானிக்கவேண்டும்.

சாஸ்திரப்பயிற்சியினால் மாத்திரம் இதனை முற்றக் கற்றுவிடலாமோ வென்னின் அதுவும் பொருந்தாது. சாஸ்திரவாராய்ச்சி வெகுதூரம் நமது அறிவை விர்த்திசெய்து நமக்கு உதவிபுரியுமேனும் அதனையே நமது சார்பாகக்கொண்டு இக்காரியத்தை யாராயப்புகுவமேல் நாம் மிகுந்த பலனை யடையோமென்பது திண்ணம். சூரியமண்டலம் மற்றுங் கிரணங்கள் முதலியவற்றை வானசாஸ்திர உதவியினால் ஆராய்ந் தறியலாமெனினும் அவைகள் அவ்வாறு ஓடுதற்குக் காரணம் முதலியன நம்மால் அறிதற்பாலனவல்ல. அவை நமது சிற்றறிவினுக் கெட்டாதன.

மனுஷருடைய பகுத்தறிவு விர்த்தியாகும் பருவத்தைப்பற்றி யாராய்ச்சிசெய்து நூலியற்றியுள்ள ஹால் சாஸ்திரியார் தாம் இவ்வகை மனோதத்துவ வாராய்ச்சியில் தலையிடுதற்கேற்பட்ட காரணத்தைக் கூறுவார். தவளைகளுடைய தசைநரம்புகளைப்பற்றிப் படிக்கும்போதே அண்டபிண்ட சராசரங்களனைத்தும் ஏதோ ஒழுங்கு பற்றியே தத்தம் காரியங்களில் பிரவர்த்திக்கின்றனவென்பதை யறிந்தனராம். தவளைகளிற்போலவே மனுஷரிலும் இவ்வகைத் தசைகள் வேலைசெய்கின்றன. உலகில் மனுஷனியற்றும் ஒவ்வோர் கிரியைக்கும் மூலகாரணமாய் நிற்பதும் இத்தசைகளே என்பதைக் கண்டனராம். நாகரீகம், ஒழுக்கம், சரித்திரம், தேசசட்டம் முதலிய வெழுதுதல், தேசநிர்வாகஞ் செய்தல், நூலியற்றல், உபந்யாசம் செய்தல் பலவும் இவற்றாலேயே விளைகின்றன.

மனோதத்துவ ஆராய்ச்சி மேலான காரியங்களை நாம் உணர்ந்துகொள்ளுவதற்கு ஆதாரமாகிறது. நுட்பமாய் ஒவ்வொரு நிகழ்ச்சியையும் ஆராயுமிடத்துப் பெரும்பயனை யடையலாம். சரீர ஆன்ம காரியங்களுக்கும், இம்மை மறுமை விஷயங்களுக்கும் இடைநின்று இவற்றின் ஒற்றுமையையும் பேதத்தையும் விளக்குவதும் இதுவே.

சிறுவரின் மனோதத்துவத்தை யாராயப்புகும்போதே அது அத்தனை எளிதன்றென்பது வெளியாம். அறிவும் தேர்ச்சியும் வாய்ந்த இருபிரிவினர் ஒன்றோடொன்று மாறுபட்ட இருவிதக் கோட்பாடுகளைத் தக்க ஆதாரங்களுடன் ஸ்தாபித்திருக்கின்றனர். ஒரு சாரார், குழந்தைகள் சுகமும் பலமும் பொருந்தியதோர் ஜீவஜந்துவே யென்

றும் ஆன்மகாரியங்களுக்கடுத்த இயற்கையறிவு அவர்களுக்கு அணுவளவுமில்லையென்றும் கூறுவார். மற்றொரு சாராரோ, இவர் கூற்றை மறுத்து, "குழந்தைகள் அப்போதுதான் தெய்வ சந்நிதானம் நின்றும் வெளிப்போந்த சிருஷ்டிகளென்றும், அவர்களின் பேதமை நிலைமையே தெய்வத்தினிடம் நின்றும் அவர்களுக்கெய்திய பேறென்றும் வாதிப்பார். சாஸ்திரமோ இவ்விரு வாதிகளுக்குமிடைநின்ற காரியத்தை யாராய்கின்றது. இவற்றுள் எதனைக் கொள்ளுவது எதனைத் தள்ளுவதென்பது மேல்வரும் ஆராய்ச்சியினால் விளங்கும்.

குழந்தையென்பதென்ன? மனிதனின் சிற்றுருவோ? மனுஷஜாதியின் பூர்வநிலைகளையெல்லாம் தன்னிடத்தே யடக்கிப்பிறந்து பின் விர்த்தியாம் தன்மையுடையதோ? பிறவியிலேயே மனச்சாக்ஷியை உடன்கொண்டு பிறந்தவொன்றோ? பிறரோடு பயிலும் கூட்டுறவின் பயனால் தனது அபிவிர்த்தியில் வேறுபாடுகள் விளைத்துக்கொள்ளுமியல்பினதோ? ஆன்மகாரியங்கள் அதனிடம் எங்ஙனம் வளரும்? என்பனவாதியாய பல காரியங்கள் மனோதத்துவசாஸ்திர வாராய்ச்சியினால் அறியக்கிடந்தன.

இவற்றுள் நாம் அறிய விரும்புவது குழந்தையின் ஆன்மவளர்ச்சியே. வேதசாஸ்திரிகளும் வேதபோதனாசிரியர்களும் இவ்விஷயத்தை மகா முக்கியமானதெனக் கொள்கின்றனர். குழந்தை பிறந்து பன்னிரண்டு வயது முடிகிறவரை சிறுபிராயமென்பர். இவற்றுள் ஆறுவதுவரை ஒரு பாகம், ஆறுமுதல் எட்டுமுடிய அடுத்த பாகம், எட்டின்மேல் பன்னிரண்டுமுடிய மூன்றாம் பாகம்.

இப்பருவத்தின் காரியத்தை யறிவது மனோதத்துவசாஸ்திரிக்கு மிகவும் அருமையானது. எனினும் இப்பருவத்தைப்பற்றிய வறிவுதான் மிக்கப் பயன் விளைக்கத்தக்கது. பிறகாரியங்களில் வழக்கமாய்க் கையாடுமுறைகள் இவ்விஷயத்திற் பயன்படா. ஏனெனில் தமது மனதின் தன்மையைப் பிறர்க்கு விளங்கக்கூறுவது பிள்ளைகளால் இயன்ற காரியமல்ல. அவர்களுமே அதனை யறியார்கள். அவர்களிடம் நின்றும் அவர்கள் கூறியறிய முடியாதென்னின், நாமே நமது சிறுபருவத்தில் நாம் நடந்ததும் நமது மனதிற்றோன்றியதுமான காரியங்களை வைத்துக்கொண்டு இவர்கள் காரியங்களை நிதானித்துவிடலாமோ வென்னின் அதுவும் பொருந்தாது. அநுபவமுறையும் இதற்கேற்றதல்ல.

(இன்னும் வரும்.)



# The Story of a Hindu's Conversion

By the Rev. P. Arulappen

## ஏழையாண்டார் பராபரக்கண்ணி

(தொடர்ச்சி)

### வழிகாணல்

31. அன்றோர் மரத்தடியில் அற்புதனின் சீர்செப்பி
நின்றோர் பலர்கண்டு நின்றேன் பராபரனே.

32. காசுபணங் கேளார் கவன்று கரிசனமாய்ப்
பேசுமொழி கேட்கப் பெற்றேன் பராபரனே.

33. நான்பாவி யென்றார் நரகெனக்குப் பங்கென்றார்
வான்போம் வழியை வகுத்தார் பராபரனே.

34. தீயநார் செய்கையெலாம் தீதென்றார் தீதறவே
ஆயகிறிஸ் துற்ற தறைந்தார் பராபரனே.

35. அச்சுதனார் நீசநார் ஆனமா பாவிகட்காய்
இச்சகத்து வந்த திசைத்தார் பராபரனே.

36. இசைத்திவரே ஈடேற எணியிவர்க் கன்பர்
நசித்திடார் என்று நவின்றார் பராபரனே.

37. ஏசுவென்ற மாத்திரத்தில் எசியங்கு நின்றசனம்
பேசிக்கல் மாரி பெய்தார் பராபரனே.

38. கைதட்டி னார்சிலபேர் கண்சிமிட்டி னார்சிலபேர்
மெய்தட்டி முன்னே விரைந்தார் பராபரனே.

39. என்செய்தார் என்சொன்னார் இவ்வடிக்கும் இவ்வசைக்கும்
பொன்செய்த போதம் புகன்றார் பராபரனே.

40. என்றெண்ணி நின்றேன் இறைவா இவர்க்கிரங்கும்
என்றென்னைக் கெஞ்சி இருந்தார் பராபரனே.

41. என்மார்க்கத் தார்செய்கை ஈனமெனக் கண்டவர்கள்
நன்மார்க்க உத்தமத்தை நாடிப் பராபரனே.

42. அடித்தாரை யடியாத அடியார் திருமறையைப்
படித்தாய வெண்ணியொன்று பார்த்தேன் பராபரனே.

43. புதியவேற் பாடென்ற பொற்குவையைக் கண்டு
மதிதெளிய லானேன் மகிமைப் பராபரனே.

44. எற்காக நீசெய்த தெல்லாம் அறிந்துள்ளம்
பொற்குவியல் கண்டாரைப் போன்றேன் பராபரனே.

45. திரியேக னேநினது செய்கைகளைச் சற்று
விரிநீ ருலகறிய விள்வேன் பராபரனே.

### சிருஷ்டிகரின் மகிமை

46. அண்டாண்ட கோடி அகிலபுவ னம்படைத்துக்
கொண்டாண்டு கோலோச்சும் கோனீ பராபரனே.

47. ஓரா றுநாளில் உலகையெழுங் காக்கியதன்
பேராத மாண்பின் பெருக்கே பராபரனே.

48. தானு யனைத்துலகுந் தாங்குநர்க ளின்றிநிற்ப
மேனுன் வகுத்துவிட்ட மேன்மைப் பராபரனே.

49. வேதப் புணையுதவி வீட்டின்பங் கூட்டுவிக்கும்
போதப் பொருளேயென் பொன்னே பராபரனே.

50. ஆர்கலிநீர் மையும் அகல்விசும்பே டாயினுநின்
சீர்வரைய நாடிற் சிறிதே பராபரனே.

51. காவாய்க் கருங்கடல்மண் ணுவா யிருப்பினுமுன்
மூவாத சீர்புனைந்து முற்று பராபரனே.

52. மண்ணை யுருப்பிடித்துன் மட்டிலருட் காளாக்கி
விண்ணை யளித்தாளும் வேந்தே பராபரனே.

53. ஆண்பெண் இருவரையும் ஆனந்தக் காவனத்தில்
மாண்புற் றிருக்கவைத்த மன்னு பராபரனே.

54. சர்ப்பவினை யாற்சாபம் சாவணுகத் தேசிழந்து
கர்ப்பமுத லேபொல்லார் கண்டாய் பராபரனே.

55. நன்றிகெட்ட மாந்தர் நசிந்துகெடா வாறவாக்
கொன்றுதா லானீரே ஒப்பில் பராபரனே.

56. மாந்தர் பெருகி மதிகெட்டு மாமிசத்தை
ஏந்தி வளர்த்தார் இறையே பராபரனே.

57. பாவத்தைப் பாராப் பரிசுத்த கண்ணுநின்
கோவத்தீ வெள்ளம் குமுறிப் பராபரனே.

58. பாருலகை நீரால் பழுதறப் பண்ணியதெண்
பேரைப் பராமரித்தாய் பீடார் பராபரனே.

59. முற்பிதாக்கள் தீர்க்கர் முதலோர்க் குரைத்தபடி
பொற்பார் சுதன்புவியிற் போந்தார் பராபரனே.

60. இந்தடவா யித்தரையோர்க் கீடேற்ற முண்டாகச்
சிந்தைகொண்ட நேயமெய்ச் சீமா பராபரனே.

(இன்னும் வரும்.)

---



# Experiences of a Preaching Tour

**By G. D. Barnabas**

## பெங்களூர் தென்இந்திய ஐக்கிய வேதசாஸ்திர கலாசாலா மாணவரின் கூடாரப்பிரசங்கம்

இந்த வருஷம் மேற்கூறிய கலாசாலை மாணவர் தங்கள் பிரதம பண்டிதர் L. P. Larsen துரையோடு ஜோலார்ப்பேட்டை ஜங்ஷனை யடுத்த திருப்பத்தூருக்குப்போய், அப்பட்டணத்தில் மேற்படி கலாசாலையில் பயின்று தேறி இப்போது London Mission உதவி மிஷனரியாய் இருக்கும் Rev. Mr. Narasimham வீட்டில் தங்கி மேற்படி திருப்பத்தூர் பட்டணத்திலும் அதின் சுற்றுக்கிராமங்களிலும் சுவிசேஷத்தைப் பன்னிரு தினங்களாய்ப் பிரசங்கித்துத் திரும்பினர். இத்தினங்களில் மாணவர் மனதிற்பதிந்த சில குறிப்புகள் இத்திவ்ய ஊழியம் செய்யும் ஏனைய வேதியருக்கும் பயன் தருமென்றெண்ணி அவற்றை இங்கே எழுதுகிறோம்.

Mr. நாசிம்ஹமும் அவர் உதவிவேதியரும் ஏற்கெனவே கலந்து, சில இடங்களைத் தெரிந்து அவைகளைச் சித்தப்படுத்தியிருந்த முறை மகா சிலாக்கியமுள்ளது. அவ்வவ்விடத்துப் பெரிய மனிதரைக் கண்டு இன்ன நாளில் உங்கள் ஊரில் சிலர் பிரசங்கிக்கப்போகிறார்கள் என அறிவித்து, போகிறதற்கு முந்தின நாளிலும் நினைப்பூட்டி வந்தபடியால், அநேக இடங்களில் நூற்றுக்கணக்கான பேர் கேட்டதுமன்றி, எதிர்பாராத அமைதியும் ஆவலும் கண்டு ஆனந்தமடைந்து ஆண்டவருக்குத் துதிசெலுத்தினோம். மாணவர் பெங்களூரில் வெள்ளிக்கிழமைதோறும் வீதிப்பிரசங்கத்திற்குப் போவதுண்டு. அப்போது சிலவேளைகளில், சில சிறுவரையன்றி மற்றவர்கள், கால்மணிநேரம் குரல் எடுத்துப் பாடிக் கத்தினாலும் காதில்லாதவர்கள்போல் போவதைக் கவலையோடு கவனித்த எங்களுக்கு, ஒரு ஊரினுள் சென்று ஒரு பாட்டுப்பாடத் துவக்கினமாத்திரத்தில் ஊரெல்லாம் கூடிவந்ததுபோல் தோன்றியதால் உற்சாகமும் ஆச்சரியமும் உண்டானதுமன்றி, முன் நிற்கும் இத்தனை ஆத்துமாக்களும் தங்கள் கதியை நாம் கொடுக்கும் சாட்சியிலிருந்தே நித்தியத்துக்கும் தீர்த்துக்கொள்ளப்போகிறார்களே, நம் உத்தரவாதம் எவ்வளவு பெரியது என்ற உணர்வும் பயமும் கூடச் சிற்சில வேளைகளில் எங்களைப் பிடித்தது. அப்படிப்பட்ட சமயங்களிலும் தேவன் எங்கள் வாயில் வாக்கைக் கட்டளையிட்டு அவர் அருளிய சொல்லிமுடியாத ஈவுக்காக அவருக்கே ஸ்தோத்திரமுண்டாவதாக.

கிராமத்தாரும் திருப்பத்தூர் பட்டணத்தாரும் சுவிசேஷத்திற்குச் செவிகொடுத்தது மாத்திரமல்ல, அவர்கள் சுவிசேஷப்பங்குகளை வாங்கின விதமும் வியப்பை உண்டாக்கிற்று. பிரசங்கமுடிவிலே Mr. நரசிம்ஹம் கூடிநிற்பவர்களைப் பார்த்து 'இதோ, இவர்கள் சொன்ன சத்காரியங்களும் இயேசுபெருமானின் அற்புத குணாதிசயங்களும் இந்தச் சிறுபுஸ்தகத்தில் இருக்கிறது. இவர்கள் சொன்ன நல்ல காரியங்கள் மறந்துபோகக்கூடியவை, இவை மறவாதிருக்கவும் இன்னம் அதிகமாய் அறியவும் ஆசைப்படுவோர் வாங்கி வாசிக்கலாம்' என்று மரியாதையாய்ச் சொல்லி முடிவதற்குள், எனக்கு எனக்கென்று, காலணுக்களைக் கொடுத்து, ஒவ்வொரு ஊரில் முப்பது நாற்பது புஸ்தகங்கள் வாங்கிக்கொள்வார்கள். இவ்விதமாக மாணவர் சந்தித்த கிராமங்களிலும், போன சந்தைகளிலும் விற்ற சுவிசேஷப்பங்குகள் மாத்திரம் 520-க்கு மேல். அதோடு 'குருட்டுவழி,' 'தைப்பொங்கல்,' 'பாவநிவிர்த்தி' என்ற வேறு சில சன்மார்க்கப் புஸ்தகங்களும் விலையாயின. மாணவர் கிராமங்களுக்குப் போகும்போது, அவ்வட்டகை வைதிய ஊழியமன்றி புகைரதத்தில் கார்டுவேலை பார்க்கும் Mr. சிவராவும், கிராமப்பள்ளிக்கூடங்கள் மேல்பார்வைசெய்யும் கவர்ண்மென்ட் சூப்பர்வைசர் Mr. வேதமாணிக்கமும் வேறு இருவரும் மாணவரோடு சில வேளைகளில் வந்து உற்சாகப்படுத்தினர். அவர்களுக்கு இருக்கும் ஆத்துமதாகம் இன்னமும் அதிகரிப்பதாக!

ஒரு ஊரில் ஒளிச்சித்திரப்படம் காட்டிப் பிரசங்கிக்கப் போகும்போதும், ஊர்ப் பெரியமனிதரிடம் சொல்ல, அவர்கள், ஊர் வெட்டியானைக் கூப்பிட்டு ஊரெங்கும் பறைசாற்றுவிக்க ஊர் ஜனமெல்லாம், சில சமயங்களில் அக்கிராமத்துச் சுற்றுப்புறங்களில் இருப்பவர்களும் கூட வந்து கூடுகிறார்கள். சில இடங்களில் செய்வதுபோல், இருக்கும் படங்களையெல்லாம் காட்டிப் பொழுதுபோக்காமல், தற்காலத்திய ஆகாயப் போர்க்கலம் முதலியவற்றைக் காட்டி இடைக்கிடையே கிறிஸ்துவின் ஜீவியசரித்திரத்திலுள்ள நாலைந்து படங்கள் மாத்திரம் காட்டி சரித்திரமும் போதனையும் விபரமாய்ச் சொல்வோம்.

கூட்டம் கூட்டமாய் சுவிசேஷம் கேட்டதும், வேதபங்குகளும் சன்மார்க்கப் புஸ்தகங்களும் டஜன் டஜனாய் விலையானதும், புகைரத சர்க்கார் உத்தியோகஸ்தரான கிறிஸ்தவ சகோதரர் எங்களோடு வந்து ஊழியஞ்செய்ததும், பலர் எங்கள் ஊரில் படங்காட்டவில்லையே என்று சலித்துக்கொண்டதும், ஆகிய இவை எல்லாம் நாட்ராம்பள்ளி, புரம், மடவாளம் என்ற இடங்களில் உள்ள ஜனங்கள் நடந்துகொண்ட மாதிரியால், சிறத்துப்போயின என்றே சொல்லவேண்டும். நாட்ராம்பள்ளியில் இந்து கனவான்கள் கூடி ஒரு நேர்த்தியான கட்டடம் கட்டி



அதில் பல புஸ்தகங்களைச் சேகரம்செய்து, அதை லைபிரேரியாகவும் ரீடிங்ரூம் ஆகவும் உபயோகிக்கிறார்கள். அவ்விடத்தில் அவர்களெல்லாரும் கூடி எங்களை நல்வரவேற்று, 'தேவதரிசனம்' என்ற பொருளின்பேரில், எங்கள் ஆசிரியர் லார்சன் துரை செய்த உபந்நியாசத்திற்கும் இனிது செவிகொடுத்து அவர்களில் சில கனவான்கள் எங்களெல்லாருக்கும் அமுதளித்து அவர்களும் சமமாய் உட்கார்ந்து அமுதுண்டு களித்தது அங்கே போன யாவருக்கும் அது 'கனவோ நனவோ' என்னும்படி அவ்வளவு ஆனந்தத்தை யுண்டாக்கிற்று. ஆயினும் அவ்வருமை ஜனங்கள் நமதருமை நாதரின் நற்பாதசேவையும் செய்யத் திருவருள் இருந்தால், அவரைத் தங்களுக்கும் இரட்சகராக ஏற்றுக்கொண்டால், நாட்ராம்பள்ளி, ஏசுநாதரின் பள்ளியானால் அதைப் பார்க்கிலும் பேர்வாழ்வு வேறுளதோ! இவ்வூரில் இப்போது கிறிஸ்துவின் சீஷர் ஒருவரும் இல்லை. ஆனால் மார்க்க ஆராய்ச்சிக்காரர் இருக்கின்றனர். ஏற்கெனவே அவர்கள் லைபிரேரியில் ஒரு புதிய ஏற்பாடு இருந்தது. லார்சன் பண்டிதர் 'பரதேசியின் மோட்சபிரயாணம்' என்ற புஸ்தகத்தைப் பரிசாயளித்தார். அதுவும் அகமகிழ்ச்சியாய் அங்கீகாரம்பெற்று லைபிரேரியில் இடம்பெற்றது. தாயப்பக் கவுண்டர் இவ்விமரிசைகளெல்லாம் நடத்திப் பின் நாங்கள் யாவரும் ஜோலார்ப்பேட்டைக்கு வந்துசேர வாகனங்களும் அனுப்பினர். சுவிசேஷத்திற்கு இங்கே நல்ல கதவு திறக்கப்பட்டிருக்கிறது என்பதற்கும் சந்தேகம் இல்லை. புரத்திலும் நல்வரவேற்றல், உபசரித்தல், உணவளித்தல், வசனத்தை 'எங்கள் தெருவிற்கு வாருங்கள், எங்கள் தெருவிற்கு வாருங்கள்' என அழைத்துக் கேட்டல் முதலியவற்றில் யாதொரு குறையுமில்லை. வேத ஆராய்ச்சிக்காரரும் இருக்கின்றனர். ஆயினும் இவர்களும், நாட்ராம்பள்ளியாரும், மடவாளத்தாரும் 'தேவனுடைய இராஜ்யத்திற்குத் தூரமானவர்களல்ல' என்று மாத்திரம்தான் சொல்லக்கூடும். இந்த இடங்களிலெல்லாம், கிறிஸ்தவர்கள் நன்குமதிக்கப்படுகிறார்கள். கிறிஸ்தவர்களுக்கும் இந்துக்களுக்கும் நெருங்கின சிநேகபாந்தமும் இருப்பதாகத் தெரிந்தது. இந்த சிநேகம் நாளுக்குநாள் வளர்ந்து கிறிஸ்துவுக்குள் முற்றுப்பெறுவதாக! ஒருவிதமாய் நெருங்கின சிநேகம் உண்டானபின் அது போதும் என்று நிறுத்திவிடாதிருப்போமாக. அப்படியானால் நம் சிநேகபாந்தத்தால் அவர்களுக்கு மோசமேயன்றி நன்மையில்லை. ஏனென்றால் அவர்கள் நம்மோடு பழகாவிட்டால் தேவனுடைய சித்தத்தை அறியாதவர்களானதால் இரக்கம் பெறலாம். இப்போதோ போக்குச்சொல்ல இடமில்லை. ஆகையால் சிநேகம் முறிவதேயானாலும் பரவாயில்லை. அவர்களை நித்திய அழிவுக்கு விலக்கி மீட்பது நம்முடைய சிநேகத்தினிமித்

தமும் கூட நம்மேல் விழுந்த கடமையே. ஐயோ! எத்தனைபேர் அகிரிப்பாவைப்போல் கிறிஸ்துமார்க்க அறிவில் 'கொஞ்சங்குறையக் கிறிஸ்தவர்கள்' என்ற வகுப்பிலும், 'பரலோக ராஜ்யத்திற்குத் தூரமானவர்களல்ல' என்ற வகுப்பிலும் சேர்ந்து அதோடு நின்றுவிடுகிறார்கள்!

கிறிஸ்தவர்களுக்கும் இந்துக்களுக்கும் இங்கே இருக்கிற அந்நியோந்நியத்தையும், எங்களுக்கு இந்துக்களால் நடந்த உபசரணைகளையும் கவனிக்குங்கால், 'உலகம் உங்களைப் பகைக்கிறது' என்று ஏசு பெருமான் சொன்னது, அக்காலத்துச் சீஷரைக்குறித்துத்தானோ? என்ற எண்ணம் உண்டாகக்கூடியதாயிருந்தது.

மடவாளத்தில் யாப்பிலக்கணம் கற்றுவரும் ஒரு வாலிபன் நாங்கள் வீதியில் பிரசங்கம் செய்யும்போது கிறிஸ்தவர்களுக்கு அநுசரணையாக ஒரு கவி கட்டி, நாங்கள் மடவாளம் உபாத்தியாயருடைய வேண்டுகோளின்பேரில் சிற்றுண்டியுண்ண அவருடைய பாடசாலையில் போயிருக்கையில், எங்கள்முன் அரங்கேற்றினது அகமகிழ்ச்சியையும் முகமலர்ச்சியையும் கொடுத்தது.

(இன்னும் வரும்.)

# Holiness

**By the Rev. A. Paramanandam**

## பரிசுத்தம்

(தொடர்ச்சி)

### எட்டாம் அதிகாரம்

### பரிசுத்தத்தின் அனுபவம்

பரிசுத்தமானது சோதனை செய்து அறியத்தக்க போதனை மாத்திரமல்ல. இதை யடையவேண்டுமென்று மனசு செய்கிறது சிலருக்கு மாத்திரம் கிடைக்கிற அபூர்வமான வரத்தின் விசேஷமும் அல்ல. ஆனால் இது பக்திமார்க்கத்திலிருக்கிற ஒவ்வொரு கிறிஸ்தவனும் நியாயமாயும் அவசியமாயும் அடையவேண்டுமென்று பிரயத்தனஞ் செய்யவேண்டிய ஸ்திதியாயிருக்கிறது. பூரண சுத்திகரிப்பை விரும்புகிறவன் சுத்திகரிப்பு என்கிற மார்க்கத்தில் தலையிட்டவனே யல்ல. கிறிஸ்தவ பரிபூரணத்தின் முடிவுக்கு நேராய் சித்தியோடு வராதவன் சரியான கிறிஸ்தவனே யல்ல. பரிசுத்தம் நாம் பிரயத்தனத்தின் மூலமாய் அனுபவிக்கவேண்டிய ஸ்திதியென்று அறிந்துகொண்டவுடனே இந்த ஜீவியகாலத்திலேதானே இதை அடைய



லாமோ? இதை யடைந்தவர்கள் தாங்கள் இதை யடைந்துகொண்டோமென்று தெரிந்துகொள்வது எப்படி? இந்த ஸ்திதியைப் பெற்றுக்கொண்டபின் இதை இழந்துபோகிற சம்பவமுண்டோ? என்கிற யோசனைகள் இயல்பாய் மனசில் பிறக்கிறது சகஜம். இந்த கேள்விகளை ஒவ்வொன்றாக யோசித்து பார்க்கக்கடவோம்.

I. இந்த தேகத்தில் இருக்கையிலேயே பரிசுத்தத்தை யடைவது நிச்சயமாய் சாத்தியப்படுமோ? நாம் பரிசுத்தராகவேண்டுமானால் நம்முடைய அந்தரங்கத்தில் பாவம் நிர்மூலமாய் நாசமாகவேண்டுமென்றும் நம்முடைய சுபாவம் புதுப்பிக்கப்பட்டு அன்பினாலேயே மாற்றப்படவேண்டுமென்றும் அபிப்பிராயப்படும்போது இந்த ஜன்மத்தில் பரிசுத்தம் பூரணப்படாதென்று தெரியவரலாம். அப்படியிருந்தாலும் இது கூடியகாரியமென்று நம்புவதற்கு போதுமானவளவு ஆதாரமிருக்கின்றன.

(1) இதற்கு நம்மை ஆயத்தப்படுத்துகிறவர் ஆவியென்னும் அச்சாரத்தை நமக்குத் தந்த தேவனே (2 கொரி. $5^{5}$). நான் பரிசுத்தர்; ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் (1 பேதுரு $1^{16}$) என்று கட்டளையிட்டிருக்கிற தேவன் நம்மால் செய்யக்கூடாத வேலையை நமக்கு என்றைக்கும் நியமிக்கமாட்டார். நாம் நீதியின்பேரில் பசிதாகமடைந்து பரிசுத்தராகவேண்டுமென்னும் ஒரு ஆசையை நம்மில் பிறப்பித்திருக்கிறார். மேலும் இவ்வாசை திருப்தியாகுமென்று அவரே வாக்குக்கொடுத்திருக்கிறார் (மத். $5^{6}$). இது தேவனுடைய வேலையேயொழிய நம்முடைய வேலையல்ல. அவரால் எல்லாம் கூடும்.

(2) இந்த ஜன்மத்தில் பரிசுத்தத்தை அடையலாம் என்பதை நம்புவதற்குக் கஷ்டமாயிருந்தாலும், அதை அடையக்கூடாது என்று சாதிக்கிற யாதாமொரு காரணமாகிலும் புத்திக்குத் தென்படுவதில்லை. சரீராதீன சுபாவம் நாசமாகவேண்டுமானால் முதலில் சரீரம் அழிந்துபோகவேண்டுமென்று அவசியமில்லை. பாவம் தேகத்தில் பிறந்திருக்கிற வியாதியாயிராததால், பாவம் க்ஷீணம் அடைவதற்கு சரீரநாசம் எந்தவழியிலும் காரணமாகாது. மரிப்பதற்குமுன் அசுத்தனாயிருப்பவன் மரித்தபின்னும் அசுத்தனாகவே யிருப்பான். சாவதற்குமுன் சுத்தனாயிருக்கிறவன் செத்தபின்னும் சுத்தனாயிருப்பான். செத்தவுடனே பரிசுத்தத்தை யடைவது சாத்தியமானால், சாகுமுன் அதை அடைவது அசாத்தியம் என்பதற்கு எவ்வித ஆதாரமுமில்லை.

(3) அநேகர் இந்த ஜன்மத்தில் பரிசுத்தத்தை யடைந்திருக்கிறார்கள் என்பதே இந்த ஜன்மத்தில் அந்தப் பரிசுத்தம் கிடைக்கும் என்பதற்குத் திடமான ஆதாரமாயிருக்கிறது. கிறிஸ்தவ பரிபூரணத்தை

யடைந்தவர்களை நாம் பார்த்ததாக நமக்கு ஞாபகமில்லாதிருந்தாலும், கிறிஸ்தவ பரிபூரணத்தை யடைந்தவர்களோ முதலிலும் இருந்தார்கள், இப்போதும் இருக்கிறார்கள். பரிபூரணத்தை யடைந்திருக்கிறவர்கள் என்று இவர்களைக் குறிப்பறிவது ஒருவேளை கூடாத்தாகவிருக்கலாம். பூரண கிறிஸ்தவனுடைய நடத்தை எப்போதும் தூஷணைக்கும் தப்புக்கும் குறிப்பாகாது என்று சொல்லலாகாது. எப்படியெனில், அவனுடைய மனசின் அல்லது சரீரத்தின் அசக்தியினால் அவனிலே குறைகளும் குற்றங்களும் கண்டாலுங் காணலாம். கண்ணுக்குக் காண்பதை மாத்திரம் பார்த்து, சிலர் இவனுடைய நடத்தை தோஷமுள்ளதாக விருக்கிறது என்று எண்ணினாலும் எண்ணலாம். 'உலகத்தால் கறைப்படாதபடித் தன்னைக் காத்துக் கொள்ளுகிறதுமே பிதாவாகிய தேவனுக்கு முன்பாக மாசில்லாத சுத்தமான பக்தியாயிருக்கிறது' (யாக். 1[27]). கிறிஸ்தவன் ஒருவன் பூரணத்துக்கு வந்தெட்டிவிட்டானென்று அறிந்துகொள்வது கஷ்டமானது. ஏனென்றால் அவனிலிருக்கிற மனத்தாழ்மை பூரணத்தை யடைந்திருப்பதினால், தான் சித்தியடைந்தவன் என்று ஒருக்காலும் சொல்லிக்கொள்ளான். கிறிஸ்தவர்களில் சிலரோ, இப்படிச் சித்தியை அடைந்திருப்பதைக் குறித்து அனுமானப்படுவதற்கு ஆகாத திருஷ்டாந்தங்களினால் சாதிக்கலாம். திருஷ்டாந்தம் ஒன்றுமாத்திரம் கிடைத்தாலும் சித்தியடைவது சாத்தியமானது என்று ஸ்பஷ்டமாய்ச் சொல்லலாம். திருஷ்டாந்தம் அவசியமான விஷயத்தில் கொஞ்சம் யோசித்துப் பார்ப்போம். தேவன் அன்பாயிருக்கிறார் என்பதையும், தேவனில் நிலைத்திருக்கிற ஒவ்வொருவனும் பாவஞ்செய்கிறவனல்ல என்பதையும், எவன் அனுபவபூர்வமாயறிந்து தன் சுவிசேஷத்திலும் நிருபங்களிலும் போதித்தானோ அவனே பூரணகிறிஸ்தவன் என்று எவ்வித சமுசயமுமில்லாமல் சொல்லலாம். யோவான் பூரண கிறிஸ்தவனானால், நாமுங்கூட பூரண கிறிஸ்தவர்களாகக் கூடும்.

(இன்னும் வரும்.)

## Jehovah's Vineyard. Expository Notes on Isa. $5^{1\text{-}17}$

## யெகோவாவின் திராட்சத்தோட்டம்

### ஏசா. $5^{1\text{-}17}$

**சந்தர்ப்பங்கள்.**

காலம், ஏறக்குறைய கி. மு. 737, ஆமோஸுக்கு ஐந்து அல்லது பத்து வருஷத்துக்குப்பின். ஒரு பண்டிகை நாளில் கூடிவந்திருக்கிற



ஜனங்கள் மத்தியில் வாலிப தீர்க்கதரிசி எழுந்து பேசுகிறார். பாவத்தைக்குறித்து தமது தேசத்தாரை உணர்த்துவது அவருடைய நோக்கம். உடனே நேராகப் பாவத்தைக் கண்டித்தால் கேட்கமாட்டார்கள். விவேகமாய்ப் பாட்டு பாடுகிறார்.

பாட்டு.

அது எபிரெய யாப்பின்படி இயற்றிய பாட்டு. முதல் இரண்டு வரிகளைத் தவிர ஒவ்வொரு வரியிலும் ஐந்தைந்து அடி. பின்வரும் மொழிபெயர்ப்பை வாசித்தால் மூலப்பாட்டின் நடை தெரியவரும். கிங்க்ஸ்பரி தேசிகர் இதைத் திருப்பியிருக்கிறார்.

தோழனது திராட்சத் தோட்டத்தைப் பற்றிப்
பாடுவேன் யானொரு காதற் பாட்டே.

செழித்ததொரு குன்றிலுண்டோர் திராட்சத் தோட்டமென் தோழனுக்கே.
கொத்தினன்கல் பொறுக்கினன் குலத்திராட்சக் கொடிநட்டா னன்னவனே.
கோபுரமொன் றதினடுவே கட்டினான் ஆலையொன்று நாட்டினனே.
நற்கனியை எதிர்பார்த்தான். தோட்டமோ தீக்கனிதாம் கொடுத்ததையோ!

எருசலேம் குடிகளோ, யூதாவின் மனிதரே, இங்கு யாரும்,
தோட்டமதற் கும்மெனக்கும் வழக்கதனைத் தீருங்கள் நீவிர்தாமே.
தோட்டமதற் கியான்செய்த பண்படுத்தல் தனிலுமேமற் செய்யலாமோ?
நற்கனிநான் எதிர்பார்க்கத் தீக்கனியைக் கொடுத்ததிது நியாயந்தானோ?

என்திராட்சத் தோட்டமிதற் கியான்செய்யத்
துணிந்ததனைச் சொல்வேன்கேளும்.
வேலிதனை அகற்றிடுவேன் அழித்துவிடும்
அதுதன்னை மிருகந்தாமே;
அடைப்பதனைத் தகர்த்திடுவேன்; அதுதானே
மிதியுண்ணும் யாவராலும்,
கிளைநறுக்கேன் களைகொத்தேன் பாழாகும்
தோட்டமிது திண்ணந்தானே.

முட்செடியும் நெரிஞ்சிலுமே முளைப்பதன்றி
வேறேதும் முளையாகாணீர்.
மழையதன்மேற் பொழியாது முகில்களுக்கும்
கட்டளையைக் கொடுப்பேன்நானே.

சேனைகளின் யெகோவாவின் திராட்சவனம்
இஸ்ரவேல் வம்சத்தாரே,
யூதாவின் கோத்திரமோ அவர்மனத்தைக்
களிப்பிக்கும் தோட்டமாகும்.

தேடினார் நீதி—வந்தது கொலையே,
நாடினார் சீர்மை—கண்டனர் கூக்குரல்,

**பாட்டின் போதனை.**

*a.* நாம் தேவனுடைய தோட்டம் (1 கொரி. $3^{9}$ பார்க்க). எவ்வளவு சிரத்தையோடு நம்மைப் பண்படுத்தியிருக்கிறார். நமக்கு வேண்டியதை எல்லாம் செய்திருக்கிறார், என்னத்துக்காக?

*b.* நற்கனியைத் தேடுகிறார். அக்கனி எது? நாகரிகமா? நாகரிகம் தோட்டத்தின் ஒழுங்கு, வேலை முதலியன. கனி ஜீவனிலிருந்து உண்டாகும். இங்கே இரண்டுவிதமான நற்கனியைக் குறிக்கிறார் (7)—நியாயம், நீதி. நீதி உள்ளத்தில் இருந்தால், நியாயம் நடக்கையிலிருக்கும். மீகாவோ நற்கனியைக் குறிக்கிறார்—மீகா. $6^{8}$.

*c.* நற்கனி கொடாவிட்டால் முடிவு என்ன? 5-ம் வசனம். (லூக். $18^{6-9}$; யோவா. $15^{2}$ ஒப்பிட்டுப் பார்க்க.)

*d.* பாவம் என்பது பெருத்த நன்றிக்கேடு.

**தோட்டம் கொடுத்த தீக்கனிகள்.**

1. 8–10: மண்ணாசை. பூமியை அநியாயமாய்ச் சம்பாதிக்கிறது.

நமது கிராமங்களில் இது நடக்கும்போது ஆண்டவர் கவனியாமலிருக்கிறதில்லை. அதின் பலன், குறைவு. (9) ஜனங்கள் குறைந்து போவார்கள், (10) அறுப்பு குறைந்துபோம்.

2. 11–17: உல்லாசம், சாராயம் குடித்தல்.

இதின் விசேஷித்த கெடுதி—

*a.* 12 *b*, கர்த்தருடைய செய்கையை நோக்குகிறதில்லை.

*b.* 13, அறியாமையால் சிறைப்பட்டுப்போகிறார்கள்.

*c.* 14, மரணம்.

நமக்குத் தெரிந்த குடிகாரரிடத்தில் இம்மூன்று கெடுதிகளைக் காண்கிறோம். குடிகாரரை இரட்சிக்கும்படி நாம் என்ன செய்கிறோம்?

C. L. S. PRESS, MADRAS—1917

No. 131. ஏப்பிரல் 1917

# வேதியர் விளக்கு

OFFICE OF THE REGISTRAR OF ... REGISTERED 11 APR 1917 MADRAS

## Religion and Childhood

By Mr. G. S. Duraiswamy

*Adapted from Mr. K. J. Saunders' '*ADVENTURES OF THE CHRISTIAN SOUL*'*

## சிறுபிள்ளைகளும் கிறிஸ்துமார்க்கமும்

(தொடர்ச்சி)

பிறப்பிலிருந்தே சிறுவருக்கு மார்க்கானுகூலமான மனநிலையுண்டெனக் கேள்விப்பட்ட அக்பர் சக்கரவர்த்தி யதனுண்மையைப் பரீக்ஷிக்குமாறு அப்போதுதான் பால்குடி மறந்த இருபது குழந்தைகளைப் பிறர் அவர்களுக்கு எவ்விதமும் உபதேசம் செய்யக்கூடாதபடி ஓரிடத்தில் அடைத்துவைத்துச் சிலவாண்டுகள் சென்றபின்னர் அவர்களைப் பரீக்ஷித்துப் பார்க்கையில், அந்தோ! பரிதாபம்! குழந்தைகளெல்லாம் ஊமைகளாயிருந்தனர். அக்காலந்தொட்டே மனோதத்துவ சாஸ்திரிகள் பலர் அந்த முயற்சியில் ஆராய்ச்சி செய்துவருகின்றனர்.

நம்மிடை வெளிப்படையாகக் காணப்படும் அநேக உணர்ச்சிகள் குழைந்தைகளிடத்தில் மறைவாகவே யிருக்கின்றன. சாஸ்திரிகள் ஒப்புக்கொள்ளும் இரண்டு காரியங்களுள. அவையாவன: (1) குழந்தைகளிடத்தில் பிறப்பிலேயே மார்க்கானுகூலமான இயற்கையுணர்வுண்டு; (2) இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷம் இந்த இயற்கையுணர்வைக் கவர்ந்துகொள்ளும் தன்மையுடையது. பிள்ளைகளிடத்திற் காணப்படும் மார்க்கப்பற்று அசம்பாவிதமான காரியமல்ல. அது அவர்களுக்கு இயற்கையும் அதிசாதாரணமுமான ஒழுக்கம்.

ஒருவனுடைய சாதாரணமான வழக்கபழக்கங்கள் அவனுடைய மதாசாரம், கோட்பாடு முதலியவற்றுக்கு ஒத்திருக்குமேல் அவனுடைய ஆன்மஜீவியம் மகா உறுதியானதாயிருக்கும். ஆவிக்குரிய ஜீவியத்தை வளர்ப்பதற்கான ஹேதுக்களும் லக்ஷணங்களும் குழந்தைகளிடமுள்ளன. பிறர் செய்யக் கண்டதைத் தாமும் செய்ய முயலு

தல், நினைத்தமாத்திரம் தாமதமின்றி யோர் காரியத்தைச் செய்யப் பிரயாசப்படுதல், தாம் செய்துவருபவற்றைத் தமது வழக்கமாகக் கொள்ளுதல் முதலியன பிள்ளைகளின் இயற்கை.

சாப்பாட்டில் பிள்ளைகளுக்கு எவ்வளவு பிரியமோ அவ்வளவு பிரியம் ஜெபத்திலும் அவர்களுக் குண்டென்பர் மற்றொரு சாஸ்திரி. விசுவாசம் என்பது பிள்ளைகளிடத்தில் இயற்கையமைந்துள்ளது மாத்திரமன்றி அஃது அவர்களுக்கு இன்றியமையாததுமாகும் என்பர் மற்றொரு பெரியோர்.

பிள்ளைகளுடைய இதயத்தில் கடவுளைப்பற்றிய எண்ணத்தை வலிதில் உண்டாக்கவேண்டு மென்பதல்ல. பிள்ளைகளும் அரை குறையாகவேனும் தாமாகவே அதற்கு இயற்கையாய் உடன்படுவார்கள். இவ்விஷயத்தில் அறிவுபெறவேண்டுமெனும் ஆவல் பிள்ளைகளுக்கு இயல்பிலேயே யமைந்துள்ளது. தேவனோடு ஐக்கியப்பட்டு அவருக்குக் கீழ்ப்படியவேண்டுமெனும் ஆவலும் அவர்களுக்குண்டு. இவ்வாறெழுந்த ஆவல்களைத் திருப்திசெய்யவேண்டுவது அவர்களுடைய போதனாசிரியர் கடமையாம். அங்ஙனம் திருப்தி செய்தவிடத்து அவை அவர்கள் வழக்கமாகவும் ஒழுக்கமாகவும் ஜீவியத்தில் விளங்கும். ஒழுக்கம், மதம் முதலியவற்றைப்பற்றிய புதிய போதனைகளைக் கற்பிக்கவேண்டுமென்பதல்ல. இயல்பாகவே அவர்கள் மனதிடை பதியுமிவற்றை வெளிக்குக் கொண்டுவர முயலவேண்டும்.

ஆன்மஜீவியம் இயல்பான ஜீவியம். இது அபிவிர்த்திப்பதற்கேற்றது. மதசிந்தனையுள்ள மனமாதலின் மதபோதனைக்கும் இடங்கொடுக்கும்.

சரீர வளர்ச்சியும் ஆவிக்குரிய தேர்ச்சியும் ஒன்றோடொன்று நெருங்கிய சம்பந்தமுடையன. இயற்கையான தத்துவங்கள் வளர்ந்துகொண்டே போயின் ஆன்மவளர்ச்சியும் விர்த்தியாகும்.

பிள்ளைகள் தங்களைக்காட்டிலும் வயதிற் பெரியோரானவரிடத்திற் சார்ந்து அவர்களிடத்தில் பயபக்தியாயிருப்பார்கள். புதிதாக எதைக் காணினும் ஆச்சரியமுறுவார். சொல்லிக்கொடுப்பதைக் கற்றுக்கொள்ளும் விருப்பினர். அவர்கள் நெஞ்சம் எதற்கும் எளிதில் இரங்கும் தன்மையது. எக்காரியத்திலும் எவரிடத்திலும் சீக்கிரம் அன்பு பூணுமியல்பினர். பிரீதியோடு கீழ்ப்படியும் கொள்கையார். எதைச் சொன்னாலும் நம்பி விசுவாசிப்பார்கள். இவை காரணங்களாலன்றோ எம்பிரான் சிறுவரிடத்தில் அன்புகூர்ந்தார். திருச்சபையும் தங்கள் ஆண்டவரைப்போலவே சிறுவரிடத்தில் அன்புகூர்ந்து அவர்களுக்காகக் கவலைப்படவேண்டும். உண்மையான தேவனுடைய இராஜ்யம் சிறுவருடையதென்பதைத் திருச்சபை கண்டுகொண்டது.



எனினும் மனோதத்துவ சாஸ்திரப்படி பிள்ளைகள் முழுவதுமாய் ஆன்மகாரியங்களில் சார்ந்தவர்களல்ல. ஏதோ சிறிது வெளிச்சம் அவர்களிடத்திலுண்டு. மங்கலான கண்ணாடியினால் காணுமாறுபோல ஆன்மகாரியங்களைக் காண்கிறார்கள். வயதேற ஏற அதனையே தெளிவாயும் முகமுகமாயும் காண்பார்கள். பரி. பவுல் அப்போஸ்தலனும் 'நான் குழந்தையாயிருந்தபோது குழந்தையைப்போல் பார்த்தேன்' என்கிறார். இந்த அனுபவத்தின் காரணமென்ன? கடவுள் நம்மெல்லாருக்கும் சமீபமாகவே யிருக்கிறார் என்பதே. நாம் அவரில் இருக்கிறோம், பிழைக்கிறோம், அசைகிறோம். நாம் பூரண புருஷராகும்போது அவர் நம்மைச் சுவீகரிக்கும்படி வேண்டுகிறோம். பிள்ளைகளின் சுதந்தரம் இன்னதென்பதைத் தெளிவாயறிகிறோம். அவரை 'அப்பா பிதாவே!' என்றழைக்கிறோம்.

திருச்சபை முற்பிதாக்கள் அப்படியே யறிந்திருந்தனர். 'எங்களை உமக்காகப் படைத்தீர். நாங்கள் உம்மில் தங்கி இளைப்பாறும்வரை அமைதியின்றி யிருப்போம்' என்றார் பரி. அகுஸ்தீன்.

தெர்த்துல்லியன் 'இயற்கையாகவே ஆத்மா கிறிஸ்துவைச் சார்ந்தொழுகும் தன்மையுடையது' என்றான். அது நம்மில் வாசமாயிருக்கிற ஆதிவார்த்தைக்கு நம்மை வழிநடத்துகிறது. அந்த வார்த்தையே ஒவ்வொருவரையும் பிரகாசிப்பிக்கிற ஒளியாயிருக்கிறது. தற்கால உலகம் இந்தக் கோட்பாட்டை ஏற்றுக்கொள்ளக்கூடிய பக்குவதசையை யடைந்துவிட்டது. அவதார புருஷனாய் வந்த தேவனுடைய வார்த்தையாகிய கிறிஸ்துவை உலகினர்க்குக் காட்டி உலகைக் கெடுக்கும் அத்துவைத்த கோட்பாடுகளை யகற்ற முயல்வோம்.

பிள்ளைகளின் இயற்கை மதசம்பந்தமானதென்பதுமாத்திரமல்ல, கிறிஸ்துமார்க்கத்திற் கிசைந்ததெனவும் சாஸ்திரிகள் கூறுவார்கள். இது காரணத்தினாலும் நாம் பிள்ளைகளை அதிகமாய்க் கவனிக்கக் கடமைப்பட்டுள்ளோம். பிள்ளைகள் கிறிஸ்துவிற் சாரக்கூடும். இப்போதுதான் பிறந்த குழந்தைகளையும் கூடக் கிறிஸ்துவிற் சாரவைத்தல் கூடாத காரியமல்ல.

பரி. லூக்கா அப்போஸ்தலன் இன்னும் பிறவாமல் வயிற்றினிருந்த குழந்தையும் கிறிஸ்துவின் வருகையைக் கேட்டமாத்திரத்தில் மகிழ்ச்சியோடு துள்ளியதாகச் சொல்லுகிறார்: (லூக். 1. 41-44). நம்மில் உள்ளேயே வாசமாயிருக்கும் ஆவியைப்பற்றிய அரிய கோட்பாட்டை மனோதத்துவசாஸ்திரம் வரவரத் தெளிவாய் விளக்குகிறது.

பிள்ளைகளின் அறிவு விர்த்தியாகுமுன்னும் அவர்களின் இதயத்திலுள்ள இயற்கையறிவினாலேயே அவர்கள் இயேசுவைக் கிட்டிச் சேருகிறார்கள். கிறிஸ்துமார்க்கம் அதிசாதாரண இயல்புமார்க்கமாக

கள் என்று சொன்னபோது, அவைகளைக் கோவிற்சுவரில் வைக்க வேண்டாமென்று வெகுவாய் வேண்டிக்கொண்டார்கள். ஆயினும் அவைகளை அங்கேயே வைத்துத் திரும்பினோம்.

கரிசனாம்பட்டி என்ற கிராமத்தில் ஒருநாள் இரவு ஒளிச்சித்திரம் காட்டினோம். சிலநாட்கழித்து ஒருநாள் பகலில் அங்கே போனபோது அங்கிருந்த கோமுட்டி எங்களைப் பார்த்து, 'நீங்கள் என்ன வித்தைகள் தான் செய்தாலும், எத்தனை தடவை நடந்தாலும் இங்கிருந்து ஒரு குஞ்சும் வேதத்திற்கு வராது; ஏன் வீணாய் அலைகிறீர்கள்?' என்றான். அதற்கு, 'ஒரு குஞ்சு வராது, வாஸ்தவம். வரும்போது குஞ்சும் குருமானுமாய்ச் சேர்ந்துவரும். நாங்கள் வீணாய் அலையவில்லை என்பது எங்களுக்குத் தெரியும்' என்றோம்.

புரத்திற்கருகாண்மையிலுள்ள ஓர் வன்னியச் சேரியில் நாங்கள் பேசினபோது, கொஞ்சநேரம் சிலர் நன்றாய்க் கேட்டார்கள். அப்புறம் ஒருவன் வந்து 'ஆமாய்யா நீங்க சொல்றது சரி, கிறிஸ்தொங்க ஆயிட்டாச் சாதி கெட்டுப்போவுதே. இருவது வரிசத்திக்கி மின்ன எங்க மனிசன் ஒருத்தன் வேதத்திலே உளுந்தான், அவன் மொட்டையடிச்சி சொக்கா கிக்கா போட்டுவெச்சித்தான் இரிக்காங்க. நாலஞ்சி வரிசத்துக்கு மின்ன இங்ககூட வந்தான். எங்க வூட்டு வாசலுக்குள்ள நொழைய வாண்டாமின்னு போகச் சொல்லிட்டம். வேதத்தில் உளுந்தாத் தகப்பன் உயிரோட இருக்கச்சில ஏன் மொட்டையடிச்சிக் கொள்ளி வைக்கிறாங்க. நாங்கள்ளாம் அப்படிச் செய்யமாட்டம்' என்றான். இதற்கெல்லாம் என்ன நியாயம் சொல்லியும் அவன் சொன்னதையே சாதித்தான். இவ்வளவு அறிவீனமும் அந்தகாரமும் எங்களை நன்றாய் உபசரித்தனுப்பிய புரத்தின் பக்கத்திலே தான் இருக்கிறது. இவர்கள் இருதயத்தில் ஒட்டியிருக்கும் இருளை இயேசுவாகிய ஒளி எக்காலம் புகுந்து ஓட்டுவாரோ! பாவம்! இப்போது கிறிஸ்தவர்கள் மாத்திரமல்ல, கல்வி கற்கும் பார்ப்பாரும் இதர ஜாதியாரும்கூட தங்கள் தலைகளை வசதியின்பொருட்டு மொட்டையடித்துக்கொள்ளுகிறார்கள் என்று இந்த ஏழை ஜனங்களுக்குத் தெரியவில்லை. கொள்ளிவைக்க மொட்டையிடுவ தொன்றுதான் தெரியும். அல்லாமலும் பிரசங்கத்திற்கு அவ்வூருக்கு அச்சமயம் போயிருந்த நாங்களெல்லாரும் தலை மொட்டையிட்டுக்கொண்டவர்களே. ஆதலால்தான் 'வேதத்திலே உளுந்தால் மொட்டையடிச்சிக்கின்றாங்க' என்றான். அந்த ஊராருக்கு Mr. Narasimham, புரத்திலும் அதற்கடுத்த ஊரிலுமுள்ள உபாத்திமார் முதலிய முடித்தலைக் கிறிஸ்தவர்களைக் காணவில்லையோ அல்லது கண்டும் காணாதவன் போலவும் பேசினானோ அறியோம்.



புரத்துக்கும் ரெயில்பாதைக்கும் இடையிலுள்ள வேறொரு ஊரில் ஒருவர் வந்து, கிறிஸ்துமார்க்கம் நல்ல மார்க்கம், நல்லமார்க்கம், தங்கமானமார்க்கம். ஆனால் கிறிஸ்தவர்களும் அதைப் போதிக்கிறவர்களுங்கூட அவர்கள் வேதத்திலே சொல்லுகிற பிரகாரம் செய்கிறதில்லை. ஆகையினாலேதான் உங்கள் பிரயாசத்திற்குத் தக்கபலன் காண்கிறதில்லை' என்றார். அதற்கு, 'ஆம், அது மெய். ஆயினும் பத்தியப் பிசகினால் அவிழ்தம் பலியாதிருக்க, அவிழ்தமே ஆகாதென்று சொல்வதும் தப்புத்தான்' என, அவர் அதை ஒத்துக்கொண்டு, 'ஆயினும் அவிழ்தத்தை மற்றவர்களுக்குக் கொடுக்கப் பிரயத்தனிக்கிறவர்களாவது, பத்தியம் காத்துப் பலிதம் காட்டுவது நியாயமல்லவா' என்றார். அதை நாங்கள் தாழ்மையோடு ஒத்துக்கொண்டு மனதிலே குத்துண்டவர்களாய் திரும்பலாயிற்று. ஆ! இது எவ்வளவு பரிதாபம்! இப்படி எத்தனைபேர் கிறிஸ்தவர்களைப் பார்த்தும், கிறிஸ்தவ ஊழியரைப் பார்த்தும் இடறலடைகிறார்களோ? நாம் அழைக்கப்பட்ட அழைப்புக்கு அபாத்திரராய்ப் போவதுமன்றி, மற்றவர்களுக்கு இடறலாயிருப்பதால் கழுத்தில் எந்திரக்கல் கட்டிச் சமுத்திரத்தில் தள்ளுண்ணப்படுவதைப் பார்க்கிலும் பெரிய ஆக்கினைக்கும் ஆளாவதாகுமல்லவோ. 'மற்றவர்களுக்குப் போதிக்கிற நானே ஆகாதவனாய்ப் போகாதபடி என் சரீரத்தை ஒடுக்கி அடக்குகிறேன்' என்ற வேதியனின் வாக்கியம், வேதியர் நம்மெல்லாருக்கும் எப்போதும் மேற்கோளா யிருக்கவேண்டியதே என்பது எங்கள் மனதில் அழுந்திப் பதிந்தது.

இதற்கிசைவாகவே, மத்தியானத்திற்குமேல் மாணவர் தியானக்கூட்டத்தில், 'வேதியன் ஒழுக்கம்' என்ற பொருளின்பேரில், 'வேதியனும் அவன் வேலையும்,' 'வேதியனும் அவன் ஜெபஜீவியமும்,' 'வேதியனும் அவன் படிப்பும்,' 'வேதியனும் அவன் ஜனசமுதாய வேலை ஒழுக்கமும்' என்று பிரிவுசெய்து ஒவ்வொரு நாளிலும் ஒவ்வொரு பிரிவின்பேரில் ஒருவரோடொருவர் கலந்து பேசித் தியானித்தோம். அதிலும் ஒருவனுடைய வேலைத்திறமும் வாக்குசாமர்த்தியமும் பண்டிதத்திறமையும் அல்ல, அவனவன் எவ்வளவுக்குத் தன் அந்தரங்க பகிரங்க ஜீவியத்தில் தேவசித்தம் நாடி அவரோடு கலந்துறவாடி இருக்கிறானோ அவ்வளவுக்குத்தான் அவன் மதிப்பும், வேலையில் தேவஆசீர்வாதமும் தங்கும் என்பது வற்புறுத்தப்பட்டது.

# The Christian Worker and Evangelism

**By the Rev. W. J. Tunbridge**

(Adapted from English pages in Nov. & Dec. 1916)

## கிறிஸ்தவ ஊழியனும் சுவிசேஷ பிரபல்லியமும்

முதலாம் பாடம்

*கிறிஸ்தவ ஊழியனும் அவன் சாதனங்களும்*

*சாதனங்கள் அவசியம். அற்பக் கருவிகளைக்கொண்டு தேவன் பெரிய காரியங்களைச் செய்யக்கூடும். ஆனால் உத்தமமான கருவிகள் அதைவிட மேலான காரியங்களைச் செய்ய உதவும்.*

*பவுல் அப்போஸ்தலன் இதற்கோர் சிறந்த திருஷ்டாந்தம்.*

I. இயற்கை சாதனங்கள்.

(a) யூதனாகப் பிறந்தவர்.

*அவருக்கிருந்த பழைய ஏற்பாட்டின் அறிவு, அவர் காட்டின மத வைராக்கியம், தேவனுடைய பரிசுத்தத்தையும் மனிதனுடைய பாவத்தையும் பற்றி அவருக்குண்டாயிருந்த ஆழ்ந்த உணர்ச்சி இவைகளுக்கெல்லாம் இதுவே காரணம்.*

*இது அவர் ஊழியத்துக்கு எவ்வளவு அனுகூலமாயிருந்தது என்பதை கவனி.*

(b) ரோமசிலாக்கியமுடையவர்.

*இதினால் அவருக்கோர் அந்தஸ்து கிடைத்திருந்தது. இதின் மூலமாய் இராஜ்ய பரிபாலன விஷயங்களை நன்றாய் அறிந்து, அவைகளை உபயோகிக்கக் கூடியவராயிருந்தார்.*

*இதுவும் அவர் ஊழியத்துக்கு மிக்க உதவியாயிருந்தது என்பதைக் கவனி.*

(c) கிரேக்க ஞானத்தில் தேறினவர்.

*இவ்விதக் கல்வித்தேர்ச்சியினால் அவர் யூதனைப்போல மற்றவர்களை அற்பமாயெண்ணாமல் யாவரோடும் தாராளமாய் சகவாசம் பண்ணினார்.*

*இது அவரை தம்முடைய ஊழியத்துக்குப் பக்குவப்படுத்திற்று என்பதைக் கவனி.*

(d) கைத்தொழில் பழகினவர்.

*கூடாரவேலை செய்து தன்னை சம்ரக்ஷணை செய்து கொண்டார். ஆகையினால் சுவிசேஷ ஊழியத்தை சுயநயத்தோடு செய்தார் என்று சொல்வதற்கிடமே யிருந்ததில்லை.*



*இது அவருடைய ஊழியத்துக்கு எவ்வளவு மகிமையாயிருந்தது என்பதைக் கவனி.*

II. மனோசாதனங்கள்.

*இது ஒருவாறு மேற்சொல்லிய குறிப்புகளினாலும் விளங்கும். அவைகளோடுகூட பரி. பவுல்—*

(a) நல்ல ஞாபகசக்தியுள்ளவர்.

*பழைய ஏற்பாட்டிலிருந்தும், கிரேக்க கவிகளிலிருந்தும் தாராளமாய் எடுத்துரைத்தார்.*

(b) சமயோசிதமாய்ப் பேசும் திறமையுடையவர்.

*திருஷ்டாந்தமாக:—*

1. *அந்தியோகியா ஜெப ஆலயத்தில் யூதருக்கு செய்த பிரசங்கம். அப்.* 13.
2. *லீஸ்திரா சந்தை வெளியில் அஞ்ஞானிகளுக்கு செய்த பிரசங்கம். அப்.* 14.
3. *அத்தேனே மார்ஸ் மேடையில் தத்துவஞானிகளுக்கு செய்த பிரசங்கம். அப்.* 17.
4. *எருசலேம் கோட்டைப் படிகளில் கலகக்காரருக்கு செய்த பிரசங்கம். அப்.* 21.
5. *செசரியா அரண்மனையில் தேசாதிபதிக்கு செய்த பிரசங்கம். அப்.* 24.

(c) ஆழ்ந்த கருத்துகள் நிறைந்தவர்.

*நிருபங்களைப் பார்க்க.*

(இன்னும் வரும்.)

# The preparation of Sermons

**By the Rev. H. Spencer, B.A.**

## பிரசங்க முறை

(தொடர்ச்சி)

*இரண்டாவது, நாம் கிறிஸ்துவுக்கு சாக்ஷிகளாய் இருக்கிறோம்.*

*கிறிஸ்து பரலோகத்துக் கேறி தமது சீஷர்களுடைய கண்களுக்கு மறைவதற்குமுன் அவர்களை நோக்கி 'பரிசுத்த ஆவி உங்க*

ளிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எனக்கு சாட்சிகளாயிருப்பீர்கள்' (அப். $1^{8}$) என்று நிச்சயித்தார்.

தாம் மரணமடைந்த தினத்துக்கு முந்தின நாள் இராத்திரி சிஷரிடம் சம்பாஷித்து, இந்த உத்தியோகத்தை அவர்களுக்கு நியமித்தார். 'பிதாவினிடத்திலிருந்து நான் உங்களுக்கு அனுப்பப்போகிறவரும், பிதாவினிடத்திலிருந்து புறப்படுகிறவருமாகிய சத்திய ஆவியான தேற்றரவாளன் வரும்போது, அவர் என்னைக்குறித்துச் சாட்சி கொடுப்பார். நீங்கள் ஆதிமுதல் என்னுடனேகூட இருந்தபடியால் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்' (யோவா. $15^{26,27}$) என்று சொன்னார். அப்போஸ்தலர் தாங்கள் கண்ணாரக்கண்ட சங்கதிகளை மற்றவர்களுக்குத் தெரிவிக்கவேண்டியது தங்கள் கடமை என்று அறிந்துகொண்டார்கள். அப்போஸ்தலர் தங்களைப்போல இந்த உத்தியோகத்தில் பங்குபெறும்படி எப்பேர்ப்பட்டவர்களை அங்கிகரித்தார்கள் என்றால், கிறிஸ்து மனுஷனாக இருந்தபோது அவரைக் கண்டு, அவர் போதகத்தைக் கேட்டு, அவர் மரித்து உயிர்த்தெழுந்ததைக் கண்ணாரக்கண்டவர்களை மாத்திரம் நியமித்தார்கள் (1 கொரி. $9^{1}$; அப். $1^{21,22}$). தாம் கண்ட காரியங்களையும், கேட்ட வார்த்தைகளையுங் குறித்து சாட்சியிட்டுக்கொண்டு வந்தார்கள் (அப். $2^{32}$; $4^{18,19,20}$; $5^{30-32}$; $10^{16-43}$; $18^{28-31}$; $20^{24}$; $22^{6-10}$; $26^{12-23}$; 1 யோவா. $1^{1-5}$). நாம் கிறிஸ்துவைக் கண்ணாரக் கண்டவர்களல்ல. அப்போஸ்தலர் இந்த சங்கதியைக்குறித்து சாட்சியிட்டபடியே நாம் சாட்சியிட முடியாது; அப்படியிருந்தாலும் அப்போஸ்தலரைப்போல் 'நாங்கள் கண்டவைகளையும் கேட்டவைகளையும் பேசாமலிருக்கக்கூடாதே' (அப். $4^{20}$) என்கிற வார்த்தைகளை நாமும் சொல்லுகிறவர்களாயிருக்கவேண்டும். பவுல் 'நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை நான் தரிசிக்கவில்லையா?' (1 கொரி. $9^{1}$) என்று சொல்லுகிறான். இது அவர் சரீரத்தில் கிறிஸ்துவைப் பார்த்த காரணம் அவர் கொடுத்த சாட்சியில் விசேஷமான பலம் இருந்ததென்று தீர்மானிக்கவேண்டுமோ? 'இது முதற்கொண்டு நாங்கள் ஒருவனையும் மாம்சத்தின்படி அறியோம்; நாங்கள் கிறிஸ்துவையும் மாம்சத்தின்படி அறிந்திருந்தாலும், இனி ஒருபோதும் அவரை மாம்சத்தின்படி அறியோம்' (2 கொரி. $5^{16}$) என்று தீர்மானித்தபின் பவுல், நான் சரீரக்கண்ணால் இயேசுவைப் பார்த்திருக்கிறேன் என்று சொல்வதை விட்டு ஆத்மீகக் கண்ணால் அவரைக் கண்டிருக்கிறேன் என்று பலமான சாட்சி கொடுத்தவர் தான். இவ்விதமாய் நாமும் கிறிஸ்துவைப் பார்த்திருக்கிறோம் என்று சாட்சி பகரவேண்டும். கிறிஸ்துவை ஆத்மீகமாய்ப் பாராதவர்கள் அவரைக் கூறியறிவிக்கும் உத்தியோகத்தில் பங்காளிகளல்ல.



கிறிஸ்துவின் திவ்ய புருஷத்துவமும் நரசுபாவமும் திவ்யகுணங்களின் சம்பூரணமுமாகிய கனமுள்ள சங்கதிகளைக்குறித்து நாம் பிரசித்தப்படுத்தவேண்டுமல்லவா? அப்படியானால் நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னார் என்று அறிவேன் என்று சொல்வதற்கு நமக்கு தைரியமுண்டோ? அவர் மரணத்தை அனுபவித்ததினாலே பூலோகத்தாருக்கும் தேவனுக்கும் சமாதானத்தை யுண்டுபண்ணி, யாவருக்கும் ஆத்மீக ஜீவனின் மூலகர்த்தாவாயிருக்கிறாரென்று கூறி யறிவிக்கிறவர்களாயிருக்கிறோமல்லவா? அப்படியானால் அவருடைய மரணத்தினால் உண்டான பலனை நாமே யடைந்திருக்கிறோமா? 'கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன்; ஆயினும் பிழைத்திருக்கிறேன்; இனி நானல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்; நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத் தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்' (கலா. $2^{20}$) என்பது நாம் அவருடைய மரணத்தைக்குறித்துச் சொல்லுகிற சாட்சிக்கு ஆதாரமாயிருக்கவேண்டும். அவர் மரணத்தைத் தொலைத்து பூரணமாய் ஜீவனையடைந்து எழுந்து சர்வ சக்தியினாலும் கருணையினாலும் நிறைந்தவராய் இருக்கிறாரென்று சாட்சிகொடுக்கவேண்டுமல்லவா? அவரைப் பார்த்தேன் என்றும் அவர் என்னோடு பேசி தமது கருணையை எனக்கு தயைபாலித்தார் என்றும் சொல்லக்கூடுமோ? (எபே. $^{15-23}$ வாசித்துப் பார்க்கவும்). அனுபவத்திலிருந்து தெரிந்துகொண்ட சங்கதிகளைக்குறித்து நாம் சாட்சி கூறுகிறவர்களாயிருக்கவேண்டும்.

மூன்றாவது, நாம் தேவனுடைய இரகசிய காரியங்களை நடப்பிக்கிற ஊழியக்காரராய் இருக்கிறோம்.

(1 கொரி. $4^{1,2}$; $9^{17}$; ரோம. $16^{25,26}$; எபே. $1^{9,10}$; $3^{1-18}$; கொலோ. $1^{15-27}$). மேற்கூறிய வசனங்களை கவனத்தோடு வாசிப்பதினால் நம்முடைய உத்தியோகத்தைக்குறித்த மூன்றாம் திருஷ்டாந்தத்தை அறிந்துகொள்ளவேண்டும். இந்த வேதபாகங்களை ஒவ்வொன்றாய்ப் பரீட்சித்து, அவைகளின் முக்கிய தாற்பரியத்தை தியானிக்கக்கடவோம்.

ரோம. $16^{25,26}$: பூர்வகாலத்தில் தேவன் தமது இரகசியங்களை யாருக்கும் வெளிப்படுத்தவில்லை. சகல தேசத்தாரும் தேவனை நம்பி கீழ்ப்படிதலுள்ளவர்களாய் இருக்கவேண்டுமென்பது அந்த தத்துவத்தின் கருத்து. அந்த தத்துவத்தை சாதிக்கிற விதமாய் தேவன் பிரபஞ்சத்தை ஆண்டு நடத்திவந்தார். ஆதலால் அவர் பிரபஞ்சத்தை ஆண்டுவந்த விதம் மனுஷருக்குத் தெரியவந்ததில்லை. ஆயினும் இக்

காலத்தில் தேவன் அந்த இரகசியத்தை வெளிப்படுத்தியிருக்கிறார். அந்த வெளிப்படுத்தல்தான் இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷம். அந்த சுவிசேஷத்தை அறிந்துகொண்டவர்கள் தேவனுடைய நோக்கத்தையும் அவர் இப்பிரபஞ்சத்தில் நடப்பிக்கும் ஆளுகையையும் அறிந்துகொள்வார்கள். மேலும் அது எல்லாருக்கும் தெரியும்படி இவர்கள் இந்த இரகசியத்தின் உத்தரவாதத்தை யுணர்ந்து உழைக்கிற ஊழியக்காரராயிருக்கிறார்கள். எபே. $1^{9,10}$: இவ்வசனங்களைப் பார்த்து எல்லாவற்றையும் கிறிஸ்துவில் ஒன்றாய் இணைப்பதே அந்த எண்ணத்தின் சாராம்சமாய் இருக்கிறது என்று அறியவேண்டும். கிறிஸ்துவை பிரஸ்தாபிப்பதினாலே இந்த நோக்கம் கைகூடிவரும். எபே. $3^{1-13}$: இந்த வசனங்களில் பவுல் அதே கருத்தை பரிஷ்காரமாயும் விஸ்தாரமாயும் விவரிக்கிறான். கொலோ. $1^{15-27}$: முன் காணப்படாமலிருந்து இப்போது காணப்படுகிற தேவனுடைய இரகசியத்தின் சாராம்சமாவது, கிறிஸ்து உங்களில் இருக்கிறார் என்பதே. சகல ஜனங்களுக்கும் இந்த இரகசியத்தின் மகிமையும் பாக்கியமும் கிடைக்கவேண்டியதாயிருக்கிறது.

மேலே எழுதியிருக்கிற இந்த வசனங்களினால் தேவனுடைய அபிப்பிராயம் சுவிசேஷங்களில் அடங்கியிருக்கிறதென்று பார்க்கிறோம். அதை யறிந்திருக்கிற நாம் நம்முடைய பிரயோஜனத்துக்காக மாத்திரம் உபயோகிக்காமல், இந்த நம்முடைய அறிவு மற்றவர்களுக்கும் நன்மை பிறப்பிக்கும்படி தெரிவிக்கவேண்டும். நாம் கிறிஸ்துவின் ஊழியர். ஊழியராகிய நாம் இதாருக்கு நம்பிக்கையுள்ளவர்களாகக் காணப்படவேண்டும். நாம் இடைவிடாமல் கிறிஸ்துவைக் கூறி யறிவிப்பதினாலே நம்பிக்கையுள்ளவர்களாகக்கூடும் என்று காண்கிறோம்.

---

# Holiness

**By the Rev. A. Paramanandam**

## பரிசுத்தம்

(தொடர்ச்சி)

### எட்டாம் அதிகாரம்

*பரிசுத்தத்தின் அனுபவம்

II. நாம் சித்தியடைந்திருக்கிறோம் என்று தெரிந்துகொள்வது எவ்வாறு?

(1) தேவன் நம்மை நீதிமான்களென்று எண்ணி தத்துபுத்திரராக தம்முடைய குடும்பத்தில் சேர்த்துக்கொண்டிருக்கையில் நாம்



தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம் என்பதற்கு தேவ ஆவியானவர் தாமே நம்முடைய ஆவியுடனே கூட சாக்ஷி கொடுக்கிறார் (ரோ. $8^{16}$). நாம் பூரண சுத்திகரிப்பை அடைந்திருக்கிறதற்கு எதாவது சாட்சியுண்டோ? ஆம், சாட்சியுண்டு. ஆனால் அது இதைப்போன்ற சாட்சியல்ல. தேவன் நம்மை நீதிமான்களென்று நிர்ணயித்திருக்கிறாரென்றும், நம்மைத் தம்முடைய தத்துபுத்திரராக சுவிகரிக்கிறார் என்றும், பரிசுத்தாவியானவர் நமக்குத் தெளிவாய் தெரிவிக்கிறார். தேவன் நமக்குத் தயவாய்க் கொடுத்திருக்கிற இந்த வரங்களை தேவனிடத்திலிருந்து புறப்படுகிற ஆவியானவருடைய சாட்சியினாலேயே யொழிய வேறே எந்தவிதமாயு மறிந்துகொள்வது கூடாமை (1 கொரி. $2^{12}$). பூரண சுத்திகரிப்போ தேவன் நமக்குச் சும்மா ஈகிற வரமல்ல. அது நம்மில் நடந்திருக்கிற காரியத்தின் உண்மையான நடபடிக்கையாயிருக்கிறது. ஆதலால் இந்தக் காரியம் நிறைவேறிற்று என்கிற நிச்சய அறிவு மேற்கண்ட சாட்சியைப் போல் ஆவியானவருடைய வார்த்தை நமக்குத் தெரியாமலிருந்தாலும், இது அதைப்போல் அனுமான ஆஸ்பதமாயிராது. இந்த அறிவு அனுபவத்தினால் தெரிந்துகொண்டதேயொழிய அகஸ்மாத்தாய் திடீரென்று வந்ததல்ல. இப்பேர்க்கொத்த விசேஷமான காரியத்தை நமக்குத் தெரியாதபடி நம்மிலே தேவன் நடப்பிக்கிறார் என்று நினைக்கலாகாது. பரிசுத்தாவி நம்மை சுத்தராக்குவதற்காக நடப்பிக்கிற வேலை நம்முடைய அறிவுக்குட்பட்டிருக்கிறதே யல்லாமல் அறிவுக்கு மேற்பட்டதுமல்ல, தூரமானதுமல்ல. இந்தக் காரியம் நமக்குத் தெரியாமலிருக்கும்படி யாதாமொரு மந்திரசக்தியினால் நம்மையே மறுரூபமாக்கிவிடுகிறதுமல்ல. ஆனால் இது விழிப்பாயிருக்கிற மனசில் கிரமமாய் விருத்திசெய்கிற ஓர் வேலையாய் இருக்கிறது. நமது சரீராதீன சுபாவம் செத்து, நம்முடைய இருதயத்தில் பூரண அன்பு எக்காலத்தில் பிரபலமாகுமென்று நமக்குத் தெரியாமலிருந்தாலும், நம்முடைய இருதயத்தில் பூரண அன்பு குடிகொண்டு அங்கிருந்து சமஸ்த துர்க்குணங்களை விலக்கிவிட்டதென்று அனுபவத்தினால் கொஞ்சகாலத்துக்குள் தெரியவரும். நாம் சகோதரரிடத்தில் அன்புகூருகிறபடியால் மரணத்தைவிட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கிறோமென்று தெரிகிறது (1 யோவா. $3^{14}$).

(2) ஆனால் கிறிஸ்தவன் சித்தியடைந்திருக்கிறான் என்று தெரிந்துகொண்டிருப்பது தப்பாயிருக்கக்கூடாதோ? நிஜந்தான்; சிலர் இவ்விதமாய் மோசம்போயிருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் தேவன்பேரிலுள்ள அன்பும் மனிதர்பேரிலுள்ள அன்பும் தங்களிடத்தில் ஏராளமாயிருக்கிறதென்று அறிந்து, தங்கள் அன்பு

பூர்ணமானதென்று எண்ணிக்கொள்ளுகிறார்கள். ஆனால் இவர்கள் இருதயத்தில் நிறைந்திருக்கிற அன்பு சுத்தமாயும் ஆவிக்குரியதாயும் இருந்தாலும், ஆசாபாசத்தினால் கட்டப்பட்டு மனுஷ அன்பைப்போலிருக்கிறதேயொழிய, தேவனுடைய அன்பைப்போன்றதல்ல. அது இன்னும் அகங்காரமில்லாமலில்லை. நெருப்பானது பொன்னிலே படிந்திருக்கிற களிம்பை நாசஞ் செய்கிறபடியே, இத்தவிதமான அன்பு இருதயத்தில் நிலைத்திருக்கிற பாவத்தை நாசஞ்செய்து சுத்திகரிக்கிறதில்லை. பரிசுத்தாவியானவர் நம்மிலே தம்முடைய வேலையை எவ்வளவுதூரம் முடிக்கிறார் என்பதை நம்முடைய அனுபவத்தில் காண்கிற சந்தோஷத்தினால் அளப்பதற்கு முடியாது. தான் பூரண அன்பையுடையவனென்று அறிந்திருக்கிற கிறிஸ்தவ சித்தன் தான் என்கிற அகங்காரத்தை எல்லாரைப்பார்க்கிலும் அதிகமாய் மறந்துபோகிறவனாயிருக்கிறான்.

(3) பரிசுத்தாவியானவர் நம்மில் தமது வேலையை பூர்த்திசெய்கிறாரோ அல்லவோ என்கிற நிச்சயத்தை அவரிடத்திலிருந்துண்டாகிற பலன்கள் நம்மில் காணுமோ இல்லையோ என்பதிலிருந்து அறிந்துகொள்ளவேண்டும். நம்முடைய நடத்தையில் சரீராதீன சுபாவத்தின் காரியங்கள் கொஞ்சமும் தோன்றாமலிருப்பதினாலும், அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம் விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் இவைகள் நம்முடைய சுபாவத்தில் சாதாரண குணங்களாய் இருப்பதினாலும் நாம் பூரண பரிசுத்தத்தை அடைந்திருக்கிறோமென்று திடமாய் நம்பலாம். கிறிஸ்தவ சித்தன் தேவனையும் மனுஷரையும் மனப்பூர்வமாய் அன்புகூருகிறவனாயிருக்கிறான். இந்த அன்பு தேவனிடத்தில் அவனுக்கிருக்கிற பயத்தையும், மனுஷரிடத்தில் அவனுக்கிருக்கிற குரோதம், விரோதம், மதம், மச்சரம் முதலானவைகளையும் துரத்திவிடும். அவன் எப்போதும் சந்தோஷப்பட்டுக்கொண்டிருப்பான். எல்லா விஷயத்திற்காகவும் நன்றியறிந்த ஸ்துதி செய்வான். தான் தேவனுடைய தயவுக்குப் பாத்திரனாயிருக்கிறேனென்று திடமாக நம்பி, எந்த வியாகுலமாவது உபத்திரவமாவது அசைக்கக்கூடாத சஞ்சலமற்ற மனச்சமாதானத்தை அடைந்திருப்பான். பிரபஞ்சத்தின் கஷ்டங்களையும், கெட்டவர்களுடைய விரோதங்களையும் கொஞ்சமும் முறுமுறுக்காமல் சகித்திருப்பான். லோகவியாபாரத்தில் இவனுடைய தயவும், நற்குணமும், நம்பிக்கையும் நன்றாய் காணப்படும். தேவன் அல்லது மனுஷருடைய எதிரில் இவன் அகங்காரமில்லாதவனாயிருக்கிறான். தன் ஆசைகளை சுவாதீனப்படுத்திக்கொண்டு தன்னில்தானே சுதந்தரனாயிருப்பான். இவன் தன்னுடைய யோசனை



களுக்கும் ஆசைகளுக்கும் தேவனையே இலக்காக்கிக்கொண்டிருப்பான். தேவன் தன்னோடு இருக்கிறாரென்று எப்போதும் எண்ணி இடைவிடாமல் பிரார்த்தித்துக் கொண்டிருப்பான். நியாயப்பிரமாணத்தின் ஒவ்வொரு கட்டளைகளையும் தவறாமல் கைக்கொண்டு வருவான். ஏனென்றால் அன்பு நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாயிருக்கிறது (ரோம. $13^{10}$). எந்தக் கிறிஸ்தவன் மேலே சொல்லியிருக்கிற ஆவியின் கனிகளை தன்னில் காண்கிறானோ அவன்தான் பரிசுத்தாவியை அடைந்தவனென்று கண்டிப்பாய் நம்பக்கூடும்.

III. பரிசுத்தத்தை யடைந்தபின் அதை நாம் இழந்துவிடக்கூடுமோ? இழந்துவிட்டாலும் இழந்துவிடக்கூடும். அது அசாத்தியமல்ல. சிலர் பூரண பரிசுத்தத்தை அடைந்தபின்னும் தங்களை பரிசுத்தப்படுத்தின உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்தமென்றெண்ணி தேவனுடைய கிருபாவரமாயிருக்கிற ஆவியை நிந்திக்கிறவர்களாயிருக்கிறார்கள் (எபி. $10^{29}$).

(1) யாரிடத்தில் சரீராதீன சுபாவம் சம்பூரணமாய் நாசமாயிருக்கிறதோ அப்படிப்பட்டவர்கள் மீண்டும் பாவத்தில் விழுவது எப்படி? எல்லா துராசைகளிலிருந்தும் நிவிர்த்தியடைந்திருந்தால் பரிசுத்தம் என்கிற வரத்தை அவன் இழந்துபோவதற்கு அவகாசமுண்டா? சரீராதீன சுபாவம் ஓர் விதத்தில் சாவைப்போலிருந்தாலும் அது திரும்பவும் எழுந்திருக்கக்கூடும் என்று அனுபவத்திலிருந்து அறிந்துகொள்ளலாம். நர சுபாவத்தில் ஒட்டிக்கொண்டிருக்கிற தோஷமானது நீரில் சேர்ந்திருக்கிற ஒட்டுவாரொட்டி வியாதிகளைப் பிறப்பிக்கிற கிருமிகளைப்போலிருக்கிறது. இந்த கெட்ட நீரைக் காய்த்து கிருமிகளை நாசஞ்செய்தபின்னும் அந்த நீர் ஆறிப்போய் ஒட்டுவாரொட்டி வியாதி இருக்கிற ஸ்தலத்தில் ஊற்றப்பட்டால் திரும்பவும் எப்படி விஷக் கிருமிகள் நிறைகிறதோ, அப்படியே நரசுபாவமுங்கூட பரிசுத்தாவியின் மூலமாய் சமஸ்த தோஷங்களையும் விட்டுவிட்டுப் பூரணமாய் சுத்தியானபின்னும் அது இன்னும் பாவத்துக்குட்பட இடமில்லாதபடி மாறிப்போகாது.

(2) பரிசுத்தம் என்கிற இந்த விலையேறப்பெற்ற ஈவின்பேரில் நாம் எப்போதும் கண் வைத்து எச்சரிக்கையாய்க் காத்திருந்தால், நம்மிடத்திலேயே அதை வைத்துக்கொண்டிருக்கலாம் என்று நம்புவதற்காகாது. அதை நாம் ஒருவரே சம்பாதிப்பது எப்படி ஆகாமலிருக்கிறதோ அப்படியே அதை நாம் ஒருவரே காப்பாற்றிக்கொள்வதற்கும் ஆகாது. பலம் தேவனுடையதேயன்றி நம்மிலிருந்து வந்ததல்லவென்று காட்டுவதற்காக இந்தப் பொக்கிஷத்தை நாம் மண்பாண்டங்களில் பெற்றிருக்கிறோம் (2 கொரி. $4^{7}$). நாம் கிறிஸ்து

இயேசுவுக்குள் சத்திகரிக்கப்பட்டிருக்கிறபடியே நம்முடைய ஜீவனும் அவருடனே தேவனுக்குள் மறைந்திருக்கிற வரைக்கும் (கொலோ. $3^{3}$) நாம் பரிசுத்தராக இருந்துகொண்டிருப்போம்.

(3) பரிசுத்தத்தைக் காப்பாற்றிக்கொள்வது இவ்வளவு கஷ்டமாயிருப்பதினால், அதை அடைந்துகொள்வது பிரயோஜனமல்லவென்று எண்ணலாகாது. நாம் எச்சரிக்கையாயிருந்து தேவனை மன்றாடிக்கொண்டிருக்கும் வரைக்கும் யாராகிலும் நம்முடைய பந்தயப்பொருளை அபகரிப்பதற்கு (கொலோ. $2^{18}$) இடமில்லாதபடி நாம் ஆரம்பத்தில் கொண்ட நம்பிக்கையை முடிவுபரியந்தம் உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருப்பதற்கு (எபி. $3^{14}$) எவ்வளவோ காரணங்களுண்டு என்றும் நம்பலாம். நாம் பக்தியில் அபிவிருத்தியடைந்தபோதெல்லாம் அசுத்த எண்ணங்களைத் தடுப்பது வரவர சுலபமாகி நம்முடைய வரத்தை இழந்துவிடுகிற அபாயம் குறைந்துகொண்டே வரும். நம்மைப் பிடித்துக்கொண்டிருக்கிற நிஜமான துஷ்பிரேரணைகள் நம்முடைய மனதைப் பற்றிக்கொள்ளாமல் ஒவ்வொன்றாய்த் தொலைந்துவிடுகிறது. எந்தவிதமான பாவத்திலாகிலும் நமக்கு ஆசையில்லாமற்போய்விடும். துன்மார்க்கமான காரியத்தைச் செய்வதைப்பார்க்கிலும் நற்கிரியைகளையும் சத்கருமங்களையும் செய்வது சுலபமாகும். தேகம் பிரயத்தனமில்லாமல் எப்படி உயிரோடிருந்து ஜீவிக்கிறதோ அப்படியே ஆத்மாவும் கிறிஸ்துவில் சுபாவமாய் நம்பிக்கைவைத்து ஜீவிக்கிறது. நாம் தைரியங்கொள்வதற்கு முக்கியமான ஆதாரம் தேவனுடைய திடச்சித்தமேயொழிய நம்முடையது வேறொன்றுமில்லை. நம்மில் நற்கிரியையைத் தொடங்கினவர் அதை இயேசுகிறிஸ்துவின் நாள்பரியந்தம் முடிய நடத்திவருவார் என்பதையே நம்பி நிச்சயித்துக்கொள்ளவேண்டும் (பிலி. $1^{6}$). அப்படியானால் நம்முடைய தீர்மானத்தைக்குறித்து நாம் செய்த பிரதிக்கினையை முற்றமுடிய நிறைவேற்றுவோமாக. வாக்குத்தத்தம்பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக்கிறாரே (எபி. $10^{23}$). வழுவாதபடி நம்மைக் காக்கவும், தமது மகிமையுள்ள சந்நிதானத்திலே மிகுந்த மகிழ்ச்சியோடே நம்மை மாசற்றவர்களாய் நிறுத்த வல்லமையுள்ளவரும், தாம் ஒருவரே ஞானமுள்ளவருமாகிய நம்முடைய இரட்சகரான தேவனுக்குக் கனமும் மகத்துவமும் வல்லமையும் அதிகாரமும் இப்பொழுதும் எப்பொழுதும் உண்டாவதாக (யூதா. 24, 25).

முடிவு

C. L. S. PRESS, MADRAS—1917

No. 132. மே 1917

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
7-MAY 1917
MADRAS

# வேதியர் விளக்கு

## Great Souls at Prayer

## பெரியோர் செய்த பிரார்த்தனைகள்

ஆண்டவராகிய எங்கள் கடவுளே, உமது செட்டைகளின் நிழலில் நாங்கள் தங்கி உம்மை அவாவோடு நோக்குவோமாக. பாலியத்திலும் மயிர் நரைத்த காலத்திலும் எங்களைத் தாங்குகிறவர் நீரே. எங்களுக்கு உம்மால் வரும் பலமே பலம், எங்கள் சொந்தப் பலமோ பலவீனம். நீரே உயிர்ப்பிக்கிறவர், மெய்யாய்ப் பலப்படுத்துகிறவர். எங்கள் ஆத்துமாக்கள் இளைப்பைவிட்டு, நீர் சிருஷ்டித்தவைகளின் உதவியால் உம்மை நோக்கி எழும்பி, தங்களை அற்புதமாய் உண்டாக்கின உம்மைப் போய்ச் சேரும்பொருட்டு, ஆண்டவரே, உம்மண்டை திரும்புகிறோம்.

ஆகுஸ்தீன்.

சர்வவல்லவரும் நித்தியருமாகிய கடவுளே, நம்பிக்கையுள்ள ஆத்துமாக்களின் ஜோதீ, உலகத்தை உமது மகிமையால் நிரப்பியருளும். உம்முடைய ஒளியின் பிரகாசத்தால் உலகத்தில் சகல ஜாதிகளுக்கும் உம்மை வெளிப்படுத்தும்படி எங்கள் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் மூலமாய் உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம்.

கி. பி. 590—ல் செய்யப்பட்டது.

கடவுளே, உம்முடைய அன்பென்னும் தீ எங்களுக்குள் உமக்கு வெறுப்பாயிருக்கிறவைகளைப் பற்றி எரித்துவிட்டு, எங்களை உமது பரம இராஜ்யத்துக்குத் தக்கவர்களாக்குவதாக;

ரோமான் ஜெபப்புஸ்தகம்.

# Becoming all Things to all Men
## Expository Notes on 1 Cor. $9^{22b}$

**By the Editor**

## எப்படியாகிலும் சிலரை இரட்சிக்கும்படிக்கு நான் எல்லாருக்கும் எல்லாமானேன்

1 கொரி. $9^{22}$

இதின் கருத்தை நன்கறிய வேண்டுமென்றால், 19-ம் வசனத்தை முதல் வாசித்துச் சிந்திக்கவேண்டும்.

ஆதாயம். இவ்வார்த்தை எத்தனை விசை வருகிறது! ‘இந்தப் பவுல் இலாபத்துக்காகத் திரிகிறான்’ என்று விரோதிகள் புறங்கூறி னார்கள். அதற்கு அவர் பகரும் விடை: ‘மெய்தான், இலாபத்துக்காக ஆசையாய்த் திரிகிறேன். எந்த இலாபம்? மனுஷரை ஆதாயப்படுத்து வதே.’ ஆதாயப்படுத்துவது என்றால் வசப்படுத்துவது அல்ல. மனி தரை நம்முடைய இஷ்டத்தின்படி செய்யப்பண்ணி அவர்களை வசப் படுத்துவதற்கு நமக்குச் சோதனையுண்டு. அதல்ல ஆதாயப்படுத்து வது. ஆதாயப்படுத்துவது பிரியப்படுத்துவது அல்ல. கலா. $1^{10}$, நான் இன்னும் மனுஷரைப் பிரியப்படுத்துகிறவனானால் நான் கிறிஸ் துவின் ஊழியக்காரனல்ல. ஆதாயப்படுத்துகிறது என்றாலும் இரட்சிக் கிறது என்றாலும் பொருள் ஒன்றே. 1 பேதுரு $3^{2}$ பார்க்க. அதுவே பவுலுடைய வாஞ்சை. பவுல் நாசமாய்ப்போவதால் யூதர் இரட்சிப் படைவார்களென்றால், நாசமாய்ப்போகச் சம்மதிப்பார். ரோமர் $9^{3}$. புறமதஸ்தர் இரட்சிக்கப்படும்படி அவர் பூமியிலும் கடலிலும் ஓயாத பிரயாணம்பண்ணிக் கணக்கில்லாத துன்பங்களைச் சகிப்பார்.

இரட்சிக்கிற வேலைக்கு அன்னியனாய் இருப்பது பெரிய தடை. அதை உணர்ந்து பவுல் எல்லாருக்கும் எல்லாமானார். அதை அவர் செய்த விதத்தை இரண்டொரு திருஷ்டாந்தங்களைக் கொண்டு விவ ரிக்கலாம்.

(*a*) ஒரு நாள் ரஸ்தாவில் மதவைராக்கியமுள்ள ஒரு யூதனும் பவுலும் வழிப்போக்காரகச் சேர்ந்து சம்பாஷணை செய்கிறார்கள். அந்த யூதன் எபிரெய பாஷை பேசி, யூத ஜாதியாருக்குப் பூர்வீகத்தி லிருந்த மகிமையை எடுத்துக்கூறுகிறான். பவுல் ‘நீர் யூதன், நான் யூதமதம் தப்பு மதமாக எண்ணுகிறேன், நீர் சொல்லுகிறதை ஒப்புக் கொள்ளமாட்டேன்’ என்று சொல்லமாட்டார். பவுலும் தாவீது முதலியவர்களுடைய மகிமையையும் யூதருக்கு அருமையாயிருக்கிற



வைகளையும் எல்லாம் அறிந்தவராக யூதனோடு யூதனாகப் பேசுகிறார். அந்த யூதன் ‘இவர் நம்மில் ஒருவர்’ என்று உணர்ந்து தாராளமாய்ப் பேசுகிறான். பவுலோ வரவேண்டிய மேசியாவைப்பற்றிப் பேசி, யூதர் அநேக நூற்றாண்டுகளாய் எதிர்பார்த்த கிறிஸ்து பாடுபட வேண்டும், இயேசுவே அந்தக் கிறிஸ்து என்று உணர்த்தி, அந்த யூதனை இரட்சிக்கிறார்.

(*b*) இன்னொரு நாள் கப்பலில் சில கிரேக்கரோடு பிரயாணம் பண்ணிக்கொண்டிருக்கிறார். அவர்கள் அத்தேனே நகரத்தின் அழ கான காட்சிகளைப் புகழ்ந்து பேசும்போது, பவுல் அந்தக் காட்சிகளை எல்லாம் கண்டிருக்கிறார். அவர்களைப்போல கிரேக்கு பாஷையைப் பேசுவார். கிரேக்க கவிஞரைக்குறித்து அவர்கள் பேசும்போது, தர்சு பட்டணத்தில் வாசித்த பவுல் சில பாடல்களைச் சொல்லுவார். அவர்களுடைய வழக்க பழக்கங்கள் எல்லாம் அவருக்குத் தெரியும். அவருக்கும் அவர்களுக்கும் இயற்கனவே சிநேகம் உண்டாகிறது. காற்று மிருதுவாய் வீசும்போது, அவர்கள் நெடுகச் சம்பாஷணை செய் கையில், பவுல் எப்படிப்பட்ட விஷயங்களை எடுத்துக்கூறுவார் என்று அவர் மார்ஸ் மேடையில் (அப். 17) பண்ணின பிரசங்கத்தைக் கவனித்தால் தெரியும். துறைமுகம் சேருவதற்குள்ளே அந்த கிரேக் கரில் இரண்டொருவர் இரட்சிக்கப்பட்டார்கள்.

(*c*) இன்னொரு நாள் கொரிந்துவில் பெலவீனமான ஒரு கிறிஸ் தவன் வீட்டில் பவுல் அதிதியாகத் தங்கும்போது, அந்தக் கிறிஸ்தவன் வந்து, ‘ஐயா, இன்றைக்கு நம்முடைய சாப்பாட்டுக்காக மாமிசம் வாங்கலாம் என்றிருந்தேன், ஆனால் எனக்கு ஒரு சந்தேகம். சந்தையில் விற்கிறவர்கள் ஒருவேளை அந்த மாமிசத்தை முன்னே தங்கள் தேவதை களுக்குப் படைத்திருப்பார்களோ என்று பயப்படுகிறேன்’ என் கிறான். அதற்குப் பவுல், ‘பாவாயில்லை, அந்த விக்கிரகங்கள் ஒன்றுஞ் செய்யாது. நீர், கேள்வி கேளாமல் வாங்கிச் சாப்பிட்டால் தோஷ மில்லை’ என்று சொல்ல, பலவீனமான கிறிஸ்தவன், ‘ஐயா, விக்கிர கங்களுக்குப் படைத்ததைச் சாப்பிட்டால் நான் அந்தப் பொய்ச் சுவாமி களில் பங்குள்ளவன் ஆனாற்போல எனக்குத் தோன்றும்’ என்று ஆட்சேபிக்கிறான். உடனே பவுல், ‘அப்படியானால் நீர் வாங்கவே கூடாது, நீர் வாங்கினாலும் நான் சாப்பிடமாட்டேன். உம் மனச் சாட்சிக்கு இடையூறு வருவதைவிட மாமிசம் ஒருநாளும் சாப்பிடாம லிருப்பதே உத்தமம்’ என்று வற்புறுத்துகிறார். இவ்விதமாகப் பல வீனனுக்குப் பலவீனரானார்.

ஆகிலும் பவுலுக்கும் இவர்களுக்கும் சில காரியங்களில் கடைசி மட்டும் வேததூரம் வித்தியாசம் இருந்தது. மேற்சொன்ன யூதன்

சில கிரேக்கரைச் சுட்டிக்காட்டி, அந்த அஞ்ஞானிகள் சபிக்கப்பட்டவர்கள் என்று சொன்னால் பவுல் அதை ஒப்புக்கொள்ளுவாரா? புயலில் கிரேக்கர் தங்கள் தேவதைகளின் பெயரைச் சொல்லி அபயமிடும்போது பவுல் சும்மா இருப்பாரா? பலவீனமான கிறிஸ்தவன் மாமிசத்தைச் சாப்பிடுகிற சில கிறிஸ்தவர்களைப் பாவிகளென்று சொல்லும்போது பவுல் கண்டிக்காமலிருப்பாரா? அவர்களுடைய தப்புகளில் பவுல் அவர்களுக்கு அன்னியன். மற்றெல்லா விஷயங்களிலும் அவர் அவர்களில் ஒருவர்.

நமக்கு இவ்வசனத்தின் போதனை.

இந்துக்கள் நம்மை அன்னியரென்கிறார்கள். நாம் அற்ப விஷயங்களில் வித்தியாசங்களை அதிகமாய்ப் பாராட்டாமல், பவுலைப்போல நம்முடைய அனுதாபத்தினாலும் அன்பினாலும் அவர்களோடு சிநேகம்பண்ணுவது உத்தமம். இப்படிச் செய்யும்போது அவர்களுடைய தப்புகளில் நாம் அவர்களைப்போல் ஆகக்கூடாது. சில உபதேசிகள் இந்துக்களோடு சிநேகம்பண்ணும்பொருட்டு ஜாதிவித்தியாசம் பாராட்டுவார்கள். பேதுரு அந்தியோகியாவில் அப்படிச் செய்தபோது பவுல் எல்லாருக்குமுன்பாக அவரைக் கண்டித்தார். (கலா. 2).

கடைசியாக, சிநேகம்பண்ணி அதோடு நிறுத்தினால் போதாது. இதுவே நமக்கு விசேஷித்த சோதனை. எப்படியாகிலும் சிலரை இரட்சிக்கும்படி எல்லாருக்கும் சிநேகிதராகிறோம், ஆயினும் இந்துக்கள் நம்மைச் சிநேகிதராகப் பாவிக்கிறார்கள் என்று கண்டு திருப்தியடைகிறோம். அவர்களுடைய சிநேகம் நமக்குப் பெரிய உத்தரவாதம். அவர்களுக்கு உத்தம சிநேகிதராகிய இயேசுகிறிஸ்துவைக் காட்டுமட்டும் நாம் திருப்தியடையவே கூடாது. 'எப்படியாகிலும்' என்ற வார்த்தையில் எவ்வளவு வாஞ்சை வெளியாகிறது. அப்படிப்பட்ட வாஞ்சை நமக்கு எப்போதும் இருந்தால் ஆண்டவர் நம்மைக்கொண்டு சிலரையாவது இரட்சிப்பார்.

## How to answer Objections to Christianity

## கிறிஸ்தவர்களாகிறதற்குப் புறமதஸ்தர் பண்ணும் ஆட்சேபனைகள்

சுவிசேஷப் படையெழுச்சிக்குச் சம்பந்தமாக கனம் பாப்லி ஐயர் (Rev. H. A. Popley) இந்தியாவின் நாலு பாகங்களிலிருந்து பின்வரும் 35 ஆட்சேபனைகளைச் சேர்த்திருக்கிறார். இவைகளுக்குப் பல



விதமாக விடை சொல்லலாமென்றாலும், நாம் அனுபவத்தில் பலிதமாய் இருக்கக்கண்ட விடைகள் எவை என்று அவர் விசாரித்துக் கொண்டிருக்கிறார். அப்படிப்பட்ட விடைகளைச் சேர்த்து ஒரு சிறு புஸ்தகத்தில் அச்சிட்டால் அப்புஸ்தகம் அநேகருக்கு மிகவும் பிரயோசனப்படும். இக்காலத்தில் கிறிஸ்தவ சபையாரில் அநேகர் சுவிசேஷ வேலையில் பங்குபெற விரும்புகிறதினால், இப்படிப்பட்ட உதவி அவர்களுக்குத் தேவை. இவ்விஷயங்களில் நம் பத்திரிகையை வாசிப்போரில் அநேகருக்கு மெத்த அனுபவமுண்டு. அவர்கள் இலக்கத்தைக் குறிப்பிட்டு, அந்தந்தக் கேள்விக்குத் தாங்கள் வேலையில் பிரயோஜனமாய் இருக்கக் கண்ட பதிலைச் சுருக்கமாய் எழுதியனுப்புவார்களானால், ஒருவேளை அதினாலே அநேகருக்கு உதவிசெய்வார்கள். சில விடைகளை இப்பத்திரிகையில் பிரசுரிப்போம்.

ஆட்சேபனைகளாவன :—

1. என் ஜாதி கெட்டுப்போகும்.
2. என் பிழைப்புக் கெட்டுப்போகும்.
3. என் மதம் எனக்கு ஏற்றது, உன் மதம் உனக்கு ஏற்றது.
4. சுவாமியைக் காட்டு, அப்போ நம்புவேன்.
5. கிறிஸ்துமதம் எப்படிப்பட்டதென்று எனக்குத் தெரியாது.
6. கிறிஸ்தவர்கள் ஜீவியமும் எங்கள் ஜீவியம்போலவே இருக்கிறது.
7. எங்கள் பாட்டன் பூட்டன்மார் இப்படித்தான் கும்பிட்டார்கள்.
8. இந்துமதம் கிறிஸ்துமதத்தைக்காட்டிலும் நல்லது.
9. ஞானஸ்நானம் பெறாமல் நான் கிறிஸ்தவனாய் இருக்கக்கூடாதா?
10. கிறிஸ்துவின் போதனையை ஏற்றுக்கொள்ளுவேன், கிறிஸ்தவ சபை எனக்கு வேண்டாம்.
11. இயேசுவின் போதனையை ஒப்புக்கொள்ளுவேன், கிறிஸ்தவ சாஸ்திரிகளுடைய கோட்பாடுகளை ஒப்புக்கொள்ளமாட்டேன்.
12. பறைக் கிறிஸ்தவர்கள் எங்கள் தலைகளில் உட்காருவார்கள்.
13. நாம் கிறிஸ்தவர்களாகிவிட்டால் பொய் சொல்லி மோசம் பண்ணக்கூடாது.
14. எல்லாரும் கிறிஸ்தவர்களாகும்போது நாங்களும் கிறிஸ்தவர்களாவோம்.
15. கிறிஸ்துமதம் வெகு இலேசு.

16. கிறிஸ்துமதம் ஒரு தேசத்தின் பெருந்தன்மைக்குத் தடையாயிருக்கும்.
17. இந்துக்களுக்கு இல்லாத எந்தச் சிலாக்கியம் கிறிஸ்தவர்களுக்குண்டு?
18. எங்களுடைய குடும்பங்களை விட்டு வரமுடியாது.
19. கிறிஸ்துமதம் அந்நிய மதம்.
20. மோட்சத்துக்குப் போகும் பல மார்க்கங்களில் கிறிஸ்து மார்க்கம் ஒன்றேயன்றி வேறல்ல.
21. கிறிஸ்துமார்க்கம் ஏழைகளுக்கும் படியாதவர்களுக்கும் மாத்திரம் தகும்.
22. கிறிஸ்தவர்களுக்குள் ஐக்கியமில்லை.
23. கடவுள் ஒருவர் என்றால், இயேசுகிறிஸ்து எப்படிக் கடவுளாயிருப்பார்?
24. இந்து சந்நியாசிகளுடைய துறவொழுக்கத்துக்கும் கிறிஸ்தவர்களுடைய சௌக்கியமான ஜீவியத்துக்கும் எவ்வளவு வித்தியாசம்!
25. ஒரு கிறிஸ்தவன் தான் சொல்லுகிறபடி செய்கிறதில்லை.
26. நெஞ்சு சுத்தமாயிருப்பதைப் பார்க்கிலும் கிறிஸ்துமார்க்கம் மதபோதனைகளையே முக்கியப்படுத்துகிறது.
27. கிறிஸ்துமார்க்க சாரமும் இந்துமார்க்க சாரமும் ஒன்றே.
28. கிறிஸ்துவும் கிருஷ்ணனும் கடவுளின் அவதாரங்கள்.
29. கிறிஸ்துமதத்தினால் ஒரு பிரயோஜனமும் இல்லை என்று இந்த யுத்தம் காட்டுகிறது.
30. கிறிஸ்தவர்கள் மற்றவர்களோடு உறவாடுவதில்லை.
31. முக்திபெறப் பக்தியே போதும்.
32. நான் கிறிஸ்துவைப் பின்பற்றினால் அவருக்குக் கீழ்ப்படிய வேண்டும். அது மெத்த கஷ்டம்.
33. கிறிஸ்து பிறந்து 2000 வருஷந்தானே ஆகிறது.
34. கிறிஸ்து யூதர்களுக்கேற்ற அவதாரம். இந்தியாவுக்கு இந்தியர்களுக்கேற்ற அவதாரம் வேண்டும்.
35. அவனவன் தன்தன் மதத்தில் நிலைத்திருப்பதே சரி.



# Religion and Childhood

**By Mr. G. S. Duraiswamy**

*Adapted from Mr. K. J. Saunders'* 'ADVENTURES OF THE CHRISTIAN SOUL'

## சிறுபிள்ளைகளும் கிறிஸ்துமார்க்கமும்

(தொடர்ச்சி)

குழந்தைகள் தங்கள் மூன்றாவது வயது முதல் ஐந்தாவது வயது வரை எதையும் மனோபாவனை செய்வதிலும் தீக்ஷண்யபுத்தியிலும் விசேஷ தேர்ச்சியைக் காட்டுவார்கள். இக்காலத்தில் அவர்கள் பேசுவது உண்மையோ பொய்யோ வென்பதைக் கண்டறிதல் சிறிது கஷ்டமே: அவர்கள் மனோபாவனையால் காரியங்களை இட்டுக்கட்டிக் கூறியவிடத்தும் அவைகளிலிருந்து பிள்ளைகளின் பிற்காலஜீவியம் எத்தன்மைத்தாயிருக்கும் என்று ஒருவாறு நிதானிக்கலாம். ஒருநாள் வெளியே விளையாடிக்கொண்டிருந்த நாலுவயது பையனொருவன் ஓடோடியும் தன் தாயிடம் வந்து தான் வெளிச்சென்றிருந்த விடத்தில் ஒரு வீடு தீப்பற்றிக்கொண்டதாகவும் அவ்வீட்டில் வசித்த உதவியற்ற இரு கிழவிகளுக்கு இவன் ஏதோ அருமுதவிகளைப் புரிந்து வந்ததாகவும் கூறினான். இவன் சொன்ன காரியம் அத்தனையும் பொய்யே எனினும் ஆபத்திலகப்பட்டவர்களுக்கும் பலவீனமானவர்களுக்கும் உதவிசெய்யவேண்டியது கடமையெனக் கண்ட இவன் மேலான ஒழுக்கத்தையும் காரியங்களை மனோபாவனையால் எடுத்துக்கூறும் சாமர்த்தியத்தையும் வியக்கவேண்டாமோ.

மேலும் தனிமையாகவேயிருக்கும் சிறுவர் தங்களுடன் எப்போதும் ஒரு சிநேகிதரிருப்பதாக நினைத்துக்கொண்டு தங்கள் மனதில் அவரிடம் அன்புபூண்டு நடக்கின்றனர். அப்படிப்பட்ட சிறுவர் மகா பெரிய தோழர் தங்களுக்குண்டென்றும் அவரிடத்தில் அவர்கள் எந்தநேரமும் சென்று தங்களுடைய அந்தரங்கங்களையும் குறைகளையும் கூறலாமென்றும் அவசியமான காலங்களில் அவரிடத்திலேயே யோசனை கேட்கலாமென்றும் அறிந்தவிடத்து அவர்கள் அப்படிப்பட்ட தோழரை மனதாரப் பற்றிக்கொள்வதும் விபரீதமேயோ.

நன்மையான காரியங்களில் சாதாரணமாய் உபாத்திமார் இவர்களை நடத்துவதைக்காட்டிலும் இந்தத் தோழர் இவர்களை நன்றாய் நடத்துவார். 'நீ இப்படி நடந்தால் சுவாமி பார்ப்பார். பார்த்தால் நாட்டய்யரிடம் சொல்லுவார்' என்று ஒரு சிறுபெண் தன் சகோதரனிடத்தில் சொன்னாளாம்.

மனோபாவனை பண்ணக்கூடிய அறிவிருப்பதனாற்றான் சிறுவர் எதையும் பார்த்ததைப் பார்த்தபடியே செய்ய முயல்கின்றார்கள். இது இவர்கள் இயற்கை. ஆதலின் வீட்டிலும் திருச்சபையிலும் அவர்களுக்குச் சிறந்த முன்மாதிரி இருக்கவேண்டியதவசியம். நமது வேதாகமத்தில் சிறுவர் பார்த்துப் படித்து அதிசயித்துப் பின்பற்றக்கூடிய உதாரணங்கள் அநேகமுண்டு. வேறெம்மதத்திலும் இப்படியல்ல. பழைய ஏற்பாட்டுச் சரிதைகளில் அநேகம் சிறுவர் மனதைக் கவரத்தக்கன. எனவே கிறிஸ்துமார்க்கம் அவர்களுக்கு இயற்கையில் மாறுபட்டதாகத் தோன்றுகிறதில்லை. சிறுபிராயத்தில் தங்கள் பெற்றோருக்குக் கீழடங்கி நடந்துவரும் பிள்ளைகள் வயது முதிர முதிரத் தங்கள் பரமபிதாவுக்குக் கீழடங்கி நடந்து உத்தம பக்தர்களாய் நடவார்களோ? சரியான ஒழுக்கத்தைத் தம் பிள்ளைகளுக்குக் கற்பியாத வீட்டார் தம் உத்தரவாதத்தை யுணர்வார்களாக. இவ்வகைப் போதனைகளைப் போதியாமார்க்கம் மார்க்கமெனவும் அழைக்கப் பெறலாமோ?

பிள்ளைகளிடத்திற் காணப்படும் மற்றொரு தன்மை, எதைப்பார்த்தாலும் ஆச்சரியப்படும் காரியம். தினந்தோறும் வீட்டில் நடக்கிற காரியங்களும் அவர்களுக்கு ஆச்சரியமாகவே தோற்றும். இது சிறந்தவற்றை பார்த்தறியக்கூடும் சக்தியினாலாவது. இதனினின்றும் அவர்கள் மகோன்னதமான தெய்வத்தையும் பார்த்ததிசயிக்கத் தூண்டப்படுகிறார்கள்.

அப்படியே மகா பெரியவர்களையும் சாமர்த்தியசாலிகளையும் கண்டவிடத்தும் அவர்களைக் கனம்பண்ணவும் பின்பற்றவும் ஆசிக்கிறார்கள். பன்னிரண்டு வயதுக்குமேல், பெரியவீரர், திறமைசாலிகள் முதலியவர்களுடைய சரித்திரங்களை வாசிப்பது அவர்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியை விளைக்கும். இயேசுவாகிய பிள்ளையின் சரித்திரத்தை வாசித்தபோது தாங்களும் அவரைப்போலவே கீழ்ப்படிதலும் உண்மையும் உள்ள பிள்ளைகளாய் வளரவேண்டுமென முயற்சிசெய்த சிறுவர் எத்தனையோ பேருண்டு. இவ்வகைக் காரணங்களாற் சிறுவர் இயேசுவினிடம் இழுக்கப்படுகின்றனர். கிறிஸ்துமார்க்கம் சிறுவருக்கும் ஆவியையும் உற்சாகத்தையும் அளித்து அவர்களையும் நல்வழிப்படுத்தக்கூடியது. இது வயோதிகருக்கும் தளர்ச்சியுடையோருக்கும் மாத்திரமுரியதல்ல.

ஏனைய மதஸ்தரைக்காட்டிலும் கிறிஸ்தவராகிய நாம நமது சிறுவருக்காக அவர்களின் ஆன்மகாரியங்களில் அதிக கவலையெடுக்கவேண்டிய தவசியம். காரணம என்ன? நமது மார்க்கம சிறுவரைப் புறம்பே யகற்றிவிடவில்லை. அவர்களையும மீட்கிறது. அவர்களது மீட்புக்காகவும் வழிவகைகளை காட்டுகிறது. நமது



மார்க்கத்தில் சிறுவரின் தேர்ச்சிக்கும் பக்திவளர்ச்சிக்கும் அனுகூலமான போதனைகளும் உதாரணங்களும் அநேகமுண்டு. இப்போது சிறுவராயிருக்கும் இவர்கள் பிற்காலத்தில் திருச்சபையின் பக்தர்களாய் விளங்குவார்கள் எனும் உண்மையைக்கண்டதும் பரலோக ராஜ்யத்திற்குப் பாத்திரராகக்கூடியவர்களாக அவர்களை வளர்ப்பதும் கிறிஸ்துமார்க்கம ஒன்றே.

சிறுவர் கிறிஸ்துவைத் தங்கள் சிநேகிதராகவும் ஆண்டவராகவும் பற்றினால் அவர்களுடைய நினைவு தூய்மையாகிறது; அவர்களுடைய சிநேகம் மேன்மையடைகிறது; அவாகள் கிரியை சுத்தமுள்ளதாகிறது.

மேலும் பக்தி வளர்ச்சியும் ஒழுக்கத் தேர்ச்சியும் நமது சகவாசம், தோழமை, கூட்டுறவு இவற்றுக்குத் தக்கபடி ஒன்றாகவே விர்த்தியாகக்கூடியன. ஒன்றைவிட்டொன்றுண்டாகும் என்பது வீண். இவ்விஷயத்திலும் கிறிஸ்துமார்க்கம் ஏனையமார்க்கங்களிலும் மேல். ஏனெனில் கிறிஸ்துமார்க்க ஜீவியம் குடும்ப ஜீவியத்தைச் சார்ந்தது. கிறிஸ்துமார்க்கத்தின் சிலாக்கியமும் உயர்வும் உற்றோர் பெற்றோர் உறவாடி வாழும் வாழ்க்கையைச் சிறப்பிப்பது.

தங்களைச் சுற்றிலுமுள்ளோர் சன்மார்க்க ஜீவிகளாயிருக்கக்காணின் பிள்ளைகள் தாங்களும் சன்மார்க்க ஜீவியம் செய்ய முயல்வார்கள். கிறிஸ்துமதம் ஒன்றில் ஒழுக்கமும் மதக்கோட்பாடும் ஒன்றாய் இணைக்கப்பட்டிருக்கின்றன. நல்லொழுக்கமின்றி ஆவிக்குரிய ஜீவியமில்லாததுபோலவே ஆவிக்குரிய ஜீவியமின்றி நல்லொழுக்கமுமின்றாய்விடும்.

(முடிவு.)

## The Christian Worker and Evangelism

**By the Rev. W. J. Tunbridge**

(Adapted from English pages in Nov. & Dec. 1916)

## கிறிஸ்தவ ஊழியனும் சுவிசேஷ பிரபல்லியமும்

(தொடர்ச்சி)

முதலாம் பாடம்

கிறிஸ்தவ ஊழியனும் அவன் சாதனங்களும்

III. ஆவிக்குரிய சாதனங்கள்.

(*a*) மெய்யாய் குணப்பட்டவர்.

இது எவ்வளவு முக்கியமென்று காட்ட அப்போஸ்தலர் நடபடிகளில் இதைத் திரும்பத் திரும்ப எடுத்துரைக்கிறார்.

(b) கிறிஸ்துவின்மீது மிக்கவாஞ்சையும் இடைவிடா பக்தியுமுள்ளவர்.

*அவர் நிருபங்களே சாட்சி.*

(c) தெய்வீக அழைப்பை உணர்ந்தவர்.

*அழைக்கப்பட்டார், நடத்தப்பட்டார், பக்குவப்படுத்தப்பட்டார். 'சுவிசேஷத்தைப் பிரசங்கியாதிருந்தால் எனக்கு ஐயோ.' 1 கொரி. 9-16.*

கவனிப்பு. *முதலாம் சாதனம்: மிகப் பிரயோஜனமுள்ளது.*

*இரண்டாம் சாதனம்: மிக்க அனுகூலமானது.*

*மூன்றும் சாதனம்: இன்றியமையாத அவசியமானது.*

பற்பல வரங்கள் அபூர்வமாய் அவரில் அமைந்திருந்ததைக் கவனி.

*பெரிய வேதசாஸ்திரியாயிருந்தாலும் உண்மையுள்ள மேய்ப்பனாயு மிருந்தார்.*

*கண்டிப்பான நியாயவாதியாயிருந்தாலும் கூர்மையான கற்பனாசக்தியுடையவராயு மிருந்தார்.*

*கருகலான ஆழ்ந்த விஷயங்களை எடுத்துரைக்கிறவராயினும் மிக்க காரியஸ்தனாயு மிருந்தார்.*

## இரண்டாம் பாடம்

### கிறிஸ்தவ ஊழியனும் சபையும்

I. சபையைக் குறித்து அவருக்கிருந்த மேலான எண்ணம்.

(a) *கிறிஸ்துவினால் நேசிக்கப்பட்டது, அவருடைய இரத்தத்தினால் மீட்கப்பட்டது.*

(b) *அடையாளங்கள்:—மனையாட்டி, சரீரம், ஆலயம்.*

*சபையைப்பற்றி பவுலுக்கிருந்த மேலான எண்ணங்களை நன்றாய் கவனித்து நமக்கும் இப்படிப்பட்ட எண்ணம் தேவை என்பதை நன்குணர்வோமாக.*

II. சபையின்மீது அவர் காட்டின அன்பு.

*பவுல் தம்முடைய அன்பை யெல்லாம் சபையின்மேல் வழிந்தோடச் செய்து அதையே தமக்கு மகிமையாகவும், நம்பிக்கையாகவும், கிரீடமாகவும் கொண்டிருந்தார். நிருபங்களிலிருந்து திருஷ்டாந்தப்படுத்தவும்.*



III. சபையைப் பாதுகாக்கும்படி அவர் எடுத்த கவலை.

(a) *அவைகளை பலப்படுத்தும்படி திரும்பத் திரும்ப சந்தித்தார். அப். 15[36], 16[4], 18[23].*

(b) *தாமே போகக்கூடாத பக்ஷத்தில் நிருபங்களை அனுப்பினார்.*

*கலாத்தியர், கொரிந்தியர், தெசலோனிக்கேயர் நிருபங்கள் ஏன் எழுதப்பட்டன?*

(c) *தூதாட்களை அனுப்பினார். அப். 18[5], 19[22].*

(d) *மூப்பர்களை ஏற்படுத்தினார். அப். 14[23].*

IV. சபையிலிருந்து அவர் எதிர்பார்த்த விஷயம்.

*பரிசுத்தம், ஐக்கியம், அன்பு, ஊழியம், உதாரத்துவம்.*

*நிருபங்களிலிருந்து—விசேஷமாய் 1 கொரிந்தியரிலிருந்து விளக்கிக்காட்டவும்.*

V. சபையைக்கொண்டு அவர் செய்வித்த காரியம்.

(a) *சுயாதீன வேலை செய்வதற்கு அனுகூலமுண்டாக்கினார்.*

ஆக்கில்லா, பிரிஸ்கில்லாள், அப்பொல்லோ, லூக்கா.

(b) *சுவிசேஷ வேலைக்கு சபையை மூலஸ்தானமாக்கினார்.*

*அந்தியோகியா சபை தன் இரண்டு ஊழியரையும் புறதேச சுவிசேஷ வேலைக்கு அனுப்பினது.*

*எபேசுவின் நிருபம் அதின் சூழவிருந்த சபைகளுக்கும் அனுப்பப்பட்டது. அச்சபைகள் எப்படி உண்டாயின?*

கவனிப்பு. *அவரால் ஸ்தாபிக்கப்பட்ட சபைகள் சுய ஆதாரவுள்ளவைகளாயும் சுயாதீன வேலை செய்யக்கூடியவைகளாயுமிருந்தன.*

*இந்திய சபைகள் ஏன் இப்படியில்லை?*

*நிலைமை வித்தியாசமா? முறை வித்தியாசமா?*

*தேவன் சபையின் மூலமாய்த் தம்மை வெளிப்படுத்தினார்.*

*இது தேவனால் ஏற்படுத்தப்பட்ட முறை என்று நினைக்கிறாயா?*

## மூன்றும் பாடம்

### கிறிஸ்தவ ஊழியனும் உலகமும்

I. உலகத்தைக் காணும் காட்சி.

தூரப்பார்வை அவசியம். பவுல் எப்போதும் எட்டப் பார்த்தார்.

முதலாம், இரண்டாம் பிரயாணங்களைக் கவனித்தால் தெரியவரும்.

அவருடைய கண்கள் ரோமாபுரி, ஸ்பானியா தேசங்கள்மேலிருந்தன.

அவருடைய முறை:

(a) இன்னொருவருடைய அஸ்திபாரத்தின்மேல் கட்டவில்லை. ரோம. 15[21].

இதர சபைகளுக்கு குறிக்கப்பட்ட எல்லையைப்பற்றி எனக்கு இதில் போதனை உண்டா?

(b) மகா முக்கியமான இடங்களைக் கைப்பற்றிக்கொண்டார்.

எபேசு, கொரிந்து, அத்தேனே.

இந்தியாவில் இப்படிப்பட்ட இடங்கள் எவை?

II. உலகத்தோடு போராடும் ஞானம்.

பவுல் உலகத்தில் இருவகை ஜனங்களைக் கண்டார்.

ஒரு வகுப்பார்—யூதர், ரோமர், கிரேக்கர் முதலிய மத வைராக்கியர்கள்.

இன்னொரு வகுப்பார்—சாதாரண அஞ்ஞானிகள்.

யூதருக்கும்—ரோமருக்கும்; மகமதியருக்கும்—பிராமணருக்கும்; முதல் நூற்றாண்டு அஞ்ஞானிகளுக்கும்—தற்கால விக்கிரகாராதனைக்காரருக்கும் உள்ள சம்பந்தங்களைக் கூர்ந்து கவனிக்க.

(a) விக்கிரகங்களைக் கண்டவுடன் பவுலின் உள்ளம் பொங்கினது. அப். 17[16].

(b) புறமதங்களையும், அவைகளினாலுண்டான துர்ப்பழக்கங்களையும் நன்றாய் அறிந்திருந்தார்.

(c) அஞ்ஞான ஜனங்கள் மத்தியில் வெகு ஞானமாய் நடந்துகொண்டார்.

(d) தப்பிதங்களை அவ்வளவாய் எடுத்துரைக்காமல் சத்தியத்தைக் கூறினார்.



III. உலகத்தை ஜெயிக்கும் விசுவாசம்.

(a) நம்மைக்குறித்து நம்பிக்கை.

பெருமையல்ல, வீண்புகழ்ச்சியல்ல. ஆனால் அழைக்கப்பட்டோம், அனுப்பப்பட்டோம் என்ற நம்பிக்கை வேண்டும். பவுலின் ஜீவியத்தை திருஷ்டாந்தமாக கவனிக்கவும்.

(b) சுவிசேஷத்தைக்குறித்து நம்பிக்கை.

எல்லா சந்தர்ப்பங்களிலும், எல்லா மனிதரையும், அவர்களுக்கு வேண்டிய எல்லாவற்றையும் கிறிஸ்து திருப்திசெய்யக்கூடும். அப். 16-லிருந்து இதை திருஷ்டாந்தப்படுத்தவும்.

யூதஸ்திரீயான லீதியாள், கிரேக்க அடிமைப்பெண், ரோம சிறைச்சாலைக்காரன்.

## The preparation of Sermons

**By the Rev. H. Spencer, B.A.**

### பிரசங்க முறை

(தொடர்ச்சி)

கிறிஸ்துவைப் பிரசங்கிக்க வேண்டுமென்பதே கிறிஸ்தவ போதகன்மார் யாவர்மேலும் விழுந்த கடமையென்று முன்னே பார்த்தோம். கிறிஸ்துவின் விஷயத்தைத் தவிர, வேறெந்த விஷயத்தையாகிலும் எடுத்துப் போதிக்கையில், நமக்கும் போதிக்கிறவைகளைக் கேட்கிறவர்களுக்கும் மனவருத்தமும் ஆயாசமும் சாதாரணமாயுண்டாகிறதில்லையே யென்று யாராகிலும் சொல்லத்துணியலாம்; அவ்வாறு சொல்லத்துணிவது சரியல்ல. ஞானம், அறிவு என்பவைகளாகிய பொக்கிஷங்களெல்லாம் கிறிஸ்துவுக்குள் அடங்கியிருக்கின்றனவே (கொலோ. 2[3]). பரலோக ராஜ்யத்துக்கடுத்தவைகளில் உபதேசிக்கப்பட்டுத் 'தேறின வேதபாரகன் எவனும் தன் பொக்கிஷத்திலிருந்து புதியவைகளையும் பழையவைகளையும் எடுத்துக் கொடுக்கிற வீட்டெஜமானாகிய மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறான் (மத். 13[52]). நம்முடைய பொக்கிஷம் கிறிஸ்துவேயல்லாமல் வேறொன்றுமில்லை. இந்த ஒரே பொக்கிஷத்திலிருந்துதான் போதனைகள் செய்யவேண்டும். நாம் நமது ஜீவியத்தில் கிறிஸ்துவுக்குள் அடங்கியிருக்கிற போதனைகளின் கருத்தைச் சம்பூரணமாய்

எடுத்து விவரிப்பதினாலே தாவீதின் விண்ணப்பங்களைப்போல நம்முடைய சாட்சியும் தீர்ந்ததென்று சொல்வதற்கு இடமுண்டோ இல்லையோ என்று அஞ்சவேண்டியதில்லை. பவுல் பிலிப்பியருக்கு முதலில் எழுதின வார்த்தைகளைத் திரும்பத் திரும்ப எழுதினது அவனுக்கு வருத்தமாகத் தோன்றவில்லை (பிலி. $3^{1}$). யோவான் அப்போஸ்தலன் வாலிபத்தில் கண்டிருந்த சங்கதிகளைத் தான் முதிர்ந்த வயதானபோதும் மறுபடியும் தெரிவிக்கிறதற்குப் பின்வாங்கவில்லை (1 யோவா. $1^{1-8}$). நாம் சாட்சியிடுகிற விதத்தில் ஜனங்களுக்கு வருத்தமும் ஆயாசமும் உண்டாவது நிஜந்தான். அந்த வருத்தமுண்டாகிறது நாம் பிரசங்கிக்கிற விஷயமல்ல, நாமே காரணமல்லவா ? நாம் இரட்சிக்கப்படுவதற்கு வானத்தின் கீழெங்கும் மனுஷர்க்குள்ளே இயேசுவின் நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவேயில்லை (அப். $4^{12}$). இந்த ஒரே நாமத்தை யல்லவா பிரசுரிக்கிறவர்களாயிருக்கிறோம்.

கிறிஸ்துவைப் பிரஸ்தாபிக்கிறவர்கள் அநாதியநாதிகாலமாய்த் தேவனோடிருந்த அவர் மெய்யாகவே மனுஷனாகி பூலோகத்தில் ஜென்மித்தார் என்று தெரியப்படுத்தவேண்டியதாக விருக்கின்றது. அவர் எக்காரியத்தை எவ்விதமாய் நடப்பித்தாரோ அக்காரியங்களை அவ்விதமாக நாம் வருத்தமில்லாமல் கூறி சாட்சியிடவேண்டும். முக்கியமாக, அவர் நமது பாவப் பரிகாரத்துக்காக தமது பிராணனைக் கொடுத்து, தேவனுக்கும் நமக்கும் சமாதானத்தை யுண்டுபண்ணினார் என்று யாவரும் அறிந்துகொள்ளுமாறு பிரசுரிக்கிறவர்களாயிருக்க வேண்டும். அவர் மரித்தோரிலிருந்து எழுந்து வந்து, தாம் தேவ குமாரன் என்று ரூபித்து பிதாவாகிய தேவனிடத்தில் மீண்டுமேறிப் போய் என்றென்றும் ஜீவனுடையவராய் பரிசுத்தாவியின் மூலமாய் ஜீவனளிக்கிறவராய் இருக்கிறாரென்று சாட்சி கூறுவது நம்மேல் விழுந்த கடமை. மேற்கூறிய சங்கதிகளே அவரது ஜீவிய சரித்திரத்தின் சாராம்சம். இச்சரித்திரமே கிறிஸ்து மார்க்கத்தின் ஆதாரம். இதைக் கூறியறிவிப்பதே போதகர்கள் வேலை.

மேற்கண்ட சங்கதிகளில் மிக முக்கியமானவைகள் எவையென்று சொல்வதற்கவசியமில்லை. கிறிஸ்துவானவருடைய பாடு, மரணம், உயிர்த்தெழுதல் என்னும் அஸ்திபாரத்தின்மேல் கிறிஸ்துமார்க்கம் நிற்கிறது என்று நாம் நன்றாயறிவோம். இந்த சங்கதிகளை அப்போஸ்தலர் கூறியறிவித்தார்களே யொழிய வேறே சமாச்சாரங்களை எடுத்துரைக்கவில்லை. பரி. பவுல் இவ்விஷயத்தில் தாம் கொண்ட அபிப்பிராயத்தைத் தெளிவாய் வெளியிட்டிருக்கிறார். நான் சிலுவையிலறையுண்ட இயேசுகிறிஸ்துவையேயன்றி வேறொன்றையும்



உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித்திருந்தேன் என்று கொரிந்தியருக்கு எழுதினார் (1 கொரி. $2^{2}$). அதே நிருபத்தில் ($15^{1-11}$) சுவிசேஷத்திலுள்ள சாராம்சத்தை எடுத்துரைக்கிறார். அதாவது, கிறிஸ்து நமது பாவ நிவாரணத்துக்காக மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார் என்பதே. அப்போஸ்தலர் நடபடி புஸ்தகத்தில் பேதுரு முதலான அப்போஸ்தலர் செய்த அநேக பிரசங்கங்களை பரி. லூக்கா எடுத்தெழுதியிருக்கிறார். அவைகளை நாம் வாசித்து, அப்போஸ்தலர் யாவரும் இந்தப் பிரதான சங்கதியைத்தான் தெரிவித்துக்கொண்டு வந்தார்கள் என்று அறிந்துகொள்ளவேண்டும். பரி. யோவான் (1 யோவா. $1^{5}$-$2^{11}$) இயேசு கிறிஸ்துவினிடத்தில் தான் கேட்ட வார்த்தையைச் சுருக்கமாய் விவரிக்கவேண்டுமென்று விரும்பி மூன்று பிரதான காரியங்களை எழுதியிருக்கிறார். அவையாவன : (1) தேவன் ஒளியாயிருக்கிறார் ; (2) நாம் சுபாவமாய் இருட்டில் நடக்கிறோம் ; (3) நாம் தேவனுடைய ஒளியில் நடக்கும்படியாக, குமாரனாகிய இயேசுவின் இரத்தம் சகல பாவத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கிறது என்பவைகளே. இச்சங்கதிகளையே கூறியறிவிக்கவேண்டுமென்று கிறிஸ்து தமது சீஷருக்குக் கட்டளை கொடுத்தது லூக். $24^{46-48}$ னால் தெளிவாகிறது. (அப். $26^{22,23}$ யும் பார்க்கவும்).

அப்போஸ்தலர் கூறியறிவித்த இந்த விசேஷமான சங்கதிகளைத் தெரிவிப்பதே கிறிஸ்துவானவர் நமது வசத்தில் ஒப்புவித்திருக்கிற உத்தியோகமாயிருக்கிறது. இந்தச் சங்கதிகளைப் பார்க்கிலும் வேறே எந்தச் சங்கதிகளும் சத்தியவேதத்தில் எழுதப்பட்டிருந்தாலுங்கூட அவை விசேஷமானவைகளல்லவே. சுவிசேஷத்துக்குச் சம்பந்தமான சிறந்த போதனைகளைத் தள்ளி, அசாதாரணமான ஜனங்களுக்கு ஆச்சரியமுண்டாக்கக்கூடிய வேதவாக்கியங்களை எடுத்து விவரிப்பதினால் நமக்குள்ள சாதுரியத்தையும் சாமர்த்தியத்தையும் ஒருவாறு காட்டக்கூடும். அவ்விதமாய்ப் போதிக்கிறதினால் நம்முடைய வசனத்தைக் கேட்கிறவர்களுக்குப் பிரயோஜனத்தை யுண்டாக்காது. சாலொமோன் கட்டின தேவாலயத்தின் மண்டபங்கள், வெளிப்படுத்தின விசேஷம் என்னும் புஸ்தகத்தில் கண்டிருக்கிற அந்த மிருகத்தின் கொம்புகள், இவை முதலான சங்கதிகளில் அடங்கியிருக்கிற கருத்துகளைப் போதிக்கும்படியாக கிறிஸ்து நம்மை அழைக்கவில்லை. சுவிசேஷத்தைக் கூறியறிவிக்கிறதற்கே நம்மை யழைத்திருக்கிறார். இதைக் கூறியறிவிக்காத பட்சத்தில் நம்முடைய கதி யென்ன ? நம்மில், போதகனாயிருப்பவனைப் பார்த்து, சபையான் ஒருவனோ அல்லது ஹிந்து ஒருவனோ அப்பம் கொடும் ஐயா என்று கேட்டுக்

கொண்டால், அவனுக்குக் கல்லைக் கொடுப்பதாகுமல்லவா? மீன் கொடும் என்று வேண்டிக்கொண்டால், அதைக் கொடாமல் பாம்பைக் கொடுப்பதாகுமல்லவா? முட்டை வேண்டும் என்று கேட்கிறவனுக்குத் தேளைக் கொடுப்பதற் கொப்பாகுமல்லவா? ஆகவே, கிறிஸ்தவ போதகன்மார் சாதாரணமாய் புதிய ஏற்பாட்டு வசனங்களைத் தெரிந்தெடுத்து விவரிப்பது உசிதமெனத் தோன்றுகின்றது. இதனால் பழைய ஏற்பாட்டு வசனங்களை என்றைக்கும் எடுத்து விவரிக்கப்படாது என்பது எம் கோரிக்கையல்ல; தேவாவியானவரால் ஏவப்பட்ட ஒவ்வொரு வேதவாக்கியமும் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாய் இருக்கின்றனவென்று பவுல் எடுத்துரைக்கிறார் (2 தீமோ. 3[17]). ஒவ்வொரு வாக்கியத்திலுமுண்டாகிற பிரயோஜனம் சமமாயிருக்கிறதென்றும் அவர் சொல்லுகிறதில்லை. சத்தியவேதத்தின் எந்தப் பாகத்திலிருந்து ஏராளமான நன்மையும் பலனுமுண்டாகிறதோ அவைகளைத் தெரிந்தெடுத்துப் போதிக்கவேண்டும்.

எப்படியிருப்பினும் போதகர்களாயிருக்கிற நாமெல்லாரும் நம்மாலானவரைக்கும் சத்தியவேதத்தின் எல்லாப் பாகங்களையும் கவனத்தோடு வாசித்துத் தியானித்து பரீட்சித்தறிவது அவசியமானது. போதகன்மாருடைய உதவிக்காக தமிழ்ப்பாஷையில் எழுதியிருக்கிற நூல்கள் வெகு சில. ஆயினும் சத்தியவேதாகமம் எல்லாருடைய கையிலுமுண்டு. வேதத்தில் உரைத்திருக்கிற சத்தியத்தை அறிந்துகொள்வதற்கு ஒவ்வொரு போதகனும் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். நாம் முதலில் சொன்ன அந்தப் புது வஸ்துக்களையும் பழைய வஸ்துக்களையும் பொக்கிஷத்தினின்று கொடுக்கவேண்டுமாகில், அந்தப் பொக்கிஷம் நமது வசத்திலிருக்கவேண்டும். எப்படியெனில் கிறிஸ்து நமது இருதயத்திலும், சத்தியவேத உபதேசங்கள் நமது மனதிலும் இருக்கவேண்டும். ஆதலால் கிறிஸ்துவை இரட்சகராக உள்ளத்தில் ஏற்றுக்கொண்டு அவருளிய வசனத்தை உள்ளபடி கற்றுக்கொள்வது உபதேசிமாரான போதகன்மாருக்கு அழகாகும்.

C. L. S. PRESS, MADRAS—1917

No. 133. ஜூன் 1917

# வேதியர் விளக்கு

## A Tamil Echo of Rev. N. V. Tilak's 'My Motherland'

By N. Alagumani

தேச வாஞ்சை யில்லாத சிதடன்றன்
நாசி மூச்சதும் நஞ்சை நிகர்க்குமே.

'மற்றுப்பற்றெனக்கின்றி'—என்ற தேவாரப்பண்.

(இசையொடு படித்தாலன்றி இன்பம் பயவாது.)

1 உன்றன்மீதுறு வாசையால்ஓடெ
டுத்துக்கந்தை யுடுத்துவேன்,
அந்தமார்புகழ் யாவையும்அற்பக்
குப்பையென்றுதான் எண்ணுவேன்.
எந்தவேளையி லாகிலும்உயிர்
உடலைநீப்பது நிச்சயம்,
அந்தவேளையி லும்உனைநினைந்
தடிக்குமேயென தாருயிர்.

2 உன்னுதரத் துதிப்பதைவிட
உயர்பொருளொன்று வேண்டிலேன்;
மன்னுயிர்கவர் மறலியும்அதைக்
கவரஆற்றலுளன் கொலோ?
உன்றன்சேவையில் உயிர்உடலெல்லாம்
உவந்தளிப்பேனென் தேசமே;
கொன்னென்றுபலர் இகழினும்அதைக்
குறிக்கொளேனொரு பொருளென.

3 மகனும்நான்நினைக் காற்றுமுதவி
மகிழ்ந்துசெய்வேனென் நேசமே!
பகரரும்பக்த ரஞ்சனாவருள்
பாலிப்பாயிதை மேற்கொள!
எம்புகழ்பொருள் புந்தியொன்றையும்
வேண்டிலைஎன்தன் கண்மணி,
எம்மையேவர்ப்பணம் பண்ணாமு
றுகிறாய் எமதம்மையே.

4 கவைக்குதவாக் கடையேனுமெனைக்
கமலச்சேவடி சாத்தினேன்,
நவையறுமெந்தை யுந்தையாம்ஜக
தந்தைஜேசுவை மானவே:
அலகிலாப்பரம் பொருளேயேசு
அண்ணல்சற்குரு ஒப்பவே,
உலகுக்கும்ஹிந்து வன்னைக்கும்பல
பணிசெயக் க்ருபை பாலியே.

5 இன்னணம்பரன் மைந்தன்போல்
நினக்கேற்றசேவைநான் செய்திடின்,
மின்னிகர்ஜடம் துன்னரும்பல
தூளிதூளியாய் மாறினும்,
என்னரும்மாதாய் பன்னரும்பல
கோடிகோடியு கங்களாய்,
உன்னரும்ஒரு மைந்தனுயுனக்
குற்றதொண்டுவு ஞற்றுவேன்.

சிதடன்=கீழ்மகன்; அந்தம் ஆர்=அழகுபொருந்திய; நீப்பது=விடுவது; உதரம்=வயிறு; மறலி=மரணதூதன்; கொன்னென்று=வீணென்று; ஆற்றும்=செய்யும்; புந்தி=அறிவு; உமுறுதல்=ஆசித்தல்; நவையறு=குற்றமற்ற; மான=போல; அலகிலா=அளவிடமுடியாத; தூளி=தூசி; உஞற்றுவேன்=செய்வேன்.

(The United Church Herald)



# Does the Tamil Bible need Revision?

By the Rev. F. Kingsbury, B.A.

## விவிலியம் இன்னுமொருமுறை தமிழில் மொழிபெயர்க்கப்படவேண்டுமோ?

பிரித்தானிய புறநாட்டு விவிலிய சங்கத்தாற் பிரசுரிக்கப்பட்டுக் கடந்த ஐம்பது வருஷங்களாய்த் தமிழ்க் கிறைஸ்தவ சபைகளிற் பெரும்பாலும் வழங்கிவரும் விவிலியம் இந்திய கிறைஸ்தவர்களாலும் புறநாட்டு மிஷனரிமாராலும் மிகப் பாராட்டப்பட்டு வந்துளது. அதிலே மிகப் பயின்று வருபவர்களுக்கு அது பொருட்சுவையே யன்றிச் சொற்சுவையும் செறிந்துள்ளது. ஆகவே அஃது இன்னு மொருமுறை மொழிபெயர்க்கப்படவேண்டும் எனச் சிலர் கூறுவது முற்றும் அனாவசியமே என்பதும், அப்படி இன்னுமொருமுறை மொழிபெயர்ப்பின் அதின் சொற்சுவை குன்றிப்போவதன்றிப் பொருளும் பழுதுபட்டுப் பலர்க்கு மலைவுண்டாக்கும் என்பதும் பலர் கொள்கை.

இவர்கள் கொள்கை சரியோ தவறோ என்பதை ஆராய்வதே இக்கடிதத்தின் நோக்கமாம்.

1. விவிலியத்தின் பழவுடன்படிக்கை பெரும்பாலும் எபிரெய மொழியிலும் சிறுபான்மை அரமெயிக் மொழியிலும் எழுதப்பட்டுள்ளது. புத்துடன்படிக்கை இலக்கியநூற் கிரேக்கு மொழியில் எழுதப்படாது, அம்மொழியின் சிதைவாகிய ஹெலினிஸ்திக் கிரேக்குமொழியில் எழுதப்பட்டுளது. ஐம்பது வருடங்களுக்கு முன்னே ஐரோப்பிய சாஸ்திரிகளுக்கு இம்மொழிகளில் இருந்த தேர்ச்சியினும் தற்காலத்துள்ள தேர்ச்சி மிக நிறைவுபெற்றுள்ளது. முதனூல்களிற் றேர்ச்சிபெற்ற சாஸ்திரிகள் தமிழ் விவிலியத்தை வாசிக்குங்கால் அதில் இடந்தோறும் இடந்தோறும் பல பிழைகள் செறிந்திருப்பதைக் காண்கிறார்கள். அப்பிழைகளுக்கு உதாரணங்கள் பல எடுத்துக்காட்டலாம். ஆயினும் விரிவஞ்சி ஒருதாரணம் மாத்திரம் காட்டுகின்றேன்.

சங். 16: 2, 3 வசனங்களைத் தமிழில் வாசித்துப் பின் ஆங்கிலப் புது மொழிபெயர்ப்பில் (English R. V.) வாசித்துக் காண்க.

2. முதனூற் பழம்பிரதிகளிற் சில சுத்தப்பிரதிகள் கடந்த முப்பது நாற்பது வருஷங்களுக்குட் கிடைத்தவை. இப்பிரதிகளோடு முன் கிடைத்த பிரதிகளை ஒத்துப்பார்ப்பின், பல இடங்களிற் பாட பேதங்களைக் காணலாம். இவற்றையெல்லாம் ஆராய்ந்துணர்ந்த

நிபுணர் சிறந்ததொரு பாடம் (Text) வரையறுத் துள்ளார். அப்பாடமே இப்போது கலைஞரால் அங்கிகாரம்பெற்றது. மற்றவையனைத்தும் அத்துணைச் சிறப்புடையனவல்லவெனத் தள்ளப்பட்டன. மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகிய பாஷைகளில் விவிலியப் புதுத் திருப்புதலுக்குப் பாடமாய் அங்கிகரிக்கப் பட்டதும் இப்பாடமே. இஃதிவ்வாறிருக்க, தமிழ்ச்சபைகள் மாத்திரம் தவறுகள் நிறைந்த பாடத்தை ஆதாரமாகக்கொண்டு மொழிபெயர்த்த பதிப்பைப் போற்றிப்பரிபாலிக்க விட்டுவருவது அழகோ?

3. வழுநிலை வழாநிலை வழுவமைதி மரபு என்பவற்றை அடக்கிய தமிழ் இலக்கணம், பலவகைத் தமிழிலக்கியம், திவாகரம் பிங்கலந்தை சூடாமணி முதலிய நிகண்டு என்னும் நூல்கள் ஆகிய இவைகளிற் பயிற்சியுடைமையும் விவிலிய மொழிபெயர்ப்புக்கு இன்றியமையாததோர் கருவியாம். ஐம்பது வருஷத்துக்கு முன்னே மொழிபெயர்த்தவர்களிற் சிலர் தமிழ் நன்கறிந்த நிபுணர்கள் என்பது மெய்யேயாயினும், யாதுகாரணம்பற்றியோ அறியோம் அன்னார் வழுநிலை வழாநிலை வழுவமைதி மரபு என்பவற்றிற்கு மாறுபடப் பல விடங்களிலும் மொழிபெயர்த்துள்ளார். பல உதாரணங் காட்டின் விரியுமென்றஞ்சி இரண்டோருதாரணம் மாத்திரங் காட்டுகின்றேன்.

'The Lord is my Shepherd' என்பதற்கு 'ஆண்டவர் என்னை மேய்ப்பவர்' என்பதே தகுந்த மொழிபெயர்ப்பு. 'Lord' என்ற சொல்லுக்குக் 'கர்த்தர்' என்பது தமிழன்று. 'கர்த்தர்' என்னுஞ் சொல்லுக்கு 'ஆக்கியோன்' என்பது அருத்தமாம். 'திருக்குறளுக்குக் கர்த்தா யாவர்?' என்னும் வினாவுக்குத் 'திருவள்ளுவர்' என்பது விடையாம்.

'என் மேய்ப்பர்' என்பதற்கு 'என் ஆடுகளை மேய்ப்பவர்' என்ற அருத்தமுந் தொனிக்கும்.

'ஆண்டவர் மேய்ப்பர்' என்பது தமிழேயன்றி, 'ஆண்டவர் மேய்ப்பராயிருக்கிறார்' என்பது 'என் பெயர் அழகசுந்தரனாயிருக்கிறது' என்பதை ஒக்கும்.

This is my blood—இது என் இரத்தம். This is my body—இது என் சரீரம். இவ்வாறின்றி 'இது என் இரத்தமாயிருக்கிறது,' 'இது என் சரீரமாயிருக்கிறது' என்பது தமிழாகுமா?

'சிலது' என்பது தமிழா? 'சில' என்பது பன்மை குறிக்குஞ் சொல்லன்றோ? அதற்குத் 'து' என்னும் ஒருமை விகுதி எவ்வாறு வந்தது?

'Apostle Paul' என்பதற்குப் 'பவுல் அப்போஸ்தலர்' என்பதே யாமன்றி 'அப்போஸ்தலனாகிய பவுல்' என்று சொல்வது 'நல்ல தம்பிப் போதகர்,' 'மாசிலாமணி உபாத்தியாயர்' என்று சொல்வதை



விட்டுப் 'போதகராகிய நல்லதம்பி,' 'உபாத்தியாயராகிய மாசிலாமணி' என்று சொல்வதுபோலாகுமே.

'சில விதை விழுந்தது' என்பது சரியா? 'சில விதை விழுந்தன' என்பதன்றோ சரி. ['விதை' என்பது பால்பகா அஃறிணைச் சொல்லாதலாற் பன்மையையுங் குறிக்கும். அப்படிக் குறிக்குங்கால் பன்மைவினை கொள்ளுமேயன்றி ஒருமைவினை கொள்ளாது.]

'உவெஸ்லி சொன்னார்,' 'லூதர் எழுதினார்' என்று மரியாதையாய்ச் சொல்கிறோமே. 'ஆபிரகாம் சொன்னான்,' 'யோசேப்பு நினைத்தான்,' 'மரியாள் சிந்தித்தாள்' என மரியாதையின்றிக் கூறுவது தமிழ்க் கிறைஸ்தவர்களுக் கழகோ?

இன்னும் பல குறைகளைப்பற்றிப் பேசலாம். ஆயினும் இடமில்லாததால் இவ்வளவோடு நிறுத்துகின்றேன்.

4. விவிலியத்தை இன்னுமொருமுறை மொழிபெயர்ப்பின் பல சமஸ்கிருதச் சொற்களைச் சொருகிவிடுவார்கள் என்று சிலர் அஞ்சுகிறார்கள். அவ்வச்சம் வீண். 'ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்' என்பது தனித்தமிழோ?

'துவக்கத்திலே கடவுள் வானகத்தையும் வையகத்தையும் படைத்தார்' என்பதன்றோ தமிழ்.

கூடியவரையிற் சுத்தமும் இலகுவுமான தமிழ் மொழிகளே வழங்கப்படும் என்ற தீர்மானம் இருந்தால் அஞ்சவேண்டியதொன்றுமிராது.

'பண்டிதர் தமிழில்' எழுதினால் சாதாரண ஜனங்களுக்கு விளங்காது என்று பலர் கூறுவர். தமிழ்ச் சொற்கள் இயற்சொல் திரிசொல், திசைச்சொல் வடசொல் எனப் பலவாறு வகுக்கப்பட்டுள்ளன. அவைகளில் திரிசொல், திசைச்சொல், வடசொல் முதலிய சொற்களை வழங்காது யாவரும் இலகுவாய் அறியும் இயற்சொற்களையே பெரும்பாலும் வழங்கின், பண்டிதரேயன்றிப் பாமரரும் அறிந்துகொள்ளுவர்.

மேற்கூறிய காரணங்களையும் வேறு காரணங்களையும் நினைக்கையில் விவிலியம் தமிழில் இன்னுமொருமுறை மொழிபெயர்க்கப்பட வேண்டும் என்பதே என் துணிபு.

பெங்களூர், 21—4—'17.

இங்ஙனம்
Francis Kingsbury.

# What doth the Lord require of thee? (A wayside conversation)

By the Rev. T. Narasimhan

## கடவுள் விரும்புகிறதென்ன?

சித்திரை மாதத்தில் ஓர் நாள் நல்ல மத்தியான வேளையிலே நான் மகுடம்சாவடி ரெயில்வே ஸ்டேஷனில் இறங்கி மங்கலம் என்னும் ஊருக்குப் போகப் போய்க்கொண்டிருந்தேன். சூரியன் அதி உக்கிரமாய் கிரணங்களை வீசிக்கொண்டிருந்தான். நடந்து போக வேண்டியதோ மணல் வழி. கொஞ்ச தூரம் நான் போய் ஒரு மரத்தின்கீழ் தங்கி, பக்கத்திலிருந்த கிணற்றில் ஸ்நானம் செய்துவிட்டு, பின்பு கையிலிருந்த உணவைச் சாப்பிட்டுவிட்டு, நிழலில் வெயிலுக்குச் சற்று இளைப்பாறினேன். இப்படி யிருக்கையில், அவ்வழியாய் மஞ்சள் வேஷ்டி தரித்திருந்த ஒருவன், தோள்மேல் ஒரு சிறுபையனைத் தூக்கிக்கொண்டு வந்தான். கால் கொதிக்கிற தினுலே இவன் அதி தவிப்புடன் நடந்துவந்தான். இவனைப் பார்த்து, 'என்னப்பா! அவசரம், இந்த வெயிலில் தோளில் பையனும் இருக்கிறானே. சிறுபையன் தலை வெடித்துவிடும்போல் வெயில் அடிக்கிறதே. கொஞ்சநேரம் இங்கே நிழலில் தங்கிப் போ, வா அப்பா' என்றேன். 'இல்லை ஐயா, அவசரமாய்ப் போகவேண்டும்' எனவே, 'சரிதான், நான்கூட அவ்வழியாய்த்தான் போகவேண்டும். சற்றுநேரம் நிழலில் இருந்துவிட்டு இருவரும் பேசிக்கொண்டே போகலாம் வா அப்பா! என்ன அவ்வளவு ஆத்திரம்!' என, பிரயாணி 'அப்பாடா!' என்று சொல்லி உட்கார்ந்தான். களைப்பினுல் இவனும் பையனும் சற்றுத் தூங்கினார்கள். வெயில் கொஞ்சம் தாழ்ந்ததும், அவனைத் தட்டி யெழுப்பி, எல்லாரும் புறப்பட்டு மங்கலம் போகும் வழியில் போனோம். இப்படி பல காரியங்களைக் குறித்துப் பேசிக்கொண்டே போகையில் நான் பிரயாணியைப் பார்த்து, 'நீ, என் மஞ்சள்வேஷ்டி உடுத்திக்கொண்டிருக்கிறாய்? உன்னிடம் மூட்டையும் ஒன்றும் காணோமே; கூட பையனும் இருக்கிறானே. எங்கே போகிறாய் அப்பா?' என்று கேட்டேன். அதற்குப் பிரயாணி சொல்வான்: 'என் சொந்தவூர் சேலம் பக்கத்திலுள்ள திண்ணம் பட்டி. நான் கவுண்டன். எனக்கு வெகுநாளாகப் பிள்ளை யில்லை. ஸ்ரீரங்கம் ரங்கநாதனுக்கு உண்டிமுடித்து வேண்டிக்கொண்டேன். அதன்பிறகு இந்தப் பையன் பிறந்தான். இப்போது ஆறு வருஷம் ஆச்சுது. சுமார் ஒரு மாதத்துக்கு முன்னே ஓர் இராத்திரியில் ரங்கநாதப்பெருமாள் கனவில் எனக்குத் தோன்றி, என்னைப் பார்த்து,



"உனக்கும் உன் மனைவிக்கும் வெகுகாலம் புத்திரபாக்கியம் இல்லாமலிருந்தது. என்னை வேண்டிக்கொண்டீர்கள். ஒரு புத்திரனை உங்களுக்குத் தந்தேன். நீங்களோ அவனுக்கு முடித்த உண்டியை இன்னும் எனக்குக் கொண்டுவந்து சேர்க்கவில்லை. தவிர அவன் தலைமுடியை எடுத்துச் சமர்ப்பிக்கவில்லை. இதை எனக்குச் சீக்கிரம் செய்தாலாச்சுது. இல்லாவிடில் . . . ." ரங்கநாதப்பெருமாள் இவ்விதமாய் சொப்பனத்தில் சொன்னார். அவர் எங்கள் குலதெய்வம். அச்சொப்பனம் கண்ட நாள்முதல் எங்களுக்குத் தூக்கமே யில்லை. பிரார்த்தனையைச் செலுத்தாவிடில் பிள்ளைக்கு என்ன தீங்கு நேரிடுமோ என்கிற பயம் எங்களைப் பிடித்துக்கொண்டது.'

அதற்கு நான், 'அப்படியா அப்பா, ரொம்ப கஷ்டம் தான். இந்தப் பையனுடைய தாய் எங்கே? காணோமே. நீ ஒண்டியாகவா போகிறாய்? வழியில் உங்களுக்குச் சாப்பாட்டுக் காரியங்கள் எப்படி? நீங்கள் ரங்கநாதர் சொன்ன நிபந்தனையை நிறைவேற்ற வெகுகஷ்டம் எடுக்கிறாப்போல் தோன்றுகிறதே' என்று கேட்டேன்.

'ஆம், ஐயா, ஆம். ஸ்வாமி சொன்னபடி செய்யாமற்போனால் நமக்குக் கஷ்டம் தானே. இதோ பாருங்கோ. தானியங்களை விற்றுப் பணமாக்கினேன். அதுவும் சிலவுக்குப் போதாதென்று அரை ஏக்ரா நிலத்தையும் விற்று வழிச்சிலவுக்குப் பணமாக்கினேன். நான் நிலத்தை அவசரத்தில் விற்றுப்போடுகிறேன் என்று சொல்லி, அந்த ஊரிலே உள்ள அந்த ஐயன் அதை அரைவிலைக்குக் கேட்டான். என்ன செய்கிறது! அதை அவனுக்குத் தாரவார்த்தேன். உம், போகிறான்! ஏழைகள் சொத்து தக்காது. எப்படியோ ஒன்று, ரங்கநாதனுக்குச் செய்த பிரார்த்தனையைச் செலுத்திவிடவேண்டும். அந்தக் கடன் தீரவேண்டும். இந்தப் பையனுடைய தாய் மங்கலம் பக்கத்திலுள்ள காளிப்பட்டிக்குப் போயிருக்கிறாள் முன்னடியாக. அது அவள் தாய்வீடு. காளிப்பட்டியில் பெரிய கோவில் உண்டே. உங்களுக்குத் தெரிந்திருக்குமே, ஐயா. அந்தக்கோவிலுக்குப் பொங்கலிட்டுவிட்டு, அங்கே பிரார்த்தனைகளைச் செய்துவிட்டு, பின்பு ஸ்ரீரங்கம் போகவேண்டும்' என்றான் பிரயாணி.

அதற்கு நான், 'காளிப்பட்டி எனக்குக்கூட தெரியும். அவ்வூர் பூஜாரியின்பேரில் சில வருஷங்களுக்குமுன்னே ஒரு பெரிய கேஸ் வரவில்லையா? அவன் இப்போ எப்படி இருக்கிறான்?' என்றேன். 'ஆமாம் ஐயா, அந்த சங்கதி லோகமெல்லாம் தெரியுமே. என்னமோ, இந்தக் கோயில், இந்தப் பிரார்த்தனை யெல்லாம் ஒரு வழக்கம். நமக்கென்ன, வழக்கப்படி செய்துவிட்டால் ஒன்றுமில்லை. இப்படிச் செய்யாமல் போனாலும், வீட்டில் பெண்டுகள் படுத்தும் பாடு, அப்பா போதுமடா அப்பா!' என்று பெருமூச்சுவிட்டான்.

‘நான் ஒரு காரியம் சொல்லுகிறேன், கேட்கிறாயா?’ என்றேன். அதற்கென்னய்யா, சொல்லுங்கள்’ என்றான். அப்போது நான் சொன்னது: ‘பல வருஷங்களுக்கு முன் ஓர் பக்தன் இருந்தான். அவன் கடவுளுக்குப் பயந்தவன். கடவுள் சித்தப்படி செய்ய தன்னாலானமட்டும் பிரயாசப்படுகிறவன். ஓர் ராத்திரி அவன் ஒரு சொப்பனம் கண்டானாம். நீ கூட சொப்பனம் கண்டதாகச் சொன்னாய், இல்லையா கவுண்டா?’ ‘ஆம் ஐயா, நான் கண்ட சொப்பனத்தை உங்களுக்கு இப்போ சொன்னேன். என்னமோ ஒரு பக்தன் ஒரு கனவு கண்டான் என்றீர்களே, அதென்ன? சொல்லுங்கள் பார்ப்போம்.’

‘இந்த பக்தன் கண்ட சொப்பனமா! சொல்லுகிறேன், கேள் அப்பா.’ ‘ஓ பக்தா, கடவுளாகிய எனக்கும் மனுஷனுக்கும் ஓர் பெரிய வியாஜ்ஜியம் உண்டு.’ அதற்குள் பிரயாணி என்னைத் தடுத்து, ‘என்ன சொன்னீர்கள் ஐயா? வியாஜ்ஜியமா? யாருக்கு, கடவுளுக்கும் மனுஷனுக்குமா? இதென்னய்யா இது!’ ‘ஆம் அப்பா, ஆச்சரியம் தான். கடவுளுக்கும் மனுஷனுக்கும் பெருத்த வழக்கு உண்டுதான்.’ ‘சரிதான் அப்புறம் சொல்லுங்கள்.’ ‘ஏ பக்தா, கடவுளாகிய எனக்கும் மனுஷனுக்கும் ஓர் பெரிய வழக்கு உண்டு. இதற்கு நிலைபெயராத மலைகளும் குன்றுகளுமே சாட்சி.’ ‘இதில் வாதி பிரதிவாதி யார் ஐயா?’ என்றான் பிரயாணி.

அதற்கு நான், ‘வாதி கடவுள், பிரதிவாதி மனுஷன், நியாயாதிபதி கடவுள், சாக்ஷிகள் மலைகளும் குன்றுகளுமாம்’ என, பிரயாணி ‘அப்புறம் சொல்லுங்கள் அந்த சொப்பனத்தைப்பற்றி’ என்றான்.

(இன்னும் வரும்.)

## The traveller who didn't prepare
### (Outline of an address for street preaching)

**By the Rev. A. C. Clayton**

## முன் ஆலோசனை செய்யாத பிரயாணி

[ஒரு தெருப்பிரசங்கம்]

தென் இந்தியாவிலுள்ள களபுரம் என்னும் ஓர் ஊரிலே மிக்க தனவந்தனான மிராசுதார் ஒருவன் இருந்தான். அவனுக்கு மனைவி மக்களும் பந்து மித்திரரும் அநேகரிருந்ததுமன்றி சொத்து சுதந்தரமும் ஏராளமாயிருந்தது. எல்லாரும் இவனைப் புகழ்ந்து தனவான்களில் விசேஷித்தவனென்று மதித்துவந்தார்கள். காஞ்சிபுரத்தில் ஏறக்குறைய ஒருமாத காலமாக நடந்தேறும் கருட உற்சவத்தைக்



குறித்தும், அங்கு நடைபெறும் பல விநோதமான காரியங்களைப் பற்றியும், இவன் கேள்விப்பட்டு காஞ்சிக்குப்போக ஏற்பாடுசெய்து, தன் குடும்பத்தாருடன் இதைக்குறித்து கலந்துபேசி, அங்குபோய் சுமார் ஒருமாதம் தங்கி அந்த உற்சவத்தைக் கொண்டாடவும் சுவாமி தரிசனஞ் செய்யவும், காணிக்கைகளைச் செலுத்தவும் தீர்மானித்தான். மேலும் தான் ஒரு தனவானாயிருந்தபடியால் அங்குபோய் சகலவித வசதிகளோடும் காலங்கழிக்கலாம் என்று சொல்லி, தன் குடும்பத்தார் அனைவரோடும் பல ஊழியக்காரரோடும் புறப்பட்டான்.

அந்தப் பிரயாணம் மிகவும் தொலைதூரமா யிருந்தபடியால் கஷ்டமாயிருந்தது. முதலாவது அவர்கள் மாட்டுவண்டியில் ஏறி அநேக மைல் தூரம் அதில் பிரயாணஞ்செய்து, ரெயில்வே ஸ்டேஷன் இருக்கும் ஊருக்கு வந்தார்கள். அங்குள்ள ஓர் சத்திரத்தில் தங்கி மறுநாள் ரெயில்வண்டி ஏறி அதில் பல மணிநேரமாகச் சென்று, பின் அந்த வண்டியிலிருந்து இறங்கி வேறு வண்டி ஏறி காஞ்சியை அடைந்தார்கள். அவர்கள் போன ரெயில்தொடரில் காஞ்சிபுரத்துக்கு அவர்களைப்போல் திருவிழாவுக்குப்போன அநேகர் வந்து ஏறியதால் மிராசுதாரும் அவருடைய பரிவாரமும் இடநெருக்கத்தினாலும் ஜன சந்தடியினாலும் இரண்டு மூன்று மணிநேரம் நிற்கவேண்டியதாயிற்று. அவர்கள் காஞ்சிபுரம் சேர்ந்ததும் மிராசுதார் தன் தம்பிமார்களை நோக்கி ‘இங்கே ஜனக்கூட்டம் ஜாஸ்தியாயிருப்பதால் நீங்கள் சீக்கிரமாய்ப் போய் களபுரத்து மிராசுதார் வந்திருப்பதாகச்சொல்லி ஒரு வசதியான வீடு ஒருமாதத்திற்கு வாடகைக்கு அமர்த்திவாருங்கள்’ என்றுசொல்லி அனுப்பிவிட்டு ரெயில்வேஸ்டேஷன் பக்கத்தில் வந்து உட்கார்ந்தார். வாடகைக்கு வீடு பேசப்போனவர்கள் சிறிது நேரத்திற்குப்பின் திரும்பிவந்து, ‘இந்த ஊருக்குத் திரள்கூட்டமான ஜனங்கள் வந்திருப்பதால் காலி வீடு கிடையாது’ என்றார்கள்.

மிராசுதார் இதைக் கேட்டு கோபமூண்டு, ‘புத்தியீனர்களே! களபுரத்து மிராசுதாருக்கு வீடு தேவை என்று நீங்கள் திட்டமாய்க் கூறியிருந்தால் எத்தனையோ பேர் நம்மை ஏற்றுக்கொள்ள ஆவலாய் வருவார்கள்’ என்றான். அதற்கு அவர்கள் ‘அண்ணா! அவ்வாறே கூறினோம்; அவர்களோ எங்களைப் பரிகாசம்செய்து, ஒருவன் முன்னமே இங்கு வீட்டுக்காக எழுதி, பணமும் அச்சாரமாக அனுப்பாமலிருக்கும்போது, உற்சவகாலத்தில் காஞ்சியில் வீடு எப்படி கிடைக்கும் என்று சொல்லுகிறார்களே’ என்று தெரிவிக்க, மிராசுதார் இதை நம்பாமல் மறுபடியும் அவர்களோடுகூட தானும் வாடகை வீடு விசாரிக்கத் தெருத்தெருவாய்ப்போய் அலைந்தும் வீடு கிடைக்காமல் திரும்பிவந்து, சத்திரத்திலும் ஜனநெருக்கமாயிருந்த படியால் தான் அங்கு தங்கவும் சமையல் முதலிய காரியாதிகளைக்

கவனிக்கவும் வசதி ஒன்றும் ஏற்படாதென்று அறிந்து, மறுநாள் துக்கத்தோடே தன் ஊருக்குத் திரும்பினான். அந்த மிராசுதார் தான் தங்கவேண்டிய இடத்துக்கு முன்னமே தக்க ஏற்பாடுகள் செய்யாதபடியால் இவனுக்கும் இவனுடைய பரிவாரத்துக்கும் மகா வெட்கமும் துயரமும் வீண் பணநஷ்டமும் உண்டாயிற்று.

இவன் செய்தது மகா புத்தியீனமே. ஆனால் நம்மில் அவனைப் போன்றவர்கள் இல்லையா? எப்படியெனில், நாம் இம்மையிலே நமது பாவத்தைப் போக்கி பாவவிமோசனத்தை அடைந்து மறுமையிலே மோட்சபதவியைப் பெறவேண்டும். அப்படியே எல்லாரும் அதை வாஞ்சித்து மோட்சபதவியே நமது பாக்கியம் என்று எண்ணி வருகிறோம். ஆனால் நம்மில் எத்தனையோ பேர் அந்தப் பாக்கிய நிலைமையைப் பெற ஏற்கனவே ஏற்பாடுசெய்யாமல் நிர்விசாரிகளாய்க் காலங்கழிக்கிறோம். தீமைசெய்து தீயோராய்ப்போன நாம் பரகதி அடைவதைக்குறித்து ஏதாவது ஏற்பாடு செய்யக்கூடுமோ? ஆம், கூடும். பொறாமை, தன்னயம், பகை, துரிச்சை முதலிய பாவ பாசங்களில் சிக்குண்டிருக்கிறவர்கள் மோட்சகதி சேர்வதெப்படி? நாம் இவ்வித தீமைகளை அகற்றி அவைகளைச் சுத்திகரிக்கிற தேவ அருளை நாடித் தேடினால் அதைப் பெறலாம். எப்படியெனில் சர்வ காருண்ணிய கடவுள் நமக்கு மோட்சபாதையைக் காண்பித்திருக்கிறார். அவர் அனுப்பிய அவதார புருஷனாகிய இயேசுகிறிஸ்து பகவானின் அளவற்ற இரக்கத்தினால் அது நமக்குக் கிடைக்கும். அவர் இவ்வுலகத்துக்கு வந்து சர்வ ஜனங்களின் பாவ பாரத்தையும் தாமே சுமந்தார். அக்காலத்தில் சிலர் அவருடைய நற்குண நற்செய்கைகளினிமித்தம் அவரைப் பகைத்து பொய்க்குற்றஞ்சாட்டி அவரைச் சிலுவையில் அறைந்து கொன்றார்கள்.

அவர் இவ்விதப் பாடுகளை உத்தரித்து, நமக்காக அளவற்ற புண்ணியத்தைச் சம்பாதித்து மரணத்தை ஜெயித்து உயிரோடெழுந்து தம்முடைய சீஷர்களுக்கு மோட்சபாதையைத் தெரிவித்து, அந்நாள் முதல் தமதுபேரில் பக்திவைக்கிற யாவருக்கும் தமது அருளை அளிக்கிறார். ஆதலால் நாம் விரும்புகிற மோட்சகதியை அடையும்படிக்கு நாம் இயேசுபகவான்மேல் பக்திவைக்கவேண்டும். இதுவே அத்தியந்த அவசியமும் நமதுபேரில் விழுந்த கடமையுமாயிருக்கிறது. ஆகையால் நாமெல்லாரும் பாவநாசகரும் மோட்ச வழிகாட்டியுமாகிய இயேசுபகவான்மீது பக்திவைப்போமாக.



# Man the Greatest of Creatures

### (An Address to Hindus)

By the Rev. M. P. Arulappen

## மனிதன் சிருஷ்டிகளில் பிரதானமானவன்

கடவுள் வானத்திலும் பூமியிலும் படைத்துக் காத்துவரும் சராசரங்களுக்குக் கணக்கில்லை. ஆகாயத்தில் வானராசிகளும் பூமியில் மனிதர், விலங்கு, பறவை, ஊர்வனவாதிகளும், தாவரவகைகளும், பூமிக்குள் அதிசயமான தாதுப்பொருட்களும், சமுத்திரத்தில் கணக்குக் கடங்காத சிறிதும் பெரிதுமான ஜலசரங்களும் உண்டு. இவற்றுள் ஒவ்வொன்றையும் ஊன்றிக் கவனித்தால் அதில் விளங்கும் கடவுளுடைய ஞானமும் வல்லமையும் இவ்வளவென்று சொல்ல யாராலாகும்!

நாமறிந்த இத்தனை கோடானுகோடியான சிருஷ்டிகளிலும் மேலான சிருஷ்டி கண்ணைக் கூசப்பண்ணும் கதிரவனுமல்ல, குளிர்ந்த கிரணங்களையுடைய சந்திரனுமல்ல, கருப்புக்கம்பளத்தில் முத்துப் பரப்பி வைத்ததை யொத்து விளங்கும் நக்ஷத்திரங்களுமல்ல, உயர்ந்தோங்கிய பருவதங்களுமல்ல, தாழ்ந்து அகன்று ஆழ்ந்த கடல்களுமல்ல, காட்டிலுலவும் மிருகேந்திரனுமல்ல, கார்மேகமொத்த கடகரியுமல்ல, எண்சாணுடம்புள்ள மனிதனே என்போம்.

மனிதனே கடவுளுண்டாக்கிய சிருஷ்டிகளிலெல்லாம் மேலானவனென்பதற் கையமேயில்லை. இதுபற்றியே ஔவையும் 'அரிதரிது மானிடராய்ப் பிறத்தலரிது' என்றாள். கடவுளுண்டாக்கின காற்றென்ன, நெருப்பென்ன, கடலென்ன, சிங்கமென்ன, புலியென்ன, இவைகளுக்கெதிரே மனிதன் பெலவீனமான ஒரு சிருஷ்டியாயிருந்தாலும் அவனே ஐம்பூதங்கள்மேலும், சராசரமனைத்தின்மேலும் ஆளுகை செலுத்துகிறான். அவனுக்கெல்லாவற்றையும் அடக்கி ஆளத் திறமையிருக்கிறது.

கடலை நீராவிக்கப்பலால் கடக்கிறான். ககனமார்க்கமாய் விமானமேறிப் பறக்கிறான். கடலைக் கரையாக்குகிறான். கரையைக் கடலாக்குகிறான். 1000, 10000 மைல் தூரத்திலுள்ளவர்களோடு அரைக்கணத்தில் மின்சாரத்தந்தி, கம்பியில்லாத்தந்தி வாயிலாய்ப் பேசிவிடுகிறான். மலைகளைத் துளைத்துப் பாதைபோடுகிறான். தூரதிருஷ்டிக்கண்ணாடியைக்கொண்டு வானமண்டலங்களுக்குள் உலாவி அங்குள்ள இரகசியங்களை அறிந்துகொள்ளுகிறான். மனுஷ உருவத்தையும், பேச்சையும், பாட்டையும் கண்ணாடிகளிலும், தகடுகளிலும் பிடித்து எவ்வளவுகாலம் வேண்டுமோ அவ்வளவு காலத்துக்கு அடைத்து வைத்துக்கொள்ளுகிறான். சதா பனிக்கட்டி மூடிச் சூரி

யன் கதிர் படுதற்கரிய வட துருவ தென் துருவ அற்றங்களைக் கண்டு விடுகிறான். சிங்கம், புலி, கரடி இவற்றை ஆட்டிவைக்கிறான். அம்மம்ம! அவனுக்கிருக்கும் திறமை எவ்வளவு பெரிது!

மனிதன் இப்படிச் சிருஷ்டிகளிலெல்லாம் பிரதான சிருஷ்டியாயிருப்பது எதினால்! கடவுள் அவனை அமைத்த அமைப்பினால் தான். மனிதனுடைய இயல்பை உற்றுப்பார்த்தால் அவன் சரீரமும் ஆத்துமாவும் உள்ளவன். (மற்றைச் சிருஷ்டிகளெல்லாம் சரீரம் மட்டும் உள்ளன. ஆதலால் மண்ணுக்குமட்டும் உரியன.) மனிதன் புத்தி, சித்தம், சன்மார்க்க உணர்வுள்ள ஆத்துமாவோடு கூடியவன். அதனால் அவன் கடவுளுக்கொப்பானவன். கடவுள் அவனைப் படைத்தபோது தம்மைப்போல் படைத்தார். கடவுள் சித்துமயமானவர். அவருக்கு உருவமில்லை. ஆகவே தம்மைப்போல் படைத்தார் என்றால், தமது குணம்போலக் குணமுள்ளவனாகப் படைத்தார் என்பதாம். ஆகிலும் கடவுளுக்கும் அவர் கைப்படைப்பான மனிதனுக்கும் அபாரபேதமுண்டு. அவரோ சர்வக்ஞர்; இவனோ கிஞ்சிக்ஞன். அவர் அளவில்லாத நன்மைச் சொரூபி, அறிவுடையவர்; இவனோ அளவிலடங்கிய அறிவு, பரிசுத்தம், நன்மையுள்ளவன், இதனால் அவன் மண்ணுக்கும் விண்ணுக்கு முரியவன். அவன் மண்ணிலிருந்து உற்பத்தியாகி மண்ணிலே பிழைத்தாலும் அவன் பரலோகத்தையும் நாடவேண்டியவன்.

மனிதனுக்கு நன்மை தீமையை வகையறுத்தறியும் அறிவுண்டு. அறிந்தபடித் தீர்மானித்துச் செய்யச் சித்தமுண்டு. தன் செய்கையால் விளையும் இன்பதுன்பங்களை அநுபவிக்கும் உணர்வுண்டு. இதுவே அவன் சகல சிருஷ்டிகளிலும் பிரதானமானவனாயிருப்பதற்குக் காரணம்.

ஆகிலும் மனிதன் தன் முக்கியத்தை மறந்து மண்ணை நாடிக்கொண்டு மிருகம்போல் பிழைக்கிறதைக் காண்கிறோம். அவன் காலைமுதல் கண்ணடையுமட்டும் மாடுபோலுழைத்து உண்டு உறங்கிப் பலுகிப் பெருகி வருகிறான். இது எவ்வளவு பரிதாபம்!

— மனிதனைப்பார்த்தால் அவனே எல்லாச் சிருஷ்டிகளிலும் சிறந்த சிருஷ்டியாய்த் தோன்றுகிறான். சூரியசந்திரர் கடவுள் விதித்தபடித் தவறாமல் தங்கள் வேலையைச் செய்கின்றன. பறவை, விலங்கு, தாவராதிகளும் அப்படியே காலங்களும் பருவங்களும், ஈசன் அமைப்புக்கிணங்கித் தத்தம் வேலையை நடத்துகின்றன. மனிதன் இம்மட்டுமோ கடவுளமைத்த ஒழுங்குமீறித் திரிகிறான்? அவருடைய சித்தம் இன்னதென்று மனச்சாட்சியால் அறிந்தும் அதை மீறுகிறான். சுவாமி ஏது? பூதமேது? மோக்ஷநரகத்தை யார் கண்டது என்கிறான். நன்மைசெய்யப் படைத்த கையால் தீமைசெய்கிறான். தன்



கால்களால் ஆகாதவழிக்குப் போகிறான். காதால் அடாததைக் கேட்டானந்தித்து, கண்ணால் தகாததைப் பார்த்து இச்சித்து, வாயால் அசுத்த வார்த்தைகளைப் பேசி, மனதை யடக்காமல், கடவுளுக்கஞ்சாமல், மனம்போன போக்கிலே நடக்கிறான். என்னைக் கேட்பதார் என்கிறான்.

தற்காலம் மனிதனைப் பார்த்தால் அவன் இராஜபிள்ளையாய்த் தோன்றாமல் தோட்டிமகனாய்த் துலங்குகிறான். அவனுள்ளத்தில் குடியிருந்து அவனை உருக்குலைக்கிற பாவத்தால் மனிதன் இப்படியானான். இப்படியான பாவமனிதனை மறுபடியும் பழையசீருக்கு, அவனுக்குரிய மேன்மைக்குக் கொண்டுவர வழியுண்டா? மனிதன் என்ன பாடுபட்டாலும் தன் பாவம் நீங்கிக் கடவுளுடைய சாயலையடைந்துகொள்ளமாட்டான். இப்படிக் கெட்டுப்போன மனிதரை மறுபடியும் தெய்வப்பிள்ளையாக்கக்கூடிய ஒரு இரக்ஷகருண்டு.

அவர் கிறிஸ்துபகவான். அவரையொத்த இரக்ஷகனை உலகிலெங்குங் காணக்கிடையாது. அவர்தான் மனுஷ ஆன்மாவின் மேன்மையை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் காட்டினவர். அவர் ஒருமுறை 'ஒருவன் உலகத்தையெல்லாம் தனதாக்கிக்கொண்டு தன் ஆத்துமாவை இழந்துபோனால் பயனென்ன?' என்றார். உலகத்தை எல்லாம் ஒரு தட்டிலும் மனுஷ ஆத்துமாவை ஒரு தட்டிலும் வைத்தால் ஆத்துமாவுள்ள தட்டே தாழும். இவ்வளவு விலையுறப்பெற்ற ஆத்துமாவை மனிதன் மண், பெண், பொன்னாசையாகிய புழுதியிலும் பாவச்சேற்றிலும் புரட்டி அழுக்காக்கிச் சகல சிருஷ்டிக்கும் அரசனாயிருப்பதற்குப் பதிலாக அடிமையாகிவிட்டான். இதை இந்த இரக்ஷகர்தான் உணர்த்தவல்லவர். இவரது உபதேசத்தைக் கவனித்துக் கேட்டால் நமதுள்ளத்தில் இருக்கும் பாவத்தின் பயங்கரமும் அதனாலுள்ள தேவகோபமும் நமக்கு விளங்கும். ஒருத்தியை ஒழுங்கின்றிக் கைபிடிப்பதுதான் விபசாரமென்று மனிதர் நினைக்கிறார்கள். இவரோ, ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்த்தலே விபசாரமென்கிறார். இவருடைய உபதேசப்படி மனுஷருக்கு முன்பாக நல்லவன் நல்லவனல்ல. கடவுள் பார்வையில், உள்ளத்தில் நல்லவனே நல்லவன். பிறனுக்குத் தீமைசெய்யாதவனல்ல, அவனுக்குச் சதா நன்மைசெய்து தன்னைப்போல் அவனையும் நேசிப்பவனே நல்லவன்.

இந்தக் குணம் மனிதனுக்கு உண்டா? எவனுக்கும் இல்லையே. இதற்கெதிரிடையான பொய், களவு, காமம், பொறாமை, வெகுளி முதலிய தீக்குணங்களன்றோ இருக்கின்றன. இந்தக் கந்தைகளையெல்லாம் நம்மைவிட்டு உரிந்துபோட்டுப் பரிசுத்தம், நீதி, அன்பு, சாந்தம், இச்சையடக்கம் முதலிய சுகுணங்களைத் தாமே தருகிறேன் என்கிறார். அவர் வார்த்தையின் உண்மையை அவரது அடியாரிடத்தில் காணலாம். நீங்களும் அத்தன்மையான சுகுணமுள்ளவர்களாக ஆசித்தால் இயேசுகிறிஸ்துவை உங்கள் இரக்ஷகராக ஏற்றுக்கொண்டு பூரண சற்குணராகிக் கடவுள் படைத்த சிருஷ்டிகளில் பிரதான

சிருஷ்டிகளாய் விளங்குங்கள். இந்த இயேசுபகவானைப்பற்றி யறிய ஆசையுள்ளவர்கள் அவரது ஜீவிய விருத்தாந்த மடங்கிய சுவிசேஷமென்னும் நூலில் அறியலாம். அது காலணா அரையணாவுக்கு அகப்படும். ஆதலால், எனக்கரிய நண்பரே! பெறலரிய மானிடப் பிறவி பெற்றும் அதை விருதாவாக்கிவிடாமல் அது புனிதமாகி ஈடேறும் வழியைக் கண்டு கடைப்பிடியுங்கள்.

## Religion and Adolescence

**By the Editor**

## பாலியம் மாறி வாலிபந்தொடங்குங் காலமும் பக்திநிலைமையும்

'சிறு பிள்ளைகளும் மார்க்கமும்' என்கிற பொருளைக் குறித்து இப்பத்திரிகையில் எழுதப்பட்டுளது. இப்பொழுது வாலிபப் பருவத்துக்கும் மார்க்கத்துக்குமுள்ள சில சம்பந்தங்களைக் கவனிக்கக் கடவோம்.

வாலிபப் பருவத்தின் சில குறிப்புக்கள்.

இப்பிராயத்தில் சரீரம் ஆச்சரியமாய் மாறும். ஜனிப்பிக்கும் உறுப்புக்களுக்குப் புது ஜீவனைப் பிறப்பிக்கும் சக்தி உண்டாகும். தவிர, தேக கனத்திலும் உயரத்திலும் பிள்ளைப்பருவத்தின் வளர்ச்சிக்கும் இப்பருவத்தின் வளர்ச்சிக்கும் மெத்த வித்தியாசமுண்டு. புல நரம்புகள் (Nerves) இப்போது மிகச் சுறுசுறுப்பாய்க் கிரியை செய்யும், சிலவேளை அவைகள் மிதமிஞ்சி வேலைசெய்வதால் சில அசௌக்கியங்கள் உண்டாகிறதும் உண்டு. சரீரம் மாற மாற மனதுங்கூட மாறுகிறது. அதின் உணர்ச்சிகள் இக்காலத்தில் அதிக பலமானவை. சந்தோஷம், துக்கம் முதலிய பல மனோசலனங்கள் உள்ளத்தைக் குழப்பிக்கொண்டிருக்கும். பதினாறு வயதுள்ள ஒரு வாலிபன் தான் பத்து வயதில் கவனியாமல் விட்ட ஒரு அழகிய காட்சியைக் கண்டு பரவசமடைவான். இன்னொருவன் அரிய பெரிய நூற்களை வாசித்துச் சிந்திப்பான். இன்னொருவன் மகா பக்திமானவான். விசேஷமாக இந்தப் பிராயத்தில் நல்லொழுக்கத்தைக் குறித்து அநேக கேள்விகளைக் கேட்பார்கள். நியாயத்தைக் காணாமல் வாலிபர் பெரியவர் சொன்னபடியே பிள்ளைகளைப்போல் செய்யார்கள். பக்தி விஷயங்களில் இது விசேஷித்த காலம், ஏனெனில், இக்காலத்தின் துவக்கத்தில் வாலிபருடைய முழு ஜீவனும் ஈரமான களிமண் போன்றது. வாலிபப்பிராயம் கழிவதற்குள் அந்த மண் காய்ந்துபோம். சாதாரணமாக (எப்போது மல்ல) ஒரு



மனிதன் 24 வயசில் எந்தக் குணமுள்ளவனோ, மரணபரியந்தம் அந்தக் குணமுள்ளவனாகவே யிருப்பான். களிமண் இன்னும் ஈரமாயிருக்கும்போதே அதை அழகாக உருப்படுத்துவோமாயின், பிற்காலத்தில் அது அவலட்சணமாகாது. வாலிபப்பிராயத்தில் ஒருவன் தன்னைக் கடவுளுக்கு ஒப்புக்கொடுத்தால், பிற்காலத்தில் அவனுடைய பக்திக்கு அவ்வளவு மோசமிராது. அப்பிரகாரமாகவே ஒரு வாலிபன் தன்னைத் தீமைக்கு ஒப்புவித்தால், சாதாரணமாய் அவன் ஜீவகாலமட்டும் கெட்டவனாகவே யிருப்பான். அன்னவன் குணம் மாறுவது அரிது. இப்படியிருக்க, சபைப்போதகர் தங்கள் சபைக் குடும்பங்களை விசாரித்துப் பாதுகாக்கும்போது வாலிபரை விசேஷமாய்க் கவனிப்பது அவசியம். அநுதாபத்தோடும் யூகத்தோடும் யௌவன பருவத்தினரை நடத்துவதால் அநேக ஆத்துமாக்களை ஆதாயப்படுத்தலாம். வாலிபப்பிராயத்தின் விசேஷங்களை அறியாமல் யோசனையின்றி அவர்களைக் கண்டித்து, அவர்களைக் கேட்டுக்கு அனுப்புவது இலேசு.

வாலிபப் பருவத்தின் பிரிவுகள்.

மானத சாஸ்திரிகள் இப்பருவத்தை மூன்று பிரிவாகப் பிரித்திருக்கிறார்கள். ஸ்திரீகள் புருஷரைக் காட்டிலும் சீக்கிரமாய் யௌவனத்துக்கு வருகிறபடியால், அவர்களுடைய பருவத்தின் பிரிவுகள் வேறே. புருஷருடைய பருவத்தின் பிரிவுகள் வேறே.

ஸ்திரீகளின் வாலிபப் பருவத்தின் பிரிவுகளாவன:

முதல் பிரிவு, 11 வயது முதல் ஏறக்குறைய 14 வயது மட்டும்
இடைப் பிரிவு, 15 வயது முதல் ஏறக்குறைய 17 வயது மட்டும்
கடைசிப் பிரிவு, 18 வயது முதல் ஏறக்குறைய 21 வயது மட்டும்.

புருஷருடைய வாலிபத்தின் பிரிவுகளாவன:

முதல் பிரிவு, 12 வயது முதல் 16 வயது மட்டும்
இடைப் பிரிவு, 16 வயது முதல் 20 வயது மட்டும்
கடைசிப் பிரிவு, 21 வயது முதல் 24 வயது மட்டும்.

மனிதர் எல்லாரும் ஒரே மாதிரியானவர்கள் அல்லாததினால், இந்தப் பிரிவுகள் எப்போதும் திட்டமாக இப்படியே ஒவ்வொருவரிடத்திலும் இருக்கமாட்டா. ஆயினும் பெரும்பான்மையாய் இப்படியே பிரிக்கலாம்.

ஒவ்வொரு பிரிவிலும் கவனிக்கவேண்டிய சில இலட்சணங்கள்.

முதலாம் பிரிவு:

ஒரு பையன் இவ்வயதுக்கு வரும்போது, நான் என்ற வார்த்தை அவனுக்கு முக்கியம். தான் செய்கிறது பராக்கிரமம், தான் நினைக்கிறது சத்தியம், தான் சொல்லுகிறது பிரமாணம் என்றிருப்பான். இதுவரைக்கும் எல்லாவற்றிலும் பெரியோரிற் சார்ந்தவன் இப்

போது எல்லாவற்றிலும் தன் சொந்த பலத்தில் நிற்கப் பிரியப்படுவான். இப்போது கீழ்ப்படிதல் அவனுக்கு மெத்தக் கஷ்டம். தனக்குத் தானே ஒவ்வொன்றையும் புதிதாய்க் கண்டுபிடிப்பான்.

இந்த லட்சணமிருந்தாலும், அதற்கு நேர்விரோதமாகத் தோன்றக்கூடிய இன்னொரு இலட்சணத்தையும் பார்க்கலாம். இவ்வயதுள்ள பிள்ளைகள் கூட்டங் கூட்டமாகத் திரிவார்கள். தோழருடைய விஷயத்தில் தங்களுக்கு இருக்கும் உத்தரவாதத்தை நன்றாய் உணர்வார்கள். ஒரு வாலிப சங்கத்தக்குச் சம்பந்தமாகக் கண்டிப்பான பிரதிக்கினைகளைச் செய்யச் சம்மதித்து, அவைகளின்படி கண்டிப்பாய் நடப்பார்கள்.

மேற்சொன்ன முதலாம் இலட்சணத்தைக் கவனித்து, குடும்பத்திற் பிள்ளைகளுக்கு விசனமுண்டாகும்படி நாம் அனாவசியமான பல சட்டங்களை ஏற்படுத்தக்கூடாது. பிள்ளைகளுக்கு இலேசாய் விளக்கிக் காட்டக்கூடிய நாலைந்து அவசியமான பிரமாணங்களை ஏற்படுத்துவதே ஒழிய, வருத்தமான ஆயிரம் கட்டளைகளைக் கொடுக்கக்கூடாது. இரண்டாம் இலட்சணத்தைக் கவனித்து, நமது பையன்களுக்காக அநேக நல்ல சங்கங்களை ஏற்படுத்துவது உத்தமம். இந்நாட்களில் Boy Scouts என்கிற சங்கத்தால் கணக்கில்லாத பையன்களுக்குப் புது தைரியமும், புத்தியும், ஒழுக்கத்தில் பலமும் உண்டாயிருக்கிறது. இந்தியாவில் அது இனிமேல் மெத்த பிரயோஜனமாய் இருக்கக்கூடும். தெருவில் அலைகிற பிள்ளைகளுங் கூட இந்தச் சங்கத்தைச் சேர்ந்து, அதின் சட்டங்களுக்கு அடங்கி, அதின் பிரதிக்கினைகளை நிறைவேற்றி, குணத்தில் நல்லவர்களாவார்கள்.

இந்தப் பிரிவின் மற்றெல்லாக் குறிப்புக்களிலும் விசேஷமானது, இது சாதாரணமாய்க் குணப்படவேண்டிய காலம். சில சாஸ்திரிகள் அநேக நூற்றுக்கணக்கான கிறிஸ்தவர்களைத் தனித்தனியே விசாரித்து, குணப்பட்ட காலம் எப்போது என்று கேட்டு, குணப்பட்ட வயதின் சராசரியைக் கண்டுகொண்டிருக்கிறார்கள். அது ஏறத்தாழ பதினாறு வயதுதான். எல்லாரும் பதினாறு வயதில் குணப்படுவார்கள் என்பது அல்ல, சராசரியைப் பார்க்கும்போது, பதினாறு வயதுதான் குணப்படவேண்டிய வயது.

இதை அறிவது நமக்கு எவ்வளவு விசேஷம்! பதினாறு வயதுள்ள நமது பிள்ளைகளுக்காக எவ்வளவு ஊக்கமான ஜெபம்பண்ணி, அவர்களைக் கிறிஸ்துவண்டை அழைத்துக்கொண்டுபோக எவ்வளவு அன்பாகப் பிரயாசப்படவேண்டும்! நமது Boarding பள்ளிக்கூடப் பிள்ளைகளை ஆதாயப்படுத்தும்படி எவ்வளவோ முயற்சி செய்யவேண்டும். அவர்கள் தனித்தனியாய்க் கிறிஸ்துவைத் தங்களுடைய சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளுமட்டும் நாம் சும்மா இருக்கலாமா?

C. L. S. PRESS, MADRAS—1917

No.' 134. ஜூலை 1917

# வேதியர் விளக்கு

OFFICE OF THE REGISTRAR ... JUL 1917 * MADRAS

## Great Souls at Prayer

## பெரியோர் செய்த பிரார்த்தனைகள்

நமது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் கடவுளே, மகிமையின் பிதாவே, கிறிஸ்துவை அறிகிற அறிவில் எங்களுக்கு ஞானத்தின் ஆவியையும் வெளிப்படுத்தலின் ஆவியையும் ஈந்தருளும். எங்களுடைய உள்ளத்தின் கண்களைப் பிரகாசிப்பியும். அப்போது உம்முடைய அழைப்பினால் உண்டாகும் நன்மையை அறிந்தவர்களாய் எதிர்பார்ப்போம். பரிசுத்தவான்களாகிய உம்முடைய சுதந்தரத்தினுடைய மகிமையின் ஐசுவரியத்தை அறிவோம். உம்மை நம்புகிற எங்களிடத்தில் கிரியைசெய்யும் உமது அளவில்லாத வல்லமையை உணருவோம். கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பி, பரலோகத்தில் சகல அதிகாரிகளுக்கும் மேலாக உட்காருவித்த வல்லமை அதுவே. ஆமென்.

பரி. பவுல் (எபே. $1^{17-23}$).

ஆண்டவராகிய எங்கள் கடவுளே, நீர் பெரியவரும், நித்தியரும், மகிமையில் அதிசயமானவரும், உம்மை முழு நெஞ்சோடும் நேசிக்கிறவர்களுக்காக உடன்படிக்கையையும் வாக்குத்தத்தங்களையும் காக்கிறவருமாயிருக்கிறீர். நீரே எல்லாருக்கும் ஜீவன், உம்மண்டை ஓடுகிறவர்களுக்கு நீரே சகாயர், உம்மைநோக்கிக் கூப்பிடுகிறவர்களின் அவாநோக்கம் நீரே. எங்கள் இரகசியமான பாவங்களையும் வெளியரங்கமான பாவங்களையும், எங்களுக்குள் உம்முடைய பரிசுத்தத்தை விரோதிக்கிற ஒவ்வொரு நினைவையும் நீக்கி

எங்களைச் சுத்திகரித்தருளும். நாங்கள் சுத்த இருதயத்தோடும் தெளிந்த ஆத்துமாவோடும், பூரண அன்போடும் அமைதியான அவாநோக்கத்தோடும், சந்தேகமும் பயமுமில்லாமல் உம்மிடத்தில் பிரார்த்தனை ஏறெடுக்கத்தக்கதாக, எங்கள் தேகங்களையும் ஆத்துமாக்களையும், எங்கள் இருதயங்களையும் மனச்சாட்சிகளையும் சுத்திகரித்தருளும். ஆமென்.

பரி. பசில் (329-379).

## How to think of God

*(An Address given to Hindu Women)*

**By the Rev. F. Kingsbury, B.A.**

## கடவுளைப்பற்றிய எண்ணம்

எப்படிப் பட்டவன் இறைவனென் றெண்ணினை,
அப்படி யன்றோஉன் வணக்கமும் இருக்கும்?

1. *தமிழ்நாட்டிலே மதுரைஜில்லாவிலே கள்ளர் என்ற ஒரு ஜாதியார் உண்டு. அவர்களிற் பெரும்பான்மையோர் ஜாதியில் மாத்திரமல்ல, தொழிலிலும் கள்ளரே. இரவிலும் பகலிலும், வீட்டிலும் வெளியிலும், அசரம் சரம் ஆகிய எல்லாப் பொருளையும் திருடுவதும் கொள்ளையிடுவதுமே அவர்களுக்குத் தொழில். இவர்களிடத்துள்ள அச்சத்தினாலே கிராமங்களிலுள்ள ஜனங்கள் இவர்களின் தலைவனோடு ஓர் உடன்படிக்கை செய்துகொள்வார்கள். அதாவது, அவனைத் தங்கள் 'காவற்காரன்' ஆக ஏற்படுத்திக்கொள்ளுவார்கள். ஒவ்வொரு குடும்பமும் இவனுக்கு மாதந்தோறும் 'காவற்பணம்' தங்கள் தங்கள் சக்திக்கேற்றபடி கொடுத்துவருவார்கள். காவற்காரன் கிராமத்தாருடைய சொத்துக்கள் களவுபோகாதபடி காத்து வருவான். உள்ளபடி சொன்னால், அவன் காவல் காப்பவன் அல்லவே யல்ல. அவனாவது அவன் தலைமைக்குக் கீழ்ப்பட்ட வேறு கள்ளராவது களவுசெய்து ஜனங்களை வருத்தாதிருக்கும்படி ஜனங்கள் பயத்தினாலே கொடுக்கும் தீக்கோடையே இந்தக் காவற்பணம். இத்தீக்கோடை கொடாதவர் யாரோ, அவர்கள் பொருளை அபகரிப்பார்கள் இந்தக் கொடிய கள்ளர்கள்.*

*மதுரை ஜில்லாவில் உள்ள ஜனங்கள் கள்ளரைக்குறித்து எப்படி எண்ணுகிறார்களோ அப்படியே நமது தமிழ்நாட்டிலுள்ள ஜனங்களிற் பல்லாயிரவர் கடவுளைக்குறித்து எண்ணி, அவ்வெண்ணத்துக்கேற்றபடியே கடவுளை (அல்லது தெய்வங்களை) வணங்கி வருகிறார்கள். கடவுள் கெட்டவரென்றும், தம்மை வணங்கித் தமக்குப் பூசைகள், பலிகள், திருவிழாக்கள் நடத்தாதவர்களை எப்படியாவது கஷ்டப்படுத்துவார் என்றும், அக்கஷ்டங்களுக்குத் தப்பவேண்டுமானால், அவருக்குப் பூசைகளும் பலிகளும் திருவிழாக்களும் தப்பாமல் நடத்தவேண்டும் என்றும், மறந்துவிட்டால், அவரது கோபாக்கினைக்குத் தப்பமுடியாதென்றும் பயந்து, பயத்தினிமித்தம் அவரைப் பூஜித்து வருகிறார்கள் அநேக ஆயிரவர்.*



*தன் புருஷன் வேலையிலிருந்து வருமுன்னே வீடுவாசல் பெருக்கி, தண்ணீர் தெளித்துக் கோலம் போட்டு அவனுக்குக் காப்பியும் சிற்றுண்டியும் வைத்திராவிட்டால் கைக்கொம்பினாலே முதுகிலே கொழுக்கட்டைபோல் வீக்கம் காணும்படி அடிப்பான் பாதகன் என்று பயந்து வேலைசெய்யும் ஏழை மனைவிபோலன்றோ நம்மில் அநேகர் ஆனார்கள்.*

2. *தமிழ்நாட்டிலே பல இடங்களிலே வருஷப்பிறப்புக் காலத்திலே அநேகர் தங்கள் மேலதிகாரிகளைக் கண்டுகொள்ளும்படி போவார்கள். பூமாலைகள், கிச்சிலிப்பழங்கள், கற்கண்டு முதலியன தாம்பாளத்திலே வைத்துக்கொண்டுபோய்த் தங்கள் அதிகாரிகளைத் தரிசனம் செய்து வருவார்கள். ஏன் இப்படிச் செய்கிறார்கள்? தங்கள் மேலதிகாரிகள் மேலுள்ள அன்பினாலோ? அல்லவே யல்ல. மேலதிகாரிகளது தயவு கிடைத்தால் உத்தியோகம் உயரும், சம்பளம் அதிகரிக்கும் என்ற ஆலோசனையினாலேயே. இப்படி வருஷந்தோறும் கண்டுகொள்வதும் அன்றிச் சமயங்கிடைக்கும்போதெல்லாம் சுவர்ணபுஷ்பங்களாலும் பலர் தங்கள் அதிகாரிகளுக்கு அருச்சனைசெய்வதும் உண்டு. நமது தேசத்திலே உத்தியோகத்துறைகளிலே நாள்தோறும் பரிதானம் (=லஞ்சம்) கொடுப்போரும் வாங்குவோரும் எத்தனைபேர் என்று சொல்வது! இவ்வாறு லஞ்சம் கொடாவிட்டால் யாதொரு நன்மையும் மேலதிகாரிகளிற் சிலர் செய்யார். இக்கீழ்மக்களைப் போன்றவர் கடவுளும் என்று எண்ணிவருகிறவர் தொகை எவ்வளவு! கடவுளுக்குப் பூசைகள், பலிகள், திருவிழாக்கள் செய்தால் அவர் அருள் கிடைக்கும், இல்லாவிட்டாற் கிடையாது என்று எண்ணிப் பூசை செய்வார் பலர்.*

*தன் கணவனுக்கு அறுசுவையுண்டி செய்து ஊட்டியும், வேறு வகைகளில் அவனை மகிழ்வித்தும் வந்தால், தனக்கு அழகிய ஆபரணங்களும் உயர்ந்த ஆடைகளும் வாங்கித் தருவான் என்று எண்ணி வேலைசெய்யும் அன்பில்லாப் பெண்போலானார், கடவுட் பூசைசெய்யும் பலர்.*

8. கடவுள் நமது தந்தை, நாம் அவரது பிள்ளைகள். இப்படிச் சொல்வது உபமான அலங்காரம் அல்ல. கடவுள் நம் தந்தைபோல்வர் அல்ல; அவரே நமது தந்தை. உலகத்திலுள்ள நமது தந்தைமார்களில் நல்லவர்கள் இத்தன்மையைப் போன்றவர்கள். கடவுளின் வடிவு அருள்வடிவு. நம்மை நேசிப்பதே அவர் இயல்பு. நமது நாட்டில் சிலர் கடவுளுக்குப் பெயர் 'சிவன்' என்றார்கள். வேறு சிலர் கடவுள் பெயர் 'விஷ்ணு' என்றார்கள். யூதர் கடவுள் பெயர் 'யெகோவா' என்றார்கள்.

இயேசு குருநாதரோ தாம் போதித்த காலத்தில் கடவுள் பெயர் 'தந்தை' என்று போதித்தார்:

கடவுள் நம்மை நேசிக்கிறார். நாம் அவரை நினைத்தாலும் நினையாவிட்டாலும் அவர் நம்மை நேசிக்கிறார். நாம் அவரைக் கேட்டாலும் கேளாவிட்டாலும் அவர் நமக்குப் பல நன்மைகள் செய்துவருகிறார். நாம் அவரை வணங்காவிடின் அவர் கோபத்தினால் நம்மை அழியார். நாம் அவரை வணங்குவதினாலே அவர் தயவைச் சம்பாதிக்க முடியாது. ஆயினும் அவர் நமது தந்தையென்றும் நாம் அவர் பிள்ளைகள் என்றும் உணர்ந்துகொண்டால், நாம் நமது தந்தையை வணங்காமலிருப்பது எப்படி?

'மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே.'

## What doth the Lord require of thee?

*(A wayside conversation)*

**By the Rev. T. Narasimhan**

## கடவுள் விரும்புகிறதென்ன?

(தொடர்ச்சி)

'பிரயாணியே, முன்னொருகாலத்தில் கடவுள் இதன் பக்தனொருவருக்குத் தரிசனமாகி சொன்னதைக் கேட்டாயோ? ஆதிப்பெருங் கடவுளிடம் என்னத்தைக் கொண்டுபோவேன் என்று பக்தன் யோசிக்கிறான். தகனபலிகளை, கற்பூரம், தூப தீபங்களைக் கொண்டு போகவேண்டுமோ என்று ஒரு முறை எண்ணுவான். சீ, இது சரியல்ல. இது போதாது, நல்ல கொழுத்த காளையை பலியிட்டால் கர்த்தருக்குப் பிரியமாயிருக்குமோ? இதுவும் போதாது. ஒருவேளை ஆயிரக்கணக்கான ஆட்டுக்கடாக்களைக் கொண்டுபோய் பலியிட்டால் கடவுள்



பிரியப்படுவாரோ? அல்லது லக்ஷக்கணக்கான எண்ணெய்க் குடங்களைக்கொண்டு திருவண்ணாமலையில் கார்த்திகைதீபம் ஏற்றுகிறாப்போல் ஏற்றினால் அவர் மனம் திருப்தியாகுமோ? ஒருவேளை இவைகளெல்லாம் போதாததுபோலும். எனக்கு அருமையான என் ஜேஷ்டபுத்திரனையே பலியாகக் கொடுத்துவிட்டால் என் பாவமும் என் அக்கிரமமும் போகாதோ? இவ்விதமாய் பக்தன் யோசிக்கையில், கடவுள் சொப்பனத்தில் அவனுக்குத் தரிசனமாகி சொல்லுவார்: 'ஏ, மனுஷா, நீ என்ன யோசிக்கிறாய்? என்னை வியாபாரி என்று எண்ணிவிட்டாயோ? கொடுக்கல் வாங்கல் வியாபாரம் என்னிடம் இல்லை; நான் போலீஸ்காரனும் அல்ல, லஞ்சம் கொடுத்து என்னைத் திருப்தியாக்கல் ஆகுமோ? நான் விரும்புகிறது வேறே. அதை அறிவித்திருக்கிறேன். உனக்குத் தெரியாதோ?' 'அது என்ன ஸ்வாமி, சொல்லும்' என்றான் பக்தன். கடவுள் சொல்லுவார்: 'மனுஷனே, நீ செய்யவேண்டியதும் நான் விரும்புகிறதும் மூன்று காரியங்களே.' அதற்குள் பிரயாணி: 'அதென்னய்யா அது, சொல்லுங்கோ பார்க்கலாம்.' 'அதுவா அப்பா, சொல்லுகிறேன் கேள்: நீதியைச் செய்து, அதாவது, பணக்காரன் ஏழைகளிடமிருந்து அநியாய வட்டி வாங்கி, நிலத்தைப் பிடுங்கிக்கொண்டு, அவனை அநாதையாய்ப் போக்காமலும், கிராமமுனிசீப் பட்சபாதமில்லாமல் கிராமகாரியங்களை விசாரிப்பதும், போலீஸ்காரர்களும் மாஜிஸ்ட்ரேட்டுகளும் கைக்கூலிவாங்கி கேசைப் புரட்டாமல், ஒடுக்கப்பட்டவனுக்குக் கடவுளைப்போல நீதிசெய்வதும் ('ஆ! இது சொன்னயே ஐயா, இப்படி எங்கே ஐயா உலகத்திலே இருக்குது?' என்பான் பிரயாணி), ஒருவன் இன்னொருவனுக்கு விரோதமாய் துட்டுக்கு ஆசைப்பட்டு, கச்சேரிக்குப் போய் பொய்ச்சாட்சி சொல்வதும் (பிரயாணி: இதுதான் ஐயா எங்க ஊரிலே இப்போ ஜாஸ்தி, இரண்டணாவுக்கு ஒரு பொய்ச்சாட்சி ஐயா எங்கள் ஊரிலே, ஒரு முந்தை கள்ளுக்கு அகப்பட்டால் போது ஐயா, இப்படித்தானே ஐயா அந்த கவுண்டன் வாயிலே மண்ணை போட்டான் அந்த பாவி!!) என்று இவ்விதமாய்ச் செய்யாமல் கடவுள் நீதிபரராய் இருக்கிறது போல அவர் ஸ்தானாபதியாய் நின்று நீ பட்சபாதமும், ஜாதிவித்தியாசமும், பணப்பெருமையும் பாராமல் நீதிசெய்வதே கடவுள் விரும்புகிறதில் முதலாவது.'

'இரண்டாவது என்ன தெரியுமா அப்பா?'

'சொல்லுங்கள் ஐயா, இது சரியாக இருக்குது.'

'கடவுள் விரும்புகிற இரண்டாவது காரியம், இரக்கத்தைச் சிநேகிக்கவேண்டுமாம். அதாவது வெறும் நீதிமாத்திரம் போதாது. நீதியோடு தயை, காருண்யம், இரக்கம், கிருபை கலந்து இருக்க



161285

வேண்டும்; அருள் வேண்டும்; மன்னிக்கும்படியான தயையுள்ள சிந்தையும் வேண்டும். கடவுள் இப்படித்தானே அப்பா இருக்கிறார். அவர் ஒரு கையாலே அடித்தாலும், இன்னொரு கையாலே உடனே அணைப்பார். அவர் குணம் தாயின் குணத்தைப்போல் இல்லையோ!' அதற்குள் பிரயாணி, 'நீங்கள், இப்படி யாரய்யா இருக்காங்கோ இந்த கலியுகத்தில்!' 'காலத்தையே நிந்திக்கவேண்டிய அவசியமில்லை அப்பா. கிழக்கு உதயமாகிற சூரியன் கிழக்குத்தான் உதயமாகிறான்; அவன் மாறவில்லை. மனுஷன் கெட்டுப்போனதினாலே காலம் கெட்டுப்போயிற்று.'

'பிந்தி கலியுகம், கலியுகம் என்று சொல்லுகிறார்களே ஐயா!'

'தான் தப்பிதம் செய்துவிட்டு, அந்தத் தப்பிதத்தைக் காலத்தின் பேரில் போட ஒரு சாக்கு உண்டாக்கிக்கொண்டான் மனுஷன்.'

'அப்புறம் ஐயா!'

'மூன்றாவது, கடவுளுக்கு முன்பாய் மனத்தாழ்மையாய் நடக்க வேண்டுமாம். மனுஷனுக்கு என்ன பெருமை? அவருக்கு அடங்கி, பயபக்தியாய் இருந்து, அவர் கட்டளைகளுக்கும் விதிவிலக்குகளுக்கும் கீழ்ப்படிந்திருப்பதே அவனுக்குப் பெருமையாம். இப்போது தெரிந்ததா அப்பா, கடவுள் என்ன விரும்புகிறார் என்று சொல்லி? திரும்பவும் சொல்லுகிறேன் கேள்:

நீதியைச்செய்து, இரக்கத்தைச் சிநேகித்து, கடவுளுக்குமுன்பாக மனத்தாழ்மையாய் நடப்பது (இருப்பது மாத்திரம் அல்ல, நடப்பது) ஆகிய இம்மூன்றையுமே அல்லாமல் வேறே என்னத்தை அவர் மனுஷனிடத்தில் கேட்கிறார்?'

'ஏன் ஐயா, இந்த சாஸ்திரம் எங்கே ஐயா சொல்லி இருக்கிறது? இது எனக்கு எப்படி ஐயா கிடைக்கும்?'

'இது வேத புஸ்தகத்தில் இருக்கிறது; பக்தர்கள் எழுதி வைத்திருக்கிறார்கள். இது நமக்குச் சித்தியாகவேண்டுமென்றால், லோக ரக்ஷகராகிய இயேசுபெருமானிடம் சிநேகம் செய்தால், இது லபிக்கும். அவர் எங்கும் இருக்கிறார். உன் மனசிலேயே நீ அவரை நோக்கிப் பிரார்த்தனை செய்துவந்தால் அவர் உனக்கும் தரிசனமாவார். அந்த குருவைப்பற்றி இன்னும் அறியவேண்டுமென்றால், இதோ பார், இந்தக் காலணா புஸ்தகத்தை வாங்கி வாசித்துப்பார். அதிலே அவர் சொல்லுகிறபடி கூடியவரை நீ நடக்கப்பார். அப்போது உனக்கு அவர் மெய்யாகவே தரிசனமாவார்.'

'ஏன் ஐயா, ஸ்ரீரங்கம்போகும் இந்தப் பையனுக்கு தலைமுடி எடுக்கிறது தண்டம்தானே ஐயா!'

'அதென்னமோ அப்பா, நீயே யோசித்துப்பார்.'



# Religion and Adolescence

**By the Editor**

## பாலியம் மாறி வாலிபந்தொடங்குங் காலமும் பக்திநிலைமையும்

(தொடர்ச்சி)

இடைப்பிரிவு: வயது, புருஷர் பதினாறு முதல் இருபது மட்டும்; ஸ்திரீகள் பதினைந்து முதல் பதினேழு மட்டும்.

முற்பிரிவில் காட்டின பருவத்தில் நடந்த மாறுதல் இப்பருவத்தில் அதிக சீக்கிரமாயும் பலமாயும் நடக்கும். பதினேழு வயதுள்ள வாலிபனுடைய மனது, தேகம் எல்லாம் வேறுகிறது. அவன் தன்னைச் சரியாய் அறியமுடியாததால் மற்ற மனுஷரோடு பழகுவதில் மிகவும் கூச்சப்படுவான். கப்பல் மாலுமி திக்குதெரியாமல் காற்றால் தான் அறியாத திசையை நோக்கிக் கொண்டுபோகப்பட்டாற்போல, இப்பருவத்தில் வாலிபருக்கு அடிக்கடி திகைப்பும் சந்தேகமும் மனக்கலக்கமுமுண்டு. அவர்களை நடத்துவதற்கு எவ்வளவோ அனுதாபமும் அன்பும் வேண்டும்! பட்டணத்து சென்ட்ரல் ஸ்டேஷனில் நாம் ஒரு வண்டியில் ஏறினால் வடக்கே கல்குத்தாவுக்கும், இன்னொரு வண்டி ஏறினால் தெற்கே தனுஷ்கோடிக்கும் போகலாம். அந்த ஸ்டேஷனில் இன்றைக்கு வண்டிகள் கிட்டக்கிட்ட நின்றாலும் அவைகள் நாளைக்குப் போய்ச்சேரும் இடங்கள் ஒன்றுக்கொன்று 1,500 மைல் தூரமுள்ளது. வாலிபப்பருவம் அந்த ஸ்டேஷனைப் போன்றது. இக்காலத்தில் வாலிபர் பண்ணும் தீர்மானங்கள் மரணபரியந்தம் பலனைத் தரும். சிலர் இந்தப் பருவத்தில் நூதனமானவைகளைக் கண்டுபிடிப்பார்கள். புகைவண்டியைக் கண்டுபிடித்த வாட்டு (Watt) என்பவரும், மின்சாரத்தால் நடக்கும் பல யந்திரங்களைச் செய்த எடிசன் (Edison) என்பவரும், பதினேழு வயதில் தங்கள் சூழ்ச்சித்திறமையைக் காட்ட ஆரம்பித்தார்கள். வேறு சிலர் இந்த வயதில் கடவுள் தங்களை மேலான ஊழியத்துக்கு அழைக்கிறதை உணருவார்கள். மூடி (Moody), ஜியார்ஜ் வில்லியம்ஸ் (George Williams), சால்மர்ஸ் (Chalmers), லிவிங்ஸ்டன் (Livingstone) என்பவர்களும், அவர்களைப்போல இன்னும் அநேகரும் பதினேழு வயதில் தங்களை தேவஊழியத்துக்கு ஒப்புக்கொடுத்திருக்கிறார்கள். இன்னும் சிலர் ஏறக்குறைய பதினேழு வயதில் தீய ஒழுக்கத்துக்குத் தங்களை ஒப்புக்கொடுத்து, பிறகு பெரும் பாதகராய்ப் போயிருக்கிறார்கள். விசேஷமாக இந்த இடைப்பருவத்தில்

ஆண்பெண்ணுக்குரிய உணர்ச்சிகள் விர்த்தியடையும். பத்து வயதில் பெண்களோடு விளையாட சம்மதியாத பையன், பதினெட்டு வயதில் வாலிபஸ்திரீகளைப் பிரீதியோடு கண்டு, சமயமிருந்தால் அவர்களோடு கலந்து பேசுவான். இது தன்னில்தானே கெட்ட விருப்பமல்ல. ஆண்டவர் இதற்குச் சம்பந்தமாய் அநேக நல்ல சக்திகளை நம்து இயற்பில் வைத்திருக்கிறார். நாம் இதை அறிந்து ஞானமாக நமது வாலிபப் புருஷ ஸ்திரீகளுக்கு இந்த ஆண்பெண்ணுக்குரிய விஷயங்களைப்பற்றி நல்ல அறிவைப் புகட்டினால் வாலிபகாலத்துக்குரிய மோசங்களுக்குத் தப்பித்துக்கொள்ளுவார்கள். இவைகளைப் பற்றிய சரியான அறிவு அவர்களைப் பாதுகாக்குமேயொழிய அவர்களைக் கெடுக்காது. இந்த அறிவைப் புகட்டவேண்டியவர்கள் முதலாவது பெற்றோரே. வாலிபப்புருஷருக்குத் தகப்பன்மாரும், வாலிபஸ்திரீகளுக்குத் தாய்மாரும் இந்த அறிவைப் புகட்டுவது அவசியம். அவர்களால் முடியாதென்றால், நல்ல வைத்தியர்கள் புகட்டலாம். கெட்ட தோழர் மூலமாய் இவ்வறிவு புகுந்தால் அது விஷங்கலந்த தண்ணீரைக் குடிப்பதுபோலிருக்கும்.

தேகசுகத்தைப் பார்த்தால் இந்த இடைப்பருவத்தில் கலியாணம் செய்வது நல்லதல்ல. மேற்கு தேசங்களில் இந்தப் பருவத்தில் கலியாணம் நடக்கிறது அரிது. இந்தியாவிலோ இந்தப் பருவத்தில்தான் சாதாரணமாய் நமது வாலிபருடைய கலியாணங்களை முடிக்கிறோம். இருபது வயதுக்குமேலே நடக்கும் கலியாணத்தில் சுகமும் சந்தோஷமும் இருக்கும் என்பது வைத்தியருடைய பொதுவான அபிப்பிராயம்.

ஒரு விசேஷித்த விஷயத்தில் இந்தப் பருவத்துக்கும் பக்திநிலைக்கும் சம்பந்தம் காட்டக்கூடும். இந்தக் காலத்தில் ஒரு வாலிபன் ஆபத்தும் முயற்சியுமான செய்கைகளில் ஆவல்கொள்ளுவான். அநேகர் ஊரைவிட்டு எங்கேயாவது ஓடி அபாயங்களுக்கும் கஷ்டங்களுக்கும் மத்தியில் பிழைக்க ஆசிப்பார்கள். சரியானபடி பார்த்தால், கிறிஸ்தவ ஜீவியமே அவர்கள் விரும்புகிற ஆபத்துகளும் முயற்சிகளும் நிறைந்த ஜீவியம். நல்ல உடுப்பு போட்டுக்கொண்டு கோவிலுக்குப்போய்ப் பிரசங்கம் கேட்பது மாத்திரம் கிறிஸ்தவ ஜீவியம் என்று அவர்கள் தப்பிதமாய் நினைக்கிறதற்குப் பெரியோர்களாகிய நாமே காரணம். பவுலுடைய ஜீவியசரித்திரத்தையாவது பேர்போன மிஷனரிகள் ஜீவியசரித்திரங்களையாவது வாசித்தால், வாலிபர் விரும்புகிற அபாயங்களும் பிரயாணங்களும் முயற்சிகளும் வேண்டியமட்டும் காணலாம். நாம் நம்முடைய சொந்த ஜீவியத்தில் சுய ஒறுப்பையும் முயற்சியையும் காட்டவேண்டும். நாம் நமது வாலிபர் இப்படிப்பட்ட அநேக மகான்களுடைய



ஜீவியசரித்திரங்களை வாசிப்பது உத்தமம். பெரியோரின் ஜீவியசரித்திரப் புஸ்தகங்கள் அவர்களுக்கு மெத்த பிரயோசனம். பூமியில் நல்ல எருவு போட்டால் அறுப்புகாலத்தில் பலனைத் தரும். அதுபோல மனதுக்கு ஒரு நல்ல ஜீவியசரித்திரமும் பூமிக்கு எருவு செய்கிற கிரியையைச் செய்யும். வாலிபன் தனக்குத் தெரியாமலே அதினால் நன்மையடைவான். எல்லா ஜீவியசரித்திரங்களைப் பார்க்கிலும் இயேசுவின் சரித்திரமே மேலானது. அதை அவர்கள் சரியாய் வாசிக்கும்போது, போருக்குச் செல்லுகின்ற கிறிஸ்து இயேசு என்னும் தளகர்த்தன் தம்மைப் பின்பற்ற போர்வீரரை அழைக்கிறார் என்று உணருவார்கள். அந்தச் சத்தத்துக்குச் செவிடராயிரார். வாலிபர் கேட்கவேண்டிய பிரசங்கம், ‘நல்லவனாயிரு, அப்போது முன்னுக்கு வந்து நீ சுகஜீவியம் செய்வாய்’ என்பதல்ல, ‘பாடுபடுகிற கிறிஸ்து இயேசு உன் சிலுவையை எடுத்து அவருக்காகக் கஷ்டத்தையும் நிந்தையையும் சகிக்க உன்னை அழைக்கிறார்’ என்பதே.

கடைப்பிரிவு: வயது, புருஷர் ஏறக்குறைய இருபத்தொன்று முதல் இருபத்தைந்து மட்டும்; ஸ்திரீகள் பதினெட்டு முதல் இருபத்தொன்று மட்டும். இந்த வயதுக்கு வந்த வாலிபன் இப்போது கிருகஸ்தனாகி, பல உத்தரவாதங்களைத் தன்மேல் ஏற்றியிருக்கிறான். சாதாரணமாக அவனுடைய பெற்றோருடைய உதவியில்லாமல் தன் சொந்த ஜீவனாம்சத்தைச் சம்பாதிப்பான். இதினால் அவன் குணம் கொஞ்சம் மாறும். அவனுடைய கலியாணம் மெய்க்கலியாணமென்றால், அன்பின் ஆழத்தை இப்போது நூதனமாகக் கண்டுபிடிப்பான். இவ்வுலகத்தில் சுவாமி அதற்கு மேலான பாக்கியத்தைக் கொடுக்கிறதில்லை. அதை அனுபவிக்கிறவனுக்கு முன்னே இருந்த அதிருப்தியும் கலக்கமும் அவனை விட்டு நீங்கும். முன்னே அவன் மனதைப் பிடித்த அநேக கேள்விகளுக்கு விடை இப்போது தானாக வரும்.

மேலும் பிழைப்புக்கு வேலைசெய்கிறது அவனுக்கு ஒரு விதமான பயிற்சியானபடியால் விடாமுயற்சி, உறுதி, சுறுசுறுப்பு முதலிய அநேக நற்குணங்கள் அதினால் பலப்பட்டுப்போகும். அவனுக்கு அநேக புது கவலைகளிருந்தும், கவலைகளால் அவன் கற்றுக்கொள்ளுவான்.

இந்த வயது முற்பிரிவில் சொன்ன வயதுபோல் அவ்வளவு அபாயகரமானதல்லாவிட்டாலும், ஒவ்வொரு வயதுக்கும் அதனதன் சோதனையுண்டு. ஒரு பக்கத்தில், இல்வாழ்வின் சுகத்தை அனுபவிக்கிற வாலிபனில் சுயநயந்தேடும் குணம் இலேசாக வேறூன்றி விளையும்; மறுபக்கத்தில், பிழைப்பு விஷயத்தில் கவலைப்படுகிறவன் அதைரியப்பட்டுப் போனாலும் போவான். இரண்டு பக்கத்தாருக்கும் நாம் இயேசுகிறிஸ்துவின் மானிட ஜீவியத்தைக் காட்டவேண்

டும். மூற்றிலும் அன்பாகவே இருந்த அவர், அன்பின் சுகத்தைச் சுயத்தில் அனுபவியாமல் மற்றவர்களுக்காகத் தான்பட்ட பாடுகளால் அன்பை வெளியிட்டார். குடும்பத்தை ஆதரிக்கிற கஷ்டம் அவருக்குத் தெரியாதா? யோசேப்பு இறந்தபோது மூத்தகுமாரனாகிய இயேசு, விதவையையும் தம்பிமார் தங்கச்சிமார் ஐந்து பெயரையும் தச்சுவேலையால் ஆதரித்தார். அது சில சமயங்களில் பெரிய பிரயாசையாயிருந்திருக்கவேண்டும். ஆனாலும் அவர் மிதமிஞ்சிய கவலைக்கு இடங்கொடாமல், தாம் கைவேலைசெய்த மாதிரியால் கைவேலைக்குச் சதாகாலத்துக்கென்று ஒரு புது அழகைக் கொடுத்தார்.

இப்படி நாம் யோசிக்கும்போது, ஒவ்வொரு பிரிவிலும் வாலிபருக்கு வேண்டியவர் இயேசுவே என்று பார்க்கிறோம். வாலிபருக்கு வரும் பற்பல தன்மையான ரோகங்களுக்கு இந்த ஒரே மருந்துண்டு. மருந்து கொடுக்கிற வைத்தியரைப்போல தேவ ஊழியக்காரராகிய நாம் ரோகங்களையும் மருந்தையும் நன்றாயறிந்து, யோசனையோடும் விவேகத்தோடும் இந்த மருந்தைக் கொடுப்பதே நம்முடைய கடமை.

## Answering Objections to Christianity

**By the Rev. N. Devasahayam, B.A.**

(*See Question 20 of the Rev. Popley's collection, May Number*)

RELIGIONS ARE VARIOUS WAYS TO ONE COMMON PLACE

### மோட்சத்திற்குப்போகும் பலமார்க்கங்களில் கிறிஸ்துமார்க்கம் ஒன்றேயன்றி வேறல்ல என்பதற்கு உத்தரம்

மார்க்கம் என்றால் பாதை அல்லது வழி. வழி என்றபோதே ஏதோ ஒரு ஊரை நினைக்கிறோம். இப்படி நினைத்தே நம் தேசத்தார்: 'ஒரு ஊருக்குப் பல வழி; மோட்சத்திற்கும் பல வழி; அவற்றுள் கிறிஸ்துமார்க்கம் ஒரு வழி' என்று சுவிசேஷப் பிரசங்கிகளுடைய வாயை அடக்கப்பார்க்கிறார்கள்.

இந்தப் பேச்சில், மோக்ஷம் எல்லா மானிடரும் போய்ச் சேரவேண்டியதும் எல்லா மானிடருக்கும் பொதுவானதுமாகிய ஒரு ஊர் என்கிற நினைவு இருக்கிறது. இது ஏறத்தாழ சரியான நினைவே. ஆயினும், பல மார்க்கங்களை எடுத்து ஆராய்ந்தால், அவை ஒரே ஊருக்கு வழிகாட்டாமல் பல ஊர்களுக்கு வழிகாட்டுகின்றனவெனப் பார்ப்போம். சைவரைக் கேட்டால் கைலாசமே மோக்ஷம் என்பார்கள்; வைணவர் வைகுந்தமே மோக்ஷம் என்பார்கள்;



வேதாந்திகள் சச்சிதானந்தமே மோக்ஷம் என்பார்கள். உலகில் உள்ள மார்க்கங்களையெல்லாம் எடுத்துப்பார்த்தால், அவை வெகுபல ஊர்களுக்கு வழிகாட்டுகிறதைப் பார்ப்போம்.

மனுஷர்கள் எல்லாரும் தேக, ஆத்தும சம்பந்திகளாயிருக்கிறார்கள். எத்தேசத்தாரானாலும், எக்குலத்தாரானாலும், எந்நிறத்தாரானாலும் மானிடதேகம் ஒரேமாதிரி உடற்கூறுள்ளது. அதனால்தான் உடற்கூறு செம்மையாய் அறிந்த ஐரோப்பியர் தங்கள் தேசத்தாருடைய உடல்களைச் சோதித்து அறிந்து கண்ட சாத்திரத்தை நம் தேசத்தில் வைத்தியசாலைகளில் கற்பிக்கிறார்கள். ஒரே உடற்கூறு சகல மனுஷருக்கும் பொது. அதனால் உடற்கூற்றுச் சாத்திரமும் சகல மனிதருக்கும் ஒன்றேயாகும். தவிர, சகல தேசங்களின் மனுஷருடைய ஆத்துமதத்துவமும் ஒரே மாதிரியானதே. மிலேச்சருடைய ஆத்துமா வேறு, பாமரருடைய ஆத்துமா வேறு, பண்டிதருடைய ஆத்துமா வேறு என்றல்ல; எல்லாம் வேற்றுமையின்றி ஒன்றேயாம். அறிவை வாங்கவும் உபயோகிக்கவும் கூடிய தன்மை எல்லா ஆத்துமாக்களுக்கும் பொது. மிலேச்சருடைய ஆத்துமா திருந்தாமல் கீழ்ப்படியிலிருக்கிறதினாலே அந்த ஆத்துமா எப்போதும் அப்படியேயிருக்கும் என்று கொள்ளலாகாது. புத்திகோசரமுள்ள மேன்ஜாதிகளைப்போலவே பாமரரும் கல்வியொழுக்கமுள்ளவர்களாய் உயர்ந்துவிடலாம். எல்லா மானிடருக்கும் இவ்வாறு ஒரே ஆத்துமத்தன்மை இருப்பதினாலேயே பலதுறைப்பட்ட சாத்திரங்கள் சகல தேசங்களிலும் ஒரே தன்மையுடையனவாயிருக்கின்றன. தேசத்திற்குத் தேசம் சாத்திரங்கள் வேறுபடமாட்டா. வெள்ளைக்காரருக்கு ஒரு கணிதசாத்திரமும் நமக்கு ஒரு கணிதசாத்திரமுமா? இல்லையே. அவ்வாறே வேறு சாத்திரங்களும் என்க.

இப்படியிருக்க வீட்டு நூல் மாத்திரம் வேறுபடலாமா? ஒவ்வொரு தேசத்தாரும் தம் தமக்கு ஒரு மோக்ஷம் உண்டு என்று நினைக்கலாமா? தெய்வத்தேட்டம் சகல மனிதருக்கும் பொது. சகல மனுஷரும் தேடுகிற தேவன் ஜாதிக்கு ஜாதி தம்மை வேறு வேறுவிதமாய்க் காட்டுவாரா? காட்டார். யாவரும் ஒரே கடவுளை யடைய விரும்புகிறார்கள். விரும்பியும் அவரிடத்திற்குப் போக பல வழிகளை ஏற்படுத்திக்கொண்டார்கள். அந்த வழிகளைப் பார்த்தால், அவை அவரவர் தம் தம் மனதில் தேவனை எப்படித் தோற்றிக்கொண்டார்களோ அப்படியிருக்கின்றன. சிலர் தேவன் குணபேதம், விருப்பு வெறுப்பு, ஆட்டன்மை, செய்தொழில் இவை யொன்றுமில்லாதவர் என்கிறார்கள். அதற்குத் தக்கபடி நாமும் இப்படியானதே மோக்ஷம் என்கிறார்கள். சிலர் தேவன் மேற்சொன்ன யாவும் உடையவர்; நமக்கும் அவையெல்லாம் உண்டு; அவரும் நித்தியர் நாமும் நித்தியர்;

நமக்குப் பாசமலம் இருப்பதினால் சங்கடப்படுகிறோம்; நமக்குக் கடவுளின் அருள் கிடைக்குமானால் நம்மைப் பீடிக்கிற ஐந்துவகைப் பாசமலங்களும் நீங்கி கடவுளின் அறுவகைக் குணச்சொரூபங்களைப் பெற்றுச் சுகிப்போம்; இதுவே மோக்ஷம் என்கிறார்கள். இவ்வாறு சமயத்திற்குச் சமயம் வெவ்வேறு மோக்ஷத்தைச் சொல்லுகிறதினாலே சமயங்களெல்லாம் ஒரே ஊருக்குப் பல வழிகளேயொழிய வேறல்ல என்கிற நினைவும் பேச்சும் தவறு என்பது சொல்லாமலே விளங்கும்.

மேலும், கடவுள் ஒருவரேயானால் அவரிடத்தில் போகிற மார்க்கமும் ஒன்றேயாகவேண்டும். அந்த மார்க்கம் கற்றோர்க்கும் கல்லாதோர்க்கும் எளிதில் விளங்கக்கூடியதாயும் இருக்கவேண்டும். உலகிற்கெல்லாம் தலைவராகிய கடவுள் ஒருவரேயாகையால் அவர் தேசத்திற்குத் தேசம் ஜாதிக்கு ஜாதி ஒரு சூரியனை உண்டாக்கவில்லை, எல்லாருக்கும் ஒரே சூரியனே வெளிச்சங் கொடுக்க வைத்திருக்கிறார். அவ்வாறே, தேசத்திற்குத் தேசம் வேறுபடுகிற நீர், தீ, ஆகாயம், இவை இருக்கிறதில்லை. இவை எல்லா தேசங்களுக்கும் ஜாதிகளுக்கும் பொது. இப்படிப் பூதவுடம்பாகிய நம் சரீரங்கள் உலகில் எங்கும் ஒரே தன்மையனவாய் இருப்பதினாலே அவைகளுக்கு உதவுகிற பண்டங்களும் உலகெங்கும் ஒரே தன்மையனவாய் இருக்கின்றன. அவ்வாறே, நம் ஆத்தும இயலும் தத்துவங்களும் உலகெங்கும் ஒரே தன்மையனவாய் இருப்பதினாலே, மோக்ஷத்திற்குப் பல தன்மையனவாகிய வழிகள் ஏற்பட நியாயமில்லை; கடவுள் ஏற்படுத்தின வழி ஒன்றேயாகவேண்டும். அந்த வழி எது? இதற்கு உத்தரம் மோக்ஷம் எது என்றதிலிருந்து வரும். எல்லா மனிதரையும் உண்டாக்கின சதா ஜீவியாகிய கடவுளுடனே, ஒரு குடும்பத்தில் தகப்பனுடன் பிள்ளைகள் நேச உறவாடி வாழுகிறதுபோல, சகல மனிதரும் நேச உறவாடி என்றும் வாழுகிறதே மோக்ஷமாகும். கடவுளுடன் இவ்வாறு மானிடர் அன்புறவாட முடியாமல் தடுக்கிற பெரிய தடை பாவமலம். பாவமலத்திற்கு நாம் செத்தாலொழிய அது நம்மைவிட்டுப் போகாது. நம் சுபாவத்திலே ஊடுருவியிருக்கிற பாவத்திற்குச் சாவு உண்டாக்க இயேசுகிறிஸ்து இவ்வுலகத்தில் வந்தார். வந்து, எல்லா மனிதரையும் தம்மொருவருள் அடக்கிச் சிலுவையில் மரித்தார். அவர் மரித்தபோது நாமெல்லாரும் பாவத்திற்கு மரித்தோம். அதன்பிறகு அவர் மூன்றாம் நாளில் புது உயிருடன் மரணத்தை ஜெயித்து எழுந்தார். அவருக்குள் நாமும் புது உயிருடன் புண்ணியத்திற்கு எழுந்தோம். இவ்வாறு, மலமாகிய பாவத்தை நம் சுபாவத்திலிருந்து வேரறக்க மரித்து பரிசுத்தத்தை நம் சுபாவத்தில் உற்பத்திபண்ண உயிர்த்த இயேசுகிறிஸ்து



வைப் பற்றினால் நாம் மோக்ஷத்திற்குப் போகிற மார்க்கத்தைப் பற்றினவர்களாவோம். ஏனெனில், கடவுளுடன் நம்மைப் பிள்ளைகளாய்க் கூட்டி ஒரு குடும்பத்தினராக்க அவரே கடவுளுக்கும் நமக்கும் இடையில் ஏற்பட்டிருக்கிற வழி. அவரைப் பற்றுதல் எப்படிக் கூடும் என்றால், உயிரையும் உடம்பையும் ஒன்றுசேர்ப்பதுபோல் இயேசுபகவானையும் நம்மையும் கடவுள்தாமே ஒன்றுசேர்ப்பதினால் கூடும். உயிரிலிருந்து நீங்கின உடம்புதானே அந்த உயிருடன் ஒன்றுசேருமா? சேராதே. அதுபோல, பாவமலத்தினால் உயிரிழந்த நம்மை மறுபடியும் நம் உயிராக ஏற்பட்டிருக்கிற இயேசுபகவானுடன் நம்மையே ஒன்றுசேர்க்க நம்மாலாகாது. கடவுளே நம்மை அவருடன் ஒன்றுசேர்க்கவேண்டும். நாம் கடவுளைப் பிரார்த்தித்து நம்மை இயேசுவுடன் ஒன்றுசேர்க்கக் கேட்கவேண்டும்: ஊக்கமாய்க் கேட்கவேண்டும்: கேட்டால் கிடைக்கும். ஏன்? 'கேளுங்கள், அப்போது உங்களுக்குக் கொடுக்கப்படும்' என்பது திருவாக்கு. இவ்வாறு மானிட ஆட்கள் கடவுளாகிய ஆளுடன் கூடி வாழ்வதே மோக்ஷமாகையால், அதற்கு இயேசுபகவான் ஒருவரே வழி. 'நானே வழி, என்னாலொழிய ஒருவனும் பிதாவண்டை வரான்' என்பது இயேசுபகவானின் திருவாய்மொழி.

## The Preparation of Sermons

**By the Rev. H. Spencer, B.A.**

## பிரசங்கமுறை

(தொடர்ச்சி)

2. பிரசங்கஞ் செய்யத்தக்க முறை.

நன்றாய்ப் பிரசங்கஞ் செய்யவேண்டுமானால் போதகன் நன்றாய்க் குறிவைத்திருக்கும் இலக்கை முன்வைத்து, இந்த உத்தியோகத்தை நிறைவேற்றவேண்டும். 'பிரசங்கத்தின் இலக்கு இந்த உபந்நியாசத்தின் மூன்றாம் பாகத்தில் விவரிக்கப்படுவதாக விருந்தாலும், இந்தப் பிரசுரத்திலுங்கூட அதைக் கொஞ்சமாகிலும் வர்ணிக்கவேண்டியதாயிருக்கிறது.

போதகன் இரண்டு உத்தேசங்களை நிறைவேற்றவேண்டுமென்று பிரசங்கஞ்செய்கிறவனும் இருக்கிறான். அவனுடைய வார்த்தைகளைக் கேட்கிறவர்கள் அவ்வார்த்தைகள் மூலமாய் தேவன் அருளுகிற

உத்தமமான ஆசீர்வாதங்களை அடையவேண்டியவர்களாயிருக்கவேண்டும். இந்த உத்தேசத்தை நிறைவேற்றக்கூடாவிட்டால் உபந்நியாசத்தைக் கேட்பது வியர்த்தமாகும். இதல்லாமல் தேவன் தமது வாக்கியத்தைப் போதகன் வசத்தில் ஒப்புவித்திருக்கிறார். அந்த வாக்கியம் உடனே அவர்கள் மனதைப் பற்றிக்கொண்டு பிரபலமாகும்படியும் தேவனுடைய சித்தம் நிறைவேறும்படியும் போதகர்களாகிய நாம் தப்பில்லாமல் அந்த வாக்கியத்தைக் கூறியறிவிக்கிறவர்களாயிருக்கவேண்டும். ஆதலால் போதகன் தனக்கும் தன் பிரசங்கத்தைக் கேட்கிறவர்களுக்குமிருக்கிற சம்பந்தத்தையும், தனக்கும் தேவனுடைய வசனத்திற்குமிருக்கிற சம்பந்தத்தையும் எப்போதும் ஞாபகங் கொள்ளுகிறவனாயிருக்கவேண்டும்.

(1) போதகனுக்கும் கேட்கிற ஜனங்களுக்குமிருக்கிற சம்பந்தம்.

போதகன் பிரசங்கஞ்செய்யும்போது அதைக் கேட்கிற ஜனங்களுடைய ஸ்திதியையும் அறிவையும் அபிப்பிராயங்களையும் தகுந்தவரைத் தெரிந்துகொண்டு, அநுகூலமாகும்படி பிரசங்கம் செய்யவேண்டும். செம்படவர் வேறே வேறே விதமாய் மீன்களின் ஆகாரங்களையும், அவைகளுடைய முழு கவனத்தையும், அப்பியாசங்களையும் நன்கு தெரிந்துகொண்டு அவைகளுக்கு அநுசாரமாய் உபாயஞ்செய்து பிடிக்கிறதற்கு எவ்வாறு பிரயத்தனஞ்செய்கிறார்களோ அவ்வாறே மனுஷரைப் பிடிக்கிறவர்களாயிருக்கிற நாம் தேவ விவேகமுள்ளவர்களாய் நம்முடைய உத்தியோகத்தை நிறைவேற்றவேண்டும். இந்து மதஸ்தர்களுக்குக் கிறிஸ்தவ போதனைகளைச் சொல்லும்போது அவர்கள் கொண்டிருக்கிற சாதாரண அபிப்பிராயங்களை நாம் மறந்துபோகக்கூடாது. தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளை நம்பின யூதர்கள் சபைகூடும் ஸ்தலங்களில் அவைகளைப் பிரஸ்தாபிக்கும்போது பவுல் தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளை விவரித்து அவைகளைக்கொண்டே இயேசு கிறிஸ்துவாயிருக்கிறார் என்று பலமாய் ஸ்தாபித்துக்கொண்டு வந்தார். அந்தத் தீர்க்கதரிசிகளையறியாமலிருந்த அத்தேனே பட்டணத்து வித்துவான்களின் மத்தியில் பிரசங்கம் பண்ணவேண்டும் என்பது பவுலுக்கு அவசியமாகத் தோன்றினபடியால் அவர்கள் காதுகள் கேட்க தீர்க்கதரிசிகளில் ஒருவன் சொன்ன வார்த்தைகளின் மூலமாய்க் கிறிஸ்தவ சுவிசேஷ வார்த்தைகளைத் தெரிவித்தான். வித்துவான்களையும் வித்தையில்லாதவர்களையும், கிறிஸ்தவர்களையும் இந்துக்களையும், விருத்தாப்பியரையும் சிறுவர்களையும் விவேகியான போதகனானவன் எல்லாருக்கும் ஒரேவிதமாய் போதிக்கமாட்டான். வேறே வேறே மக்களுக்கு அவரவர்களின் பிராயத்துக்குத் தக்கபடி வேறே வேறே விதமாய் வேறே வேறே போஷிப்புக் கொடுக்கவேண்டும். 'தேவன் போஷிக்கிற எல்லா சிருஷ்டிகளுக்கும் தக்க



காலத்தில் அவரிடத்திலிருந்து அவசியமான ஆகாரம் கிடைக்கிறது' (சங். 104[27]). 'தேவன் தமது வீட்டார்பேரில் நியமித்திருக்கிறவர்கள் உக்கிராணக்காரரும் நம்பிக்கையுள்ளவர்களும் விவேகிகளுமாய் இருக்கிறபடியால் அவர்களுக்குப் போஷிப்புக்கு அவசியமானதை வேளாவேளைக்கு அளந்து கொடுக்கிறவர்களாயிருக்கவேண்டும்' (லூக். 12[42,43]). பார்த்தீர்களா? ஏற்றகாலத்தில் தகுந்தவிதமாய்த் தகுந்த ஆகாரத்தைக் கொடுக்கவேண்டும். உங்களைக் கேட்கிறவர்களுடைய திராணிக்குத் தக்கவாறு சுவிசேஷத்தைக் கூறியறிவிப்பீர்களாக.

இதுவுமன்றி, ஜனங்கள் தாங்கள் கேட்கிற சங்கதியை மனங்கொடுத்து கேட்கும்படி போதகன் யுக்தியாய்ப் பிரசங்கஞ் செய்யவேண்டும். பிரசங்கங்களில் சிலருடைய சப்தம் குறைவுள்ளதாயிருக்கிறபடியால் அவர்கள் பிரசங்கிக்கிற பிரசங்கத்தினால் ஜனங்களுக்குப் பிரயோஜனமுண்டாகிறதில்லை. இன்னுஞ் சிலருடைய சப்தம் சரியாயிருந்தாலும் கெட்டியாயும், சரியாயும், தெளிவாயும் உச்சரிப்பதற்குப் பிரயாசப்படுகிறதில்லை. மற்ற சிலர் சீக்கிரம் சீக்கிரமாய்ப் பேசுவதினால் அவர்கள் விவரிக்கிற சங்கதி கேட்கிறவர்களுக்குப் பரிஷ்காரமாய்த் தெரியாமலும் போகிறதுண்டு. ஒருநாள் இயேசு கிறிஸ்து தமது சீஷருக்கு விசேஷமான ஒரு வார்த்தையைச் சொன்னார். அதாவது, 'நீங்கள் இந்த வார்த்தையைக் கவனமாய்க் கேளுங்கள்' என்று சொன்னார் (லூக். 9[44]). 'அவர் வாய்திறந்து உபதேசித்தார்' என்று மத்தேயு எழுதுகிறார் (மத். 5[2]). நாம் சொல்லுகிற வார்த்தைகள் கேட்கிற ஜனங்களுடைய காதுகளில் பிரவேசிக்காவிட்டால் அவர்கள் மனதிலும் ஒருபோதும் பிரவேசிக்கமாட்டாது. போதகன் வாய்திறந்து, நிதானமாயும் தெளிவாயும் பேசி உபதேசஞ் செய்யவேண்டும்.

வார்த்தைகளைத் தெளிவாய் உச்சரிக்கிறதுமல்லாமல், ஜனங்களுக்குத் தெரிந்த வார்த்தைகளை உபதேசிப்பதும் அவசியம். காதுக்கின்பமான வார்த்தைகளையும் பாண்டித்திய சுலோகங்களையும் உபந்நியாசகன் உபயோகிக்கையில் கேட்கிறவர்கள் ஆச்சரியத்தோடே கேட்டாலும், உபதேசத்தின் தாற்பரியத்தைக் கிரகிக்கக்கூடாமற் போய்விடக்கூடும். தேவனுடைய வாக்கியத்தை ஜனங்களுக்குத் தெரிவிக்கவேண்டும் என்பதே நம்முடைய தீர்மானமாய் இருக்கவேண்டும். ஆதலால் அவர்கள் சுலபமாய்த் தெரிந்துகொள்ளும்படி தேவனுடைய வார்த்தைகளைக் கூறியறிவிக்கவேண்டும்.

சிலர் செய்கிற பிரசங்கம் ருசியுள்ளதாயிருக்கிறபடியால் ஜனங்கள் கும்பலாய்க்கூடி அதிக ஆசையோடு கேட்கிறார்கள். அதேபிரகாரம் இயேசு கலிலேயா நாட்டிலும் எருசலேம் பட்டணத்திலும் உபதேசித்தபோது, 'இதென்ன உபதேசம்! இவரைப்போல ஒருவனும் ஒருக்

காதும் பேசினதில்லை!' என்று ஆச்சரியப்பட்டு கேட்பதில் ஆசையுள்ளவர்களாயிருந்தார்கள். சிலர் செய்கிற உபந்நியாசங்களைக் கேட்கிறதற்கு ஜனங்கள் எவரும் இஷ்டப்படுகிறதில்லை. ஜனங்கள் நம்மைக் கேட்கும்படி உத்தமமான முறைகளை யனுசரித்துப் பிரசங்கிக்கிறவர்களாயிருக்கவேண்டும். அம்மாதிரிகளில் சிரேஷ்டமானவைகள், இயேசு செய்த பிரசங்கங்களே. அவர் தமக்குத் திட்டமாய்த் தெரிந்திருந்த சங்கதிகளை அதிகாரத்தோடு போதித்து, ஜனங்கள் சாதாரணமாய் அறிந்துகொள்ளக்கூடிய திருஷ்டாந்தங்களை உபயோகித்து, அவர்கள் மனதைக் கவர்ந்துகொண்டார். கிறிஸ்தவ ஊழியர் உபயோகிக்கிற யுக்திகளில் திருஷ்டாந்த உபயோகம் விசேஷமானது. இதினால் அவர்கள் தெரிவிக்கிற சத்தியம் பரிஷ்காரமாய் விளங்குவதுமல்லாமல் ஜனங்களின் மனதில் ருசியுண்டாகிறபடியால் சந்தோஷத்தோடுங் கேட்பார்கள். இங்கிலாந்தில் ஒரு விசேஷித்த பிரசங்கி இருக்கிறார். இவர் எந்தக் காரியத்தைப் பிரசங்கிக்கிறாரோ அந்தக் காரியத்துக்குத் தக்கதும் உசிதமானதுமான திருஷ்டாந்தங்களைக்கொண்டு விவரித்து தமது அபிப்பிராயங்களை விளக்கிக்காட்டுவார். பிரசங்கிகளாகிய நாமும் இவ்வாறே விஷயங்களைத் தெளிவுறக்காட்டுவதற்கு உதாரணங்களையும் திருஷ்டாந்தங்களையும் எடுத்துரைப்பதற்குப் பயப்படலாகாது.

நீண்ட பிரசங்கம் பிரயோசனத்தைத் தருவது அரிது. அரைமணி நேரத்துக்கு மேற்பட்ட பிரசங்கத்தைத் தொடர்ச்சியாய்க் கேட்கிறவர்கள் மிகச் சிலர். தெருக்களிலும் பாடசாலைகளிலும் இந்துக்களுக்குப் பிரசங்கிக்கிறபோது நீண்ட பிரசங்கங்களைக் கேட்டு இளைப்படைந்து மத்தியில் எழுந்து பிரயோஜனமற்றுப் போய்விடுகிறார்கள். ஏனென்றால் நீண்ட பிரசங்கத்திலே சுவையில்லாமற்போய்விடுகிறது. கிறிஸ்தவ ஆலயங்களில் பிரசங்கம் நீண்டிருந்தாலும் ஜனங்கள் மரியாதைக்காக அது முடியும்வரை தங்கியிருப்பார்கள். அநேகர் இருதயத்துக்கு நீண்டபிரசங்கம் உபயோகமற்றுப்போகிறது.

முக்கியமாய், பிரசங்கிகள் ஜனங்களுக்கு நன்மைசெய்யவேண்டுமென்று கருதி முதல் வார்த்தை தொடங்கி கடைசி வார்த்தை வரை கருத்தோடும் விசுவாசத்தோடும் இந்தப் பிரசங்கவேலை செய்ய வேண்டும்.

C. L. S. PRESS, MADRAS—1917

8 - AUG 1917
MADRAS

No. 135. ஆகஸ்டு 1917

# வேதியர் விளக்கு

## Great Souls at Prayer

### பெரியோர் செய்த ஜெபங்கள்

ஆண்டவரே, நாங்கள் செய்யும் வேலை எங்களுக்குப் பாரமாயிராமல் எங்களுக்கு லகுவாயும் பிரீதியாயுமிருக்கும்படி, எங்கள் ஆத்துமாக்களைப் புதுப்பித்து, எங்கள் உள்ளங்களை உம்மண்டை இழுத்தருளும். உம்மை நாங்கள் உறுதியாய் நேசிக்கிறபடியால், உமக்குக் கீழ்ப்படிவது எங்களுக்கு இன்பமாயிருப்பதாக. ஆ, அடிமைகளைப்போலக் கட்டாயத்தினாலல்ல, பிள்ளைகளுக்கேற்ற உற்சாகத்தோடும் சந்தோஷத்தோடும், உம்மிலும் உம்முடைய ஊழியத்திலும் மகிழ்ந்து உமக்குப் பணிவிடை செய்வோமாக. ஆமென்.

(பென்யமீன் ஜெங்க்ஸ், 1646–1724.)

தேவனே, நாங்கள் அவிவேகிகளாயிராதபடி, உம்முடைய சித்தத்தை அறியும் உணர்வைத் தாரும். நாங்கள் அசதியாயிராமல், உம்முடைய ஊழியத்தில் சுறுசுறுப்பாயிருக்க உதவிசெய்யும். நிச்சயமில்லாதவர்களாக ஓடாமலும், ஆகாயத்தை அடிக்கிறவர்களாகச் சிலம்பம் பண்ணாமலும் இருக்கும்படி கிருபை செய்யும். எங்கள் கைக்கு எதைச் செய்ய நேரிடுகிறதோ அதை நாங்கள் எங்கள் பலத்தோடு செய்வோமாக: அப்போது நீர் கூலி கொடுக்கும்படி உம்முடைய வேலையாட்களைக் கூப்பிடும்போது, நாங்கள் பெற்றுக்கொள்ளத்தக்கதாக ஓடியிருப்போம்; நித்திய ஜீவனாகிய கிரீடத்தை யடையத்தக்கதாக நல்ல போராட்டத்

தைப் போராடியிருப்போம். எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் இதைக் கேட்டுக்கொள்ளுகிறோம். ஆமென்.

(ஆல்பார்ட்.)

ஆண்டவரே, எங்கள் மறைவிடமே, ஜீவனிலாவது மரணத்திலாவது நாங்கள் உம்மைத்தவிர வேறே மறைவிடத்தைத் தேடாதபடி எங்களுக்கு ஞானத்தைத் தந்தருளும். மனுஷர் எல்லாரும் கோபமூட்டும்போது எங்களை நீர் உம்முடைய சொந்த சந்நிதானத்தில் மறைத்து, நாவுகளின் சண்டைக்கு எங்களை விலக்கிக் காரும். எங்களுக்குச் சாந்தத்தையும் தாழ்மையையும் பொறுமையையுந் தந்து, சமாதானத்தைத் தேடி அதைப் பின்தொடர எங்களுக்குப் போதித்தருளும்.

(கிறிஸ்தீனாள் ரோசெட்டி.)

## A New Translation of I Timothy

**By the Revds. F. Kingsbury, L. P. Larsen, and G. E. Phillips**

### I திமோத்தேயு

### ஒரு புது மொழிபெயர்ப்பு

தமிழ் விவிலியம் இன்னொரு முறை மொழிபெயர்க்கப்படவேண்டுமோ என்பதைக்குறித்து அநேகர் இக்காட்களில் ஆலோசித்துக்கொண்டிருக்கிறார்கள். ஜூன்மாத சஞ்சிகையில் கிங்ஸ்பரி தேசிகர் எழுதினபடியே, அது ஏதோ ஒரு காலத்தில் மறுபடியும் மொழிபெயர்க்கப்படவேண்டும் என்றே மூலபாஷைகளையும் தமிழையும் ஒத்து வாசிக்கிறவர்கள் அபிப்பிராயங் கொள்ளுகிறார்கள். இவ்வேலை சீக்கிரமோ அல்லது பல வருஷங்களுக்குப் பின்னோ தொடங்கவேண்டும் என்பதைக்குறித்து வெவ்வேறான அபிப்பிராயங்கள் உண்டு. அது எப்படியிருந்தபோதிலும், அந்த வேலைக்கு இப்போதே அநேகர் ஆயத்தம்பண்ணுவது உசிதம். அவ்வித ஆயத்தமாகவே பின்வரும் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டது.

அதைச் செய்தவர் மூன்று பேர். அவர்களில் இரண்டுபேர் மூலபாஷையைக் கவனித்து, அதின் திட்டமான பொருளை விளக்கிக்



காட்ட உத்தரவாதமெடுத்தார்கள். மூன்றாம் ஆக்கியோன் ஓர் தமிழ்ப் பண்டிதர். அவர் தனிமையாகப் போய் அந்த அர்த்தத்தைத் தமிழில் திருப்பினார். கடைசியாக மூன்று பெயரும் கூடிவந்து இவர் தனியாய்ச் செய்த மொழிபெயர்ப்பை ஒத்துப்பார்த்து தீர்க்காலோசனை செய்து, சிலவேளை அதை மாற்றி சிலவேளை அதை அங்கிகரித்தார்கள். அடிக்கடி ஒரே வார்த்தையைக்குறித்து ஒருமணி நேரமாக ஒன்றாய் ஆலோசித்தார்கள். பின்வரும் மொழிபெயர்ப்புக்கு இம்மூவரும் உத்தரவாதிகள். அவர்களுடைய முக்கிய நாட்டம் மூலபாஷையின் அர்த்தத்தைத் திட்டமாக வெளியாக்குவதும், அதைச் சாதாரணமான தமிழ் நடையில் திருத்தமாய் எழுதுவதுமே. ஒரு அர்த்தமுள்ள இரண்டு வார்த்தைகளுள் ஒன்று தமிழும் ஒன்று சமஸ்கிருதமுமாயிருந்தால், தமிழ் வார்த்தையையே வழங்கியிருக்கிறார்கள்.

இந்த மொழிபெயர்ப்பின் குறைவுகளை நன்றாய் உணர்ந்து, மற்றவர்கள் அதிலே பிழைகளைக் காட்டும்பொருட்டாவது அதைப் பற்றித் தங்கள் அபிப்பிராயத்தைச் சொல்லும்பொருட்டாவது அதை இங்கே அச்சிட்டிருக்கிறார்கள். அவர்களுடைய வேலையினால் இந்நிருபத்தின் அர்த்தம் சிலருக்குத் தெளிவாய்த் தெரியவந்தால் அது அவர்களுக்குப் போதும். அதே நோக்கத்துக்காக இனிமேல் ஒரு பொழிப்புரையையும் சில வியாக்கியானக் குறிப்புக்களையும் எழுதுவார்கள்.

[ ] இந்தக் குறிப்பில் அடங்கிய வார்த்தைகள் மூலபாஷையில் இராமல், பொருளுக்குத் தமிழில் அவசியமாயிருக்கின்றன.

### I. தீமோத்தேயு $1^{1-11}$

நமது இரட்சகராகிய கடவுளும் நாம் வாஞ்சையோடு எதிர்பார்க்கிற கிறிஸ்து இயேசுவும் இட்ட கட்டளைபடி கிறிஸ்து இயேசுவின் தூதனாகிய பவுல், நம்பிக்கை விஷயத்தில் நன்மகன் திமோத்தேயுவுக்கு எழுதுவது,

தந்தை கடவுளிடத்திலிருந்தும் நமது ஆண்டவர் கிறிஸ்து இயேசுவிடத்திலிருந்தும் அருளும் இரக்கமும் சமாதானமும் [பெருகுக].

எபேசுவில் சிலர் வேறு கொள்கையைப் படிப்பியாமலும், கட்டுக்கதைகளையும் முடிவில்லாத வமிச அட்டவணைகளையும் கவனியாமலுமிருக்கும்படி நீ அவர்களுக்குக் கட்டளையிடும்பொருட்டு, அங்கே தானே நீ தங்கியிருக்க நான் மக்கெதோனியைக்குப் போகையில் உன்னை வற்புறுத்தி

னேனே. இப்படிப்பட்டவைகளின் பலன் நம்பிக்கைக் கடுத்த கடவுளின் நியமனம் [அறியும் அறிவு] அல்ல, பயனற்ற விசாரணைகளே. நீ அவர்களுக்கு இடுங்கட்டளையில் நாடவேண்டிய குறியோவெனில், மாசில்லா உள்ளத்திலும் கள்ளமில்லா நெஞ்சிலும் வஞ்சகமில்லா நம்பிக்கையிலும் சுரக்கும் அன்பே. இவைகளினின்று சிலர் தவறி வழிவிலகி வீண்பேச்சுப் பேசுகிறவர்களானார்கள். இவர்கள் அறநெறி கற்பிக்க விரும்பியும் தாங்கள் சொல்வது இன்னதென்றும் தாங்கள் சாதிக்கும் விஷயங்கள் இவையென்றும் கருதாதவர்கள். நாம் அறிந்திருக்கிறபடியோ முறை நல்லதே, முறைப்படி ஒருவன் அதை வழங்குவானாயின். [முறைப்படி வழங்கும் ஒருவன்] மனதில் வைக்கவேண்டியது யாதெனில், அறமுறை நேர்மையுள்ளவன் பொருட்டு ஏற்படவில்லை என்பதும், அது ஏற்பட்டது முறைகேடர், அடங்காதவர், பத்தியில்லாதவர், பாவிகள், மதியாதவர், கடவுளை இகழ்பவர், தந்தையைக் கொல்பவர், தாயைக் கொல்பவர், ஆட்கொல்லிகள், விபசாரர், ஆணோடாண் சேர்பவர், மனிதரைத் திருடுவோர், பொய்யர், பொய்யாணையிடுவோர் பொருட்டும், ஆநந்தராகிய கடவுள் என்னை நம்பி என் கையில் ஒப்பித்த மாட்சிமையுள்ளச் சுசமாசாரத்தின்படி தக்க கொள்கைகளுக்கு ஒவ்வாத வேறொன்றுண்டாயின் அதைச் செய்வார் பொருட்டும் என்பதுமே.

## Paul the Dauntless

**By Pandit J. Masillamany**

### அஞ்சா நெஞ்சனாகிய பவுல்

அப்போஸ்தலனாகிய பவுலின் ஜீவிய விருத்தாந்தத்தைக் கூறும் நூல்கள் அநந்தம். இவை பூர்வகாலம் தொடங்கி தற்கால பரியந்தம் பல வேறு ஆசிரியர்களால் எழுதப்படுவன. 'அஞ்சா நெஞ்சனாகிய பவுல்' என்னும் பெயர் பூண்ட இந்நூலானது சமீப காலத்தில் வெளிவந்த நூல்களுள் ஒன்று. பேசில் மத்தேயு என்னும் ஆசிரியரால் எழுதப்பெற்றது. அப்போஸ்தலனாகிய பவுலின் ஜீவியத்தை



அவன் சிறுபிராயந் தொடங்கி விருத்தாப்பிய காலம்வரை நன்கு தெளிவாய்க் கூறுவது. அபாரமான கற்பனையலங்காரங்களாவது புனைந்துரைகளாவது இல்லாமல், வாசிப்பவர்கள் மனதைக் கவரத் தக்க அழகிய நடையில் எழுதப் பெற்றது. கதா நாயகனாகிய பவுலும், கதாபாத்திரங்களாகிய புருஷஸ்திரீகளும் நமது கண்முன் நடமாடுவதுபோல் நமக்குக் காட்ட வல்லது. இப்புத்தகத்தை எவ்வளவு கவனமாய் வாசிக்கிறோமோ அவ்வளவு அதிகமாய் பவுலின் குணசீலங்களை வியக்கக் கூடியவர்களாய் இருப்போம். இந்நூலை வாசிக்கத் தொடங்கியவர்கள் அதை வாசித்து முடியுமட்டும் அதைக் கீழே வைக்கமாட்டார் என்பது நிச்சயம்.

இத்துணை சிறப்பு வாய்ந்த இந்நூலை இங்கிலீஷ் பாஷை தெரிந்த யாவரும் வாசிக்கவேண்டியது அவசியம். இப்புத்தகமானது தமிழ்ப் பாஷையில் மொழிபெயர்க்கப்படுமானால் தமிழ்க் கிறிஸ்தவர்களுக்கு உண்டாகக்கூடிய நன்மை மிகவும் பெரிது. அடுத்த சஞ்சிகை முதல் இவ்வரிய நூலினின்று ஓர் அத்தியாயத்தைத் தெரிந்தெடுத்து, தமிழ்க் கிறிஸ்தவர்களுக்கும் பிறருக்கும் பிரயோஜனமாயிருக்கும் வண்ணம் அதைத் தமிழில் மொழிபெயர்த்துப் பிரசுரஞ் செய்யத் தீர்மானித்திருக்கிறோம். முன்னும் பின்னுமுள்ள கதா சம்பந்தத்தினின்று பிரிக்கப்பட்ட ஓர் பாகத்தைக் கொண்டு அந்நூலினது சிறப்பை நிதானிப்பது கூடாத காரியமாய் இருந்தாலும், தமிழ்க் கிறிஸ்தவர்களுக்கு இந்நூலைப்பற்றி ஓர் அறிவுண்டாகும் பொருட்டு இவ்வாறு செய்யத் துணிந்தோம்.

சவுலும் அவனுடைய தோழரும் எருசலேம் நகரத்தினின்று தமஸ்குப் பட்டணத்துக்குப் பிரயாணஞ் செய்யும் வழியில் பவுலுக்குக் கிடைத்த மகாதரிசனத்தை விளக்கும் பாகமாகிய ஏழாம் அத்தியாயத்தை அடுத்த சஞ்சிகை முதல் வெளியிடுவோம்.

## An Answered Prayer

### உத்தரவளிக்கப்பட்ட ஜெபம்

ஜெபத்திற்கு உத்தரவருளப்படுகிறதென்பதற்குத் திருஷ்டாந்தமாகப் பின்வரும் கதையானது சீனதேசத்துப் பத்திரிகையிலிருந்தெடுக்கப்பட்டது.

அப்பத்திரிகையில் கனம் W. ஆர்தர் கார்னபி ஐயரவர்கள் பின்வரும் சமாசாரத்தை எழுதினார்கள். அவருக்கும் அயர்லாந்து தேசத்

திலுள்ள சரிதையில் பிரசித்திபெற்ற கோல்சன் கெர்னகான் என்பவருக்கும் கடிதப் போக்குவரத்து இருந்த சமயத்தில், கனம் கார்னபி ஐயரவர்கள் இயற்றிய 'ஜெபம் பண்ணக் கடவோம்' என்னும் புஸ்தகம் அவர் கையிலகப்பட்டது.

ஜூலை மாதம் 1916-ம் வருடத்தில், கெர்னகான் என்பவர் ஒரு ஓய்வுநாள் பத்திரிகையில் 'ஜெபத்தைப்பற்றிய ஓர் ஆச்சரியமான கதை' என்று ஒரு விவரம் எழுதினார். ஒரு சத்தமானது இவரை முழங்கால்படியிட்டு ஜெபம்பண்ணவும் பின்பு ஜெபத்தைப்பற்றி ஒரு விவரம் எழுதவும் சொன்னதாக இவருக்குள் மார்ச் மாதத்திலுண்டான ஓர் உணர்ச்சியே இவர் இதை எழுதியதற்குக் காரணமாகும்.

அதே சமயத்தில் கார்னபி என்பவரும் அதிகமாய் உலகத்தில் வழங்கிவரும் யாதாகிலுமொரு பத்திரிகையில் பிரசித்திபெற்ற யாராகிலும் ஒருவர் ஜெபத்தைப்பற்றி ஒரு விவரம் எழுதமாட்டார்களாவென்று அதிகமாய் விரும்பி, அதற்காக வெகு ஊக்கமாய் ஜெபித்து வந்தாராம்.

அச்சமயத்தில் கோல்சன் கெர்ன்கான் என்பவரை அவர் காணவில்லை. அவருடைய ஜெபமானது அயர்லாந்து சரித்திரக்காருடைய இருதயத்தையும் ஆத்துமாவையும் இறுகப்பற்றினதென்பதை இவ்விஷயமானது காட்டுவதற்காக அவர் அதிகமாய் சந்தோஷப்படுகிறார்.

(From the *United Church Herald.*)

## The Wonderful Court of Justice

**By the Rev. N. Devasahayam, B. A.**

## அதிசய நீதித்தலம்

### கலிவிருத்தம்

பூவில் மன்னர் சிறையு ளிருப்பவர்.
தாவில் தண்டந் தனைக்கடந் தேகுவர்;
ஓவில் உள்ளச் சிறையு ளிருப்பவர்
காவலன் கிறிஸ் தின்றிக் கடப்பரோ?

நம் பூவுலகில் ஊருக்கு ஊர் போலீஸ் சேவகரும் மேஸ்திரேட்டுக் கச்சேரியும் உண்டு. போலீஸாட்கள் போகாத இடமில்லை; காரணமென்ன? எல்லா இடங்களிலும் குற்றங்கள் நடக்கும். குற்றஞ் செய்தவர்களைப் பிடித்து அதிகாரிகளுக்கு ஒப்புவிக்கப் போலீஸ் ஏற்பட்டிருக்கிறது. போலீஸார் பிடித்த குற்றவாளிக்குக் கைதி என்று



பெயர். கைதிகள்மேல் கொண்டுவரப்பட்ட குற்றம் உண்மையாய் நடந்ததோ இல்லையோ என்று விசாரிக்க மேஸ்திரேட்டுகள் ஏற்பட்டிருக்கிறார்கள். மேஸ்திரேட்டுக் கச்சேரியில் கொண்டுவரப்பட்ட கைதியை மேஸ்திரேட்டதிகாரியானவர் அவனுக்குச் சார்பாகவும் விரோதமாகவும் வந்திருக்கிற சாட்சிகள் சகிதமாய்த் தீரவிசாரணை செய்து, கைதி குற்றஞ்செய்தவனே என்று அவருக்கு நிச்சயம் பிறந்தால், குற்றச்சீட்டு வாசித்து, கைதியை செஷன்கோர்ட்டு விசாரணைக்கு ஒப்புவிப்பார். செஷன் ஜட்ஜானவர் கைதிக்குச் சார்பாகவும் விரோதமாகவுமுள்ள சாட்சியங்களை இன்னொருதரம் தீர ஆராய்ந்து, கைதி குற்றவாளியே என்று ருசுவாகும்பக்ஷத்தில் கிரிமினல் சட்டப்படிக்கு அவனுக்குத் தண்டனை விதிப்பார். அவனுக்குச் சிறைச்சாலைத் தண்டனை ஏற்படுமானால், அது இத்தனை வருஷத்திற்கு என்று வரையறுத்து விதிக்கப்படும். அந்த வரையறைப்பட்ட வருஷங்கள் முடிந்தபின் கைதியைச் சிறைவிடுத்து அனுப்புவார்கள். அவன் தன் இனத்தாரிடமும் சிநேகிதரிடமும் போய் இனி யோக்கியனாய்ப் பிழைக்கலாம். அவன் சிறைநீங்கி வெளிவந்தபின் அவனைக் குற்றவாளியென்று ஒருவரும் சொல்லமாட்டார்கள். அவன் செய்த குற்றத்திற்கு அநுபவித்த தண்டனையினால் அவனுடைய மனச்சாட்சியும் அமர்ந்துபோகும். இதினிமித்தமே மேற்சொன்ன கவியில்

'பூவில் மன்னர் சிறையு ளிருப்பவர்
தாவில் தண்டந் தனைக்கடந் தேகுவர்'

என்று சொல்லியிருக்கிறது. 'பூவில்' என்றது 'நம் பூவுலகத்தில்' என்று அர்த்தமாகும். 'தாவில் தண்டம்' என்பது 'தவிர்க்கலாகாத தண்டனை' எனப் பொருள்படும்.

ஒருவன் சிறைமீண்டு வந்தபின் மறுபடியும் முன்செய்த குற்றத்தையே செய்வானாகில், போலீஸார் அவனைத் திரும்பக் கைதியாக்கி முன்போலவே செஷன்கோர்ட்டுவரையும் கொண்டுபோய்த் தண்டனை விதிப்பிப்பார்கள். அந்தத் தண்டனைக்கும் ஒரு காலவரையறையிருக்கும். அந்த வரையறைப்பட்டகாலம் முடிந்தபின் அவன் திரும்ப விடுதல்பெறுவான். அப்படி விடுதல்பெற்று வந்தவன்மேல் போலீஸார் இனிக் கண்வைத்திருப்பார்கள். அவன் பெயரை அவர்கள் கேடி டாப்பில் வைத்திருப்பார்கள். 'கேடி' என்றால் 'பழங்குற்றவாளி' என்பதாம். கேடியானவன் திரும்பக் குற்றத்தில் அகப்பட்டால் செஷன் கோர்ட்டார் அவனுக்கு முன்னிலும் அதிகக்கடினமான தண்டனை விதிப்பார்கள். அதற்கும் ஒருகாலவரையுண்டு. அந்தக் காலவரை தீர்ந்தபின் அவன் மீண்டு வெளியேறுவான். இது

பூவுலகில் அரசாட்சிசெய்யும் மன்னர்களுடைய நீதிவழுவாத நெறி முறையிற் காணக்கிடைக்கும்.

இனி இன்னொரு நீதித்தலத்தைப் பார்ப்போம். அது எங்கே இருக்கிறது? உள்ளே இருக்கிறது. எதனுள்ளே? நம் நெஞ்சினுள்ளே. பூவுலகில் கறுப்பாயினும் வெள்ளையாயினும் வேறெந்த நிறத்தாராயினும் சரி, எத்தேசத்தார் எப்பாஷைக்காராயினும் சரி, நன்மை தீமை பகுத்தறிகிற தன்மை அவர்களுக்கு உண்டு. மிலேச்சரான சிலர் மிக இழிந்த நிலைமையில் இருக்கிறார்கள். அவர்களுக்குள் நன்மை தீமைப் பகுத்தறிவு மழுங்கியிருக்கும். இருந்தும், துலக்கினால் அந்தப் பகுத்தறிவு ஒளிவிட்டெழும்பும். மிருகங்களுக்குள் நன்மை தீமைப் பகுத்தறிவு மனிதருள் இருக்கிறதுபோல் இருக்கிறதில்லை. அவைகளுடைய உள்ளங்களை அவ்வகைப் பகுத்தறிவுக்குத் துலக்க வொலாது.

நன்மை வேறு தீமை வேறு பகுத்தறிய எல்லா மானிட உள்ளங்களிலும் ஒரு சக்தி இருக்கிறது. அதற்கு மனச்சாட்சி என்று பெயர். அது எல்லா மனிதரிலும் ஒருதன்மையதாய் இருப்பதினால், அதை ஒவ்வொரு மானிடனுள்ளும் வைத்தவர் ஒரேகடவுள் என்பது சொல்ல வேண்டுவதில்லை. சகல மானிட மனச்சாட்சியிலும் தேவன் தம் திருக்கரத்தால் நாம் கைக்கொள்ளவேண்டிய தர்மவிதிகளை வரைந்திருக்கிறார். அந்த விதிகள் ஒரேவிதமாய் எல்லா மானிட மனச்சாட்சியிலும் வரையப்பட்டிருக்கின்றன. அவற்றுட் சில வருமாறு: கடவுளைக் கைத்தொழு, பிதா மாதாக்களைக் கனம்பண்ணு, கொலை செய்யாதே, களவு செய்யாதே, பிறன் தாரத்தை இச்சிக்காதே, பொய் சொல்லாதே, இவை முதலியனவாம்.

இவ்விதிகளைக் கைக்கொண்டொழுகும்போது நம் மனதில் திருப்தியிருக்கும். அவைகளை மீறி நடக்கும்போது நம் மனதில் அச்சம் எழும்பும். பிறர் பொருளைக் களவாடினவனுடைய நெஞ்சு படபடவெனத் துடிக்கும். அவன் யார்முகத்தையும் நிமிர்ந்து தைரியமாய்ப் பார்க்க அஞ்சுவான். அவனுடைய நெஞ்சே அவனை வாதிக்கும். இப்படியே, மற்ற தர்மவிதிகளை மீறும்போதும் என்க. பொய், களவு, சூது, கொலை, விபசாரம் முதலாகிய பாதகங்களைச் செய்தபின், அந்தப் பாதகனைப் பிடித்து நெஞ்சினுள்ளேயே ஒரு அதிசயமான நீதித்தலத்தில் நிறுத்திக் குற்றவிசாரணை நடக்கிறது. அவனைப பிடித்த போலீஸ் சேவகன் ஆர்? மனச்சாட்சி. அவனை விசாரிக்கிற மேஜிஸ்ட்ரேட்டு ஆர்? மனச்சாட்சி. அவனை செஷன் விசாரணை செய்கிற நியாயாதிபதி ஆர்? மனச்சாட்சி. மனதினுள் நடக்கிற குற்றவிசாரணையில் ஒருவனும் தன்னை நீதிமான் என்று பொய்ச்



சாட்சிகளைக்கொண்டு ரூபித்துத் தப்பமுடியாது. அவன் செய்த குற்றத்தை அவனுடைய மனதே ரூபிக்கும்.

'தன்னெஞ் சறிவது பொய்யற்க; பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும்.'—(குறள்.)

ஒருவன் தகாததை நினைக்கவோ பேசவோ செய்யவோ துணியும்போது அவனுடைய நெஞ்சு அவனைக் குறுக்கிட்டுத் தடுத்து: 'இது தகாது, இந்த வழி போகாமல் திரும்பு' என்று அதட்டும். அவன் அந்த நல்ல யோசனையைக் கேட்காமல் போனவழியே போய் ஒரு அக்கிரமத்தைச் செய்வானாகில், அவனுடைய நெஞ்சு அவனைப் பிடித்துக் கைதியாக்கி அவன் செய்த குற்றத்தை அவன் மறுக்கமுடியாமல் ரூபித்துத் தண்டிக்கும். அக்கிரமம் செய்தவர்கள் தங்கள் மனதினால் வாதிக்கப்படுகிறார்கள் என்பது ஒவ்வொரு மானிடனும் அறிந்த உண்மை. உலகில் ஒருவனாவது தன் மனதினால் வாதிக்கப்படாதவனாய் இல்லை. தவிர, அவனுடைய மனதே அவனுக்கு ஒரு சிறைச்சாலையாகிறது. அதிலே அவனைக் கைதியாக்கிவைத்தபின், அந்தச் சிறைமீண்டு அவன் வெளியேறுகிற ஒருகால வரையறையில்லை. அவன் நினைத்துக்கொண்ட எத்தனை பிராயச்சித்தங்களைப் பண்ணினாலும் அவனுடைய உள்ளம் அதினால் திருப்தியாகிறதுமில்லை, இதுபோதும் இனி நீ போகலாம் என்று அவனைச் சிறைவிடுத்து அனுப்புகிறதுமில்லை. தவிர, அவனுடைய மனம் அவனைப் பார்த்து: 'உன்னை இந்தச் சிறைக்கூடத்தில் வைத்து நீ வெளியேறாமல் காவல்செய்யச் சொன்னவர் கடவுள்; அவரே சகல மானிடருக்கும் நீதிவழுவாத நியாயாதிபதி; அவர் வந்து உன்னைச் சிறைமீட்டாலன்றி நீ வெளியேறமாட்டாய்' என்று சொல்லுகிறது. இதுவும் உண்மையே என்று ஒவ்வொரு மானிடனும் ஒப்புவான். ஏன்? ஒருவன் செய்த குற்றம் எந்தப் பிராயச்சித்தத்தினாலும் நெஞ்சைவிட்டு அகலாமல், எத்தனை வருஷங்கள் கழிந்தாலும் உள்ளேயே இருந்துகொண்டு முதல்நாளில் எப்படியோ அப்படியே ஒவ்வொரு நாளும் நினைவு வரும்போதெல்லாம் வாதிக்கிறதல்லவா? இந்த அநுபவம் யாருக்கு இல்லை? இதுவும் தவிர, மானிடப்பிறவிகளுள், ஒருதரம் செய்த அக்கிரமத்தையே பலதரமும் செய்து மேலும் மேலும் தங்கள் மனச்சாட்சியிலே அகோர அக்கிரமத்தைச் சுமத்தாதவர்களும் இல்லை. இதனால், சகலமானவரும் மனதினுள் இருக்கிற தர்மப்பிரமாணத்தைப் பலவாறு பலமுறை மீறின கேடிகள் என்பதை யார் மறுப்பான்? மனச்சாட்சியானது பிடித்து உள்ளத்திலிருக்கிற சிறையில் வைத்த ஒருவன் 'ஜெயில் உள்ளச் சிறையில் இருப்பவன்' என்பதற்கு இனிக் கேட்கவேண்டுமோ?

இனி, இப்படி உள்ளச்சிறையில் ஓய்வில்லாமல் காவல்செய்யப்படுகிற மானிடர்களுக்கு மீட்சி வரும் விதம் என்ன என்பார்க்குக் கவிராயன்

‘ஓவில் உள்ளச் சிறையு ளிருப்பவர்
காவலன் கிறிஸ் தின்றிக் கடப்பரோ?’

என்று உத்தரம் சொல்லுகிறான். இயேசுகிறிஸ்து ‘தேவனுடைய ஒரே பேறான குமாரன்.’ அவரை தேவனே நம் உலகத்திற்கு அனுப்பினார். ஏன் அனுப்பினார்? அவரை நம்பித் தன்னை அவருக்கு ஒப்புக்கொடுக்கிறவன் எவனோ அவன் கேட்டிலிருந்து விடுதல் அடைந்து நித்தியஜீவனை அடைந்துகொள்வதற்காக அனுப்பினார். கிறிஸ்து பாவியைச் சிறைமீட்கிறதற்கே நம் உலகில் வந்தார். அதற்காக அவர் மனுஷ அவதாரமானார். ஆகி, மனுக்குலம் முழுமையையும் தம் ஒருவருள் அடக்கிக்கொண்டு, அவர்களுடைய பாவத்திற்குப் பிராயச்சித்தம் செய்தார். பாவத்திற்கு தேவன் குறித்த பிராயச்சித்தம் சாவு. பாவம் செய்தவன் பாவத்திற்கு மரித்து, பரிசுத்தத்திற்குப் புது உயிர் அடைந்து பிழைக்கவேண்டும். இந்த இரண்டு வரங்களும் இயேசுகிறிஸ்து நமக்குச் சம்பாதித்திருக்கிறார். அவரை நம்பித் தன்னை அவருக்குக் கொடுத்தவனுக்கு அவர் பாவத்திற்குச் சாகிற வரமும் புண்ணியத்திற்கு உயிர்பெற்றெழுந்து பரிசுத்தமாய்ப் பிழைக்கிற வரமும் தருகிறார். அந்த இரண்டு வரங்களையும் நம் மனுக்குலத்திற்குத் தரவே அவர் சிலுவையில் பிராணத்தியாகம் செய்து மூன்றும் நாளில் உயிரோடெழுந்து பரத்திற்கு ஏறி தேவாசனத்தில் தேவனோடு வீற்றிருக்கிறார். அங்கிருந்து அவர் தம்மை நம்பினவர்களைப் புவியெங்கும் தம் இராச்சியத்தில் வைத்துக் காக்கிறார். அவருடைய இராச்சியத்திலிருக்கிறவர்களுக்கு இந்த இரண்டு அனுபவமுங் கிடைத்திருக்கின்றன. அவர்கள் பாவத்தின் வல்லமையிலிருந்து விடுதல் அடைந்து உள்ளச் சிறைமீட்சி பெற்றிருக்கிறார்கள். தவிர, அவர்கள் முன்போல் பாவம் செய்யமாட்டார்கள். கிறிஸ்துவுக்குள் வந்தவர்கள் பாவத்தை வெறுத்துப் பரிசுத்தமாய்ப் பிழைக்க வல்லவர்கள். அவரால் தவிர, வேறெந்த விதத்தாலும் ‘ஓவில் உள்ளச் சிறை’ நீங்காதாகையால், அந்தச் சிறையுளிருப்பவர் ‘காவலன் கிறிஸ் தின்றிக் கடப்பரோ?’ என்று கவி சொல்வானாயினான். இயேசுகிறிஸ்து பாவிக்கு சிறைமீட்சி தருகிற புண்ணியச் சரித்திரத்தையும் விதத்தையும் கிறிஸ்தவர்கள் உலகமெங்கும் எச்சாதியாருக்கும் பாஷைக்காரருக்கும் அவரவர் சுயபாஷையில் கொண்டுபோய்க் கொடுக்கிற திருவேதநூலில் பார்க்கக் காணலாம். நம் தமிழ்ப்பாஷையில் அது மிகச் சுலபக் கிரயத்திற்குக் கிடைக்கும். மானிடனும் பிறந்த



எவனும் அதைப் படிக்கக் கடமையுள்ளவன். படிக்கக் கூடாதில்லாதவர்கள் அந்த மகா உன்னத விஷயத்தை ஊர்தோறும் இலவசமாய்ப் பிரசங்கிக்கிற போதகர்கள் வாயால் கர்ணாமிர்தமாய்க் கேட்டு அறிவடைந்து இரட்சிக்கப்படலாம்

# Our Gospel Message

### Verses for the Week of Evangelism. Rom. v. 8, 10

## நாம் கூறவேண்டிய சுவிசேஷ செய்தி

ரோம. 5:8,10

நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்.

நாம் தேவனுக்குச் சத்துருக்களாயிருக்கையில், அவருடைய குமாரனின் மரணத்தினாலே அவருடனே ஒப்புரவாக்கப்பட்டோமானால், ஒப்புரவாக்கப்பட்டபின் நாம் அவருடைய ஜீவனாலே இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயம்.

இந்த வசனங்களை நாம் அதிகமாய்த் தியானிக்கிறதற்கு ஒரு விசேஷித்த முகாந்தரமுண்டு. சுவிசேஷப் படைமுயற்சிக்குச் சம்பந்தமாக இந்த வருஷத்தில் போனவருஷத்தைப்போல சுவிசேஷ வேலை எல்லா இடங்களிலும் ஒரு வாரம் நடக்கும். அந்த வாரத்தில் மாத்திரம் அல்ல, ஆனால் அக்டோபர் (October) மாசத்தில் வரும் அவ்வாரத்தில் விசேஷமாய் நாம் எல்லாரும் ஏகோபித்து, கிறிஸ்துவின் இரட்சிப்பைப் புறமதஸ்தருக்குத் தெரிவிக்க முயற்சிசெய்வோம். அப்போது நடக்கிற வேலையில் உபயோகிக்கிறதற்கு ஒரு சங்கத்தார் இந்த வசனங்களைத் தெரிந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய எண்ணம் என்னவெனில், இந்த வசனங்களில் சுவிசேஷ செய்தி ஒருவாறாகத் தொகுத்துச் சொல்லியிருக்கிறது என்பது. கிறிஸ்தவர்கள் எல்லாரும் இவ்வசனங்களில் சொல்லியிருக்கும் பொருளைப் புறமதஸ்தருக்கு எடுத்துக் காட்டுவார்களென்றால், ஆண்டவர் அநேகம் பெயர்களை ஆதாயப்படுத்தும்படி தம்முடைய வசனத்தை ஆசீர்வாதமாக்குவார். இப்படி நடக்கவேண்டுமானால், நாம் எல்லாரும் இப்போதே இந்த வேதவாக்கியங்களைப் படித்து மனப்பாடம்பண்ணி, அவைகளை மனதில் திரும்பத் திரும்பச் சிந்திக்கவேண்டும். அது நமக்குக் கடமை மாத்திரமல்ல, நமக்குப் பெரும் சிலாக்கியமுமாக இருக்கும்.

இந்த வாக்கியங்கள் ஒரு ஆழமான கிணற்றைப்போல் இருக்கின்றன. இன்றைக்கு அந்தக் கிணற்றிலிருந்து கொஞ்சம் தண்ணீரை மொண்டுகொள்ளப் பிரயாசப்படுவோம். இனிமேல் வேறேநாட்களில் நாம் தாகத்தோடு மறுபடியும் இந்தக் கிணற்றண்டை வருவோம்.

நம்முடைய மார்க்கத்திலுள்ள சில மூலாதாரமான சத்தியங்களை இவ்வாக்கியங்கள் நமக்கு நினைப்பூட்டுகின்றன.

(1) பாவியின் நிலைமை, (2) தேவனுடைய அன்பு, (3) அந்த அன்பை வெளிப்படுத்துகிற கிறிஸ்துவின் மரணம், (4) அந்த மரணத்தால் நமக்குக் கிடைக்கும் இரட்சிப்பு, ஆகிய இவைகளை அறிந்துகொண்டு இவைகளின் மகிமையைத் தியானிக்கிறதற்கு நீடூழிகாலம் பற்றாது.

1. நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்தார். பாவியின் நிலைமை. கிறிஸ்துவை இரட்சகராக இன்னும் ஏற்றுக்கொள்ளாத நம்மெல்லாருடைய நிலைமை. இதற்கு இரண்டு பாகமுண்டு.

($a$) நாம் பாவம் நிறைந்த ஜாதியின் சந்ததியார்.

பாவத்துக்கு இயல்பாக சாய்ந்துபோகிறோம். இந்தச் சார்பு நமது ஜீவனுக்குள்ளேயே இருக்கிறது; நம்மோடு பிறந்தது. நம்முடைய பெற்றோர் நமக்குச் சுதந்தரமாகக் கொடுத்த ஜீவனில் அது ஒரு பாகம். எவ்வளவு பயங்கரமான சத்தியம்! உலகத்தில் இன்றைக்கு நடக்கிற அளவில்லாத தீமைகளைப் பார்த்து நடுங்குகிறோம். யுத்தத்தின் அகோரத்தைச் சிந்தித்துத் தாங்கமுடியவில்லை. ஒரு நல்ல குடும்பம் ஒரு வாலிபனுடைய துன்மார்க்கத்தால் அழிந்துபோகிறதைப் பார்த்துப் புலம்புகிறோம். குடிவெறியாயிருக்கிற ஒரு மனிதனைக் காண்கிற காட்சி நமக்கு விசனம். ஆனால் அதெல்லாவற்றுக்கும் வேர் நம்முடைய ஜீவனில் ஆழமாய் ஊன்றியிருக்கிறது.

ஒரு நல்ல மனிதனை அறிவேன்; அவரைப்போன்றவர்களை நீங்களும் அறிவீர்கள். அவருடைய பந்துக்களில் நாலைந்துபேருக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறது. அவருடைய தகப்பனுக்கு விருத்தாப்பியத்தில் பைத்தியம் பிடித்தது. அவர் தாயாருடைய புத்தி மயங்கிப்போனது. அவர் மகனுடைய புத்தி சிலவேளை நன்றாயிருக்கிறதில்லை. தாமும் பைத்தியக்காரராவார் என்ற பயம், அந்த நல்ல மனிதனுடைய மனதில் ஓயாமல் இருக்கிறது. அப்படிப்பட்டவருக்காக நாம் எல்லாரும் பரிதபிப்போம்.

ஆனாலும், பைத்தியத்துக்குச் சுதந்தரமாய் வந்த சார்பு பாவத்துக்கு வந்த சார்பைக்காட்டிலும் கெட்டதா? அந்தச் சார்பு நம்மெல்லாருக்கு முண்டு.

நாம் கெட்ட காற்றில் நடந்து, விஷங்கலந்த தண்ணீரைச் சாப்



பிட்டு, வியாதியைக் கொடுக்கிற உணவை உண்ணவேண்டியிருந்ததென்று வைத்துக்கொள்ளுங்கள். நம்முடைய ஆத்துமாவின் இயல்பான நிலைமை அதைப்போல் இருக்கிறது. நாம் பாவம் நிறைந்த ஜாதியின் சந்ததியார்.

($b$) ஆனாலும், அதுமாத்திரமல்ல நம்முடைய நிலைமை. நாமே வேண்டுமென்று பாவம் செய்திருக்கிறோம்.

நாம் அடிக்கடி நன்மையை வெறுத்துத் தீமையைத் தெரிந்துகொண்டிருக்கிறோம். ஆண்டவருடைய சித்தத்தை அறிந்திருந்தும் அதற்கு நேர்விரோதமாய் நடந்திருக்கிறோம். ஆகையால் நாமே, பாவத்துக்கு உத்தரவாதிகள். இது நம்முடைய குற்றம். நாம் அதற்குக் கணக்குக் கொடுக்கவேண்டும். நாம் நம்முடைய சுபாவத்துக்குள் இருக்கிற தீயசார்புக்கு எப்போதும் எதிர்த்துநின்று, அதை மேற்கொள்ள முயற்சிசெய்திருப்போமாயின், அது நமக்கு அநுகூலமாயிருக்கும். ஆனாலும், நாம் அதையும் செய்யவில்லை. தீமையை நாம் ஓடடிக்கொண்டதால், உலகத்திலுள்ள தீமையோடு நாமும் ஒன்றாய்ச் சேர்ந்துவிட்டோம். நாமும் உலகத்தைக் கெடுக்கிற தீமைக்கு உத்தரவாதிகளாய்ப் போனோம்.

இதுவே பாவியின் நிலைமை. ஒருவேளை இதை வாசிக்கிற அல்லது வாசிக்கக்கேட்கிற சகோதரனே, சகோதரியே, உன்னுடைய நிலைமை இதுவாயிருக்கலாம். கிறிஸ்துவை இரட்சகராக அறியாதவர்களுடைய நிலைமை இதுவே. ஆகையால் சகோதரனே, சகோதரியே, பயப்படு. நீ பயப்பட போதுமான காரணமுண்டு.

இந்த பயங்கரமான நிலைமைக்கு நாம் எப்படித் தப்பித்துக்கொள்ளலாம்? உலகஞானிகள் நமக்குப் பலவழிகளைச் சொல்லுவார்கள்.

புத்திமதியைச் சொல்லுவார்கள். 'நல்லவர்களாயிருங்கள்' என்று சொல்லுவார்கள். அது குஷ்டரோகிக்குச் 'சுகமாயிரு' என்று சொன்னதுபோலிருக்கிறது.

'நல்ல பழக்கங்கள் உனக்கு வேண்டும், நீ நன்மைசெய்யக் கொஞ்சம் பழகிக்கொண்டால் தீர்ந்தது' என்பார்கள். அது, தண்ணீரில் அமிழ்ந்துபோகிற மனுஷனுக்கு 'நீந்திப்போகக் கற்றுக்கொள்' என்று சொன்னதுபோலவும், குருடனுக்கு 'தெளிவாய்ப் பார்க்க நீ பழகிக்கொள்ளவேண்டும்' என்று சொன்னதுபோலவும் பயனில்லாமற்போம்.

ஆசாரவழியை சிலர் நமக்குக் காட்டுவார்கள். 'இதையும் அதையும் நீ செய்தால், நீ நல்லவன்தான்' என்று சொல்லுவார்கள். ஆசாரத்தினால் பாவம் போகாதென்று இப்போது சொல்லவேண்டுமோ? ஒரு தமிழ்வார்த்தையுண்டு: அது 'ஆசாரக்கள்ளன்.' அந்த ஒரே வார்த்தை

நமக்குப் போதும்; ஆசாரம் காட்டி, கள்ளனுமிருக்கக்கூடும். ஆசாரத்தால், பாவத்திலிருந்து தப்பித்துக்கொள்ள நமக்கு உதவியில்லை.

2. நமக்கு உதவிசெய்கிறது தேவனுடைய அன்பே. நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்.

தமது என்றவார்த்தையை நாம் அழுத்தவேண்டும். தேவனுடைய அன்பு வேறே, மனிதருடைய அன்பு வேறே. 6-ம் 7-ம் வசனங்களைப் பார்த்து இந்த இரண்டுக்குமுள்ள வித்தியாசத்தைக் கவனிக்கலாம்.

தற்சமயத்தில் அநேக அங்கிலேயர் இங்கிலாந்துக்காக மரித்துக்கொண்டிருக்கிறார்கள். இங்கிலாந்து தேசம் இப்போது யோக்கியத்துக்காகவும் நீதிக்காகவும் போராடுகிறதென்று அவர்கள் நம்பி, பெருமையோடும் சந்தோஷத்தோடும் தங்கள் ஜீவனைக் கொடுக்கிறார்கள்.

ஜெர்மனி தேசத்தை மீட்டு நல்ல தேசமாக்கும்படி நம்மில் எத்தனைபேர் சாக சம்மதிப்போம்? சில அங்கிலேயர் அப்படிச் சம்மதிப்பார்கள் என்று எனக்குத் தெரியும். ஆனால் அவர்கள் யார்? கிறிஸ்துவின் ஆவியைப் பெற்றுக்கொண்டவர்கள்.

அவ்விதமான அன்பு தேவனுடைய அன்பு.

தேவனுடைய அன்புக்கும் மனிதருடைய அன்புக்கும் இருக்கிற ஒரு பெரிய வித்தியாசம் என்னவெனில், நாம் ஒருவரைக் கண்டு அவர் நல்லவர், தயவுள்ளவர், சிரேஷ்டமானவர் என்று அறிந்து அவரை நேசிக்கிறோம். அதாவது, அந்த மனிதனுடைய நல்ல குணம் முதலாவது தெரிகிறது; நம்முடைய அன்பு அதற்குப் பலனாக வருகிறது. கடவுளின் அன்போ, அப்படி இரண்டாவது வருகிறதில்லை. அதுவே, எல்லாவற்றுக்கும் ஆரம்பம். கடவுள் நம்முடைய நல்ல குணங்களைக் கவனித்து நம்மை நேசிக்கிறதில்லை. அவர் நம்மை நேசித்து அந்த நேசத்தால் நமக்குள் புது நன்மைகளை உண்டுபண்ணுகிறார். பயிர் நன்றாயிருக்கிறபடியால் சூரியன் பிரகாசிக்கிறதில்லை. சூரியன் பிரகாசிக்கிறதினால் பயிர் செழிப்பாகிறது.

பிரான்சு தேசத்தில் நல்லவளாயும் பரிசுத்தவளாயும் ஜீவித்துவந்த ஒரு அம்மாள் சாகிறவேளையில் தன் மகளைக் கட்டிக்கொண்டு சொன்னது என்னவென்றால், 'அம்மா, நான் உன்னை நன்றாய் அறிந்தபடியால் உன்னை நேசித்திருக்கிறேன்; என் பரம பிதாவோ என்னை நன்றாய் அறிந்தபோதிலும் என்னை நேசித்திருக்கிறார்.' அந்த அம்மாள் உண்மையைத்தான் சொன்னாள். நம்முடைய இரட்சிப்பின் ஆரம்பம் நம்முடைய புண்ணியமல்ல, தேவனுடைய அன்பே அதெல்லாவற்றுக்கும் ஆரம்பம்.



தேவன் நம்மை இவ்விதமாய் நேசிக்கிறார் என்று நமக்கு எப்படித் தெரியும்?

3. கிறிஸ்துவின் மரணத்தால் நமக்குத் தெரியும். நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்.

சிலுவையைப் போய்ப் பார்ப்போம். அதைப்போன்ற அற்புதம் உண்டோ? அங்கே பாடுபடுகிறவர் தேவகுமாரன். அங்கே, நாம் காண்கிற அன்பு தேவனுடைய அன்பு. அங்கே நாம் காண்கிற பாடுகள் மனுஷன் படவேண்டிய பாடுகள். பாவத்தின் பலன், பாவத்தின் தண்டனை அங்கே பயங்கரமாய்க் காட்டியிருக்கிறது. அந்தப் பலன், அந்தத் தண்டனை, பாவமில்லாதவருக்கு வந்திருக்கிறது ஏன்? அவர் தேவனுடைய அன்புள்ளவராய், தம்மை நம்மோடு முற்றிலும் ஒன்றாக்கி, நம்முடைய பாவத்தின் பலனைத் தம்மேல் ஏற்றியிருக்கிறார். என்ன அன்பு பாருங்கள், தேவனுடைய அன்பு! சிலர் சிலுவையைப்பற்றி பேசும்போது, தேவன் முற்றிலும் கோபமுள்ளவராயிருந்தார், கிறிஸ்து அந்தக் கோபத்தைச் சாந்தப்படுத்தும்படி அன்போடு மரித்தார் என்று சொல்லுவார்கள். தேவனுக்குப் பாவத்தின்பேரில் கோபமுண்டு, கிறிஸ்துவுக்கும் உண்டு. தேவனையும் கிறிஸ்துவையும் இவர்கள் சொல்லுகிற பிரகாரமாய் முற்றிலும் பிரிக்கக்கூடாது. கிறிஸ்து காட்டின அன்பு தேவனுடைய அன்பு. 'கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்.' தேவனுடைய அன்பு பாடுபடுகிற அன்பு. தேவனுடைய குமாரன் அன்பினால் ஏவப்பட்டு தம்மை நம்மில் ஒருவராக்கி, நமக்கு வரவேண்டிய பாவப்பலனைத் தம்மேல் ஏற்றினார். அதுவே அன்பு. அந்த அன்பே நம்முடைய இரட்சிப்புக்குக் காரணம்.

> நீர் பட்ட வாதை யாவும்
> என் பாவ பாரமே;
> இத்தீங்கும், நோவும், சாவும்
> என் குற்றம், கர்த்தரே.
> இதோ என்றைக்கும் சாக
> நான் பாத்திரன் ஆனேன்;
> ஆனாலும் நீர் அன்பாக
> என்னைக் கண்ணோக்குமேன்.

4. சிலுவைக்கு முன் நிற்கும்போது நாம் இரண்டில் ஒன்றைத் தெரிந்துகொள்ளவேண்டும். ஒன்று, நாம் 'இதெல்லாம் நமக்குச் சம்பந்தமானதல்ல' என்று சொல்லி, முகத்தைத் திருப்பி, நம்மு

டைய இஷ்டத்தின்படி நடக்கலாம். தேவன் நம்மைக் கட்டாயப்படுத்தமாட்டார். நாம் கிறிஸ்துவை விட்டு இன்னும் பாவத்தைச் செய்யலாம்; பாவத்தின் பலனாகிய மரணத்தை, அதாவது இரண்டாம் மரணத்தை, அனுபவிக்கலாம். பாவம், அதின் சம்பளம். இன்னும் பாவம் இன்னும் அதே சம்பளம். இப்படி கடைசியாக, ஆத்துமநாசம் வரும். அதுவே நமக்கு வழியாயிருக்கக்கூடும். அல்லது கிறிஸ்துவின் வாக்குகளை நம்பி, நம்மை அவருக்கு ஒப்புவித்து, அவரோடு ஒன்றாகி தேவனுடன் ஒப்புரவாகலாம்.

இதுவே இரட்சிப்பின் செய்தி. நீயும் பாடுபடுகிற கிறிஸ்துவும் ஒன்றாகலாம். அப்போது அவர் செய்ததின் பலனெல்லாம் உனக்கு வரும். இனி உனக்கு ஆக்கினைத்தீர்ப்பு இல்லை.

இதுவே நாம் இந்துக்களுக்கும் மனுமக்களெல்லாருக்கும் தெரிவிக்கவேண்டிய நற்செய்தி.

இது நம்முடைய ஜீவனில் நன்றாய்ப் பதியுமட்டும் இதைச் சிந்திப்போமாக.

அப்போது இதை மற்றவர்களுக்குப் பலமாய்க் கூறும்படி ஆண்டவர் நமக்குக் கிருபை செய்வாராக.

C. L. S. PRESS, MADRAS—1917

No. 136. செப்டெம்பர் 1917

# வேதியர் விளக்கு

REGISTRAR OF
6 - SEP 1917
MA

## Paul the Dauntless

By Basil Mathews, M.A.

Translated by Pandit J. S. Masillamany

பேசில் மத்யூஸ் ஆசிரியர் இயற்றிய

## அஞ்சா நெஞ்சராகிய பவுல்

[சென்ற சஞ்சிகையில் கூறியபடி இந்நூலினது சிறப்பைத் தமிழ்க்கிறிஸ்தவர்கள் அறியும்படி இந்நூலின் 7-ம் அத்தியாயம் இங்கு மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றது. இதற்கு முந்திய ஆறு அத்தியாயங்களும் பவுலின் சிறு பிராயத்திலிருந்து இதுகாறுமுள்ள சரித்திரத்தைக்கூறும். இந்த அத்தியாயம் சவுல் எருசலேமிலிருந்து தமஸ்கு பட்டணத்துக்குச் செய்த பிரயாணத்தை வர்ணிக்கின்றது.]

ஒருநாள் சூரியோதயமானபின் சவுல் தம் பரிவாரத்தோடு பிரயாணஞ்செய்யப் புறப்பட்டுச் சென்ற ரோம ரஸ்தா மிக நெடியது. அவர் போய்ச்சேரவேண்டிய இடம் வெகுதூரம். முதலிலே வழி மேட்டுவழி. அதில் ஏறிச்சென்ற அவர் திரும்பிப்பார்த்திருப்பாராயின் எருசலேம் நகரத்தையும் அந்நகரத்தின் மதில்களருகே வட்டவடிவாய்க் கட்டப்பட்டிருந்த கட்டிடங்களையும் கண்டிருப்பார். மதில்மேல் அநேக கோபுரங்கள் இருந்தன. இவைகளில் ஒன்றின்மேல் நகரத்தைக் காத்துக்கொண்டு நின்ற ரோமப் போர்ச்சேவகனுடைய கவசத்தின்மேல் பாலசூரியனுடைய கதிர் படுதலால், அது பிரகாசமாய் ஜொலித்துக்கொண்டிருந்தது.

ஆனால் சவுலின் வேலை மிக்க அவசரமானதால் அவர் இவைகளைப் பார்க்கும்படி தம் தலையைத் திருப்பவில்லை. ஸ்தேவானுடைய மரணத்துக்குச் சவுல் சம்மதித்துநின்றது, இம்மதிலுக்குப் புறம்பேதான்.

அந்த முகத்தின் ஞாபகம் சவுலைவிட்டு நீங்குமோ!

அவர்கள் போன ரஸ்தா கிபியாமலையின் பக்கமாய்ச் சென்றது. இம்மலையின் உச்சிதான் சவுல் என்னும் தம் பெயரையுடைய தம் பூர்வபிதா அரசனாகும்படி அழைக்கப்படுமுன்னே வாசம்பண்ணிய ஸ்தானம். இஸ்ரவேலருடைய சத்துருக்களுக்கு விரோதமாய்த் தான் செய்த யுத்தத்தில் சவுல் ராஜா தன் பட்டயத்தையும் ஈட்டியையுங்கொண்டு பல்லாயிரவரைக் கொன்றான். ஆனால் கடவுள் நிமித்தம் போர்செய்கிறேன் என்ற நிச்சயம் பூர்வ சவுலுக்கு இருந்ததைவிடக் கிறிஸ்தவர்களைத் துன்பப்படுத்தும்படி இப்போது வடக்கு நோக்கி விரைவுடன் செல்லும் இந்த பாலிய சவுலுக்கே அதிகம் இருந்தது. அப்படியிருந்தும் இத்தனை விரைவாய்ச் செல்லும் பொழுதே சில கேள்விகள் அவர் மனதில் எழும்பின. 'விசற்பமான இந்த ஜனங்கள் அமைதியும் மகிழ்ச்சியுங் கூடிய தைரியத்தை உடையவர்களாய் இருப்பதின் இரகசியம் என்ன? இயேசுவைப்பற்றி இவர்கள் கூறுவது தப்பிதமே. ஆயினும் கடவுளுக்கு விரோதமாகப் போர்செய்கிறவர்களாகக் காணப்படாதேயுங்கள்' என்று கமாலியேல் சொன்ன வார்த்தை தப்பிதமோ, சரிதானோ?

கிபியாவைக் கடந்து வடக்கு நோக்கிச் சவுல் பிரயாணம்பண்ணினான். இப்போது ரஸ்தா எப்பிராயீம் மலையடிமட்டும் வந்து அவ்விடமிருந்து வலதுபக்கம் திரும்பியது. செசரியா என்னும் ரோமத் துறைமுகத்திலிருந்து சாக்குகளை ஏற்றிக்கொண்டு வந்த ஒட்டகங்கள் இடதுபக்கத்திலிருந்து அந்த ரஸ்தாவைச் சேர்கிறதைச் சவுல் பார்க்கக்கூடும். ஆனால் சவுல் நேர் ரஸ்தாவைவிட்டு விலகாமல் சமாரியாவின் மலைகளுக்குப் பக்கத்திற்செல்லும் பாதையிற்சென்றார். யாக்கோபின் கிணற்றில் தாகத்துக்குத் தண்ணீர் பருகவும் வழியண்டையுள்ள ஒரு சத்திரத்தில் படுத்து நித்திரைசெய்யவும் சிறிது தங்கினார். இவ்விடத்தில் நின்ற ஆசீர்வாத மலையாகிய ஏபால், சாபமலையாகிய கெரீசிம் என்னும் இவ்விரண்டு மலைகளுக்கு மிடையில் சூரியன் அஸ்தமிப்பதை இவர் காணக்கூடும். ஆயினும் ஆகாரம், பானம், நித்திரை என்னும் இவைகளுக்காகவே யன்றி மற்றொன்றிற்காகவும் சவுல் எங்குமே தங்கவில்லை.

சவுல் சென்ற பாதை அதிக சந்தடியுள்ளது. அதினொருபக்கத்தில் ரோம உத்தியோகஸ்தன் ஒருவன் தன் குதிரைகளோடும் கோவேறுகழுதைகளோடும் தனது புதிய ஸ்தானத்துக்குப் போனான். தொங்கு திரைகளமைந்த ஓர் பல்லக்கில் அவன் மனைவி இருந்தாள். இப்பல்லக்கை அடிமைகள் சுமந்து சென்றார்கள். பின்னே வரும் குதிரைச்சேனையின் ஒலியும் காலாட்படையின் சத்தமும் கலந்து ஒலித்தன.



இன்னொருபக்கத்தில் வனாந்தரவாசிகளான வியாபாரக்கூட்டத்தார் தங்கள் ஒட்டகங்களை நடத்திக்கொண்டு தென்திசை நோக்கிச் சென்றார்கள். எருசலேம் நகரத்து வியாபார ஸ்தலங்களில் விற்பனை செய்யும்பொருட்டுத் தமஸ்கு பட்டணத்துத் துணிமூட்டைகளை இவ்வொட்டகங்கள் சுமந்து சென்றன.

இப்போது சவுல் மலைகளைக் கடந்து, அகன்றதும் உஷ்ணமுள்ளதுமான யோர்தான் பள்ளத்தாக்குக்குட் பிரவேசித்தான். கில்போவாமலைச் சிகரம் இம்மலைகளுக்கு மேலே உயர்ந்து நின்றது. சவுலும் அவனுடைய சிநேகிதரும் எஸ்ரயேல் பள்ளத்தாக்கிலிருந்து ஓடுகிற சிற்றாற்றை இடதுபுறமாய்க் கடந்து நேரே சென்றனர். கடைசியாய், ஓடியாடித் திரிகிற ஆட்டுமந்தைகள் மேயும் சரிவுகளிலே மலைகளும், அவைகளின் அடிவாரத்திலே செம்படவர் ஊர்களும், அவ்வூர்களை ஒன்றோடொன்றிணைக்கிற வட்டவடிவமான ரஸ்தாவும், அது சூழப்பெற்ற கலிலேயாக் கடலும் இப்போது சவுல் கண்டார்.

சவுல் இவ்விடத்து ஏரிக்கரையில் சற்று நின்று, பிரகாசமான அக்கார்நீரைப் பலதரம் தாண்டிச்சென்றவரும் மீன்பிடி படகொன்றின்மேலிருந்து அங்கு கூடிவந்திருந்த ஜனங்களுக்கு உபதேசம் பண்ணினவருமாகிய இயேசுவைக்குறித்து அங்கே தங்கள் வலைகளைப் பழுதுபார்த்துக்கொண்டிருந்த செம்படவரிடத்தில் விசாரித்திருப்பாரானால், இந்த இயேசு ஒரு எத்தனாயிருக்கக்கூடாதே என்று தன் மனதில் கிளம்பிய சந்தேகத்தை அதிகப்படுத்தக்கூடிய அத்தனை அன்பும் ஆறுதலுமுள்ள கதைகளை அவர்கள் சொல்லுவதை அவர் கேட்டிருப்பார்.

அமைதலான தொழிலுக்கு மையஸ்தானமாகிய இந்த அழகிய ஏரியும், கபிலநிறச் செம்படவரும், பிரகாசமுள்ள நீரில் பிரதிவிம்பிக்கிற மலைகளுமாகிய இவைகளெல்லாம் அவரை அவ்விடத்தில் நிறுத்தக்கூடியவை அல்ல. பசி, களைப்பு, ஏரி, மலை, நதி, பாலம், ரஸ்தா ஆகிய இவைகளெல்லாம் தமக்கும் தம் இலக்காகிய தமஸ்குவுக்கும் இடையிலுள்ள தடைகளாகவே அவருக்குத் தோன்றின.

மகதலா என்னும் பட்டினத்துப் பக்கமாய் ஏரியின் மேற்குக் கரையை வளைந்துசென்று கெனசரேத்து சமபூமியை ஊடறுத்துப் போய் லீபனோன் மலையடிவாரத்திலுள்ள வடபுறக் குன்றுகளின் மேல் ஏறிச்சென்றார். அப்பால் கிழக்குமுகமாய்த் திரும்பி, யோர்தான் பள்ளத்தாக்குக்குள் திரும்பவும் இறங்கி அங்கிருந்த ஒரு ரோம பாலத்தின் மூலமாய் நதியைக் கடந்தார். பருத்த சக்கரங்களையுடைய வண்டிகளைக் காளைகள் மலையின்மேல் இழுத்துச்செல்வதையும், வண்

டிக்காரன் தன் தார்க்கோலைக்கொண்டு மெதுவாய்ச்செல்லும் அக்காளைகளை குத்திச் சத்தமாய்க் கத்தி ஓட்டுவதையும் அவர் கண்டார். முரட்டுச்சுபாவமுள்ள ஒரு காளை முன்னாணி பாய்ச்சப்பட்ட தார்க்கம்புக்கெதிரே உதைக்க அந்த முன் (தார்க்கோல் ஆணி) அதிக ஆழமாய் அதன் தோலுக்குள் பாய்வதையும் அவர் கவனித்தார்.

ஒவ்வொரு நாளும் சவுல் தன் பிரயாணத்தில் முன்னேறிக்கொண்டே போனார். கருவாலி மரங்களும் பசுமையான பாறைப் பிளவுகளும் நிறைந்த லீபனோன் மலை இவர்களுக்கு முன்பாக உயரமாய் நின்றது. அதிக உஷ்ணமாயிருக்கும்போது சவுல் இடதுபுறமாய்த் திரும்பிப்பார்த்து, எர்மோன் மலையின் வெண்சிகரத்தைக் கண்டு மகிழ்ச்சியடைந்தார். எர்மோன் மலையின்மேலுள்ள பனிக்கட்டி உருகிச் சிற்றாறுகளாகக் கீழே ஓடி வறண்ட நிலங்களைச் செழிப்பாக்கின.

சவுலுடைய பிரயாணத்தின் கடைசிநாள் வந்தது. பனித்துளிகள் புல்லைவிட்டு நீங்குவதற்குள் இடையன் தன் மந்தையை மலைகளுக்கு நடத்திக்கொண்டுபோகும் சமயமாகிய வைகறையிலே சவுலும் அவனுடைய தோழரும் தாங்கள் தங்கியிருந்த சத்திரத்தைவிட்டுப் புறப்பட்டார்கள். வனாந்தர தேசத்துக்கு அப்பால் கிழக்கு வெளுத்தது. அவர்கள் அந்த மலைப்பிரதேசத்தின்வழியாய்ச் சென்றபொழுது எர்மோன் மலையின் உச்சி அவர்களுக்கு முன்பாகச் சூரியோதயத்தால் சிவந்து விளங்கியது.

சூரியன் மெல்ல மெல்ல உயர்ந்தேறினது. நண்பகலிலே வெய்யில் பிரயாணியின் தோளை அமிழ்த்துகிற சுமையைப்போல் தோன்றிற்று. ஒட்டகங்களோடு சென்ற வர்த்தகக்கூட்டத்தார் சத்திரங்களுக்குப் பக்கத்தில் தங்கி இளைப்பாற உட்கார்ந்தார்கள். வண்டுகளின் ரீங்காரமேயொழிய அந்த எரி வனாந்தரத்தில் வேறு சப்தமில்லை. மிருகங்கள் அசையாது உறங்கினமையால் அவற்றின் மணியோசை கேட்கவே இல்லை.

ஒரு சிறு குன்றின் உச்சிக்குப் பிரயாணிகள் வந்தார்கள். அவர்கள் இன்னும் போகவேண்டிய வழி கனிமரத் தோட்டங்கள் நிரம்பிய ஓர் சமவெளியை ஊடறுத்துச் செல்லும். இதற்கப்பால் தமஸ்கு பட்டினத்தின் மதில்கள் தோன்றின.

(இன்னும் வரும்.)



# The Preparation of Sermons

By the Rev. H. Spencer, B.A.

## பிரசங்கமுறை

(தொடர்ச்சி)

(2) போதனைக்கும் தேவனுடைய வார்த்தைக்குமுள்ள சம்பந்தம்.

நாம் கூறியறிவிக்க வேண்டிய போதனைகள் சத்திய வேதத்திலேயே கண்டிருக்கிறபடியால், அந்தச் சத்தியவேதத்தின் வேறே வேறே பாகங்களிலிருக்கிற தாற்பரியங்கள் இன்னின்னவைகளென்று தெரிந்துகொண்டு, அந்தத் தாற்பரியங்களைத் தப்பில்லாமலும் பரிஷ்காரமாயும் கேட்கிறவர்கள் நம்பத்தக்கதாயும் அறிவிப்பது நமது முக்கிய வேலையாயிருக்கிறது. சத்தியவேதத்தில் வெளியாகியிருக்கிற தாற்பரியங்களில் எவைகளைப் போதிக்கவேண்டுமென்றும், போதிக்கிறதற்கு முதலில் எந்த விதமாய் ஆயத்தஞ்செய்யவேண்டுமென்றும் கேட்போமானால், நம்மைக் கேட்கிறவர்கள் யார் என்று முதலில் விசாரித்து அவர்களுடைய வெவ்வேறு திராணிக்குத்தக்கவாறு அனுகூலமாய்ச் சுவிசேஷத்தைக் கூறியறிவிக்கவேண்டும். நம்முடைய உபந்நியாசத்தைக் கூர்ந்துகேட்கிறவர்கள் இரண்டுவிதமானவர்கள். கிறிஸ்தவர்களுடைய தேவாலயங்களில் சுவிசேஷத்தைக் கூடியமட்டும் கிரகித்துக்கொண்டு அது நிஜமாய் தேவனுடைய வாக்கியம் என்று ஒத்துக்கொள்ளுகிறவர்களுக்கு இந்த சுவிசேஷபோதனைகளை விவரிக்கிறோம். இதுவுமன்றி வீதிகளிலும் பாடசாலைகளிலும் அந்தச் சுவிசேஷ சங்கதியைக் கொஞ்சமாகிலும் தெரிந்தவர்கள் அது நிஜமென்று நம்பி அதை அனுசரித்து நடக்கவேண்டுமென்று அபிப்பிராயப்படாதவர்கள் நம்முடைய பிரசங்கங்களைக் கேட்டாலும் கேட்பார்கள். இவ்விருபட்சத்தாருக்கும் அதே சங்கதிகளை அதேவிதமாய் விவரிக்கவேண்டுமென்பதை ஒப்பக்கூடாது. ஆதலால் கிறிஸ்தவர்களல்லாதவர்களுக்குப் பிரசங்கஞ்செய்தாலும் கிறிஸ்தவர்களுக்குப் பிரசங்கஞ்செய்தாலும் எந்தக் குறிப்பை வற்புறுத்தவேண்டுமென்று பிரசங்கஞ்செய்கிறோம் என்கிற விஷயத்தை முதலாவது கவனித்து அதற்குமேல் அவர்களுக்கும் இவர்களுக்கும் எந்தச் சங்கதிகளை முக்கியமாய்ப் போதிக்கவேண்டுமென்றும் எந்தவிதமாய் ஆயத்தஞ் செய்யவேண்டுமென்றும் ஆலோசிப்போமாக.

புறமதஸ்தருக்குப் பிரசங்கிக்கிற விஷயத்தில் நாம் முன்னோக்கும் இலக்கென்ன? பிரசங்கத்தைக் கேட்கிறவர்கள் தங்கள் தங்கள் மதங்களின் அபிப்பிராயங்களையும் ஆசாரங்களையும் விட்டு, அப்போதே கிறிஸ்து மதத்தை அநுசரிப்பார்கள் என்று நிச்சயங்கொள்ளுகிறதற்கு இடமில்லை. உடனே மதத்தை விட்டு மாறுவது அபூர்வம். ஜனங்கள் நம்முடைய மார்க்கத்தின் பிரமாணத்தைக் கிரகித்து அறிந்துகொள்ளுமாறு பிரசங்கிக்க வேண்டுமென்பதே நம்முடைய கோரிக்கை. இந்தக் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டுமாகில் அந்தப் பிரமாணம் விசாரித்தறியவேண்டிய விஷயமாய் இருக்கிறதென்று காட்டவேண்டும். அதாவது, கிறிஸ்துவின் பக்கத்தில் சேருவதினால் உண்டாகும் பிரயோஜனம் என்னவென்று விளக்கவேண்டும்.

இயேசுகிறிஸ்து பாவவிமோசனர் என்று சாதாரணமாய்க் கூறுகிறோம். எழெட்டு வருஷங்களுக்குமுன் கிறிஸ்துவின் இராஜ்யம் இந்து தேசத்தில் பிரபலமாவதற்கு இருக்கிற முக்கியமான தடை என்னவென்று விவாதம் உண்டானபோது, இக்கண்டத்தின் வெவ்வேறு திசைகளில் அந்த இராஜ்யத்தின் ஊழியத்தை நடப்பித்த அநுபவசாலிகளான சிலர் வெவ்வேறு அபிப்பிராயங்களை வெளியிட்டாலும், ஒரே விஷயத்தில் எல்லாரும் ஒரே அபிப்பிராயமுள்ளவர்களாயிருக்கிறார்கள். அதாவது, மேல் தேசத்தாரைவிட ஹிந்து தேசத்தாரை பாவத்தைப்பற்றி உணர்த்துவது வெகுகஷ்டம். மேல் தேசத்தாரில் அநேகர் நிஜமான கிறிஸ்தவர்களாயிருப்பதுமல்லாமல், எல்லாரும் கிறிஸ்துவின் போதனைகளில் முக்கியமான கொள்கைகளை பரிஷ்காரமாய் அறிந்தவர்களாயுமிருக்கிறார்கள். ஆதலால் பாவத்தின் அறிவு அவர்களுக்கு இல்லாவிட்டாலும் அதை அவர்களில் உண்டாக்குவது அவ்வளவு கஷ்டமான காரியமல்ல. இவ்வித அறிவு இருப்பதினால் சுவிசேஷத்தில் வெளிப்படுத்தியிருக்கிற பாவ விமோசனம் அடையவேண்டுமென்கிற விருப்பமுண்டாகிறது. அதில்லாவிட்டால் அவ்வித விருப்பமும் வராது. இந்து ஜனங்கள் வேறே அபிப்பிராயங்களுள்ளவர்களாகி பாவஞ்செய்வது மனுஷருக்கு இயல்பாயிருக்கிறதென்று ஒத்துக்கொண்டாலும், ஒருவேளை அதைக்குறித்து விசனமும் வெட்கமுமடைகிறதில்லை. பாவிகளாயிருக்கிறோம், பாவவிமோசகன் நமக்கு வேண்டும் என்கிற விஷயங்களில் அறிவையுண்டாக்க வேண்டுமென்பதே நம்முடைய கோரிக்கை. மேலே கண்டிருக்கிற அந்த விசனமும் வெட்கமும் அவர்களுக்கு உண்டாகுமென்று நிச்சயிப்பதற்கு இடமில்லாவிடினும், நம்முடைய பிரசங்கத்தைக் கேட்கிறவர்கள் தங்கள் குணங்குறிகள் குறைவுள்ளவைகளாயிருக்கின்றனவென்றும், அவைகளைச் சம்பூரணமாக்குகிறவர் இயேசுகிறிஸ்து



வேயொழிய வேறே யாரும் இல்லையென்றும் தெரிந்துகொள்ளும்படி செய்யவேண்டும்.

இக்காரியங்களைப் போதிப்பது எப்படியென்றால், 'சிநேகிதரே, நீங்களெல்லாரும் பாவிகளாயிருக்கிறீர்கள். மனந்திரும்பாவிடில் நீங்களெல்லாரும் தப்பாமல் நரகத்தில் விழுந்து முடிவில்லா சங்கடத்தை அநுபவிப்பீர்கள்' என்று கூறுவதினால் பாவத்தைப்பற்றிய அறிவு என்றைக்கும் பிறக்காது. மனுஷரில் உண்டாகவேண்டிய சற்குணங்களின் விஷயத்தைத் தக்கபடி விவரிப்பதினால் மனுஷரில் சாதாரணமாய்க் காணப்படுகிற கெட்டவிஷயத்தை நிவிர்த்திசெய்யப் பிரயத்தனப்படுவதைவிட, இன்னின்ன சற்குணங்கள் என்னிடத்தில் இல்லை, இன்னின்ன கெட்டகுணத்தை நான் செய்திருக்கிறேன் என்கிற அறிவுண்டாகிறதுண்டு. உபதேசியான பிரசங்கி, நீ இன்னின்ன பாவத்தைச் செய்பவன் என்று சொல்வதைப்பார்க்கிலும் அவனுடைய வார்த்தைகளைக் கேட்கிறவர்களுடைய மனதில் கேட்கும்படிசெய்கிற நான் இன்னின்ன பாவங்களைச் செய்கிறவன் என்கிற சாட்சி பலமுள்ளதாய் இருக்கிறது. இத்தன்மையான சாட்சி உத்தமமானது, அத்தன்மையான சாட்சி அதமமானது என்றும், நலமானதைச் செய்யவேண்டும் கெட்டதைச் செய்யலாகாது என்றும் போதித்துஸ்தாபிப்பது எப்படி? இவ்வுலகத்திலிருக்கிற ஒவ்வொரு ஆளுடைய மனதும் இப்போதனைக்குச் சாட்சி கொடுக்கிறது. இல்லாதபட்சத்தில் நாம் அதை ஸ்தாபிப்பது கூடாமை.

## Jesus' Teaching about God

*Adapted from 'The Jesus of History'*

**By T. R. Glover**

## கடவுளைப்பற்றி இயேசுநாதருடைய உபதேசம்

கடவுளைப்பற்றி இயேசுநாதர் மனிதருடைய எண்ணங்களை முற்றிலும் மாற்றியிருக்கிறார். இதைப்பற்றி நாம் யோசித்தால், இது மிகவும் வியக்கத்தக்கதென்று உணர்வோம். அவர் ஜீவித்த காலமுதல் கடவுளைப்பற்றிய எண்ணம் மனிதருக்கு வேறே விதமாகத் தோன்றியிருக்கிறது. கடவுளைப்பற்றிய எண்ணம் இயேசுவுக்கு எவ்வளவு சந்தோஷங்கொடுத்தது! அந்தச் சந்தோஷத்தை அவர் தம்மைப் பின்பற்றுகிறவர்களுக்கும் கொடுத்திருக்கிறார். அதற்கும் மற்ற

யார்க்கத்தாருக்குங் கடவுளைப்பற்றி இருக்கிற உணர்ச்சிகளுக்கும் அதிக வித்தியாசமுண்டு. கிறிஸ்துமதம் சந்தோஷ மதம். புதிய உடன்படிக்கைப் புஸ்தகம் ஆனந்தரசம் நிறைந்துள்ளது.

இயேசுநாதர் கடவுளைக்குறித்து ஒழுங்கான பிரிவுகளுள்ள ஒரு சாஸ்திரத்தை நமக்குக் கற்றுக்கொடுக்கவில்லை. சாஸ்திரத்தையல்ல, கடவுளையே நாம் ஆராய்ந்து அறிவதும் கடவுளோடு நாம் நெருங்கிப் பழகுவதும் அவருடைய கருத்து. கடவுள் இருக்கிறார் என்பதை அவர் மூலாதாரமான சத்தியமாக வைத்துக்கொண்டு,' அதற்கு இசைவாக நடந்து, கிரியையினாலும் ஜீவியத்தினாலும் கடவுளை வெளிப்படுத்தினார்.

'நீ கடவுளைப்போல் யோசியாமல், மனுஷரைப்போல் யோசிக்கிறாய்' என்று பேதுருவைக் கண்டித்தார். கடவுளுடைய கொள்கை வேறே, மனுஷருடைய கொள்கை வேறே. மனுஷர் எதை மிகவும் கனம்பண்ணுகிறார்களோ, கடவுள் அதை அருவருக்கிறார் (லூக். $16^{15}$). கடவுள் பார்க்கிற பிரகாரமாய்ப் பார்க்க மனிதரும் கற்றுக்கொள்ளவேண்டுமாம். நாம் அப்படிப் பார்க்காமலிருக்கிறது நம்முடைய மனதின் விசேஷித்த குறைவு. கடவுளைத் தரிசித்து, உணர்ந்து, அனுபவித்து, கடவுளுக்கேற்ற விதமாய் எல்லாவற்றையும் புதிதாய்ச் சிந்திக்கச் சொல்லுகிறார்.

கடவுள் நமக்குச் சமீபித்தவர். மனிதர் எப்படிக் கடவுளை மறக்கக்கூடும் என்று மிகவும் ஆச்சரியப்பட்டார். 'கடவுள் உலகத்தை உண்டுபண்ணிப் போய்விடவில்லை' என்று பரி. ஆகுஸ்தீன் சொன்னதற்கு நேர்விரோதமாக, கடவுள் உலகத்தை உண்டுபண்ணிவிட்டு, வெகுதூரம் போய்விட்டார் என்று நாம் நம்முடைய நடக்கையால் பிரசித்தஞ்செய்கிறோம். நாம் பிரார்த்தனை செய்யும்போது கடவுளோடு நாம் முகமுகமாய்ச் சம்பாஷணை செய்கிறதில்லை. மின்சாரக் கம்பி மூலமாய்ச் சில மைல் தூரம் பேசலாமென்றாலும், கம்பி அளவற்ற நீண்டதும் இலேசாய்க் கெட்டுப்போகக் கூடியதாகவுமிருந்தால் அதின்மூலமாய் வர்த்தமானங்கள் எப்படித் தெளிவாய் வரும்? நாம் பண்ணுகிற ஜெபம் அடிக்கடி நீண்டதும் கெட்டுப்போனதுமான கம்பிமூலமாய் நடக்கிற சம்பாஷணைபோலிருக்கிறது. 'இல்லை, கடவுள் கிட்டவே இருக்கிறார்' என்கிறார் இயேசுநாதர். இங்கே தான் இருக்கிறார். அவரிடம் போவதற்கு ஆசாரியனுடைய உதவி வேண்டியதில்லை. கடவுளே தம்மிடம் சேருவதற்கு அவசியமானதை எல்லாம் செய்வார். உன் சாதாரண ஜீவியத்துக்கடுத்த எல்லா விஷயங்களிலும் அவர் இருக்கிறார். அன்னவஸ்திரம், அன்றாடகத் தொழில், தாய், தகப்பன், மகன், மனைவி, சிநேகிதன், எல்லாரிலும்



எல்லாவற்றிலும் அவர் கலந்திருக்கிறார். அவர் எல்லாவற்றையும் அறிவார்; எல்லாவற்றிலும் கரிசனை எடுப்பார்; எல்லாவற்றையும் தாமே பிரியத்தோடு பார்த்துக்கொண்டுவருவார். அவருடைய ஆலோசனையைத் தள்ள மனிதருக்கு எப்படி மனம் வரக்கூடும்? (லூக். $7^{30}$.) கடவுளை அவர்கள் முற்றிலும் மறந்துபோகிறது எவ்வளவு ஆச்சரியம்! மனிதருடைய மந்தபுத்தி அவருக்கு எப்போதும் அதிசயத்தை விளைத்தது. (மாற்கு $8^{17}$.) லூக்கா $12^{16}$ இல் சொல்லியிருக்கிற ஐசுவரியவானை மூடன் என்று சொல்லுகிறோம். நாம் அவனைப்போலவே இருக்க அவனை மூடன் என்று சொல்வது அவ்வளவு நியாயமல்ல. ஆயினும் அவனுடைய தப்பிதம் என்ன என்று நாம் தெளிவாய்ப் பார்க்கலாம். கடவுளை எப்படியோ மறந்தான். ஆகையால் கடவுள் பேசினபோது திடுக்கிட்டான். கடவுள் அறிவார் என்று இயேசுநாதர் ஓயாமல் போதித்துக்கொண்டேயிருந்தார். கடவுளுக்கு நம்மைப்பற்றி அக்கறை உண்டு; நமக்காக எல்லாம் செய்வார்; அதைச் செய்கிறதற்கு அவருக்கு மட்டற்ற சக்தியுண்டு.

கடவுள் அறிவார். 'உங்கள் தலையிலுள்ள மயிரெல்லாம் எண்ணப்பட்டிருக்கிறது' (மத். $10^{30}$). 'உங்கள் பிதா அறிந்திருக்கிறார்' (லூக். $12^{30}$). 'அந்தரங்கத்தில் பார்க்கிறார்' (மத். $6^{4}$). 'உங்கள் இருதயங்களை அறிந்திருக்கிறார்' (லூக். $16^{15}$). உங்கள் போராட்டங்களையும் கவலைகளையும் அறிவார். நீங்கள் எவ்வளவு விலையேறப்பெற்றவர்கள் என்று அவருக்குத் தெரியும். உங்கள் எல்லா காரியங்களும் அவருக்கு நன்றாய்த் தெரியும். 'தேவனாலே எல்லாம் கூடும்' (மத். $19^{26}$). அவர் தம்முடைய பிள்ளைகளினிமித்தம் செய்யமுடியாததும் மனமில்லாததும் ஒன்றுமே இல்லை. தகப்பன் பிள்ளைக்குச் சாப்பாட்டைக் கொடுக்கமாட்டாரா? கடவுள் நன்மையானதைக் கொடாமல் இருப்பாரா? (மத். $7^{11}$.) ஜீவனைக்கொடுத்தவர் உணவைக் கொடுக்கிறது கஷ்டமா? ஜீவனைக் கொடுப்பதா, உணவைக் கொடுப்பதா கஷ்டம்? (லூக். $12^{27}$.) கடவுள் புஷ்பங்களிலும் பிரியப்படுகிறவர். அவைகளை வளரச்செய்து, அவைகளின் நிறத்தைப்பற்றி யோசிக்கிறார். அதினால்தான் சாலொமோன் முதலாய் தன் சர்வமகிமையிலும் அவைகளுக்குச் சமானமானவர் அல்ல. கூட்டிலிருக்கும் எல்லாக் குஞ்சுகளும் கடவுளுக்குத் தெரியும். நேற்று இருந்ததற்கு இன்று ஒன்று குறைவு என்று கவனிக்கிறார். (மத். $10^{29}$.) அவைகளுக்காகக் கவலை எடுக்கிறவர் உங்களுக்காகக் கவலை எடுக்கிறது அதிக நிச்சயம். 'நீங்கள் அநேக குருவிகளைக்காட்டிலும் விசேஷித்தவர்கள்' (மத். $10^{31}$).

மேலும்; கடவுள் மனுஷருடைய ஜீவனைக்குறித்து ஆதியோடந்தமாய் ஆலோசித்து, அதற்கு அவசியமான சகல ஏற்பாடுகளையும் பண்ணியிருக்கிறார். கலியாணத்தைத் திருஷ்டாந்தமாகப் பாருங்கள். கலியாண சம்பந்தத்தால் நம்மில் அநேகருக்கு வந்த நன்மைகளைக் கணக்கிடக்கூடுமோ? அவற்றை எல்லாம் அவரே யோசித்து ஏற்படுத்தினார். ஆகையினாலே இயேசுவின் விரோதிகள் கலியாணத்தைக்குறித்து அவரிடம் கேள்வி கேட்டபோது, அவர் மனிதருடைய வழக்கங்களையும் பிரமாணங்களையும் பேசாமல் விட்டுவிட்டு, கலியாணத்தை முதலில் ஏற்படுத்திய கடவுளின் நோக்கத்தையே எடுத்துக் கூறினார். அல்லது சாப்பாட்டைப் பாருங்கள். அதைக் கொடுக்கிறவர் கடவுள். 'அவர் எதைக்கொடுக்கிறாரோ அது சுத்தமாயிருக்கும்' (லூக். 11[41]). நம்முடைய பரமபிதா நமக்குச் சாப்பாட்டைக் கொடுத்திருக்கும்போது இதையாவது அதையாவது சாப்பிடுவது தீட்டு என்று சொல்லத்தகாது.

(இன்னும் வரும்.)

## Why we should study Church History.

### திருச்சபைச்சரித்திரத்தால் நாம் படிக்கக்கூடிய பாடங்கள்

1. தனியாட்களுக்கு மாத்திரமல்ல, மனுஷ ஜாதிக்கும் ஜீவிய சரித்திரமுண்டு. அந்தச் சரித்திரத்தில் கடவுள் எப்படி மனிதரை நடத்தியிருக்கிறார் என்று பார்க்கலாம். கடவுள் உலகத்தை நடத்துகிறாரென்றால், உலகத்தில் நடக்கிற சம்பவங்களைக்கொண்டு அவர் தம்முடைய சித்தத்தை வெளிப்படுத்துவார். இந்தியா தேசத்தார் இதை நம்பாமலிருந்தபடியால் அவர்கள் உலகசரித்திரத்தை மதிக்காமல், நடந்த சம்பவங்களைச் சரித்திர புஸ்தங்களில் அவ்வளவாக எழுதவில்லை. நமக்கோ உலகசரித்திரத்தை அசட்டைபண்ணுவது பாவம்.

அனுபவமுள்ள ஒரு மனிதன் அனுபவமில்லாதவனைக் காட்டிலும் பிரயோஜனமான வேலைசெய்வான். அதேபிரகாரமாக நாம் திருச்சபைச் சரித்திரம் அறிந்தால், சபைக்கு வந்த அனுபவத்தால் பலனுள்ள வேலைசெய்ய உதவி பெறுவோம். கடந்துபோன துக்க நாட்களிலும் சந்தோஷ நாட்களிலும் திருச்சபை அநேக நல்ல பாடங்களைக் கடவுளிடத்தில் கற்றிருக்கிறது. அந்தப் பாடங்கள் நம்முடைய விஷயத்தில் ஏன் வீணாய்ப் போகவேண்டும்? திருச்சபைச் சரித்திரத்தைக் கருத்தாய் வாசித்துச் சிந்திப்போமாயின், நாம் வல்லமையில் வாலிபராயிருந்தும், அனுபவத்தில் வயோதிபராகக்கூடும்.



௨. மேலும், நாம் திருச்சபைச் சரித்திரத்தைப் படிக்காவிட்டால், இக்காலத்துச் சபையை அறிந்து அதைப்பற்றிச் சரியாய்த் தீர்மானங்களைப் பண்ணுவது எப்படி? இன்றைக்கு இருக்கிற திருச்சபைக்கும் ஆதிச்சபைக்கும் பூரண வித்தியாசமுண்டு. இன்றைக்கு இருக்கிற பெரிய கட்டிடங்கள், அழகிய ஆராதனை ஒழுங்குகள், நானாவிதமான சபைச் சங்கங்கள், சபை நிதிகள், சபைப் பிரமாணங்கள், சபை உத்தியோகங்கள், இவைகளை எல்லாம் கவனித்தால், இப்போதுள்ள சபைக்கும், ஆதியில் ஒரு மேல் அறையில் கூடின அந்த நூற்றிருபது பேர் அடங்கிய சீஷர் கூட்டத்துக்கும் எவ்வளவு வித்தியாசம்! பின் என்ன? இக்காலத்துச் சபை எல்லாம் தப்பிதமா? ஆதிச் சபையில் எது இல்லாமல் இருந்ததோ, அதை நாம் இக்காலத்துச் சபையிலிருந்து முற்றிலும் நீக்கவேண்டுமோ? இல்லவே இல்லை. ஒரு செடிக்கும் அதின் விதைக்கும் அதிக வித்தியாசமிருந்தாலும், அந்தச் செடி அந்த விதையிலிருந்து முளைத்திருக்கிறது. நாம் திருச்சபைச் சரித்திரத்தில் காண்கிறது ஒரு விதையின் வளர்ச்சி. ஆதிச்சபை அந்த விதை. அது ரோம ராஜ்யமாகிய ஒரு விசேஷித்த மண்ணில் விதைக்கப்பட்டது. சில இடங்களில் நல்ல மண் இல்லாததால் விளைவு குறைவாய் இருந்தது, சில இடங்களில் மண் செடியை மாற்றி அதைக் கெடுத்தது.

மாமரத்தில் தொங்குகிற ஒரு பழத்தைப் பார்த்தவுடனே, நல்ல பழமா கெட்ட பழமா என்று சிலருக்கு எப்படித் தெரிகிறது? மாமரங்களின் வளர்ச்சியையும், அவைகளின் பல ஜாதிகளையும், ஒட்டவைக்கிற முறையையும் கவனமாய்ப் பார்த்ததினாலேதான். இக்காலத்துத் திருச்சபையின் காரியாதிகளைப்பற்றி நாம் அப்படித்தான் தீர்மானிக்கக்கூடியவர்கள் ஆகவேண்டும். சில நூற்றாண்டுகளில் சபையாகிய மரத்துக்கு வேறே விதமான கிளையின் நூதனமான சாரம் ஒட்டவைத்திருந்ததைப் பார்ப்போம். இன்னுஞ் சில காலங்களில் சபை வளர்ந்தோங்கியதையும், சில காலங்களில் பாழாய்ப் போனதையும் நாம் பார்த்து, சபையின் மெய்வளர்ச்சிக்கு எது நல்லதென்றும் எது கெட்டதென்றும் கண்டுபிடிப்போம்.

3. எதிர்காலத்தை நாம் நோக்கும்போது திருச்சபைச்சரித்திர ஞானம் நமக்கு அவசியம். இந்தியா, இலங்கைத் தேசங்களின் உள்ள திருச்சபை மேற்குத் தேசங்களிலுள்ள சபைகளைப்போலவே இராது. இதுவரைக்கும் நாம் மேல்தேசத்துச்

சபைகளைப் பார்த்து அதைப்போலவே திட்டமாக நடந்தோம் என்றாலும், காலஞ் செல்லச்செல்ல இந்தியா தேசத்துச் சபையின் ரூபம் மாறிப்போம். அப்போது உண்டாகும் கேள்விகளுக்கு விடையறிய நமக்கு வழிகாட்டி வேண்டுமே. திருச்சபைச்சரித்திரம் ஒரு வழிகாட்டி. பூர்வீகத்தில் நடந்தது அடிக்கடி திரும்ப நடக்கும். இரண்டாம் நூற்றாண்டிலிருந்த எபேசு பட்டணத்துச் சபை, அநேக விஷயங்களில் இப்போதுள்ள சென்னபட்டணத்துச் சபையைப் போல் இருந்தது. ரோமாபுரியில் அப்போது கிறிஸ்தவர்களுக்கு இருந்த தடைகள் கல்குத்தாவில் இப்போது இருக்கும். அந்தியோகியா சபைக்குக் கிடைத்த சில அனுகூலங்களை கொழும்புச் சபையில் பார்க்கலாம். அநேக காரியங்களில் வேற்றுமையிருந்தும், அநேக காரியங்களில் ஒற்றுமையுண்டு. ஆகையால் திருச்சபை அப்போது செய்ததை நாம் இப்போது கண்டு, நம்முடைய காலத்தில் செய்யவேண்டியது என்ன என்று தெரிந்துகொள்ளலாம். அது மாத்திரமல்ல, நமது காலத்தில் கிறிஸ்துமதத்தை விரோதிக்கிறவர்களில் அநேகர் பூர்வீக விரோதிகளின் சந்ததியாரே. எகான்மவாதிகளை நாம் சந்திக்கிறோமா? அவர்களுடைய கொள்கையுள்ள அநேகர் அலெக்ஸந்திரியாவிலிருந்தார்கள். இயேசுகிறிஸ்து மெத்த நல்லவர், ஆனாலும் மனுஷனேயன்றிக் கடவுளல்ல என்று சொல்லுகிறவர்கள் நம் மத்தியில் இருக்கிறார்களா? அந்தியோகியாவிலும் அப்படிப்பட்டவர்கள் இருந்தார்கள். பிரமஞானிகளை (Theosophists) நாம் கண்டு பேசவேண்டுமோ? அவர்கள் கொள்கைகள் அநேகம் இரண்டாம் மூன்றாம் நூற்றாண்டுகளிலிருந்த னோஸ்திகருடைய (Gnostics) கொள்கைகளே. சுருங்கச் சொல்லின், திருச்சபை கடந்த நாட்களில் பிரயாசமாகிய கிரயத்தைக் கொடுத்து அனுபவமாகிய நன்மையை வாங்கியிருக்கிறது. நாம் திருச்சபைச் சரித்திரத்தைக் கருத்தாய் வாசியாவிட்டால் அதே கிரயத்தை அனாவசியமாய்த் திரும்பக் கொடுத்துப் பல தப்பிதங்களில் விழுவோம்.

4. பூர்வீகத்திலிருந்த பக்தர்களையும் இரத்தச் சாட்சிகளையும் சாதாரணமான மனிதரையும் நாம் அறிவது நம்முடைய பக்திக்குப் பெரிய நன்மை. அவர்கள் நம்மைப்போலச் சோதிக்கப்பட்டு, நமது உலகத்தைப்போன்ற உலகத்தின் மத்தியில் ஜீவித்து, நம்முடைய ஆண்டவரை நம்பி ஜெயமடைந்தார்கள். அவர்கள் நமக்குச் சிநேகிதராகி, நம்மை உற்சாகப்படுத்த ஆயத்தமாயிருக்கிறார்கள்.

கிறிஸ்து சபை வல்ல
சேனை போன்றதாம்
சுத்தர் சென்ற பாதை
செல்கின்றோமே நாம்.



# Notes for Addresses in Campaign Week

**By the Rev. H.A. Popley, B.A.**

## சுவிசேஷப் படைமுயற்சி வாரம்

சுவிசேஷப் படைமுயற்சி வாரத்தில் நாம் உபயோகிக்கிறதற்காகப் பாப்லி ஐயர் (Rev. H. A. Popley) சில குறிப்புக்களையும் பாட்டுக்களையும் பிரசுரித்திருக்கிறார். பிரசங்கக் குறிப்புக்களில் சில இங்கே கொடுக்கிறோம். முழுப் புஸ்தகத்தையும் சென்னபட்டணம் C. L. S. புஸ்தகசாலையில் வாங்கலாம். அதின் கிரயம், ஒன்றுக்கு அரை அணா, நூற்றுக்கு இரண்டரை ரூபா.

### I. இரட்சிப்பைப் பெறவேண்டியவர்கள்—பாவிகள்.

பாவம் என்றால் சன்மார்க்கக் குறைவைக் குறிக்கும். கடவுள் மனிதரை உண்டாக்கின நோக்கத்தை நிறைவேற்றாமல் குறைவுபட நடத்தலே பாவமாம்.

பின்வரும் உபமானங்கள் பிரயோஜனமுள்ளவை.

(1) பாவிகள் ரோகிகள்.

பாவம் கொள்ளைநோயைப்போலவும், குட்டநோயைப்போலவும், க்ஷயரோகம்போலவும் ஓர் ஆன்மநோய் என்றறிக. அது வியாதியைப்போலப் பற்பல வகையுடையது.

சிலரிடத்தில் குஷ்டரோகிகளின் புண்களைப்போலவும் அம்மையின் தழும்புகள்போலவும் வெளிப்படையாயிருக்கும். வேறு சிலரிடத்திலோ அது க்ஷயரோகத்தைப்போலவும் பிளவைபோலவும் உள்ளடங்கி மறைந்து வளரும். சிலசமயத்தில் அது விஷபேதி, பிளேக் நோய்களைப்போல் சீக்கிரம் ஒருவனைக் கொல்லும்.

பாவம் எல்லா நோய்களைப்போலவும் ஒரு மனிதனது திறமையைக் குறைத்து, கடவுளது நோக்கத்தைத் தடுக்கின்றது. ரோ. 1: 18-32 வாசிக்க.

பாவம் ஆன்மாவில் துக்கத்தையும் உலகத்தில் நாசத்தையும் உண்டுபண்ணுகிறது.

அநேகவகைப் பாவங்கள் தொற்றுநோயைப்போல் ஜனசமுதாயத்தில் விரைவாய் ஓடிச் செல்லுகின்றன. இவைகளில் காமவிகாரம், சூதாடல், உதாசீனப்பேச்சு, வஞ்சகம் முதலியவை சில. பாவம் சிலசமயத்தில் விஷபேதியைப்போல் ஓரிடத்தில் ஒட்டிக்கொண்டிருந்து மறைந்துநிற்கின்றது.

அது கொடுமையை வெளிப்படுத்தாததினாலேயே இல்லை என்று சொல்வதற்கு இடமில்லை. பாவம் ஆன்ம நோயாதலால் மனோவேகமும் சமயத்திற்குத் தகுந்த வேஷம் போடக்கூடிய சக்தியுமுடையது.

(2) பாவிகள் அடிமைகள்.

பாவம் செய்வது பாவத்திற்கு அடிமைத்தனம் உண்டாக்கும். யோ. 8: 34.

பாவம் கொடுங்கோல் மன்னன்.

கொடுங்கோலரசின் சரிதை ஒன்றைத் தெரிவித்துப் பாவத்தின் வரலாற்றைக் காட்டலாம்.

பெல்ஜியத்தில் கொடுங்கோலரசு புரிந்த ஜெர்மன் அதிகாரத்தைக் குறித்துப் பேசலாம்.

பாவம் முதல்வரும்போது சிரித்துச் சிநேகிதன் என்று நடித்து, பின்போ தன்னைக் கொடுங்கோலரசனாக வெளிப்படுத்தும். ஒரு கொடியானது வேறே மரத்தில் படர்ந்து, அதை அலங்காரப்படுத்திக்கொண்டு, கடைசியாக மரத்தின் சாரம் முழுவதும் தின்று மரத்தைக் கெடுக்கிறதுபோலப் பாவம் ஒருவனது ஆன்மாவைச் கெடுக்கும்.

பாவம் ஒருவனைப் பற்றிப் பிடித்துக்கொண்டேயிருந்து கடைசியில் அவனைத் தன் வசப்படுத்திக்கொள்ளும்.

வேங்கை வரிப்புலிக்குத் தீர்த்த விடதாரி
யாங்கதனுக் காகார மானாற்போல்

பாவம் கடைசியிற் கொல்லும்.

சூதாடல் முதலர்வது ஒருவனுக்கு மனோகரமான விளையாட்டாகத் தோன்றிப் பின்போ அவனது மனதை யடக்கிச் சூதாடாமலிருக்க முடியாதபடியே அவன் குணத்தைக் கெடுக்கின்றது.

அதற்குப்பிறகு குடும்பத்தையும் தேசத்தையும் கெடுக்கும். இதற்கு நளமகாராஜாவின் சரிதை போதுமான திருஷ்டாந்தம்.

இன்பமோ சிறிதாகும் ; இதில்வரும்
துன்பமோ கரையில்லாத் தொடுகடல் என்றும்

முற்பயக்கும் சின்னீர வின்பத்தின்
பிற்பயக்கும் பீழை பெரிது என்றும்

முன்னோர் பாடினதை எடுத்துரைக்கலாம்.

சில சமயம் ஒருவன் சுயாதீனமுள்ளவனாகத் தோன்றினாலும் அவன் ஏதாமொரு இரகசிய கெட்ட வழக்கத்திற்கு அடிமையாயிருக்கலாம். சில குடிகாரர் இப்படிப்பட்டவர்கள். உதாசின எண்ணங்



களையும் கதைகளையும் சிரித்துக்கேட்டாலும் கடைசியாக அவைகள் ஒருவனது மனதில் காமவிகாரத்தை உண்டாக்கி ஒருவனைப் பூரணமாய்ச் சிற்றின்ப விஷயங்களுக்கு அடிமையாக்கும். இந்த அரசு மிகவும் கொடுங்கோலரசு.

தாவீது செய்த பாவத்தை உதாரணமாகக் காட்டலாம். ருஷியா சக்கரவர்த்தி எல்லா ராஜாக்களிலும் மிகவும் சுதந்தரமுள்ள ராஜாவாகக் காணப்பட்டாலும் உண்மையாக அதிகாரமில்லாமல் பற்பல மந்திரிகளுக்கும் சேவகர்களுக்கும் தேசவழக்கங்களுக்கும் ஐடங்கி நடக்கவேண்டியவர். கடைசியாக ஒரு மந்திரி வந்து நீர் அரசை விட்டுவிடவேண்டுமென்று சொல்ல, அவர் அதற்கும் கீழ்ப்படிந்து அரசையும் விட்டுவிட்டார். ஆதியில் சிங்காசன மேறின போது மனதில் வெகு சீலமான காரியங்கள் அநேகம் கருதி அவைகளை நடப்பிக்கப் பிரயாசைப்பட்டபோது வல்லமையின்றி மனம் தளர்ந்து சோர்ந்துபோயிற்று. அரசைவிட்ட இக்காலத்திற்றான் அவர் சுயாதீனர்.

டில்லிச் சக்கரவர்த்தியாகிய ஜிஹாங்கீர் ராஜா இந்தியா முழுவதையும் அரசாண்டும் மதுபானத்திற்கு அடிமையாயிருந்தான்.

(3) பாவிகள் கடவுளுக்குப் பகைஞர்.

இவர்கள் மனதிலும் சித்தத்திலும் கடவுளுக்கு விரோதமுள்ளவர்கள். இவர்களுடைய நோக்கங்களும் எண்ணங்களும் தன்னயமும் லௌகீகமுமுள்ளவை. தங்களிடத்திலும் மற்றவர்களிடத்திலும் கடவுள் சித்தம் நிறைவேறவொட்டாமல் அதை எதிர்த்து நிற்கிறார்கள். யோ. 8 : 44 வாசிக்க.

எபேசு பட்டணத்திலுள்ள விக்கிரக ஆராதனைக்காரர் பவுல் அப்போஸ்தலரை எதிர்த்து அவரைக் கொல்ல யோசித்ததை உதாரணமாக எடுக்கலாம். அப். 19 : 23-41.

பாவிகள் கடவுளுக்குக் கீழ்ப்படிந்து நடக்க விரும்புகிறதில்லை.

திராட்சைத்தோட்டத்தில் வேலைசெய்த குடியானவர்களைப்போல, அவர்கள் கடவுளுக்கு ஆன்மீக மேல்வாரம் செலுத்தமாட்டார்கள். லூக். 20 : 9-17 பார்க்க.

மனிதர் கடவுளின் சித்தத்தைக் கவனியாது நடக்கிறது மாத்திரமல்ல, வேண்டும் என்று அவருக்கு நேர்விரோதமாகவும் நடக்கிறார்கள். கடவுளுக்கு விரோதிகள் அவரது ஆதிபத்தியத்தை ஏற்றுக்கொள்ளாமல் அவருக்கு விரோதமாய்ப் பற்பல விஷயங்களில் கலகம் பண்ணிப் பகை எழுப்பிவிடுகிறார்கள்.

இந்தியாவின் வடமேற்கு எல்லைக்குச் சமீபத்திலுள்ள ஜாதிகளை உதாரணமாகக் காண்பிக்கலாம். இந்த ஜாதியார் அநேகர் கடும்

வழிகளெல்லாம் பிரித்தானிய ராஜாங்கத்திற்கு விரோதமாய்த் தொந்தரவு செய்து அடிக்கடி கலகம் எழுப்பிவிடுகிறார்கள். பிரித்தானிய ராஜாங்கத்தார் அவர்களை அடக்க இடைக்கிடையே சைனியங்களை அனுப்புகிறார்கள்.

மனிதர் இப்படி விரோதமுள்ளவராதலால் கடவுளின் தண்டனைக்குட்பட்டவர்களாவார்கள்.

(4) பாவிகள் ஆவிக்குரிய விஷயத்தில் மரித்தவர்கள்.

பாவத்திலும் துன்மார்க்கத்திலும் அவர்கள் மரித்தவர்கள். எபே. 2 : 1 வாசிக்க.

இவர்கள் தேவபக்தியில்லாமல் நடக்கிறதால் உண்மையாய் உயிரற்றவர்கள். எபே. 2 : 12 பார்க்க.

முடிப்ப முடித்துப்பின் பூசுவ பூசி,
உடுப்ப வுடுத்துண்ப உண்ணு—இடித்திடித்துக்
கட்டுரை கூறின் செவிகொளா கண்விழியா
நெட்டுயிர்ப் போடுற்ற பிணம்.

லௌகிகத்திலும் சிற்றின்பத்திலும் மூழ்கி நடக்கிறவர்கள் ஆன்மீகவிஷயத்தில் உயிரற்றவர்கள். 1 தீமோ. 5 : 6 பார்க்க.

கடவுளிடமே ஜீவன் உண்டு என்பதால் அவரோடு சம்பந்தப்பட்டாற்றான் ஒருவனுக்கு உண்மையான உயிருண்டு, மற்றப்படி அவனுக்குற்றது போலியுயிர்.

பாவம் கடவுளையும் மனிதனையும் பிரித்து, அந்தச் சம்பந்தத்தை முறிக்கிறது. ஆகையால் பாவத்திற்கு அடங்கி நடக்கிறவனை உயிருள்ளவனென்று யதார்த்தமாய்ச் சொல்லமுடியாது.

தெற்றிப்போன மகன் செத்தவன் என்று தகப்பனால் எண்ணப்பட்டான். உயர்குலத்தில் பிறந்த ஹிந்து ஒருவன் கிறிஸ்தவனானால் தன் குலத்திற்கும் குடும்பத்திற்கும் மரித்துப்போனவன் என்று பெரும்பான்மையாய் மதிக்கப்பெறுகிறான். சிலசமயத்தில் அப்படிப்பட்டவன் உயிரோடிருந்தும் கருமாதியெல்லாவற்றையும் நடத்திவிடுகிறார்கள். அதுபோல் ஒருவன் கடவுளை மறந்து பாவத்தின் அடிமையாய்ப்போனால் அவனுக்கு உண்மையான உயிரில்லை என்று சொல்லவும் நினைக்கவும் வேண்டும். கிறிஸ்துவை யறியாதவன் உயிரற்றவன். 1 யோ. 5: 12.

ஒரு மரத்திலிருந்து கொம்பை அறுத்தால் அக்கொம்பிலுள்ள உயிரெல்லாம் அற்றுப்போம்.

C. L. S. PRESS, MADRAS—1917

REGISTRAR OF ... 9 - OCT 1917 MADRAS

No. 137. அக்டோபர் 1917

# வேதியர் விளக்கு

## Paul the Dauntless

By Basil Mathews, M.A.

Translated by Pandit J. S. Masillamany

பேசில் மத்யூஸ் ஆசிரியர் இயற்றிய

### அஞ்சா நெஞ்சராகிய பவுல்

(தொடர்ச்சி)

இது கிழக்கத்து நாடுகளெல்லாம் இளைப்பாறும் நேரமாயினும், காளைப்பருவமுள்ள சவுல் காரியசித்தி பெறவேண்டிய நகரம் கண்ணுக்குத் தோன்றவே பிரதான ஆசாரியனுடைய கைச்சாத்தும் முத்திரையுமிடப்பட்ட நிருபம் தமது சட்டைப்பைக்குள் இருக்கிறதா எனத் தடவிப் பார்த்துக்கொண்டு, எரிகிற சூரியனுக்கெதிரே தமது தலையைச் சிறிது சாய்த்துக்கொண்டு முன்னே சென்றார். நசரேயர் சவுக்காகிய இவரைத் தடுக்கக்கூடியது ஒன்றுமே இல்லைபோல் தோன்றினது. ஆயினும் இன்னும் இரண்டடி வைக்குமுன்னே அவருடைய ஜீவியத்தைமட்டுமல்ல, உலகசரித்திரத்தையும் மாற்றின அதி விசேஷ சம்பவம் இம்மலைச்சாரலிலேதான் நிகழ்ந்தது.

இங்கு சவுலுக்கு நேரிட்ட அனுபவம் மிக்க ஆச்சரியமுள்ள திருச்செயலாதலால், அவர் வாய்மொழிகளையே எடுத்துரைப்பது தகுதி.

“ஜடிதியாய் வானத்திலிருந்து பேரொளியுண்டாகி என்னைச் சுற்றிப் பிரகாசித்தது.

நான் தரையிலே விழுந்தேன். அப்பொழுது ‘சவுலே, சவுலே, நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய்?’ என்று என்னுடனே சொல்லுகிற ஒரு சத்தத்தைக் கேட்டேன்.

அதற்கு நான், ‘ஆண்டவரே, நீர் யார்?’ என்றேன்.

அவர் ‘நீ துன்பப்படுத்துகிற நசரேயனாகிய யேசு நானே’ என்றார்.

அப்பொழுது நான், 'ஆண்டவரே, நான் என்ன செய்வது உமது சித்தம்' என்றேன். அதற்கு ஆண்டவர், 'நீ எழுந்து தமஸ்குவுக்குப் போ. நீ செய்யும்படி நியமிக்கப்பட்டதெல்லாம் அங்கே உனக்குச் சொல்லப்படும்' என்றார்" என்பதே.

இதன்பின் சவுல் எழுந்து நின்று தம் கண்களைத் திறந்தபொழுது கண்கள் பார்வையற்றுப்போயின. தமஸ்குச் சமபூமி, எர்மோன் மலையின் வெண்முடி, கனிமரத் தோட்டங்களின் பசும்புற்றரை ஆகிய இவைகளெல்லாம் ஒழிந்தன. தம் கைகளை நீட்டித் தடவிப்பார்த்தார். ஆயினும் தாம் செல்லவேண்டிய வழி இது என்று தெரியவில்லை. சவுலோடு கூட வந்தவர்கள் அவர் வீணே தடவுகின்றதைக் கண்டு அவர் குருடாய்விட்டார் என்று அறிந்து அவருக்குக் கைலாகு கொடுத்து இன்னும் செல்லவேண்டியிருந்த பாதையில் அவரை நடத்திக்கொண்டு போனார்கள்.

இப்போது புறம்பேயுள்ளதொன்றையும் சவுல் காணக்கூடாமற் போயிற்று. ரஸ்தாவுக்குப் பக்கத்திலுள்ள காட்சிகளை அவர் காணமுடியவில்லை. இந்த ரஸ்தா நெடுக நடத்திக்கொண்டுபோகப்பட்டபொழுது வெள்ளுடை தரித்த யௌவன ரபியாகிய தம்மை வேடிக்கையாக உற்றுப்பார்த்த பட்டிக்காட்டுச் சனங்களையும் பார்க்கவில்லை. காணக்கூடியது ஒன்றே ஒன்று. தம்மைச் சாஷ்டாங்கமாய்க் கீழே விழுத்தின அந்த மகா பிரகாசத்தில் அது மனதில் சூட்டுக்கோலால் சூடுபோட்டு எழுதியதுபோல் அத்தனை ஆழமாய்ப் பதிந்துவிட்டது. இந்தத் தரிசனத்தைக் கண்டபின், பழையவைகள் எல்லாம் ஒழிந்தன. எல்லாம் புதியன ஆயின.

தம் புத்தியை மிக நம்பியிருந்த அவருடைய மனம் இப்போது நிகழ்ந்தவற்றை நினைத்தபொழுது சுழன்றது. நசரேயனாகிய யேசு உயிரோடிருக்கிறார்! நியாயசாஸ்திரியாகிய சவுலை, யௌவன ரபியாகிய சவுலை, பரிசேயர்கள் நம்ப ஆரம்பித்த சவுலை இந்த நசரேயர் ஜெயித்துவிட்டார்!

தம் கையைச் சட்டைப்பையிலிட்டபோது அங்கே ஒரு காகிதம் கையிற் றட்டுப்பட்டது. அது நசரேயர்களைச் (சீஷர்களை) சிறைச்சாலைக்கு அனுப்பும்படி சவுலுக்கு உதவிசெய்யவேண்டுமென்று பிரதான ஆசாரியன் ஜெபாலயத்தலைவர்களுக்கு எழுதிய நிருபம். இப்போது நிகழ்ந்த விஷயத்தைக் குறித்துச் சந்தேகமில்லை. சவுல் தாமே ஒரு நசரேயர் (சீஷர்) ஆகிவிட்டார். அவர் மறுபடியும் பிறந்தாயிற்று.

விழித்தும் காணாத கண்களோடு தமஸ்கு பட்டணத்துக்கு நேரே அவர் தட்டித்தடுமாறிச் செல்லும் அவ்வேளையில் பழைய காட்சி



யொன்று அவருடைய ஞாபகத்துக்கு வந்தது. எருசலேமின் மதில்களுக்குப் புறம்பே கோபாவேசங்கொண்ட ஜனங்களின் கூட்டம்! கூரிய கல்லுகளைப் பொறுக்கும்படி குனிகிற மனிதர்! கன்மாரி பொழியும் ஆகாசம்! வானத்தை அண்ணாந்துபார்க்கிற ஒரு முகம்! 'யேசுநாதா, என் ஆவியை ஏற்றுக்கொள்ளும்' என்று சொல்லுகிற ஒரு சத்தம்!—ஆகிய இவைகளே அவர் மனக்கண்ணுக்குமுன் தோன்றின காட்சிகள். சவுலாகிய தாம் பக்கத்திலே நின்றுகொண்டு ஸ்தேவானைக் கொலைசெய்கிறவர்களைத் தூண்டிவிட்டுக்கொண்டிருக்கிற மகா அகோரமான அந்தக் காட்சியை இப்போது தமக்குண்டாகிய பார்வையின்மையும் நீக்கக்கூடாமற் போயிற்று.

சவுலுடைய காலடிகளின் எதிரொலி இப்போது தாம் தமஸ்கு பட்டணத்தின் வளைவு வாசலுக்குக் கீழே வந்துவிட்டதாக அவருக்குத் தெரிவித்தது. அப்பாதையில் அப்புறமும் இப்புறமும் போகும் ஜனங்களுடைய காலடியோசையையும் பேசும் சத்தத்தையும் அவர் கேட்டார். இரதங்களின் சக்கரங்கள் உருளும் சத்தமும் குதிரைக் குளம்புகளின் ஓசையும் அவர் செவியில் விழுந்தன. அந்த வளைவு வாசலுக்குள் அவர் சென்றபோது வாயுமண்டலம் சற்றே குளிர்ந்திருப்பதைப் பரிச உணர்ச்சியால் உணர்ந்தார். அப்போது அவருடைய தோழர்கள் ஓரிடத்தில் நின்று அங்கிருந்த வீட்டுக்கதவைத் தட்டினார்கள். கதவு திறந்தது. தமஸ்கு பட்டணத்து யூதனொருவன் வீட்டுக்குள் அவரை நடத்திக்கொண்டு போனார்கள். அவ்வீட்டுக்காரன் பெயர் யூதா.

அந்த வீட்டின் மெத்தைமேலிருந்து எருசலேமுக்கு நேரே திரும்பி சாயங்கால ஜெபஞ் செய்கிற ஒருவன் எர்மோன் மலைக்கப்பால் சூரியன் அஸ்தமிக்கிறதைப் பார்க்கக்கூடும். தமஸ்குபட்டணத்தாருக்கு இப்போது சூரியாஸ்தமயனம். சவுலுக்கோ சூரியோதயத்துக்குமுன் நிகழும் சுக்கிரோதயமாம்.

## 8-ம் அத்தியாயம்

### முன்னே சென்றிராத புத்துலகம்

தரையில் ஒரு ஜமுக்காளம் விரித்திருந்தது. அதின்மேல் சவுல் அசைவற்று உட்கார்ந்திருந்தார். அவர் ஒன்றையும் பார்க்கமுடியவில்லை, ஒன்றும் சாப்பிடவும் இல்லை, ஒன்றும் குடிக்கவும் இல்லை. இப்பொழுது தான் தொடங்கிய தமது புது ஜீவியத்திலே தமது வழியைத் தடவிக் கண்டுபிடிக்கிறதற்குத் தொடங்கினார். அவர் இருந்த நிலைமையை இருள் என்போமோ, ஒளி என்போமோ? ஒளி வீசியதினால் அவருடைய கண்கள் கூச்சத்தால் மயக்கமடைந்திருந்தன.

அவர் குருடராய்ப் போய்விட்டார் என்று அங்குள்ளோர் சொல்லினர். அவருடைய கண்கள் பார்வையற்றிருந்தது வாஸ்தவமே. அப்படியிருந்தும் அவரோ தம் ஜீவியகாலத்தில் இப்பொழுதுதான் முதன் முதல் தாம் காண்கிறதாக உணர்ந்தார்.

நசரேயராகிய யேசுவின் முகம் ஒன்றே பார்வையற்ற அவருடைய கண்களுக்குமுன் வாடாத காட்சியாக ஜொலித்துக்கொண்டிருந்தது. தமது பார்வைக்கு இலக்காகிய அந்த முகத்திலும் தம் செவிகளில் தொனித்துக்கொண்டிருந்த அந்தத் தொனியிலும் பவுல் அளவில்லா வல்லமையையும் ஜெயங்கொண்ட அன்பையும் உணர்ந்தார். உணரவே, ஆனந்தக்களிப்புண்டாயிற்று. கடவுளுடைய வல்லமையினாலே மரணத்தை ஜெயித்தவரும் அப்பால் தம்மைத் துன்பப்படுத்தினவனையே தமது ஒப்புயர்வற்ற அன்பினாலே தம் திருத்தொண்டுக்கு அழைத்தவருமாகிய அந்தக் கிறிஸ்துவை நேசித்து ஆராதிக்கவேண்டும் என்னும் எண்ணம் அவருக்குள் ஜுவாலித்து எரிந்தது.

நிகழா நிகழ்ச்சியெல்லாம் இயேசு என்னும் ஒரு பட்டிக்காட்டானிடத்தில் நிகழ்ந்ததெனக் கூறியதினிமித்தம் நசரேயரைத் தேவதூஷணங் கூறியவராகக்கொண்டு அவர்களை அலைக்கழித்துத் துன்புறுத்தியிருந்தார். ஆனால் இப்பொழுதோ அஃதெல்லாம் வாஸ்தவம் என்பதை உணர்ந்தார். இன்பமேயாயினும் ஆருக, துன்பமேயாயினும் ஆகுக, சிறைச்சாலையோ, சவுக்கடியோ, கல்லெறியோ, சிலுவையோ, எது வந்தாலும் வரட்டும், பவுல் கிறிஸ்துவின் தொண்டராய் விட்டார். நசரேயருடைய அகமும் முகமும் பிரகாசமுற்றிருந்தது எதினால் என்பதை அவர் இப்பொழுது அறிந்துகொண்டார். கல்லெறியுண்டு கீழேவிழும்போதும் ஸ்தேவானுடைய முகம் தேஜஸ் பொருந்தியிருந்ததின் இரகசியம் இதுதான் என்பதை உணர்ந்தார். கிறிஸ்துவினுடைய அன்பைவிட்டு இப்பொழுது ஒன்றும் அவரைப் பிரிக்கமுடியாது. அப்புறம் அவர் தமது அங்கியில் வைத்திருந்த தோற்சுருளைத் தடவிப்பார்த்தார். தமஸ்குபட்டணத்திலுள்ள நசரேயரை யெல்லாம் விலங்கு தரிப்பிக்கும் அதிகாரப்பத்திரமாகிய இந்தத் தோற்சுருளை இவர் தம் விரல்களால் தடவிப்பார்க்கலாமேயொழிய கண்களால் வாசித்துப் பார்க்கமுடியாது. இது கிழித்தெறியப்பட வேண்டியதேயொழிய வேறல்ல. யதார்த்தத்தைச் சொல்லில் இந்த அதிகாரப்பத்திரமானது சவுலையே சிறைச்சாலையில் அடைப்பதற்கு அதிகார சாசனமாய் விட்டது.

எருசலேம் நகரத்தில் தாம் ரபியாய் இருந்ததின் விருத்தாந்தம் என்னவோ, இந்த ஜீவியம் முடிவடைந்துவிட்டது. தம் சிறந்த மாணுக்கனும் பரிசேயரின் நம்பிக்கையுமாகிய சவுல் நசரேயனுகி



விட்டான் என்று கமாலியேல் கேள்விப்படும்போது அவர் என்ன நினைப்பார்? என்ன சொல்லுவார்? தர்சு பட்டணத்திலுள்ள அவருடைய சொந்த ஜனங்கள், பரிசேயரில் பரிசேயராகிய அவருடைய தகப்பனுர், ஆகிய இவர்களுடைய விஷயம் என்ன? இவருடைய தகப்பனுர் இனி இவருடன் பேசுவாரோ? இந்நினைவுகளெல்லாம் அவருடைய மனதில் நிகழ்ந்துகொண்டிருந்தன. அப்படியிருந்தும் இந்தக் கலக்கத்திலெல்லாம் துக்கத்தினாலேயல்ல ஆனந்தத்தினாலேயே பவுல் மயக்கங்கொண்டிருந்தார். தாம் தம் ஜீவியகாலமெல்லாம் அடைபட்டிருந்த இருண்ட சிறைக்கூடத்திலிருந்து விடுதலையடைந்து தாம் முன்னே சென்றறியாத உலகத்தில் மகிமையுள்ள சுயாதீனத்தை அனுபவிப்பதுபோல் அவருக்குத் தோன்றினது.

மலைக் கொடுமுடியில் தமக்குக் கிடைத்த அந்தத் தரிசனம் தாம் முன்னே சென்றறியாத உலகத்தைத் தமக்குக் காண்பிக்கும் திட்டிவாசல்போல் தோன்றினது.

ஆகவே பவுலினுடைய முதல் வேலை இந்தச் சிந்தைச் சமுத்திரப் பிரயாணமே. உடன் செல்வோரெவருள்ளும் இணையற்றவரின் உதவியைக்கொண்டு அவர் இதைச் செய்யவேண்டும்.

தினந்தினம் பவுல் தமது பார்வையின்மையை நினைந்து நினைந்து துக்கித்துக்கொண்டிருந்தார். கடைசியாக ஒருநாள் இவ்வாறு சிந்தித்துக்கொண்டிருக்கையில் அறைக்குள் பிரவேசிக்கிற யாரோ ஒருவருடைய அடிச்சத்தம் கேட்டது. ஒரு மனுஷனுடைய அங்கி அசையுஞ் சத்தம் அவருடைய செவியில் விழுந்தது. சவுல் மௌனமாய் உட்கார்ந்திருந்தார். இருட்டிலிருந்த தம் தலையின்மேல் யாரோ ஒருவர் தம் கைகளை வைக்கிறதைப் பரிச உணர்ச்சியால் உணர்ந்தார். 'சகோதரராகிய சவுலே' என்னும் வார்த்தைகள் அவருடைய செவியில் விழுந்தன. அப்பால் 'உம்முடைய பார்வையையும் பரிசுத்த ஆவியின் வாத்தையும பெற்றுக்கொள்ளும்' என்னும் பதங்கள் அவர் எதிர்பாராத விதமாய் அவருக்கு உரைக்கப்பட்டன.

அந்தக்ஷணத்தில் செதிள்கள் அவர் கண்களினின்று விழுவதுபோல் தோன்றிற்று. அவர் தம் கண்களை மேல் நோக்கிப் பார்த்தார். தமஸ்குபட்டணத்து யூதன், இயேசுவின் அடியான், அனனியா என்னும் பேருள்ளவன் ஒருவன் தம்முன் நிற்கிறதைக் கண்டார். இயேசு மெய்யாகவே கடவுளால் அனுப்பப்பட்டவர் என்பதற்குச் சவுல் ஒரு சாட்சியாய் இருக்கவேண்டும் என்று அனனியா சொன்னார்.

இதை இவர் எப்படிச் செய்யக்கூடும்? ரஸ்தாவில் தம்மோடு பேசிய இயேசு தேவகுமாரனுர் என்பது அவருக்கு நிச்சயமாய்த்

தெரியும். உண்மையாய்ச் சொன்னால் அவருக்குத் தெரிந்த விஷயம் இது ஒன்றே. ஆனால் இதையெல்லாம் விவரிப்பது எப்படி? மற்ற ஜனங்கள் இவற்றை விளங்கிக்கொள்ளும்படி செய்வது எப்படி? இதைத் தீர்மானிப்பதுதான் சவுலுக்கு மெத்தக் கஷ்டமாயிருந்தது. இயேசு தேவகுமாரனார் என்ற இதேவிஷயத்தைச் சொன்னவர்களுக்கல்லவோ விலங்கு தரிப்பிக்கும்பொருட்டுச் சவுல் தமஸ்குவுக்கு வந்திருந்தார்?

(இன்னும் வரும்.)

## The Three Sons—An Illustration

### ஓர் உவமை

ஒரு ராஜாவுக்கு மூன்று பிள்ளைகள் இருந்தார்கள். அம்மூவர் குணத்திலே அதிக வித்தியாசத்தைக் காட்டினார்கள். மூதற்பிள்ளை எப்பொழுதும் தகப்பனுடைய வார்த்தையைக் கேட்டு அதின்படி நடப்பான். எந்த விஷயத்திலும் தன் தகப்பனிடம் போய், 'ஐயா! இவ்விஷயத்தில் உமது சித்தம் என்ன?' என்று கேட்பான். தன் தகப்பனையும் சகோதரரையும் நேசித்து அவர்களைச் சந்தோஷப்படுத்தவும் அவர்களுக்கு உதவிசெய்யவும் தன்னால் இயன்றமட்டும் பிரயாசப்படுவான்.

இரண்டாம் பையனோ அப்படிப்பட்டவனல்ல. அவன் எப்பொழுதும் தன் சொந்த இஷ்டத்தின்படி நடப்பான். தகப்பன் ஒரு காரியத்தைச் செய்யச்சொன்னால் கேட்கவேமாட்டான். தன் இஷ்டம், தன் சந்தோஷம், தன் ஆசையே தனக்கு நாட்டம். அவன் செய்த காரியங்களாலே மற்றவர்களுக்கு கஷ்டம் நஷ்டம் நேரிட்டாலும் அது அவனுக்கு அக்கறையில்லை. அவன் தன் தகப்பனை நேசிக்காமல் தன்னையே நேசித்துத் தன் சொந்த இஷ்டத்தின்படி நடந்துவந்தான்.

மூன்றாவது பையனுக்கு ஒரு விநோதமான யோசனை இருந்தது. அவன், 'நான் என் சொந்த ஆசை நிறைவேற நாடுகிறது தகுந்ததல்ல. என் தகப்பனார்மேலும் என் சகோதரர்மேலும் கூட நான் ஆசை வைப்பது நன்றன்று. ஆகையால் நான் என் ஜீவியகாலம் எல்லாம் ஆசைகொள்ளாமலும் ஒன்றும் செய்யாமலும் இருப்பேன். நான் தனியான ஓர் இடத்துக்குப் போய் உட்கார்ந்து மௌனமாயும் அசையாமலும் இருப்பேன். அப்படி நான் என் காலம் செலவழித்தால் கடைசியிலே நான் முற்றிலும் ஆசையில்லாமலிருப்பேன்' என்று சொல்லி அவன் அப்படியே செய்தான்.



இம்மூவரில் யார்தான் தகப்பனாருக்குச் சந்தோஷத்தைக் கொடுத்தவன்? இவ்வுலகத்தில் மனுஷர் இம்மூன்று பிள்ளைகளைப்போல நடக்கிறார்கள். சிலர் கெட்டகுமாரனைப்போலக் கடவுளை விட்டுவிட்டுத் தங்கள் சொந்த இஷ்டத்தின்படி நடக்கிறார்கள். இன்னும் சிலர் 'ஆசை எல்லாம் தீது' என்று நினைத்து செய்யவேண்டிய வேலையைச் செய்யாமலும் பிறருக்குச் செய்யவேண்டிய கடமையை நிறைவேற்றாமலும் கனி கொடுக்காத மரங்களைப்போலப் பிரயோஜனமற்றவர்களாயிருக்கிறார்கள். மற்றவர்களோ இயேசுகிறிஸ்துவைப்போல தங்கள் சொந்தச் சித்தத்தை நாடாமல் ஒவ்வொரு விஷயத்திலும் கடவுளின் சித்தத்தை அறியவும் அதின்படி நடக்கவும் முயற்சி செய்கிறார்கள்.

'இளைய மகன் எல்லாவற்றையும் சேர்த்துக்கொண்டு தூரதேசத்துக்குப் புறப்பட்டுப்போய் அங்கே துன்மார்க்கமாய் ஜீவனம் பண்ணினான்.' லூக்கா $15^{13}$.

இந்திரியங்கள், மனசு, இவைகளை சுவாதீனமாயுடையவன் சகல கருமங்களையும், விவேகத்தை யுடைத்தான மனசினாலே விட்டுவிட்டு ஒன்பது வாயில்களையுடைய பட்டணத்தைப்போலிருக்கிற தேகத்தில் ஒன்றும் செய்யாமலும், செய்விக்காமலும் ஆனந்தமாயிருக்கிறான்.' பகவத்கீதை $5^{13}$.

'எனக்குச் சித்தமானதை நான் தேடாமல், என்னை அனுப்பின பிதாவுக்குச் சித்தமானதையே நான் தேடுகிறேன்.' யோவான் $5^{30}$.

## A New Translation of I Timothy

By the Revds. F. Kingsbury, L. P. Larsen, and G. E. Phillips

### I திமோத்தேயு

### ஒரு புது மொழிபெயர்ப்பு

(தொடர்ச்சி)

### I திமோத்தேயு $1^{12-20}$

12. என்னை நம்பத்தக்கவன் என்று எண்ணி, [தமது] பணிக்கு என்னை நியமித்து என்னைப் பலப்படுத்திய நமது ஆண்டவர் கிறிஸ்து யேசுவுக்கு நன்றிபாராட்டுகிறேன். முன்னே நான் நிந்தித்தவன், கொடுமை செய்தவன், அபசாரம் செய்தவன், ஆயினும் இப்படி நான் செய்தது அறி

யாமையினல் அவநம்பிக்கையிலாதலாலும், நமது ஆண்டவரது அருள்வெள்ளம், கிறிஸ்து யேசுவிலுள்ள நம்பிக்கையோடும் அன்போடும் [என் உள்ளத்தில்] பாய்ந்ததாதலாலும், நான் [கடவுளது] இரக்கம் பெற்றேன். பாவிகளை இரட்சிக்கக் கிறிஸ்து யேசு உலகத்துக்கு வந்தார் என்னும் மொழி நம்பத்தக்கதும் முற்றிலும் ஏற்றுக்கொள்ளத் தக்கதுமாம்; அப்பாவிகளில் முதல்வன் நானே.

16. அப்படியிருந்தும், நான் [கடவுளது] இரக்கம் பெற்ற காரணம் பாவிகளில் முதல்வனுகிய என்னிடத்தில் யேசுக்கிறிஸ்து தமது நீடிய பொறுமையை எல்லாம் வெளிப்படுத்துவதினுலே இனிமேல் நீடூழிவாழ்வு பெறும்படி அவரை நம்புபவர்களுக்குத் திருஷ்டாந்தம் உண்டாகும் பொருட்டாம். ஊழிவேந்தரும் அமரரும் அரூபியும் ஏகருமாகிய கடவுளுக்கு ஊழூழி காலம் சிறப்பும் புகழும் உண்டாகுக. ஆமென்.

18. மகனே தீமோத்தேயு, முன்னே உன்னைக் குறித்துச் சொன்ன திருவுளக்கூற்றுக்களின்படியே நான் உனக்கு இடும் கட்டளை யாதெனில், நீ அத்திருவுளக்கூற்றுக்களில் [நின்றுகொண்டு] நம்பிக்கையும் கள்ளமில்லா நெஞ்சையும் விட்டுவிடாமல் நல்ல போராட்டத்தைப் போராடு. கள்ளமில்லா நெஞ்சைச் சிலர் தங்களினின்று தள்ளிவிட்டதால் அவர்கள் நம்பிக்கையைக் குறித்து அக்கப்பாடுற்றுர்கள். அவர்களைச் சேர்ந்தவர்கள் இம்மெனேயுவும் அலெக்சாந்தரும். கடவுளை இகழாதிருத்தலை இவர்களுக்குப் படிப்பிக்கும்படி சாத்தானிடம் இவர்களை ஒப்பித்தேன்.

## The Slave of a God

### ஒரு சுவாமிக்கு அடிமை

கிரேக்கு தேசங்களில் பவுல் அப்போஸ்தலருடைய காலத்தில் அடிமை ஒருவன் சுயாதீனம் பெறுகையில் அவன் விடுவிக்கப்பட்ட விதம் நமக்கு இந்த நாட்களில் தெரியவந்திருக்கிறது. அடிமை வேண்டிய பணத்தொகையைச் சேர்த்து அதை ஏதாவதொரு கோயி



லுக்குக் கட்டுவான். கோயில் பூசாசாரியர் தங்கள் சுவாமியின்பேரால் அந்தப் பணத்தை அவனுடைய எஜமானனுக்குக் கிரயமாகக் கட்டி அவனைச் சுவாமிக்கென்று வாங்குவார்கள். அந்நாள் முதல் அவன் அந்தச் சுவாமியின் அடிமையானதினுல் அவன் மனுஷருக்கு அடிமையல்ல. இதைக் காட்டுகிற பல பத்திரங்கள் இந்நாள் மட்டும் இருக்கின்றன. இப்படிப்பட்ட விடுதலைச் சீட்டுக்களின் மாதிரி பின்வருமாறு:

தேதி...... யூனியாவாகிய நான் இந்தத் தேதியில் ஐந்நூறு ரூபாவைப் பெற்றுக்கொண்டு என் ஆண் அடிமையாகிய ஒநேசிமுவை அஸ்கிலேப்புவாகிய வைத்தியநாத சுவாமிக்கு விற்றேன், சுயாதீனத்துக்கு.

இதை நாம் கவனிக்கும்போது, புதிய ஏற்பாட்டிலுள்ள அநேக மொழிகளில் புது அர்த்தத்தைப் பார்ப்போம். பவுலின் காலத்தில் அவருக்குத் தெரிந்த நகரவாசிகளில் பெரும்பான்மையோர் அடிமைகள். அந்த அடிமைத்தனம் அடிக்கடி மெத்தக் குரூரமானது. பவுலுடைய சிநேகிதரில் அநேகர் அடிமைகள். சிலர் கஷ்டப்பட்டுப் பணத்தைச் சம்பாதித்துத் தங்களை ஒரு சுவாமிக்கு விற்றதால் சுயாதீனமடைந்து ஆனந்தமடைந்ததைப் பார்த்திருந்தார். ஒருவேளை அவர் இன்னொன்றையும் பார்த்திருக்கக்கூடும். சுயாதீனமுய்ப்போன ஒரு அடிமை புத்தியில்லாமல் நடந்து கடன்வாங்கி தன் சுயாதீனத்தைப் போக்கடித்ததையும் பார்த்திருப்பார். அடிமை அல்லது ஊழியன் என்ற வார்த்தையை நாம் வாசிக்கும்போது இவைகளை மறக்கக்கூடாது.

பவுல் தம்மை எப்போதும் கிறிஸ்துவின் அடிமை என்று சொல்லுவார். நமது மொழிபெயர்ப்பில் ஊழியக்காரன் என்ற வார்த்தைக்கு அடிமை என்று அர்த்தம். பவுல் கிறிஸ்துவின் அடிமை.

'நாம் எல்லாரும் பாவத்துக்கு அடிமைகளாயிருந்தோம்' யோவா. $8^{34}$ (போன மாதச் சஞ்சிகை 142-ம் பக்கம் பார்க்க). இயேசுசுவாமி கிரயங்கொடுத்து நம்மைத் தமக்குச் சொந்தமாக்கினுர். நாம் இப்போது அவருக்கு அடிமைகளானபடியால் நாம் பாவத்தினின்று மீட்கப்பட்டோம் (ரோம. $6^{15-23}$).

யூதர் நியாயப்பிரமாணத்துக்கு அடிமைகளாயிருந்தார்கள். அவர்களிற் சிலர் கிறிஸ்துவால் மீட்கப்பட்டார்கள். இனிமேல் அதே அடிமைத்தனத்தில் சிக்கிக்கொள்ளாதபடிக்கு அப்போஸ்தலர் கலாத்தியர் ஐந்தாம் அதிகாரத்தில் அவர்களை வற்புறுத்துகிறுர்.

இவைகளைப்பற்றிப் பிரசங்கம் செய்தால், யேசுசுவாமி நமக்காகக் கொடுத்த கிரயத்தை எடுத்துக்காட்டலாம். அந்தச் சுவாமிகள் பண

த்தை வாங்கி அடிமைகளை விடுவித்தார்கள். யேசுசுவாமியோ இலவசமாகத் தம்முடைய இரத்தத்தைச் சிந்தி நம்மை மீட்டுக் கொண்டார்.

‘நாம் அவருக்குச் சொந்தம். கிரயத்துக்குக் கொள்ளப்பட்டோம்’ (1 கொரி. $6^{19-20}$, $7^{23}$).

அடிமை தன் இஷ்டப்படி வேலைசெய்யாமலும், தன் இஷ்டப்படி நேரத்தைச் செலவழிக்காமலும் இருப்பான். நாம் கிறிஸ்துவின் அடிமைகள்.

அடிமை வேலைசெய்தால் எல்லாரும் மெச்சிப்பேசுவார்கள் என்று எதிர்பார்க்கமாட்டான். நாம் யேசுசுவாமியின் அடிமைகள்.

யேசுசுவாமியின் அடிமைகள் பாவத்தினின்று விடுவிக்கப்பட்டவர்கள். மனிதரிற் பெரும்பான்மையோர் பாவமான வழக்கங்களுக்கு அடிமைகள். அவ்வடிமைத்தனத்தினின்று விடுவிக்கக் கூடியவர் யேசுவே ஒழிய வேறொருவருமில்லை.

யேசுசுவாமியின் அடிமைகள் மனிதருக்கு அடிமைகள் அல்ல. பத்துப்பேர் சொல்லுகிறதற்குப் பயப்படமாட்டார்கள். மாமூல் கெட்ட மாமூலென்றால் அதைத் தள்ளுவார்கள். யேசுவின் வார்த்தையே அவர்களுக்குப் பிரமாணம்.

## Martin Luther's Table Talk

## லூத்தர் சாஸ்திரியாரின் சம்பாஷணை

(From the *Arunodayam*)

சரியாய் நானூறு வருஷத்துக்கு முந்தி, 1517-ம் ௵ அக்றோபர் மாசம் 31-ம் தேதியில் லூத்தர் சாஸ்திரியார் வித்தென்பெர்க் அரண்மனைக் கோயிலில் தொண்ணூற்றைந்து நியாயங்களை ஒட்டி திருச்சபைச் சீர்திருத்தத்தைத் தொடங்கினார். ஆகவே இந்த மாசத்தில் நாம் லூத்தர் என்பவரை ஞாபகத்தில் வைக்கிறது தகுதி. ‘அருணோதயம்’ என்கிற பத்திரிகையிலிருந்து எடுத்த லூத்தரின் சம்பாஷணைகளில் ஒரு பாகத்தின் மொழிபெயர்ப்பை இங்கே அச்சிடுகிறோம்.

### 1. மழை தாழ்ந்து பஞ்சமுண்டானபோது காணப்பட்ட விசுவாசம்

ஐஸ்லேபின் ஊரில் ஒரு விதவையை நான் நன்றாயறிவேன். அவள் மெய் விசுவாசி. போன கொடிய கருப்புக்காலத்தில் அவள்



தன் இரண்டு பிள்ளைகளுடன் படாத அவதியெல்லாம் பட்டாள். அவளுக்கிருந்த சாப்பாடெல்லாம் அறத்தீர்ந்தபின் அவளும் அவளிரண்டு பிள்ளைகளும் தெய்வாராதனைக்குப் போகிறதுபோல் சீராய் உடுத்துக்கொண்டு ஒரு தண்ணீர்த் தாவண்டை போனார்கள். போகையில், அவள்: ஆண்டவரே, இந்தக் கார்தட்டிய பஞ்சத்தில் நீரூட்டியாவது எங்களைக் காப்பாற்ற உம்மாலாகும். உம் கையில் எங்களை நம்பிக்கையாய் ஒப்புவிக்கிறேன்’ என்று ஜெபித்துச் சென்றாள். எதிரே வந்த ஒருவர் அவளை நிறுத்திக்கொண்டு: ‘ஏ அம்மை! நீர்க்கேணி யருகே உனக்கும் உன் பிள்ளைகளுக்கும் பசியடங்கச் சாப்பாடு வருமென்றா போகிறாய்?’ என்று வினவ, அவள்: ஏன் வராது? தேவனால் கூடாதது உண்டா? இஸ்ரவேல் கொஞ்ச ஜனமல்லவே. அத்தனை பெருந்திரளுக்கு நாட்டவறாமல் நாற்பது வருஷம் வனாந்தரத்தில் வானத்தப்பம் உதவினவர், எனக்கும் என் பிள்ளைகளுக்கும் இந்தத் தாவு நீரையே உணவாக ஊட்டிக்காக்க வல்லவர் என்று நம்பியே வந்திருக்கிறேன்’ என்றாள். அதற்கவர்: ‘அம்மையே! உன் விசுவாச உறுதி உனக்குக் குறைவு வரவிடாது. வீட்டுக்குத் திரும்பிப்போ. உங்களுக்குப் பஞ்சங்கடக்கப் போதுமான ஆகாரம் வந்திருக்கிறது’ என்று தெரிவித்துப்போனார். அவள் அதை நம்பி வீட்டுக்குத் திரும்பினபோது அவர் சொல்லியவாறே இருக்கக் கண்டாள்.

### 2. கைம்மாறு பார்க்காத கொடை

ஒரு பிற்பகற்போது லூத்தர் வெளியாகாயத்தில் உலாவப்போனார். போனபோது சில வறிஞரைக் கண்டு தம் கையிலிருந்த காசை அவர்களுக்குக் கொடுத்துப் போகச்சொன்னார். அதைப் பார்த்துக் கூடவிருந்த யோனா வேதசாத்திரியார் தாமும் தம் கையிலிருந்ததை அகதிகளுக்கு உதவி, ‘பராபரன் இந்தக் கொடைக்கு எனக்கு ஈடுகட்டுவாரோ என்னவோ’ என்றார். அதற்கு லூத்தர் புன்னகையுடன்: அகதிகளுக்கு அளிக்க உம் கையால் இந்தக் காசை இருக்கச் செய்தவர் அவர்தான் என்று அறியாதவர்போல் பேசுகிறீரே. நாம் கைம்மாறு பார்க்காமல் தாராளமாய்க் கொடுக்கவேண்டும் என்று விடையளித்தார்.

### 3. ‘கொடுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்’

ஆண்டவர் சொன்ன இந்தச் சொல் அத்தனையும் உண்மையான சொல். உலகில் ஒருவனை ஏழையாக்குவதும் செல்வனாக்குவதும் இந்தச் சொல்லே. இதனுண்மைக்கு நானே சான்று. தன்னைப்

புகழுகிறது தகாத செய்கை என்று எனக்குத் தெரியும். நான் தற்புகழ்ச்சிக்கு இங்கொன்றும் சொல்லவில்லை. ஆண்டவருடைய திருமகிமைக்கே சொல்லுகிறேன். என் இறைவனாகிய எலெக்ட்டர் இராஜா எனக்கு இரண்டாயிரம் ரூபாய் சம்பளம் கொடுத்தாலும் என் செலவுக்கு ஒரு வருஷத்திற்குக் கட்டிவராது. எனக்குக் கிடைக்கிறது வருஷவாரி ரூபாய் முந்நூறே. ஆயினும், அது என் குடும்பச் செலவுக்கு கட்டிவரும்படி ஆண்டவர் ஆசீர்வதிக்கிறார்.

ஔஸ்திரியாவில் ஒரு சந்நியாசிகள் மடம் இருக்கிறது. அது முற்காலத்தில் செல்வத்திற்குப் பெயர்போனது. ஏழைகளுக்கு இரங்கிக் கொடுத்துக்கொண்டு வந்தகாலமெல்லாம் அது செழிப்பாகவே இருந்தது. அது ஏழைகளுக்குக் கொடுக்கக் கை குறுகினபோது அதின் செல்வமும் குறுகிக் குறைந்துபோயிற்று. அந்தக் குறைவிலேயே அது இந்நாள்வரையும் இருக்கிறது. இன்றைக்குச் சில நாட்களுக்கு முன் ஒரு அகதி அந்த மடத்தை யடைந்து பிச்சை கேட்டான். அவ்விடத்தியார் கொடுக்கமாட்டோம் என்றார்கள். ஏன் கொடுக்கமாட்டீர்கள் என்று கேட்டான். நாங்கள் ஏழைகளாய்ப் போனோம் என்றார்கள். அதற்கு அவன் பின்வருமாறு சொன்னான்: 'நீங்கள் ஏழைகளானதற்குக் காரணம் சொல்வேன், கேளுங்கள். இந்த மடத்தில் இரண்டு உடன்பிறந்தார் இருந்தார்கள். ஒருவனை நீங்கள் ஓடிப்போ என்று துரத்திவிட்டீர்கள், மற்றவன் தானே இரகசியமாய் ஓடிப்போனான். நீங்கள் துரத்திவிட்டவன் பெயர் "கொடுங்கள்" (*Date*); அவன் போனபின் தானாய்த் தொலைந்த மற்றவன் பெயர் "கொடுக்கப்படும்" (*Dabitur*).

'நான் சொல்வதற்குமேலும் செவி கொடுங்கள். இவ்வுலகத்தார் மெலிந்தாருக்கு மூன்று வகையாய் உதவிபுரியவேண்டும்: கொடுப்பதினாலும், கடனீவதினாலும், விலைக்கு விற்பதினாலும். கொடுப்பாரைக் காணோம்; பிறன் பொருளைக் களவாடி, அபகரித்து, வாரிச்சுருட்டிக் கொள்வாரைக் காணலாம். மானிடப் பிராணிகள் பிறர் பொருளுக்குப் பேயாய்ப் பறக்கிறார்கள், திருடியாவது அதைத் தம்பக்கமாக்குவார்கள், பிறருக்குக் கொடுக்க அவர்களுக்கு மனம் வராது. கடன் கொடுப்பாரைக் காணோம், கடுவட்டிக்கு விடுவாரைக் காணலாம். விற்பாரைக் காணோம், விலையில் ஏமாற்றி வஞ்சிப்பாரைக் காணலாம். இப்படி, "கொடுங்கள்" என்றவன் தொலைந்ததோடே "உங்களுக்குக் கொடுக்கப்படும்" என்றவனும் தொலைந்தான். இதுவே உலகெங்கும் வறுமைக்குக் காரணம்'.



OCT 1917

# The Preparation of Sermons

**By the Rev. H. Spencer, B.A.**

## பிரசங்கமுறை

(தொடர்ச்சி)

தாங்கள் பாவிகளென்று ஒத்துக்கொள்ளுகிறவர்கள் சுவிசேஷத்தைக் கேட்பதற்கு ஆயத்தமாயிருக்கிறார்கள். இயேசுகிறிஸ்து ஒருவரே தேவனை நிச்சயமாயும் சம்பூரணமாயும் வெளிப்படுத்துகிறவராயிருக்கிறார் என்று ஸ்தாபிப்பது எப்படி? அவர் மனுஷனாகி, இந்த லோகத்திலிருக்கையில் செய்த மகத்தான செய்கைகளை விவரிப்பதினால் இந்த சங்கதியை ஸ்தாபிப்பதற்குப் பிரயத்தனப்படலாகாது. அவர் தமதுமேல் நம்பிக்கைகொள்ளும்படி ஒரு மகத்தான கிரியையையாவது செய்யவில்லை. பிறந்த நம்பிக்கையைத் திடப்படுத்தும்படிக்கே அநேக மகத்தான காரியங்களைச் செய்தார். அவர் எந்த மகத்தான காரியத்தையும் செய்யாமல் இருந்தாலும் தேவனுடைய குமாரனாயிருக்கிறாரென்று நம்புவதற்கு ஸ்திரமான ஆதாரமுண்டு. ரோம. 1: 4-ல் அவர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததினாலே பலமாய் ரூபிக்கப்பட்ட தேவ குமாரன் என்று பவுல் எழுதுகிறார். அப்போஸ்தலருடைய மாதிரியை அனுசரித்து நாம் அவருடைய உயிர்த்தெழுதலைக் குறித்து கூறியறிவித்து, அவர் தேவனுடைய குமாரனாய் இருக்கிறார் என்பதை ஸ்தாபிக்க வேண்டும். உயிர்த்தெழுதலைக் குறித்துப் பிரசங்கிக்கையில் அவர் அனுபவித்த மரணத்தைக் குறித்தும் சாட்சி கூறவேண்டும். அந்த மரணம் சாதாரணமான மரணமல்லவென்று தெரிவிப்பது எப்படி? உயிர்த்தெழுதலைக் குறித்துச் சொல்வதினாலேதான். தாமடைந்த மரணத்தினால் மேலான புண்ணியங்கள் யாவருக்கும் உண்டாகிறதென்று முன்னமேயறிந்து தம்மைச் சிலுவையின் மரணபரியந்தம் தாழ்த்தி ஒப்புக்கொடுத்தார். உயிரோடே எழுந்து வந்து தாம் அடைந்த மரணம் எல்லாரும் அடைகிற மரணத்தைப் போன்றதல்லவென்று காட்டி தாம் முன்னே சொன்ன சங்கதியை நம்புவதற்கு ஆதாரமாக்கினார். ஆகிலும் அவர் உயிர்த்தெழுந்து வந்ததற்குப்பின் தம்மை விசுவாசித்த தமது சீஷரில் அநேகருக்குக் காண்பித்தாலும் தமதுபேரில் விசுவாசம் வைக்காத ஒருவனுக்காகிலும் காணப்படவில்லை. அவருடைய சீஷர் உயிர்த்தெழுந்து வந்த அவரைக் கண்டு இந்தச் சங்கதியைச் சாட்சி கொடுப்பதினால் மற்றவர்கள் தம்மை நம்பி பற்றிக்கொள்ளவேண்டுமென்பது

அவருடைய எண்ணமாயிருந்தது. இப்படியிருக்க அவர் முதல் தமதுபேரில் நம்பிக்கை வைக்கும்படி உண்டாக்கினது எவ்வாறு? இரண்டு சங்கதிகளின் மூலமாய் அவர் அவ்வித நம்பிக்கையைப் பிறப்பித்தார். அவையாவன, அவர் போதித்த போதனையினாலும் சாதனையினாலுமே.

1. அவர் செய்த போதனை. அவர் பிதாவைப்பற்றியும் மனுஷருடைய ஊழியத்தின் விஷயத்தைப்பற்றியும் மனுஷர் அடையத்தக்க பதவியின் விஷயத்தைக் குறித்தும் போதித்திருக்கும் போதனைகள் மிக அருமையானதென்று யாவரும் ஒத்துக்கொள்ளுகிறார்கள். நாம் அப்போதனைகளைச் சரிவர எடுத்துரைக்க வேண்டியவர்களாயிருக்கிறோம். அவருடைய திருச்சபையைச் சேராமலிருக்கிற அநேக ஹிந்துக்களுங்கூட அவருடைய போதனைகள் உச்சிதமானவைகளும் சத்தியமுள்ளவைகளும் எல்லாரும் அங்கீகரிக்கவேண்டியவைகளுமாயிருக்கின்றன வென்று ஒத்துக்கொள்வதுண்டு. அவர்களுக்கு மூன்று விஷயங்களை விவரித்துக் காட்டவேண்டும். அதாவது: (1) அவர் செய்த போதனை சத்தியமுள்ளவைகள் என்று ஒத்துக்கொள்வோமானால், அவருடைய குணம் சத்தியமுள்ளதல்லவென்று எப்படிச் சொல்லலாம்? (2) அவருடைய போதனை சத்தியமுள்ளவைகள் என்று ஒத்துக்கொள்ளுகிறவர்கள் யாவரும் அதைக் கைக்கொள்ளுவதற்குப் பாத்தியதையுள்ளவர்களாயிருக்கிறார்கள். (3) நாம் தேவனண்டைச் சேரத்தக்க வழியை அவர் எல்லாரைப் பார்க்கிலும் பரிஷ்காரமாய்க் காண்பித்திருக்கிறபடியால் அவருடைய போதனையின்படியும் அந்த மார்க்கத்தின்படியும் நடந்துபோவது உத்தமம்.

2. அவநுடைய மாதிரி. நாம் இயேசு போதித்த உபதேசத்தைக் குறித்துப் பிரசங்கிக்கையில், நம்முடைய பிரசங்கத்தைக் கேட்கிறவர்களில் எவனாவது ஒருவன், 'ஐயா, நீங்கள் சொல்லுகிறது நிஜந்தான். இயேசு மொழிந்தருளின உபதேசம் உச்சிதமானதும் சத்தியமானதுமாயிருந்தாலும் மனுஷராகிய நாம் அதற்கு ஏற்றபடி நடந்துகொள்வது கூடாமையாயிருக்கிறது' என்று சொல்லலாம். அதற்கு நாம், 'நம்முடைய ஆண்டவர் உன்னதமான போதனையையும் கண்டிப்பான கட்டளைகளையும் மேலான வாக்குத்தத்தங்களையும் அநுக்கிரகித்திருப்பதுமல்லாமல், தாம் நிஜமான மனுஷனாயிருந்து அப்போதனைகளுக்குச் சரியாய் நடந்து, அக்கட்டளைகளைத் தாமே நிறைவேற்றி, தாம் மற்றவர்களுக்குக் கொடுப்பேனென்று சொன்ன திவ்விய சகாயத்தைத் தாமே தேவனிடத்திலிருந்து அனுபவித்து வந்தார்' என்று உத்தரவு கொடுக்கிறோம். இவ்வுலகத்திலுள்ள வெவ்வேறு மார்க்கங்களிலுள்ள சிலர் வணங்கிவருகிற தெய்வங்கள் நர அவதாரமெடுத்து



அப்படிப்பட்ட கிரியைகளை நடப்பித்து வந்தனவென்று அந்த மதங்களின் நூல்கள் கூறுகின்றன வல்லவா? இத்தெய்வங்களுடைய துர்நடத்தைகளின் விஷயமாய் நாம் ஆட்சேபிக்கவேண்டியதாக விருந்தால், அவைகளை வணங்குகிறவர்கள் தேவன் தமது இஷ்டமாய் சரியானபடி நடந்துகொள்ளலாமல்லவா என்று உத்தரவு கொடுப்பது வழக்கம். அவதாரமெடுத்த அத்தெய்வங்களின் போதனைகள் மனுஷர் கைக்கொள்ளவேண்டிய போதனைகளாய் இருக்கின்றன. அவை தெய்வங்கள் கைக்கொள்ளவேண்டிய போதனைகளல்ல. இயேசு செய்த போதனைகளோ தேவனாயிருக்கிற தாமே கைக்கொள்ளவேண்டிய போதனையாயிருக்கின்றது. எப்படியென்றால், அந்தப் போதனை தேவனுடைய நிஜசுபாவத்துக்கு ஒப்பானதாக விருக்கிறது. இப்படியிருந்தாலும் தமது போதனையை தாம் கைக்கொண்டு நடப்பதற்கு அவருடைய தேவத்துவம் காரணமாயிருக்கிறது என்று தோன்றுகிறதில்லை. மனுஷனாகவே அவர் தோஷமும் பாவமுமில்லாதவராக இருந்தார். ஆதலால் மனுஷர் தேவனுடைய கட்டளைகளைக் கைக்கொண்டு பாவமில்லாதவர்களாய் ஜீவிப்பது கூடாத காரியமல்ல. இயேசுவின் மாதிரியைப் பிரசுரப்படுத்தி அவருடைய போதனை மேலானதாயிருக்கிறதென்றும், மனுஷராகிய நாம் நம்முடைய விஷயத்தில் நேர்மையுள்ளவர்களாய் இருக்கவேண்டுமென்றும் ஸ்தாபிக்கிறோம்.

3. அவர் கொடுக்கும் சாட்சி. கிறிஸ்துவின் போதனை உத்தமமானது என்று ஒப்புக்கொள்வதும், அவருடைய மாதிரியை அனுசரித்து நடப்பதும், இவ்விரண்டு காரியங்களில் எதையாகிலும் செய்யக்கூடிய சக்தி சுபாவத்தில் நமக்கில்லை. அவரே இதைக் கொடுப்பார். அதை அருளுவதற்காகவே அவர் உள்ளபடி மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார். இவ்விஷயத்தை நாம் கூறியறிவிக்கவேண்டும்.

அவர் எல்லா மனுஷருடைய இருதயத்திலுமிருந்து ஒவ்வொரு நல்ல பிரயத்தனத்துக்கும் ஆசைக்கும் மூலகர்த்தாவாயிருக்கிறார். அவர் நம்மிலே வாசஞ்செய்வதுமல்லாமல், நம்முடைய வார்த்தைகளைக் கேட்கிறவர்களுடைய இருதயங்களிலும் இருக்கிறார். இப்படிக் கில்லாவிட்டால், அந்த ஜனங்கள் நம்முடைய வார்த்தைகளைக் கேட்டு கிரகிப்பார்கள் என்கிற நிச்சயம் நமக்கு எவ்வளவு மிருக்காதே. மேலும் அவர் அநேகரிடத்தில் பட்சத்தாப இருதயத்தை உண்டாக்குவதினால், அவர் தமதுமேல் யதார்த்தமான நம்பிக்கையை அவர்கள் இருதயத்தில் பிறப்பிப்பார் என்கிற உண்மைக்கு ஆதாரமாகிறது.

தேவஞானத்தைச் சம்பாதித்துக்கொள்ள வேண்டுமானால் அதற்கு நமக்கிருக்கிற புத்தியும் அறிவும் காரணங்களாகாது. அவருடைய

திவ்வியமான கருணையே அதற்குக் காரணமாகும். ஆதலால் ஞானிகளுக்கு ஒரு மார்க்கம், அஞ்ஞானிகளுக்கு ஒரு மார்க்கம் உண்டென்று நாம் ஒப்புவதில்லை. ஆதலால் அவர் இருக்கிறார் என்பது நிஜமான வார்த்தையாயிருக்கிறது என்று சந்தேகமில்லாமல் அறிந்துகொள்வது எப்படி? அதை அனுபவ பிரமாணத்தினாலேயே தெரிந்தறியவேண்டும்.

இத்தச் சங்கதிகளைப் போதித்து ஸ்தாபிக்கவேண்டும். இது எப்படி ஆகும் என்று நிக்கொதேமு கேட்டபொழுது, இயேசு அவனை நோக்கி: 'காற்றானது தனக்கு இஷ்டமான இடத்திலே வீசுகிறது; அதின் சத்தத்தைக் கேட்கிறாய், ஆகிலும் அது இன்னவிடத்திலிருந்து வருகிறதென்றும் இன்ன இடத்துக்குப் போகிறதென்றும் உனக்குத் தெரியாது' என்று உத்தரவுகொடுத்தார். இதின் பொருள் என்னவென்றால், காரியம் அனுபவத்துக்கு காணப்படுகிறது; அதின் முறை தெரியவருகிறது. இதே பிரகாரமாக பாவநிவிர்த்தி உண்டாயிற்றோ என்றும், இயேசுவின் மூலமாய் உண்டாயிற்றோ என்றும் ஜனங்கள் விசாரணை செய்யும்போது அகத்தியமாய் உண்மை விளங்கும். ஏனென்றால் அந்த முறையாகவே எனக்கும் உண்டாயிற்று என்று நம்மில் ஒவ்வொருவரும் சாக்ஷிகொடுக்கிறவர்களாய் இருக்கவேண்டும்.

(இன்னும் வரும்.)

C. L. S. PRESS, MADRAS—1917

No. 138. நவம்பர் 1917

# வேதியர் விளக்கு

7 - NOV 1917 MADRAS

## Paul the Dauntless

By Basil Mathews, M.A.

Translated by Pandit J. S. Masillamany

பேசில் மத்யூஸ் ஆசிரியர் இயற்றிய

## அஞ்சா நெஞ்சராகிய பவுல்

8-ம் அத்தியாயம்

### முன்னே சென்றிராத புத்துலகம்

(தொடர்ச்சி)

இவையெல்லாவற்றையும் நினைத்துத் தீர்மானிக்கிறதற்கு அவர் தனிமையாய் இருத்தல் வேண்டும். அவர் இப்போது சிறிது சாப்பிட்டு பலப்பட்டார். அனனியாவோடும் தமஸ்குவிலிருந்த வேறு சீஷரோடும் சில பொழுது கழித்தபிறகு, அவர் தமது ஊன்று கோலை எடுத்துக்கொண்டு, தமது இடையில் கச்சையைக் கட்டிக்கொண்டு வெளியே புறப்பட்டார். ஒரு ரோமப் பெருந் தெரு வழியே போனார். இதற்கு நேர் தெரு என்று பெயர். ஏனெனில் இத்தெரு கிழக்கிலிருந்து மேற்கு முகமாய் ஓர் அம்பைப்போல தமஸ்குபட்டணத்தை ஊடறுத்துச் சென்றது.

அத்தெருவின் ஓரத்திலுள்ள நடைபாதையில் மேற்கூரையின் நிழலில் பவுல் ஓரிடத்தில் நின்றார். கல் பாவித் தளவரிசைப்படுத்தப்பட்ட அகன்ற தெருவில் ரோம ரதங்கள் கடகடவென்று ஓடுகிறதைக் கண்டார். கிழக்கு வாசலிலிருந்து ஒன்றின்பின் ஒன்றாக குறுக்கிட்டுக்கொண்டிருந்த ஒட்டகங்களினிமித்தம் இவ்வண்டிகள் இங்கும் அங்கும் சிறிது தாமதித்து நின்றன. இதைப் பார்க்கும்பொழுது ஒட்டகங்களாகிய வனாந்தரக்கப்பல்கள் தமஸ்கு என்னும் துறைமுகத்துள் செல்லுவதைப்போலிருந்தது. கூடை பின்னுவதற்கு வேண்டிய கோரைப்பாரம் ஏற்றிய கழுதைகள் அவருக்கு முன் சென்றன. இவைகள் அதிக தூரத்திலே செல்லச் செல்ல

கோரைப்பொதிகளுக்கு மேலே நீட்டிக்கொண்டிருக்கும் இக்கழுதைகளின் நீண்ட காதுகளையும் தலையையும் மட்டுமே கண்டார். சலவைக்கல் தூண்கள் வரிசை வரிசையாய் நிறுத்தின அந்தப் பெரிய ரஸ்தாவின் நடைபாதைகளுக்கும் மத்திய ரஸ்தாவுக்கும் இடையில் அரைவட்ட வெற்றிமதிலைக் கண்டார். இவ்வளவு அத்தெருவின் இருபக்கங்களையும் இணைத்தது. இதற்குக் கீழே மூன்று பாதைகள் சென்றன.

சவுல் கிழக்குமுகமாய்த் திரும்பி நடைபாதை நெடுகப் போனார். நீர்நிலைக் குழாய்களினின்று தண்ணீர் ஜலஜலவென்று கொப்புளித்துக்கொண்டிருந்த சத்தம் செவிக்கு வெகு இன்பமாய் இருந்தது. தமஸ்குபட்டணத்தில் தண்ணீர்க் குறைவு கிடையாது. எருசலேம் நகரத்திலுள்ளவர்கள் மழைத்தண்ணீரை பூமிக்கடியில் தோண்டின தொட்டிகளில் நிரப்பிவைத்து தண்ணீருக்குக் கஷ்டப்படும்பொழுது வனாந்தரத்தின் ஓரத்திலிருந்த தமஸ்குபட்டணத்தில் இவ்வளவு தண்ணீர் எப்படி வந்தது? இப்பட்டணத்துக்கு மேற்கே இருந்த மலைகளிலிருந்து ஒரு நதி ஓடினது. இதுதான் அல்பானா நதி. வெகு பழைமையானது. தமஸ்குவின் செழிப்பெல்லாம் இந்நதியினாலாகியதே. இந்நதியில்லாவிட்டால் அந்தச் சமபூமியெல்லாம் வனாந்தரமாயிருக்கும். அத்தி, மாதுளை, திராக்ஷ முதலிய கனிவர்க்க விருக்ஷங்கள் நிறைந்த தோட்டங்களை நீர்பாய்ச்சிச் செழிப்பாக்கினது இந்நதியே.

ஒலிவமுக யூதர்கள், சரீரக்கட்டுள்ள ரோமைப் போர்வீரர்கள், வனாந்தரவாசிகளான அராபியர், பள்ளிக்கூடத்துக்குச் சென்றுகொண்டிருக்கும் கபிலநிறச் சிறுவர்கள் ஆகிய இவர்களெல்லாம் தங்கள் தங்கள் அலுவல்களை நோக்கி அத்தெருவில் அங்கும் இங்கும் சென்றுகொண்டிருந்தனர்.

அனனியா சொல்லியபடி இவர்களெல்லாருக்கும் பவுல் கிறிஸ்துவின் சாட்சியாய் இருக்கவேண்டும்.

'இவர்கள் எல்லாருக்குமா நான் சாட்சியாய் இருக்கவேண்டும்' என்னும் கேள்வி இவர்களைப் பார்த்த சவுலின் மனதில் அதிகப் பலமாய்த் தாக்கியிருக்கவேண்டும்.

கிழக்கு வாசலுக்குமேல் வில் வடிவமாய் அமைக்கப்பட்டிருந்த வளைவு வாசலுக்குள் சவுல் நுழைந்து, வெளியே போய், கூட யாதொரு துணையுமில்லாமல் வனாந்தரத்துக்கு அருகில் சுமார் இருபது மைலுக்கு அப்பால் தோன்றின தாழ்வான மலைத்தொடர்களுக்கு நேரே நடந்தார். தன்னந் தனியாய் இருக்கவும் வனாந்தரத்துள் சென்று தாம் இனிமேல் செய்யவேண்டியது இன்னது என்பதை



யோசனைசெய்து கண்டுபிடிக்கவுமே அவர் விரும்பினார். ரோம நகரமாகிய தமஸ்குவிலிருந்து அவர் இதைத் தீர்மானிக்கமுடியாது. நக்ஷத்திரம் பூத்துப் பொலிவுற்றிருக்கிற ஆகாசமண்டலத்தின் கீழே தனிமலைகளின்மேல் இருக்கிற நிசப்தமான அமைதியிலே இப்படிப்பட்ட விஷயத்தைப்பற்றி அவர் தீர்மானிக்கக்கூடும். இவ்விடத்திலேதான் தமக்குள்ளே பேசும் சப்தத்தை அவர் கேட்கக்கூடும்.

அரேபியாவின் மஞ்சள் மணல் வனாந்தரத்துள் அவர் சென்றார். அச்சுடுமணல் வனாந்தரத்தின் நடுவிலே பசும் புல் பூண்டுகள் தழைத்துள்ள செழிப்புநிலத்துண்டிலே, ஓர் கிணற்றண்டையிலே, பேரீச்சமரமொன்றின் நிழலிலே அமைதியாய் உட்கார்ந்து அவர் சிந்தையாத்திரை செய்வாராயினார்.

இவ்விடத்திலே அவர் இருக்கும்பொழுது தாமும் பிறரும் நினையாத நினைவெல்லாம் அவர் நினைத்தார். நியாயப்பிரமாணம், அன்பின் பிரமாணம் என்பன போன்ற முன் இணைக்கமுடியாத விஷயங்களுக்கெல்லாம் இப்பொழுது இணைப்புண்டுபண்ண முயன்றார். அவர் இந்தச் சிந்தை யாத்திரையில் யோசித்த நினைவுகள்தான் அக்காலமுதல் தற்காலபரியந்தம் மனுஷஜாதியின் காரியங்களை நடத்திவந்திருக்கின்றன. யுத்தத்துக்குச் செல்லும் ஒரு புதிய சேனைக்கு முன்னே யுத்தகளத்தை ஆயத்தப்படுத்தல் முதலிய காரியங்களைக் கவனிக்கும்பொருட்டும் தேசத்தை வேவுபார்க்கும்பொருட்டும் அனுப்பப்படுகிற ஒற்றருக்கிருத்தல்போலவே சவுலுக்கும் இச்சிந்தை யாத்திரை செய்வது வெகு கஷ்டமாயிருந்தது.

சவுல் தாம் சிறுவயது முதற்கொண்டு நம்பியிருந்த விஷயங்களில் சிலவற்றை அவர் இயேசுவைச் சந்தித்தபிறகும் ஒப்புக்கொண்டார்.

கடவுள் சர்வஞானி, சர்வவல்லவர், சர்வநன்மைச் சொரூபி என்பதை அவர் எப்போதும் நம்பியிருந்தார். ஆயினும் இப்பொழுது இந்தப் பிரமாணத்தை முன்னிலும் அதிக ஆழமாகவும் கெட்டியாகவும் கிரகித்துக்கொண்டார்.

கடவுளுக்குச் சகல விஷயத்திலும் கீழ்ப்படிதலுள்ளவனாய் இருக்கவேண்டும் என்பதும் அவருடைய சித்தத்தையே தாம் செய்யவேண்டும் என்பதும் அவர் முன்னமேகொண்டிருந்த மனநிர்ணயம். கடவுள் அன்பு என்பதை இப்போது அவர் அனுபவசாட்சியாய்க் கண்டறிந்தபடியால் கர்த்தருக்கு இவ்விதமாய்க் கீழ்ப்படிவதில் அவருக்கு விசேஷ மகிழ்ச்சியுண்டானது.

தமது ஜனத்தை ஆளும் ரக்ஷாபெருமானாகிய மேசியாவை அனுப்புவதாகக் கடவுள் வாக்குத்தத்தம் செய்திருக்கிறார் என்பதையும் அவர் அவ்வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவார் என்பதையும் பவுல்
•

எப்போதும் நம்பிவந்தார். இப்பொழுதோ தாம் நினைத்திருந்ததைக் காட்டிலும் மெத்த ஆச்சரியமும் மகிமையுமான விதமாய் கடவுள் இந்த வாக்குத்தத்தத்தை நிறைவேற்றிவிட்டார் என்பதை அவர் உணர்ந்தார்.

இப்போது சவுலின் மனதில் புதிதாய்த் தோன்றிய நினைவுகளில் சில அவருடைய இளம்பிராயத்து நினைவுகளினின்று தோன்றினவை. கடினத்தன்மையும் கரியநிறமும் அசங்கியரூபமுமுள்ள கிழங்குகளினின்று தோன்றி, இப்போது அந்த ரஸ்தாவின் இருபக்கத்திலும் இருந்த அழகிய பூச்செடிகளைப்போலவே இவரது நினைவுகளும் அற்பசொற்ப ஆரம்பத்தினின்று தோன்றியிருந்தாலும் இப்பொழுது மிக்க அழகிய மாறுதலைப் பெற்றன.

திருஷ்டாந்தமாக, அவருடைய ஜீவியகாலமெல்லாம் தர்சுப்பட்டணத்துப் பள்ளிக்கூடத்தின் மணல் தரையில் உட்கார்ந்து தன் விரலினால் தரையில் எழுதிக்கொண்டிருந்த காலமுதல் மோசேயின் நியாயப்பிரமாணத்தைப்பற்றி அதிக உயர்வான நினைவுகொண்டிருந்தார். அதிகாலையில் கை கால் முகங் கழுவுகிறது முதலாக இரவில் தன் பாதரட்சைகளைக் கழற்றும்வரைக்குமுள்ள ஒவ்வொரு நாளையும் நாழிகையையும் மோசேயின் நியாயப்பிரமாணமே ஆட்சி செய்யுமென்று நம்பியிருந்தார். ஒரு பள்ளிக்கூடத்துச் சட்டங்களை ஏற்படுத்திய தலைமை உபாத்தியாயரைப்போல் கடவுள் இருந்தார். அவருடைய முகத்தை மாணாக்கர் ஒருபோதும் பார்த்ததில்லை. இந்தப் பள்ளிக்கூடத்துக்கு வேண்டிய சட்டங்களை மோசே கடவுளிடத்திலிருந்து பெற்றிருந்தார். இப்பள்ளிக்கூடத்தின் உதவி உபாத்திமார்களாகிய ரபிகள் (கமாலியேலைப்போல) இவற்றோடு இன்னும் சில சட்டங்களையும் கூட்டியிருந்தார்கள். இச்சட்டங்களின் தொகையோ இப்பொழுது கணக்குக்கடங்காததாயிற்று.

கடவுளுடைய பெரிய பள்ளிக்கூடத்தின் சட்டங்களை நசரேயர்கள் (கிறிஸ்தவர்கள்) மீறினார்களென்று தான் நினைத்ததினாலேயே சவுல் இயேசுவுக்கு விரோதமாகவும் அவருடைய அடியாருக்கு விரோதமாகவும் கோபாவேசமுடையவராய் இருந்தார். தாமே ஒரு உதவி உபாத்தியாயர் ஆகும்படிக்கு இந்தப் பள்ளிக்கூடத்திலன்றோ சவுல் ஒரு மாணாக்கனாகக் கல்வி கற்றுவந்தார்.

ஆனால் இப்பொழுதோ, இயேசு உண்மையாகவே உயிரோடிருந்தார். அவர் சவுலைச் சந்தித்துவிட்டார். இந்தப் பள்ளிக்கூடத்தின் தலைவருடைய முகத்தை இயேசுவின் முகத்தில் கண்டதாகச் சவுல் உணர்ந்திருந்தார். அந்த முகமே அன்பு. அந்தப் பள்ளிக்கூடத்தின் ஒரு பிரமாணம் அன்பு. சகல நியாயப்பிரமாணமும் அந்த அன்பே என்று இயேசுதாமே சொல்லியிருந்தார்.



சவுலுடைய மனதில் தோன்றிய மற்ற எண்ணங்கள் என்ன என்பதை அவரோடுகூட நாம் கடல்களையும் மலைகளையும் தாண்டிச் செல்லும்பொழுது நமக்குச் சொல்லுவார். இயேசுவைப்பற்றி இப்பொழுது சவுலுடைய மனதிலே நல் அபிப்பிராயங்கள் தோன்றின. அவர் மகா வீரர், கடவுளின் நேசபுத்திரர், பயமற்றவர், பரிசுத்தர், சர்வபலமுள்ளவர், பெருமைக்காரருக்கு எதிர்த்துநிற்கிறவர், பலயீனரிடத்திலும் சுகயீனரிடத்திலும் மிகுந்த இரக்க உருக்கங்களுள்ளவர். இவரே இப்பொழுது சவுலின் வீரனும் ரக்ஷகனுமானார். இனிமேல் சவுல் ஜீவனோடிருந்ததெல்லாம் இயேசுக்கிறிஸ்துவின் கொடியின் கீழ் நல்ல போராட்டம் செய்யும்பொருட்டே.

# A Summary of Old Testament History
## (For class work)

By the Rev. A. O. Brown, B.A.

## பழைய ஏற்பாட்டுச் சரித்திர சங்கிரகம்.

பழைய ஏற்பாட்டுக் காலங்களிலிருந்த இஸ்ரவேலருடைய சரித்திரத்தை ஆறு பாகங்களாகப் பிரிக்கலாம்.

| | | |
|---|---|---|
| I. | கோத்திரத்தலைவர்களும் மோசேயும் இருந்த காலம், கி. மு. | 2000–1200 |
| II. | யோசுவாவும் நியாயாதிபதிகளும் இருந்த காலம், கி. மு. | 1200–1050 |
| III. | பூர்வீக ராஜ்யம் ,, | 1050– 930 |
| IV. | பிரிவுபட்ட ராஜ்யம் ,, | 930– 722 |
| V. | யூதாராஜ்யத்தின் கடைசிக்காலம் ,, | 722– 586 |
| VI. | சிறையிருப்பும் மீட்சியும் ,, | 586– 432 |

I. கோத்திரத் தலைவர்களும் மோசேயும் இருந்த காலம், கி. மு. 2000–1200.

கிறிஸ்துவுக்கு ஏறக்குறைய 2000 வருஷங்களுக்குமுன் ஆபிரகாம் தனது ஜாதியைச்சேர்ந்த அநேகரோடு ஐப்பிராத்து நதிக்கு அருகான தேசத்தை விட்டுப்போய்ப் பலஸ்தீனாவில் குடியேறினான். அங்கே அவர்கள், தற்காலத்து அராபியரைப்போலவே, தங்கள் மந்தைகளுடன் இடத்துக்கிடம்போய், ஓர் இடத்திலும் நிலையின்றி அலைந்து திரிந்து சீவிக்கிறவர்களாயிருந்தார்கள். இந்த ஜாதியார்

பெருகி விருத்தியடையவே, அவர்கள் மோவாபியர், அம்மோனியர் ஏதோமியர் முதலிய பல ஜாதியாராகப் பிரிந்தார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் ஈசாக்கு யாக்கோபு என்பவர்களின் கீழ் பலஸ்தீனாவிலேயே வாசம்பண்ணிவந்தார்கள்.

ஏறக்குறைய கி. மு. 1700-ம் வருஷத்தில் ஆபிரகாமின் சந்ததியாரில் திரளான பேர் யாக்கோபுடன் எகிப்துக்குப் போய்ச் சேர்ந்தார்கள். அதற்கு முன்னமேயே யோசேப்பு எகிப்துதேசத்தில் அதிகாரஸ்தானத்திலிருந்தான். அதினால் அநேக வருஷகாலம் இஸ்ரவேலர் பட்சமாய் நடத்தப்பட்டு வந்தார்கள். என்றாலும், பிற்காலத்தில் அவர்கள் அடிமைகளாக்கப்பட்டு அதிக கஷ்டங்களை அனுபவித்தார்கள்.

பின்பு ஏறக்குறைய கி. மு. 1250-ம் வருஷத்தில் தேவன் தமது ஜனத்தை இரட்சிக்கும்படியாக மோசேயை எழும்பப்பண்ணினார். அவர்கள் கடைசியில் எகிப்தைவிட்டுப் போவதற்கு விடப்பட்டார்கள். ஆனால் பிற்பாடு எகிப்தியர்கள் அவர்களைச் சிவந்தசமுத்திரம் மட்டும் பின்தொடர்ந்து வந்தார்கள். இஸ்ரவேலர் சுகபத்திரமாய் அச்சமுத்திரத்தைக் கடந்துபோனார்கள். எகிப்தியர் அங்கே அமிழ்ந்து மாண்டார்கள்.

இதற்குப்பிறகு சீனாய் வனாந்தரத்தில் அலைந்துதிரிவதில் அநேக ஆண்டுகள் கழிந்தன. சீனாயில் தேவசித்தத்தை வெளிப்படுத்துவதாகிய நியாயப்பிரமாணத்தை மோசே பெற்றுக்கொண்டான். இதைத்தான் பின்பு யூதர்கள் விருத்தியாக்கி மோசேயின் நியாயப்பிரமாணம் என்று பேரிட்டார்கள். அவர்கள் அநேக வருஷம் அலைந்து திரிந்தபிற்பாடு கானான் தேசத்துக்கு வந்தார்கள்.

## II. யோசுவாவும் நியாயாதிபதிகளும் இருந்த காலம், கி. மு. 1200-1050.

இஸ்ரவேலர் கானான் தேசத்தில் பிரவேசிக்குமுன்னே, மோசே மரித்துப்போனான். யோசுவா அவர்களுக்குத் தலைவனானான். அவன் அந்த ஜனத்தை யோர்தானைக் கடந்து அப்புறம் செல்லும்படி நடத்திக்கொண்டுபோனான். அந்தத் தேசத்தை ஜெயிக்க அநேக வருஷங்கள் சென்றன. அங்கே குடியிருந்த ஜாதிகளை ஒவ்வொன்றாகத் துரத்திவிட்டுக் கடைசியில் இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரத்தாரும் கானான்தேசத்தில் குடியேறினார்கள்.

வெகுகாலம் வரைக்கும் அந்தக் கோத்திரத்தாருக்குள் ஒரு நிலையான ஆளுகை ஏற்படவில்லை. எல்லாம் குழப்பமாயிருந்தது. ஒவ்வொரு கோத்திரமும் சுதாவிலே தன்னிஷ்டப்படி நடந்துகொண்டு



வந்தது. சில கோத்திரத்தார் அவர்களுடைய சத்துருக்களாலே ஒடுக்கப்பட்ட பற்பல சமயங்களில், சில நியாயாதிபதிகள் தங்கள் ஜனத்தை இரட்சிக்கும்படி எழும்பினார்கள். ஆகிலும் ஒரு நிலையுள்ள துரைத்தனம் இல்லாதிருந்தது.

இவைகளுக்குப் பிற்பாடு சாமுவேல் தீர்க்கதரிசி எழும்பினான். அவன் அரசாட்சி ஸ்தாபகமாவதற்கு ஏதுவாயிருந்து, சவுலையும் தாவீதையும் ராஜாக்களாக அபிஷேகம்பண்ணினான்.

## III. பூர்வீக ராஜ்யம், கி. மு 1050-930.

ஐக்கியமாய் ஒன்றுசேர்ந்திருந்த இஸ்ரவேலருக்கு முதல்முதல் சவுல் என்பவன் ராஜாவானான். அவன் தனது அரசாட்சியின் துவக்கத்திலே யுத்தங்களில் ஜெயமடைந்துவந்தான். பிற்காலத்திலோ, பைத்தியம் என்று சொல்லத்தக்கதான அடங்கா மூர்க்காவேசத்துக்கு இடங்கொடுத்தான். பெலிஸ்தருக்கு விரோதமாய்ச்செய்த கில்போவா யுத்தத்திலே அவனும் அவன் குமாரனாகிய யோனத்தானும் மாண்டார்கள்.

ஏறக்குறைய கி. மு. 1000-ம் வருஷத்திலே சவுலுக்குப்பின் தாவீது பட்டத்துக்குவந்தான். அவன் பலபராக்கிரமங்களிற் சிறந்த அரசன். வீர தீர சூரனாகிய அவன் இஸ்ரவேலரின் சத்துருக்களை அத்தேசத்தினின்றும் துரத்திவிட்டான். அவன் சங்கீதவித்துவானும் கவிஞனாயும் அநேக சங்கீதங்களுக்கு ஆக்கியோனாயுமிருந்தான். அவனுக்குப்பின் அவன் மகனாகிய சாலொமோன் பட்டத்துக்கு வந்தான். இந்தச் சாலொமோன் ஞானியாயும் மகா வல்லமையுள்ள அரசனாயுமிருந்தபோதிலும் ஜனங்களைக் கொடுமையாயும் குரூரமாயும் நடத்தினான். இது அதிக திருப்தியின்மையை விளைத்து, சாலொமோனுடைய மரணத்துக்குப் பிற்பாடு ராஜ்யத்தை இரண்டு ராஜ்யங்களாகப் பிரிவுபடச்செய்தது.

## IV. பிரிவுபட்ட ராஜ்யம், கி. மு. 930-722.

சாலொமோனுடைய குமாரனாகிய ரெகொபெயாம் மூட அரசனாயிருந்து தன் தகப்பன் தொடங்கின பொல்லாங்குகளை நடப்பித்துவிருத்தியாக்கினான். அதனால் வடக்கேயிருந்த கோத்திரத்தார் யெரொபெயாம் தலைமையின் கீழ்க் கலகஞ்செய்து ரெகொபெயாமால் ஆளப்பட்ட ராஜ்யத்திலிருந்து பிரிந்துபோனார்கள்.

இந்தக் காலமுதல் 200 வருஷங்களுக்கு மேலாக இரண்டு எபிரேய ராஜ்யங்கள் இருந்துவந்தன. பத்துக் கோத்திரங்கள் ஒன்றுசேர்ந்திருந்த வடராஜ்யம் இஸ்ரவேல் என்னப்பட்டது. எருசலேமை ராஜதானியாகவுடைய தென்ராஜ்யம் யூதா என்னப்பட்டது.

இந்த இரண்டு ராஜ்யங்களின் சரித்திரமும் அவைகள் ஒன்றுக்கொன்றும், அவைகளுக்கும் சீரியா அசீரியா தேசங்களுக்கும் உண்டான சம்பந்தங்களும், இராஜாக்களின் முதலாம் இரண்டாம் புஸ்தகங்களில் விபரமாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றன.

வடராஜ்யம் கி. மு. 722-ல் முடிவடைந்தது. அசீரியர் இஸ்ரவேலோடு யுத்தஞ்செய்து இந்த வருஷத்தில் சமாரியாவைப் பிடித்து, ஜனங்களை அசீரியாவுக்குக் கொண்டுபோய்விட்டார்கள். அவர்கள் அத்தேசத்திலிருந்து ஒருக்காலும் திரும்பிவரவில்லை. அவர்களுக்குப் பின்பு நேரிட்டது இன்னதென்று நமக்குத் தெரியாது.

அசீரியர் இஸ்ரவேல் ஜனங்களைக் கொண்டுபோனபின்பு அவர்களுக்குப் பதிலாக பற்பல ஜாதிகளடங்கிய வேறு ஜனங்களை அனுப்பினார்கள். இந்த ஜனங்கள் வட ராஜ்யத்தில் குடியேறினார்கள். இவர்கள்தான் பிற்காலத்தில் சமாரியர் என்று சொல்லப்பட்டார்கள். இந்தச் சமாரியரைக்குறித்துச் சுவிசேஷங்களில் வாசிக்கிறோம்.

### V. யூதா ராஜ்யத்தின் கடைசிக்காலம், கி. மு. 722–586.

இஸ்ரவேல் ராஜ்யம் அழிந்துபோனபிறகும், கொஞ்சங்குறைய 150 வருஷங்கள் வரைக்கும் யூதாராஜ்யம் நிலைத்திருந்தது. ஆனால், ஜனங்கள் நாளுக்கு நாள் நன்மார்க்கத்தைவிட்டு துன்மார்க்கத்தில் வளர்ந்து, வல்லமையில் குறைந்துவந்தார்கள். கி. மு. 586-ம் வருஷத்தில் பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் அந்த யூதாவின் ஜனங்களை முறியடித்து, எருசலேம் நகரத்தைப் பிடித்து, ஜனங்களில் மிகுதியானவர்களை அடிமைகளாகப் பாபிலோனுக்குக் கொண்டுபோய்விட்டான்.

### VI. சிறையிருப்பும் மீட்சியும், கி. மு. 586–432.

யூதர்கள் கொஞ்சங்குறைய 50 வருஷம் சிறையிருந்த பிற்பாடு, பாபிலோன் தேசம் பெர்சியாவின் ராஜாவாகிய கோரேஸினால் ஜெயிக்கப்பட்டது. யூதர்களில் ஏராளமானவர்கள் யூதாவுக்குத் திரும்பிப் போவதற்குக் கோரேஸ் உத்தரவுகொடுத்தான். இது ஒருவேளை கி. மு. 538-ம் வருஷத்தில் நடந்திருக்கலாம். அவர்கள் எருசலேமைத் திரும்பக் கட்டுவதற்கு ஆரம்பித்தார்கள். ஆகிலும் சமாரியர் அவர்களை அதிகமாய்த் தடுத்து அக்கட்டட வேலையை நிறுத்திவிட்டார்கள்.

ஏறக்குறைய 60 வருஷங்களுக்குப் பின் ஆசாரியனாகிய எஸ்றா இன்னும் ஏராளமான யூதர்களைப் பாபிலோனிலிருந்து கூட்டிக்கொண்டுவந்தான். அதற்கு 13 வருஷங்களுக்குப் பிறகு மற்றவர்களோடு நெகேமியாவும் வந்தான்.



# Jesus' Teaching about God

*Adapted from 'The Jesus of History'*

**By T. R. Glover**

## கடவுளைப்பற்றி யேசுநாதருடைய உபதேசம்

(தொடர்ச்சி)

எல்லாவற்றிற்கும் மேலே கடவுள் சிங்காசனத்தில் வீற்றிருக்கிறார். (மத். $23^{22}$.) அபாயங்கள் நேரிடும்போது நாம் இதை மறக்கிறோம். யேசு மறக்கவில்லை. நமக்கு நேரிடும் சந்தேகத்திலும் கவலையிலும் கடவுள் ஆளுகிறார் என்று முதல் முதல் நினைக்கவேண்டுமென்று வற்புறுத்துகிறார். 'இராஜ்யம் உம்முடையதே' என்று உணர்வோடு சொன்னால் நமக்குச் சமாதானமும் சந்தோஷமும் வரும். யேசு தேவராஜ்யத்தைப்பற்றி அதிகம் பேசினாலும், அந்த உபதேசத்தில் ராஜ்யத்தை ஆளுகிற கடவுளே முக்கியம். யேசு நமக்குக் காட்டிய பிதாவே அதை ஆளுகிறவர். நம்முடைய தகப்பன் சிங்காசனத்தில் ஆளுகிறார் என்ற எண்ணம் எவ்வளவு ஆறுதலைத் தரத்தக்கது! அவருடைய சித்தம் எங்களுக்குச் சமாதானம். ஆயினும் கடவுளுடைய நியாயத்தீர்ப்புக்களை அவர் மறக்கிறதில்லை. இன்னாருக்குப் பயப்படவேண்டும் என்று உங்களுக்குக் காட்டுவேன் என்றார் (லூக். $12^{5}$.) கடவுளுக்குப் பயப்படவேண்டும். பட்சம், கண்டிப்பு, இரண்டுமுடையவர் கடவுள்.

கடவுள் மனிதரில் ஒவ்வொருவனையும் நடத்திவருகிற விதத்தைக் கவனித்தால் அவருடைய சுபாவத்தை நன்றாயறியலாம் என்று யேசுவின் மொழிகளால் நமக்குப் புலப்படுகிறது. பழைய ஏற்பாட்டில் கடவுள் வானத்தையும் பூமியையும் ஆளுகிறதைப்பற்றி வாசிக்கிறோம். சுவிசேஷத்திலோ கடவுள் மனிதரில் ஒவ்வொருவனையும் ஆளுகிறதைப் பார்க்கிறோம். 'சமுத்திரம் அவருடையது, அவரே அதை உண்டாக்கினார்; வெட்டாந்தரையையும் அவருடைய கரம் உருவாக்கிற்று' (சங். $95^{5}$). 'தீவுகளை ஒரு அணுவைப்போல் தூக்குகிறார்' (ஏசா. $40^{15}$). யேசு இவ்விதமாய் அடிக்கடி பேசவில்லை. ஆயினும் அவர் கடலின் கொந்தளிப்பை அமர்த்தினபோது பேசிய வார்த்தைகளில் இவ்வெண்ணம் அடங்கியிருக்கிறது. சீஷர்கள் திடுக்கிட்டு அவரை எழுப்பினபோது அவர்களுடைய பயம் அவருக்கு ஆச்சரியமாயிருந்தது. 'இது யாருடைய கடல், யாருடைய காற்று? கடலையும் காற்றையும் உங்கள் தகப்பன் அடக்குவார் என்று நீங்கள் நம்பக்கூடாதா?' (மத். $8^{26}$). கடவுளுடைய அன்பை அவர் எப்போதும்

அதிக பலமாய் வருணிக்கிறார். திருஷ்டாந்தமாக கடன்வாங்கின இரண்டுபேரைப்பற்றிய உவமையைப் பார்க்க (லூக். $7^{42}$). இரண்டுபேருக்கும் கொடுக்கிறதற்கு பணமில்லாமல் இருந்தபோது அவரிடம் போய் அப்படிச் சொன்னார்கள். அப்படிப்பட்ட சமயத்தில் நாம் என்னத்தைச் சொல்லியிருப்போம்? நாம் அவசியத்தின் பேரில் மன்னித்தாலும், அவர்களை நன்றாகக் கோபித்து அனுப்பியிருப்போம் அல்லவா? இந்தக் கடன்காரனோ, 'அது ஒன்றுமில்லையே, நீங்கள் சிநேகிதராச்சே, உங்களுக்கு இதைப்பற்றி கவலை ஒன்றுமிருக்கவேண்டாம்' என்றான். மூலபாஷையில் இனிமையான அருளோடு மன்னித்துவிட்டான் என்று சொல்லியிருக்கிறது. இரண்டுபேரும் அவனை நேசித்தார்கள், நேசிக்காமலிருக்க முடியவில்லை. கடவுள் மன்னிக்கும்போது இப்படிப்பட்ட அருளோடும் அன்போடும் மன்னிக்கிறார் என்பது யேசுவின் உபதேசம்.

கடவுள் எவ்வளவு உதாரகுணமுள்ளவர்! 'தீயோர்மேலும் நல்லோர்மேலும் அவர் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள்மேலும் அநீதியுள்ளவர்கள்மேலும் மழையைப் பெய்யப்பண்ணுகிறார்' (மத். $5^{45}$). கெட்டவனுடைய தோட்டத்திலும் கடவுளுடைய புஷ்பங்கள் அழகாக மலரும். பிள்ளை நல்ல பிள்ளையாயிருந்தாலும் கெட்ட பிள்ளையாயிருந்தாலும் அதற்கு அவசியமானது என்ன என்று பரமபிதாவுக்குத் தெரியும், அவர் அதைக் கொடுப்பார். நீங்கள் உங்கள் சத்துருக்களை நேசித்தால் கடவுளுக்கு மெய்ப்பிள்ளைகளாயிருப்பீர்கள் என்று சொல்லுகிறார். (மத். $5^{44}$.) மேலும், கடவுள் எவ்வளவு பொறுமையுள்ளவர் என்று காட்டினார். ஒரு மனுஷனுக்குத் தவணை வேண்டுமென்றால் தவணை கொடுப்பார். நல்லவர்கள் ஆகிறதற்கு அவர் மனுஷருக்கு வேண்டிய நேரத்தையும் சமயத்தையும் கொடுப்பார், சிலவேளை அதற்கு மிஞ்சியும் கொடுப்பார். அத்திமரத்தின் உவமையில் தோட்டக்காரன் மரத்துக்காக எப்படிப் பரிந்துபேசி அதற்காக இன்னும் தவணை பெற்றுக்கொள்ளுகிறான் என்று கவனிக்க (லூக். $13^{8}$). கடவுள் அப்படிப்பட்டவர் என்கிறார் யேசு.

கடவுள் ஒவ்வொருவனையும் நேசிக்கிறார் என்று நம்புவது இலேசல்ல. கடவுள் என்னை நேசிக்கிறாரா என்று நாம் நம்மைக்கேட்டால் இதின் கஷ்டந் தெரியும். நாம் யேசுநாதருக்குப் பக்கத்தில் இருந்தால் அதை நம்புவோம், மற்றப்படி நம்புவது கஷ்டம். கடவுள் ஒவ்வொரு மனிதனுடைய ஆத்துமாவை அருமையாக மதிக்கிறார் என்று யேசு திரும்பத் திரும்ப வற்புறுத்துகிறார். காணாமற்போன ஆடு அகப்பட்டபோது சொந்தக்காரனுக்கு இருந்த சந்தோஷத்தையும், அதுபோல என்று தொடங்கி யேசு சொன்ன மொழியையும் நினைக்க.



(லூக். $15^{7}$.) கடவுள் முதல் முதல் இந்த அழகிய உலகத்தை சிருஷ்டித்தபோது, விடியற்காலத்து நட்சத்திரங்கள் ஏகமாய்ப் பாடி, தேவபுத்திரர் எல்லாரும் கெம்பீரித்தார்களாம் (யோபு $38^{7}$). ஒரே யொரு பாவி குணப்பட்டால் அதே சந்தோஷம் கடவுளுக்கு முன்பாக இருக்கும். கடவுள் உலகத்தைச் சிருஷ்டித்தபோது அப்படிப்பட்ட ஆனந்தம் உண்டானது ஆச்சரியமல்ல. நேற்று ஒரு கூலியாள் தன் நெஞ்சைக் கடவுளுக்கு ஒப்படைத்தபோது அந்த ஆனந்தமுண்டானதென்று நம்புகிறோமா? யேசு அப்படி நம்பினார். அவருடைய உபதேசத்துக்கு அதுவே மூலம். நாம் நினைக்கக்கூடியதற்கு மிகவும் அதிகமாகக் கடவுள் மனிதர் ஒவ்வொருவரையும் நேசித்து அவரவர்களுக்காகக் கவலைப்படுகிறார். இந்தச் சத்தியத்தை நாம் நமக்குச் சொந்தமாக்கக்கூடும் என்றால், சுவிசேஷத்தின் மீதியான பாகத்தை நம்புவது இலேசு. ஆனால் யேசு உதவிசெய்தால் தான் அதை நம்பக்கூடும்.

# Life Vacant and Life Filled

## Four Bible Studies

## காலி ஜீவனும், நிறப்பப்பட்ட ஜீவனும்

### I. வெறுமையுள்ளம். (லூக்கா $11^{24-26}$)

இம் மூன்று வசனங்களை இரண்டு மூன்று தடவை வாசிக்க. அசுத்த ஆவி ஓயாமல் என்னத்தைத் தேடிக்கொண்டிருக்கிறது? (24-ம் வசனம் பார்க்க.) எந்த ஆத்துமாவில் இளைப்பாறலாம் என்று தேடிக்கொண்டிருக்கிறது. 'என் வீட்டுக்கு' என்பதைக் கவனிக்க. அந்த ஆத்துமாவில் எனக்கு இடம் இருக்குமட்டும் அது என்னுடையது என்பது அசுத்த ஆவியின் அபிப்பிராயம். 'என் வீட்டுக்கு' திரும்பிப்போகவேண்டும் என்ற ஆத்திரத்துக்குக் காரணமென்ன? வீடு அசுத்தமாயிருப்பது காரணமா, வீடு காலியாயிருப்பது காரணமா? (25-ம் வசனம் பார்க்க.) அசுத்த ஆவி திரும்பிவரும்போது எல்லாம் முன்னே இருந்தபடியே இருக்கிறதா? (26-ம் வசனம் பார்க்க.) உவமையில் இருக்கிற படத்தைப் பார். நேர்த்தியான ஒரு சின்ன வீடு சுத்தமும் அலங்காரமுமாயிருக்கிறது. அதோ, வீட்டுக்குக் கிட்டப்போகிறது, அதென்ன? யாரோ ஒரு பிரயாணியா? சாதாரண பிரயாணியல்ல, பொல்லாதவன். காலில் மெத்த தூசி, அங்குமிங்கும் அலைந்ததினாலே. அந்தப் பொல்லாத பிரயாணி

ஜயப் பார்க்க மனம் திடுக்கிடும். ஐயோ! அந்தப் பிரயாணி ஒரு திருடனைப்போல் இரகசியமாய்ப் போய் ஜன்னல்வழியாய் எட்டிப் பார்க்கிறான். உள்ளே இருக்கிறவர்களுக்கு எவ்வளவு மோசம்! பயப்படாதே, உள்ளே யாருமில்லை. போய்விடுகிறான் பிரயாணி. சீக்கிரத்துக்குள் திரும்பிவருகிறான். அவன் மாத்திரமா? அவனோடு கூட அவனைப்போல் கெட்டுப்போன ஏழுபேரும் வருகிறார்கள்.

இப்படத்தைக் காட்டி யேசுநாதர் சிலருடைய சரித்திரத்தைச் சுருக்கிச் சொல்லியிருக்கிறார். யாருடைய சரித்திரத்தை? யூதருடைய சரித்திரத்தை, விசேஷமாகப் பரிசேயருடைய சரித்திரத்தை இதில் தொகுத்துச் சொல்லியிருக்கிறார். ஆனாலும் 23-ம் வசனத்தைப் பார்க்கும்போது அவர்களைமாத்திரம் குறிக்கிறார் என்று சொல்லுவோமா? 23-ம் வசனத்தில் யாரைக் கண்டிக்கிறார்? தீச்செயலைச் செய்கிறவர்களையா, ஒன்றுஞ் செய்யாமலிருக்கிறவர்களையா? தமக்கு விரோதமாய்ப் போராடுகிறவர்களையா, போரில் பிரவேசியாமல் சும்மா இருக்கிறவர்களையா? கிறிஸ்துவுக்கும் சாத்தானுக்கும் யுத்தம் நடக்கிறது. அந்த யுத்தத்தில் நாம் இப்பக்கத்தையாவது அப்பக்கத்தையாவது சேராமல் நடுவில் நிற்கலாமா? (23-ம் வசனம் பார்க்க.)

பரிசேயரை முதலாவது திருஷ்டாந்தமாய் எடுத்துப் பார்ப்போமாக. அவர்கள் எந்தப் பிசாசுக்களைத் தங்களிலிருந்து துரத்தியிருந்தார்கள்? அவர்கள் துன்மார்க்க ஜீவியம் பண்ணினார்களா? விக்கிராராதனை செய்தார்களா? அவர்கள் ஒழுங்காய் நடக்கவில்லையா? இந்தத் தீமைகளை அவர்கள் துரத்தியிருந்தார்கள். அக்காலத்தில் இருந்த சாதாரணமான மனிதருடைய நடக்கையை நாம் ரோமர் $1^{18-32}$ வாசிக்கும்போது, பரிசேயர் அவர்களைப் பார்க்கிலும் நல்லவர்கள் என்று பார்க்கிறோம். பரிசேயரை நாம் இகழவேண்டியதில்லை. அவர்களுக்குப் பதிலாக நாம் அந்த இடத்தில் இருந்திருப்போமாயின் அவர்களைக்காட்டிலும் நல்லவர்களாயிருந்திருப்போம் என்று நினைக்கவேண்டாம். ஆயினும் யேசு விசேஷித்த கண்டிப்போடு மற்றவர்களுடைய குற்றங்களையல்ல, இவர்களுடைய குற்றங்களையே எடுத்துக் கூறுகிறார். (மத். 23-ம் அதிகாரம் பார்க்க.) வேதபுஸ்தகம் பரிசேயரை நமக்குக் காட்டி அநேக விஷயங்களைப்பற்றி நம்மை எச்சரிக்கிறது. அவைகளில் ஒன்று, சில தீமைகளைத் தங்கள் ஜீவியத்திலிருந்து நீக்கி, அவைகளுக்குப் பதிலாகப் புது நன்மைகளைப் பெறாதவர்களுக்குண்டாகும் அபாயம்.

ஒரு மனிதனுக்காவது ஒரு பிள்ளைக்காவது 'செய்யாதே' என்று சொல்லுகிறது மெத்த இலேசு. யேசுவின் உபதேசத்தைப்பார்த்தால் குற்றங்களை விட்டுவிடவேண்டும் என்றும் தேவனுடைய சித்தத்தின்



படி செய்யவேண்டும் என்றும் சொல்லியிருக்கிறது. ஆனாலும் அந்த இரண்டில் எதை அதிகமாக அழுத்திப் போதிக்கிறார்? தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறதே விசேஷம். குற்றங்களை விட்டுவிடப் பிரயாசப்படுகிறது ஏணியின் முதற்படி. பத்துக் கட்டளைகளில் அந்தப் படியைப் பார்க்கிறோம். (யாத். 20.) அப்படியே ஆஸ்தியுள்ள வாலிபனுக்கு ஆண்டவர் முதலில் சொன்ன புத்தி என்ன? (மத். $19^{18}$.) ஆனாலும் யேசு அவனுக்கு அந்தப் புத்தியைமாத்திரம் சொல்லவில்லை. (மத். $19^{20}$.) எந்த ஆத்துமாவில் பிசாசு இருந்த இடம் நிரப்பப்படவில்லையோ, அந்த ஆத்துமாவுக்கு அபாயம். தீமை செய்கிறதினாலே மாத்திரமல்ல, நன்மை செய்யாமலிருக்கிறதினாலே நரகம் கிடைக்கும். யோபு இதைப்பற்றிச் சொல்லுகிறதைக் கவனிக்க. (யோபு $31^{17,19,20,22}$.) ஆண்டவர்தாமே சொல்லுகிறது என்ன? (மத். $25^{37-46}$.) மத். $25^{41}$-இல் அடங்கிய பயங்கரமான வார்த்தைகள் யாரைப்பார்த்துச் சொல்லப்பட்டன? அவர்கள் எந்தத் தீச்செயலைச் செய்திருந்தார்கள்? தாலந்தைப் புதைத்தவன் செய்த தீமை என்ன? (மத். $25^{24}$.)

ஒருவேளை நம்மில் அநேகர் துன்மார்க்க ஜீவியம் பண்ணுகிறதில்லை, உடன் மனிதரைப் பகைக்கிறதில்லை, தேவனை வேண்டுமென்று விரோதிக்கிறதில்லை. எத்தனைபேருடைய ஜீவியமோ வெறுமையாயிருக்கிறது! சிலருடைய மனது நல்ல எண்ணங்களும் யோசனைகளுமில்லாமல் காலியாயிருக்கிறது. இன்னும் சிலர் மத். 25-இல் சொல்லியிருக்கிறவர்களைப்போல மற்றவர்களுக்கு உதவி ஒன்றுஞ் செய்கிறதில்லை. இன்னுஞ் சிலருக்கு வேலையில்லாத சமயத்தில் நேரத்தைப் போக்கத்தெரியாது. அப்படிப்பட்டவர்களைக்குறித்து 'அவன் கெட்டவனுமல்ல நல்லவனுமல்ல' என்று சொல்லுகிறோம். வெறும் ஜீவியத்தில் பிசாசு தன் இஷ்டப்படியே பிரவேசிக்கலாம்.

## A New Translation of I Timothy

**By the Revds. F. Kingsbury, L. P. Larsen, and G. E. Phillip**

### I திமோத்தேயு

### ஒரு புது மொழிபெயர்ப்பு

(தொடர்ச்சி)

[கவனிப்பு. இந்த மொழிபெயர்ப்புக்கும் வேதாகமசங்கத்துக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை. வேதாகமசங்கத்தார் இப்போதுள்ள தமிழ் மொழிபெயர்ப்பைத் திருத்தவேண்டியது அவசியமா இல்லையா

என்பதைக்குறித்து ஆலோசித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எப்படித் தீர்மானம்பண்ணினாலுஞ் சரி, அந்த வேலைக்குச் சில வருஷங்கள் செல்லும். அதற்குள்ளே சிலர் மூலபாஷையின் அர்த்தத்தைத் திட்டமாய்த் தமிழில் வெளியிடப் பிரயாசப்பட்டால் பயன்படும் என்று கருதி நாங்கள் மூவரும் சேர்ந்து இம்மொழிபெயர்ப்பை இயற்றி இதில் அச்சிட்டிருக்கிறோம்.]

### 2-ம் அதிகாரம்

நாம் முதலாவது வற்புறுத்துவது எதுவெனில், நாம் பூரணபக்தியும் மரியாதையுமுள்ளவர்களாய்ச் சாந்தத்தோடும் அமைதியோடும் வாழும்படி, அரசர் மேலதிகாரிகள் முதலிய மனிதர் எல்லார்பொருட்டும் வேண்டலும் மன்றாடலும் விஞ்ஞாபித்தலும் நன்றிசெலுத்தலும் பண்ணவேண்டும் என்பது. இப்படிச் செய்வது நல்லது. நமது இரட்சகராகிய கடவுளது பார்வையில் ஏற்றுக்கொள்ளத் தக்கது. மனிதர் எல்லாரும் இரட்சிக்கப்படுவதும் உண்மையை அறிவதும் அவர் கருத்து, [ஏனெனில்] கடவுள் ஒருவரே, கடவுளுக்கும் மனிதருக்கும் மத்தியஸ்தர் ஒருவரே, அவர் மனிதராகிய கிறிஸ்து யேசுவே. மீட்கும் பொருளாய்த் தம்மையே எல்லார் பொருட்டும் தந்தவர் இவரே. இதற்குச் சாட்சி ஏற்ற காலத்தில் [சொல்லப்படுகிறது.] இதின்பொருட்டு நான் [சுசமாசாரம்] கூறுவோனாகவும் தூதனாகவும் நியமிக்கப்பட்டேன். தூதனாக நியமிக்கப்பட்டேன் என்பது பொய்யல்ல, மெய்யே; புறஜாதிகளுக்கு நம்பிக்கையோடும் சத்தியத்தோடும் படிப்பிக்கும் போதகனாக [நியமிக்கப்பட்டேன்.]

ஆகையால் எங்கும் ஆண்கள் கோபமும் தர்க்கமுமின்றிக் கறையில்லாத கைகளை உயர்த்திப் பிரார்த்திக்கவேண்டுமென்பது என் இஷ்டம். பெண்களோவெனில் பின்னிய கூந்தலினாலும், பொன் முத்து முதலிய ஆபரணங்களினாலும், விலையுயர்ந்த ஆடையினாலும் தங்களை அலங்கரியாமல், தகுந்த உடை உடுத்து நாணமும் அடக்கமும் உடையவர்களாய் ஈசுவரபக்தியைச் சாதிக்கும் பெண்களுக்கேற்றவாறு நற்செயல்களினால் தங்களை அலங்கரிக்கவேண்டும். என்பது



என் இஷ்டம். ஒரு பெண் எல்லாவற்றிலும் அடங்கியிருந்து அமைதலோடு கற்கக்கடவள். படிப்பிக்கவாவது ஆண்மேல் அதிகாரஞ்செலுத்தவாவது பெண்ணுக்கு இடங்கொடேன். அவள் அமைதலோடு இருக்கவேண்டும். முதலில் உருவாக்கப்பட்டவன் ஆதாம்; பின்பே ஏவாள். அன்றியும் ஆதாம் வஞ்சிக்கப்படவில்லை, பெண்ணே வஞ்சிக்கப்பட்டு வரம்புகடந்தாள். ஆயினும் பிள்ளைகளைப் பெற்று இரட்சிக்கப்படுவாள், நம்பிக்கையிலும் அன்பிலும் தூயராகலிலும் அடக்கத்திலும் நிலைத்திருப்பார்களாயின்.

## The Preparation of Sermons

**By the Rev. H. Spencer, B.A.**

### பிரசங்கமுறை

(தொடர்ச்சி)

இதுவரை கிறிஸ்தவப் பிரசங்கி இந்து ஜனங்கள் கூடுகிற கூட்டத்தில் விவரித்துப் பேசவேண்டிய விஷயங்கள் இன்னின்னவைகளென்பதைக்குறித்து பிரஸ்தாபித்திருக்கிறது. உபந்நியாசஞ்செய்வதற்குத் தன்னைத் தயார்செய்துகொள்ளவேண்டிய மேரை என்னவென்று இப்போது விசாரித்தறியவேண்டும்.

பிரசங்கிகள் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் தங்கள் ஊழியத்தை நிறைவேற்றவேண்டியதாய் இருக்கிறபடியால், அவ்வூழியத்தைச் செய்யவேண்டிய விதங்களும் வெவ்வேறு மேரையாயிருக்கின்றன. உதாரணமாக, பிரசங்கி இருக்கிற ஊருக்கு அப்பால் ஒரு சின்ன சந்தை இருக்கிறதென்று வைத்துக்கொள்வோம். அவர் வாரத்துக்கோர்முறை கிராமங்களுக்குப்போய்ப் பிரசங்கஞ்செய்து வருகிறதற்கு அனுகூலமாயிருக்கிறது. அவர் அந்த சந்தையில் பிரசங்கஞ்செய்யும்போதெல்லாம் அதே ஜனங்கள் கூடிவந்து கேட்கிறார்கள். அதேவிதமாய் சிற்றூர் ஒன்றில் நடந்தேறுகிற பாடசாலை ஆராதனையில் அதே ஜனங்கள் கூடி அடிக்கடி ஆராதிக்கலாம். அவர்களுக்கு அடிக்கடி கிரமமாக கிறிஸ்துவின் போதனைகளில் முக்கியமான கொள்கைகளைப் போதிப்பதற்கு நல்ல சமயம் கிடைப்பதுண்டு. இவ்வித சந்தர்ப்பங்களில் பிரசங்கி விவரிக்கிற விஷயங்களுக்கு அனுகூலமான படங்களைக்கொண்டு அவைகளைப் போதிக்கிறதினால் விசேஷமான

பிரயோஜனம் உண்டாவதுண்டு. ஓய்வுநாள் பள்ளிக்கூடத்து ஐக்கிய சங்கத்தார் வருஷந்தோறும் நூதனமான படங்களுள்ள கட்டு ஒன்றை சலபமான விலைக்கு விற்கிறார்கள். இவ்வித கட்டொன்று பிரசங்கிமார் ஒவ்வொருவரிடத்திலும் இருந்தால் அவர்கள் ஊழியத்துக்கு அது உதவியாயிருக்கும். இதுவுமல்லாமல், கைப்பிரதிகளும் சுவிசேஷப்புஸ்தகங்களுமில்லாமல் பிரசங்கிமார் என்றைக்கும் தங்கள் அலுவலுக்குப் போகலாகாது. சுவிசேஷப் பிரதிகளை விற்கிறதில் நமக்கு ஆசையும் முயற்சியும் இருக்குமானால் அவைகளைச் சுமந்து திரிவதற்கும் மனம்வரும். மைசூரைச்சேர்ந்த சேகரமொன்றில் ஆயிரம் சுவிசேஷப்பிரதிகள் ஒரு வருஷத்தில் விற்பனையாயிற்றென்கிற வர்த்தமானம் வந்தது. கைத்தாள்களைக் கொடுக்கையில் ஒரே மாதிரியான பிரதிகளை யாவருக்கும் கொடுக்கப்படாது. ஒருவனுக்கு ஒரு மாதிரியும் இன்னொருவனுக்கு வேறுமாதிரியுமான பிரதியும் கொடுக்கிறதாயிருந்தால், அவர்கள் தங்கள் கைக்குவந்தபிரதிகளை வாசித்தான பின் மற்றொருவனுக்குக் கொடுத்து அவன் வசத்திலிருக்கிற மற்றத்தாளை வாங்கி வாசிக்கக்கூடும். அங்கங்கே தான் முதலில் கொடுத்த பிரதிகளில் எழுதியிருக்கிற விஷயங்களைக்குறித்து பிரசங்கி சில கேள்விகளை சில சமயங்களில் கூடியபோது அவர்களைக் கேட்பது உத்தமம்.

சாதாரணமாய் பிரசங்கியார் இவ்விதமாக கிரமமாய் வாரத்துக்கு ஓர்முறை அதே இடத்துக்குப்போய் பிரசங்கஞ்செய்வது கூடாமை. இவ்வாறு போகக்கூடியதாயிருந்தாலும் அல்லது அதே பாடசாலையில் வாரந்தோறும் பிரசங்கித்தாலும் அவருடைய வார்த்தைகளை அடிக்கடி கேட்கிறவர்கள் ஒரே ஜனங்களல்ல. பிரசங்கிக்கிற ஒவ்வொரு வேளையிலும் வேறே வேறே ஜனங்கள் கேட்கிறார்கள். ஆகவே பிரசங்கி எவ்விதமாய் தன் பிரசங்கத்தை ஆயத்தஞ்செய்யவேண்டுமென்பதைக் கவனிப்பது நலம்.

பிரசங்கஞ் செய்வதற்காக வெளியே புறப்படுமுன் முதலாவது விவரித்துச்சொல்லவேண்டிய விஷயத்தை நன்றாய் அறிந்துகொள்ளவேண்டும். இரண்டு அல்லது மூன்று பேர் ஒரே கூட்டத்தில் பேசவேண்டிய காலத்தில் அவர்கள் ஒன்றுகூடி இன்னின்ன விஷயங்களைக் குறித்து தாங்கள் பேசப்போகிறோம் என்று திட்டஞ் செய்துகொள்வது யூகம். குருமார் சிலரும் பிரசங்கிமார் சிலரும் இருக்கிற பெரிய பட்டணங்களில் வாரந்தோறும் நடக்கிற பிரசங்கிகளின் கூட்டத்தில் வருகிற வாரநாட்களில் விவரித்து அறிவிக்கவேண்டிய சுவிசேஷ விஷயங்களை முன்னமே நியமித்துக்கொண்டால் அனுகூலமாகும்.

C. L. S. PRESS, MADRAS—1917

No. 139. டிசெம்பர் 1917

# வேதியர் விளக்கு

## The Christmas Story

### இயேசுவின் பிறப்பு

1. ரோமாபுரிச் சிங்காசனத்தில் அகஸ்துராயன் வீற்றிருந்தான். அவன் ஒரு வார்த்தை சொல்ல, நாகரீகமடைந்திருந்த முழு உலகத்தின் அரசாட்சியும் நடந்தேறக்கூடியது. அவன் செல்வத்தினாலும் அதிகாரத்தினாலும் செருக்கடைந்திருந்தான். அவனுடைய விஸ்தார ராஜ்யத்தின் ஜனத்தொகையையும் வருமானத்தையும் கணக்கெடுப்பது அவனுக்குப் பிரீதியான வேலைகளில் ஒன்று. ஆகையால் லூக்கா சுவிசேஷகன் சொல்லுகிறபடி, உலக முழுவதும் வரி ஏற்படுத்தும்படி, அல்லது உள்ளபடி சொல்லவேண்டுமானால், பிற்காலத்தில் வரி ஏற்படுத்துவதற்கு ஆதாரமாக, தன்னுடைய பிரஜைகளின் ஜனசங்கியை எடுக்கும்படி கட்டளை கொடுத்தான். பலஸ்தீனாவும் இக்கட்டளைக்குட்பட்ட தேசங்களில் ஒன்று. இத்தேசத்து ராஜாவான மகா ஏரோது அகஸ்துராயனுக்குக் கீழ்ப்பட்ட சிற்றரசன். இந்தக் கட்டளையினால் பலஸ்தீனா நாட்டார் யாவரும் இடம்பெயர்ந்தனர். ஏனென்றால் ஜனங்கள் அக்காலத்தில் வசித்துக்கொண்டிருக்கும் இடங்களிலல்ல, யூதருடைய வழக்கத்தின்படி அவரவர் தம் தம் பூர்வீகமான பன்னிரண்டு கோத்திர நாடுகளிற் சென்று அவ்வவ்விடங்களிலிருக்கக் குடிமதிப்பு எழுதப்பட்டது.

2. அகஸ்துராயன் கட்டளையினால் தங்கள் இருப்பிடங்களை விட்டு வெளியேறினவர்களில் இருவர் கலிலேயாவிலுள்ள நாசரேத்தூர் தச்சனாகிய யோசேப்பும் அவனுக்கு விவாகத்துக்குக் குறிக்கப்பட்ட மரியாளுமே. அவர்கள் கொஞ்சங்குறைய 100 மைல் தூரம் பிரயாணம் செய்யவேண்டியதாயிருந்தது. ஏனெனில் அவர்கள் ஏழைகளாயிருந்தாலும் ராஜவம்சத்தார்; அத்தேசத்தின் தென்கோடியிலுள்ள பெத்லகேம் என்னும் பூர்வீக ராஜபட்டணத்தைச் சேர்ந்தவர்கள். சக்கிரவர்த்தியின் கட்டளை இவர்களைப் பாட்டைவழியாகத்

தெற்குமுகமாய்த் தள்ளிக்கொண்டே போனது. கடைசியாகப் பட்டணத்து வாசலுக்குப் போகும் மலையேற்றத்தில் ஏறினார்கள். யோசேப்புக் கவலையினால் திகிலடைந்தான். மரியாளுக்குப் பிராணபாயத்திற்கு ஏதுவான களைப்பு உண்டாயிற்று. அவர்கள் சத்திரம் வந்து சேர்ந்தபோது அது பயணக்காரர்களால் நிறைந்திருக்கக் கண்டார்கள். இவர்களும் இவ்விருவரையும்போலவே இதே காரியமாய் முன்னமே வந்து இறங்கியிருந்தார்கள். இவர்களை அன்பாய் ஏற்றுக்கொள்ள ஒரு குடும்பமும் இல்லை, பிரயாணிகளின் மிருகங்கள் தங்கும் தொழுவத்தின் ஒரு மூலையிலேயே இவர்கள் தங்க நேரிட்டது. அங்கே அன்றிரவில் மரியாள் தன் தலைச்சனான குமாரனைப் பெற்றாள். உதவிக்கு ஒரு ஸ்திரீயும் இல்லை; பிள்ளையைக் கிடத்தத் தொட்டிலுமில்லை. ஆகையால் மரியாளே அவரைக் கந்தைத்துணியில் சுற்றி முன்னணையில் கிடத்தினாள்.

3. இயேசுவின் பிறப்பு இவ்விதம் நேரிட்டது. மத்திய ஜெர்மனி தேசத்திலுள்ள ஐஸ்லேபென் (Eisleben) என்னும் சந்தைகூடும் பட்டணத்தின் ஒரு பழைய சத்திரத்திலுள்ள அறையில் நான் நின்றபோது இந்தக் காட்சியின் பரிதாபத்தை முற்றாய் உணர்ந்தேன். நாலு நூற்றாண்டுகளுக்கு முன் அவ்விடத்தில் சந்தை இரைச்சலிலும் சத்திரத்திலுள்ள சந்தடியிலும் அலுவலாய் அங்கு வர நேரிட்ட சுரங்கவேலைக்காரனான ஏழை ஹான்ஸ் லூத்தருடைய மனைவிக்கு மரியம்மாளைப்போல் திடீரெனப் பிரசவவேதனை நேர்ந்து, துக்கத்திலும் வறுமையிலும் ஒரு பிள்ளையைப் பெற்றாள். இந்தப் பிள்ளைதான் மார்த்தின் லூத்தர். இவரே சபைச் சீர்திருத்தத்திற்கும் ஐரோப்பாக்கண்டத்தின் தற்கால நிலைமைக்கும் ஏதுவானார்.

4. மறுநாட் காலையில் சத்திரத்திலும் அதின் முற்றத்திலும் கூச்சலும் சந்தடியுமுண்டாயிற்று. பெத்லகேம் ஊரார் தங்கள் தங்கள் அலுவலுக்குப் போனார்கள். குடிமதிப்பு வேலை நடந்துகொண்டிருந்தது. இதற்கிடையில் உலக சரித்திரத்தில் தன்னிகரில்லாத விசேஷம் நடந்தேறியது. ஒரு பெரிய ஆரம்பம் எங்கே உண்டாகிறதென்று நமக்கு ஒருபோதும் தெரியாது. உலகத்தில் புதிதாய்ப் பிறக்கிற ஒவ்வொரு குழந்தையின் விஷயமும் நமக்கு இரகசியமாயிருக்கிறபடியால், அக்குழந்தைகள், சம்பவிக்கப்போகிற காரியங்களடங்கிய ஒரு பூட்டின பெட்டிக்கு ஒப்பாயிருக்கிறார்கள். யூதர் எதிர்பார்த்திருந்த மேசியாவும் உலகரட்சகரும் தேவகுமாரனுமான இயேசுவுக்கு, தச்சனுக்கு மனைவியாகும்படி குறிக்கப்பட்ட மரியாள் என்னும் கன்னி தாயாகும் பாக்கியத்தின் பெரிய இரகசியம் யோசேப்புக்கும் மரியாளுக்கும் மாத்திரமே தெரியும்.



5. அவர் இவ்விடத்திற் பிறப்பாரென்பது பூர்வ தீர்க்கதரிசனம்.—'எப்பிராத்தா என்னப்பட்ட பெத்லகேமே, நீ யூதாவிலுள்ள ஆயிரங்களுக்குள்ளே சிறியதாயிருந்தும், இஸ்ரவேலை ஆளப்போகிறவர் உன்னிடத்திலிருந்து புறப்பட்டு என்னிடத்தில் வருவார்.' செருக்கடைந்த அகஸ்துராயனுடைய கட்டளை மனக்கிலேசமுற்ற இவ்விருவரையும் தெற்குமுகமாய்த் துரத்தினது மெய்தான். ஆனால், வேறொரு கரம் அவர்களை வழிநடத்தினது. இந்தக் கரமே கடவுளுடைய திருச்சித்தம் நிறைவேறும்படி சக்கிரவர்த்திகள், ராஜாக்கள், துரைத்தனத்தார், ஆலோசனைசங்கத்தார் முதலியோருடைய நோக்கங்களை அவர்கள் அறிந்துகொள்ளக்கூடாதவிதமாய் மேற்கொண்டு நடத்துகிறது; இந்தக் கரமே பார்வோனின் இருதயத்தைக் கடினப்படுத்தினது; கோரேஸ் (Cyrus) என்பவனை அடிமையாக்கினது; பராக்கிரமசாலியாகிய நேபுகாத்நேச்சாரை ஊழியனாக்கினது; அதுபோலவே இக்கரம் அகஸ்துராயனுடைய பெருமையையும் போராவலையும் மேற்கொண்டு தன் காரியத்தை நிறைவேற்றிக்கொண்டது.

6. குழந்தையைச் சுற்றியிருந்த கூட்டம். இயேசு ஆரவாரமின்றித் தாழ்மையோடு உலகத்திற் பிரவேசித்தார். பெத்லகேம் ஊரார் தங்கள் மத்தியில் நேரிட்டதைக் கனவிலும் அறியவில்லை. ரோம ராஜ்யத்தை மட்டுமல்ல அதின் ஆளுகைக்குட்படாத மற்றநேக தேசங்களையும் இனி ஆளப்போகிற இயேசுராஜாவின் பிறப்பிற்கு ரோமராயன் கொடுத்த கட்டளை அநுகூலமாயிருந்ததை அவன் அறியவில்லை. நடந்த விசேஷத்தைச் சிறிதும் அறியாமல் ஜனங்கள் மறுநாள் காலையை வழக்கம்போற் கழித்தார்கள். ஆயினும் அவருடைய பிறப்பு வெளிக்கு வராமல் போகவில்லை. வயதுசென்ற எலிசபெத்தினிடத்திற்கு அவள் ஆண்டவரின் தாயார் வந்தவுடனே அவள் வயிற்றிலிருந்த குழந்தை துள்ளினதுபோல, புதிய யுகத்தைக் கொண்டுவந்த இவர் உதித்தபோது கடந்துபோகும் பழையயுகத்தைச் சேர்ந்த பலவித ஜனங்களுக்குள் இந்தச் சத்தியத்தைப்பற்றிய நம்பிக்கையும் அறிகுறிகளும் நிகழ்ந்தன. அவருடைய வருகையை எதிர்பார்த்திருந்த சிற்சிலவிடங்களிலுள்ள சில ஆத்துமாக்கள் ஓர்வித உணர்ச்சியினால் ஏவப்பட்டு இப்பாலகனுடைய தொட்டிலண்டை வந்து சேர்ந்தார்கள். அவரை உற்றுப்பார்க்கவந்த கூட்டத்தாரைக் கவனிக்கும்போது, அக்கூட்டம் அவருடைய பிற்கால சரித்திரம் முழுவதையும் சுருக்கிக் காட்டுகிறது.

7. முதலாவது அருகிலுள்ள வயல்வெளிகளிலிருந்து ஆட்டுமேய்ப்பர் வந்தார்கள். இவ்வுலகத்தின் ராஜாக்களும் மற்றும் பெரியோரும் கவனியாத இப்பெரிய விசேஷத்தின் மகத்துவத்தைச்

சொல்லவும்; சந்தோஷத்தைக் காட்டவும் காணக்கூடாத எல்லைகளி
லிருந்து பரலோகத்தின் பிரபுக்களான தேவதூதர்கள் வந்துவிட்டார்
கள். இந்த விசேஷத்தை யறிவிக்கத்தகுந்த மனுஷரைத் தேடினார்
கள். வயல்வெளிகளில் ஜெபத்திலும் தியானத்திலும் தரித்திருக்
கும் எளிய ஆட்டுமேய்ப்பரை அதற்கேற்றவர்களாகக் கண்டார்கள்
இதுதான் யாக்கோபு மந்தை மேய்த்தவிடம்; இதுதான் போவாசும்
ரூத்தும் மணஞ்செய்தவிடம்; இதுதான் பழையேற்பாட்டின் காலத்
தில் இயேசுவுக்கு முன்னடையாளமாயிருந்த தாவீது தன் பாலி
யத்தைக் கழித்தவிடம். தேவாலயத்தில் ஆடம்பரத்துடனிருக்
கும் பரிசேயரைப்பார்க்கிலும் பழையேற்பாட்டின் தீர்க்கதரிசனங்
களைக் கண்களிருந்தும் காணக்கூடாத வேதபாரகரைப் பார்க்கிலும்
இந்த மேய்ப்பர்களே அவதரித்த இரட்சகரின் தன்மையை வயல்
வெளிகளிலிருந்துகொண்டு அறிந்தார்கள். இரட்சகர் இருந்த இடத்
தைத் தேவதூதன் இவர்களுக்குக் காட்டினான். அவரைக் காணும்படி
அவருக்கு விரைந்துசென்றார்கள். உண்மையும் நேர்மையுமான இரு
தயத்தையுடைய ஏழைகளுக்கு அருளப்படும் காட்சிக்குத் திருஷ்
டாந்தமாக, இரட்சகரைக் கண்டுகொண்டவர்கள் இந்த மேய்ப்பரே.
பிற்காலத்தில் அவருடைய சீஷரில் அநேகர் இவ்வகை ஏழைகளே.

8. இரண்டாவதாகச் சிமியோனும் அன்னாளும் வந்தார்கள்.
இவர்கள் பக்தியோடும் புத்தியோடும் வேத ஆராய்ச்சி செய்கிறவர்
களின் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள். அந்தக்காலத்தில் இக்கூட்டத்
தார் மேசியாவின் வருகைக்கு எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள்.
பிற்காலத்தில் இவர்களிற் சிலர் இரட்சகருக்கு அதிக விசுவாசமுள்ள
அடியாரானார்கள். பிறந்த எட்டாம் நாளில் பிள்ளைக்கு விருத்தசேத
னம் நடந்தது. இதனால் அவர் பிரமாணத்திற்கு கீழ்ப்பட்டுத் தமது
சொந்த இரத்தத்தினால் உடன்படிக்கைசெய்து தம்முடைய நாமத்தை
வம்ச அட்டவணையில் பதிவுசெய்துகொண்டார். மரியாளின் சுத்தி
கரிப்பின் நாள் முடிந்தவுடனே அவரைத் தேவாலயத்தில் கர்த்தருக்
கென்று பிரதிஷ்டைசெய்யப் பெத்லகேமிலிருந்து எருசலேமுக்குக்
கொண்டுபோனார்கள். தேவாலயத்தின் ஆண்டவரே தம்முடைய
ஆலயத்திற்குட் பிரவேசித்தார். தேவாலயத்திலுள்ள ஆசாரியர்கள்
இவர்களை நன்றாய்க் கவனித்திருக்கவேண்டும்; ஏனெனில் இந்த
சடங்குக்கு வழக்கமாய்ச் செலுத்தும் பலிக்குப் பதிலாக ஏழைகளின்
காணிக்கையாகிய இரண்டு காட்டுப்புறாக்களை மாத்திரம் மரியாள்
செலுத்தினாள். ஆயினும் உலக ஆடம்பரத்தினாலும் மாயையினாலும்
மறைப்படாத சில கண்கள் அவரை நோக்கிக்கொண்டிருந்தன.
இயேசுவை அறிந்துகொள்ள அவருடைய வறுமை அவர்களுக்குத்



தடையாயிருக்கவில்லை. சிமியோன் என்னும் வயோதிப பரிசுத்த
வான் ஒருவர் இருந்தார். தம் வேண்டுதல்களுக்கு உத்தரவாக 'மேசி
யாவைக் காணுமுன் நீ மரணமடையமாட்டாய்' என்னும் இரகசிய
வாக்கு அவருக்கு அளிக்கப்பட்டது. தாய் தந்தையரையும் குழந்தை
யையும் சந்தித்தபோது, இவர்தான் அந்த மேசியா என்னும் அறிவு
மின்னலைப்போல் திடீரென அவர் மனதில் உதித்தது. தமது கரங்
களில் இவரை ஏந்திக்கொண்டு, புறஜாதிகளுக்குப் பிரகாசிக்கிற
ஒளியாகவும் தம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலுக்கு மகிமையாகவும்
இவர் தோன்றினாரென்று சிமியோன் கர்த்தருக்கு ஸ்தோத்திரம்
செலுத்தினார். இவர் இப்படிப் பேசிக்கொண்டிருக்கும்போதே இன்
னொரு சாக்ஷி கூட்டத்திலே வந்துசேருகிறது. இந்தச் சாக்ஷி அன்னா
ளென்னும் ஒரு பரிசுத்த விதவையே. இவள் தேவாலயத்தின்
பிராகாரங்களில் வாசஞ்செய்து ஜெபம் உபவாசம் என்னும் அவிழ்தங்
களினால் ஆவியின் கண்களைத் தெளிவாக்கிக்கொண்டாள்; ஆனபடி
யால் பார்த்தவுடனே இக்குழந்தையை இனமறிந்துகொண்டாள்.
வயோதிபனான சிமியோனோடு இவளும் சாக்ஷிகொடுத்து தேவனைத்
துதித்து, இஸ்ரவேலின் மீட்புக்காகக் காத்திருந்த மற்ற ஆத்துமாக்
களுக்கும் இந்தப் பெரிய இரகசியத்தின் உண்மையை உறுதிப்
படுத்தினாள்.

9. இந்தப் புதுச்சத்துவம் உலகத்தில் உற்பத்தியான விடத்திற்
கருகில் மேய்ப்பரும் வயோதிபரான இந்தப் பரிசுத்தவான்களும்
இருந்தார்கள். ஆனால் இந்தச் சத்துவம் தூரமான இடத்திலுள்ள சில
உணர்ச்சியுள்ள ஆத்துமாக்களையும் அசைத்தது. தேவாலயத்தில்
இயேசுவைக் கர்த்தருக்கென்று பிரதிஷ்டை செய்தபிறகு நாசரேத்
திற்குப் போவதைவிட்டுப் பெத்லகேமிலேயே வசிக்கலாமென்று தீர்
மானத்துடன் அவருடைய பெற்றோர் அவ்விடத்திற்குத் திரும்பிவிட்
டார்கள். அதற்குப்பிறகுதான் கீழ்நாட்டுச் சாஸ்திரிகள் அவரைச்
சந்தித்ததாக யூகிக்கலாம். ஐபிராத்து நதிக்கப்பாலிலுள்ள தேசங்க
ளில் பிரபலமாயிருந்த வைத்தியசாஸ்திரம் தத்துவசாஸ்திரம் முதலிய
கலைஞானங்களிலும் சாஸ்திரங்களிலும் நிபுணரான 'மேஜை' என்னும்
வகுப்பைச்சேர்ந்த சாஸ்திரிகள் யூதேயாதேசத்தில் ஒரு பெரிய ராஜா
எழும்புவாரென்று கூடியிருந்ததாகவும் இந்தச் சாஸ்திரிகளின் காலத்தி
லுள்ளவர்கள் எதிர்பார்த்திருந்ததாகவும் தாசித்து (Tacitus), சியூதோ
னியு (Suetonius), யோசிப்பாசர் (Josephus) என்னும் சரித்திரக்
காரர்கள் எழுதியிருக்கிறார்கள். பெரிய வானசாஸ்திரியாகிய கெப்ளர்
(Kepler) கணித்துப் பார்த்ததில், இக்காலத்தில் திடீரென்று
தோன்றி மறைந்துபோகக்கூடிய பிரகாசமுள்ள ஒரு நட்சத்திரம்

வானத்தில் தோன்றியதாக நமக்குத் தெரியவருகிறது. இந்தச் சாஸ்திரிகள் சோதிடசாஸ்திரத்தை நுட்பமாய்க் கற்றவர்கள். வானத்தில் நூதனமான ஒரு அடையாளம் காணப்பட்டால் உலகத்தில் நடக்கப் போகிற ஒரு பெரிய விசேஷத்திற்கு அது அறிகுறியென்று நம்பினார்கள். இவர்களது எண்ணத்தைக் கவர்ந்துகொண்ட இந்த நட்சத்திரத்தைப் பூர்வீக சரித்திரக்காரர் சொல்லிய நம்பிக்கையோடு ஒப்பிட்டுப் பார்த்து, இவ்விசேஷம் நடந்தேறியதா வென்றறிய இவர்கள் மேற்குமுகமாய்ச் சென்றதாக யூகிக்கலாம். இதைவிட விசேஷித்த ஆவலும் இவர்களுக்கு இருந்திருக்கலாம். தேவன் அதற்குத் துணையாயிருந்தார். சாஸ்திர வேடிக்கையினாலும் ஆராய்ச்சியினாலும் முதலில் ஏவப்பட்டு வந்தபோதிலும், தேவன் இவர்களைப் பரமசத்தியத்திற்கு வழிநடத்தினார். தேவனுடைய வழி இதுதான். குறைவுகளைக் கடிந்துகொள்ளாமல் நம்முடைய அறிவுக்கேற்றபிரகாரம் நம்மிடத்தில் பேசி, இவ்விதமாய்ச் சத்தியத்தை அறிகிற அறிவுக்கு நம்மை நடத்துகிறார். சோதிட சாஸ்திரத்திலிருந்து வானசாஸ்திரத்தைப் பிறப்பித்தார்; இரசவாத சாஸ்திரத்திலிருந்து இரஸாயன சாஸ்திரம் தோன்றும்படி செய்தார்; கல்வியாராய்ச்சியிலிருந்து சபைச் சீர்திருத்தத்தை யுண்டாக்கினார். அதுபோலவே, தப்பும் மூடபக்தியுமான அறிவைக்கொண்டு உலகத்தின் ஒளியாகிய இயேசுவினிடத்திற்கு வழிநடத்தினார். பிற்காலத்தில் புறஜாதியார் இயேசுவின் உபதேசத்தையும் அவராலுண்டான இரட்சிப்பையும் ஏற்றுக்கொண்டு, அவருக்குப் பாதகாணிக்கையாகத் தங்கள் ஐசுவரியத்தையும் தாலந்துகளையும் சாஸ்திரத்தையும் தத்துவஞானத்தையும் கொண்டுவருவார்களென்னும் சத்தியத்திற்கு இவர்களின் வருகை முன்குறியாய் இருந்தது.

## Luther and the Reformation

**By the Rev. M. P. Arulappen**

(From the *Arunodayam*)

## லூத்தரும் சீர்திருத்தமும்

I. லூத்தரைக்குறித்து நாம் கவனிக்கவேண்டியது, இவர் சீர்திருத்தியாவதற்கு இவரில் இன்றியமையாதனவாய் இலங்கின குணங்கள் எவை என்பதே.

(*a*) இவற்றுள் முந்தினது அவர் தம் சொந்த இரட்சிப்பு விஷயத்தில் பாராட்டின சிரத்தையாம். லூத்தருடைய இளம்பிராய



சரித்திரம் மிகப்பரிதாபமானது. அவர் தரித்திரத்தை நன்றாய் ருசித்தவர். மற்றப் பிள்ளைகளைப்போல் பெற்றோருடைய அன்பை அல்ல, அவர்கள் கடுமையை மிகவும் உணர்ந்தவர். அக்காலப் பள்ளிக்கூடங்களும் அவருடைய மனோசக்திகளின் விருத்திக்கு அவ்வளவு உதவின என்னத்தகாது. அக்காலத்திய சபை பக்தியும் குடும்ப பக்தியும் அநேகம் தவறுகளோடு கூடினதாயிருந்தது. அவர் 19 வயதுக்குள் மன்ஸ்பெல்டு, மக்டபுர்க், ஐசனக், எர்புர்ட் முதலிய நான்கு ஊர்களில் இடத்துக்கிடம் வித்தியாசமான ஜீவியம் பண்ணவும் பல அந்தஸ்திலுள்ள மனுஷரைக் காணவும் வேண்டியிருந்தது. சிறுவயதுமுதலே அவரில் அடிமைக்கொத்த தெய்வபயமிருந்தது. அக்காலப் போக்குப்படி குருமாருடைய ஜீவியமும் சந்நியாசிகளுடைய ஜீவியமுமே தேவனுக்குப் பிரீதிகரமான புனித ஜீவியமென்று அவர் மனதின் ஆழத்தில் சிறுவயதுமுதலே பதிந்திருந்தபடியால் அவர் 22-ம் வயதில் கோடைகால விடுமுறைக்கு மன்ஸ்பெல்டிலிருந்த பெற்றோர் வீட்டுக்குத் திரும்புகையில் காலடியில் விழுந்த பேரிடிச்சத்தங் கேட்டுத் தாம் செய்வதின்னதென்றறியாமல் முழங்காலூன்றி 'அர்ச்சியசிஷ்ட அன்னம்மாளே! இரட்சி; சந்நியாசியாகிறேன்' என்று பொருத்தனை பண்ணிக்கொண்டார். ஏனிப்படிச் செய்தோமென்று நினைத்து நினைத்துப்பார்த்தும் அவருக்கே புலப்படவில்லை. இக்காலத்தில் அவர் M. A. பட்டம் பெற்றுத் தந்தையார் விருப்பப்படி நியாயவாதியாகிப் பெரிய தனவந்தனாவதற்கு நியாயசாஸ்திரம் படிக்கிற வாலிபனாயிருந்தாரென்பதை நாம் மறக்கொணாது.

இவ்வளவு கல்வியையும் வரத்தையும் செல்வாக்கடைவதற்கான வழியையும் அவர் துரிதத்தில் யோசனையின்றிச் செய்த சந்நியாசப் பொருத்தனையால் மண்ணில் புதைக்கவேண்டியிருந்தது. இப்பொருத்தனை விஷயம் தந்தைக்குத் தெரிந்தால் அவருடைய கடுங்கோபத்துக்குத்தான் ஆளாகவேண்டுமென்று லூத்தருக்கு நன்றாய்த் தெரியும். அவருடைய சங்கதியை அறிந்த சிநேகிதரும் அந்தப் பொருத்தனையை நிறைவேற்றுவது அவசியமல்லவென்றார்கள். இப்படியெல்லாமிருந்தும் தாம் அர்ச்சியசிஷ்ட அன்னம்மாளுக்குச் செய்த பொருத்தனையை அவர் அற்பமாய் எண்ணவில்லை. இரவு பகல் பதினைந்து நாளாய்த் தமக்குள்ளே வெகுவாய்ப் போராடினபின் 15-ம் நாளில் அகுஸ்தீன் சந்நியாச மடத்துக்குள் நுழைந்தார். இப்படி அவர் ஒருவருக்கும் அஞ்சாமல், தம் செய்கையால் விளையும் கஷ்டநஷ்டங்களைக் கருதாமல், தமக்குச் சரியென்று பட்டதை நிறைவேற்றியே தீரும் மனோவலிமையை வாலிபத்திலேயே காட்டத் துவக்கினார். லூத்தர் செய்தது சரியல்லவென்று இக்காலத்தாராகிய

நாம் நிதானிப்போம். அது சரியோ சரியல்லவோ என்பதல்ல. அவர் தமக்குத் தாம் பாராட்டின உண்மையும் அவரிடத்தில் விளங்கின நேர்மையுமே நாம் அவரில் கவனிக்கவேண்டிய முக்கிய விஷயம்.

அவர் மடத்தில் செய்த ஜீவியம் அங்குள்ள மற்றச் சந்நியாசிகளிற் பெரும்பாலரின் ஜீவியத்துக்கு வேறுபட்டிருந்தது. அவர் உண்மையாகவே தேவனைக் கிட்டிச்சேரவும் அவருடைய ஐக்கியத்தில் சமாதானம் பெறவும் பட்டபாடுகள், செய்த தவசுகள், பண்ணின ஜெபங்கள், எடுத்த முயற்சிகள் கொஞ்சமல்ல. அவர் தமது ஆத்தும சரீர சக்திகளனைத்தையும் தம் சொந்த இரட்சிப்புக்காகச் செலவிட்டார். சொந்த ஆத்தும இரட்சணிய விஷயத்தில் இவருக்கிருந்த கவலையும் சஞ்சலமும் கொஞ்சமல்ல. மத்திபகாலச்சபை விதித்த சகல விதி விலக்குகளையும் நேமநியமங்களையும் ஒன்றுவிடாமலநுஷ்டித்தும் அவர் தேவனைத் திருப்திப்படுத்த முடியாத பயங்கர நீதிச்சொரூபியாக மட்டுங் கண்டு வேசாறினார். கிரியா புண்ணியத்தால் தேவனைப் பிரியப்படுத்துவது அசாத்தியமெனக் கண்டார். கடைசியாக அகுஸ்தீனுவின் நூற்களும் ஸ்தவுபிட்ஸ் என்ற மகானின் அன்பான ஆலோசனையும் எல்லாவற்றுக்கும் மேலாக ரோமர் நிருபமும் அவர் தேடி வாஞ்சித்த இரட்சணிய அறிவையும் அநுபவத்தையும் அவருக்குக் கொடுத்தது. விசுவாச நீதியைப்பற்றிய அறிவு அவரிலுதிக்கவே, எல்லாப்புத்திக்கும் மேலான தெய்வ சமாதானம் அவருள்ளத்தை நிரப்பிற்று. பயங்கரமான காட்டில் அகப்பட்டு வழிதெரியாமல் நெடுநாளலைந்த பிரயாணி வழிகண்டதை யொப்ப லூத்தர் தம் சொந்த ஆத்தும விஷயத்தில் இரட்சணிய வழியைக் காணலானார். விசுவாசத்தினால் பலிக்கும் தெய்வநீதியானது விசுவாசமுண்டாகச் சுவிசேஷத்திலே வெளியாக்கப்படுகிறது என்பதும், விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான் என்பதும், இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக்கொண்டு நீதிமான்களாக்கப்படுகிறோம் என்பதும், தெய்வ நீதியும் தெய்வ கிருபையும் ஒன்றே என்பதும் அவருக்குப் புலப்படப் புலப்பட, அவர் கண்களை மூடியிருந்த படலம் எடுபட்டு இரட்சணியவழி அவருக்குத் தெளிவாயிற்று. இந்த வெளிச்சத்தில் ரோமைச்சபை தன் சாக்கிரமெந்துகள், குருமாரைப்பற்றிய போதகத்தாலும் சடங்குகளாலும் அர்ச்சியசிஷ்டவான்களாலும் மனித ஆத்துமாவுக்கும் தேவனுக்கும் இடையில் ஒருவரும் கடக்கொணாத் தடுப்புச்சுவரைப்போல் நிற்கிறதென்று காலக்கிரமத்தில் அவருக்கு நன்றாய்த் தெரியவந்தது.

லூத்தர் இப்படித் தமது சொந்த ஆத்துமத்திலே பாவத்தின் வல்லமையையும் மனித சுபாவக்கேட்டையும் திட்டமாயுணர்ந்து



தேவனைத் திருப்திப்படுத்த மனிதன் செய்யும் எவ்வித கிரியையும் பிரயோஜனமில்லை யென்றும் இலவசமாய் இயேசுகிறிஸ்துமூலம் தெய்வ கிருபையால் பாவமன்னிப்புண்டென்கிற விசுவாசத்தால் மட்டும் மனிதனுக்குச் சமாதானமும் சந்தோஷமும் புதிய ஜீவியத்துக்கான பெலமும் வருகிறதென்றும் அநுபவ பூர்வமாய்க் கண்டார். பயமின்றிப் பிள்ளைபோல் தேவனைக்கிட்டி அவரோடு ஐக்கியப்படும் இந்த வழி அவருக்குத் தெரிந்திராவிடில் அவர் ஒருபோதும் திருச்சபையை ரோமையாகிய பாபிலோனிய சிறையினின்று மீட்டிருக்க முடியவே முடியாது.

இவ்வித இரட்சணிய வழியின் அறிவும் அறிவைவிடச் சொந்த ஆத்தும அநுபவமும் இக்காலத்திலும் சபை மேய்ப்பருக்கும் சபை ஊழியம் செய்யும் குருமாரல்லாதவர்களுக்கும் அவசியம். பாவத்தின் பயங்கர வல்லமையையும் தெய்வீக பரிசுத்தத்தின் கண்டிப்பையும் தன் நெஞ்சில் உணர்ந்து கிறிஸ்துமூலமாக அன்புங்கிருபையுமுள்ள பிதாவைக் கண்டிராத ஒரு குரு தன் சபையாரைப் பாவத்துக்கு விலகவும் தேவனோடு ஒப்புரவாகவும் ஏவ முடியாது. சபை ஊழியம் செய்யும் மூகாமைக்காரரும் தங்கள் ஆத்தும விஷயத்தில் நிர்விசாரம் பாராட்டினால் பிறர் சீர்பட உழைப்பதெப்படி? நமது சபைகளுக்கும் லூத்தரைப்போல் சொந்த ஆத்தும இரட்சிப்பின் அநுபவமுள்ள ஊழியர் தேவை. நமது சபைகளுக்கு இக்காலத்திலும் சீர்திருத்தமும் சீர்திருத்திகளும் தேவை.

(b) பெரிய சீர்திருத்தியாவதற்கு லூத்தருக்கிருந்த இரண்டாம் இலட்சணம், வேதத்துக்கும் தமது அநுபவத்துக்கும் பொருத்தமெனக் கண்ட சத்தியத்திற்கு உண்மையுள்ள சாட்சியாக விளங்குதலே. ரோமைச்சபையாகிய இருட்டு மண்டபத்தில் தட்டுத்தடுமாறி வெகுவான போராட்டத்துக்குப்பின் விசுவாச நீதியைப்பற்றிய சத்தியத்தைக் கண்டடைந்தபின் லூத்தர் இவ்வெளிச்சத்தில் அக்கால சபையில் வழங்கி அனுஷ்டானத்திலிருந்த சகல போதகங்களையும் பழக்கவழக்கங்களையும் பார்த்தபோது எல்லாம் தெய்வவசனத்துக்கு முரணி நிற்பதாகத் தெரியவந்தது. விசேஷமாய்ப் பாவத்தையும் பாவமன்னிப்பையும்பற்றிய போதகத்தில் பெருந்தவறுகளைக் கண்டார். அச்சபையானது பாவத்தைச் சாவான பாவமென்றும் சாமானிய பாவமென்றும் இருவகையாய் வகுத்தது. சாவான பாவங்களுக்கு நித்திய நரகதண்டனை யென்றும், சாமானிய பாவங்களுக்கு இம்மையிலும் உத்தரிக்கும் ஸ்தலத்திலும் அநித்தியதண்டனை யென்றும் போதிக்கப்பட்டது. திருச்சபை தன்வசமிருக்கும் அர்ச்சியசிஷ்டவான்களின் மிஞ்சின புண்ணியங்களை முன்னிட்டு நித்திய தண்டனையை அநித்

திய தண்டனையாக மாற்றவும், அநித்திய தண்டனைகளுக்குப் பதிலாகச் சில தவக்கிரியைகளை விதிக்கவும், இவற்றையுங்கூடப் பணத்துக்கு வாங்கக்கூடிய மன்னிப்புச்சீட்டாக்கவும் கூடுமென்றது. இவ்வேற்பாட்டின் பலனாகப் பணத்துக்குப் பாவமன்னிப்பு என்கிற கேடான எண்ணம், நஞ்சான எண்ணம், அநியாயமான எண்ணம் ஜனங்களிடத்தில் சகஜமாயிற்று.

லுத்தரிருந்த விட்டென்பெர்க் நாட்டில் டெத்செல் மூலமாய் இவ்வியாபாரம் தலைகாட்டினபொழுது வீண் பக்திகளுக்கு நூற்றாண்டுகளாய் அடிமைப்பட்டிருந்த பேதை ஜனங்கள் இச்சீட்டுகளை விலைக்குவாங்கி லுத்தருக்குக் காட்டினபோது அவர் மனம் பதைத்த பதைப்பு கொஞ்சமல்ல, அந்தோ! 'பேதை ஜனங்கள்! காசுக்குக் கடவுள் தயை கிடைக்கும், நரகத்துக்குத் தப்பலாம் என்றெண்ணுகிறார்களே! இது பாப்புவுக்குத் தெரியாமல் நடக்கிற கேடு; வேதத்தில் இதற்கு ஆதாரமேயில்லை; இதை நாம் எடுத்துக்காட்டி முறையிட்டால் காரியம் சரிப்படக்கூடுமென்று நம்பி 1517௵ அக்டோபர்௴ 31-ல் சுவிசேஷ மார்க்க ஆதார சத்தியங்களை 95 நியாயங்களாகச் சங்கிரகித்தெழுதி ஒட்டினார். இவை ஐரோப்பாக்கண்டமுழுதும் ஜெர்மனி தேசமெங்கும் பரம்பின. லுத்தருக்கு விரோதமான முறைப்பாடுகள் சீட்டு விற்பனைக்காரரால் பாப்புவுக்கெட்டிற்று. எக், காயத்தான் என்ற பாப்புவின் தானாபதிகள் லுத்தரைப் பயத்தினாலும் நயத்தினாலும் வாய் கட்டப்பார்த்தும் முடியவில்லை. பாப்புவின் சாபப்பட்டோலை வந்தது. அதின்படி அவர் பதிதன் என்று தீர்க்கப்பட்டார். அவருடைய புஸ்தகங்களும் சுட்டெரிக்கப்பட்டன. இச்செய்தியையறிந்ததும், லுத்தரும் அவரது உடன் போதனாசிரியரும் கலாசாலை மாணாக்கரும் விட்டென்பெர்க் நகருக்குப் புறம்பே, கொள்ளைநோயால் மாண்டவர்களின் துணிமணிகளைக் கொளுத்தும் இடத்தில் கூடிவந்தார்கள். பாப்பு மார்க்க வேதசாஸ்திரங்களையும் புஸ்தகங்களையும் அங்கே குவித்து விறகுகளை அடுக்கினபின் லுத்தர் அக்குவியலுக்கு எதிர் நின்று 'நீ தெய்வ சத்தியத்தை அழித்தபடியால் இந்த அக்கினி உன்னை அழிக்கக்கடவது' என்று சொல்லித் தீமூட்டினார்.

ராஜ ராஜாக்களெல்லாம் அடிபணிந்து வணங்கும் பாப்புவை இவ்வாறெதிர்க்கத் துணிந்தவர் எவருமேயில்லை. லுத்தருடைய காரியம் சந்நியாசிக்கடுத்த ஒரு அற்பச் சங்கதியாய்மட்டுமிராமல் அக்கால லௌகிக வைதிக காரியங்களனைத்தையும் தலைகீழாக்குவதாயிருந்தது. இதனால் அவருடைய விஷயம் ராஜ்ய சங்கத்தார் முன்னும் வொர்ம்ஸ் நகரில் வந்தது. அங்கேயும் அவர் அஞ்சாநெஞ்சராய்,



விசுவாச வீரராய், சத்திய சாட்சியாய் விளங்கின வரலாறு நமக்குத் தெரியும். தேவனுக்கும் மனச்சாட்சிக்கும் அடுத்த விஷயத்தில் யார் தயவு போனாலும், என்ன நஷ்டம் வந்தாலும், வேத சத்தியத்தை மறுக்கத் தம்மால் முடியவே முடியாதென்று எவரும் கேட்கச் சாட்சிபகர்ந்து விசுவாசமே உலகத்தை ஜெயித்த ஜெயம் என்பதையும் தேவன் நமக்கனுசாரியாயிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார் என்பதையும் தம்மில் நிதர்சனப்படுத்திக்காட்டி ராஜ்ய சாபத்துக்கும் ஆளானார்.

எனக்கரிய சகோதரரே! லுத்தருடைய ஆவி சுய ஆவியல்லவே! அது கிறிஸ்துவின் ஆவியன்றோ? அது அவரோடு போயிற்றா? அவரைப்போலொத்த அஞ்சாத நெஞ்சுள்ள சத்திய சாட்சிகள் நமது தேசத்துக்கும் சபைகளுக்கும் தேவைதான். குருக்களும் சபை ஊழியம் செய்வோரும் மானிடபூஜை செய்து மனிதரைப் பிரியப்படுத்தப் பார்த்து, கிறிஸ்துவால் கிடைத்த மனச்சாட்சியின் விடுதலையை இழந்துவிடலாமா? தெய்வ ஊழியர் அடிமைகளாய் இச்சகம்பேசிப் பிழைத்துக் காலந்தள்ளுவது சரியோ? நமது சபைகளும் மிசியோனும் சீர்திருந்தின நிலைமைக்குவர அதின் ஊழியர் லுத்தரைப்போல் விசுவாச வீரரும் அஞ்சா நெஞ்சரும் சத்திய சாட்சிகளுமாய் விளங்க அவசியம்.

நாம் இம்மட்டும் லுத்தர் சீர்திருத்தியாவதற்கு இன்றியமையாதனவாய் அவரில் விளங்கிய இருகுணங்களைக் கவனித்தோம். அவை முதலாவது சொந்த ஆத்தும இரட்சிப்பு விஷயத்தில் அவர் கருத்துள்ளவராயிருந்தார் என்பதும், இரண்டாவது சத்திய சாட்சியாய் விளங்க அஞ்சாதவராக இருந்தார் என்பதுமே. இக்குணங்களால் அவர் தமக்குள்ளும் சபைக்குள்ளும் இருந்த இருட்டு நீங்கி வெளிச்சமுதிக்கக் கருவியானார்.

(c) இதுமட்டுமன்று, அவர் குடும்பஸ்தராகவும் மேய்ப்பராகவும் ஆசிரியராகவும் சபையின் ஞானமுள்ள சிற்பாசாரியராகவும் பிழைத்துழைத்துச் செய்த நடபடிகள் பல. அவற்றையெல்லாம் இங்குரைக்கில் பெருகும். அவை ஒவ்வொன்றிலும் தெய்வ ஊழியம் சபை ஊழியம் செய்கிற நமக்குப் பல பாடங்கள் அகப்படும். கிறிஸ்துவினுடைய சுவிசேஷ வெளிச்சம் மனித மூளையின் மூலையில் மறைந்து கிடக்கும் ஒரு உப்புச்சப்பற்ற காரியமாயிராமல் அது மனிதனை மறுரூபப்படுத்திக் கிறிஸ்துவைப்போல் பிறருக்கு ஊழியஞ்செய்யவும் தன்னையே பாக்கியமாக்கவுங் கூடிய இரட்சிக்கிற தெய்வ வல்லமையாயிருக்கிறதென்பதை லுத்தர் சரித்திரம் காட்டும்.

II. நாம் சீர்திருத்தலுக்கு முக்கிய புருஷனாய் விளங்கின லுத்தரை விட்டு அவர் செய்த வேலையைக் கவனிப்போம்.

தீர்க்கதரிசிகளைக்கொண்டும் கிறிஸ்துவைக்கொண்டும் அப்போஸ்தலமாரைக்கொண்டும் ஆண்டவர் வெளிப்படுத்தின இரட்சணிய உபதேசம் என்னும் பொக்கிஷம் திருச்சபைக்கும் திருச்சபை மூலமாய் உலகத்துக்கும் கிடைக்கப்பண்ணினதே லூத்தர் செய்த வேலையால் விளைந்த பலன். இப்பலன் விளைவதற்கு அவர் சாதனமாகக் கண்ட பிரமாணங்கள் இரண்டு.

அவற்றுள் ஒன்று, சத்தியவேதமே விசுவாசத்துக்கும் நடக்கைக்கும் ஒன்றான சட்டம் என்பது. இது Formal Principle என்னப்படும். நாம் விசுவாசிக்கவேண்டியதிதுவென்று இனிப் பாப்புக்கள் அல்ல, பொதுச்சங்கங்கள் அல்ல, பாரம்பரைகள் அல்ல, சத்தியவேதமே போதிக்கும்; அதுவே தவறாதது. அது ஜீவனும் ஆவியுமுள்ளது. அதை மனுஷ ஞானத்துக்காவது திருச்சபைக்காவது கீழ்ப்படுத்தாமல் அதற்கே எல்லாவற்றிலும் மேலான அதிகாரம் உரியதென்ற உண்மையை லூத்தர் விடாப்பிடியாய்ப் பிடித்தார்.

இரண்டாவது பிரமாணம், கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தால் நீதிமான்களாக்கப்படுகிறோம் என்னும் உபதேசமே. இது Material Principle என்னப்படும். இது இரட்சணிய உபதேசங்களெல்லாவற்றுக்கும் நடுநாயகமானது. இந்த உபதேசமே மனிதசுபாவக்கேட்டை நன்றாய் உணர்த்துவது; தெய்வ நீதியையும் கிருபையையும் இணைப்பது; கிறிஸ்துவை ஒன்றான மத்தியஸ்தராக்கி மகிமைப்படுத்துவது; பாவிகளுக்கு ஆறுதலளிப்பது; புதிய ஜீவியத்துக்கும் பரிசுத்தமாகுதலுக்கும் ஆதாரமாய் நிற்பது.

கிறிஸ்துவாவது பவுலாவது லூத்தராவது நம்மைக் கிரியை செய்யாத செத்த விசுவாசத்துக் கழைக்கிறதில்லை. குணப்படுதல் நம்மில் இடையறாமல் நடந்தேறுங் கிரியையாயிருப்பதுபோலவே சீர்திருத்தலும் சபைகளில் மேற்காட்டிய இருபிரமாணங்களுக்கிசைய நடந்தேறிவரவேண்டும். இல்லாவிட்டால் 'உயிரோடிருக்கிறாய் என்கிற பேர் உனக்கு இருந்தாலும் செத்தவனாயிருக்கிறாய் என்று உன் கிரியைகளை அறிவோம்' என்று ஆண்டவர் சர்தே சபையைப்பற்றிச் சொன்னது நமக்கும் சொல்லுவதாயிருக்கும். 'மனிதர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு பரமண்டலத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்துகிறதற்காக உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது' என்று ஆண்டவர் சொன்னதை நிறைவேற்ற நாம் கருத்தாயிருப்போமாக. ஆமென்.



# Paul the Dauntless

**By Basil Mathews, M.A.**

**Translated by Pandit J. S. Masillamany**

பேசில் மத்யூஸ் ஆசிரியர் இயற்றிய

## அஞ்சா நெஞ்சராகிய பவுல்

### 8-ம் அத்தியாயம்

### முன்னே சென்றிராத புத்துலகம்

(தொடர்ச்சி)

நெடிது தியானித்துப் பிரார்த்தித்தபின் சவுல் தமது கச்சையை இன்னும் இறுக்கமாய்க் கட்டிக்கொண்டு அரேபியாவை விட்டுத் தமஸ்குவுக்குப் புறப்பட்டார். அபாயமுள்ளதும் நீண்டதுமான ஒரு போராட்டம் தமக்குமுன் இருந்ததென்பது அவருக்கு நன்றாய்த் தெரியும். ஸ்தேவானுக்கும் அவரைச் சேர்ந்தவர்களுக்கும் விரோதமாகத் தாம் கோபாவேசங்கொண்டிருந்ததுபோலவே தமக்கு விரோதமாகவும் யூதர் கோபாவேசங்கொண்டு திரிவார்கள், அவர்கள் தம்மைச் சிறைச்சாலையில் அடைப்பார்கள், சவுக்கால் அடிப்பார்கள், கல்லால் எறிவார்கள்—இவைகளெல்லாம் சவுலுக்கு நன்றாய்த் தெரியும். இவற்றினின்று தப்பும்படி ரோம ராஜ்யத்தின் வேறொரு பாகத்துக்குச் சென்று அங்கே சும்மா இருந்துவிடுவது இந்நிலைமையிலுள்ள அநேகர் இலேசாய்ச் செய்யக்கூடிய காரியம். ஆனால் இப்படிச் செய்வது சவுலுக்கு இலேசல்ல. தமஸ்குவுக்கும் சமாரியாவுக்கும் நேரே தம் முகத்தைத் திருப்பினார். இந்நகரங்களில்தான் சவுலுக்கு விரோதமான பகை அதிகங் கொடூரமாயிருக்கும்.

சவுல் திரும்பவும் வனாந்தரத்தை ஊடறுத்து நடந்துசென்று, கடைசியாகத் தமஸ்குபட்டணத்து மதில்களண்டை வந்தார்.

கிழக்கு வாசலண்டை காவல்காத்துக்கொண்டு நின்ற ரோமப் போர்வீரன் பாதாதிகேசபரியந்தம் ஆயுதவர்க்கந் தரித்திருக்கிறதைக் கண்டார். 'நானும்கூட ஆயுதம் தரித்துக்கொள்ளவேண்டும்' என்று தமக்குள்ளே சொல்லிக்கொண்டார். 'உன் ஸ்தானத்தைக் காத்துக்கொண்டு நன்றாய்ப் போராடு' என்று பிற்காலத்தில் அவர் பிறருக்குச் சொன்னபடியே இப்பொழுது தமக்குள்ளே சொல்லிக்கொள்ளுவார். அதோடு, சத்தியம் என்னும் கச்சையைக் கட்டிக்கொள், நேர்மையென்னும் மார்க்கவசத்தை அணிந்துகொள், சமாதானம் என்னும்

பலத்த மார்க்கவசத்தை அணிந்துகொள், விசுவாசம் என்னும் கேடகத்தைப் பிடித்துக்கொள், ரக்ஷணியம் என்னும் தலைச்சீராவை உன் சிரசின்மேல் தரித்துக்கொள், தேவவசனம் என்கின்ற அகன்ற பட்டயத்தை உன் கையில் பலத்தோடு பிடித்துக்கொள் என்னும் சிந்தனைகளும் அவருடைய மனதுள் வந்தன.

இப்படி அவர் அந்தக் கிழக்குவாசலுக்குள் நுழைந்து, பட்டணத்துக்குள் பிரவேசித்தார். இவ்வாசலின் வழியாய் அவர் திரும்ப வெளியே வரவே இல்லை. ஏனெனில் அவருடைய இரத்தத்தைச் சிந்த அவாக்கொண்டிருந்த மனுஷர் தமஸ்குபட்டணத்தின் சகல வாசலையும் இரவும் பகலும் காவல்காக்க ஆரம்பித்தனர்.

## 9-ம் அத்தியாயம்

## இருதரம் தப்பினது

சவுல் உடனே தமஸ்குபட்டணத்து ஜெபாலயங்களுக்குச் சென்று இயேசு தேவகுமாரன் என்று பகிரங்கமாய்ப் பிரசங்கித்தார். இதைக் கேட்ட சகலரும் பிரமிப்படைந்தனர்.

'நமது கண்கள் காண்கின்றவைகளும் நமது காதுகள் கேட்கின்றவைகளும் உண்மை என்று அவர்கள் ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டார்கள். இந்த நாமத்தைத் தொழுதுகொண்டவர்களையெல்லாம் துன்பப்படுத்தினவன் இவனல்லவா, இவர்களையெல்லாம் சங்கிலியால் கட்டி காய்பாவினிடத்துக்குக் கொண்டுபோகும்படி இங்கு வந்தவன் இவன்தானே என்று' அவர்கள் ஆச்சரியப்பட்டார்கள்.

சிலர் அவனோடு தர்க்கமாடினார்கள். சிலர் அவனோடு எதிர்த்துப் போராடினார்கள். சிலர் அவனைப் பயமுறுத்தினார்கள். ஆனால் சவுல் இவைகளினால் தளர்ந்துபோகவில்லை. அவர் அதிகமதிகமாய் முயன்றார். இதனால் மனத்தளர்ச்சியடைந்த தமஸ்குபட்டணத்து யூதர்களுடைய கோபம் கங்குகரையற்றது. சவுல் பதிதனாய் விட்டான், அவன் துரோகி, தேவதூஷணக்காரன் என்றுசொன்னார்கள். ஸ்தேவானுக்கு விரோதமாய்ச் சவுல் என்ன நியாயப்பிரமாண வாக்கியத்தை எடுத்துக்கூறினாரோ அவ்வாக்கியத்தையே இப்பொழுது சவுலுக்கு விரோதமாய் எடுத்துக்கூறினார்கள்.

'உன் கண் அவனுக்கு இரங்காதிருக்கக்கடவது.' 'நீ நிச்சயமாகவே அவனைக் கொல்லக்கடவாய்.'

அவரைக் கொல்லுகிறதற்கு அவர்கள் உபாயம்பண்ணினார்கள். ரோமராயனுக்குப் பிரதிநிதியாய்த் தமஸ்குபட்டணத்தை அரசாண்டு வந்த அரேத்தா ராஜனிடத்தில் போய் சவுல் தப்பித்துப்போய்விடாதபடி நகரவாசல்களைக் காவல்செய்யும்படி அவனைத் தூண்டிவிட்டார்



கள். கருக்கான பட்டயங்களை மறைத்துவைத்துக்கொண்டு அவரைக் கொல்லவேண்டுமென்று காத்துக்கொண்டிருந்தவர்கள் ஒவ்வொரு வாசலண்டையிலும் நின்றார்கள். சவுலினுடைய ரத்தத்தை உறிஞ்சும்படி இவர்கள் இரவும் பகலும் தூங்காது காத்துக்கொண்டிருந்தார்கள்.

சவுல் எப்படித் தப்பிக்கக்கூடும்? பட்டணத்தைச் சுற்றிலும் மதில் இருந்தது. ஸ்தேவானைப்போலவே சவுலும் கல்லெறியுண்டு சாவான்போல் தோன்றினது. தமஸ்குபட்டணத்தின் கோட்டைமதில்மேல் சில வீடுகள் கட்டப்பட்டிருந்தன. அவ்வீடுகளின் ஜன்னல்களில் சில அம்மதிலுக்கு வெளிப்பக்கத்தில் கொஞ்சம் நீட்டிக்கொண்டிருக்கும். இவ்வீடுகளில் ஒன்று ஒரு நசரேயனுக்கு (கிறிஸ்தவனுக்கு)ச் சொந்தமானது. ஆகவே தப்புகிறதற்கு ஒரு உபாயம் அகப்பட்டது. ஒருநாள் இரவு மெத்த இருட்டாயிருக்கும்பொழுது, சவுல் தமது பிரயாண அங்கியைத் தரித்துக்கொண்டு இந்தச் சிஷனுடைய வீட்டுக்குள் இரகசியமாய் நுழைந்துகொண்டார். அவர் ஒரு அறைக்குள் புகுந்து ஜன்னல் வழியாய் வெளியே எட்டிப்பார்த்தார்.

எல்லாம் அமைதியாய் இருந்தது. தூரத்திலேயுள்ள ஒரு தோட்டத்தினருகிலே ஒரு நரி ஊளையிட்டுக்கொண்டிருந்தது. தூங்கிக்கொண்டிருந்த ஒரு ஒட்டகத்தின் மூச்சுச்சத்தம் சிறிது கேட்டது. இதையன்றி, மற்றெல்லாம் நிசப்தமாக இருந்தது. அவருடைய தலைக்குமேலே நக்ஷத்திரங்கள் மினுக்கு மினுக்கென்று காரிருளில் ஜொலித்துக்கொண்டிருந்தன. சவுல் கீழே குனிந்து பார்த்தார். ஜன்னலுக்கும் தரைக்குமுள்ள தூரம் எவ்வளவு என்பதைக் கணிக்கப் பிரயாசப்பட்டார்.

அங்குள்ள ஒருவன் ஒரு கூடையைக் காட்டி, 'இங்கே கயிறும் கூடையும் இருக்கிறது' என்று சொன்னான். அது ஒரு பெரிய நாணற்கூடை, வட்டவடிவமுள்ளது. அக்கூடையின் பிடிகளில் பலமான கயிறுகள் கட்டியிருந்தன.

அவர்கள் அங்கே முழங்காற்படியிட்டார்கள். சவுலுடைய சத்தம் ஜெபத்தில் எழும்பினது. தமஸ்குபட்டணத்துக்காகவும், தம்மைக் கொல்லும்படி பிரயாசப்பட்டுக்கொண்டிருந்த அப்பட்டணத்து மனுஷருக்காகவும், தம் பிரயாணத்துக்காகவும் சவுல் ஜெபம்பண்ணினார். மண்சிட்டியில் எரிந்துகொண்டிருந்த தீபத்தை அவித்துப்போட்டார்கள். ஜன்னலிலிருந்து அவர்கள் கூடையை இறக்குகிறதையும் சவுல் அக்கூடைவழியாய்க் கீழே இறங்குகிறதையும் காவற்காரர் கண்டுகொள்ளாதபடி இப்படி வெளிச்சத்தை அவித்துப்போட்டார்கள்.

161285



# The Preparation of Sermons

By the Rev. H. Spencer, B.A.

## பிரசங்கமுறை

(தொடர்ச்சி)

ஒரு காலத்தில் நான் பாடசாலையொன்றில் நடந்த உபர்நியா சக்கூட்டத்தில் பிரசங்கிக்கும்படி நியமித்திருந்த ஒருவரிடத்தில் கீர்த்தனை பாடினபின் 'நீர் தயவுசெய்து பிரசங்கம் செய்வீரா?' என்று கேட்டதற்கு, அவர் 'நான் இப்போது ஆயத்தமாக வரவில்லை. இன்னொருவர் பிரசங்கிக்கட்டும். அதற்குப் பின் நான் செய்வேன்' என்று உத்தரவு கொடுத்தார். இவ்விதமாய் நாம் நம்முடைய சாட்சியைக் கூறுவதற்காக ஆயத்தமில்லாமல் பிரசங்கக்கூட்டத்துக்குப் போகப்படாது. ஏற்கனவே விவரித்துப்பேச வேண்டிய விஷயமாகிய பொருளைத் தெரிந்துகொண்டு தெளிவான அம்சங்களையும் உபயோகிக்கத்தக்க திருஷ்டாந்தங்களையும் கிரகித்துக் கொண்டு பிரசங்கஞ்செய்யும்படி கூட்டத்துக்குப் புறப்படவேண்டும். அதிகப் பிரயோஜனமுள்ளதும் முக்கியமானதுமான பொருள்களைத் தெரிந்துகொள்ளவேண்டும். ஜனங்கள் உங்களுடைய வார்த்தைகளைக்கேட்டு அவைகள் சத்தியந்தான் என்று ஒப்புக்கொள்வதுமல்லாமல், அவைகளுக்கேற்க நடந்துவருவோமென்றும் தீர்மானஞ்செய்து கொள்ளத்தக்கதாக பிரசங்கிப்பீர்களாக.

ஜனங்கள் வந்து கேட்கும்படி வேறே வேறே உபாயங்களை உபயோகிக்கவேண்டும். பிரசங்கிகள் பாடசாலைகளுக்குப்போய் உள்ளேயிருந்துகொண்டு கீர்த்தனைகளைப்பாடி ஜனங்கள் வந்துகூடும்படி செய்யும் உபாயமுண்டு. ஒருவேளை ஜனங்கள் வராதிருந்தால் வெளியே போய் வீதிகளில் நின்று கீர்த்தனைகளைப் பாடி ஜனங்கள் உள்ளே வரும்படியாகக் கேட்டுக்கொள்வதும் உத்தமம். வேளாவேளைகளில் பாடசாலைக் கட்டிடத்துக்குள்ளே பிரசங்கக்கூட்டம் நடத்துவதைப் பார்க்கிலும் வீதிகளில் நின்று பாடி ஜனங்களை கும்புகூடும்படி செய்து நடத்துவது நலம். ஒரே முறையை மாத்திரம் அனுசரிப்போமானால் ஜனங்கள் அதை சீக்கிரத்தில் வெறுக்க நேரிடும். வெவ்வேறு உபாயங்களினாலே அவர்கள் நம்முடைய பிரசங்கத்துக்கு மனங்கொடுக்கத்தக்கதாக ஏற்பாடு செய்துகொள்வது உத்தமம்.

C. L. S. PRESS, MADRAS—1917